# சுத்தானந்தம் 50




வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கப்
பொன் விழா மலர்

உ

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சுத்தானந்தம்

## பொன்விழா மலர்

**(19 / 11 / 1952 - 19 / 11 / 2002)**



மலராசிரியர்

**தமிழ்மணி அகளங்கன்**

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்**

**வவுனியா**

உ

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கீதம்

பல்லவி

வவுனியா நகரினில் வளர்ந்ததோர் நிறுவனம்
வாழிய வாழியவே
வளம்பெறுஞ் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
வாழிய வாழியவே
(வவுனியா)

அனுபல்லவி

அவனியில் புகழுடன் அருமைகள் பலவுடன்
வாழிய வாழியவே
ஆண்டுகள் பலப்பல அருந்தொண்டு ஆற்றியே
வாழிய வாழியவே
(வவுனியா)

சரணம்

இந்து சமயத் தொண்டும் - தமிழ்
இலக்கிய சமூகத் தொண்டும்
வந்த துயர் துடைக்கும் - பல
வகைகளில் தொண்டுஞ் செய்து

அறநெறிப் பாட சாலை - சிறுவர்
ஆரம்பப் பாட சாலை
அருள்நெறிப் பிரசங் கங்கள் - நல்ல
ஆத்மீக வழி காட்டல்கள்

தங்கும் இட வசதி - பெரும்
தர்ம நிதி உதவி
எங்கும் புகழ் விளங்க - நல்ல
ஏற்ற மொடு செழித்து
(வவுனியா)

– கவிஞர் அகளங்கன் –

உ

# முகர்வதற்கு முன்.....

எனது மூத்த சகோதரரும், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் தற்போதைய தலைவருமான **மக்கள் சேவை மாமணி நா. சேனாதிராசா சமா.நீதி** அவர்கள் மூலம் 1976ல் தான் எனக்கு இச்சங்கத்தோடு அறிமுகம் ஏற்பட்டது.

பின் 1979ல் தான் இச்சங்கத்தோடு நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. அப்போது நான் சிறிது காலம் சங்கத்தின் துணைப் பொருளாளராக இருந்தேன்.

திருமுறை விழாக்களை மூன்று நாட்களுக்குப் பெருவிழாக்களாகச் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் கொண்டாடிய அக்காலத்திலும், பின்னும், சிவத்தமிழ்ச் செல்வி. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், ஆத்மஜோதி முத்தையா அவர்கள் போன்ற ஆன்மீகப் பெரியார்கள் சொற்பொழிவுகளை ஆற்றிய சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மேடையில் அவர்களோடு அமர்ந்திருந்து உரையாடி உரையாற்றும் பெரும்பேறு எனக்குக் கிடைத்தது.

அவர்கள் தந்த உற்சாகம் என்னை சமயப்பணியிலும் ஈடுபடுத்தியது. பின் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் சகல நிகழ்வுகளிலும் பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

1990, 1991ம் ஆண்டுகளில் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் பாதிப்புற்று செயலிழந்து கிடந்த சங்கம், 1992ல் புதுப்பிக்கப்பட்ட போது, ஆட்சிமன்ற உறுப்பினராக இருந்து செயற்படும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

தொடர்ந்து போசகர்களுள் ஒருவராகவும், துணைத் தலைவர்களில் ஒருவராகவும் இருந்து பணியாற்ற இறைவன் சித்தம் என்பால் திரும்பியது.

எமது சங்கத்தினால் வெளியிடப்பட்ட ஆறுமுகநாவலரின் சைவ வினாவிடைத் தொகுப்பு நூலையும், 1990ல் எமது கலாசார மண்டபத் திறப்பு விழாவின் போது வெளியிடப்பட்ட **சுத்தானந்தம்** மலரினையும் ஆக்கும் பொறுப்பை ஏற்று செய்து முடித்தேன்.

சங்கத்தின் நம்பிக்கையை மூலதனமாகக் கொண்டு, அந்நூல்களைச் சிறப்புற ஆக்கி அளித்த திருப்தியோடு இப்பொன்விழா நினைவு **சுத்தானந்தம்** மலரினையும் ஆக்கத் துணிந்தேன்.

தென்பால் உகந்து தில்லையில் திருநடனம் புரியும் சிவபெருமான், என்பால் உகந்து இட்ட பணியாக இதைக் கருதி அவனருளாலே இப்பணியை மேற்கொண்டேன்.

கடந்த 10 ஆண்டுகளாக சங்கத்தின் சகல செயற்பாடுகளிலும் இணைந்து பணியாற்றிய மனநிறைவோடு இப்பெரும் பணியைப் பணிவுடன் ஏற்றேன்.

சங்கம் தனது பணிகளை மிகவும் அமைதியாக, ஆழமாக, அகலமாக நிறைவேற்றி வருகிறது. விளம்பரங்களை விரும்பாத நிறுவனமாக, வெளிநாட்டு உதவிகளையோ அரச உதவிகளையோ எதிர்பார்க்காத நிறுவனமாக இச்சங்கம் கடந்த 10 ஆண்டுகளைச் சாதனை ஆண்டுகளாகக் கழித்து விட்டது.

சங்கப் பணியாளர்களின் நேர்மையிலும், சங்க ஆட்சிமன்ற உறுப்பினர்களின் அர்ப்பணிப்போடு கூடிய சேவையிலும், பொதுச்சபை உறுப்பினர்களின் பொறுப்பு வாய்ந்த ஆலோசனைகளோடும் இச்சங்கம் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

கடந்த 10 ஆண்டுகளாக இச்சங்கத்தை மிகவும் கட்டுக்கோப்புடன் நடாத்தி வரும் **தலைவர் மக்கள் சேவை மாமணி நா. சேனாதிராசா சமா. நீதி** அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்.

அவரோடு இணைந்து பணியாற்றும் **செயலாளர் திரு. க. தர்மதேவன், பொருளாளர் திரு. இ. திருமேனி** ஆகியோரும் விசேடமாகப் பாராட்டத் தக்கவர்கள்.

நல்ல சுபவேளையிலே இச்சங்கத்துக்கு அடிக்கல் வைத்து ஆசீர்வதித்த கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களின் நினைவு நெஞ்சை விட்டு அகலாதது.

இச்சங்க வரலாற்றில் மைல் கல்லாகத் திகழும் பொன்விழா நிகழ்வு நினைவு மலராகிய இச் சுத்தானந்தம் மலரில் சங்கம் பற்றிய பல தகவல்கள் இடம்பெற்றுள்ளன. பலவகையான ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. ஆக்கங்களை வழங்கிய பெரியோர்களுக்கு என் நன்றிகள். ஆக்கங்கள் யாவற்றுக்கும் ஆக்கியோரே பொறுப்பாளிகள் ஆவர்.

இம்மலரிற்கு ஆசியுரைகள் வாழ்த்துக்கள் வழங்கிய ஆன்மீகப் பெரியார்களுக்கும், அமைச்சர் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கும் என் நன்றிகள் உரியன.

இம்மலர் மணம் வீசும் மலராக மாற ஒத்துழைத்த மலர்க்குழு உறுப்பினர்கள், குறிப்பாக எழுத்தாளர் **திரு. ஓ. கே. குணநாதன், திரு. செ. சண்முகநாதன்,** சரவைகளை ஒப்புநோக்கி உதவிய துணைச் செயலாளர் **திரு. நா. யோகராசா** ஆகியோருக்கும் என் நன்றிகள்.

இம்மலரை அழகும் பிரகாசமும் பொருந்த அச்சிட்டுத் தந்த வவுனியா சுதன் அச்சகத்தாருக்கும், குறிப்பாக அதன் உரிமையாளரும் எமது துணைத் தலைவர்களுள் ஒருவருமாகிய திரு. க. முருகையா அவர்களுக்கும் என் நன்றிகள்.

இம்மலரின் நறுமணத்தில் மனம் மகிழப் போகும் உங்களோடு மனம் விட்டுப் பேச அனுமதித்த உங்களுக்கு என் நன்றிகள்.

***வாழ்க தமிழ், வளர்க சைவம்***

அன்புடன்

**அகளங்கன்**

# சுத்தானந்தம்

## பொன் விழா மலர்க்குழு

*மலராசிரியர்.*

**தமிழ்மணி அகளங்கன்** *(துணைத்தலைவர் சு. இ. இ. சங்கம்)*

*துணை.*

**திரு. ஓ. கே. குணநாதன்**
**திரு. செ. சண்முகநாதன்**

*ஆலோசனை.*

**திரு. நா. சேனாதிராசா** *சமா. நீதி. (தலைவர் சு. இ. இ. சங்கம்)*
**திரு. க. தர்மதேவன்** *(செயலாளர். சு. இ. இ. சங்கம்)*
**திரு. இ. திருமேனி** *(பொருளாளர். சு. இ. இ. சங்கம்)*
**திரு. ச. விஜயரத்தினம்** *B. A (துணைத் தலைவர். சு. இ. இ. சங்கம்)*
**திரு. க. முருகையா** *(துணைத் தலைவர் . சு. இ. இ. சங்கம்)*
**திரு. நா. யோகராசா** *(துணைச் செயலாளர். சு. இ. இ. சங்கம்)*
**திரு. நீ. புஸ்பராஜா** *(துணைப் பொருளாளர். சு. இ. இ. சங்கம்)*

உ

## சுந்தரானந்த இந்து இளைஞர் சங்கம் – வவுனியா

# ஆட்சிமன்ற உறுப்பினர்கள் 2002 - 2003

*தலைவர்*

**மக்கள் சேவை மாமணி நா. சேனாதிராசா சமா.நீதி.**

*செயலாளர்*

**திரு. க. தர்மதேவன்**

*பொருளாளர்*

**திரு. இ. திருமேனி**

*துணைத் தலைவர்கள்:-* **திரு. ச. விஜயரத்தினம் B. A**
**தமிழ்மணி அகளங்கன்** (நா. தர்மராஜா)
**திரு. க. முருகையா**
**திரு. ந. சிறீஸ்கந்தராசா**

*துணைச் செயலாளர் :-* **திரு. நா. யோகராசா**

*துணைப் பொருளாளர் :-* **திரு. நீ. புஸ்பராஜா**

*ஆட்சிமன்ற உறுப்பினர்கள் :-* **திரு. செ. தர்மரத்தினம்**
**திரு. ஐ. க. திருவிளங்கம்**
**திரு. சி. சுப்பிரமணியம்** சமா.நீதி.
**திரு. மா. பரமநாதர்**
**திரு. இ. சிவநேசன்**
**திரு. க. தி. தர்மராசா**
**திரு. தி. சுந்தரலிங்கம்**
**திரு. மு. குமாரசிங்கம்**
**திரு. பா. சுந்தரராஜன்**
**திரு. கா. ஜெயராசா**

*கணக்காய்வாளர் :-* **திரு. க. சிவசேகரம்** (கூட்டுறவுப் பரிசோதகர்)

*போசகர்கள் :-* **திரு. க. ந. பாலச்சந்திரன்** சமா: நீதி:
**திரு. க. ஐயம்பிள்ளை**


*தர்மகர்த்தா சபையினர்:* **திரு. செ. பத்மநாதன்** சமா.நீதி.
**திரு. ச. சுப்பிரமணியம்**
**திரு. வி. க. இரத்தினசிங்கம்** சமா.நீதி
**திரு. செ. மார்க்கண்டேயர்**
**திரு. கா. இரத்தினசிங்கம்**

## வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க ஆட்சி மன்ற உறுப்பினர்கள் - 2002/2003



இருப்பவர்கள்: இடமிருந்து வலம் திரு. க. முருகையா (துணைத்தலைவர்), திரு. நா. யோகராசா (துணைச் செயலாளர்), தமிழ்மணி அகளங்கன் (நா.தர்மராஜா - துணைத்தலைவர்), திரு. இ. திருமேனி (பொருளாளர்), திரு. நா. சேனாதிராசா சமா.நீதி. (தலைவர்) திரு. க. தர்மதேவன் (செயலாளர்), திரு. ந. சிறிஸ்கந்தராஜா (துணைத்தலைவர்), திரு. த. விஜயரத்தினம் (துணைத்தலைவர்) திரு. நீ. புஸ்பராஜா (துணைப் பொருளாளர்) நிற்பவர்கள்: ஆட்சி மன்ற உறுப்பினர்களான திரு. மு. குமாரசிங்கம், திரு. க. தி. தர்மராசா, திரு. சி. சுப்பிரமணியம் சமா.நீதி, திரு.ஐ.க. திருவிளங்கம், திரு. செ. தர்மரத்தினம், திரு. மா. பரமநாதர், திரு. பா. சுந்தரராஜன், திரு. தி. சுந்தரலிங்கம், திரு. கா. ஜெயராசா.

நூலகம்



கவியோகி சுத்தானந்த பாரதியார்

## தர்ம கர்த்தா சபையினர்



திரு.ச. சுப்பிரமணியம்



திரு. செ. மார்க்கண்டேயர்



திரு. செ. பத்மநாதன் சமா.நீதி.



திரு. க. இரத்தினசிங்கம் சமா.நீதி.



திரு. கா. இரத்தினசிங்கம்

## போசகர்கள்



திரு. க. ஜயம்பிள்ளை



திரு. க. ந. பாலச்சந்திரன் சமா.நீதி.

# மலர்க் குழு

## மலராசிரியர்



தமிழ்மணி அகளங்கன்

## துணையாசிரியர்கள்



திரு. ஓ.கே. குணநாதன்



திரு.செ. சண்முகநாதன்

## உறுப்பினர்கள்



திரு.நா.சேனாதிராசா



திரு.க. தர்மதேவன்



திரு.இ.திருமேனி



திரு. நீ. புஷ்பராஜா



திரு.க.முருகையா



திரு. நா.யோகராஜா



திரு. ச. விஜயரத்தினம்

# சங்கத்தின் சேவைகள் ஒரே பார்வையில்

**சமய சேவைகள் :-**

01) வெள்ளிக்கிழமைகள் தோறும் சங்க மண்டபத்தில் பூசையும் பிரார்த்தனையும்.

02) நவராத்திரி விழா (09 நாட்களும்) ஏடு தொடக்குதலும்.

03) தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி, கார்த்திகை தீபம் - விழா எடுத்தல்.

04) திருவாசக முற்றோதல்.

05) நாயன்மார் குருபூசைகள்.

06) அறநெறிப் பாடசாலைகள் - நடத்துதல்.

07) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள்.

08) பாடசாலைகளில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள்.

09) மாணவர்களின் சமய அறிவை மேம்படுத்த சமய அறிவுப் போட்டிகள் நடத்துதல், பரிசு வழங்கல்.

10) இந்துசமய, தமிழ் இலக்கிய நூல்கள் வெளியிடுபவர்களை ஊக்குவித்தல்.

11) பின்தங்கிய கிராமத்துக் கோயில் புனரமைப்பிற்கு நிதியுதவி.

12) புராண படனம் செய்பவர்களை கௌரவித்தல்.

13) சமயச் சொற்பொழிவுகளை நடாத்துதல்.

## சமூக சேவைகள் :-

01) பிரயாணிகளுக்கு குறைந்த கட்டணத்தில் வசதியான தங்குமிட வசதி

02) தொலைத்தொடர்பு சேவை.

03) சைவ உணவகம்.

04) திருமணம், திருமணப்பதிவு, பூப்புனித நீராட்டு, மற்றும் மங்கல காரியங்களுக்கான மண்டப வசதி.

05) மாணவர்களின் கலாசார வளர்ச்சிக்கான நடன, சங்கீத, வயலின் வகுப்புக்கள் நடாத்துதல்.

06) கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோரை கௌரவித்தல்.

07) இலக்கிய சமய நூல்கள் வெளியிடுதல்.

08) பாலர் பாடசாலைகள் நடாத்துதல்.

09) வசதியற்ற பிரயாணிகளுக்கு உணவு வசதி, இலவச தங்குமிட வசதியும் நிதியுதவியும்.

10) ஊனமுற்றோருக்கான அன்பளிப்புக்கள்.

11) பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி, கலை விழாக்கள் நடாத்துதல்.

12) வசதி குறைந்த மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல ஊக்குவித்தல்.

13) ஏழைகளுக்கான வைத்திய வசதிக்கு நிதியுதவி.

14) வசதி குறைந்த நூல் நிலையங்களுக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்தல்.

15) ஏழைச் சிறார்களின் கல்விக்கு உதவுதல்.

16) தமிழ், கலை இலக்கிய வளர்ச்சிக்கு மண்டப உதவி

இன்னும் பல

மண்டபங்கள் :- நடராசர் மண்டபம்
சேக்கிழார் மண்டபம்
கலாசார மண்டபம்

உ

# பொருளடக்கம்

பக்கம்

**01**

01) சங்கக் கீதம் ........ 02
02) முகர்வதற்கு முன் ........ 03
03) மலர்க்குழு ........ 05
04) ஆட்சிமன்ற உறுப்பினர்கள் ........ 06
05) ஆட்சிமன்றப் படம் ........ 07
06) பொருளடக்கம் ........ 08

**02** **ஆசிகளும் வாழ்த்துகளும்** ........ 10

01) வவுனியா கந்தசுவாமி கோவில் ........ 11
02) வ/குடியிருப்பு சித்தி விநாயகர் கோவில் ........ 12
03) நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ........ 13
04) இராம கிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளை முதல்வர் ........ 14
05) ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம் தெல்லிப்பழை ........ 15
06) அகில இலங்கை இந்து சமய அபிவிருத்திச் சபை ........ 16
07) இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் ........ 17
08) இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ........ 18
09) பேராசிரியர் எஸ். மோகனதாஸ் ........ 19
10) கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் ........ 20
11) வவுனியா அரச அதிபர் ........ 21
12) இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ........ 22
13) இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ........ 23
14) வவுனியா பிரதேச செயலாளர் ........ 24
15) வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் ........ 25
16) வவுனியா நகரசபைச் செயலாளர் ........ 26
17) சுத்தானந்த இ. இ. சங்க தர்மகர்த்தா சபையினர் ........ 27
18) அருள்மிகு அகிலாண்டேஸ்வரி ........ 28
19) வவுனியா இந்து மாமன்றத் தலைவர் ........ 29
20) வவுனியா பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய தலைவர் ........ 30
21) வித்துவான் வ. செல்லையா ........ 31

**03** **வரலாறு - அறிக்கை** ........ 32

01) வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் வரலாறு ........ 33
02) தலைவரின் படம் ........ 36
03) தலைவரின் செய்தி ........ 37
04) செயலாளரின் படம் ........ 39
05) செயலாளரின் சிந்தனையில் ........ 40
06) பொருளாளரின் படம் ........ 42
07) பொருளாளரின் அறிக்கை ........ 43
08) புனரமைப்புச் செய்யப்பட்ட ஆட்சிமன்றம் ........ 46
09) தலைவர்கள் வரிசை ........ 47
10) கடந்தகாலத் தலைவர், செயலாளர், பொருளாளர் ........ 48
11) நடராசர் மண்டபம் ........ 51
12) பாலர் பாடசாலை ........ 52
13) கௌரவமும் விருதும் ........ 53

**04** **பொன்விழாப் போட்டிகள்** ........ 54

01) போட்டி விதிகள் ........ 55
02) போட்டி முடிவுகள் ........ 56
03) தொண்டர் தம் பெருமை ........ 59
04) சமூகத் தொண்டில் இந்து மதம் ........ 63
05) மாவட்டத்தில் முதலிடம் ........ 67

**05** சமயம் ........ 68

01) மூன்று பிள்ளைகள் ........ 69
02) எமது மதம் இந்துமதம் ........ 72
03) இந்து சமயமும் அன்பு நெறியும் ........ 74
04) தமிழ் முனிவர்களும் வேதங்களும் ........ 79
05) உலக நாடுகளில் இந்து சமய ஆலயங்கள் ........ 81
06) மகா கும்பாபிஷேக கிரியா முறைகளும் விழாக்களும் ........ 85
07) காலமும் முகூர்த்தமும் ........ 97
08) உபநிடதங்களில் கல்வி ........ 100
09) சித்தாந்த சைவம் ........ 103
10) கந்தபுராணத்தின் தத்துவப் பொருள் ........ 107
11) பண்டைய ஈழக் குடியினரிடையே ........ 112
12) வன்னிப் பெருநிலப்பரப்பில் ........ 120
13) காவல் தெய்வம் ........ 125
14) ஈழத்துத் தேவார திருப்பதிகங்கள் ........ 128
15) சமய நிறுவனங்களின் சமூகப்பணி ........ 135

**06** கவிதை - தமிழ்

01) வன்னிநாடு ........ 139
02) வன்னி நாட்டை எண்ணிப் பார்த்தால் ........ 141
03) இன்பம் தருவாய் ........ 142
04) நிகரிலா அழகு ........ 143
05) என்ன கலக்கம் ........ 146
06) காலத்தை வென்று நிற்கும் தமிழ் ........ 147
07) கண்ணகி வழக்குரை ........ 151
08) தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் ........ 155

**07** பல்துறை ........ 157

01) வாவெட்டி மலை ........ 158
02) மழலையர் கல்வி ........ 162
03) தமிழ் இல. தமிழ் மருத்துவமும் ........ 166
04) இந்திய முறை மருத்துவம் ........ 169
05) சுவையியல் ........ 174
06) கலாசாரம் ஒரு இனத்தின் உயிர்நாடி ........ 178
07) தேசிய நடனமா ........ 181
08) ஒருவேளை உணவுக்கே ........ 183
09) வாழ்க்கை போராட்டம் ........ 186

**08** சிறு கதைகள் ........ 187

01) தாங்குவோர்கள் ........ 188
02) குண்டு மணிச்சாமியார் ........ 193
03) மாவீரன் பண்டார வன்னியன் ........ 200
04) வெள்ளைச்சேலை ........ 203

**09** பொது ........ 212

01) வவுனியா மாவட்ட இந்துக் கோயில்கள் ........ 213
02) வவுனியாவில் பார்க்க வேண்டிய ........ 221
03) ஆய்வுக் கட்டுரை ........ 222
04) பாலர் பாடசாலைக் கீதம் ........ 232

02

# ஆசிகளும், வாழ்த்துக்களும்

(11 - 31)

உ

# வவுனியா கந்தசுவாமி கோவில்

பிரதம குரு

## சிவஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்கள் அவர்களின்

## ஆசிச் செய்தி

"பாலும் தெளிதேனும் - பாகும் பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன். தூமணியே, நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா!"

என ஓர் அன்பர், விநாயகனை வேண்டித் துதித்தார். அப்போதே சங்கம் தோன்றி விட்டது. சங்கப் புலவர் காலம் சங்கம் அமைத்து இறைவனே தலைமை தாங்கிய வரலாறு உண்டு. இப்படி தமிழை வளர்க்க சங்கம் அமைத்தோர் பலர். எமது கலை, கலாசாரம், பண்பாடு அதோடு இயல், இசை, நாடகம் என்பன தழைக்கவும் எமக்கு சங்கம் தேவை. இதன் மூலம் பாடசாலையமைத்து சிறார்களுக்கு எமது சமயப் பண்பாடுகளை படிப்பிப்பதற்கும், அல்லல் உற்றோர், அவதியுற்றோர், அனாதையானோர் இவர்களை ஆதரித்தலும், சமயத் தொண்டர்களையும் அதை வளர்க்க பிரசாரம் பிரசங்கம் செய்வோரையும் ஆதரித்து இதனோடு தொடர்புடையவர்களை மேலும் ஊக்குவித்து பலவழிகளிலும் இச்சங்கம் முன்னோடியாக இருக்கின்றது. வவுனியாவிலே சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் எனப் பெயர் வைத்து அது இப்போது ஆல் போல் தழைத்து பெரும் பணியாற்றி 50 வருடங்கள் தாண்டி பொன்விழா கொண்டாடுவதையிட்டு, பெருமகிழ்வடைகின்றோம். இதற்கெல்லாம் முதல் படியாக அன்று முதல் இன்று வரை அரும்பாடுபட்டு வரும் அதற்கு உரிமையானவர்கள் யாவருக்கும் எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டி எமது நல்லாசிகள் உரித்தாகுக! என்று வாழ்த்தி அமைகின்றேன்.

இங்ஙனம்

***சிவஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்கள்***

வவுனியா.

உ

கணபதி துணை

# சிவஸ்ரீ மு. க. கந்தசாமி குருக்கள்

(கைரேகை சோதிட வல்லுநர்)

## ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு அவர்களின்

(குடியிருப்பு - வவுனியா)

## ஆசிச் செய்தி

***மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்***

வவுனியா நகரில் புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் செய்யும் சேவைகளை எல்லாம் என்னால் எடுத்துக் கூற முடியாது. இதன் ஆரம்பகால தலைவர் முதல் தற்பொழுது உள்ள அனைத்து தலைவர்களும் எனக்கு நன்கு அறிமுகமானவர்கள். ஒவ்வொரு தலைவர்களின் காலங்களில் ஒவ்வொரு மாற்றம் ஏற்பட்டு தற்பொழுது உள்ள தலைவர் **உயர் திரு. நா. சேனாதிராசா** மூலம் நவீன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது யாவரும் அறிந்த உண்மை. வவுனியாவில் முதல் முதல் சைவச் சிறுவர் பாடசாலை ஆரம்பித்தது நல்ல முயற்சியாகும். ஆரம்ப கல்வியை பயின்ற மாணவர்கள் உயர் பாடசாலையில் படிக்கும் தகுதி உடையவர்களாக உள்ளது. எமக்கு பெருமையை தருகிறது. அது மட்டுமல்ல திருமண மண்டபம், கலாசார மண்டபம், சிற்றுண்டிச்சாலை போன்றவற்றை காலகிரமத்தில் சிறப்பாய் அமைத்தது. இலங்கையின் பலபாகங்களிலும் இருந்து வரும் மக்கள் தங்கி செல்லவும் எந்நேரமும் வெளிநாடு, உள்நாடு தொலைத்தொடர்புகளை ஏற்படுத்தி அதன் மூலம் உள்ளூர் உறவினரை கதைக்கும் வாய்ப்பு உள்ள மண்டபம் என்றால் அது சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபமாக இருக்கும் என்று கூறுவதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன். காலத்தின் கோலத்தால் களைப்புற்றிருந்த மக்கள் சிறிது நேரமாவது மனமகிழ்வுடன் * இருக்க தொலைக்காட்சி வசதிகள். சோழனுடைய காலத்தில் அரசாலைகள், திண்ணைப் பாடசாலை போன்றவற்றை செய்தான் என்று வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

அதே போன்று வெளிநாட்டில் இருந்து வரும் பெரும் சுமையுடன் வரும் மக்கள் தங்கள் பொருட்களை பாதுகாப்பாக வைத்துக் கொண்டு தங்கி வன்னிக்கு செல்வதை நான் பல தடவை கண்ணால் கண்டு இருக்கிறேன். அதனால் சுமை தாங்கி மண்டபம் என்றும் கூறலாம். அது மட்டுமல்ல சகல சமய விழாக்களும் அங்கு நடைபெறுவது சிறப்பான விடயமாகும். மேலும் அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்றவற்றுடன் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பு போன்றவற்றை கண்ட மக்கள் வவுனியாவிற்கு வந்தால் சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் தங்க வேண்டும் என்ற எண்ணத்தை பிரதிபலிக்கும் படியாய் உள்ளது. இதை யாவரும் மறக்கமுடியாது. சிறுதுளி பெரு வெள்ளம் என்பதைப் போன்று சிறு மண்டபம் பெருமண்டபமாய் உள்ளது என்றால் அந்த கவியோகி சுத்தானந்த பாரதியார் என்று தான் கூறவேண்டும். வவுனியா நகரிலே இம்மண்டப பொன்விழா நிகழ்விற்கு எனக்கும் ஆசியுரை எழுத சந்தர்ப்பம் தந்த சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவருக்கும் மற்றையோருக்கும் அன்பான ஆசிகளைக் கூறுகின்றேன்.

எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க

**க. கந்தசாமி குருக்கள்**
சமாதான நீதவான் (அகில இலங்கை)

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகளின்

(இரண்டாவது குருமஹா சந்நிதானம்)

# அருளாசிச் செய்தி

*அன்புசார் பெருந்தகையீர்!*

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் பொன்விழாவை கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். வவுனியா மக்களின் நலனில் அக்கறை கொண்டு பணியாற்றும் நிறுவனமாகும். 50 வருடங்கள் இச்சங்கம் பல பணிகளை ஆற்றியமை பெருமைக்குரியது. மொழி வளர்ச்சிக்கும், சமய வளர்ச்சிக்கும் இச்சங்கம் பல பணிகளை ஆற்றிக்கொண்டு இருப்பது நம்மவருக்கு பெருமையை சேர்க்கின்றது. கடமையைச் செய் பலனை எதிர்பாராதே. என்கின்ற வகையில் கடமையைச் செய்து மகிழ்ச்சி அடையும் சங்கமாகும். நாட்டில் நடைபெற்ற யுத்த காலங்களில் நம் சமய மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பல பணிகளை ஆற்றியுள்ளது. யோகி சுத்தானந்தாவினால் ஆரம்பிக்கப்பட்ட பெருமைக்குரியது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அனைத்தையும் கொண்டு இயங்கும் இச்சங்கம் பல்லாண்டு காலம் சமூகத்திற்கு தொண்டாற்ற இறைவனை பிரார்த்திக்கின்றோம். 50 வருட கால பணிக்கு அர்ப்பணித்து சேவையாற்றிய தலைவர், செயலாளர், பொருளாளர் அனைவரையும் வாழ்த்துகின்றோம். இன்னும் தொண்டாற்ற இருக்கும் அனைத்து உள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. வாழ்க சங்கம் வளர்க அவர்களின் பணி

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லூர்
யாழ்ப்பாணம்
02 – 09 – 2002

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

உ

# இராம கிருஷ்ண மிசன்

## இலங்கைக் கிளை முதல்வர்

## சுவாமி ஆத்மகனானந்தா அவர்களின்

## ஆசிச் செய்தி

வவுனியாவில் இயங்கி வரும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் பொன்விழா இவ்வாண்டின் இறுதியில் கொண்டாடப்படவிருப்பதை அறிந்து அவர்களுக்கு எங்களது இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இன்று பல பொதுத்தாபனங்கள், அரசாங்கத்திற்கு இணையாக மக்களுக்குப் பல வழிகளில் உதவி வருகின்றன. இது காலத்தின் தேவையாக அமைந்து விட்டது. இத்தகைய தொண்டு இறை வழிபாட்டிற்குச் சமம் என்ற சமயக் கருத்தும் சிறிது சிறிதாக எமது மக்கள் மனதில் பதிந்து வருவதை இன்று காணலாம். இக்கருத்து எமது சமயத்திற்குப் புதியதல்ல என்றாலும், பல காரணங்களினால் இது சமீப காலம் வரைக்கும் செயலுருவம் பெறாதிருந்தது. நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சுவாமி விவேகானந்தர் மக்கட் சேவையின் இன்றைய அவசியத் தேவையையும், அதன் ஆன்மீகப் பயனையும் உணர்ந்தவராக மக்களை அப்பாதையில் மிகவும் ஊக்குவித்தார் அவரைத் தொடர்ந்து பல பெரியோர்கள் இன்றுவரை சேவையின் பெருமையை எடுத்தியம்பி வந்துள்ளனர்.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பல சமய, சமூகப் பணிகளையாற்றி வடபகுதி வாழ் தமிழ் மக்களின் நன்மதிப்பையும் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. வடபகுதியிலிருந்து தென்பகுதி வரும் ஏழை மக்கள் தங்கிச் செல்வதற்கென விடுதியொன்றை நடாத்துதல், தமிழ்க் குழந்தைகளுக்கு முன்பள்ளியொன்றை நடாத்துதல், சமய இலக்கிய விழாக்கள் கொண்டாடுதல், அறிஞர் பெருமக்களைக் கௌரவித்தல் முதலியன அவர்களாற்றும் பணிகளில் ஒரு சிலவாம்.

இச்சங்கத்தின் பணிகள் மேலும் சிறப்புற இறைவனது திருவருளை இறைஞ்சுகின்றோம். பொன்விழா சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றோம்.

**17 - 09 - 2002**

**சுவாமி ஆத்மகனானந்தா**

உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

(தெல்லிப்பழை – இலங்கை)

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்களின்**

## ஆசிச் செய்தி

பொன்விழாக் காணும் புகழ்பூத்த சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்துக்கு ஆசி வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன். பல தடவைகளில் இங்கு சென்று உரையாற்றிய அனுபவத்தை நான் எண்ணிப்பார்க்கின்றேன். சைவமும், தமிழும் தழைக்கவும், சமூகநலன் ஓங்கவும் அயராது உழைத்த பல பெருமக்களை அங்கமாகக் கொண்டு விளங்கியது இச்சங்கம். தற்போது ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழா எடுக்க இருப்பது பெருமகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். வவுனியா நகரில் பணிபுரியும் தன்னலங்கருதாத தொண்டர்கள் பலர் இச்சங்கத்தில் இடம்பெற்றுள்ளனர். வயது வந்தோருக்கு அறிவுரை வழங்கல், வயதில் குறைந்தோர்க்கு போட்டிகள் நடாத்துதல், சமயச் சுற்றுலா நிகழ்த்தல், பட்டணம் நோக்கி வருவோர்க்கு தங்குமிடம் அளித்தல் மேலும்பல சமயோசித உதவிகளை ஆற்றுதல் முதலியவற்றால் இச்சங்கம் பெருமை பெற்றுள்ளது.

தமிழர் பிரதேசத்தின் தெற்கு எல்லையில் விளங்கும் இந்நகரம் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினால் உலகுக்கு அறிமுகமாகின்றது. பிரயாணம் செய்வோர் பலருக்கு புகலிடமாகவும் அமைந்துள்ளதை நாம் வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும் மேலும் இச்சங்கப் பணிகள் ஓங்கி உயர வேண்டும் என்று எல்லாம் வல்ல துர்க்கையம்பாளைப் பிரார்த்தித்து சங்கத்தை வாழ்த்தி அமைகின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி

தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை – ஸ்ரீ லங்கா.
31 – 08 – 2002

உ

## அகில இலங்கை இந்து சமய அபிவிருத்திச் சபைத் தலைவர் சுவாமி தந்திரதேவா அவர்களின்

## ஆசிச் செய்தி

வவுனியா மாவட்டத்தில் ஆன்மீக சேவையிலும், சமூக சேவையிலும் பல வருடமாக செயற்பட்டு வரும் ஒரு அமைப்பு வவுனியா "சுத்தானந்த" இந்து இளைஞர் சங்கமாகும்.

இவ்வமைப்பு கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்செயலால் போக்குவரத்து சிரமங்களால் வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் கஷ்ரப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் மக்கள் தங்கிச் செல்வதற்கு மிகவும் குறைந்த நிதியில் கூடிய வசதிகளை வழங்கிய ஒரு இந்து அமைப்பு என்றால் அது சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமாகும்.

ஏனெனில் பல இந்து அமைப்புக்கள் பல கட்டடங்களை தாபித்து தங்குமிட அறைகளை மிகவும் கூடிய தொகையில் வழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளை இவர்கள் பணி நினைவு கூரப்பட வேண்டியது.

மேலும் பாலர் பாடசாலைகள், ஆன்மீக ஒன்றுகூடல்கள் போன்ற பல சேவைகளை மனித மேம்பாடு கருதி மேற்கொள்ளும் இவ் அமைப்பின் பணி ஆன்மீக சேவையிலும் மென்மேலும் பணியாற்ற இறையருள் அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து நல்லாசியை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**It gives me great satisfaction to know of**
**The "PON VIZHA" of the Shuddhananda Y.M.H.A**
**Vavuniya. we are very glad for the services**
**Which the Shuddhananda Y.M.H.A is doing for the**
**Hindus of Vavuniya and the vanni. And it is our**
**wish that these services increase in the future,**
**also. Now is the time for hindus with no of**
**Aims to unite in service. May the Shuddhananda**
**Continue with their services and religions**
**Activities for the benefit of all.**

**Om nama Sivaya**

**சுவாமி தந்திரதேவா**

உ

**Ministry**
248, 2/1, காலி வீதி,
கொழும்பு-04.
248 2/1, ගාලු පාර.
කොළඹ - 04
248, 2/1, Galle Road,
Colombo - 04

**Jaffna Regional Office**
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය.
යාපනය.
District Secretariat
Jaffna.

**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்**
**හින්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍ය**
**MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS**

**தியாகராசா மகேஸ்வரன், பா.உ**
**තියාගරාජා මහේස්වරන්. පා.ම**
**Thiyagarajah Maheswaran, M.P.**

**Ministry**
Telephone : 01 - 554801
Fax : 01 - 554803
E-mail : tmahesh@eureka.lk

**Jaffna Regional Office**
Telephone : 021 - 2225613
Fax : 021 - 2223644

# வாழ்த்துச் செய்தி

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் தனது பொன்விழாவைக் கொண்டாடுவதை முன்னிட்டு வெளியிடும் சிறப்புமலரான **"சுத்தானந்தம்"** எனும் இதழுக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

வவுனியாவில் இச்சங்கத்தினர் கடந்த ஐம்பது ஆண்டுகளாக சமய, இலக்கிய, சமூகப் பணிகளை சிறப்பாக ஆற்றி வந்துள்ளமை அனைவரும் அறிந்த விடயமாகும். கல்வி சம்பந்தமான போட்டிகளை நடத்தல், கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஏற்பாடு செய்தல், தாம் நடத்தும் நிகழ்ச்சிகளில் இளைஞர்களையும், மாணவர்களையும் பங்கு பெறச் செய்தல் என சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மிகச் சிறப்பாக இயங்கி வந்துள்ளது.

அண்மைய காலங்களில் போர் அனர்த்தம் காரணமாக இச்செயற்பாடுகள் மனிதாபிமானச் செயல்களாக வடிவம் பெற்றன. அகதிகளுக்கும், நிர்க்கதியானோருக்கும் உதவுதல், பெற்றோரை இழந்த பிள்ளைகளை ஆதரித்தல் என சமூக நலன் கருதிச் செயற்படும் இச்சங்கத்தினரை மனமாரப் பாராட்டுகின்றேன்.

இச்சங்கத்தை ஆரம்பித்து வைத்தவர்களையும், கடந்த ஐம்பது ஆண்டு காலமாக இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களையும் இத்தருணத்திலே நாம் நன்றியுடன் நினைவு கூர வேண்டியுள்ளது.

அவ்வாறே தற்போது உச்சபணிகளை சிறப்புற ஆற்றுகின்ற நிருவாக சபையினர் அனைவருக்கும் எனது பாராட்டினைத் தெரிவிக்கின்றேன்.

**தி. மகேஸ்வரன் பா.உ**
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்

**Residence - Colombo**
110/3, விஜேராம மாவத்தை, கொழும்பு-07.
110/3, විජේරාම මාවත. කොළඹ 07..
110/3, Wijerama Mw, Colombo - 07.
Tel : 01 - 667962, Fax : 01 - 684990

**Residence - Jaffna**
280, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
280, පලාලි පාර. යාපනය.
280, Palaly Road, Jaffna.
Telephone : 021 - 2223542

உ


පැක්ස් / தொலைநகல் / Fax : 554805
දුරකථන / தொலைபேசி / Telephone

අමාත්‍ය / அமைச்சர் / Minister } 554801, 554802

ලේකම් / செயலாளர் / Secretary } 554804

පොදු / பொது / General } 552641

හින්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍ය
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்
**MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS**

248, 2/1 { ගාලු පාර. කොළඹ-04 / காலி வீதி. கொழும்பு-04 / Galle Road, Colombo-04

මගේ අංකය / எனது இல / My No. } ....................

ඔබේ අංකය / உமது இல / Your No. } ....................

දිනය / திகதி / Date } ....................


# வாழ்த்துச் செய்தி

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் பொன்விழாவினையொட்டி வெளியிடப்படும் **"சுத்தானந்தம்"** எனும் இதழுக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

1952ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் கடந்த ஐம்பது ஆண்டு காலமாக வவுனியாப் பிரதேசத்தில் ஆற்றிவரும் சமய, இலக்கிய, சமூகப் பணிகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. மாணவரிடையே சமயப் போட்டிகளை நடத்துதல், இலக்கியக் கருத்தரங்குகள், மாநாடுகளை ஏற்பாடு செய்து நடத்துதல், ஆன்மீகச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்தல் என்பவற்றோடு சமூக ரீதியிலும் மனித நேயப் பணிகளை ஆற்றுவதில் இச்சங்கம் முன்னின்றுள்ளது.

கடந்த இரு தசாப்த காலமாக நாட்டில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக வடகிழக்கு வாழ் தமிழர்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளானார்கள். குறிப்பாக வவுனியாவிலேயே ஏனைய பிரதேச மக்கள் வந்து தங்கிச் செல்வது அவசியமாயிற்று. இந்நிலையில் பிரயாணிகள், அகதிகள் என பல திறத்தினரும் வவுனியாவில் தங்கிச் செல்வதற்கு இச்சங்கம் தன்னாலான பல உதவிகளையும் ஆற்றியுள்ளது. இவ்வகையில் சங்கத்தினரின் மனித நேயப் பணிகள் மிகவும் பாராட்டத்தக்கவையாகும்.

இச்சங்கத்தினை உருவாக்கிய பெருமக்கள் கண்ட கனவுகளை நனவாக்கும் வண்ணம், கடந்த 50 ஆண்டு காலமும் சங்கம் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. வவுனியா பிரதேச சமய, சமூக இலக்கியப் பணிகளிலே இச்சங்கத்திற்குத் தனியிடம் உண்டு என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சங்கம் உருவாகிய நாள் முதல் இன்றுவரை, சங்கப் பணிகளிலே தம்மை ஈடுபடுத்திக்கொண்டு செயல்புரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் பொன் விழாவையொட்டிய நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்த முன்வந்துள்ள விழாக் குழுவினருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க. பரமேஸ்வரன்**
செயலாளர்

உ

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வன்னிப்பெரு நிலப்பரப்பின் முக்கிய கேந்திர மையமாக விளங்கும் வவுனியா நகரிலே, கடந்த 50 ஆண்டுகளாக சமய, சமூகப் பணிகள் ஆற்றிவரும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் வளர்ச்சி கண்டு பெருமிதம் அடைகின்றேன். இறைபணியிலும் சமூகப்பணி சிறந்தது. சமூகப்பணியூடாக இறைபணி செய்வதே இன்றைய உலகில் சிறப்பு மிக்கது.

தண்ணீர் இல்லாது துன்பமுறும் வேளைகளில் தாகம் தீர்க்கும் தாகசாந்தி நிலையம் போல ஆதரவற்று அல்லலுறும் மக்களுக்கான ஒரு மையமாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் திகழ்வது பாராட்டுதற்குரியது. கல்விச்சாலைகள், தங்குமிட வசதிகள், கலை கலாசார முயற்சிகளுக்கான மண்டப, உபசரணைகள் எனப் பல்வேறு சமூகப்பணிகளை இடம், பொருள், ஏவல் என மனங்கொண்டு ஆற்றிவருவது யாவரும் அறிந்ததே.

ஒரு சமூகத்தின் கலங்கரை விளக்கமாக அமைவது அதன் சமூக சேவை மையங்களே. அந்த வகையில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், சுத்தானந்த பாரதியாரின் பெயரில் இயங்கிவருவதோடு அவர்தம் சிந்தனைகளை செயல் வடிவில் மாற்றியமைப்பதும், சேவை செய்வதும் காலத்தினால் பதிவு செய்யப்படும். கடந்த 50 ஆண்டுகளில் இந்த நிலையம் ஆற்றிய சேவையின் வளர்ச்சிகளை, அதன் கட்டிட வளர்ச்சிகளிலும் சேவைகளின் பல்வேறு பரிமாணங்களிலும் கண்டு கொள்ள முடிகிறது.

பண்பாட்டு நிகழ்வுகளை நடாத்தும் ஒரு அமைப்பாகவும், உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம் பல பிரதிகளை கொள்வனவு செய்யும் முறையிலும் தன்னை உருவாக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் பல்வேறு சமூகநலத் திட்டங்களை உருவாக்கி மக்களுக்குப் பயன்தரும் கற்பகத்தருவாகத் தொடர்ந்தும் விளங்க வேண்டும் என வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். இன்னும் பல்லாண்டு காலம் பணிசெய்ய இறைவன் அருள் புரிவாராக!

**பேராசிரியர் எஸ். மோகனதாஸ்**

உ

# கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்
## *திரு. உடுவை. எஸ். தில்லை நடராஜா அவர்களின்*

# வாழ்த்துச் செய்தி

### என்றும் எல்லோரும் ஆனந்தம் பெறுக!

30 ஆண்டுகளுக்கு மேலாக வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்துடன் தொடர்புகளை வைத்திருப்பவன் என்ற வகையில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் வவுனியா மக்களுக்கு மாத்திரமன்றி பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கும் குறிப்பாக வடபகுதியைச் சார்ந்த பலருக்கும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல வகையில் உதவிகளை நல்கியதை நன்கு அறிவேன்.

ஆன்மீக ஒளியை மக்கள் மத்தியில் பரப்பி அவர்களை நன்னெறிப்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சங்கம் இடர் சூழ்ந்த நேரங்களில் எல்லாம் இன்னல் அகற்றுவதற்காக சமயத் தொண்டுக்கு அப்பால் சமூகத் தொண்டுகள் பல ஆற்றியதைப் பலரும் பாராட்டியதைக் கேள்விப்பட்டதுடன் சில நல்ல காரியங்கள் நடக்கும்போது அவற்றில் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்பும் கிடைத்ததை நினைத்துக் கொள்கிறேன்.

சிறுவர்கள் கல்வி நலனிலும் அவர்களின் உடற்பயிற்சி ஆகியவற்றிலும் அதிக அக்கறை செலுத்திய இச்சங்கம் கலை, இலக்கிய முயற்சிகளுக்கு ஆக்க பூர்வமாக பல பணிகளை ஆற்றியுள்ளது.

பொன்விழாக் கொண்டாடும் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மேலும் பொலிவுற வேண்டும் என வாழ்த்துவதோடு பொன்விழா நினைவாக வெளிவரும் "சுத்தானந்தம்" என்றும் எல்லோருக்கும் ஆனந்தம் தரவேண்டும் எனவும் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

மேலதிகச் செயலாளர்
கல்வி அமைச்சு
'இசுருபாய'
பத்தரமுல்ல.
2002 – 09 – 04

அன்புடன்
*உடுவை. எஸ். தில்லைநடராஜா*

வவுனியா அரச அதிபரும் மாவட்டச் செயலாளருமாகிய

## திரு. க. கணேஷ்

அவர்களது

# வாழ்த்துச் செய்தி

வவுனியா நகர மத்தியில் தன் அமைவிடத்தைக் கொண்டு இயங்கி வரும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் தனது பொன்விழாவைக் கொண்டாடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூகத்தை விட்டு விலகி, சமூகத் தேவைகளைப் புறக்கணித்துச் சமயப் பணிகளைச் செய்ய முடியாது என்பதை உணர்ந்து கொண்டு, சமூகப் பணியையும் சமயப் பணியாகக் கருதிச் செய்துவரும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் ஐம்பதாண்டுச், சமய, சமூகப் பணிகள் பாராட்டுக்குரியன.

சமய, சமூகப் பணிகளாக கலை இலக்கியப் பணிகளையும், கல்விப் பணியையும் இச்சங்கம் ஆற்றுகிறது. இச்சங்கம் நடாத்தும் பாலர் பாடசாலை குறிப்பிடத்தக்க அளவு சிறப்புற நடாத்தப்படுகிறது.

குறிப்பாக கடந்த 20 வருட காலங்களில் இடம்பெயர்ந்து வந்து சென்ற மக்களின் துன்ப காலங்களில் துயர் துடைக்கும் நிறுவனங்கள் தம் பணிகளைச் செவ்வனே செய்வது காலத்தின் கட்டாயத் தேவையாகும், என்ற தார்மீகக் கடப்பாட்டுடன் கடந்த காலங்களில் இச்சங்கம் தன்னாலியன்ற சமூகப் பணிகளை ஆற்றியிருப்பதை நான் அறிவேன். இச்சங்கத்தை வழிநடத்திச் செல்லும் தலைவர், செயலாளர், நிர்வாகிகள் அனைவரினதும் அயராத சேவையே இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது எனலாம். இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இச்சங்கம் மேலும் சிறப்புப் பெற்று வளர்ந்து தன் சமூகப்பணிகளை மேலும் விரிவுபடுத்தவும், பொன்விழா நிகழ்வுகளும், பொன்விழா நினைவு மலரும் சிறப்புறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க. கணேஷ்**
அரச அதிபர் – வவுனியா.

உ

# இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வவுனியா, சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் தனது பொன்விழாவைக் கொண்டாடுவதை அறிந்து மிக்க மகிழ்வடைகின்றேன்.

1952ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம், வவுனியா மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க ஒரு சமய நிறுவனமாக வளர்ச்சி பெற்று, நிலைத்து நிற்பது முக்கியமான விடயமாகும்.

இந்து சமய நிறுவனம் என்ற அடிப்படையில், சமய கலாசார விழுமியங்களைப் பேணுதல், பாதுகாத்தல் அவற்றை இளம் தலைமுறைக்கும் கையளித்தல் என்பன மிகவும் அடிப்படையான விடயங்கள். சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் இந்த அடிப்படைகளைப் புரிந்துகொண்டு, ஐம்பது ஆண்டுகாலம் நிலையான கட்டிட வசதிகளோடு மக்கள் பணியாற்றியுள்ளமை போற்றுவதற்குரியது. அதிலும் குறிப்பாக, கடந்த இரு தசாப்த காலங்களில் வடகிழக்கில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களின் போது மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களையும், துன்பங்களையும் இயன்றளவு துடைப்பதில் சங்கத்தினர் ஆற்றிவரும் பணிகள் மிகவும் ஆழமானவை, அர்த்தம் மிக்கவை.

அவ்வகையில் மக்கள் சேவையை முதற் கடமையாகக் கொண்டு, சமய சமூகப் பணிகளை முறையாக ஆற்றிவரும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தினரின் பணிகள் மேலும் பல்லாண்டுகள் விரிவுபெற வாழ்த்துகின்றேன்.

ஆரம்ப நாள்தொட்டு இன்றுவரை சங்கத்தைத் தோற்றுவித்து, வளர்த்தெடுத்து காலவோட்டத்திற்கேற்ப விரிவுபடுத்திய அனைத்துப் பெரியோர்களையும் நாம் இவ்வேளை நினைவுகூருவது மிகவும் பொருத்தமானதாகும். அனைவருக்கும் எமது பாராட்டுக்கள் உரியன.

பொன்விழா மலருக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

**03 - 09 - 2002**

***சாந்தி நாவுக்கரசன்***
பணிப்பாளர்.

உ

# இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் (இந்து விவகாரம்) திரு. வி. குமார்வடிவேல் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வவுனியாவில் இந்து சமய விழிப்புணர்விற்கும், தமிழ்க் கலை, கலாசார சமூக மேம்பாட்டிற்கும் குறிப்பிடக்கூடியளவு பங்களிப்பினை கடந்த ஐந்து தசாப்தங்களாக பல்வேறு வழிகளிலே மேற்கொண்டு வரும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் அரும்பெரும் பணிகளை வெளிப்படுத்தும் பொன்விழா நிகழ்வை எண்ணி பெருமிதம் கொள்வதுடன் வெளிவரவுள்ள 'சுத்தானந்தம்' நினைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க கிடைத்த வாய்ப்பினையிட்டு பெருமகிழ்வெய்துகின்றேன்.

'எம் கடன் பணி செய்து கிடப்பதே'

என்னும் முதுமொழிக்கிணங்க வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் அரை நூற்றாண்டு காலமாக இந்து சமய எழுச்சிக்காக பல சமய நிகழ்வுகளையும், தமிழ் கலை, கலாசார விழுமியங்களைப் பேணி வளர்ப்பதற்காகவும், கட்டிக்காப்பதற்காகவும் இளஞ்சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும், ஆர்வத்தையும் வளர்க்கவும் அரிய பல பணிகளை செயற்படுத்தி வருவதன் மூலம் தரணியில் தன்னிகரற்ற பணியாளர்களைக் கொண்ட நிறுவனமாக இன்று நின்று நிலைபெற்றிருப்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

வவுனியாவில் பல தசாப்தங்களாக இடம்பெற்ற அனர்த்தங்களின் போது தேவைக்கேற்ப உரிய பங்களிப்பினை நல்கி சமூக நலனில் அக்கறையுள்ள நிறுவனமாக மிளிர்வது பாராட்டுதற்குரிய விடயமாகும்.

ஐம்பது ஆண்டுகளாக பணியாற்றிவரும் இச்சங்கத்தின் பாதுகாவலர்கள் சமய சமூக நலனில் தேவைக்கேற்ப தமது பங்களிப்பினை வழங்குவதுடன் சங்க வளர்ச்சியிலும், இளம் தலைமுறையினரின் தேவைகளைப் புரிந்துணர்ந்து செயற்படுத்துவதிலும் அக்கறையுடன் செயற்பட்டு வருவதை உணரக்கூடியதாக உள்ளது.

இச்சங்கத்தின் பணி மேலும் மேலும் விரிவடைந்து ஆலவிருட்சம் போல் வளர வேண்டும் எனவும், 'சுத்தானந்தம்' பொன்விழா இதழ் வெளியீடு சிறப்புடன் நிகழவும் நல்வாழ்த்துக்கள்.

***வி. குமார்வடிவேல்***

## வவுனியா பிரதேச செயலாளர்
## திரு. சி. சத்தியசீலன் அவர்களின்

# வாழ்த்துரை

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் 50 ஆண்டு நிறைவு மனதுக்கு பேருவகையைத் தருகின்றது.

இன்றைய காலகட்டத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக வவுனியா நகர் உள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் மக்களின் இடைத்தங்கலுக்கும் ஏனைய தொடர்புகளுக்கும் பேருதவி புரிந்து வந்தது இச்சங்கமே. நெருக்கடியான காலகட்டங்களிலும் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து வந்த மக்களிற்கு அபயமளித்து ஆறுதல் அளித்ததனை யாரும் மறக்க முடியாது.

இச்சங்கம் சைவத்துக்கும் தமிழுக்கும் மேலும் பல தொண்டுகளை புரிந்து வருவது பாராட்டத்தக்கது. திருமணங்கள், விழாக்கள், சங்கீத, நடன வகுப்புக்கள், சமய போட்டிகள் அறிஞர்களின் கருத்தரங்குகள், பாலர் பாடசாலை என்று சமய சமூக பணிகளை இச்சங்கம் ஆற்றி வருகின்றது.

காலத்தின் தேவைக்கேற்ப தனது செற்பாடுகளை விரிவுபடுத்தி, உயர்கல்வி பெறத்தகுதியிருந்தும் வசதியில்லாது கஸ்ரப்படுகின்ற பல ஏழை மாணவர்களிற்கு புலமைப்பரிசில்களை வழங்கி அவர்களின் எதிர்கால வாழ்விற்கும் எமது சமூகத்தின் உறுதியான அத்திவாரத்திற்கும் வழியமைக்க வேண்டும் என்பது அனைவரினதும் அவாவாகும். சங்கத்தின் செயற்பாடுகளை சிறந்த முறையில் நெறிப்படுத்தி செவ்வனே வழிப்படுத்தி வரும் நிருவாகத்தினருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் சங்கத்தினால் வெளியிடப்படும் இம்மலருக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
பிரதேச செயலாளர்
வவுனியா.

## வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரும் வன்னி மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு. இ. விசாகலிங்கம் அவர்களின்

# வாழ்த்துரை

வவுனியாவில் பல்வேறு வகையான சமய சமூகத் தொண்டுகளை ஆற்றிவரும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் தனது பொன்விழாவைக் கொண்டாடுவதையும், பொன்விழா நினைவாக **சுத்தானந்தம்** என்ற பெயரில் மலரொன்றை வெளியிடுவதையும் அறிந்து மகிழ்கிறேன்.

அண்மைக் காலத்தில் வட - கிழக்கில் ஏற்பட்டிருந்த அமைதியற்ற சூழ்நிலையில் அனைவருக்கும் ஆதரவு வழங்கும் ஒரு சமய நிறுவனமாகச் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் விளங்கியதை நான் அறிவேன்.

சமயப் பணியோடு பலவகைச் சமூகப் பணிகளையும் ஆற்றிவரும் இந்நிறுவனம், பாலர் பாடசாலை ஒன்றையும் முன்பள்ளி மாணவர்களுக்காகச் சிறப்பாக நடாத்தி வருகின்றது. அம்முன்பள்ளி மாணவர்களைக் கொண்டு விளையாட்டுப் போட்டிகளையும், கலை விழாக்களையும் நடாத்தி வருவதைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன்.

ஏழை மாணவர்களுக்கும் அதிதிறமை வாய்ந்த மாணவர்களுக்கும், கல்விக்கான ஊக்குவிப்பு உதவிகளும், மாணவர்களுக்கான சமயம் சார்ந்த போட்டிகளும், சைவசமய பாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளும், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளும் இந்நிறுவனத்தின் கல்வி சார்ந்த பணிகளில் சிலவாகும்.

தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்கள், கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவித்தும் வரும் இச்சங்கம் எமக்கும் பலவகையில் உதவி வருகின்றது.

இச்சங்கத்தில் கடந்த பத்து ஆண்டுகள் வரையில் தலைவராக இருந்து தொண்டாற்றி வரும் திரு. நா. சேனாதிராசா அவர்கள் பாராட்டுக்குரியவர். அவரோடு சேர்ந்து இந்நிறுவனத்தை இயக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

பொன்விழா நிகழ்வுகள் சிறக்கவும், பொன்விழா நினைவாக வெளிவரும் மலர் மணம் வீசிப் பொலியவும் என் வாழ்த்துக்கள்.

**இ. விசாகலிங்கம்**

உ

# வவுனியா நகரசபைச் செயலாளர்
## திரு. வே. செ. சு. செல்வராஜா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பதாண்டு பூர்த்தி பொன்விழாக் கொண்டாட்டத்தின் போது வெளிவரும் சுத்தானந்தம் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வவுனியா நகரில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் ஆரம்பித்து ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து நிற்கும் இவ்வேளையில் இதன் ஆரம்பகால நோக்கம் செவ்வனே நிறைவேற்றப்பட்டு அதன் சேவை சமயம், தமிழ், கலை, கலாச்சாரம் ஆகிய பல வழிகளிலும் விரிந்து இன்று வவுனியாவில் மட்டுமல்ல அகில இலங்கையிலும் இதன் பெயர் மங்காப் புகழுடன் சிறந்து விளங்குவது யாவரும் அறிந்ததே. இது சைவ சமய நிகழ்ச்சிகள் ஒன்றைத்தானும் விட்டு வைக்காமல் ஆண்டு தோறும் குறித்த தினத்தில் விழா எடுத்து வருவதும் தமிழர் பண்பாடு கலை கலாச்சாரத்தைப் பேணுவதற்கு வேண்டியபோதெல்லாம் தமிழ் ஆர்வலர்களை அழைத்து அவர்களுடன் சேர்ந்து தமிழுக்காக கலை அரங்குகள், கவியரங்குகள், கலைவிழாக்கள், நூல் வெளியீடுகள் போன்றவற்றைச் செய்து கலையார்வம் மிக்கவர்களைக் கௌரவித்து ஊக்கம் கொடுத்து வளர்த்து வருவதும், காலத்தின் தேவையாக சிறுவர் பாடசாலை ஒன்றை அமைத்து அதில் அதிகளவு ஆசிரியர்கள் மாணவர்களைச் சேர்த்து சிறுவர்களுக்கு எழுத்தறிவு புகட்டுவது மட்டுமல்ல இளவயதிலேயே அங்கு பயிலும் சிறார்களுக்கு சமயப்பற்றையும், தமிழ்ப்பற்றையும், கலையார்வத்தையும் ஊட்டி வவுனியாவில் எல்லோர் மத்தியிலும் தனியான ஓர் இடத்தைப் பெற்று நிற்பதும் இதன் சேவை வளர்ச்சியைக் காட்டுகிறது.

மேலும் வடபகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து வந்த மக்கள் பெருமளவில் தங்கி நின்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்து செல்லக் கூடிய வகையில் சிறந்த தங்குமிட வசதிகள் செய்து கொடுத்து இருப்பதும் அவர்கள் இலகுவில் வெளியிடங்களுக்கு தொடர்பு கொள்ளக்கூடிய விதத்தில் தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்திச் செய்து வருவதும் மக்கள் தமது சுப நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் கொண்டாட வசதியாக மண்டப வசதிகள் செய்து கொடுத்திருப்பதும் இதன் சேவை விரிவாக்கத்தை வெளிக்காட்டுகிறது.

எதிர்காலத்தில் இந்நிறுவனம் மேலும் தனது சேவையை மக்களின் தேவை கருதி விரிவுபடுத்தி வவுனியாவில் சகல வழிகளிலும் சிறந்து விளங்கவும், இதன் பொன்விழா நல்ல முறையில் நடைபெறவும் "சுத்தானந்தம்" மலர் சிறப்பாக அமைந்து மக்கள் கையில் மிளிரவும் எனது வாழ்த்துக்கள்.

**"வாழ்க சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்"**
**"மலர்க சுத்தானந்தம்"**

**வே. செ. சு. செல்வராஜா**

உ

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தர்மகர்த்தா சபையினரின்

# வாழ்த்துச் செய்தி

## ஓம் சுத்த சக்தி

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் அதன் ஐம்பதாவது வருட நிறைவை 19-11-2002 இல் அடைகிறது.

இச்சங்கம் கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் சுவாமிகளால் 19-11-1952 இல் வவுனியா கந்தசாமி கோவிலில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இங்குள்ள சமயப் பெரியார்களின் வேண்டுகோளை ஏற்று சுவாமிகள் இலங்கை வந்த போது வவுனியாவுக்கு வந்து சங்கத்தை ஆரம்பித்து ஆசி உரையையும் வழங்கினார்கள்.

இன்று ஐம்பது வருட நிறைவை அடைந்துள்ள இத்தாபனம் போற்றத்தக்க வகையில் சமய கலாச்சார நெறியை வளர்த்து அரும்பணியாற்றி வருவதை யாவரும் அறிவார்கள். சென்ற யுத்தகால இருள் சூழ்ந்த காலப்பகுதியில் மக்கள் பாதுகாப்பாகத் தங்கி தமது பயணத்தை மேற்கொள்ளவும் அவர்களின் தேவைகளைக் குறைவின்றி நிறைவேற்றியும் வந்துள்ளது.

இளம் சிறார்களின் கல்வி, சமய ஒழுக்கநெறிகளை வளர்ப்பதற்காக சிறுவர் பாடசாலை அமைத்தும், மக்களின் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட விழாக்கள், கூட்டங்கள், சமய நிகழ்ச்சிகள், திருமணம் போன்ற வைபவங்கள் செய்வதற்கு கலை அழகு மிக்க நடராசர் மண்டபம், சேக்கிழார் மண்டபம் கலாசார மண்டபம் போன்ற மாடிக் கட்டிடங்களை அமைத்தும் மக்களின் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைந்து பொதுச் சேவை செய்வதை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

இப்படியான செயற்கரிய செயல்களை ஆட்சிமன்றத்தில் உள்ளவர்கள் தமது இலட்சியமாகச் செய்வதையும் பாராட்டுகின்றோம்.

பொன்விழா நினைவாக (சுத்தானந்தம்) நினைவு மலர் வெளியிடுவதற்கு அவர்கள் எம்மிடம் (தர்மகர்த்தா சபையினர்) வாழ்த்துரை கோரியுள்ளதை மிகுந்த மனமகிழ்ச்சியுடன் ஏற்று ஏக மனதான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

இச்சங்கம் எதிர்காலத்திலும் சிறந்த பணிகள் புரிய எல்லாம் வல்ல ஆடல் வல்லான் நடராஜப் பெருமானின் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்

தர்மகர்த்தா சபையினர்

1. **செ. பத்மநாதன்** சமா.நீதி
2. **ச. சுப்பிரமணியம்**
3. **வி. க. இரத்தினசிங்கம்** சமா.நீதி
4. **செ. மார்க்கண்டேயர்**
5. **கா. இரத்தினசிங்கம்**

உ
சிவமயம்

## அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில் அறங்காவலர்

# திரு. ஆ. நவரெத்தினராசா

### அவர்களின்

# வாழ்த்துரை

*எல்லா வளமும் இனிதே பொருந்திய வவுனியாப் பிரதேசத்திற்கு அருட்செல்வமாம் ஆன்மீகவளம் சேர்க்கும் வகையில் உதயமாகிய "சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்" இன்று தனது ஐம்பது (50) ஆண்டு கால வாழ்வில் ஒரு பல்கலைக்கழகத்துக்கு ஈடு இணையுள்ளதாகத் திகழ்ந்துள்ளது. பிரதேசத்தின் பெருமைகள் தரணியெங்கும் பரவும் வகையில் தொண்டாற்றி வந்துள்ளது. அவர்கள் பணி தொடர்ந்து ஓங்க வேண்டும். ஆன்மீகப் பணிகளும் செழித்து வளர வேண்டுமென அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடன் உறை அகிலாண்டேஸ்வரர் பாதாரவிந்தம் பணிந்து நிற்கின்றேன்.*

"அனைத்தும் சிவன் செயல் என்று நாம் எண்ணுவோம்
ஆன்மாக்களிடத்தில் அன்பு நாம் பண்ணுவோம்"

- திருவாக்கு - (யோகர் சுவாமிகள்)

கோயில்குளம்,
வவுனியா.

**ஆ. நவரெத்தினராசா**
அறங்காவலர்

உ
சிவமயம்

# வவுனியா இந்துமாமன்றத் தலைவர்
## திரு. சி. ஏ. இராமஸ்வாமி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களால் 50 ஆண்டுகளுக்கு முன் வித்திடப்பட்ட சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் இன்று ஆல்போல் தழைத்து விழுதுகள் பலவிட்டு நிழல் தரும் மரமாக விளங்குகின்றது கண்டு மிகவும் மனம் மகிழ்கிறேன். மக்கள் மனம் மகிழ்கிறார்கள். இந்நேரத்தில் காலத்தாற் செய்த உதவியென ஆரம்ப காலத்திலிருந்து தத்தம் உள்ளத்தாலும் உடலாலும் பொருளாலும் உதவி வந்த அன்பர்கள் அனைவரும் நன்றி கூறி பாராட்டப்பட வேண்டியவர்கள்.

1990 காலப்பகுதி வரை அமைதியான காலத்தில் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த சங்கம் 1990ல் ஏற்பட்ட மாற்றங்களால் நிர்வகிப்பவர்களுக்கு பெரும்சவால்களை உண்டு பண்ணியது. குறிப்பாக சங்க மண்டபத்தை தம் கைவசப்படுத்தி வைத்திருந்தவர்களிடமிருந்து பெரும் சிரமத்தின் மத்தியில் மீட்டெடுத்து மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய பொறுப்பு தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்கட்கு ஏற்பட்டது யாவரும் அறிந்ததே. நெருக்கடியான காலகட்டத்தில் திரு. வை. செ. தேவராசா அவர்கள் தலைமையில் திரு. நா. சேனாதிராசா அவர்கள் செயலாளராகவும் திரு. இ. திருமேனி அவர்கள் பொருளாளராகவும், பொறுப்பேற்றுக் கொண்ட நிர்வாக சபையில், உபதலைவராக செயல்படும் பொறுப்புக் கிடைத்தது. இதனையிட்டு நான் பெருமிதமடைகிறேன். அடுத்த நிர்வாக சபை திரு. நா. சேனாதிராசா அவர்கள் தலைமையிலும், திரு. வை. செ. தேவராசா செயலாளராகவும், திரு. இ. திருமேனி அவர்கள் பொருளாளராகவும் அமைந்தது.

1992ன் பின் ஏற்பட்ட சங்க வளர்ச்சியில் தொடர்ந்து வந்த நெருக்கடிகளால் மக்களுக்கு அதிக அளவு சேவையினை வழங்க வேண்டிய பெரும் பொறுப்பு தலைவர் திரு. நா. சேனாதிராசா அவர்களின் தலைமையிலான நிர்வாக சபைக்கு ஏற்பட்டது. இறைவன் திருவருளால் நெய்க்கு தொன்னை ஆதாரம் தொன்னைக்கு நெய் ஆதாரம், என்பது போல் மக்களுக்கும் நல்ல சேவை கிட்டியது. சங்கமும் பிரமிக்கத்தக்க வளர்ச்சியைக் கண்டது. திரு. நா. சேனாதிராசா அவர்கள் 1990ன் பின் ஏற்பட்ட அழிவுகளால் முழுமையாகப் பாதிப்படைந்தவர். ஆனால் மனம் தளராது பெருமளவு நேரத்தை ஒதுக்கி செயல்பட்டதை யாரும் மறுக்கவும் முடியாது. மறைக்கவும் முடியாது. இதுபோன்று அதே காலத்தில் இணைந்து செயல்பட்ட செயலாளர் திரு. க. தர்மதேவன் அவர்கள், திரு. இ. திருமேனி அவர்கள், உபசெயலாளர் திரு. நா. யோகராசா அவர்களையும் மறக்க முடியாது. இலக்கிய சமய, கலைச் சேவையில், சிறுவர் பாடசாலை வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்த தமிழ்மணி அகளங்கன் அவர்களை மறக்க முடியாது. சங்கத்தின் வளர்ச்சியில் இலைமறை காயாக செயல்பட்டு வந்த பலரை இங்கு குறிப்பிட்டால் விரியும் என்பதால் மனம் திறந்து சொல்லவேண்டியவற்றைச் சொல்லி மகிழ்ச்சியடைகிறேன்.

வடபகுதியில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்ட சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மென்மேலும் வளர்ச்சியடைந்து மக்களுக்கு சமய இலக்கிய சமூகப் பணிகளில் சிறந்து ஓங்க எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிய வேண்டி நிற்கின்றேன்.

*சி. ஏ. இராமஸ்வாமி*

## வவுனியா பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத் தலைவர்

# ஸ்ரீ. சி. இரகுநாதபிள்ளை

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

*வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் தனது பொன்விழாவை 2003ம் ஆண்டில் கொண்டாடுவது யாவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும். 50 வருடங்களுக்கு முன்பு ஊன்றப்பட்ட விதை முளைத்து, விருட்சமாகி, கிளைகளைப் பரப்பி, பூத்து, காய்த்து, கனிகளைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றது. இன்று வவுனியாவிலே ஒரு வலுவுள்ள இந்து நிறுவனமாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் மிளிர்கின்றதென்றால் அதற்குக் காரணம் அச்சங்கத்தால் ஆற்றப்படும் தமிழ், சமய, சமூகப் பணிகளேயாகும். இச்சங்கம் பலதரப்பட்ட சேவைகளை முக்கியமாக வசதியற்ற மக்களுக்கு இலாப நோக்கம் கருதாது ஆற்றி வருவது இரகசியமல்ல. இன்று ஒரு ஆன்மீக நிகழ்வை அல்லது தமிழுக்கு ஒரு விழாவை, அல்லது ஒரு கலைநிகழ்ச்சியை நடாத்த வேண்டுமென்றால் எமது மனதில் முதலில் நினைவுக்கு வருவது சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமே. ஒரு ஸ்தாபனம் செம்மையாக இயங்கி வளர்ச்சி அடைய வேண்டுமாயின் அதன் நடவடிக்கைகள் ஒழிப்பு மறைப்பு இன்றி வெளிப்படையாகவும், மாதாந்த வருடாந்தக் கூட்டங்கள் ஒழுங்காகவும், கணக்கு வழக்குகள் முறையாகவும் பேணப்படவேண்டும். இதில் ஒன்று குறைவடையினும் அந்நிறுவனம் தோல்வியையே தழுவும். சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் மேற்கூறிய மூன்று காரணங்களும் தலைவரினதும் ஏனைய நிர்வாகிகளினதும் தன்னலமற்ற செயற்பாடே முக்கிய காரணம் என்றால் அது மிகையல்ல. இந்நிறுவனம் மேலும் வளர்ச்சியடைந்து தமது சேவைகளை விரிவாக்க வேண்டுமென்று பொன் விழாக்காணும் இத்தருணத்தில் வாழ்த்தி முடிக்கின்றேன்.*

**சி. இரகுநாதபிள்ளை**
*தலைவர்*
*பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம்*
*வவுனியா.*

உ

ஞான சிரோமணி, வித்துவான், சைவப்புலவர்மணி, கலாபூஷணம்

# வ. செல்லையா

அவர்கள் வழங்கும்

## வாழ்த்துரை

வவுனியாவில் சிறப்புற்றுச் சேவையாற்றும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் சமயம், கல்வி, கலை, சமூக நலங்களை மேம்படுத்தச் சேவை புரிவதை யாவரும் அறிவர். பணியாற்றிப் புகழ் ஈட்டி ஐம்பது ஆண்டுகள் பூர்த்தி செய்து வவுனியாவில் உள்ள சங்கங்களில் தலையாய சங்கமாகத் திகழ்கின்றது, இதற்கு ஈடுஇணை இந்த வவுனியா மண்ணில் இல்லை எனலாம். கடந்த பல வருடங்களாக மக்கள் அனுபவித்த துயரங்களைத் துடைக்கச் சங்கம் பல பணிகளைப் புரிந்துள்ளது. பொதுத் தொண்டு புரிவோரைப் பாராட்டிப் பரிசு வழங்கும், பணியாற்றி வருகின்றது. இச்சங்கத் தலைவர் திரு. நா. சேனாதிராசா (சமா.நீதி), செயலாளர் திரு. க. தர்மதேவன் ஆகியோர்க்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட செயற்குழுவிற்கும் எமது பாராட்டுக்கள். 50 ஆண்டு நிறைவில் ஒரு மலர் வெளியீடும் விழாவும் எடுக்க முன் வந்தது மிகப் பொருத்தமானதொன்று. செய்த பொதுநல சேவையை மக்கள் அறிவதற்கு விழா எடுப்பது பொருத்தமானதே. இவர்கள் தங்கள் பணியிற் சிறந்து மேலும் சேவை செய்ய இச்சங்கத்திற்கு பாராட்டுரை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். எனது உடல் நலக்குறைவால் பூரண ஒத்துழைப்பு கொடுக்க முடியாது இருக்கின்றது. சுத்தானந்தம் மலர் சிறப்பாக அமையவும் பொன் விழா பொலிவுறவும் திருவருளை இறைஞ்சி வேண்டுகின்றேன்.

**வ. செல்லையா**
கௌரவ ஆசிரியர் சைவநீதி

03

# வரலாறு

# அறிக்கை

(33 - 53)

உ
சிவமயம்

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் வரலாறு

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் 1952ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. வவுனியாவில் ஓர் இந்து நிறுவனம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் பல வருடங்களுக்கு முன்பே வவுனியாவில் வாழ்ந்த சைவப் பெரியார்களிடம் இருந்துவந்தது. இந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு உந்துசக்தியாக அன்றைய காலத்தில் இந்தியாவில் உள்ள தமிழ் நாட்டில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கிய இந்து சமயப் பெரியார் **கவியோகி சுத்தானந்த பாரதியார்** அவர்களின் இலங்கை விஜயமும், அதனால் ஏற்பட்ட வவுனியா விஜயமும் வாய்ப்பாக அமைந்திருந்தது.

இப்பெரியார் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லவரும் போது அவரை வவுனியாவுக்கு அழைத்துப் பெரியதொரு வரவேற்பு அளிக்கவேண்டும் எனவும் அன்றே இங்கு ஒரு **இந்து இளைஞர் சங்கத்தை** ஆரம்பிக்க வேண்டும் எனவும் பல சைவ அன்பர்கள் விரும்பியதால், அக்காலத்தில் வவுனியா தெற்கு தமிழ்ப் பகுதிக் காரியாதிகாரியாகக் கடமையாற்றிய **(டி.ஆர்.ஓ.) திரு. சதா. ஸ்ரீநிவாசன்** அவர்கள் கவியோகி அவர்களை வவுனியாவுக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

இதன் பயனாக 1952ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ம் திகதி (18.11.1952) அன்று அன்னார் வவுனியாவிற்கு விஜயம் செய்தார். அடுத்த நாள் (19.11.1952) அவருக்கு ஒரு கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டது. சுவாமி அவர்கள் மன்னார் வீதிச்சந்தி (குருமன்காடு) யிலிருந்து ஊர்வலமாக மேளதாளவாத்தியங்களுடன் புகையிரத நிலையவீதி, கடைவீதி வழியாக வவுனியா ஸ்ரீகந்தசுவாமி கோவிலுக்கு வந்தடைந்தார்.

அங்கு பூசை ஆராதனைகளை முடித்துக் கொண்டு அன்பர்களின் வேண்டுகோளுக் கிணங்க சுவாமி அவர்கள் தனது [illegible] அன்றைய தினமே "இந்து இளைஞர் சங்கத்தை" அங்குரார்ப்பணம் செய்து [illegible] கூட்டத்திற்கு வவுனியா மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களிலிருந்து [illegible] று இருபது உறுப்பினர்கள் வரை சமூகமளித்து இருந்தனர். ரூபா ஒன் [illegible] ந்தாவாகச் செலுத்தி இவர்கள் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்துகொ [illegible]

கவியோகி சுத்தானந்த பா [illegible] அவர்களால் நேரடியாக இச்சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டதால், இச்சங்க [illegible] குச் **சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்** எனப் பெயரிடப்பட்டது.

அன்றைய ஆட்சி மன்றத்தினரின் பெயர்களை முழுமையாக இன்று தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும், இதன் ஆரம்பகாலத் தலைவராக **திரு.சதா. ஸ்ரீநிவாசன்** அவர்களும், (காரியாதிகாரி) கௌரவ செயலாளராக **திரு.சி. இரத்தினகேசரிலிங்கம்** அவர்களும் இக்கூட்டத்தை கூட்டியவராக சாஸ்திரி கூழாங்குளம் **செல்லையா பத்மநாதன்** அவர்களும் இருந்தனர் என்பது அறியக்கிடக்கின்றது.

ஆரம்பகால நிருவாகம் இச்சங்கத்திற்கு ஒரு காணித்துண்டை வவுனியா நகரத்தில் ஒரு நல்ல இடத்தில் பெறுவதிலும், வேறு பல ஆரம்ப நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு, தற்போது கட்டிடம் இருக்கும் காணியைப் பெற்றுக் கொண்டது. இதன்பின் பல வருடகாலம் இச்சங்கம் பொலிவிழந்து பெயரளவில் மட்டும் இருந்து வந்தது. இந்நிலையில் 1968ம் ஆண்டளவில் கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் திரும்பவும் இலங்கைக்கு வருவதை முன்னிட்டு இச்சங்கம் புனரமைக்கப்பட்டது.

**17.02.1968**ம் ஆண்டு வவுனியா நகரசபை மண்டபத்தில் கூடிய இச்சங்கப் பொதுச்சபை மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டது. இக்கூட்டத்தில் திரும்பவும் **திரு. சதா. ஸ்ரீநிவாசன்** அவர்கள் தலைவராகவும், **திரு. த. நல்லதம்பி** அவர்கள் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இதில் திரு. த. நல்லதம்பி அவர்கள் கிளிநொச்சியிலுள்ள "குருகுலம்" என்ற சைவ நிறுவனத்தில் ஏற்கனவே சேவையாற்றியவர். அரசாங்க உத்தியோகம் காரணமாக வவுனியாவிற்கு மாற்றலாகி வந்தவர். இதன்பின் இவரது விடாத முயற்சியால் இச்சங்கம் முன்வேறலாயிற்று.

அதன் பயனாக ஏற்கனவே புகையிரத நிலைய வீதியிற் பெற்றுக் கொண்ட காணியில் ஒரு அலுவலகத்தையும், கலாசார மண்டபத்தையும், அமைக்கவேண்டுமென்ற முடிவை ஆட்சிமன்றம் எடுத்துச் செயற்பட்டு வந்தது. கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் இரண்டாவது முறையாகவும் இலங்கைக்கு வந்த போது அவரை வவுனியாவுக்கு இச்சங்கத்தினர் அழைத்து கௌரவித்ததுடன் **20.06.1968** அன்று, கட்டவிருக்கும் புதிய கட்டிடத்திற்கான அத்திவாரக் கல்லையும் சுவாமி அவர்களினாலேயே நாட்டச்செய்தனர்.

அக்காலத்தில் வவுனியாவில் இருந்த பல சைவப் பெரியார்களும் அன்றைய பல அரசாங்க உத்தியோகத்தர்களும் அன்றைய வவுனியாத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் **திரு. தா. சிவசிதம்பரம்** அவர்களும் இச்சங்க வளர்ச்சியில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டனர். ஆரம்பகால உறுப்பினர்கள் பலர் இன்று உயிருடன் இல்லாவிட்டாலும் இருப்பவர்கள் இன்றும் இச்சங்கத்தின் முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயற்படுவது சங்கத்திற்கு நன்மை பயக்கின்றது. பிற்சந்ததியினருக்கும் ஓர் உற்சாகமாக அமைந்துள்ளது.

இச்சங்கத்தின் கட்டிடத்தைக் கட்டிமுடிப்பதற்குப் பெரும் நிதி தேவையாக இருந்த போதிலும் வவுனியாவிலுள்ள பல வியாபாரிகளும், பல சைவ அன்பர்களும் மனங்கோணாது ஒரு புண்ணிய காரியத்தில் முதலிடுவதாக நினைத்து வாரி வழங்கியதாற் தான் இவ்வளவு பெரிய கட்டிடத்தை ஓரளவு கட்டி முடிக்கக் கூடியதாக இருந்தது. சைவ அன்பர்கள் மட்டுமல்ல வேறு சமயத்தைச் சேர்ந்தவர்கள் கூட நிதி உதவி புரிந்துள்ளனர். இன்னும் கட்டிடத்தைக் கட்டிமுடிப்பதற்கு நிதி தேவைப்பட்டபோதெல்லாம் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களிளெல்லாம் நேரடியாகவும், கலைநிகழ்ச்சிகள் மூலமும் நிதி சேகரிக்கப்பட்டது.

தொடர்ந்தும் நிதி தேவையாக இருந்ததால் இச்சங்கத்தின் உப-தலைவர்களில் ஒருவரும், காந்தீயத்தின் முக்கியஸ்தரும், "சாந்தி கிளினிக்" என்ற தனியார் மருத்துவ மனையை நடாத்தி வந்தவருமாகிய **டாக்டர் சோ. இராசசுந்தரம்** அவர்கள் தனது சொந்த முயற்சியால் வெளிநாட்டு நிறுவனமாகிய "நொவிப்" என்ற ஸ்தாபனத்திடமிருந்து ஒரு கணிசமான தொகையை நன்கொடையாகப் பெற்றுக்கொடுத்ததால் இச்சங்கத்தின் **நடராஜர் மண்டபம்** பூரணப்படுத்தப்பட்டது. இன்று வவுனியாவிலுள்ள சைவ மக்கள் மட்டுமல்ல, தமிழ்பேசும் மக்கள், எல்லோரும் பெருமைப்படும் அளவுக்கு உயர்ந்து சேவை செய்வதற்கு இக்கட்டடம் மூலகாரணமாகும்.

**சேவைகள் :.............................................**

இருபது அறைகளையும், ஒரு மேடையையும், பாரிய மண்டபத்தையும், மேலே சுற்றுவட்டமான பல்கனியையும், உள்ளடக்கிய நடராஜர் மண்டபத்தின் மேடையில் நடராசப்பெருமான் திருநடனம் புரியும் ஒரு சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு வெள்ளிக்கிழமைகள் தோறும் பூசைகள் நடைபெறுகின்றன. இங்கே திருவாசகம் முற்றோதல், சமயச் சொற்பொழிவுகள், குருபூசைகள், மற்றும் நவராத்திரிவிழா, போன்ற சமய நிகழ்ச்சிகள், நடைபெறுவதுடன் பரதநாட்டியப் பயிற்சிகளும், சங்கீத வகுப்புகளும் நடைபெறுகின்றன. இம்மண்டபமும், அறைகளும் தற்போதைய பிரயாணக் கஷ்டம் நிறைந்த காலத்தில் வடக்கேயிருந்து தெற்கேயும், கிழக்கேயும், மலைநாட்டிற்கும், செல்லும் பிரயாணிகளில்

தூற்றுக்கணக்கானவர்கள் நாளாந்தம் தங்கி நின்று ஓய்வெடுத்துச் செல்லப் பயன்படுகின்றது. ஓரளவிற்கு தண்ணீர் வசதி, மலசலகூட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இச்சேவையை பலரும் காலத்தை அறிந்து செய்யும் சேவையாகப் பாராட்டுகின்றனர்

மண்டபத்தில் தங்குவோரின் வசதிக்காக சுத்தானந்த சைவப்போசனசாலை அமைக்கப்பட்டு சிறந்த சைவ உணவு பரிமாறப்படுகின்றது. நிழற்பிரதி எடுக்கும் வசதியும், உள்நாட்டு, வெளிநாட்டுத், தொலைத்தொடர்பு வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**பாலர் பாடசாலை........................................**

வவுனியா நகரத்தில் ஒரு நல்ல தரமான பாலர் பாடசாலை இல்லாத குறையைப் போக்கும் முகமாக இச்சங்கம் ஒரு பாலர் பாடசாலையை நடாத்திவருகின்றது. சுமார் முன்னூறு பிள்ளைகள் வரை கல்விபயின்று வருகிறார்கள். எட்டு ஆசிரியர்கள் சேவையாற்றுகிறார்கள். இப்பாடசாலை வவுனியாவில் ஒரு முதற்தரமான பாடசாலை என்ற பெயரைப் பெற்றுள்ளது.

பாடசாலைப் பிள்ளைகளின் மேலதிக வசதிக்காக ஒரு மண்டபம் எண்பத்து ஐந்து அடி நீளமும், முப்பத்து இரண்டு அடி அகலமும், கொண்டதாக மூன்று அடுக்கில் அமைப்பதற்கு தற்பொழுது வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கிழே மண்டபம் அமைக்கப்பட்டு **சேக்கிழார் மண்டபம்** என்ற பெயரில் இப்போது பயன்படுகின்றது. முதல் மாடியின் வேலைகள் பூர்த்தியாகி **12 - 06 - 1999**ல் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைமைச் சுவாமிகள், சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. **கலாசார மண்டபம்** எனஅழைக்கப்படும் இம்மண்டபம் மங்கலச் சடங்குகளுக்கும் மற்றும் பல்வேறு விழாக்களுக்கும் பயன்படுகின்றது. இம்மண்டபம் பெருமளவுக்கு சகல வசதிகளையும் கொண்ட திருமண மண்டபமாகப் பாராட்டப் படுகின்றது.

இச்சங்கத்தின் வளர்ச்சியில் இன்னும் பல முன்னேற்றங்கள் ஏற்படவேண்டியிருக்கின்றது. இச்சங்கத்தின் சாதாரண உறுப்பினர் தொடக்கம் ஆட்சிமன்ற தர்மகர்த்தா சபைவரை மிகுந்த பொறுப்புணர்வுடன் உழைத்து வருவதால் இச்சங்கம் மேன்மேலும் முன்னேறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**1990**ம் ஆண்டில் வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட வன்செயலின்போது எமது சங்கம் பல இலட்சரூபா பெறுமதியான தளபாட உபகரணங்களை இழந்துவிட்டது. வன்செயல் தொடங்கி ஒன்றரை ஆண்டுகளின் பின்பே வெறும் கட்டடத்தை மட்டும் நாம் பொறுப்பேற்றோம்.

இன்று பாலர் பாடசாலை, அறநெறிப்பாடசாலைகள், சைவசமய ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள், திருமண மண்டப வசதிகள் எனப்பல சமூக சமயப் பணிகளை இச்சங்கம் ஆற்றிவருகின்றது. மாணவர்கள் மத்தியில் சமய, தமிழ், அறிவை ஏற்படுத்தப் போட்டிகள் வைத்து பரிசளித்தல், சிறந்த கலைஞர்களைப் பராட்டி பரிசளித்தல், முதலானவைகளும் எம்மால் நிகழ்த்தப்படுகின்றன. வவுனியாவில் கல்வி, கலாசார வளர்ச்சிக்கும், சமய மேம்பாட்டுக்கும், சமூக உயர்விற்கும் அரியபணிகளை இச்சங்கம் ஆற்றுகின்றது.

இச்சங்கம் மேலும் வளர்ச்சியடைந்து மேலும் சமய சமூகப்பணிகளை ஆற்ற இறையருளையும், உங்கள் ஆதரவையும் நாடி நிற்கின்றோம்.

*வ. சு. இ. இ. சங்கம்*
*வவுனியா.*

அன்பன்
**நா. யோகராசா,**
துணைச் செயலாளர்.

# கௌரவ தலைவர்




மக்கள் சேவை மாமணி

**திரு. நா. சேனாதிராசா.** சமா. நீதி.

அவர்கள்

உ
சிவமயம்

## வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர்
"மக்கள் சேவை மாமணி"

## திருமிகு நாகலிங்கம் சேனாதிராசா சமா.நீதி
அவர்களின்

# செய்தி

கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் இலங்கைக்கு வந்தபோது 19 - 11 - 1952 அன்று அவரால் ஆரம்பித்து வைக்கப்பெற்ற வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம். 19 - 11 - 2002 இல் தனது ஐம்பது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்து பொன்விழாவைக் கொண்டாடுகின்றது. சாதாரணமாக இந்து இளைஞர் சங்கங்கள் பல இடங்களில் இருந்தாலும் சுத்தானந்த பாரதியாரால் இச்சங்கம் ஆரம்பித்து வைக்கப் பெற்றதால் "சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்" எனப் பெயர் வைக்கப் பெற்றுள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டுகளாகச் சமய. சமூகப் பணிகளை ஆற்றிவரும் இச்சங்கத்தின் தலைவராகக் கடந்த பத்து ஆண்டுகளாக நான் பணியாற்றி வருவது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாக நான் கருதுகின்றேன். இப்பாக்கியத்தைத் தந்த இறைவனுக்கு எனது வணக்கங்கள்.

இலங்கைத் திருநாட்டில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் இச்சங்கம் மக்கள் நன்மையடையக் கூடிய பல சேவைகளை மதம். மொழி. இனம் இவைகளுக்கு அப்பால் நின்று ஆற்றியது அளப்பரியது. இதிலும் 1990ம் ஆண்டின் பின் ஆற்றிய சேவைகள் காலத்தின் தேவையை உணர்ந்து ஆற்றிய பெரும் சேவையாக நான் கருதுகின்றேன். வடமாகாணத்தின் நுழைவாயிலாகிய வவுனியாவின் முக்கியத்துவம் இக்காலத்தில் தான் எல்லோராலும் உணரப்பட்டது.

தென்இலங்கை. கிழக்குஇலங்கை மற்றும் மலைநாடு போன்ற பிரதேசங்களுக்கும் வடமாகாணத்துக்குமான நேரடித் தரைவழிப்பாதை தடைப்பட்டிருந்த வேளையில் எல்லாப் பிரயாணிகளும் வவுனியா நகரத்தில் குறைந்த பட்சம் ஒருநாளாவது தங்கிச் செல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது. அந்தக் காலத்தில் வவுனியாவில் விடுதி வசதிகளே இல்லாத வேளையில் மக்களின் கஷ்டத்தை உணர்ந்து மக்கள் கௌரவமாகத் தங்கிச் செல்லக்கூடிய வசதிகளை இச்சங்கம் மேற்கொண்டது. இது மேலும் விருத்தி செய்யப்பட்டு தொலைத்தொடர்பு வசதி. சைவ உணவக வசதி. தண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகளையும். பொழுதுபோக்கு வசதிகளையும் மேற்கொண்டு குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைகளைச் செய்ததன் மூலம் ஆயிரக்கணக்கான பிரயாணிகளின் பாராட்டையும் நல்லவர்களின் ஆசியையும் நாம் பெற்றுள்ளோம். பாதைகள் சில காலங்களில் கிழமைக்கணக்கில் தடைப்படுவதும் உண்டு. அப்படித் தடைப்படும் போது இங்கே தங்கி நிற்பவர்களிடம் கட்டணம் அறவிடாமல் விடுவது மட்டுமன்றி இலவச உணவுகள் கூட நாம் வழங்கியுள்ளோம்.

வவுனியா நகரத்தில் நெருக்கமாக மக்கள் குடியேறியதால் வீடுகளில் வைத்துத் திருமணங்கள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இந்தத் தேவையை உணர்ந்து பொருத்தமான இடத்தில் பொருத்தமான நேரத்தில் சகல வசதிகளுடனும் கூடிய ஒரு திருமண மண்டபத்தை அமைத்துள்ளோம். அதில் கௌரவமாகவும். அழகாகவும் குறைந்த செலவிலும் திருமணங்கள் நடைபெறுகின்றன. இந்த மண்டபம் வேறு இலக்கிய. பொதுக்கூட்டங்களுக்கும் பயன்படுகின்றது.

பாலர் பாடசாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பே ஒரு பாலர் பாடசாலையை ஆரம்பித்து பாலர் கல்வியை ஊக்குவித்ததுடன், பாலர் விளையாட்டுப் போட்டிகள், கலைவிழாக்கள் என பல நிகழ்ச்சிகள் நடாத்தி வருகின்றோம்.

அறநெறிப் பாடசாலைகள், பாலர் பாடசாலைகள் ஏழைப்பிள்ளைகளுக்கான சத்துணவுத்திட்டம் என எமது சேவைகள் பல கிராமத்து மக்களைச் சென்றடைந்துள்ளன. கிராமங்களிலே அழிந்துபோன கோவில்களின் புனரமைப்புக்கு சிறு உதவிகள் ஊக்குவிப்புக்கள், ஏழைப்பிள்ளைகளுக்கான கல்விக்கு உதவிகள், பல்கலைக்கழகம் செல்லும் வசதி குறைந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசுகள், வைத்திய உதவிகள் என எமது சேவைகள் நீண்டு கொண்டே செல்கின்றன.

வவுனியா மாவட்டத்திலேயே அபரக் கிரியைகள் செய்வதற்கு ஒரு சைவக் குருக்கள் இல்லாது சிரமப்பட்ட வேளையில் இந்தியாவில் தமிழ் நாட்டிலிருந்து ஒரு சைவக் குருக்களை அழைத்து வந்து இறுதிக்கிரிகைகளைச் செய்து வருகின்றோம்.

ஆன்மீக கருத்துக்களையும் அறநெறிக் கருத்துக்களையும் மக்கள் மத்தியில் பதியச் செய்வதுடன் இதை ஒரு சமய, சமூக நிறுவனமாக நடாத்தி வருவது பெருமைக்குரியது. பல சமய, சமூகப் பெரியவர்களின் பூரண ஆசியுடன் இயங்கி வரும் இச்சங்கம் தனது சேவையை இன்னும் பல மடங்காகப் பெருக்கி, சைவத்துக்கும், தமிழுக்கும் மென்மேலும் தொண்டு செய்ய இறை அருள் கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். சங்கத்தின் சேவைகள் செயற்பாடுகள் வரலாறு போன்ற விடயங்கள் தொடர்ந்து வரும் பக்கங்களில் இடம்பெறும்.

ஈற்றில், சங்கத்தின் வளர்ச்சிக்காக என்னுடன் சேர்ந்து அயராது உழைத்து வரும் கௌரவ செயலாளர் **திரு. க. தர்மதேவன்,** கௌரவ பொருளாளர் **திரு. இ. திருமேனி,** கௌரவ துணைச் செயலாளர் **திரு. நா. யோகராசா** ஆகியோருக்கு எனது உளம் நிறைந்த நன்றிகள். மற்றும் வவுனியா மாவட்டத்தில் ஒரு உயர்ந்த இந்து சமய நிறுவனமாக இச்சங்கத்தை வளர்ப்பதற்கு உதவிய பொதுச்சபை உறுப்பினர்கள், ஆட்சிமன்ற உறுப்பினர்கள், தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள், போசகர்கள் ஆகியோருக்கும் எனது நன்றிகள். சேவை மனப்பான்மையுடன் சேவையாற்றும் பாலர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உட்பட எல்லா உத்தியோகத்தர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றிகள்.

இந்நூலை ஆக்கி உங்கள் கைகளிலே அழகாக தவழ விட்ட இந்நூலின் ஆசிரியரும் எனது சகோதரனும் இச்சங்கத்தின் துணைத் தலைவருமாகிய **(திரு. நா. தர்மராஜா) தமிழ்மணி அகளங்கன்** அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள்.

கடந்த பல ஆண்டுகளாக எமது சங்கத்தில் பிரயாணிகளாக வந்து தங்கிச் சென்ற எல்லா அன்பு உள்ளங்களுக்கும் எனது நன்றிகள். எமது எல்லாச் சேவைகளுக்கும் ஒத்துழைப்பும், உற்சாகமும் தந்து உதவிகள் பல புரிந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், ஏனைய அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும், நகரசபை தலைவர்கள், செயலாளர்கள், உத்தியோகத்தர்களுக்கும் எனது விசேசமான நன்றிகள்.

எமது சேவைகள் அடுத்து வரும் சந்ததிக்கும் பயன்படக்கூடியதாக ஆற்றியுள்ளோம் என்பதிலே ஆத்ம திருப்தி அடைகின்றேன். தொடர்ந்து இச்சங்கம் மென்மேலும் வளர்ந்து பல அரிய சேவைகளை ஆற்ற இறையருள் கிடைக்க வேண்டும் என இறைவனை வேண்டி விடைபெறுகின்றேன்.

நன்றி

அன்புடன்
**நா. சேனாதிராசா**
கௌரவ தலைவர்

# கௌரவ செயலாளர்



## திரு. க. தர்மதேவன்

அவர்கள்

## உ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்கச்

# செயலாளரின் சிந்தனையில்.......

**க. தர்மதேவன்**
(கௌரவ செயலாளர்)

உலகம் நாகரீகத்தின் உச்ச நிலையை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் உலகிற்கொரு முதல்வன் இல்லையென விதண்டாவாதம் செய்து, தாம் விரும்பிய படியெல்லாம் இயற்கையை இயங்க வைக்க முயற்சிக்கும் இவ்விஞ்ஞான யுகத்திலே, உலகம் யாவையும் தாமுளவாக்கி நிலைபெறச் செய்யும் முதல்வன் ஒருவன் உளன் என்ற உண்மையை உணர்ந்து நன்நெறிக்கண் வாழவேண்டும் என்ற மெய்யுணர்வுடையோர் மத்தியில் நாம் வாழ்வது எமது நற்பேறாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாக வவுனியா நகரின் மத்தியிலே அடுக்கு மாடிக்கட்டடங்களுடன் கம்பீர மிடுக்குடன் காட்சியளிப்பது சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் ஆகும். 1952ம் வருடம் கார்த்திகைத் திங்கள் 19ம் நாளன்று **கவியோகி சுத்தானந்த பாரதியாரால்** ஆரம்பித்து வைக்கப்பட்ட இச்சங்கம், அன்றிலிருந்து இன்று வரை சமய சமூக சேவைகளில் முன்னோடியாகத் திகழ்வது யாவரும் அறிந்த உண்மை. இச்சங்கம் பல தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், சங்க உறுப்பினர்களின் அரும்பெரும் பணிகளினால் செழிப்புடன் வளர்ந்து இன்று 50 ஆண்டுகள் நிறைவெய்தி பொன்விழா கொண்டாடும் இந்நேரத்தில் நான் செயலாளராக இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சங்கத்தின் ஆரம்பத் தலைவராக இருந்து இதன் இன்றைய வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமை திரு. சிறிநிவாசன் அவர்களையே சாரும். சங்கம் ஆரம்பித்து அதன் 16 வருட பூர்த்தியின் பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டு மீண்டும் கவியோகி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு எழுந்ததே எமது சங்க **நடராசர் மண்டபமாகும்.** வவுனியா நகர வர்த்தகர்களும். பொது மக்களும் வழங்கிய நிதியுடனும் **நொவிப் (Novib)** ஸ்தாபனத்தின் உதவியுடனுமே இம்மண்டபம் கட்டப்பட்டது. நொவிப் ஸ்தாபன உதவி பெறுவதில் காலம் சென்ற வைத்தியர் **திரு. சோ. இராஜசுந்தரம்** அவர்களின் பங்கு நினைவு கூரத்தக்கது.

இவ்வாறாக வளர்ந்து வரும் காலகட்டத்தில் 1990ம் வருடம் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக சகல வளங்களையும் இழந்து கட்டிடம் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில் மீண்டும் 1992ல் மறுமலர்ச்சி பெற்று இன்று வவுனியாவில் மட்டுமல்லாது எமது நாட்டிற்கே ஓர் எடுத்துக்காட்டாக சங்கம் விளங்குவதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். இவ்வாறான சங்க வளர்ச்சிக்கு தம்மையே அர்ப்பணித்துள்ள தற்போதைய தலைவர், உப தலைவர்கள், உப செயலாளர், பொருளாளர் மற்றும் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவருமே பாராட்டுக்குரியவர்கள்.

பக்தி மார்க்கம் சமய வாழ்க்கையின் அடித்தளமாக அமைந்துள்ளது. சமய வாழ்வு வாழ்பவர் யாராயினும் அவர் தம் சமயம் பற்றிய அறிவுடையவராக இருப்பது மட்டுமன்றி அது கூறும் நெறிக்கண் வாழ்பவராகவும் இருத்தல் வேண்டும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற வள்ளுவர் வாய்மொழியும் இதனையே கூறுகின்றது. பெறுதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்ற நாம் பிறந்ததன் பயன் எம்மாலான உதவியை பிறருக்கு வழங்கும் பொருட்டு சமூகப்பணிகளை சிறிதளவேனும் மேற்கொள்ள வேண்டும்.

இச்சமய சமூகப் பணிகளை எமது சங்கமானது ஊக்கத்துடன் திறம்பட பணியாற்றி வருகின்றது. வெளியிடங்களில் இருந்து தமது கருமங்களின் நிமித்தம் எமது நகருக்கு வரும் பிரயாணிகளின் சிரமங்களைக் கருத்திற் கொண்டு அவர்கள் மிகவும் குறைந்த செலவில் தங்கிச் செல்வதற்கான வசதிகளையும், அவர்களின் உணவுப்பிரச்சனையை நிவர்த்தி செய்யும் பொருட்டு சைவ உணவகம் ஒன்றையும் அமைத்துக் கொடுத்துள்ளோம். இவர்கள் மூலம் பெறப்பட்ட நிதியே இன்றுள்ள **கலாசார மண்டபம், சேக்கிழார் மண்டபம், சைவ உணவகம்** என்பவற்றிற்கு மூலதனமாக அமைந்தது. கலாசார மண்டபம், திருமணம், பூப்புனித நீராட்டு, நூல் வெளியீடுகள், கலை நிகழ்ச்சிகள், சமயக் கருத்தரங்குகள் செய்வதற்கு வசதியாக உள்ளது.

வளர்ந்து வரும் கணனி யுகத்திலே எமது மக்களின் சமய அறிவு மருவிக் கொண்டே வருகின்றது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு எமது சங்கத்தின் மூலம் அறநெறிப்பாடசாலைகளை ஆரம்பித்து அதிலுள்ள மாணவர்களுக்குச் சமய அறிவைப் பெறும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள் என்பன நடாத்தி பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி மாணவர்களை ஊக்குவித்தும் வருகின்றோம். எமது சங்கத்திலேயே ஓர் பாலர் பாடசாலையையும் நடாத்தி வருவதுடன், பல வறிய மாணவர்களின் பல்கலைக்கழகச் செலவை நாம் ஏற்று அவர்கள் கல்வி பயிலும் வசதிகளையும் வழங்கியுள்ளோம்.

இப்பணிகள் யாவற்றையும் நாம் திறம்பட செய்வதற்கு எமக்கு உறுதுணையாக இருக்கும் எமது சங்க ஊழியர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் எமது போட்டிகளுக்கு நடுவர்களாகவும் நால்வர் குருபூசைகளிலும் சேவையாற்றும் அன்பர்கள், சமய நிகழ்வுகளில் பங்குபற்றிப் பண்ணிசை பாடும் அடியார்கள் அனைவருக்கும் நல்லாசிகள் கிட்டுவதாக.


இச்சங்கமானது சங்க யாப்புக்கு அமைய வருடம்தோறும் பொதுச்சபை கூடி நிர்வாகிகளைத் தெரிவு செய்கிறது. தெரிவு செய்யப்பட்ட ஆட்சிமன்றம் மாதம்தோறும் கூடி வரவு செலவு அறிக்கைகளை பரிசீலணை செய்து அடுத்த மாத செலவுக்கும் அங்கீகாரம் வழங்குகின்றது. வருடாந்தக் கணக்கு பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட கணக்காய்வாளரால் எண்பார்வை செய்யப்பட்டு பொதுச்சபையால் அங்கீகரிக்கப்படுகிறது. இவ்வாறான கட்டுக்கோப்புக்களுடன் எவ்வித சலனமுமின்றி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது சங்கம். இது வேறு எங்குமே காணமுடியாத ஒரு சிறப்பம்சம் ஆகும்.

இவ்வாறே இச்சங்கமானது மென்மேலும் வளர வாழ்த்தி இப்பொன்விழா மலரை சிறப்புற வடிவமைத்து மிகவும் குறுகிய காலத்தில் வெளியிட உழைத்த மலர்க் குழுவுக்கும், விசேடமாக மலராசிரியர் **தமிழ்மணி அகளங்கன்,** (திரு. நா. தர்மராஜா) அவர்களிற்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றிகள் தெரிவிக்கின்றேன்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

- நன்றி -

# கௌரவ பொருளாளர்




## திரு. இ. திருமேணி

**அவர்கள்**

உ
சிவமயம்
ஓம் கணபதி துணை

# வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பொருளாளர் திரு. இ. திருமேனி அவர்களின் அறிக்கை

சைவம், தமிழ், கலை, கலாசாரம், சமூகப் பணிகளை சிறப்புற ஆற்றுவதிலும், நிர்வகிப்பதிலும் வவுனியாவில் மற்றைய நிறுவனங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கிவரும், 2002ம் ஆண்டிலே "பொன்விழா" காண்கின்ற சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின், 25.01.92ந் திகதியிலிருந்து கிட்டத்தட்ட 10 வருடங்கள் பொருளாளராக பணிசெய்து கொள்ள வாய்ப்பினை அளித்த ஆண்டவனின் அருளிற்கும், "பொன்விழா" மலருக்கு அறிக்கை எழுதக்கிடைத்த அரிய வாய்ப்பிற்கும் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

நாளாந்தம் மண்டபத்தில் தங்கிச் செல்லும் பயணிகளிடமிருந்து அறவிடப்படும் ஒரு சிறு தொகைப்பணம் ஒவ்வொன்றிற்கும் பற்றுச்சீட்டு எழுதுவதுடன், ஒவ்வொரு கொடுப்பனவும் காசோலை மூலம் வழங்கப்படுதலும் அன்றாடம் பணத்துடனும் கணக்கு வழக்குடனும் பழகும் மிகப்பெரியபணியும், நாளாந்த கயணக்குகள் அன்றன்றே செய்யப்பட்டு கணக்கறிக்கைகள் மாதாந்தம் தவறாது நடக்கும் நிர்வாகசபைக் கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு பலரும் பலவிதமாக அலசி ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளும் அளவில் தான் நிர்வாகத்தின் திருப்திக்கு ஏற்ற வகையில் செய்யப்பட வேண்டிய கடப்பாடும் எனக்குண்டு. இவ்வகையில் நாளாந்த மாதாந்த ரீதியாக முடிக்கப்பட்டு, வருடாந்தக் கணக்குகள் கணக்காய்வின் பின் பொதுச் சபைக்கு விடப்பட்டு பரிசீலிக்கப்பட்டபின் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இவ்வகையிலும் சங்கம் வவுனியாவில் உள்ள ஏனைய நிறுவனங்கட்கு முன்னோடியாக ஓர் எடுத்துக் காட்டாக இருப்பதை மிக மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

வவுனியாவில் 1990ம் ஆண்டு யூன் மாதம் நடந்த வன் செயலின் அசம்பாவித சூழ்நிலையால் மண்டபத்தில் உள்ள பொருட்கள் சூறையாடப்பட்டதுடன் மண்டபமும் சிலபகுதிகள் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டது. அத்துடன் இராணுவத்தினர் இதனை வதிவிடமாகவும் கொண்டிருந்தனர். மண்டபத்தினை மீளப்பெற பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு மீளவும் 25.01.1992ல் நிர்வாகம் மறுசீரமைக்கப்பட்டது.

சங்கவளர்ச்சியில் அதன் அபிவிருத்தியில் 1992ந் திகதி தொடக்கம் இன்றுவரையான காலம், குறிப்பாக 1994ம் ஆண்டில் இருந்து நோக்கப்பெறின் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலம் என்றே சொல்லலாம். **திரு நா. சேனாதிராசா** அவர்கள் தலைமையில் இயங்கிய இக்காலத்தில் இன்று **'பொன்விழா'** கொண்டாடும் இச்சங்கம் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அமைப்பைக் கொண்ட கட்டிடங்களைக் கொண்டு நிமிர்ந்து நிற்கின்றது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தங்கிச் செல்லும் பயணிகளுக்கு காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்றவகையில் ஏற்ற வசதிகளைச் செய்வதன் நோக்காக பயணிகளிடம் இருந்து பெறப்பட்ட சிறு துளிகள் பெருவெள்ளமாகி ஏற்படுத்தப் பட்டதே இக்கட்டிடப் பூர்த்தியாகும். என்பதைக் குறிப்பிடுவதிலும், எமது பணி மக்களிடம் இருந்து பெறப்பட்ட பணம் அவர்கட்கே சேவை வடிவில் செல்லும் விதத்தில் அமைந்திருத்தலும் பெருமைக்குரியதாகும்.

1992ம் ஆண்டில் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்த வேளையில் எமது சங்கத்தின் வங்கிக் கணக்கு மீதி ரூபா 50378/= ஆகும். இந்நிதி நிலைமையோடு சங்கத்தின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்து இயங்கவைப்பதில் கஷ்டநிலை இருந்ததால் தற்போது போசகராக இருக்கும் **திரு க. ந. பாலச்சந்திரன்** அவர்கள் அயராது முன்நின்று தனது சொந்தப்பணத்தை கடனாக உதவி சங்கச் செயற்பாடுகளை இயங்க வைப்பதற்கு உழைத்தமையை நன்றியுடன் நினைவு கூர வேண்டியவனாகின்றேன்.

இத்தொடரில் **1994**ம் ஆண்டில் சிறுவர் பாடசாலை நடாத்த **25** லட்சம் ரூபா செலவில் **சேக்கிழார் மண்டபம்** எனப் பெயரிட்ட ஒரு மண்டபத்தையும், **1996**ம் ஆண்டில் **8**லட்சம் ரூபா செலவில் இரண்டு மாடிகள் கொண்ட சிற்றுண்டிச் சாலையையும் **1998**, **1999**ம் ஆண்டுகளில் **30** லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை ஒன்றின் மூலம் கலாசார மண்டபம் ஒன்றினையும், **2002**ம் ஆண்டு **14** லட்சம் ரூபா தொகை ஒன்றின் மூலம் கலாசார மண்டபத்துடன் இணைந்த உணவு பரிமாறக்கூடிய மண்டபம் ஒன்றினையும் அமைத்துள்ளோம். இவ்வனைத்து அமைப்புக்களின் சார்பிலும் யாரிடமும் எவ்வித நன்கொடையும் பெறாமல் நிறைவேற்றப்பட்டமையை பெருமையுடன் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன், இதற்கு ஆணிவேராக ஆளுமைத்திறனுடன் வருமானம் ஈட்டும் வழிவகைகளைக் கண்டு செயற்படுத்திய **திரு நா. சேனாதிராசா** அவர்களின் சேவை சங்கத்தின் வரப்பிரசாதம் எனில் மிகையாகாது.

வவுனியாவில் சிறுவர் பாடசாலை ஒன்று திறம்பட செயற்பட வேண்டும் என்ற நன் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பாடசாலையில் **250** சிறார்கள் **8** ஆசிரியர்களால் எழுத்தறிவிக்கப்படுகிறார்கள். இது கூட எமது சேவை அடிப்படையாகக் கொண்டதால் குறைந்த கட்டணம் ஒன்றே எம்மால் அறவிடப்படுகின்றது. கட்டணம் ஆசிரியர்களின் சம்பளத்தை ஈடு செய்ய போதுமானதாக இருந்த போதும் பாடசாலை வளர்ச்சி கருதி பொதுநிதியும் செலவுசெய்ய வேண்டிய அவசியம் எழுகின்றது.

எனது பொருளாளர் பணியில் பத்து வருடங்கள் முடிந்த **1992**ம் ஆண்டு தொடக்கம், **2002**ம் ஆண்டு முடிவடைந்த காலப்பகுதியில் எமது சங்கப்பணிகளில் சகல நிர்வாக, சமய நிகழ்வுகள் மற்றும் அனைத்து பராமரிப்பு மீண்டுவரும் செலவுகள், கட்டிட உபகரணங்கள் கொள்வனவு, நன்கொடை வழங்கல் போன்ற செலவுகள், பெறப்பட்ட வருமானத்தில் என்ன நூற்றுவீதம் என்பது கீழ்க்காட்டப்படுகின்றது.

| ஆண்டு | வருமானம் | செலவுகள் வருமானத்தின் வீதத்தில் | | | |
|---|---|---|---|---|---|
| | | சகல நிர்வாக, சமய நிகழ்வு, மற்றும் அனைத்து பராமரிப்பு மீண்டுவரும் செலவு. | கட்டிட தளபாட உபகரணங்கள் | நன் கொடை வழங்கல் | கடன் தீர்த்தல் மற்றும் ஏனையவை |
| 1992. | 411906.00 | 87 . 5 % | 33.8 % | 2.6 % | - |
| 1993. | 721260.00 | 43 . 8 % | 21.2 % | 1.2 % | 33.8 % |
| 1994. | 1966980.00 | 43 . 2 % | 52.4 % | 2.4 % | 2.0 % |
| 1995. | 2109874.00 | 37 . 2 % | 60.0 % | 1.3 % | 1.5 % |
| 1996. | 4307605.00 | 37 . 5 % | 46.2 % | 2.5 % | 13.8 % |
| 1997. | 3226749.00 | 74 . 0 % | 39.0 % | 4.0 % | - |
| 1998. | 3780559.00 | 50 . 3 % | 53.0 % | 2.6 % | - |
| 1999. | 3151995.00 | 43 . 6 % | 61.4 % | 2.2 % | - |
| 2000. | 3000158.00 | 61 . 1 % | 61.04% | - | - |
| 2001. | 4007865.00 | 59 . 9 % | 7.1 % | 3.6 % | 28.2 % |
| | | | 21.1 % | 3.3 % | 15.7 % |

அமைப்புக்கள் ஏற்படுத்திய காலப்பகுதியில் வங்கியில் மேலதிகப் பற்றும் தனிப்பட்டவர்களிடம் இருந்து கடனும் பெறவேண்டிய சூழ்நிலை எமக்கு ஏற்பட்டது. அக்காலங்களில் வீதங்கள் 100ற்கு மேற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தற்போது கடன்கள் தீர்க்கப்பட்டு கட்டிடங்கள், தளபாடங்கள் போன்ற சொத்துக்கள் பல் கோடிக் கணக்கில் இப்பத்து வருட காலப்பகுதியில் தேடப்பட்டமையை பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

கடந்த காலங்களில் எமக்கு வரக்கூடியதாக இருந்த நிதி வசூல்களின் தன்மையினைக் கொண்டு வேண்டியவாறு அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போதைய நிலையில் தங்குவோர்களின் தொகைகள் குறைந்து வருமானம் ஈட்டலில் மிகுந்த வீழ்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் ஆசிரியர்கள் உட்பட 16 பேர்கள் சங்கத்தில் பணிபுரிகின்றார்கள். இவர்களது சம்பளம், மின்கட்டணம், தண்ணீர் கட்டணம் முதலிய மீண்டுவரும் செலவுகளாகிய நிர்வாகச் செலவுகள் மாதாந்தம் எண்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையாக இருக்கின்றது. அத்துடன் பராமரிப்புச் செலவுகளும் தவிர்க்க முடியாததாகின்றது. இவ்வகையில் மாதாந்தம் ஒருலட்சம் ரூபா தேவை ஏற்படுகின்றது. இதன் காரணத்தினாலும் இச்செலவினங்கள் அத்தியாவசியமான காரணத்தினாலும் வேறு பணிகளான, சமயசெலவு, நன்கொடைச் செலவுகளை ஓரளவு மட்டுப்படுத்த வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் பராமரிப்புச் செலவுகளை ஈடுசெய்வதற்காக ஒரு 20 லட்சம் ரூபா தொகை ஒன்றினை முதலீடு செய்தல் நல்லது என அவாக் கொண்ட போதும், தற்போதைய நிதி நிலைமையில் முடியாமல் உள்ளது. எனினும் அவ் எல்லையை அடைவதற்கு ஏதுவாக வங்கியில் 7 லட்சம் ரூபா தொகை ஒன்றினை வைப்பில் இட்டுள்ளோம்.

மேலும் பல ஆக்க பூர்வமான நிகழ்வு திட்டங்களில் அறநெறிப்பாடசாலைகளை கிராமம் தோறும் விஸ்தரிப்பு செய்தல், வதிவிட தேவையினைக்கருதி அத்தியாவசிய இடங்களில் காணிகளைப்பெற்று வருமானம் ஈட்டக் கூடியவகையில் தங்குமிடவசதிகளை ஏற்படுத்துதல் போன்றவை உள்ளடக்கப்பட்டிருந்த போதும் நிதி நிலைமை காரணமாக செயற்படுத்தப்பட முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

இங்கு கடமை புரியும் சகல பணியாளர்கட்கும் ஒருவருட சார்பில் 1 மாத வேதனம் நன்கொடையாக அவர்கள் பெயரில் வங்கியில் வைப்பில் இடப்படுகின்றது. இச்செலவினங்கள் அனைத்தும் சேர்ந்து ஒரு பாரிய செலவினம் ஒன்றை எமக்குச் சேர்க்கின்றது.

எனது கணக்கீட்டு முறைக்கு குந்தகம் ஏற்படாத முறையில் செயற்பட சகல ஒத்தாசைகளையும் வழங்கித் துணைபுரிகின்ற **தலைவர் திரு நா. சேனாதிராசா** அவர்கட்கும், **செயலாளர் திரு க. தர்மதேவன்** அவர்கட்கும் **துணைச்செயலாளர் திரு நா. யோகராசா** அவர்கட்கும் நிர்வாக சபையினருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்குவோருடன் அன்பாக பழகி, எமது வழி நடத்தல்களுக்கு அமைவாக பணிபுரிந்து எமக்குப் பெருமையைத் தேடித்தருகின்ற சங்கப்பணியாளருக்கும், சிறுவர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கட்கும், பாராட்டுக்களையும், மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்கின்றேன்.

வவுனியா வர்த்தக பெருமக்களுக்கும், சிறுவர் பாடசாலை வளர்ச்சிக்கு ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும், ஒத்தாசைகளையும் நல்கும் சிறார்களின் பெற்றோர்களுக்கும், ஒத்தாசை நல்கும் சகல சமய நிறுவனங்களுக்கும், சகல திணைக்களங்களுக்கும், எமது நன்றியறிதலை தெரிவிப்பதோடு. தொடர்ந்தும் ஒத்தாசை நல்க வேண்டும் என அவாவுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

நாங்கள் முழுமையான அர்ப்பணிப்பு சிந்தையோடு பணியாற்றி வளர்த்த இச்சங்கம் தகுந்த முறையில் பராமரிக்கப்பட்டு பலருக்கு பலவழிகளில் வாழ்வளிக்கும் சங்கமாகத் திகழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் இன்னருள் பாலிக்க வேண்டி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

"வாழ்க தமிழ் வளர்க சைவப்பணி"

உ

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர்கள் வரிசையில்

**திரு. சதா. ஸ்ரீநிவாசன் அவர்கள்** *(காரியாதிகாரி. வவுனியா)*
*19 - 11 - 1952 - 21 - 08 - 1970 வரை*

**திரு. வி. பாலசுப்பிரமணியம் அவர்கள்** *(வேலைப் பணிப்பாளர்)*
*21 - 08 - 1970 - 24 - 11 - 1971 வரை*

**திரு. ச. பத்மநாதன் அவர்கள்** *(வேலைகள் திணைக்களம்)*
*24 - 11 - 1971 - 10 - 08 - 1973 வரை*

**திரு. வே. த. சுப்பிரமணியம் அவர்கள்** *(பண்டாரிகுளம்)*
*10 - 08 - 1973 - 04 - 12 - 1974 வரை*

**திரு. த. ஆறுமுகம் அவர்கள்** *(வேலைகள் திணைக்களம்)*
*04 - 12 - 1974 - 29 - 03 - 1978 வரை*

**திரு. த. நல்லதம்பி அவர்கள்** *(கோவிற்குளம், வவுனியா)*
*29 - 03 - 1978 - 12 - 03 - 1979 வரை*

**திரு. கா. லோகசிங்கம் அவர்கள்** *(நொச்சிமோட்டை)*
*12 - 03 - 1979 - 22 - 09 - 1980 வரை*

**திரு. ச. சுப்பிரமணியம் அவர்கள்** *(யாழ்வீதி)*
*22 - 09 - 1980 - 30 - 12 - 1981 வரை*

**திரு. கா. லோகசிங்கம் அவர்கள்** *(நொச்சிமோட்டை)*
*30 - 12 - 1981 - 14 - 10 - 1982 வரை*

**திரு. மு. பாலசுப்பிரமணியம் அவர்கள்** *(அதிபர் இல. திரு. தமி. கல. பாடசாலை)*
*14 - 10 - 1982 - 25 - 01 - 1992 வரை*

***இறைபணிச் செம்மல்* வை. செ. தேவராசா அவர்கள்** *(வைரவபுளியங்குளம்)*
*25 - 01 - 1992 - 15 - 08 - 1993 வரை*

***மக்கள் சேவை மாமணி* நா. சேனாதிராசா சமா. நீதி அவர்கள்** *(பம்பைமடு)*
*15 - 08 - 1993 முதல்...........*

உ

# 17 – 02 – 1968 இல் புனரமைப்புச் செய்யப்பட்ட ஆட்சிமன்றத்தினர்

## தலைவர்

திரு. சதா. ஸ்ரீநிவாசன் அவர்கள் (காரியாதிகாரி – வவுனியா)

## செயலாளர்

திரு. த. நல்லதம்பி அவர்கள் (கோவிற்குளம் – வவுனியா)

## உபதலைவர்கள்

திரு. மு. நடராசா அவர்கள் (தாண்டிக்குளம் – வவுனியா)
திரு. இ.வ. வில்வராசா அவர்கள் (சட்டத்தரணி – வைரவபுளியங்குளம், வவுனியா)

## உபசெயலாளர்

திரு. செ. காசிநாதன் அவர்கள் (குடியிருப்பு – வவுனியா)

## பொருளாளர்

திரு. சு. கனகரத்தினம் அவர்கள் (வவுனியா ப. நோ. கூ. சங்கம்)

## ஆட்சிமன்ற உறுப்பினர்கள்

திரு. க. இரத்தினசிங்கம் அவர்கள் (குடியிருப்பு – வவுனியா)
திரு. ச. சுப்பிரமணியம் அவர்கள் (யாழ்வீதி – வவுனியா)
திரு. சி. சுப்பையாபிள்ளை அவர்கள் (கூசைப்பிள்ளையார்குளம் – வவுனியா)
திரு. நா. சிவமுத்துலிங்கம் அவர்கள் (விவசாய இலாகா – வவுனியா)
திரு. கா. த. புலேந்திரன் அவர்கள் (வைரவபுளியங்குளம்) – வவுனியா)

## போசகர்கள்

கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் (போசகர்)
திரு. தா. சிவசிதம்பரம் (பா.உ) அவர்கள் (உபபோசகர்)

உ

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் கடந்தகாலத் தலைவர், செயலாளர், பொருளாளர் விபரம்

19 - 11 - 1952ல்

தெரிவு செய்யப்பட்ட முதலாவது செயற்குழுவின்

கௌரவ தலைவர் :- திரு. சதா. ஸ்ரீநிவாசன் அவர்கள் (காரியாதிகாரி)

கௌரவ செயலாளர் :- திரு. சி. இரத்தினகேசரிலிங்கம்

இத்தெரிவு நடைபெற்ற கூட்டத்தைக் கூட்டியவர்

சாஸ்திரிகூழாங்குளம்

திரு. செல்லையா பத்மநாதன் அவர்கள். என்பதைத் தவிர வேறு தகவல்களை அறிய முடியவில்லை.

---

05 - 12 - 1967ல்

புனரமைப்புச் செய்யப்பட்டபோது

கௌரவ தலைவர் :- திரு. சதா. ஸ்ரீநிவாசன் அவர்கள் (காரியாதிகாரி)

கௌரவ செயலாளர் :- திரு. த. நல்லதம்பி அவர்கள்

கௌரவ பொருளாளர் :- திரு. க. சுப்பையாபிள்ளை அவர்கள்

புகையிரத நிலைய வீதியில் பெற்றுக் கொண்ட காணியில் ஒரு அலுவலகத்திற்கும் கலாசார மண்டபத்துக்குமென 20 - 06 - 1968ல் கவியோகி சுத்தானந்த பாரதியாரால் அத்திவாரக் கல் வைக்கப்பெற்றது. (தற்போதைய நடராஜர் மண்டபம்)

---

17 - 12 - 1968ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. சதா. ஸ்ரீநிவாசன் அவர்கள் (காரியாதிகாரி)

கௌரவ செயலாளர் :- திரு. த. நல்லதம்பி அவர்கள்

கௌரவ பொருளாளர் :- திரு. சு. கனகரத்தினம் அவர்கள்

---

21 - 08 - 1970ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. வி. பாலசுப்பிரமணியம் அவர்கள்

கௌரவ செயலாளர் :- திரு. த. நல்லதம்பி அவர்கள்

கௌரவ பொருளாளர் :- திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்

---

24 - 11 - 1971ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. ச. பத்மநாதன் அவர்கள்

கௌரவ செயலாளர் :- திரு. த. நல்லதம்பி அவர்கள்

கௌரவ பொருளாளர் :- திரு. ஆ. சி. செல்வரத்தினம் அவர்கள்

---

10 - 08 - 1973ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. வே. த. சுப்பிரமணியம் அவர்கள்

கௌரவ செயலாளர் :- திரு. த. நல்லதம்பி அவர்கள்

கௌரவ பொருளாளர் :- திரு. ஆ. சி. செல்வரத்தினம் அவர்கள்

04 - 12 - 1974ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. த. ஆறுமுகம் அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. நா. சேனாதிராசா அவர்கள்
கௌரவ பொருளாளர் :- திரு. க. ஞானபாஸ்கரன் அவர்கள்

---

15 - 09 - 1976ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. த. ஆறுமுகம் அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. நா. சேனாதிராசா அவர்கள்
கௌரவ பொருளாளர் :- திரு. க. ஞானபாஸ்கரன் அவர்கள்

---

30 - 03 - 1977ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. த. ஆறுமுகம் அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. நா. சேனாதிராசா அவர்கள்
கௌரவ பொருளாளர் :- திரு. சு. சிவானந்தசோதி அவர்கள்

---

29 - 03 - 1978ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. த. நல்லதம்பி அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. ச. கந்தசாமி அவர்கள்
கௌரவ பொர்ருளாளர் :- திரு. வே. சதாசிவம் அவர்கள்

---

12 - 03 - 1979ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. கா. லோகசிங்கம் அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. ச. கந்தசாமி அவர்கள்
கௌரவ பொருளாளர் :- திரு. வே. த. சுப்பிரமணியம் அவர்கள்

---

22 - 09 - 1980ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. ச. சுப்பிரமணியம் அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. நா. சேனாதிராசா அவர்கள்
கௌரவ பொருளாளர் :- திரு. க. நாகராசா அவர்கள்

---

30 - 12 - 1981ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. கா. லோகசிங்கம் அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. நா. சேனாதிராசா அவர்கள்
கௌரவ பொருளாளர் :- திரு. வி. கே. சிவஞானசுந்தரம் அவர்கள்

---

14 - 10 - 1982ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. மு. பாலசுப்பிரமணியம் அவர்கள்

கௌரவ செயலாளர்களாக, திரு. வை. செ. தேவராசா, திரு. க. தர்மதேவன் ஆகியோரும், கௌரவ பொருளாளர்களாக, திரு. ம. சிவபாதசுந்தரம், திரு. நா. பற்குணம் ஆகியோரும் இருந்திருக்கின்றனர். காலம் சரியாகச் சொல்ல முடியவில்லை. காரணம் இந்திய அமைதி காக்கும் படையின் காலத்தில் பல ஏடுகள் தொலைந்து விட்டன.

25 - 01 - 1992ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. வை. செ. தேவராசா அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. நா. சேனாதிராசா அவர்கள்
கௌரவ பொருளாளர் :- திரு. இ. திருமேனி அவர்கள்

---

15 - 08 - 1993ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. நா. சேனாதிராசா அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. வை. செ. தேவராசா அவர்கள்
கௌரவ பொருளாளர் :- திரு. இ. திருமேனி அவர்கள்

---

15 - 05 - 1994ல் இருந்து

கௌரவ தலைவர் :- திரு. நா. சேனாதிராசா அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. வை. செ. தேவராசா அவர்கள்
கௌரவ பொருளாளர் :- திரு. இ. திருமேனி அவர்கள்

19 - 09 - 94ல் கௌரவ செயலாளர் திரு. வை. செ. தேவராசா அவர்கள் பதவி விலகியதைத் தொடர்ந்து, துணைச் செயலாளராக இருந்த திரு. நா. யோகராசா ஆட்சிமன்றத்தினரால் கௌரவ செயலாளராக நியமிக்கப்பட்டார்.

---

25 - 02 - 1996
18 - 05 - 1997
25 - 04 - 1998
25 - 07 - 1999
16 - 07 - 2000
29 - 07 - 2001
14 - 07 - 2002

ஆகிய திகதிகளில் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் பின்வருவோர் தலைவர், செயலாளர், பொருளாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கௌரவ தலைவர் :- திரு. நா. சேனாதிராசா அவர்கள்
கௌரவ செயலாளர் :- திரு. க. தர்மதேவன் அவர்கள்
கௌரவ பொருளாளர் :- திரு. இ. திருமேனி அவர்கள்

குறிப்பு :-

மேலே குறித்த திகதிகள் யாவும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்ற திகதிகளாகும்.

உ

# நடராசர் மண்டப மேல்மாடி அறைகள் கட்டுவதற்கு அன்பளிப்பு செய்த அன்பர்கள்
## 1970 - 1975

| | | |
|---|---|---|
| 01. | திரு. செ. மார்க்கண்டேயர் | வவுனியா |
| 02. | திரு. ந. விருத்தாசலம் | வவுனியா |
| 03. | திருமதி. மீ. சிவபாதசுந்தரம் | வவுனியா |
| 04. | திரு. க. நாகமுத்து அன்சன்ஸ் | வவுனியா |
| 05. | M/S. அசோகன் மில் | வவுனியா |
| 06. | திரு. பொ. கமலேஸ்வரன் | வவுனியா |
| 07. | திரு. இ. சண்முகம் | செட்டிகுளம் |
| 08. | திரு. மு. பஸ்தியாம்பிள்ளை | முல்லைத்தீவு |
| 09. | திரு. க. கனகராசா J. P. மில்க் வைற் | யாழ்ப்பாணம் |

உ

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் – வவுனியா

## பாலர் பாடசாலை ஆசிரியைகள்

செல்வி. குமாரசாமி நிரஞ்சனா (அதிபர்)
திருமதி. குமாரதாஸ் கமலாதேவி (உதவி அதிபர்)
செல்வி. காசிநாதர் காந்தினி
திருமதி. பிலிப்ராஜா ஜலிதாராணி
செல்வி. பூலோகசிங்கம் கேதீஸ்வரி
செல்வி. மயில்வாகனம் சுபாஜினி
செல்வி. மாரிமுத்து ஜெயச்செல்வி
செல்வி. தே. றோகினி.

## தொலைத் தொடர்பாளர்கள்

திரு. சி. யோகநாதன்
திரு. க. தெய்வேந்திரராசா
திரு. வி. கணேஷ்

## சங்கப் பணியாட்கள்

திரு. பி. நாராயணசாமி
திரு. சு. நாகேந்திரன்
திரு. மா. மாயழகு
திரு. சி. வைத்தியலிங்கம்
திரு. மு. செல்லையா (பகுதிநேர ஊழியர்)

# சங்கப் பணியாட்கள்



திரு. சி. வைத்திலிங்கம், திரு. பி. நாராயணசாமி, திரு. சு. நாகேந்திரன், திரு. மா. மாயழகு

# தொலைத் தொடர்பாளர்கள்



திரு. வி. கணேஸ், திரு. க. தெய்வேந்திரராசா, திரு. சி. யோகநாதன்

# பாலர் பாடசாலை ஆசிரியைகள்



இடமிருந்து வலம் இருப்பவர்கள்: திருமதி. பி. ஜலிதாராணி, திருமதி. கு. கமலாதேவி (உப. அதிபர்), செல்வி. கு. நிரஞ்சனா (அதிபர்), திருமதி. ம. காந்தினி
நிற்பவர்கள்: திருமதி. ந. சுபாஜினி, செல்வி. பூ. கேதீஸ்வரி,
திருமதி. ற.ஜெயச்செல்வி, செல்வி. தே. றோகினி.

# நவராத்திரி கலைவிழா



நவராத்திரி கலைவிழாவில் சிறுவர்களின் நடனம்

# பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி



பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியை அரசாங்க அதிபர். க. கணேஸ் அவர்கள் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.



சிறுவர்களின் பான்ட் வாத்திய அணி

## ஏடு தொடக்கல்




ஆண்டு தோறும் விஜயதசமியன்று இடம் பெறும் ஏடு தொடக்கல் நிகழ்வு

## நூல் வெளியீட்டு நிகழ்வு




அருணா செல்லத்துரையின் "அடங்காப்பற்று பண்டாரவன்னியன்" நூல் வெளியீட்டு நிகழ்வில் பேராசிரியர் க. அருணாசலம் நூலை வெளியிட்டு வைக்கிறார்.

# பரிசு பெற்றோர் கௌரவிப்பு




இந்தியச் சஞ்சிகையின் நாவல் போட்டியில் பரிசுபெற்ற ஓ.கே.குணநாதன், அவுஸ்திரேலியா தமிழ்ச்சங்கக் கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற அகளங்கன் , கலாசார அமைச்சின் கலாபூசண விருது பெற்ற சு. சண்முகவடிவேல் ஆகியோரை சங்கம் தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவித்தது.



இந்து கலாசார அமைச்சின் தமிழ்மணி விருது பெற்ற உடுவை. எஸ். தில்லை நடராஜா அவர்களுக்கு தலைவர் திரு.நா. சேனாதிராசா அவர்கள் தங்கப் பதக்கம் சூட்டிப் பாராட்டுகிறார்.

# சிலை திறப்பு விழா




சங்கத்தின் வடமேற்கு மூலையில் வவுனியா நகரசபையினால் அமைக்கப்பட்ட சுவாமி விவேகானந்தர் சிலை திறப்பு விழாவில் அரச அதிபர் திரு.க. கணேஸ் அவர்கள் உரையாற்றுகிறார். அருகில் வவுனியா நகரசபைத் தலைவர் திரு. ஜீ ரீ. லிங்கநாதன் அவர்கள், சங்கத்தலைவர் திரு. நா.சேனாதிராசா அவர்கள்.

# முத்திரை வெளியீட்டு விழா



சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு நினைவு முத்திரை வெளியீட்டு விழாவை அரச அதிபர் திரு. க. கணேஸ் அவர்கள் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார்.

# சங்கப் பொதுக்கூட்டம்



இடமிருந்து வலம் :தலைவர். திரு. நா. சேனாதிராசா, துணைச் செயலாளர். திரு. நா. யோகராசா தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் திரு. க. இரத்தினசிங்கம், திரு. கா. இரத்தினசிங்கம், திரு. செ. பத்மநாதன் ஆகியோர் கூட்ட ஆரம்ப நிகழ்வில்.

# குருபூசை




திருநாவுக்கரச நாயனார் குருபூசை தண்ணீர்ப் பந்தல் 2001

# கலாசார மண்டபத் திறப்பு விழா




திறப்பு விழாவில் இந்து மாமன்றத் தலைவர் சிவநெறிப்புரவலர் சீ.ஏ. இராமஸ்வாமி அவர்கள் மங்கல விளக்கேற்றுகிறார்.



**கலாசார மண்டபத்தை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்ம கனானந்தா அவர்கள் திறந்து வைக்கின்றார்.**

# கலைஞர் கௌரவிப்பு




இலங்கைக் கலைக்கழக தமிழிலக்கியக்குழு நடாத்திய
கலை விழாவில் தமிழிலக்கியக் குழுத் தலைவர் பேராசிரியர் க. அருணாசலம் அவர்கள்
நடனமாடிய சிறுமிக்கு பரிசு வழங்குகிறார்.



"வேழம்படுத்த வீராங்கனை" நாட்டுக் கூத்துக் கலைஞர் கௌரவிப்பில்
தலைவர். திரு. நா. சேனாதிராசா அவர்கள்
மெட்றாஸ்மயில் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துதல்

உ

# கௌரவமும் விருதும்

சுத்தானந்த இந்து இளைஞர் சங்க, கலாசார மண்டபத் திறப்பு விழாவின் போது, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைத்த (12 - 06 - 1999) கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்ம கனானந்தா அவர்களால், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட, **புராணபடனப் புகழ் தகை** விருதும் கௌரவமும் பெற்றோர்.

01. சிவத்திரு செல்லையா பத்மநாதன் சாஸ்திரீகூழாங்குளம்
02. சிவத்திரு எல்லப்பர் இராசலிங்கம் தாண்டிக்குளம்
03. சிவத்திரு த. சுந்தரம்பிள்ளை கள்ளிக்குளம்
04. சிவத்திரு நாகலிங்கம் தர்மராஜா (அகளங்கன்) பம்பைமடு
05. சிவத்திரு மாதவர் மார்க்கண்டு சுழிபுரம்
06. சிவத்திரு செ. நாகேந்திரன் வைரவபுளியங்குளம்
07. சிவத்திரு நாகலிங்கம் யோகராசா பம்பைமடு
08. சிவத்திரு ச. விஜயகுமாரன் கொக்குவில்
09. சிவத்திரு செல்லையா இரங்கநாதன் செட்டிகுளம்
10. சிவத்திரு சேனாதிராசா உலகநாதன் மருக்காரம்பளை
11. சிவத்திரு ஆறுமுகம் நவரத்தினம் கோவில்குளம்
12. சிவத்திரு மு. செல்லையா அளவெட்டி
13. சிவத்திரு ஆ. சிவபாதசுந்தரம் உள்வட்ட வீதி, வவுனியா.

நா. சேனாதிராசா
தலைவர்
வ.சு.இ.இ.சங்கம்

04

# பொன்விழாப் போட்டிகள்

(55 - 67)

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
# பொன்விழா — 2002

*அன்புடையீர்!*

மேற்படி விழாவையொட்டி பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டியொன்றை நடாத்தி விழா அன்று பரிசில்கள் வழங்க இறையருள் பாலித்துள்ளது.

## போட்டி விபரம்

ஆண்டு 04 திருக்குறள் மனனம் இசையுடன் (அதிகாரங்கள் 1 - 3)
05 திருக்குறள் மனனம் இசையுடன் (அதிகாரங்கள் 4 - 8)
06 திருஞானசம்பந்தர் அருளிய திருகோணமலைப் பதிகம் முழுவதும் பண்ணுடன் பாடுதல்.
07 திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் அருளிய திருக்கேதீச்சரப் பதிகங்கள் முழுவதும் பண்ணுடன் பாடுதல்.
08 பஞ்சபுராணம் பண்ணோடு பாடுதல் (விரும்பியது) புராணம் பெரிய புராணமாக இருத்தல் வேண்டும்.
09 திருவாசகத்தில் திருப்பள்ளியெழுச்சி முழுவதும் அல்லது திருப்பொற்சுண்ணம் முழுவதும் பண்ணோடு பாடுதல்.
10 திருவருட் பயன் 10 அதிகாரங்களும் (கருத்துகளுடன் பா ஓதல் முறை)
11 திருக்குறள் 40 - 49 வரை 10 அதிகாரங்கள் (கருத்துக்களுடன் பா ஓதல் முறை)
12 கட்டுரை வரைதல், "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்ற தலைப்பில் பெரியபுராணத்தை அடிப்படையாகக் கொண்டு 600 சொற்களுக்கு மேற்படாது வரைதல் வேண்டும்.
13 கட்டுரை வரைதல், "சமூகத்தொண்டில் இந்து சமயம்" என்ற தலைப்பில் 600 சொற்களுக்கு மேற்படாது வரைதல் வேண்டும்.

## போட்டி நிபந்தனைகள்

**01.** ஒரு போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து 3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
**02.** போட்டி விண்ணப்பங்களை 02-10-02 ற்கு முன் எமது சங்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.
**03.** கட்டுரைகளை பாடசாலை மட்டத்தில் நடாத்தி முதல் 3 கட்டுரைகளையும் அதிபரின் சிபார்சுடன் 02-10-02 ற்கு முன் எமக்கு அனுப்பி வைக்கவும். தெரிவு செய்யப்படும் போட்டியாளர் போட்டி நடைபெறும் தினத்தில் எமது முன்னிலையில் கட்டுரை எழுதுதல் வேண்டும்.
**04.** போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மேற்படி போட்டிகளுக்குத் தங்கள் பாடசாலை மாணவர்களைத் தயார் செய்து அனுப்புமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்**
புகையிரத நிலைய வீதி – வவுனியா.
30 – 02 – 2002

*க. தர்மதேவன்*
செயலாளர்

உ

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் நடாத்திய பொன்விழாப் போட்டி முடிவுகள் – 2002

## திருக்குறள் மனனப் போட்டி. (மனனமும் இசையும்) முதல் மூன்று அதிகாரங்கள்.

**ஆண்டு 4**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ஜெ. ஜெயந்தினி ஜெனட் | பூந்தோட்டம் அ.த.க. பாடசாலை |
| 2ம் இடம் | சாருகா சிவகுலசிங்கம் | இந்துக்கல்லூரி கோவிற்புதுக்குளம் |
| 3ம் இடம் | அமிர்தலிங்கம் அனுசூயன் | புதுக்குளம் ம.வி. புதுக்குளம். |
| 4ம் இடம் | சி. சன்சிகா | கலைமகள் ம.வி. நெளுக்குளம். |
| 5ம் இடம் | கேதீஸ்வரன் அனோஜா | புதுக்குளம் ம.வி. புதுக்குளம். |

## திருக்குறள் மனனப் போட்டி (மனனமும் இசையும்) அதிகாரங்கள் 4,5,6,7,8

**ஆண்டு 5**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சிவகுமாரன் கௌதமன் | தமிழ் மத்திய ம.வி. வவுனியா. |
| 2ம் இடம் | மு. தயாழினி | கலைமகள் ம.வி. நெளுக்குளம். |
| 3ம் இடம் | க. சர்மலன் | தமிழ் மத்திய ம.வி. வவுனியா. |
| 4ம் இடம் | ப. சர்மி | கலைமகள் ம.வி. நெளுக்குளம். |
| 4ம் இடம் | செ. அர்ச்சனா | இறம்பைக்குளம் மகளிர் ம.வி. வவுனியா. |

## திருஞானசம்பந்தர் அருளிய திருகோணமலைப் பதிகம் பண்ணுடன் பாடல்

**ஆண்டு 6**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | ச. கிருத்திகா | இறம்பைக்குளம் மகளிர் ம.வி. வவுனியா |
| 2ம் இடம் | சி. கோபிகா | தமிழ் மத்திய ம.வி. வவுனியா. |
| 3ம் இடம் | க. விஜயரூபன் | கலைமகள் ம.வி. நெளுக்குளம். |
| 3ம் இடம் | க. சிந்தூரி | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா. |
| 5ம் இடம் | ச. பவித்திரா | இறம்பைக்குளம் மகளிர் ம.வி. வவுனியா. |

## திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் அருளிய திருக்கேதீச்சரப் பதிகங்கள்

**ஆண்டு 7**

| | | |
|---|---|---|
| 1ம் இடம் | சி. ஜினேஸ் | தமிழ் மத்திய ம.வி. வவுனியா. |
| 2ம் இடம் | ச. யாழினி | இறம்பைக்குளம் மகளிர் ம.வி. வவுனியா. |
| 3ம் இடம் | பா. யசோதரன் | தமிழ் மத்திய ம.வி. வவுனியா. |
| 4ம் இடம் | இ. சுயாழினி | கலைமகள் ம.வி. நெளுக்குளம். |
| 4ம் இடம் | பெ. றோகினி | கலைமகள் ம.வி. நெளுக்குளம். |

## பஞ்சபுராணம் பண்ணோடு பாடுதல் (விரும்பியவை)

**ஆண்டு 8**

| | | | |
|---|---|---|---|
| 1ம் | இடம் | க. கணேஸ்வரன் | தமிழ் மத்திய ம.வி. வவுனியா. |
| 2ம் | இடம் | ஞா. அனுஷா | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா. |
| 3ம் | இடம் | சா. சதீபா | கலைமகள் ம.வி. நெளுக்குளம். |
| 4ம் | இடம் | ரா. பிரசாந்தி | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா. |
| 5ம் | இடம் | யோ. திவ்வியா | இறம்பைக்குளம் மகளிர் ம.வி. வவுனியா. |

## திருவாசகத்தில் திருப்பள்ளியெழுச்சி முழுவதும் அல்லது திருப்பொற்சுண்ணம் முழுவதும் இசையுடன் பாடுதல்

**ஆண்டு 9**

| | | | |
|---|---|---|---|
| 1ம் | இடம் | ரம்மியா செல்வராசா | இந்துக்கல்லூரி கோவிற்புதுக்குளம். |
| 2ம் | இடம் | சூ. சிந்து | தமிழ் மத்திய ம.வி. வவுனியா. |
| 3ம் | இடம் | உ. வினோயா | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா. |
| 4ம் | இடம் | புலேந்திரராசா சுதர்சினி | அண்ணாநகர் அ.த.க.பா. |
| 4ம் | இடம் | குணபாலசிங்கம் தனுஷன் | இ.தி.த.க. பாடசாலை, வவுனியா |

## திருவருட்பயன் முழுவதும்

**ஆண்டு 10**

| | | | |
|---|---|---|---|
| 1ம் | இடம் | சண்முகநாதன் ஜனகர்த்தனி | இறம்பைக்குளம் மகளிர் ம.வி. வவுனியா. |
| 2ம் | இடம் | செ. மதுரகன் | தமிழ் மத்திய ம.வி. வவுனியா. |
| 3ம் | இடம் | கோ. ஜலாயா | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா. |

## திருக்குறள் மனனப்போட்டி 40 – 49 வரை 10 அதிகாரங்கள்

**ஆண்டு 11**

| | | | |
|---|---|---|---|
| 1ம் | இடம் | இ. கோகுலதாசன் | தமிழ் மத்திய ம.வி. வவுனியா. |
| 2ம் | இடம் | ம. மிருணாளினி | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா. |
| 3ம் | இடம் | சி. அருள்வாணி | புதுக்குளம் ம.வி. புதுக்குளம். |

**20 - 11 - 2002**

**க. தர்மதேவன்**
செயலாளர்
சு.இ.இ.ச
வவுனியா

உ

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
# பொன்விழாக் கட்டுரைப் போட்டி முடிவுகள்

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் 17 - 11 - 2002இல் நடாத்திய கட்டுரை எழுதும் போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

***தலைப்பு :- "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"***

**ஆண்டு 12**

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | :- | தர்சிகா சுந்தரலிங்கம் | விபுலானந்த ம.வி. பண்டாரிகுளம். |
| 2ம் இடம் | :- | இ. ஜனார்த்தனி | கலைமகள் ம.வி. நெளுக்குளம். |
| 3ம் இடம் | :- | க. கஜந்தினி | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா. |

***தலைப்பு :- "சமூகத் தொண்டில் இந்து சமயம்"***

**ஆண்டு 13**

| | | | |
|---|---|---|---|
| 1ம் இடம் | :- | தர்மராஜா அநிந்திதை | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா. |
| 2ம் இடம் | :- | பா. பிரதீபா | சைவப்பிரகாச மகளிர் கல்லூரி வவுனியா. |
| 3ம் இடம் | :- | ம. கிருஷ்ணவேணி | கலைமகள் ம.வி. நெளுக்குளம். |

- நன்றி -

*க. தர்மதேவன்*
செயலாளர்

உ

# "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே"

**செல்வி. தர்சிகா சந்திரலிங்கம்**

*விபுலானந்த மகா வித்தியாலயம் - பண்டாரிகுளம்.*

## பொன்விழாக் கட்டுரைப் போட்டியில் தரம் 12ல் (க.பொ.த.உ/த 1ம் ஆண்டு) முதற்பரிசு பெற்ற கட்டுரை

"இறைவனோ தொண்டருள்ளத்தொடுக்கம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று அருமையாய்ப் பாடியுள்ளார் ஔவைப் பாட்டியார். ஆன்றோர் அருள்வாக்கும் அமிர்தமன்றோ. ஆதலினால் ஆண்டவனின் பெருமையிலும் பார்க்க அடியார் பெருமை விஞ்சி நிற்கிறது. நினைத்தவர் மனத்தைக் கோயிலாய்க் கொண்டவர் எம்பெருமான். செயற்கரிய அன்பேயுருவான எம்பெருமான் அடியார் உள்ளங்களில் அற்புதமாய் வீற்றிருக்கிறார். "காலையும் மாலையும் கைதொழுவார் மனம் ஆலயமாமே அறநெறியார்க்கே" என்று திருமுறையில் பாடியுள்ளதைப் போன்று அடியார் உள்ளம் ஆலயம். அதாவது ஆண்டவன் விரும்பி உறையும் இடம். இத்தகைய தொண்டர் தம் பெருமை சொல்லவும் எல்லையில்லாததோர் இன்பம் பிறக்கும் எம் சிந்தையிலே.

"இத்தகைய அன்புள்ளங்கொண்ட இவர்கள் பற்றி "பெருமையால் தம்பை ஒப்பார். பேணலால் எம்மைப் பெற்றார்" என்ற பாடலில் இவர்களது நெறி விளங்க வைக்கப்படுகிறது. இதனோடு இவர் தம் பெருமையினை

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

என்ற பாடலில் இவர்களுடைய இலக்கணத்தைச் சேக்கிழார் திறம்பட விளக்கியுள்ளார். "தொண்டர் குலமே தொழு குலம்" என்பார் ஆன்றோர். இத்தகைய தொண்டுள்ளங் கொண்டவர்களே தொன்றுதொட்டு நம் சைவம் ஈன்ற மகத்தானவர்கள். ஓர் தொண்டர் வேண்டுகிறார் இறைவனிடம் "......யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல, நின்பால் அருளும் அன்பும் அறமும் இம்மூன்றும்....." என்றே கூறி எதிலும் மோகமில்லாது சித்தத்தைத் திருவுள்ளங்கொண்ட சிவன் பேரில் வைத்தவர்கள். அன்னார் தம் புகழ் பாடிடவும் வார்த்தைகள் போதாது.

சித்தத்தைச் சிவன் பால் வைத்த எண்ணில்லாத மெய்யன்பர்களுள் விபூதி உருத்திராக்கம் என்னும் சிவ சின்னங்களைத் தரித்தவர்களும், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குபவர்களும் நல்வினையால் வரும் இன்பத்திலும் தீவினையால் வரும் துன்பத்திலும் சமபுத்தி பண்ணுபவர்களும், சிவபெருமானுடைய திருவடிக் கண்ணதாகிய மெய்யன்பொன்றையே பெருஞ்செல்வமெனப் போற்றுபவர்களும் மக்கள் தொண்டையே மகேசுவரன் தொண்டாகக் கொண்டவர்களுமே இத்தொண்டர் குழாம். இத்திருத்தொண்டர் பெருமையதனைச் சிறப்பாகப் பாட வடிவெடுத்ததே பெரியபுராணம். இப்புராணத்தில் ஓர் பாடலில் அடியார் தம் திருவுள்ளமே இறைவன் திருவடி மலர் பூத்திடும் பொய்கையெனவும் தோட்டமெனவும் கூறப்படுகிறது.

இத்திருத்தொண்டர் தம் பெருமையித்னைப் பாட அநபாயச் சோழனின் முதல் மந்திரியாகத் திகழ்ந்த அருண்மொழித் தேவர், சுந்தரர் பெருமானைக் காப்பியத் தலைவனாக்கி அவரால் பாடப்பட்ட திருத்தொண்டத்தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பியினது திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு, பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்ட திருத்தொண்டர் புராணமே அடியவர் வரலாற்றை அற்புதமாய்ப் பாடி நிற்கிறது. இப்பெரும் காப்பியத்தை வடித்த சேக்கிழார் பெருமான் "தொண்டர் சீர்பரஷவார்" எனும் பட்டத்தையும் இதனாலே பெற்றுக்கொண்டார். 63 தொண்டரதும் பெருமைகள் சிறப்பாக இங்கே பாடப்பட்டுள்ளது. இப்புராணத்திலுள்ள அடியவர் வரலாறு கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும் தன்மை வாய்ந்தது.

இவ்வழியதனில் சென்ற அடியவரில் சுந்தரமூர்த்தி நாயனார் ஒருகால் திருவாரூர்த் திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கே எண்ணில்லாத பல மெய்யடியார் கூட்டத்தைக் கண்டு "இவர்களுக்கு நான் அடியனாகும் நாள் எந்நாள்" என்று இறைஞ்சினார். பின்னர் சுவாமி தரிசனஞ் செய்த போது அன்பேயுருவான எம்பெருமான் அடியாருக்கு அடியனாகும் சுந்தரர் வேண்டிய வரத்தைக் கொடுத்து "நீ எம்முடைய அடியார் புகழ் பாடு" என்றே வேண்டினார். இதற்கமைவாக தில்லையம்பலவன் "தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கு மடியேன்" என்று அடியெடுத்துக் கொடுக்க சுந்தரர் பெருமான் அங்கிருந்த சங்கம கூட்டத்தைப் பார்த்து

"தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே"

என்றே பாடியருளினார். இவர் தாம் அனைவருக்கும் அடியேன் என்றே அருமையாகப் பாடியுள்ளார். "ஆரங்கண்டிகை ஆடையுங் கந்தையே..." என்று தொடங்கும் பாடலில் தொண்டர் தம் வீரம் சிறப்பிக்கப்படுகிறது. அதாவது தொண்டர்தம் வீரம் என்பதனுள் அன்பர்மேல் கொண்ட அன்பும் அறமுமே இவர்களது ஒப்பில்லாத வீரமாகும். மேலும் இத்திருத்தொண்டர் குழாம் எதிலும் மோகமில்லாது எம்பெருமானுடைய திருவடிக் கண்ணதாகிய மெய்யன்பொன்றையே தம்முள்ளத்திலிருத்தி இயற்கையாகிய அவ்வன்பால் விழுங்கப்பட்டு இடையறாதொழுகும் தைலதாரை போலும் இவர்தம் நெஞ்சங்கள்.

அடுத்து சம்பந்தர் பெருமான் 3 வயதிலே தேவாரம் பாடி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியதோடு சிவபெருமானிடமிருந்து பொற்தாளமும், முத்துச்சிவிகையும் பெற்று சிறந்து விளங்கினார். இவர் சிவனடியார்களுக்குச் செய்த தொண்டுகளோ பல ஆளுடைய பிள்ளை பல அற்புதங்களை நிகழ்த்தினார். இவரையடுத்து உளவாரத் தொண்டிற் சிறந்த அன்பரான அப்பர் பெருமான் கோயிலுக்காய்த் தம்மை அர்ப்பணித்து இறைவன் சந்நிதானமே தன்னுறைவிடம் என்றே பல தொண்டுகளைச் செய்தருளினார் இதனாலே "உளவாரப் படையாளி" என்ற பட்டத்தையும் தன் வசப்படுத்திக் கொண்டார்.

"மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்" என்றே கூறிய சம்பந்தர் வாக்கிற்கமைய, சிவனடியார்களுக்கு மகேசுவர பூசை செய்வித்து மகிழ்வதில் இளையான் குடிமாற நாயனாரும், அப்பூதி அடிகளும் மானக்கஞ்சாறரும் சிறப்பானவர்கள். "வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்" என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய இளையான் குடிமாற நாயனார் அவர்களை இறைவன் திருவருளால் வறுமை வாட்டிய போதும் கூட அவர் தன்னிலையிலிருந்து சற்றும் வழுவாது இத்தொண்டை மேற்கொண்டார். "ஆரம் என்பு புனைந்த ஐயர் தம் அன்பர் என்பதோர் தன்மையால் நேர வந்தவர் யாவராயினும் நித்தமாகிய பத்திமுன் கூர" என்ற பாடலில் இவர்தம் அமுது செய்விக்கும் பணி சிறப்பாகப் போற்றப்படுகிறது. சிவனடியார்களைச் சிவனெனவே மதித்து மனம் கோணாமல் உணவிடுவதில் இவருக்கு நிகர் இவரே. காரிருளில் கடும் மழையில் கோர வறுமையில் பட்டினியோடு இருந்தவேளை வந்த அடியவர் பசி போக்க முளைநெல் கொண்டு முளைக்கீரையும் கொண்டு அவர் தம் பசி போக்கி அவர் தம் அணங்கோடு இறைவனுலகம் எய்தியர்.

அடுத்ததாக சங்கம வழிபாட்டால் முத்தியடைந்தார் விறன்மிண்ட நாயனார். தண்ணீரிலே எம்பெருமானுக்கு தீபம் ஏற்றியவர் நமிநந்தியடிகள். திருப்பனந்தாள் சிவலிங்கம் சரிந்ததை அறிந்து தன் கழுத்திலே கயிறு இட்டு சிவலிங்கத்தை நிமிர்த்தியவர் குங்குலியக்கலய நாயனார். இவர்காட்டிய அன்பு அடியவரை வியப்பில் ஆழ்த்தியது. குங்குலியத்தால் தூபமிட்டு இறைவனைத் தன் வசப்படுத்தியதோடு தன் மனைவியின் மாங்கலியத்தைக் கொடுத்தும் வறுமையை உணராது குங்குலியம் வாங்கி இறைவன் மனதைக் குளிர வைத்தவர் குங்குலியக்கலய நாயனார். இவர் பெருமை இவ்வாறு காணப்பட அடுத்து ஏனாதிநாத நாயனார், தன் மீது அழுக்காறு கொண்டு தன்னை எதிர்த்த அதிசூரனை கொல்வேன் என்று வீறுகொண்டு எழுந்த இவரை போரிலே தன் முகத்தை மறைத்த பலகையை நீக்கினான் அக்கயவன். அப்போது "உன் மீது முன் காணாத வெண்திருநீற்றின் பொலிவு கண்டேன். நீர் இறைவன் அடியார் ஆனீர். உம் குறி வழி நிற்பேன்" என்றே அவன் பூசியிருந்த திருநீற்றைக் கண்டு தளர்ந்த அவரை அக்கயவன் தன் வாளினால் வெட்டினான். ஆனாலும் சிவனடியார் என்றே எண்ணியமையால் இறைவன் அவரைத் தன்வசப்படுத்தினார்.

எண்ணில்லாத பல அதிசயங்கள் நிகழ்த்திய தொண்டர்கள் பெருமை அளவிட முடியாது. அடுத்ததாக சேரமான் பெருமான் வீதி வழியே சென்று கொண்டிருந்தபோது ஓர் வண்ணான் சாம்பலை சுமந்து சென்றான். அப்போது மழை காரணமாக அவன் மேல் அச்சாம்பல் வெண்ணீறாய்ப் படிந்தது. ஆனால் இதையறியாத சேரமான் பெருமான் அவர் நீறு பூசிய சிவனடியார் என்று அவன் காலிலே வீழ்ந்து வணங்கினார். உடனே அவன் "அடியேன் வண்ணான்" என்றான். உடனே சேரமான் பெருமான் "உன் மீது வெண்திருநீற்றின் பொலிவு கண்டேன்" என்றார். இதிலிருந்தே புரியவில்லையா தொண்டர்கள் யாவரும் சிவனடியார்களைச் சிவனெனவே மதிப்பவர்கள் என்று. இவர்கள் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்ற ஔவைப் பாட்டியார் வாக்கும் உண்மைதானே.

அடுத்ததாக திறம்பட செங்கோலோச்சி வந்தார் மெய்ப்பொருள் நாயனார். இவரைப் போரால் வெல்ல முடியாது என்ற பகைவன் சிவனடியார் வேடந்தரித்து வந்தான். சிவனடியார்க்காகவே அம்மன்னன் வாயிற் கதவு எப்போதும் திறந்தே இருக்கும். இதைப் பயன்படுத்திய அக்கயவன் அரண்மனை உள்வந்து அரசனைப் பார்க்கச்

சென்றபோது அங்கே மன்னர் நித்திரையில் இருந்தார். சிவனடியாரைக் கண்ட அவர் மனைவி மெய்ப்பொருள் நாயனாரை எழுப்ப அவர் எழும்பினார். அப்போது அக்கயவன் "யாரும் கூறாத ஆகமம் ஒன்று என்னிடம் உள்ளது" என்றார். மனைவி சென்றுவிட தன் பையைத் திறந்த அக்கயவன் கத்தியை எடுத்து அவர் மேல் குத்தினான். சந்தேகங் கொண்டு வந்த வாயிற் காப்போன் அவனை வெட்ட வாளை ஓங்க, மன்னர் தடுத்தார். இவனை ஒரு இடையூறும் இல்லாமல் எல்லையிற் சேர்ப்பாய் என்ற மன்னரின் கட்டளைக்கிணங்கக் கொண்டு சென்றார். மன்னர் இறக்கும் போது கூறினார். "திருநீற்றில் அன்பு வையுங்கள் அதற்கு ஒரு குறையும் வராமல் ஆட்சி செய்யுங்கள்." என்றே கூறியபோது இறைவன் இவரைத் தன்னுலகம் அழைத்துக் கொண்டார். அடுத்துக் காரைக்கால் அம்மையார் தலையாலே நடந்து கைலையை அடைந்தபோது "இவ்வென்புருவத்தின் அன்பு தான் என்னே!" என்று வியந்தார். இவ்வாறாகப் பலர் தம் அடியார்க்காக இறைவனையே அடைந்தனர். இவர்தம் புகழ்பாடி மலர்தினம் போட்டு வணங்கல் வேண்டும்.

"ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த நேசரெதிர் நிற்பதரிதாமே தேசுவளர் செங்கதிர் முன் நின்றாலும் செங்கதிரவன் கிரணம் தங்குமணல் நிற்பதரிதேதான்" என்ற பாடலிற்கமைய சூரியனில் நின்றாலும் நிற்கலாம். ஆனால் சூரியனின் கதிரைப் பெற்று சூடாக நிற்கும் சுடுமணலில் நிற்கவே முடியாது. இதே போல சிவபெருமானை விட அவரன்பைப் பெற்றுயர்ந்த அடியார் மேல் உள்ள அன்பு அதனை விடப் பெரியதாகும். இவ்வாறாக இத்தொண்டர்தம் பெரும் புகழை அவர்களது வரலாற்றைக் கூற அதன் மகிமை போற்றுதற்குரியது. நாமும் அத்திருத்தொண்டர்களின் வழியதனில் நின்று அவர்கள் தாள் வணங்கிப் பணிவோம்.

உ

# சமூகத்தொண்டில் இந்துமதம்

**செல்வி. அநிந்திதை தர்மராஜா**

*சைவப்பிரகாச மகளிர் கல்லூரி – வவுனியா.*

**பொன்விழாக் கட்டுரைப் போட்டியில் தரம் 13ல்**
**(க.பொ.த.உ/த 2ம் ஆண்டு)**
**முதற்பரிசு பெற்ற கட்டுரை**

சமூகம் என்பது எதனைக் குறிக்கும் என நோக்கினால் மக்கள் கூட்டத்தையே குறிக்கும். ஒவ்வொரு மக்கள் கூட்டமும் ஒவ்வொரு செயற்பாட்டை ஆற்றி வருகின்றது. எல்லா மனிதர்களும் ஒரே இயல்புடையவர்களாக இருப்பதில்லை. ஒருவன் தனக்காக மட்டும் வாழும் போது அவன் சுயநலவாதி. ஆனால் பிறர்க்காக வாழ்கின்ற போது, அவன் பொதுநலவாதியாகின்றான். பொதுநலவாதிகளால் தான் சமூகத்துக்குத் தொண்டுகளை ஆற்றமுடியும்.

உலகிலுள்ள எல்லாச் சமயங்களிலும் தொன்மையானதும் ஆதியந்தமற்றதுமான ஒரே சமயம் இந்துசமயம் தான் என்பதில் ஐயமில்லை. இவ்வாறான சமயமும், சமூகத் தொண்டுகளும், வேறுபட்டவையல்ல. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதவாறு பின்னிப்பிணைந்துள்ளன. சமயம் என்பது தனித்தியங்க முடியாத ஒன்றாகும். அது சமூகத்தொண்டின் மூலமே வளர்ச்சியடைந்து வருகின்றது எனலாம். எனவே சமூகத் தொண்டில் இந்துமதமானது பாரிய செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

புராதன காலத்திலிருந்து தற்காலம் வரை சமூகத்தொண்டில் இந்துமதமானது எவ்வாறான செல்வாக்கைச் செலுத்தி வந்ததென நோக்குவோம். தமிழ்நாட்டிலே தமிழிலக்கிய வரலாற்றிலே சங்கமருவிய காலத்தையடுத்து வருவது பல்லவர் காலம். இப்பல்லவர் காலமானது சமயத்தை வளர்த்து ஓங்கச் செய்வதே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. இதை நிறைவேறச் செய்யத் தோன்றியவர்களே நாயன்மார்கள். இவ்வாறான நாயன்மார்கள் தோன்றி மக்களுக்குப் பல பணிகளையும் ஆற்றி சமயத்தை உயர்வடையச் செய்தனர்.

"சைவம் முதற்றான் பெற்ற புண்ணியக் கண்கள் இரண்டு" எனக்கூறும் அப்பரும், சம்பந்தரும் ஒரே காலத்தவர்கள். இவர்களின் பணிகள் ஏராளம். அப்பர் ஊர்கள் தோறும் சென்று உழவாரப்படை கொண்டு சென்று கோயில்களில் சைவ வளர்ச்சியை நிலைநாட்டினார். சம்பந்தரும் பல அற்புதங்களைச் செய்து சமணர்களை வென்று சைவத்தை வளர்த்தார். இருவரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்த போது அங்கு பஞ்சம் ஏற்பட்டது. இருவரும் படிக்காசு பெற்று மக்களின் பஞ்சத்தைப் போக்கினர். திருமறைக்காட்டில் திறவாதிருந்த ஆலயத்தை இருவரும் திறக்கவும், மூடவும் செய்து மக்களுக்கு சமய வழிபாட்டுக்கு உதவினர்.

மற்றும் அப்பூதியடிகள் பல சமூகத்தொண்டுகளையும் ஆற்றியுள்ளார். இவர் திருநாவுக்கரசு என்ற பெயரிலே தண்ணீர்ப்பந்தல்கள் பலவற்றை அமைத்துள்ளார்.

இவ்வாறான பணிகள் மக்கள் வாழ்க்கைக்கு உறுதுணையாகின்றன. பெரியபுராணத்திலே கூறப்படுகின்ற அறுபத்து மூன்று நாயன்மார்களும் சமூகப்பணிகள் பலவற்றை ஆற்றியே சமய உணர்வை மக்களிடம் வளர்த்துள்ளனர்.

தத்துவவாதிகளுள் ஒருவரான திருமூலரும் சமூகத்தொண்டின் மூலமே சமயம் வளர்ச்சியடையும் என்பதைப் பின்வரும் பாடலின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

"படமாடக் கோயில் பகவற்கொன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கதாமே"

அதாவது பல மாடங்களையுடைய கோயிலிலுள்ள பகவானுக்குச் செய்கின்ற தொண்டுகளானவை அடியவர்களிடத்துச் சென்று சேருவதில்லை. ஆனால் அடியவர்களுக்குச் செய்கின்ற தொண்டுகளானவை நிச்சயமாகப் பகவானிடம் சென்று சேரும் என அற்புதமாக விளக்கியுள்ளார். இதன் மூலம் அடியவர்களுக்கும் பயன் கிடைப்பதோடு இறைவனிடமும் சென்று சேருகின்றன. எனவே இவையும் சமூகத் தொண்டுகளாகக் கொள்ளப்படுகின்றன.

சோழர் காலத்திலே தமிழகத்தில் எங்கும் காணமுடியாதவாறு பிரமாண்டமான அமைப்பினையுடைய பெருந்தொகையான ஆலயங்கள் உருப்பெற்றன. இவ்வாலயங்கள் தனியே சமய வழிபாட்டு இடங்களாக மட்டுமன்றி, சமூக ஸ்தாபனங்களாகவும் காணப்பட்டுள்ளன. இவை களஞ்சிய அறைகளாகவும், கல்விக்கூடங்களாகவும், மருத்துவ சாலைகளாகவும், வங்கிகளாகவும், தொழில் வழங்கும் நிறுவனங்களாகவும் செயற்பட்டுள்ளன. சோழர் கால ஆலயங்கள் மூலம் மக்களுக்கு சமய வழிபாடு மட்டுமன்றி சமூகத் தொண்டுகளும் இடம்பெற்றுள்ளன என்பதை ஆதாரப்படுத்த முடிகின்றது.

மற்றும் இக்கால ஆலயங்கள் மூலம் பல வேலைவாய்ப்புக்களும் இடம்பெற்றுள்ளன. ஆலயங்களிலே திருமுறை ஓதுவதற்கென ஓதுவார்கள் நியமிக்கப்பட்டனர். நடனமாடுவதற்கென்று தேவரடியார்களும், சிற்ப வேலைகள், செதுக்கு வேலைகளுக்கு சிற்பிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். இராஜராஜசோழன் தனது தஞ்சைப் பெருங்கோயிலிலே நாற்பத்தெட்டு ஓதுவார்களை நியமித்திருந்தான் எனக் கூறப்படுகின்றது. எனவே சோழர் காலத்தில் சமய சமூகத்தொண்டுகள் மூலம் சமயம் வளர்க்கப்பட்டது எனக் கூறல் வேண்டும்.

நாயக்கர் காலத்திலே மக்களுக்குப் பணிகளை ஆற்றுவதற்கென மட ஆதினங்கள் என்ற பல சமூக அமைப்புக்கள் அமைக்கப்பட்டு, சைவ மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டிருந்தது. இவர்கள் பல நூல்களை விளங்க வைத்தும், மொழி பெயர்ப்புச் செய்தும் சைவத்தை வளர்த்திருந்தனர்.

அடுத்து, சமயப் பெரியார் என்ற வகையில் சுவாமி விவேகானந்தரை எடுத்து நோக்குவோம். அவர் கூறும் போது "ஒரு நாய் உணவுக்காக வாடுகின்ற போது அதன் பசியைத் தீர்த்து வைத்தலே உண்மையான சமய உணர்வு" என்கிறார். இந்த நேரத்தில் ஒருவன் அதை விடுத்து கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றினால் அது உண்மையான சமய உணர்வாகாது. வெறும் போலியே. இதுதான் பகவத்கீதையிலும் "கடமையைச் செய் பலனில் பற்று வைக்காதே" என்று கூறப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தமக்குரிய கடமைகளைச் சரிவர ஆற்றும் போது அது சமய உணர்வை உண்டாக்கின்றது எனலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி வீரசுதந்திரம் வேண்டி நின்ற பாரதியார் கூறும் போது அன்னசாலைகள் ஆயிரம் கட்டுவதிலும், பத்தாயிரம் ஆலயங்களை உருவாக்குவதிலும் ஒரு ஏழைக்கு எழுத்தறிவித்தலே யாவற்றிலும் கூடிய புண்ணியத்திற்கு உரித்தானது என்கிறார். எவ்வளவு சமயப்பணிகளை ஆற்றுகின்ற போதும், அவை சமூகப்பணிகள் மூலமாகவே சிறப்படைகின்றது எனலாம்.

இன்றும் இந்தியாவிலே ஆந்திராப்பகுதியிலே புட்டபர்த்தி எனும் இடத்திலே சாயிபாபா அவர்கள் ஏழை மக்களுக்காகவே ஒரு வைத்தியசாலையையும் அமைத்து ஒரு கிராமத்துக்குக் குடிநீர் வசதியும் செய்துள்ளார். இன்று அவரைக் கடவுளின் அவதாரம் எனக்கூறி அவரைக் கடவுளாகவும் பலர் வழிபடுவதனையும் காணலாம். எனவே அவர்கூட தம் மத வளர்ச்சிக்கு சமூகத்தொண்டுகளை ஆற்றுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

எமது நாடாகிய ஈழத்திலேயும் பத்தொன்பதாம் நூற்றாண்டில், நலிவுற்றிருந்த சைவ சமயத்தை வளர்த்தெடுப்பதற்கென அவதரித்தவரே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். இவர் சமயத்தை வளர்க்க ஆற்றிய சமூகப்பணிகள் அளவிட முடியாதவையாகும். சைவப்பிள்ளைகள் கல்வி கற்க வேண்டுமென்ற நோக்கிலே வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை அமைத்து இலவசமாகக் கல்வியும் கற்பித்துள்ளார். பல பிரசங்கங்களை ஆற்றி சமய உண்மைகளை மக்களறியச் செய்தார்.

இவர் நாட்டில் பஞ்சம் ஏற்பட்ட போது கஞ்சித்தொட்டி அமைத்து பஞ்சம் நீங்கும் வரை ஏழு மாதங்களுக்கு ஆரம்பத்தில் கஞ்சியும், பின்னர் அன்னம், கறி முதலானவற்றையும் வறிய மக்களுக்கு வழங்கிப் பஞ்சப்பிணியைப் போக்கி வந்தார். இவர் சாதி, மத பேதம் பாராட்டாது மக்களுக்குச் சேவை செய்தார். அன்னசத்திரம் இல்லாத இடத்து அன்னசாலைகளை ஸ்தாபித்து, அனைவருக்கும் உணவளித்தார். பல பாடசாலைகளையும் நிறுவி ஒழுக்கம் மிக்க மாணவ சமுதாயம் ஒன்றுக்கு வித்திட்டுள்ளார். “நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே! சுருதி எங்கே” என்றவாறு நாவலர் தோன்றி சைவத்தை வளர்த்து சமூகத்தையும் வளப்படுத்தினார்.

ஆலயங்களிலே தனியே சமய வழிபாடுகள் மட்டுமன்றி மக்களின் சமூக சேவைகளும் பல இடம்பெறுகின்றன. ஆலயங்களிலே பல விழாக்கள் நடைபெறுகின்றன. திருவிழாக் காலங்களில் பல கலை நிகழ்ச்சிகளும் கொண்டாடப்படுகின்றன. திருமுறைகள், புராணபடனங்கள், மந்திரங்கள் என்பன ஓதப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் மக்கள் நியமிக்கப்பட்டு சமூகத்தில் உயர்வடைகின்றனர்.

இன்று யாழ்ப்பாணத்திலே தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தெல்லிப்பளைத் துர்க்கை அம்மன் ஆலயத்திலே சமய வழிபாட்டை மட்டும் செய்வதோடு நின்றுவிடாது அங்கு அநாதை இல்லம் ஒன்றை அமைத்து அநாதைச் சிறுவர்களுக்கு ஆதரவு வழங்கி வருகின்றார். அவர்களுக்கும் சமயவுணர்வு ஊட்டப்படுகின்றது. மற்றும் வவுனியாவிலே கோயிற்குளம் சிவன் கோவிலும் ஒரு அநாதை இல்லம் அமைத்து மாணவர்களின் வாழ்வை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது.

மற்றும் குருமன்காடு காளிகோயில் தேவஸ்தானம் சைவசமய அறிவகம் ஒன்றை அமைத்து சைவ மக்களை அறிவாளிகளாக்கிக் கொண்டிருக்கின்றது. இவை மட்டுமல்லாது சமூக நிறுவனங்கள் பலவும் இன்று சமூக சேவைகளை ஆற்றுவதன் மூலமாக சைவ சமயத்தை வளர்க்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளன.

இராமகிருஷ்ண மிஷன், துறவிகள் தங்குமிடமாகவும் சைவத்தை வளர்த்தெடுக்கும் ஒரு சமூக நிறுவனமாகவும் செயற்பட்டு வருகின்றது. விவேகானந்த சபை, சைவ பரிபாலன சபை போன்ற சபைகளும் சைவத்தை வளர்க்கவே நிறுவன ரீதியிலே செயற்படுகின்றன. இவை மூலம் மாணவர்களுக்கு சைவ சமயப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. இதன்மூலம் மாணவர்களுக்கு சமய அறிவு பரந்ததாகின்றது.

மற்றும் வவுனியாவிலே சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் சமூகத்தொண்டுகள் ஏராளமானவற்றை ஆற்றி வருகின்றது. சைவசமய விழாக்கள் பலவற்றை கொண்டாடுகின்றது. மாணவர்களுக்கு ஆரம்பப் பாடசாலை ஒன்றையும் நடாத்தி வருகின்றது. இங்கு தங்குமிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நவராத்திரி விழாக்கள், குருபூசைத் தினங்கள், ஏடு தொடக்கல் போன்ற பல நடைமுறைகளும் இங்கு இடம்பெறுகின்றன. சமய விரத விழாக்களைக் கொண்டாடுவதன் மூலம் மக்கள் மனதில் சமய உணர்வுகள் தட்டியெழுப்பப்படுகின்றன.

சமயங்களானவை மக்கள் அகங்களிலே ஆழமாகக் கிடக்கின்ற மெய்யுணர்வுகளை வெளியே எடுத்து வாழ்க்கையிலே நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து ஆன்மீக ஈடேற்றத்தைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டிகளாகவும், பலவிதமான சமூகத்தொண்டுகளையும் ஆற்றி வருகின்றன. மற்றும் மக்களுடைய உடற்குறைகள் மட்டுமன்றி உளக்குறைகளையும் நீக்கும் கருவியாகவும் சமயங்கள் சமூகத்தொண்டுகளையே ஆற்றுகின்றன.

மக்கள் நல்ல சீரிய ஒழுக்கம் உள்ளவர்களாகவும், வாழ்வை வளமுற வாழ்வதற்கும், இறைவனை அடைந்து நித்தியப் பேரின்ப பெருவாழ்வு பெறுவதற்கும் சமூகத்தொண்டுகளே நிலைக்களமாக உந்துசக்தியாக விளங்குகின்றன எனலாம். பெரியபுராண அறுபத்துமூன்று நாயன்மார்களும் சமயத்தை மாத்திரம் மேற்கொண்டு, தொண்டுகள் எதுவும் செய்யாது வாழ்ந்திருந்தால் இறைவனுடைய பாதத்தை அடைந்திருக்க முடியாது. எனவே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நால்வகை மார்க்கங்களில் நின்றே அவர்களும் முத்தியடைந்துள்ளனர்.

எனவே இந்துமதத்தையும் சமூகத்தொண்டையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. ஒன்றில்லையாயின் மற்றையது இல்லை என்றே கூறலாம். இந்துமதம் நிலவும் வரையிலே சமூகத்தொண்டுகளும் வளர்ந்து கொண்டே போகும். எனவே சமூகத்தொண்டில் இந்துமதமானது மக்களுக்குப் பல போதனைகளையும் வழங்கி சமய உணர்வைத் தட்டியெழுப்பி நல்ல பிரஜைகளாக வாழ வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை.

உ

# வவுனியா மாவட்டத்தில் முதலிடம் பெற்று வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்கப் பொன்விழாவில்

## பாராட்டும் பரிசும் பெற்ற மாணவர்கள்

### க.பொ.த. (உ/த) 2001

கணிதப்பிரிவு :- செல்வன். தர்மராஜா அநபாயன்
(வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

விஞ்ஞானப்பிரிவு :- செல்வன். கலைநாதன் ராகுலன்
(வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

வர்த்தகப்பிரிவு :- செல்வி. செல்வராஜா கலைச்செல்வி மேரி சுஜாதா
(வ/சைவப் பிரகாச மகளிர் கல்லூரி)

கலைப்பிரிவு :- செல்வன். தியாகராஜா சுதாகர்
(வ/விபுலாநந்தாக் கல்லூரி)

### க.பொ.த. (உ/த) 2002

கணிதப்பிரிவு :- செல்வன். பாலச்சந்திரன் பாலேசன்
(வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

விஞ்ஞானப்பிரிவு :- செல்வன். சுதேசபவன் பிரசாந்
(வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

வர்த்தகப்பிரிவு :- செல்வன். சந்திரலிங்கம் டிலக்சன்
(வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்)

கலைப்பிரிவு :- செல்வி. சந்திரசேகரம் தமிழினி
(வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

### க.பொ.த. (சா/த)

2000 :- செல்வி. நடராசா தேவகி
(வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

2001 :- செல்வி. இராமசாமி பிரதீபா
(வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

### 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை

2001 :- செல்வன். அமுதலிங்கம் அமுதபவன்
(வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

2002 :- செல்வி. ஜெயசீலன் தீபிகா
(வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்)

05

# சமயம்

(69 - 137)

உ

# மூன்று பிள்ளைகள்

*முக்தி அடைந்த*

***ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்***

நமது இந்து மதத்தில் மூன்று நூல்கள் பிரதானமாக விளங்குகின்றன. உபநிஷத்துக்கள், பகவத் கீதை, பிரம்ம சூத்திரங்கள். இவற்றைப் பிரஸ்தான த்ரயம் என்பார்கள். இவற்றுக்கு அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் சார்ந்த பாஷ்யங்கள் உள்ளன.

உபநிஷத்துகளில் அநேக விஷயங்கள் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் என்று சொல்லும் படியாக இருக்கின்றன. ஓர் இடத்தில் 'ஜீவாத்மா வேறே, பரமாத்மா வேறே, பிரபஞ்சம் வேறே' என்பதாகவும், 'நான் நான் என்கிறது தான் பரமாத்மா எங்கும் நிறைந்திருக்கும் படியான பரமாத்மாதான் ஸர்வாந்தர்யாமியாக இருக்கிறார்' என்பதாகவும், 'எல்லாம் ஒன்றுதான்' என்பதாகவும் - இப்படி அநேக வாக்கியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆனாலும் உபநிஷத்துகளில் நடுநடுவே சொல்லியிருக்கும்படி சில வாக்கியங்களை எடுத்துக் கொண்டு, ஒன்றுக்கொன்று விரோதம்போல் இருக்கிற விஷயங்கள் எல்லாம் சரிதான் என்பதற்கு அத்வைதப் பிரகாரமாகப் பார்த்தால், பரமாத்மாதான் ஸர்வாத்மகனாக இருக்கிறான் என்றும், விசிஷ்டாத்வைதப் பிரகாரம் பார்த்தால், அவன்தான் அந்தர்யாமியாகவும் உடலில் உயிர்போல், சரீரியாகவும் இருக்கிறான் என்றும் அர்த்தம் பண்ணித் தீர்மானம் செய்கிறார்கள்.

இப்படி இரண்டுக்கும் மத்தியஸ்தம் பண்ணி வைக்கும்படியான வாக்கியங்களை 'கடக வாக்கியங்கள்' என்று சொல்வர்.

இந்தக் கடக வாக்கியங்களை எடுத்துக் கொண்டு உபநிஷத்துகளில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத விஷயங்களே சொல்லப்படவில்லை என்று எப்படித் தீர்மானம் பண்ணுகிறார்களோ அப்படி, பகவத்கீதையில் வரும்படியான சில சுலோகங்களை எடுத்துக்கொண்டு, 'இதுதான் உண்மையான நிலை, இதிலே பரஸ்பர விரோதம் ஒன்றும் இல்லை, எல்லாம் சரிதான்' என்பதாக நம் ஆசார்யாள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

'கர்மாவைச் செய், கர்மாவைச் செய்' என்று சொல்லும்படியான வாக்கியங்கள் கீதையில் நிறைய இருக்கின்றன. அப்புறம், 'ஏகாந்தத்தில் இரு, மூக்கைப் பிடித்துக் கொண்டு தியானம் பண்ணு' என்று சில வாக்கியம் இருக்கிறது. 'மூக்கைப் பிடித்துக் கொண்டு ஏகாந்தத்தில் இரு' என்றால் எப்படி யுத்தம் பண்ணுவது?

மக்களே இல்லாத இடத்துக்குப் போ என்றால் அங்கே போய் யாரோடே சண்டை போடுவது?

இப்படி ஒன்றுக்கொன்று பொருத்தம் இல்லையே என்று நினைக்காமல் இந்தச் சுலோகத்தைப் பார்த்தால், இப்படிச் சொன்னது எல்லாம் சரியாக இருக்கும் என்று ஆசார்யாள் தமது கீதா பாஷ்யத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார். உதாரணமாக,

ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத:
ஸம்ஸித்திம் லபதே நர:

என்று சாஸ்திரத்திலே உனக்குச் சொல்லியிருக்கும் படியான கர்மாக்களைச் செய். கர்மாக்களைச் செய்து ஈச்வரனுக்கே அர்ப்பணம் பண்ணிவிடு. அப்படி ஈச்வரார்ப்பணமாகத் தன்னுடைய கர்மாக்களை ஒருவன் செய்து வந்தானானால் அவனுக்கு என்ன கிடைக்கும்?

சித்தசுத்தி என்று ஒன்று கிடைக்கும் என்று பகவான் உபதேசம் செய்கிறார்.

'தன் கருமத்திலே நிலைபெற்றவன் எப்படிப் பரமாத்ம ஸ்வருபத்தோடு ஒன்றுபடுகிற பரிபக்குவ நிலையை அடைகிறான் என்பதைச் சொல்கிறேன் கேள்' என்று அப்புறம் சொல்ல ஆரம்பிக்கிறார்.

கர்மங்களைச் செய்வதனாலே கிடைக்கிற சித்தசுத்தி இருக்கிறதே அதனால் என்ன பயன்? 'அதுதான் பரமார்ம ஸ்வருபத்தோடு , சாட்சாத்காரமாவதற்கு அனுகூலமாக இருக்கிற சாதனம்.

இந்தச் சித்தசுத்தி என்கிற சாதனத்தைக் கொண்டுதான் மற்ற நிலைகள் எல்லாம் உண்டாக வேண்டும்' என்று, அப்புறம் பகவான் உபதேசம் பண்ணுகிறார் என்று ஆசார்யாள் பாஷ்யம் பண்ணுகிற காலத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

'கர்மாக்களைச் செய், கர்மாக்களைச் செய்' என்றால் கர்மாக்களைச் செய்வதனாலே சித்தசுத்தி கிடைக்கிறது. அதாவது முதலிலே சித்தசுத்தி கிடைக்கிறது. அதற்குப் பிறகு யோகசித்தி, அப்புறம் மனோநிக்கிரகம் என்று படிப்படியாக அதிலிருந்து தான் கிடைக்கிறது.

'ஆகவே கர்மாக்களைச் செய், உனக்கு எது தர்மம் என்று தர்ம சாஸ்திரங்களிலே சொல்லியிருக்கிறதோ அதைச் செய், அதைச் செய்தால் சித்தசுத்தி ஏற்படும். அப்புறம் பரமாத்ம ஸ்வருபத்தோடு சாட்சாத்காரமாவதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அவற்றை எல்லாம் சொல்கிறேன், கேள்' என்று பகவான் சொல்லியிருக்கும்படியான சில சுலோகங்களை எடுத்துக் கொண்டு, கீதையிலே ஒன்றுக்கொன்று மாறான, பரஸ்பர விரோதமான வாக்கியங்கள் சொல்லப்படவில்லை என்று காட்டுகிறார் ஆசார்யாள்.

துளசிதாசர் ராமனிடத்தில் பரமபக்தி கொண்டவர். அவர் ஒரு விஷயத்தைச் சொல்கிறார். மன்மதன் மகாவிஷ்ணுவினுடைய பிள்ளை என்று சொல்வர். கிருஷ்ண பரமாத்மாவினுடைய பிள்ளை ப்ரத்யும்னன். இவன் மன்மதனுடைய அவதாரம் என்று சொல்வர்.

அநேகமாக எல்லாரும், விஷ்ணுவுக்குப் பிள்ளை கிடையாது, சிவனுக்குத்தான் இரண்டு பிள்ளை என்று நினைக்கலாம். விஷ்ணுவின் பிள்ளை மன்மதன்.

அவனுக்கு அங்கம் கிடையாது. அநங்கன் என்று பெயர். கை, கால், முகம் என்று ஒன்றுமே கிடையாது. பிள்ளைகளில் கை இல்லாமலோ, கால் இல்லாமலோ முடமாக இருக்கிற பிள்ளைகள் இருக்கின்றன. ஆனால் விஷ்ணுவினுடைய பிள்ளைக்கு ஓர் அங்கமும் கிடையாது. இருந்தாலும் ஓர் அங்கமும் இல்லாத அந்தப் பிள்ளைதான் உலகத்திலுள்ள எல்லா உயிர்களிடத்திலும் புகுந்து, எல்லாரிடத்திலும் காமக் கிளர்ச்சியை உண்டு பண்ணுகிறான்.

மோகினி அவதாரத்தில் மகாவிஷ்ணு ஸ்திரீ ருபமாகவும் ஈச்வரன் புருஷ அம்சமாகவும் இருந்தபோது, சாஸ்தா - ஐயனார் என்கிற பிள்ளை பிறந்ததாகச் சொல்வர். மகாவிஷ்ணு ஸ்திரீ ருபமாக இருந்தபோது பெற்ற இன்னொரு பிள்ளை ஐயனார் வேறு இருக்கிறார்.

ஆனால் ஆழ்வார்கள் சொல்கிற போது,

"பிணமாடும் பிஞ்சகனை வலத்தே வைத்து"

பிணமாடும் பிஞ்சகன் என்றால் மகேச்வரன் காசியில் மகா சமசானத்தில் இருப்பவன். சாட்சாத் மகாவிஷ்ணுவினுடைய வலப் பாகத்தில் ஈச்வரன் இருக்கிறார், ஈச்வரனைத் தம்முடைய வலப் பாகத்தில் வைத்திருப்பவர் பெருமாள்.

இங்கே நாயன்மார்கள் ஈச்வரனை ஸ்தோத்திரம் பண்ணுகிற போது

"குடமாடும் கூத்தனை இடத்தே வைத்து"

என்கிறார்கள். குடமாடும் கூத்தன் மகாவிஷ்ணு, ஈச்வரனுடைய இடப்பாகத்தில், அதாவது

சாட்சாத் அம்பிகை இருக்கும்படியான இடத்தில் மகாவிஷ்ணுதான் இருக்கிறார். அம்பிகை வேறு, மகாவிஷ்ணு வேறல்ல. ஈச்வரனுடைய இடப்பாகத்தில் அவர் இருக்கிறார்.

ஆகவே இரண்டு கட்சிச் சாட்சியும் சரியாகப் போய்விட்டது. ஈச்வரனுடைய இடப்பாகத்தில் மகாவிஷ்ணு இருக்கிறார் என்றாலும், மகாவிஷ்ணுவினுடைய வலப்பாகத்தில் ஈச்வரன் இருக்கிறார் என்றாலும், இரண்டு அம்சமும் கலந்ததுதான். அவர்கள் திருவுருவம் என்பது தெரிகிறது. சிவஅம்சம் சக்திஅம்சம் இரண்டும் கலந்தது. மகாவிஷ்ணு. ஏற்கனவே பத்மாசுர சம்ஹார காலத்திலும், அம்ருதம் தோன்றிய காலத்திலும் ஸ்திரீயாகவே வந்திருக்கிறார்.

"மாதான மாதவனை"

மாதவன் மாதாகவே ஆகியிருக்கிறார். இதையெல்லாம் வைத்துத்தான் அப்பர் ஸ்வாமிகள், 'அரியலால்தேவி இல்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்று பாடியிருக்கிறார்.

ஐயாறு என்பது பஞ்சநத க்ஷேத்திரம், திருவையாறு. அங்கே எழுந்தருளியிருக்கும் படியான ஐயனுக்குத் தேவி என்பது மகாவிஷ்ணுதான். தேவியார் என்றால் ஹரியே தவிர வேறு இல்லை என்று அவர் சொல்கிறார்.

ஆகவே எப்படிப் பார்த்தாலும் மகாவிஷ்ணுவினிடத்தில் சக்தி அம்சமும் ஈச்வரனுடைய சிவாம்சமும் கலந்து இருப்பதனால்தான் ப்ரம்மனைத் தோற்றுவிக்கக் கூடிய சக்தி உண்டாயிற்று என்று தெரிகிறது.

'சிவனுக்குத்தான் இரண்டு பிள்ளை, விஷ்ணுவுக்குப் பிள்ளை இல்லை' என்று முதலில் சொன்னேன். இப்போது பார்த்தால் சிவனைக் காட்டிலும் இவருக்கு ஒரு பிள்ளை அதிகம் என்று சொல்லிவிட்டேன். மன்மதன் ஒரு பிள்ளை, ஐயனார் ஒரு பிள்ளை. பிரம்மா ஒரு பிள்ளை ஆக விஷ்ணுவுக்கு மூன்று பிள்ளைகள்.

அங்கமே இல்லாத ஒரு பிள்ளை இருக்கிறானே, அநங்கன் என்று, அவனுக்குச் சாட்சாத் பெருமாளிடத்திலே பித்ரு பக்தி அதிகம். இதைத்தான் துளசிதாசர் வெகு வேடிக்கையாகச் சொன்னார்.

'பித்ரு பக்தி மிகவும் அதிகமாக இருக்கிறது, அந்த அநங்கன் என்கிற மன்மதப் பிள்ளைக்கு, அதனாலே அப்பா எங்கே இருக்கிறாரோ அங்கே அவன் திறகவே மாட்டான். அவர் இருக்கிற இடம் என்றால் அந்தப் பக்கங்கூடத் திரும்ப மாட்டான். அதே மாதிரி இவன் ஓர் இடத்தில் இருக்கிறான் என்றால் அங்கே நிச்சயமாக அப்பாவைப் பார்க்க முடியாது.

ஜஹ ராம்

எங்கே ராமன் இருக்கிறானோ அங்கே காமன் கிடையாது. காமன் உள்ள இடத்தில் நிச்சயமாக ராமன் இருக்கமாட்டான். காரணம் தகப்பனாரிடத்தில் பிள்ளைக்கு மிகுந்த பக்தி.

அது மாதிரி காமன் இருந்தால் அங்கே பகவான் இருக்கவேமாட்டார். காமாதிகளை எல்லாம் ஒழிப்பதற்காகத்தான் காரியங்களைச் செய்ய வேண்டும்.

நிறையக் காரியங்களை எல்லாம் செய்து, சித்தசுத்தி ஏற்பட்டு, ஈச்வரனிடத்திலே பக்தி ஏற்பட்டு, இந்திரியங்களை எல்லாம் வென்றவனாய், அஸக்தபுத்தி உடையவனாய், ஆசைகளை எல்லாம் ஒழித்தவனாக ஆகிவிட்டால் அப்போது சாட்சாத் பகவானோடு சேர்ந்து விடுவதற்குக் கஷ்டமில்லாமல் போய்விடுகிறது. ஆகவே இந்தச் சித்தசுத்தி வருவதற்குக் கர்மாக்களைச் செய்ய வேண்டும் என்று உபதேசம் செய்கிறார் பகவான் கண்ணன்.

(நன்றி : கலைமகள் தீபாவளி மலர் - 1995)

உ

# எமது மதம் இந்து மதம்

சுவாமி தந்திரதேவா
(தலைவர். அகில இலங்கை இந்து
சமய அபிவிருத்திச் சபை)

இந்துக்கள் "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" "லோகா சமஸ்தசுக்கினோ பவந்து" என்று கூறுகின்றார்கள். ஏனென்றால் நாங்கள் ஒவ்வொரு இதயத்துள்ளும் மத, இன பேதமின்றி இறைவனை காண்கின்றோம். ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்களுடன் சமரசத்துடன் ஜீவிக்க விரும்புகின்றோம். இறைவன் ஒன்று "ஏகம்சத்". ஒருவன் பரமசிவன் என்று சொல்லுவான். ஒருவன் பரமாத்மன் என்று சொல்லுவான். இன்னும் ஒருவன் மாவிஷ்ணு என்று சொல்லலாம் இன்னும் சிலர் பிதா, ஜெஹோவா, அல்லாஹ் முதலியன சொல்லலாம். எல்லாம் அதே இறைவன் தானே. ஆனால் இதற்காக எல்லா மதங்களும் உண்மை என நாம் கூறமுடியாது. உதாரணமாக ஆகாய விமான ரிக்கற் வாங்குபவர் யூ.கே, ஐக்கியராஜ்யம், இங்கிலாந்து, கிரேட் பிரடன் என்று ரிக்கற் கேட்டால் எல்லாம் ஒரு இடம் தானே. ஆயினும் இதற்காக எல்லா ஆகாய விமானங்களும் அங்குதான் சென்றடையும் எனக் கூறமுடியாது. ஏனெனில் சில ஆகாய விமானங்கள் அங்கு செல்ல மாட்டாது. இவ்வகையில் இறைவன் ஒன்று. ஆனால் சகல மதங்களும் உண்மை என்று சொல்ல முடியாது. சில மதங்கள் ஒரே ஒரு பிறப்பு தத்துவத்துடன் இருக்கின்றது. ஆனால் இந்து மதம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்து மதத்தின் மறுபிறப்பு தத்துவம் உண்மையாக இருக்கலாம். அல்லது சில பிற மதங்களின் ஒரு பிறப்பு தத்துவம் உண்மையாக இருக்கலாம். இரண்டு தத்துவங்களும் உண்மையாக இருக்க முடியாது. பசுவதை நல்ல செயலாக இருக்கலாம். அல்லது இந்து மத அடிப்படையில் பசுவதை தவிர்க்க வேண்டிய செயலாக இருக்கலாம். அதற்காக இரண்டு விடயங்களும் சரியான செயல் என கூறமுடியாது. இந்துக்கள் பசுவதையை எதிர்க்க வேண்டும். இந்து மத தத்துவத்தின் அடிப்படையில் யாருக்கும் நிலையான நரகம் கிடைக்கமாட்டாது. ஜீவன் கர்ம வினை கோட்பாடு அடிப்படையில் பல பிறவிக்கு பின் அவன் முக்தி பெறுவான். இறைவன் தாய், தந்தை போல் ஜீவனை தண்டிப்பார், அணைப்பார். நிலையான நரகம் அடிப்படையில் கொடூரமான இறைவனை இந்து மதம் ஏற்றுக் கொள்ளவில்லை. இருக்கு வேதத்தில் "சகல நதிகளும் கடலை சேருவது போல் பல ஆன்மிக பாதைகளும் இறைவனை சேரும்" என கூறப்பட்டுள்ளது. சில விவேகமற்ற தவறான பாதையில் செல்லும் இந்துக்கள் இச்சுலோகம் காரணத்தால் இந்து மத கோட்பாடு எம்மதமும் சம்மதம் (எல்லா மதங்களும் உண்மை) என்றார்கள். இக்கருத்து ஒரு மாபெரும் தவறு. ஏனென்றால் இருக்கு வேத காலத்தில் இந்தியக் கண்டத்தில் இந்துமதம் மட்டுமே இருந்தது. இதனால் இச்சுலோகம் இந்து மதம் சம்பந்தமான பாதைகளை பற்றியே தான் கூறப்பட்டுள்ளது. இவ் இருக்கு வேத சுலோகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் பிற தேசங்களில் இருந்து இறக்கப்பட்ட மதங்களை பற்றி கிடையாது. ஒருவன் "புதிய மதம் தொடங்குகின்றேன். முக்தியடையும் மார்க்கம். தினமும் மூன்று சிறிய பிள்ளைகளை பலி செய்ய வேண்டும்" என்று கூறினால் "இது உண்மை. இருக்கு வேதத்தில் எல்லா மதங்களும் உண்மை என கூறப்பட்டுள்ளது" என்று சொல்லுவோமா? இல்லை. இம்மார்க்கம் கொடூரமானது.

உண்மை இல்லை என்று வலியுறுத்துவோம். ஆகவே இருக்கு வேதம் அடிப்படையில் காலம் காலமாக வந்த சகல மதக் கோட்பாடுகள் உண்மை என்று நாம் கூறமுடியாது. மேலும் சிலர் திருமந்திரத்தில் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது எம்மதமும் சம்மதம் என அஞ்ஞானத்துடன் கருதுகின்றார்கள். வேதாந்தம் என்றால் சரி, சித்தாந்தம் என்றால் சரி "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்கின்றோம். ஒவ்வொரு இதயத்துக்குள்ளும் சமமாக இறைவனைக் காண்கின்றோம். அன்பு காட்டுகின்றோம். ஆனால் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பது எம்மதமும் சம்மதம் என்று கூற முடியாது. திருமந்திரம் ஏனைய மதங்கள் சார்பில் போதிக்கவில்லை. திருமந்திரம் 3000 சுலோகங்கள் சிவஞானம், சிவபக்தியைப் பற்றித்தான் கூறியுள்ளது. இந்து மதத்தின் மேலான கோட்பாடுகளை அறியாத சிலர் "எம்மதமும் சம்மதம்" என கூச்சலிடுகின்றார்கள். "எம்மதமும் சம்மதம்" என்ற பிரசாரத்தால் பல இந்துக்களிடையே இந்து மத தத்துவங்கள் மலிவான அபிப்பிராயத்தை உண்டு பண்ணியுள்ளது. எல்லா மதங்களும் உண்மை என்று சொன்னால் இந்து மதத்தைக் காப்பாற்ற முடியாது. "எம் மதமும் சம்மதம்" போலி கொள்கை காரணத்தால் மதமாற்றம் தளைத்தோங்கி விட்டது. "எல்லா மதங்களும் உண்மை" "எல்லோரும் பிறந்த மதத்தை மட்டும் கடைப்பிடியுங்கள்" போன்ற வார்த்தைகளால் இந்து மதம் பலவீனமடைகின்றது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு, மாணிக்கவாசகர், ஆதிசங்கரர், சைத்தன்யர் எம்மதமும் சம்மதம் என கூறவில்லை. மதமாற்றத்தை தடுத்தார்கள். சுவாமி விவேகானந்தர் கூறினார் "யார் இந்து மதத்தில் இருந்து விலகினாலும் அவர் மீண்டும் இந்து மதத்தில் சேர வேண்டும்". ஒரு பாடசாலை அதிபர் சகல மாணவர்களுக்கும் பேதமின்றி சம அன்பு காட்ட வேண்டும். ஆயினும் இதற்காக எல்லா மாணவர்களுக்கும் சம புள்ளிகளை அவர் கொடுக்க முடியாது. இவ்வகையில் நாங்கள் எல்லோரும் சம அன்பு காட்ட வேண்டும். இன்னும் எம்மதமும் சம்மதம் என கூறமுடியாது. எமது மதம் இந்து மதம்.

"அன்பே சிவம்"



உ

# இந்து சமயமும் அன்பு நெறியும்

**அன்புமணி - மட்டக்களப்பு**

## 1) அன்பே சிவம் :-

'அன்பே சிவம்' என்ற தத்துவத்தின் மூலம், இந்து சமயம் அன்பு நெறிக்கு வழங்கியிருக்கும் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். சமயங்கள் அனைத்திலும் அன்புநெறி வலியுறுத்தப்படுகிறது. எனினும் இந்து சமயத்தில் இறைவனையே அன்பு மயமாக்கிக் கொள்வது தனித்துவமானதே.

இந்து சமயத்தின் ஆதார நூல்களான வேதம், உபநிடதம், பன்னிரு திருமுறை, சைவ சித்தாந்தம், புராணம், இதிகாசம் அனைத்திலும் அன்பு நெறிபற்றிப் பல்வேறு கோணங்களில் பேசப்படுகின்றது.

'அன்பு' என்பதன் பொருள் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. இறைவன் மக்கள் மேல் சொரியும் அன்பு, அப்பழுக்கற்றது. மக்கள் இறைவன் மேல் செலுத்தும் அன்பு, பக்தி, காதல் சரணாகதி என்று பல்வேறு அர்த்தங்களைக் கொண்டது. இதனை இந்து சமயத்தின் நாயன்மார் வரலாறுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

அவ்வாறே ஸ்ரீ ஆண்டாள், பக்தமீரா. காரைக்காலம்மையார், துளசிதாசர் முதலியோரது வரலாறுகளும் உண்மை அன்பை எடுத்துக் காட்டுகின்றன.

இறைவன் மேல் மட்டுமல்லாது மக்கள் மேலும் இவ்வகையான அன்பு செலுத்தப்பட வேண்டும். அதுவே வாழ்வியலில் அன்பு நெறியாக அமையும்.

பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதா, ரமணமகரிஷி முதலியோரது வாழ்வில் இத்தகைய அன்புநெறி பிரதிபலிப்பதை நாம் காணலாம்.

இவ்வகையில் அன்பு என்பது தன்னலம்ஒறுத்தல், பிறர்நலம்பேணுதல், தியாகம், பணிவு, அர்ப்பணிப்பு முதலிய ஆழமான விழுமிய உட்பொருளைக் கொண்டிருப்பதை அறியலாம்.

ஒரு தாயின் அன்பு இத்தகையதாக அமைகிறது.

## 2) பன்னிரு திருமுறை :-

இந்து மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்து விட்ட சமய இலக்கியம் "பன்னிரு திருமுறை" ஆகும். இதில் முதல் 7 திருமுறைகள் : தேவாரங்கள், 8ம் திருமுறை : திருவாசகம், திருக்கோவையார், ஒன்பதாம் திருமுறை : திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பத்தாம் திருமுறை : திருமந்திரம், 11ம் திருமுறை : பன்னிருவர் அருளிய 40 நூல்கள், 12ம் திருமுறை : சேக்கிழாரின் பெரியபுராணம் ஆகும். இவை அனைத்திலுமே அன்புநெறி பேசப்படுகிறது.

தேவார திருவாசகத்தில் மட்டும் சுமார் பத்தாயிரம் பாடல்கள் அடங்கியுள்ளன. இவை அனைத்தும் அன்புவழி நின்ற அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் நெக்குருகிப்பாடிய பாடல்களாகும்.

தேவாரங்களில் (அ) காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, (ஆ) அன்புறு சிந்தையர் ஆகி அடியவர் (இ) தாயினும் நல்ல தலைவரென்றடியார், முதலிய நூற்றுக்கணக்கான பாடல்கள் இறைவனை அன்புமயமாகக் காட்டுகின்றன.

திருவாசகத்தில் - (அ) அம்மையே அப்பா, ஒப்பிலாமணியே (ஆ) அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை (இ) அரைசனே அன்பர்க்கு அடியனே முதலிய நூற்றுக் கணக்கான பாடல்கள் அன்புநெறியை எடுத்துக் காட்டுக்கின்றன.

திருவாசகத்தை G. U போப் என்னும் கிறிஸ்தவப் பாதிரியார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதனை **Born Melting Song** எனக்குறிப்பிட்டது இங்கு நினைவு கூரத்தக்கது.

தேவார, திருவாசகம் முதலியன சாதாரண பாடல்கள் அல்ல. அவை ஒவ்வொன்றும் தெய்வத்தின் குரல் என்பதை நாம் உணரவேண்டும். அனுபூதிமான்களான நாயன்மார்கள் அவற்றை வெளிப்படுத்தும் கருவிகளாக மட்டுமே பயன்பட்டனர்.

தவிரவும் இப்பாசுரங்கள் தெய்வபக்தியை வளர்த்து மனித நேயத்தைப் புகட்டி தியாக உணர்வூட்டி அன்புநெறியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்குத் தலைமுறை, தலைமுறையாக உதவி வருகின்றன என்பதையும் நாம் மனம் கொள்ள வேண்டும்.

## 3) திருமூலர் திருமந்திரம் :-

அன்பே சிவம் என்ற தத்துவத்தை அடி நாதமாகக் கொண்டது திருமூலரின் திருமந்திரம் ஆகும். இது பன்னிரு திருமுறைகளில் 10ம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. திருமூலர் ஒரு சித்தர். எனவே சித்தர் பாணியிலேயே திருமந்திரப் பாடல்கள் அமைந்துள்ளன. (30 அத்தியாயங்களில் 3000 பாடல்களைக் கொண்டது இந்நூல்)

பன்னிரு திருமுறைகளில் உள்ள பாடல்கள் அனைத்துமே திருமந்திரங்கள்தான் எனினும் திருமூலர் திருமந்திரத்தில் உள்ள பாடல்கள் மந்திரங்கள் போன்ற சுலோக வடிவில் அமைந்துள்ளன.

(உ-ம்) "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" (270)

இந்நூலில் (அ) அன்புடைமை, (ஆ) அன்பு செய்வாரை அறிவன் சிவன் என அன்பைப் பற்றிய இரு அதிகாரங்கள் இடம்பெறுகின்றன. நூற்பொருளைப் பொறுத்தவரை, திருமந்திரத்துக்கும் திருக்குறளுக்கும் சில ஒற்றுமைகள் உள. அவற்றுள் அன்புநெறியும் ஒன்றாகும்.

"மந்திரம் என்பதற்கு தொல்காப்பியந் தரும் வரைவிலக்கணம் வருமாறு :-
நிறைமொழிமாந்தர் ஆணையிற்கிளர்ந்த மறைமொழிதானே மந்திரம் என்ப"
இச்சூத்திரத்திற்கமைவாகவே திருமந்திரப் பாடல்கள் ஒவ்வொன்றும் அமைந்துள்ளன.

திருமூலரின் வாழ்க்கையே அன்புநெறியை அடிப்படையாகக் கொண்டது. இடையன் ஒருவன் திடீரென்று உயிர் துறக்க திக்குத் தெரியாமல் திகைத்து நின்ற மாடுகளை வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக, இறந்துபோன இடையன் மூலனின் உடலில் புகுந்து, மாடுகளை வழிநடாத்திச் சென்று, பின்னர் தன்னுடல் இல்லாமற் போகவே, வாழ்வில் மூலனாக வாழ்ந்து பின்னர் திருமூலர் ஆனவர் இவர்.

## 4) திருக்குறள் :-

உலகப் பொதுமறையான "திருக்குறள்" ஒரு வாழ்வியல் நூல் என்பதால் இந்து சமய இலக்கியங்களில் அது இடம்பெறவில்லை. ஆனாலும் இந்துக்களின் வாழ்வியலை நெறிப்படுத்துவதில் சமய இலக்கியங்களையும் விட அதிக அளவில் பங்களிப்புச் செய்வது "திருக்குறள்" என்றால் மிகையாகாது.

இந்நூலில் 'அன்புடைமை' ஒரு தனி அத்தியாயமாக இருந்தபோதும், நூல் முழுவதிலும் அன்புநெறி பற்றிப் பேசப்படுகிறது. ஒரு சில வருமாறு.

(அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

(ஆ) அன்பின் வழியது உயிர்நிலை, அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

(இ) அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.

(ஈ) அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

இவ்வாறு இந்து சமயத்தில் அன்புநெறி மலர்வதற்கு ஆதார சுருதியாக அமைந்தது திருக்குறள் எனலாம். திருக்குறளில் சொல்லப்படும் தத்துவங்கள் / கோட்பாடுகள் / கருத்துக்கள் பல திருமூலரின் திருமந்திரத்தில் எதிரொலிப்பதைக் காணலாம்.

சைவ சித்தாந்த இலக்கியங்களில் முக்கியமானதாகக் கருதப்படும் "திருவருட்பயன்" நூலின் செய்யுட்கள் திருக்குறள் செய்யுட்களின் வடிவில், குறட்பாவாக அமைந்திருப்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

133 அதிகாரங்களில் 1330 குறள்களைக் கொண்ட இந்நூல், ஆங்கிலம் உட்படப் பல பிற மொழிகளில் பெயர்க்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்து சமயத்தில் "பகவத்கீதை", "திருக்குறள்" ஆகிய இரண்டும் அன்பு நெறியின் பாற்பட்ட இரு முக்கிய நூல்களாகும்.

## 5) பகவத் கீதை :-

மகாபாரதம் என்னும் இதிகாசத்தில் இடம்பெறும் ஒரு கிளைக்கதையான பகவத் கீதை, இந்து சமயத்தின் விஞ்ஞான பூர்வமான தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது. 18 அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் கடவுள், மனிதன், வாழ்க்கை பற்றிய உண்மைகளை விளக்குவதுடன் மனிதன் தர்மநெறியில் (அன்புநெறியில்) வாழவேண்டிய அவசியத்தையும் தர்க்க ரீதியாக எடுத்துக் கூறுகிறது.

மனிதன் உலக ஆசாபாசங்களினால் அலைக்கழிக்கப்படாது மன உறுதியுடன், தன் கடமைகளைச் செய்யவும். அதில் தன்முனைப்பு **(Ego)** இல்லாமல் செயற்படவும், இறை அர்ப்பணமாகச் சகல காரியங்களிலும் ஈடுபடவும் இந்நூல் வழிகாட்டுகிறது. இத்தெளிவு மனிதனை அன்புநெறியில் இட்டுச் செல்கிறது. கர்மயோகம். பக்தியோகம், ஞானயோகம் எனும் படிமுறை வளர்ச்சியில் இந்நூல் மக்களை வழி நடாத்துகிறது.

கீதையின் சாரம் இப்படி அமைகிறது.

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கின்றதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை நீ இழந்தாய், எதற்காக அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அதுவே வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

(பகவான் ஸ்ரீகிருஷ்ணர்)

இது கீதாசாரம் மட்டுமல்ல, அன்புநெறியின் அடிப்படைத் தத்துவமுமாகும்.

## 6) புராண, இதிகாசங்கள் :-

திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், விநாயகர் புராணம் முதலிய பல புராண நூல்களும், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாச நூல்களும் இந்துக்களிடம் உள்ளன.

இவற்றில் வரும் பாத்திரங்கள் மனித விழுமியங்களின் உருவகங்களாக அமைந்திருப்பது கண்கூடு.

இந்துக்கள் மத்தியில் அன்புநெறியை வளர்ப்பதில் இப்புராண இதிகாசங்கள் பெரும் பங்களிப்புச் செய்திருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு இதிகாசங்களும் வெறுமனே ஒரு கதையை மட்டும் சொல்லவில்லை. கதையினூடே மனித விழுமியங்களைப் பொதிந்து தருகின்றன. இவற்றில் வரும் ஒவ்வொரு பாத்திரமும், ஒவ்வொரு மனித விழுமியத்தின் உருவகமாகச் செயற்படுகின்றன.

சில பாத்திரங்கள் தெய்வ மூர்த்தங்களாக்கப்பட்டுள்ளன. இராமாயணத்தில் வரும் ராமன், அனுமான் முதலியோரும் மகாபாரதத்தில் வரும் ஸ்ரீகிருஷ்ணர் திரௌபதி ஆகியோரும் தெய்வ மூர்த்தங்களாக்கப்பட்டுள்ளனர்.

ராமாயணத்தில் வரும் லட்சுமணன், பரதன், ஊர்மிளை, விபீஷணன், குகன் முதலிய பாத்திரங்களும், மகாபாரதத்தில் வரும் தர்மர், கர்ணன், விதுரன் முதலிய பாத்திரங்களும் அன்புநெறியில் நடைபோடுகின்றன.

இப்பாத்திரங்கள் கூத்து, நாடகம் மூலம் இந்துக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்து தலைமுறை தலைமுறையாக மக்களை வழிநடாத்துவது வரலாறு.

பாமர மக்கள் மத்தியில் சமய இலக்கியங்களை விட இதிகாச புராணங்களே அன்புநெறியை வளர்த்து வருகின்றன எனலாம்.

## 7) ஆன்மீகப் பெருமக்கள் :-

இறைவன் அன்பு மயமானவன் என்பதை வெளிப்படுத்த நாயன்மார் வாழ்க்கையில் நடந்த பல அற்புதங்களையும் எடுத்துக் கூறலாம். சில உதாரணங்கள் :-

(அ) கண்ணப்ப நாயனார் சரிதம்
(ஆ) மார்க்கண்டேயர் சரிதம்
(இ) அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் சரிதங்கள்
(ஈ) ஸ்ரீராமகிருஷ்ணர், விவேகானந்தர், சாரதாதேவி
(உ) ஸ்ரீரமணமகரிஷி வாழ்க்கை

ஆன்மீகவாதிகளின் ஆற்றலை அறியாதவர்கள் இவற்றைக் கட்டுக்கதை எனக் கூறுவர். ஆனால் அன்று மட்டுமல்ல இன்றும் கூட ஆத்ம ஞானிகள் அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டேயிருக்கின்றனர். அதற்கு உதாரணமாக ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், சாரதாதேவியார், ரமணமகரிஷி, அரவிந்தர் முதலியோர் நிகழ்த்திய அற்புதங்களைக் கூறலாம். இன்றைய விஞ்ஞான உலகில் ஆன்மீக சக்தியால் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்கின்றன. இவை அன்புநெறியில் மக்களை வழிநடாத்துகின்றன.

விஞ்ஞானத்தில் ஊறித்திளைத்த மேற்குலக நாடுகளில் சுவாமி விவேகானந்தர் புகுந்து இந்து சமயத்தின் தத்துவங்களை விளக்கி, அன்புநெறியில் மக்களை வழி நடாத்துவதற்கு வழிவகுத்தது அவருடைய ஆத்மீக பலம் என்பதை யார்தான் மறுக்க முடியும்.?

இந்து சமயத்தின் அன்புநெறிக்கு, ஆன்மீகமே அடித்தளமாக உள்ளது என்பது வரலாறு. மனிதனை உலோகாயதமான சிந்தனைகளிலிருந்து விடுவித்து, ஆத்மீகப் பாதைக்கு இட்டுச் செல்வது அன்புநெறி. எனவே அன்புநெறியின் அடுத்தபடி ஆன்மீக நெறியாகின்றது. ஆன்மீக நெறியில் நின்று இறைவனுடன் இரண்டறக் கலப்பதை இலக்காகக் கொண்டதே இந்து சமயம்.

## 8) நடைமுறை வாழ்க்கையில் அன்புநெறி :-

அன்புநெறி பற்றிச் சமய இலக்கியங்களும் சமூக இலக்கியங்களும் நிறையவே எடுத்துக் கூறுகின்றன. இவற்றைப்பற்றிப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் நம்மிடையே ஏராளமான அறிஞர் பெருமக்களும் இருக்கிறார்கள்.

ஆனால் இந்த அன்புநெறியை வாழ்க்கையில் கடைப்பிடிப்போர் எத்தனை பேர்? விரல்விட்டு எண்ணிவிடலாம்.

எனவே நமது நடைமுறை வாழ்க்கையில் அன்புநெறியை எவ்வாறு கடைப்பிடிக்கலாம் என்பதை அறிதல் அவசியம். வாழு, வாழவிடு என்ற கொள்கையின் அடிப்படையில் அன்புநெறி என்பது தர்மநெறி ஆகும்.

ஒரு குடும்பத்தில் தாய், தந்தை, மக்கள், சகோதரர்கள் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவது இயல்பானது. ஆனால் அயலவர்கள் மீதும் அன்பு செலுத்த நாம் பழகிக் கொள்ள வேண்டும். பாரபட்சம் இல்லாது தர்மநெறியில் நின்று அனைவரையும் அரவணைத்துச் செல்வது அவசியமாகும்.

தியாக உணர்வு, தர்ம சிந்தை, இறைபக்தி ஆகியவற்றின் மூலமே இது சாத்தியமாகும். நாம் அன்புநெறியில் நடக்கிறோமா என்பதை எப்படி அறிந்து கொள்ளலாம்? நமது வாழ்க்கையில் நிம்மதியும் மன நிறைவும் ஏற்படுவதைக் கொண்டு இதை அறியலாம்.

உள்ளம் நல்லதானால் மண்ணும் பொன்னாகும் என்பது பொன்மொழி. விட்டுக் கொடுத்தல், புரிந்துணர்வு, ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் ஏற்படும் மனநிறைவும் சந்தோஷமும் ஈடுஇணையற்றது. வாழ்க்கையில் இவற்றைக் கடைப்பிடிப்பதே அன்புநெறியின் அடிப்படையாகும்.

வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம்
உள்ளத் தனைய உயர்வு (குறள்)

அன்புநெறியைக் கடைப்பிடிப்பதன் மூலம் இதன் உண்மையை நமது வாழ்வில் நிதர்சனமாகக் காணலாம்.

உ

# தமிழ் முனிவர்களும் வேதங்களும்

நா. மகாலிங்கம்

தமிழைப் பொறுத்தவரையில் கூடத் தொல்காப்பிய காலத்துக்கு முன்பு சம்ஸ்கிருதத்தைப் போலத் தமிழுக்கும் 51 எழுத்துக்கள் தாம் இருந்தன.

இதைவிட இன்னொரு முக்கியமான அம்சம். 'வேதங்களின் தாயகத்தைக் கோதாவரி, காவேரி நதிக்கரைக்களில்தான் தேட வேண்டும்' என்று புணேயைச் சேர்ந்த அறிஞர் எல். எஸ். வாகங்கர் கூறியிருக்கிறார்.

ஒரு காலத்தில் சம்ஸ்கிருத மொழியும் தென்னிந்திய மொழிகளும் பொதுவாகக் கிரந்த வரிவடிவ எழுத்துக்களைக் கொண்டிருந்தன. பிற்காலத்தில் ஜைன மதச் செல்வாக்கின் காரணமாகத் தமிழ் எழுத்துக்கள் மட்டுமே மாற்றம் பெற்றன.

சில காலத்துக்கு முன்பு பெங்களூரில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் அறிஞர் எல். எஸ். வாகங்கரைச் சந்தித்தேன். புணேயைச் சேர்ந்த அவர் சிறப்பான மொழி எழுத்து ஆராய்ச்சி வல்லுநர்.

"வேதத்தின் உண்மையான தாயகத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் காவிரிக் கரையில்தான் தேடவேண்டும்." என்று பாரிஸ் மாநகர அறிஞர் வட்டாரங்களில் கூறப்பட்டது. இது பற்றி நானே நேரில் கேள்விப்பட்டேன்! என்று திரு வாகங்கர் என்னிடம் தெரிவித்தார்.

வேதத்தில் காணப்படும் பல சொற்கள் பதப் பிரயோகங்கள் இவை தமிழ் மூலத்தைக் கொண்டவையாக விளங்குவதை வாகங்கர் தம் நூலில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ் மூலம் கொண்ட இந்தச் சொற்கள் வேதத்தின் அடிப்படையான சொற்களாக இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

திரு. எல். எஸ். வாகங்கர் தெரிவித்துள்ள வலுவான வாதங்களைச் சுருக்கித் தருவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

வேதத்தின் சுலோகங்களை இயற்றியவர்கள் வடஇந்தியாவைச் சேர்ந்த மகரிஷிகள்தாம் என்று பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் வேதங்களை உருவாக்கியவர்கள் தென்னாட்டைச் சேர்ந்த மகரிஷிகள் என்பதற்கு வேதத்திலேயே சான்று இருக்கிறது. வேதத்தை வகுத்தவர்களில் ஐந்து பெரும் மகரிஷிகள் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள்.

1) விஸ்வாமித்ர வம்சம்
2) பாரத்வாஜ வம்சம்
3) கண்வ ரிஷி வம்சம்
4) அத்ரி மகரிஷி வம்சம்
5) ஆங்கிரஸ வம்சம்

இப்படியாக ஆராய்ந்தால் இந்த வம்சாவளியைச் சேர்ந்த ரிஷிகள் பட்டியலைக் காணலாம்.

1) விஸ்வாமித்ர வம்சத்தைச் சேர்ந்த ரிஷிகள்:
   கவுசிகர், காத்ஹி, ரிஷபர், தேராவதர், சுநாகர், க்ஷேபர்.
2) பாரத்வாஜ வம்சத்தைச் சேர்ந்த ரிஷிகள்:
   ஆங்கிரசர், தீர்க்கதமஸ், பிருகஸ்பதி..

3) கண்வ ரிஷி வழியில் வந்தவர்கள்:

கண்வகோரா, மேதாதிதி, கன்வாஸ், பிரகாத், பார்கவ, கலி, ஹர்யாத், சோபாரி, கவுதமர், ராஹுகணா, ஜமதக்னி, நேமா, கார்க், பாயு.

4) அத்ரி மகரிஷி வம்சாவ்ளியில் வந்தவர்கள்:

பஹுமா, புதா, இஷா, கயா, சுதாம்பரா, சாசா, அர்ச்சனராசா, பவுரா, அஸ்வாஸ்யூ, சஹுதவாயு, ஊரு, சக்ரி, ஸ்வாதி, பிரதிரதா, பாப்ரு, கவுதி, அபாலா, விஸ்வவாஹனா.

5) ஆங்கிரஸ வழியில் வந்தவர்கள்:

குத்சா, விருபா, கோல்பாவனா.

இந்த ஐந்து வம்சாவளியின் வழிவந்த மகரிஷிகள்தாம் வேதங்களை வகுப்பதில் அசைக்க முடியாத பலமான பங்கை ஆற்றியிருக்கிறார்கள்.

இப்படிப் பார்க்கும்போது வடஇந்திய முனிவர்களை விடத் தென்இந்திய மகரிஷிகள் தாம் வேதங்களை வகுப்பதில் அதிகப் பங்கு ஆற்றியிருக்கிறார்கள் என்பதைக் தெரிந்து கொள்ள முடியும்.

இங்கே குறிப்பிடப்பட்ட முனிவர்களும் மகரிஷிகளும் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் தாம் என்று எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

வேதங்களை வகுத்த தென்இந்திய முனிவர்கள் பல இடங்களில் 'ல' என்ற ஒலி தரக்கூடிய எழுத்தைக் கையாண்டுள்ளனர். 'ல' என்னும் சப்தம் வரக்கூடிய இந்த 'ல' என்னும் எழுத்து பாணினி வகுத்த இலக்கணக் காலத்தில் சம்ஸ்கிருத மொழியில் வழங்கப்படவில்லை.

அஸ்ஸாம், வங்காளம், பீகார், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், காஷ்மீர், ஆப்கானிஸ்தான், பாரசீகம் முதலிய பகுதிகளில் வழங்கிய பிராகிருத மொழியிலும் இந்தச் சப்தம் இல்லை.

ஆனால் சிந்தி, மலாரி, குஜராத்தி, ஓரியா, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளில் இந்த 'ல' என்னும் எழுத்து இப்போதும் உபயோகத்தில் இருக்கிறது.

எனவே மேலே பிற்பகுதியில் குறிப்பிட்ட மொழிகளுக்கு ஒரு பொதுவான அடிப்படை இருப்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தமிழில் இந்த 'ல' என்னும் எழுத்து தொடக்கக் காலத்திலேயே வழக்கில் இருந்துள்ளது. இதிலிருந்தே முன்பு சொன்ன மகரிஷிகள் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

(நன்றி: கலைமகள் தீபாவளி மலர் 1995)



# உலக நாடுகளில் இந்துசமய ஆலயங்களின் சிறப்பு!

**துன்னையூர்ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்**

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்" எனும் புராணக் கூற்றினை மெய்யாக்கும் பொருட்டு இன்று உலகளாவிய ரீதியில் எம்மவர்கள் வாழுகின்ற நாடுகளில் எல்லாம் எமது சமய நெறி ஓங்கி வளர்கிறது. சமய அனுஷ்டான அடையாளங்களுடன் வாழக்கூடிய ஒரு சூழ்நிலை எல்லா நாடுகளிலும் மிகப் பரவலாக அமைந்துள்ளது.

ஆரம்ப காலங்களில் எம்மவர்கள் தாம் வாழுகின்ற இல்லங்களிலே வெள்ளிக்கிழமை மற்றும் விஷேட நாட்களில் வழிபாடு ஆற்றி சமய நெறியை பேணி வந்தனர். தற்போது அவரவர் வாழுகின்ற நாட்டின் அனுசரணையோடு **Hindu Temple Road** எனும் விளம்பரப் பாதையோடு பிரமாண்டமாக அமைந்திருக்கும் ஆலயங்களைப் பார்க்கும் போது உண்மையிலேயே எமது உள்ளம் பூரித்துப் போகின்றது.

தேன் மதுரத் தமிழ் சார்ந்த எம் சமய நெறி இப்பாரெல்லாம் பரவி நிற்கின்ற சிறப்புத் தனித்தன்மையானதே. அந்த வகையில் லண்டன், ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் சுற்றுப் பயணத்தின் போது நாம் கண்ட எமது சமய ஆலயங்களின் தனிச் சிறப்புக்கள் ஏராளம்.

சீமைப்பட்டணம் என எம்முன்னோர் கூறி மகிழும் லண்டன் மாநகரை எடுத்துக் கொண்டால், அங்கே ஆலயங்களின் வளர்ச்சி சற்று அதிகம் என்றே கூற வேண்டும். விநாயகர், சிவன், அம்பாள், முருகன், விஷ்ணு என அனைத்துத் தெய்வ வழிபாட்டுத் தலங்களும் மிகமிகச் சிறப்பாக அமைந்து விளங்குகின்றது எனலாம்.

விநாயகர் ஆலயம் என நோக்கும் போது முதன்மை, பழைமை வாய்ந்த ஆலயமாய் விம்பிள்டன் பகுதியில் கணபதி ஆலயம் மற்றும் வோல்த்தம்ஸ்ரோ எனும் இடத்திலே ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில், குறோய்டன் பகுதியில் ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம், ஹரோ பகுதியில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் என நான்கு விநாயகர் ஆலயங்கள் அமைந்துள்ளன.

அடுத்து பரம்பொருளாம் சிவபெருமானுக்கு லண்டனிலே லூவிசம் எனும் பகுதியில் ஒரு சிவன் கோவிலும் வெம்பிளி எனும் இடத்திலே ஈழ பதீஸ்வரர் எனும் கோவிலுமாய் இரண்டு சிவன் ஆலயங்களும் உள்ளன.

அம்மன் ஆலயங்கள் என பார்க்கும் போது லண்டனில் ஈஸ்ராம் எனும் பகுதியில் ஸ்ரீலக்ஷ்மி கோவிலும் ஈலிங் எனும் இடத்தினிலே ஸ்ரீ கனக துர்க்கை அம்பாள் ஆலயமும் ஸ்ரோன்லி எனும் இடத்திலே ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலும் ரூட்டிங் என்னும் இடத்தினிலே ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலும் மற்றும் வோல்த் தம்ஸ்ரோ என்னும் இடத்தினிலே மேருபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலும் உள்ளன.

மற்றும் முருகன் ஆலயங்கள் என ஆர்ச்டே எனும் இடத்தில் ஒரு முருகன் கோவிலும் ஈஸ்ட்ஹாம், குறோய்டன் ஆகிய பகுதிகளில் முருகன் ஆலயங்களும் உள்ளன. லுவிசம் பகுதியில் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெறும் மங்கள பதி ஸ்ரீ வேல் முருகன் கோவிலும் உண்டு.

வேல்ஸ் எனும் இடத்தினிலே கதிர்காம முருகன் ஆலய பாணியில் அமைந்துள்ளது, ஒரு சிறப்பான முருகன் கோவில். இங்கு நடைபெறும் பூஜை முறைகள், பஜனைகள் பலவற்றிலும் ஆங்கிலேய பக்தர்கள் கலந்து சிறப்பிப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். பேர்மிங்ஹாம் என்னும் பகுதியில் வட இந்திய பாணியில் ஒரு பெரிய விஷ்ணு கோவில் உண்டு. அடுத்து எர்ச்வே எனும் இடத்தினிலே ஸ்ரீ ஆஞ்சநேயர் கோவில் ஒன்றும் உண்டு. அதே இடத்தினில் தற்போது ஒரு காளி அம்பாள் ஆலயமும் ஆரம்பிக்கப்பட்டு பூஜைகள் நடைபெறுகின்றன. மொத்தமாக **19** இந்து ஆலயங்கள் லண்டன் மாநகரினிலே ஆங்காங்கே உள்ளன.

லண்டனில் பரந்து வாழும் எம் தமிழினத்துக்கு இவ்வாலயங்கள் ஆன்மீக திருப்தி தருவதாக அமைகிறது. இவற்றினிலே சில ஆலயங்கள் இட வசதிகளுக்கு ஏற்ப சிறு ஆலயங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் ஆலய விதிமுறைகளுக்கு அமைய பெரும்பாலான ஆலயங்கள் கல்லினாலே அழகுறசிறப்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றினிலே சைவ சமயத்தையும் தமிழ் சமய கலாசார விழுமியங்களையும் கட்டிக் காத்து கடந்த இருபத்தி ஐந்து ஆண்டுகளாக சமய சமூக சேவையாற்றும் சைவ முன்னேற்றச் சங்கம் எனும் அமைப்பையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

அடுத்து தமிழ் மொழியைப் பரப்பி நிற்கும் பத்திரிகைத் துறையினிலே புதினம், அஞ்சல், வடலி, அருவி போன்ற தமிழ்ப் பதிதிரிகைகள் தமிழ் மொழியின் சிறப்பை நிதர்சனப்படுத்தி வருகின்றன. அதைவிட ஒருபடி மேலாக ஆன்மீக சஞ்சிகையாக சைவ முன்னேற்றச் சங்கத்தினரின் கலசம் எனும் இதழ் கடந்த பத்து ஆண்டுகளாய் அளப்பரிய சேவை ஆற்றி வருகின்றது.

## ஜேர்மனி

ஜேர்மனி நாட்டினிலே எமது சமய நிகழ்வுகள் சிறப்பாகவே நல்ல முறையில் கைக்கொள்ளப் பட்டு வருகின்றன. இங்கும் சுமார் **12** இந்து ஆலயங்கள் அமைந்துள்ளன. ஆனால் இவைகள் பல தூர இடைவெளியில் அமைந்து காணப்படுகின்றன.

இவற்றுக்கு எல்லாம் மகுடம் வைத்தாற் போல் ஜேர்மனி ஹம் எனும் இடத்தினிலே ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம் மிகவும் பிரமாண்டமான முறையிலே அமைக்கப்பட்டு அழகாக காட்சி தருகின்றது. இந்த ஆலயம் அழகிய பஞ்சதள ராஜகோபுரத்துடன் கருவறையிலே ஸ்ரீ காமாட்சி அம்மனும், விநாயகர், முருகன், நாராயணர், நவக்கிரஹம், வைரவர் என பரிவார மூர்த்திகளோடு மிகவும் அழகாக காட்சி தருகின்றது.

இவ்வாலயம் ஐரோப்பிய நாடுகளில் முதன்மையானதாக உள்ளது. பிரதான பாதையூடாக சென்று கொண்டு இருக்கும்போது கம்பீரமாக கோபுரம் காட்சி தருகின்றது. அதுமட்டுமன்றி ஜேர்மனி

வீதிகளை நிர்ணயம் செய்து பெயர்ப் பலகை சூடும் மாநகரத்தினரால் **Hindu Temple Road** என வீதியின் பெயர் சூட்டப்பட்டிருப்பது நம் தமிழினத்திற்கு பெருமை தருகிறது.

## பிரான்ஸ்

நெடுங்காலமாகவே எம் இனத்தவர் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாடு பிரான்ஸ் என்பது அங்கு எம்மவர்களால் அமைக்கப்பட்டிருக்கும் வியாபார நிலையங்கள் மூலம் நன்கு புலப்படுகின்றது. இங்கு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் மற்றும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஸ்ரீ சிவன் அலயம் என்பன அமைந்துள்ளன.

இவற்றிலே ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் சிறிய ஒரு இடத்திலே இருந்தாலும் பல விதமான நிறைந்த அடியார் கூட்டத்தினை தன்னகத்தே கொண்டுள்ளது. அதற்குச் சான்றாய், அங்கு நடைபெறும் தேர்த்திருவிழா அங்கு வாழும் எம் இன மக்களின் ஆளுமையை சுட்டி நிற்கும். ஸ்ரீ மாணிக்க விநாயகர் மிகச் சிறிய இடத்தினிலே அமர்ந்து மிக பெரிய கீர்த்தி உடையவராக விளங்குகின்றார்.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் மிகவும் அழகாக நேர்த்தியாக அமைந்துள்ளது. விநாயகர், அம்பாள், முருகன், நடராஜர், நவக்கிரஹம் என பரிவார ஆலயம் சூழ கருவறையிலே ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இங்கும் நிறைந்த அடியார் கூட்டம் ஆலயத்தில் வழிபாடு செய்து ஆன்ம திருப்தி அடைகின்றது.

## நெதர்லாந்து (கொலண்ட்)

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சிறப்பை நாம் காணலாம். அந்த வகையிலே நல்ல இயற்கை அழகைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் அற்புத நாடு கொலண்ட்! இங்கும் விநாயகர், முருகன், அம்மன் ஆலயங்கள் உள்ளன.

டென்கில்லடர் எனும் இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயம் அந்நாட்டு அரசாங்கத்திடம் இருந்தே சொந்தமாக நிலப்பரப்பைக் கொள்வனவு செய்துள்ளது. ஆகம முறைகளுக்கு அமைய மிகப் பெரிய ஆலயமாய் ராஜகோபுரத்துடன் அமைக்க எண்ணம் பூண்டு அதற்குரிய திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

நெதர்லாந்து வாழ் சைவ மக்களும் தம்மாலான நிதி உதவி வழங்கியும் சரீர பாடுபட்டும் நல்லாதரவை வழங்கி வருகின்றனர்.

## அவுஸ்திரேலியா

அழகிய திருநாடாய் எழிற்கோலம் பூண்டு நிற்கும். அவுஸ்திரேலியா மாநகரின் நான்கு பக்கமும் கடல் சூழ்ந்து நிற்க ,நடுவே அவுஸ்திரேலியா நாடு மிளிர்கின்றது.

சிட்னி, மெல்போன், கன்பரா, பேர்த் என எல்லா இடங்களிலும் எம்மவர்கள் வாழ்ந்து வருகின்றனர். எல்லா இடங்களையும் சேர்த்து எண்ணிக்கையில் பத்து ஆலயங்கள் ஆவுஸ்திரேலியாவில் உள்ளன.

சிட்னி நகரில் பிரதான இரு வீதிகளுக்கு நடுவே சிட்னி முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் மிக சிறப்பான முறையிலே நித்திய பூஜைகளும் மஹோற்சவம் மற்றும் விரத விழாக்கள் என்பனவும் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றன. பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் ஆலயத்திற்கு வருவதைக் காணலாம்.

சிட்னி நகரில் இதைவிட ஒரு ஐய்ப்பன் ஆலயமும் அமைப்பதற்கு ஐயப்ப அடியார்கள் முயற்சி எடுத்து வருகின்றனர். அத்தோடு துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அத்திவாரம் போடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மெல்போன் நகரில் ஸ்ரீ வக்ரதுண்ட விநாயகர் ஆலயம், ஸ்ரீ சிவா விஷ்ணு ஆலயம் மற்றும் ஸ்ரீ முருகன் ஆலயம் என மூன்று ஆலயங்கள் உள்ளன. தற்போது அம்மன் ஆலயம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இதில் ஸ்ரீ வக்ரதுண்ட விநாயகர் ஆலயம் காஞ்சிப் பெரியவரால் பூஜிக்கப்பட்ட விநாயக விக்கிரஹம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ சிவா விஷ்ணு கோவில் மிகப் பிரமாண்டமானது. அவுஸ்திரேலியாவில் உள்ள ஆலயங்களிலேயே மிகப் பெரியது மெல்போன் சிவா விஷ்ணு ஆலயமே. அடுத்தது சிட்னி சிவா விஷ்ணு கோவில்.

கன்பரா எனும் நகரில் இரண்டு ஆலயங்கள் அமைந்துள்ளன. அருகருகே அமைந்துள்ள ஆலயங்களுள் ஒன்று சிவா விஷ்ணு மந்திர்.

அடுத்தது ஆறுபடை முருகன் கோவில். இந்த ஆலயம் மிகவும் அழகாக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மரபிலே இவ்வாலயம் அமைந்துள்ளது.

பேர்த் நகரில் ஒரு சிவன் கோவிலும் ஸ்ரீ பால முருகன் ஆலயமும் அமைந்துள்ளன. இதில் ஸ்ரீ பால முருகன் ஆலயம் தற்போத புனருத்தாரண பணிகள் நடைபெற்று வருகின்றது. அவுஸ்திரேலியா நாட்டில் அதிக இயற்கை வள விருட்சங்கள் உண்டு. அனேகமான ஆலயங்கள் எமது யாழ்ப்பாண கலாசாரத்தைப் பேணி காத்து நிற்கின்றன.



உ

# மஹா கும்பாபிஷேக கிரியா முறைகளும் விளக்கமும்

*கிரியா கலாமணி, சிவாகம கிரியா தத்துவநிதி*
**சிவப்பிரம்மஸ்ரீ ச. சோமஸ்கந்தக் குருக்கள்**
*தீட்ஷாநாமம் - அகோர சிவாச்சாரியர்*
*வேரக்கேணி கந்தசுவாமி கோவில் பிரதமகுரு*

இப் பூ மண்டலத்தில் அநாதி மலமுத்த சித்துவாகிய பரம்பொருள் கற்பனை கடந்த சோதியாகினும், அநாதி மலமுத்த பெத்தர்களாகிய ஆன்மாக்கள் வணங்கி தனு கரண புவன போகங்களை அடைவதற்கு ஆலய வழிபாடு மிகவும் அவசியமாகின்றது. அதற்கு அமைய வேத சிவாகம சிற்ப சாஸ்திர திருக்கோயில் நிர்மாணம் பெற்று மூலாலயத்தில் நிறுவப்படும் திருவுருவில் கருணையே உருவாகும்படி பிரார்த்தித்து அபிஷேகித்தலே மஹா கும்பாபிஷேகம் ஆகும்.

கும்பாபிஷேகம் என்பது - பிரதிஷ்டை, திருக்குட திருமஞ்சன விழா, குடநன்னீராட்டு விழா என்று கூறப்படும்.

இது நான்கு வகைப்படும். அவையாவன.

1) ஆவர்த்தம்
2) அனாவர்த்தம்
3) புனராவர்த்தம்
4) அந்தரீதம்

## ஆவர்த்தம் :

புதிதான ஓர் இடத்தில் திருவுருவ மூர்த்தியை வைத்துப் பாலப் பிரதிஷ்டை செய்து பூஜித்துப் புதிதாகக் கோயில் கட்டி பாலாலய மூர்த்தியை கும்பத்தில் ஆகர்ஷித்து பின்னர் மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தியில் சேர்த்து அபிஷேகம் செய்வதாகும்.

## அனாவர்த்தம் :

வெகு காலத்திற்கு முன் கோயில் கட்டி பூஜை இல்லாமல் அழிய விட்டு, சீர் குலைத்து, முன்போல் அவைகளைத் திருத்தி ஆலயம் கற்பித்து கும்பாபிஷேகம் செய்தலாகும்.

## புனராவர்த்தம் :

கர்ப்பக்கிரக, ஆலய கட்டிடங்கள், விமானம், பிரகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும், அஷ்ட பஞ்தனத்தில் பழுது உண்டானாலும், விமானத்திலுள்ள விக்கிரகங்களில் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்து இருந்தாலும், பாலாலயம் செய்து ஆலயத்தைப் புதிப்பித்து, மூலஸ்தானத்தை பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்யலாம்.

## அந்தரீதம் :

ஆலயத்தில் சோரன், கண்டானவன், நாய், பன்றி முதலியன உட்சென்றாலும் தீண்டினாலும், மூர்த்தியில் அங்கம், பிரத்தியங்கம், உபாங்கம், போன்றவைகளில் ஏதாவது பழுது ஏற்பட்டாலும் அவைகளைத் திருத்தி உடனே செய்வதாகும். இதில் அந்தரீதப் பிரதிஷ்டைக்கு நாள், நட்சத்திரம் பார்க்கத் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்வதற்கு அனுக்ஞை, தனபூஜை, திரவியவிபாகம், ஆசாரியர்களை ஸ்ரீ கணபதி ஹோமம், கிராம சாந்தி, பேரிதாடனம், பிரவேசபலிதிசா ஹோமம், இரட்சோக்கின ஹோமம், வாஸ்தி சாந்தி, ஆயுஷகர்ம நவக்கிரகமகம், கோபூஜை, விப்பிர உச்சிஷ்டம், மிருத்சங்கிரண அங்குரார்ப்பணம், ஆசாரிய இரட்சாபந்தனம், யாகசாலாதான்யாதிதாபனம், சூரிய காந்தாக்கினி, சங்கிரகணம், ருக்கவிர் சாதகதிவரண பிரசன்னாபிஷேகம், பிரசன்ன பூஜை, கும்பஸ்தானம், கலாகர்ஷணம்யாக பூஜை, ஹோமம், பூர்ணகுதி, நூதன மூர்த்திகளுக்கு ரத்தின நியாநயனோன் மீலனம், தான்யாதிவாசம், ஜலாதிவாசம், பதவின் நியாசதூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், இரத்தினஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்பஸ்தாபனம், அஷ்ட பந்தனம், தைலாப்பதியங்கம், விம்பசுத்தி, விம்பரக்ஷபந்தனம், பூர்வசந்தானம், விஷேட திரவிய ஹோமம், ஸ்பரிசாகுதி, சுரேத்திர வந்தனம், ஆசார்ய பூஜை, அக்கினி யோசனம், மஹாபூர்ணதீபாராதனை, வேத தேவார ஹோமம், அந்தர் பலி, பெகிர் பலி, ஸ்துகும்பாபிஷேகம், மஹா கும்பாபிஷேகம், பரிவார தேவர், குட்டாபிஷேக பிரயாசித்த ஹோமம், ஸ்திராகுதி ஆசாரிய உற்சவம், தச தர்சனம், மகா கும்பாபிஷேகம், எஜமான் அபிஷேகம், எஜமான் பலப்பீதி, மஹா ஆசீர்வாதம் முதலியன.

## விநாயகர் வழிபாடு

விநாயகரை முதலில் தேங்காய், பழம், கற்கண்டு, நெல், மலர் முதலிய நிவேதனங்களால் வழிபாடு செய்தல்.

## பிராமண அனுக்ஞை

பிராமண உத்தமர்களிடத்திலும் சிவாச்சாரியார்களிடத்திலும் யான் எடுத்த இந்தக் கும்பாபிஷேகம் சுபகரமாக நிறைவு பெற வேண்டுதல் செய்தல் ஆகும்.

## தேவ அனுக்ஞை

பரம்பொருள் இடத்தில் யான் குறித்த காலத்தில் இந்த மகத்துவமான கும்பாபிஷேகம் சுபமங்களமாக செய்வதற்கு உத்தரவு தரவேண்டும் என வணங்கி உத்தரவு கேட்பதாகும்.

## தன பூஜை

தர்ம புண்ணிய வசத்தால் சேகரித்த திரவியத்தை பூஜை செய்தலாகும்.

## திரவிய சுத்தி

நெல் முதலிய தானியங்கள் ஓமத்திரவிய அபிஷேகத்திரவிய வகைகள், இரத்தின வகைகள் வஸ்திரங்கள் சமித்து வகைகள் முதலானவற்றை பின்னால் எடுத்து உதவுதல்.

## திரவிய விபாகம்

பூஜை செய்த திரவியத்தை ஒரு பாகம் ஆலய கட்டிட வேலைக்கு, இரண்டாவது பாகம் நித்திய பூஜை, மாதாந்த விஷேட பூஜை, உற்சவம், ஆபரணாகுதி, நித்திய, காமியாதி பூஜைகளுக்கும் வாங்குதல், மூன்றாவது பாகத்தை பதினொரு பாகம் செய்தல் வேண்டும். அவை யாகம் காட்டுதல் முதலானவற்றுக்கு 3 பாகம்.

| | |
|---|---|
| கும்பாபிஷேகத் திரவியத்திற்கு | ஒரு பாகம் |
| சிவாச்சாரியார் தெட்சணை | இரண்டு பாகம் |
| உதவி சிவாச்சாரியார் தெட்சணை | ஒரு பாகம் |
| சிவாச்சாரிய அந்தணர் போசனத்திற்கு | இரண்டு பாகம் |
| தானம் வேதபராயணம் இவற்றிற்கு | இரண்டு பாகம் |

மண்டலாபிஷேகத்திற்கு நான்காவது பாகம் என மேற்கூறிய பாகங்களாகப் பிரித்து செலவு செய்து சிறப்பாக நடத்துவீர்களாக என்று கூறி முகூர்த்தப்பத்திரிகையும் தர்மகத்தா கையில் கொடுத்தல் வேண்டும்.

## ஆச்சாரிய வர்ணம்

பிரதான குருவையும், சர்வ போதகரையும் சர்வசாதகரையும் வணங்கி இத்திரவியத்தைக் கொண்டு மஹா கும்பாபிஷேகம் செய்து இறையருளைப் பெற்றுத்தர வேண்டும் என்று எஜமான் குருவை வழிபடுதல் ஆகும்.

## கணபதி ஹோமம்

எமது சமயத்தில் முதல் விநாயகரை வழிபாடு செய்தல் வேண்டும். செய்யா விடில் அவர்களின் காரியத்தை இடையூறு செய் என்ற பரம்பொருள் கட்டளை என்பது 'என்னரேயாயினும்' என்று திருவிளையாடற்புராணம் கூறுகின்றது. ஆகவே இங்கு தொடங்கிய மகா கும்பாபிஷேகம் இடையூறு இன்றி நிறைவேற விநாயகர் பெருமானுக்கு ஹோமம் அபிஷேக பூஜை நிகழ்த்தி வழிபடுதல்.

## கிராம சாந்தி

கும்பாபிஷேகம் மஹோற்சவம் முதலியவற்றில் இடம்பெறும் கிரியைகளில் கிராம சாந்தி முக்கியமானது. இது ஜீவராசிகளினதும் மக்களினதும் நன்மைகளின் பொருட்டு செய்யப்படும் கிரியை ஆகும். இது ஆலயத்தின் (காவலாளியாக) கிராம அதி தேவதையான வைரவ மூர்த்தியின் மூலமாக அவரது ஆதிக்கத்தின் கீழுள்ள ராட்சதர்களினால் வரும் கேடுகளைத் தவிர்ப்பதற்காக பூஜை ஹோமம் செய்து திருப்திப்படுத்தும் நிகழ்வு. ஆலயத்தில் மேற்கு வீதியில் அல்லது வடக்குத் திக்கிலும் செய்யப்படலாம்.

## பிரவேச பலி

நாங்கள் பிரவேசம் செய்து கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் உள்ள எட்டுத் திசைகளிலும் வசிக்கின்ற இயக்கர், இராட்சதர், பிசாசர், பிரமராட்சதர், பூதர், காளி, சரளி, வைரவர் முதலிய தேவர்கட்கு எட்டுத்திசைகளிலும் மண்டபம் அமைத்து அந்தந்தத் தேவர்களைப் பூஜித்து தருக்கு, இளநீர், தென்னம்பூ, பூசனிக்காய்த்துண்டு, கமுகம்பூ, அன்ன உருண்டை, வடை, பாக்கு, வெற்றிலை, பழம், நெற்பொரி இவைகளை நிவேதித்து பந்தம் குத்தி, அவர்களை முறையே கடல், மலை, வனம், நதி, மயானம் முதலிய இடங்களிற் சென்று சுகமாய் வீற்றிருங்கள் இது மஹா தேவனுடைய ஆணையினாலே இவ்விடத்தில் நீங்கி இந்த ஆலயத்தில் துஷ்ட தேவதைகளினால் இடையூறும் ஏற்படாத வண்ணம் செய்யும் கிரியை ஆகும்.

## திசா ஹோமம்

நான்கு திக்குகள் முறையே பாசுபதாஸ்திரம் , அஹோராஸ்திரம், பிரத்தியங்கிராஸ்திரம், சிவாஸ்திரம் பூஜித்து ஹோமம் செய்து அந்தந்த திக்குகளில் அபிஷேகித்து காவல் செய்யும்படி கட்டளை இடுதலாகும்.

## இரட்சோக்கின ஹோமம்

பிரவேச பலி புறத்தேயிருக்கும் தேவதைகளை அகற்றுவதற்காக செய்யப்படுவது போலவே இரட்சோக்கினம் என்னும் ஹோமம் ஆலயத்தில் உள்ளிருக்கும் துஷ்ட தேவதையான இரட்சோக்கின அசுர இராட்சதர்களின் கெடுதலை நீக்குவதற்காக மூன்று மேடைகள் அமைத்து நடுவில் கும்பம் வைத்து அதில் இரட்சோகின தேவரை பூஜித்து அதன் தென்புறத்தில் வெள்ளை வஸ்திரம் இட்டுதேங்காய் ஒன்று வைத்து வடக்கு பக்கத்தில் சிவப்பு வஸ்திரம் வைத்து அதன் மேல் வாள் ஒன்று வைத்து தேங்காயில் சிவனையும் வாளில் கட்கேசுவரனையும் வாலைச் சுற்றி அத்தாங்காதிசுரர், அஷ்ட வைரவர் முதலிய எண்மரை பூஜித்து காஞ்சுரம் சமித்து, கடுகு, தவிடு, மிளகு தவிபஞ்சதைலத்தினாலும் ஹோமமும் பலி கரண ஹோமம் செய்து அக்கினியைக் கும்பத்தில் ஒடுக்க அந்த கும்ப ஜலத்தால் ஆலயத்தைச் சுற்றி தெளிக்கலாம்.

## ஆயுள் கர்மம்

சிவாச்சாரியர்கள் செய்து கொள்ளும் வபனம் முதல் பத்துவித ஸ்நானமாம்.

## நவக்கிரகமகம்

கும்பாபிஷேகத்தால் உலகத்திற்கு அதிக மழையாலும், மழையின்மையாலும், விரோதிகளாலும், துஷ்டர்களாலும் வரும் துன்பம் நீங்கி எல்லா பிராணிகளின் பயம், நோய், பிணி நீங்கவும் சூரியன் நவக்கிரகங்களை பூஜித்து வணங்கி அந்தந்த தேவர்களுக்குரிய சமித்து, தானிய அன்னம் ஆகியவற்றை ஹோமம் செய்து பூர்ணாகுதி முடித்து தானம் வழங்கி பிரதிஷ்டையின் போதுள்ள கிரியைகள் யாவற்றிலும் ஏற்படும் பல்வேறு லக்கின தோஷங்களையும் நீக்குவதன் பொருட்டே கிரகங்களுக்கு பிரீதி செய்யப்படுகின்றது.

நவக்கிரகமகம் - கும்பாபிஷேகம், உபநயனம், விவாகம், ஆயுட்ஹோமம், சாந்தி, புது வீடு புகுதல் முதலிய காரியங்களில் முதல் இடம் பெறுகின்றது.

## வாஸ்து வாந்தி

பூமியானது அசத்தாக ஜடசம்பந்தம் உள்ளதினால் அதை நீக்கிச் சத் பாவம் உண்டாக்குவதற்கு செய்வது. அசுத்த சொரூபமான பூமியை பாலாக்கினியால் தகித்துப் பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் மூச்சுக்காற்றினால் சோதி ரூபமாக்கிச் சுத்தம் செய்வதாம். நீற்றுப்பூசணிக்காயை பூமியின் வடிவமாகத் தியானித்து அதன் விதைகளை அண்டங்களாக நினைத்து எல்லாவற்றையும் ஹோமம் செய்து பின் பூமிக்கு அதிபதியான பிரமாவின் கட்டளையை பரிசுத்தமானதாக பாவித்தல் வாஸ்து சாந்தி ஆகும். இச்சாந்தி கும்பாபிஷேகம், பாலஸ்தாபனம் யாகமண்டல கர்ப்பணம் கோபுரம், புதிதாக தடாகம், புது வீடு, உற்சவம் போன்ற இடங்களில் அவசியம் செய்ய வேண்டும்.

## கோபூஜை

நம் சமய நெறியிலே பசு தெய்வமாக வணங்கப்படுகின்றது. பசுவின் முகத்தில் பிரம்மாவும் முதுகில் விஷ்ணுவும், வயிற்றில் உருத்திரனும், மூலாதாரத்தில் மகாலக்ஷ்மியும், கொம்பில் தேவர்களும், வால்நுனியில் சர்வதீர்த்தங்களும், உரோமங்களின் அடியில் இருஷிகளும், வியாபித்து இருக்கிறார்கள். நான்கு கால்களும் நான்கு வேதங்களாகப் பூசிக்கப்படுகின்றன. அவ்வாறு பூசிக்கப்பட்ட தெய்வத்தன்மை பொருந்திய பசுவை மூலாலயத்திற்கு அழைத்துச் செல்லுதல் கோவாசம் எனப்படும். கோவாசம் கிருகப்பிரவேசங்களிலும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## விற்பிரபோசனம்

வேதம் அறிந்த பிராமணர், மிருது முதல் சுத்த தத்துவம் வரையுள்ள எல்லாத் தத்துவங்களையும் சுத்தமாக்குகின்றேன். ஹோமம் செய்கிறேன். இது நன்கு சுத்தியடையும் என்று சிதாக்கினியில் ஹோமம் செய்கின்ற பாவனையில் செபித்தலால் அந்த இடம் சுத்தியாகும். அந்த இடத்துக்கு வேறு மண்போட்டுச் சப்த வாரிதி கும்பத்தால் அபிஷேகம் செய்தலாம்.

## அங்குரார்ப்பணம்

முளையிடுதல். இந்தப் பூமியானது முன்னர் அமிர்தத்தால் நனைத்து சுத்தமானது ஆகையால் உலகச் சேமத்தின் பொருட்டு நெல் முதலிய நவதானியங்களை பாலில் ஊற்றிவிட்டு 'ஓசதி சூக்தம்' செபித்துச் சந்திரனை வணங்கி முளையிடுதலாம்.

## இரக்ஷா பந்தனம்

காப்புக் கட்டுதல், குழந்தையின் வருத்தம் தீர மாதா மருந்துண்ணல் போல உலக சேமத்திற்காக ஆசாரியார் எடுத்த காரியம் செவ்வனே நிறைவேற இடையூறுகள் தடுக்கா வண்ணம் இறையின் கர்ப்ப நாடியில் நின்று உண்டான நாகராசனை பூஜித்துக் கையில் கங்கணம் கட்டுதல்.

## யாகசாலா தானியாதி ஸ்தாபனம்

யாக சாலையில் சப்த தாதுக்கள் மயமான சப்த தானியங்களைப் பரப்புதல்.

## சூரியகாந்தி சங்கிரகணம்

ஞானாக்கினிக்கு சூரிய காந்தத்தில் இருந்து அக்கினியை எடுத்தல்.

## ருத்வித் சாதகாதி வரணம்

பிரதான குண்டத்தைத் தவிர ஏனைய குண்டங்களுக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் ஏற்ற சிவாச்சாரியார்களையும், சாதகர்களையும் உப சாதகர்களையும் நியமித்தல்.

## பிரசன்ன அபிஷேக பூஜை

எங்கும் நிறைந்துள்ள மூர்த்தியை பூஜிப்பதற்காக தமக்கு நேர்முகப்படுத்தல் வெளியில் எழுந்தருளுவதாக செய்யப்படும் அபிஷேகம், பூஜை.

## கடஸ் தானம்

குடத்தைச் சுத்தமாக்கி சப்ததாதுக்களும் ஜீவனும் உண்டாக்குவதற்காக கும்பத்தின் அடியில் ஆன்ம தத்துவத்தையும் பிரம்மாவையும் கும்ப நடுவில் வித்தியா தத்துவத்தையும் விஷ்ணுவைய்ும் கும்ப நுனியில் சிவ தத்துவத்தையும் உருத்திரனையும் கும்பத்தில் ஒன்பது சக்திகளையும் மூவினை நூலிற் சரஸ்வதி இலக்குமி ரௌத்திரி ஆகியோரையும் கும்பத்திற்கு பிடிக்கப்படும் தூபத்தில் அர்ச்சினி சக்தியும், தீர்த்தத்திற் கங்கை முதலிய புண்ணிய நதிகளை, மத்தியில் வருணனையும், நவரத்தினங்களில் வானம் முதலிய நவசக்திகளையும் தங்கதாமரைப் பூவில் சதாசிவத்தையும், வாசனைத் திரவியங்களில் சப்த மாதுருக்களையும் பூசித்துக் குடத்தில் இட்டு மாவிலையைச் சடையாகவும், தேங்காயை சிரசாகவும் கூர்ச்சத்தை முடியாகவும், வஸ்திரத்தை தோலாகவும், ஐஞ்ஞோபவிதத்தைப் பச்சப்பிரம மந்திரமாகவும் பூசிப்பதாற் கும்பமானது சர்வதேவதா சொரூபமாகின்றது என்று ஆகமங்கள் கூறுகின்றன.

## கலாகர்சனம்

கடஸ்தாபனம் பண்ணிய கும்பத்தை பாலாலய விம்பம் சமீபமாகக் கொண்டு, அந்தந்த மூர்த்திக்கு முன்னாலே வைத்து லம்ப கூர்ச்சத்தை பாலாலய விம்பத்தில் சாத்தி, சடத்துவன்னியாசம் கும்பத்திற்கு செய்யவேண்டும். சடத்துவமானது பரமேஸ்வரர் இருக்கும் ஸ்தானத்தை அடைதலுக்கான வழியாகும். அதில் சர்வ வியாபகராக உள்ள பரமேஸ்வரர், சக்தி, சொரூபர், அதீதர் சக்திக்கும், கந்தனுக்கும் பேதமின்மை ஆதலால் அங்காகி பாவம் என்றும் கூறப்படுகின்றது. ஆகவே சக்தியின் இடத்தில் இருந்து கலையும், கலையில் இருந்து தத்துவமும், தத்துவத்திலிருந்து புவனமும், புவனத்திலிருந்து வர்ணமும், வர்ணத்திலிருந்து பதமும், பதத்திலிருந்து மந்திரமும் உண்டாயின. கலையில் தத்துவம் அடங்கியுள்ளது. ஆதலினால் தத்துவம் முதல் மந்திரம் இறுதியாக ஒன்றில் ஒன்று அடங்கியுள்ளது. கலாநியாசத்தால் சர்வஞ்ஞாசத்தியும் தத்துவநியாசத்தால் சுவ தந்திரத்துவமும் பதநியாசத்தால் அலுப்த ச்க்தித் தத்துவமும் மந்திர நியாசத்தால் அனந்த சக்தித் தத்துவமும் சித்திக்கின்றமை அவசியம் செய்யவேண்டும். பாலாலய விம்பத்திலிருந்து கும்பத்திற்கு கலைகளை வந்து சேரும்படி நவதூதிகா நியாசம் செய்து கும்பத்தில் நிலை நிறுத்துதல் கலாகர்சனம் எனப்படும். கும்பத்தையும் விம்பத்தையும் பட்டால் மூடி அதி வாசத்திற்கு விட்டு சனஹோமம் யந்திரஹோமம் செய்தல் வேண்டும்.

## கும்பயாகசாலைப் பிரவேசம்

யாகசாலையானது தேவாலயம் போன்றது. அதிலுள்ள வேதிசையானது இறைவன் அமர்ந்திருக்கும் அலங்கார ஆசன பீடமாகவும் அங்குள்ள குண்டலங்கள், எல்லா வேள்விக்குரிய அக்கினிகளை ஸ்தாபிதம் செய்யும் இடமாகவும், இவ்விதமான யாக சாலைக்கு இறைவனை யாகத்தில் வாசம் செய்யும் பொருட்டு பிரார்த்தித்து அழைத்து ஆசனத்தில் அமர்த்தி இருக்கும்படி செய்தல்.

## யாக மண்டப அமைப்பு

யாக மண்டபமானது ஷடத்துவாக்களின் வடிவாகவுள்ளது. யாகசாலை எங்கும் சாந்திய கீத காலசொரூபமாம் கிழக்குத்துவாரம் முதலிய நான்கு துவாரங்களும் சாந்தி விந்தை பிரதிஷ்டை நிவர்த்தி என்னும் கலாத்துவா வடிவாய் உள்ளன. மண்டபத்தின் நடுப்பாகம் ஐம்பத்தொரு அட்சரங்களைக் கொண்ட வர்ணத்தொரு வர்ணத்துவா வடிவாக உள்ளது. கும்பங்கள் பதினொரு மந்திரத்துவா வடிவாக உள்ளன.

## யாகசாலைப் பூஜை

யாகசாலை காலமயமாக விளங்குகின்றது. சாந்தி முதலிய நான்கு கலைகளும் இரண்டாவது ஆபரணத்தில் நான்கு பக்க நிலைகளாகவும் இதற்கு நான்கு கலசமும் இவைகளுக்கு இரு புறங்களிலும் கஜேந்திரன் எண்மர் வாயிற் காப்பாளராகவும், முதலாவது ஆபரணத்தில் முதல் மேடையில் எட்டுத்திக்குகளிலும் கீழ் மேல் ஆகிய பத்துத் திசைகளில் இந்திரன் முதல் விஷ்ணு ஈறாக தச பாலகர்களும், இரண்டாவது ஆபரணத்தில் அக்கினிக்கு வடக்கில் சிவசூரியனும், முதலாவது ஆபரணத்தில் நிருத்திக்கும் கிழக்கில் யாக பலனைத்தரும் வஸ்துவுப் பீர்மனும் வாயுவிற்குத் தெற்கில் ஷேத்திர பாலரும், அதற்குத் தெற்கில் குகாஸ்திரமும், வாயுவுக்கு கிழக்கில் யாகத்தில் ஏற்படும் விக்கினங்களை நீக்கும் விநாயகரும், ஈசானத்தில் மேற்கில் எதையும் உத்தரவு கேட்டுச் செய்யும் சதாசிவ முதல் சப்தகுரு மூர்த்தியையும் பூஜிப்பதற்கு 27 கலசங்கள் வைத்து ஞனவாள் ஏந்தியபடி யாகேஸ்வரன், யாகேஸ்வரியும் கலசத்தில் அமைத்து பூஜித்து பிரதானமாக நடுவேதிகையில் வள்ளி தேவசேனையோடு பஞ்சமா வர்ணம் வரைக்கும் கூடியிருக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்கு பஞ்சமா வரைக்கும் பூஜை செய்து, உத்தமம் 33 குண்டம், மத்திமம் 25 குண்டம், அதமம் 17 குண்டம், அதமாதமம் நவகுண்டம்.

## பதினேழு குண்டம்

இறைவனுக்கு சொருப நிலை, தடத்த நிலை என்று இரண்டு வடிவங்கள் உள்ளன. சொருபத் திருமேனி சூரிய காசத் திருமேனி ஆகும். அது உலகத்தைக் கடந்த வடிவம் என்பது உலகத்தோடு கலந்த வடிவமாகும். இந்த உலகம் நிலம், நீர், காற்று, நீள் விசும்பு, நிலா பகலோன், இயமானன் என்னும் எண்வகைப் பொருளிலும் கலந்தது. இதனால் இறைவன் எண்வகை உருவில் வைத்து அனுமானித்துக் காண்பது போல, இறைவனை வழிபாடு செய்தலே 17 குண்டத்தின் அமைப்பு முறையாகும். இன்னும் ஈசானம் முதல் சத்தியோசாதம் வரையுடைய பஞ்சப் பிரம்ம மந்திரங்களும் மூலமந்திரமும் சிவபெருமானுடைய எல்லாம் அறியும் தன்மை தன் வயத்ததாகும். தன்மை, பேரறிவுடமை, பேர் அருளுடைமை, அளவிலாற்றல் உடமை, தூய உடம்பினனாதல் முதலிய எண்குணங்களும் பிரதான குண்டத்தில் இறைவனுக்கு அமைத்து, மேலும் பிரதான வேதிகையில் அனந்தாசனம் முதல் உள்ள ஆசனங்கள் மேல் சர்வ தேவதா சொரூபமான இறைவனை வைத்து வணங்கும் இடம் சிறந்த யாக சாலையேயாகும்.

## நூதன மூர்த்திகளுக்கு ஆதி வாசகக்கிரியை

இரத்தின நியாசம், நைநோன் மிலனம், கிராம பிரதட்சணம், தானியாதி வாசம், சயனாரோகணம், இவைகள் புதிதாக மூர்த்திகளுக்கு பஞ்ச பூதசம்பந்தமான தத்துவங்கள் ஏற்படுத்துவதற்காக செய்யப்படும் கிரியைகளாகும். அன்றியும் இறைவன் "இருநிலனாய் தீயாகி நீருமாகி இயமமாய் எறியுங்காற்றுமாகி" என்ற தேவாரத்தில் இருந்து இறைவடிவத்தை உண்டு பண்ணும் குறிப்பை உணர்த்துவது ஆகும்.

## இரத்தின நியாசம்

மூர்த்தியினுடைய தலை, நெற்றி, கழுத்து, இருதயத்தில், தொப்பிளில், பாதத்தில் தோள்களில் நவரத்தினத்தைப் பதித்து, சம்கிதை மந்திரங்களால் அர்ச்சித்து, பால் நெய்நிவேதித்து அஷ்டபுஸ்பம் சாத்தி, அபிஷேகம் செய்து அடுத்ததாக நையநோன் மிதினம் செய்க.

## நையநோன் மிதினம்

நையநோன் மிதினம் என்றால் கண் திறத்தல். இது பொன் ஊசியினால் முதலில் வலதுகண் இரண்டாவதாக இடதுகண் மூன்றாவதாக நெற்றிக்கண் முறையே திறப்பது கண் திறத்தலாகும். கண் திறத்தல் நிறைவு செய்ததும் தசதர்சனம் செய்தல் விம்ப சுத்தி செய்து கிராமப்பிரதட்சணம் செய்து தான்னியத்தில் .இறைவனை வாசம் செய்வித்து பின்பு ஜலத்தில் (தண்ணீரில்) வாசம் செய்வித்தல் முறையே இறைவனை பஞ்ச பூதத்தில் தொடர்புபடுத்தலாகும்.

## பதவின்னியாசம்

மூலஸ்தானத்திற்கு இறைவனை ஸ்தாபிக்க ஏற்படுத்தும் இடத்தைக் குறித்தல், இதை ஆசார்ய சில்பினசார்யரும், பிரவேசயோதி கர்ப்பக்கிரகம் என்ற காரணாகம விதிப்படி ஆசாரியரும் சிற்ப சாஸ்திரியும் சேர்ந்து சிவன், அம்பாள், விநாயகர் முதலிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்வதற்குரிய இடத்தை வகுக்கலாம்.

## ஸ்தூபி ஸ்தாபனம்

கட்டப் பெற்ற மூலஸ்தானம் முதல் (பண்டிகை) ஸ்தூபி பரியந்தம், ஆறு அத்துவாக்களும் மேலுள்ள பத்மதில் ஸ்தூலலிங்கமாகிய ஸ்தூபியை ஸ்தாபிக்கலாம்.

## தீபஸ்தானம்

இறைவன் சோதி வடிவானவன். அவனைச் சோதி வடிவமாக வணங்குவதாக முதன் முதலாக மூலஸ்தானத்தின் தீபத்தை சிவாச்சாரியாருடைய பத்தினி ஸ்தாபிக்க சிவாச்சாரியார் பூரண கும்பத்தை ஸ்தாபித்தல் தீபஸ்தாபனம் ஆகும். 'இல்லக விளக்கது இருள் கெடுப்பது' 'நல்லக விளக்கது நமச்சிவாயவே' என்ற தேவாரம் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இரத்தினஸ் தாபனம்

நவரத்தினங்களோடு பொன், செம்பு, பித்தளை, இரும்பு, தகரம், வெள்ளி, வெண்கலம், ஈயம் போன்ற நவலோகங்களைச் சேர்த்து அரிதாரம், மனோசிலை, காவி, சந்தனம், அப்பிறவகை, செஞ்சந்தனம், இலாமிச்சவேர், விஸ்ணுக்கிராந்தி, கராகில், சந்தனவேர், நன்னாரி, கீழ்க்காய் நெல்லி, காக்கணவன், பச்சைக்கற்பூரம், நவதானியங்கள், பொன், ஆமை, தாமரை போன்ற திரவியங்கள் முதலிய வஸ்துக்களை பீடத்தின் மேல் இட்டு இந்திராதிலோக பாலகர்களையும் அனந்தாசனம் முதல் பத்மாசனம் வரை பூஜித்தல் இரத்தினஸ்தாபனம் ஆகும்.

## இயந்திர ஸ்தாபனம்

செப்புத்தகடு இல்லாவிடில் வெள்ளித்தகடு, பவுண்தகடு ஏதாவது ஒன்றில் கோடுகளும் கோணங்களும் வரைந்து இறைவன் மூலப்பிரதாச மந்திரங்களும் எழுதி பூஜிக்கப்பட்ட இயந்திரங்களை மூல மூர்த்தியின் ஆசனத்தில் உரிய இடத்தில் வைத்தல் இயந்திரஸ்தாபனம் ஆகும். இது சூட்சமமூர்த்தி ஆகி அருட்சக்தியை ஊட்டுவதாகும். (இதை லைட்டுக்கு பற்றியை போல் கருதலாம்)

## விம்பஸ்தாபனம்

திருவுருவங்களை உரிய முகூர்த்தங்களில் ஆதார சிலைக்கு மேலே அவ்வவ் ஸ்தாபனங்களில் ஸ்தாபிக்கலாம்.

## அஷ்டபந்தனம்

சுக்கான் கல்லு குங்கிலியம், கும்பச்சரக்கு, தேன் மெழுகு, நற்காவி, செம்பஞ்சு, எருமை வெண்ணெய், சாதிலிங்கம் முதலிய எட்டு வகையான திரவியங்களை ஒன்று சேர்த்து இடித்து எடுக்கப்படுவது அஷ்டபந்தனம் ஆகும். இறைவனின் அம்சமாகிய அஷ்டமூர்த்தியின் அருள் பெற்று அணிமாதி அஷ்டசித்திகளை அடைந்த நிலையில் ஞானகிரியா சக்தியாகும். சங்கநிதி, பதுமநிதி இரண்டும் தோன்றி இறைவனின் ஆணையால் சாம்விராட்சயலக்ஷ்மி, வித்தியாலக்ஷ்மி, கீர்த்திலக்ஷ்மி, சௌபாக்கியலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, ஜெயலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி முதலாக அஷ்ட லக்க்ஷ்மிகள் உருக்கொண்டு உயிர்களை உய்விக்கும் வண்ணம் உள்ள கதிகளைத் தருவது அஷ்டபந்தன மருந்தானது ஆதாரசிலையையும் விம்பத்தையும் பொருத்துவதற்கு பாவிக்கப்படுகின்றது.

## தைலாப்பியங்கம் (எண்ணெய்க்காப்பு)

லிங்கத்திற்கு தைலத்தினால் (எண்ணெய்) ஆசாரியாரும், சிற்பாசாரியாரும், அன்பர்களும் சாத்துதல். அன்பர்கள் தங்களிடத்தில் உள்ள ஆணவமல சம்பந்தத்தாலும் திரிகரணங்களாலும் ஏற்படும் குற்றங்கள் நீங்கி சுத்தியடைதற் பொருட்டு சுத்தமான நல்லெண்ணெயை சுவர்ணத்தினால் தொட்டு இறைவனின் சிரசு, கண்கள், மூக்கு, செவி, தொப்பிள், பாதம் முதலிய எல்லா அங்கங்களிலும் குளிரும்படி நிறையச் சாத்துவதாகும்.

| | | |
|---|---|---|
| உத்தமம் | - | சந்தனாதித்தைலம் |
| மத்திமம் | - | நல்லெண்ணெய் |

## விம்பசுத்தி

பலராலும் ஸ்பரிசிக்கப்பட்ட தோஷம் நீங்குவதற்காகவும், அஷ்டபந்தனம் சாத்திய உஷ்ண சாந்திக்காகவும், விம்பத்திற்கு (சுவாமிக்கு சுத்தம் உண்டாவதற்காக) மிருத்தோகம் கஷாயோதகம், பத்திரோதகம், காற்தோதகம், மூலோதகம், மார்சனோதகம், பரிமானசனோதகம், கந்தோதகம், ஷபோதகம், பலோதம், இரத்தினோதகம், தானியோதகம், லகோதகம், மான்மியோதகம், சிறுங்கோதகம், அஷ்திரோதகம் முதலிய பதினாறு வகையான திரவியங்களை 16 கலசங்களில் நிரப்பி பூஜித்து துவார பூஜை செய்து விம்பத்திற்கு பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், பதினாறு கலசங்களாலும் அபிஷேகம் செய்தல் விம்பசுத்தியாகும்.

## விம்ப ரக்ஷாபந்தனம்

கும்பாபிஷேகத்தின் பொருட்டு மூர்த்திகளுக்கு கையில் கட்டுதலாகும்.

## பூர்வ சந்தானம்

மூர்த்திகளுக்குப் பக்கத்தில் சிவாச்சாரியாரும் சாதகரும் உட்கார்ந்து ஆதார சக்தி முதல் சந்தி பரியந்த்மும், கலைமுதல் மந்திரம் இறுதியாக மந்திரங்களை உச்சரித்து இறைவனுடைய திருமேனி முழுவதையும் தர்ப்பை நுனியால் நியாசம் செய்தல் பூர்வசந்தானமாகும்.

## விஷேச திரவிய ஹோமம்

கும்பத்தில் ஆவாகனம் பண்ணிய இறைவனுக்கு சகல விதமான ஹோமத் திரவியங்களையும், அபிஷேகத் திரவியங்களையும் சிவமாக்கி அதற்குரிய மந்திரங்களோடு அக்கினி வடிவிலுள்ள இறைவனுடைய ஹோமம் செய்தலாகும்.

## ஸ்பரிசாகுதி

யாக கும்பத்திற்கும் மூலஸ்தானத்திலுள்ள மூர்த்திக்கும் நூலினாலே தொடர்பை ஏற்படுத்தி யாக குண்டத்தில் பூஜிக்கப்பட்ட மூர்த்தி மூர்த்தீஸ்வரன், மூர்த்தீஸ்வரி மந்திரம் ஆகியவற்றை பூஜித்து ஹோமம் செய்து, சாந்தி கும்பம் சிறுச்சிறுவத்துடன் மூல மூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் தொடர்புபடுத்துவதாகும்.

## சிரோத்திர வர்த்தனம்

சிவாச்சாரியார்கள் மூர்த்திகள் தொடர்புகளில் உடுதல் குறைவு ஏற்பட்டால் கருணையால் பூர்த்தியாக்கி அருள் சுரக்க வேண்டும் என்று விண்ணப்பிப்பதாகும்.

## சிவாச்சாரிய பூஜை

சிவாச்சாரியார்களுக்கும், சர்வபோதகாசிரியர்களுக்கும் சர்வ சதாகாசிரியர்களுக்கும் வஸ்திரம் (வேட்டி, சால்வை) உத்தரியம், உள்ளிட்டம், உருத்திராட்சம், மோதிரம், வீபூதிப்பை முதலிய உபசாரங்களினால் மகிழ்வித்தலாகும்.

## அக்கினி சம்யோசனம்

பிரதான குண்டத்தில் பூஜை செய்து எடுத்த அக்கினி மூர்த்தி முதலானவை பிரதான சிவாச்சாரியார் மூலம் குண்டத்தில் சேர்ப்பதாம்.

## மகா பூர்ணாகுதி

மஹாயாக ஹோமத்தை பூர்த்தி செய்வதற்காக சகல விதமான மங்களப் பொருட்களுடன் இறைவனுடைய மூலமந்திரத்தை உச்சரித்து சிறுசிறுவத்தினால் பெரு நிறைவு செய்யும் கிரியை ஆகும்.

## யாக தீபாராதனை

யாக கும்பத்தில் ஆவாகனம் செய்யப்பட்ட கந்த பெருமானுக்கு விஷேச தீபங்களால் ஆராதனை செய்து, கண்ணாடி முதலிய சோடோபசாரம் காண்பித்து சண்முகார்ச்சனை செய்து பஞ்சாலத்திரிகம் காண்பித்து பிரதட்சண நமஸ்கார வந்தனம் செய்து, வேதபாராயணம், திருமுறை பாராயணம் என்பன செய்து யாத்திராதானம் முகிர்த்தா தானம், லக்கின தானம் செய்வித்து அந்தர்பலி, பகிர்பலி செய்தலாகும்.

## தூபி கும்பாபிஷேகம்

விமானங்களில் உள்ள தூபிகளுக்கு வைக்கப்பட்ட, பூஜிக்கப்பட்ட கும்பங்களை வீதிப் பிரதட்சணமாகக் கொண்டு சென்று உரிய முகூர்த்தத்தில் ஸ்தூபி லிங்கங்களுக்கு அபிஷேகம் செய்தலாகும்.

## மஹா கும்பாபிஷேகம்

சிவாச்சாரியார் ஒருவரை மயூரம் ஆகப் பூஜை செய்து அவருக்கு வேண்டிய உபசாரம் அலங்கரித்து உஷ்னீசம் வைத்து அவரது சிரசின் மீது சுப்பிரமணியர் கும்பத்தை வைத்து சர்வ போதகர், சர்வ பிரதான குரு, ஏனைய சிவாச்சாரியார் தருப்பையினால் தொட்டுக் கொண்டு எஜமான் பக்தஜனங்கள் சூழ புஸ்பாஞ்சலி வேத திருமுறை பாராயணம், ஸ்தோத்திர பாராயணம், சங்கு பாராயணம், மங்கள வாத்தியம் முதலிய கோசங்களுடன் கொடி ஆலவட்டம் சாமரை முதலிய சோடோ உபசாரங்களுடன் முருகநாம பஜனையோடு பக்தியுடனும் மெல்ல மெல்ல பிரதட்சணம் செய்து தூவாரத்தில் புஸ்பாஞ்சலி செய்து ஆதாங்களையும் கடந்து மூலாலயம் சென்று ஆசத்தின்மீது பிரதான கும்பங்களை வைத்து, கும்பத்திற்கும் மூர்த்திக்கும் நூலினால் நாடி சந்தானம் செய்து, தொடர்பேற்படுத்தி மூலசக்தி முதல் சக்தியந்தம் வரையும், பிரதமா வர்ணம் முதல் பஞ்சமாவர்ணம் வரையும் பூஜித்து, கும்பத்திலிருக்கும் கலையை மூர்த்திக்கு கலாகர்ஷணம் செய்து, பீடசக்தி கும்பத்தை பீடத்திற்கு அபிஷேகம் செய்து உரிய முகூர்த்தத்தில் மூலமந்திரம் உச்சரித்து பதமந்திரத்துடன் அடியவர்கள் 'ஹரஹர' என்ற கோஷத்துடன் வேத தேவார திருமுறைகளை பக்தர்கள் ஊத சகல மங்கள வாத்திய கோஷங்களும் ஒலிக்க மஹா கும்பாபிஷேகத்தை செய்து சகல ஜீவராசிகளும் திருவருள் பெற்றுய்ய பிரார்த்திப்பதே மஹா கும்பாபிஷேகம் ஆகும். வள்ளி தேவசேனைக்கும் அபிஷேகம் செய்து அஷ்ட வித்தோஸ்வர கும்பங்களை பீடத்தைச் சுற்றிலும் அபிஷேகம் பண்ணி உத்துவர்த்தனம் செய்து சந்தணம் முதலிய வாசனைத் திரவியங்கள் சாத்தி தூபம் காட்டி வஸ்திரம், ஆபரணம், பூமாலை அலங்கரித்து யாங்கம் போகங்கள் அர்ச்சித்து அகண்ட தீபம் வைத்து மஹா நைவேத்தியம் நைவேதித்து பஞ்சாராத்தி காண்பித்து, பின்னர் தேவர்களின் மூன்றே முக்கால் நாழிகைக்கு கதவைச் சாத்தி வைத்தல்.

## தசதர்சனம்

"பண்ணிநேர் மொழி" என்னும் தேவாரத்தைப் படித்து திருக்கதவைத் திறந்து சிவாச்சாரியார் பசு, வேதபாரகர், கண்ணாபூர்ண கும்பம், தீபம், தாமரை, கன்னிகை, சுமங்கலி, எஜமானர், பக்த ஜனங்கள் முதலியோரைச் சகல வாத்திய உபகரணங்களுடன் தனித்தனியே தரிசிக்கச் செய்தல் ஆகும்.

## பிரயாசித்த ஆகுதி

யாக குண்டத்தில் அஸ்திரங்களை பூஜித்தல்.

## ஸ்திராகுதி

கர்ம பூரண பலனைத் தருவதற்கும், பீடம், மூர்த்திகளை ஸ்திரப்படுத்துவதற்கும் செய்யும் ஆகுதியாகும்.

## எஜமான் அபிஷேகம்

எஜமானுக்கு அபிஷேகித்தலும் கும்பாபிஷேக பலனை ஒப்புவித்தலுமாம்.

## ஆசாரிய உற்சவம்

சிவாச்சாரியார்களை தட்சணை தாம்பூலம் வழங்கி அவர்களை வணங்கி ஆசிபெறுதலாகும். சமய பெரியார்கள் அருள் ஆசியுரையும் இதில் அடங்கும்.

## மகாபிஷேகம்

முதலாவது அபிஷேகம் ஸ்நபன கும்பம் வைத்து பூஜித்து அக்கினி காரியம் முடித்து மூல மூர்த்திக்கு சந்தனாதிதைலம் அரிசிமா, நெல்லிமா, மஞ்சள்மா, பஞ்சகவ்வியம், நெய், பால், தயிர், தேன், கரும்பு, சர்க்கரை, பழவர்க்கம், பலஉதவகம், இளநீர், அன்னகஷாயம், சகஸ்திர தாமரை, விபூதி, பன்னீர், சந்தனம்,. ஸ்நபனகும்பம் குளிர்ச்சி அடையும் படியாக அபிஷேகம் செய்து பின் பக்தர்களுடைய அர்ச்சனை முதலியன செய்ய உரிய காலமாகும்.

## மண்டலாபிஷேகம்

இதன் பின் மண்டலாபிஷேகம் செய்தல் வேண்டும். மகா அபிஷேகம் செய்தபடி மண்டலாபிஷேகப் பூர்த்திவரை விஷேடமாய் அபிஷேகம், பூஜை, உற்சவம் நிகழ்வதாலும் அடியவர்கள் வழிபாடு ஆற்றுவதாலும் திருவருள் பெருகுகின்றது.

கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி என்னும் பிராயசித்தம், அது மனம் காயங்களினால் அறிந்தும், அறியாமலும் செய்த வினைகளையும், வேறு எவ்வகையாலும் தீராத சிவாபராதங்களையும் தீர்க்கும் மகா கும்பாபிஷேக தரிசன பலனாகும். ஆதலால் கும்பாபிஷேகத்தை பெருஞ் சாந்தி என்றும் நூல் உணர்ந்த பெரியோர்கள் கூறுவர். மேற்கூறிய பிரகாரம் வேதசிவாகமங்களில் கூறியபடி மகா கும்பாபிஷேகக் கிரியைகளை நிகழ்த்தி இறைவன் திருவருளை சகல ஆன்மாக்களும் பெற்றுய்ய எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வழுத்தி அமைகிறேன்.

இன்னும் இந்தக் கிரியை விளக்க விரிவுகள் பலவுண்டு. அவைகளை இன்னும் அறிந்தோர் வாயிலாகக் கேட்டு பேரானந்த பெருவாழ்வு அடைவீராக.

நன்றி: தென்மட்டுவில் வேரக்கேணி
ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில்
கும்பாபிஷேக மலர்.

# காலமும் முகூர்த்தமும்

வேதாகமசோதிட பூஷணம் சிவாசார்ய திலகம்
**சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள்**
திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர்

வேதத்தை ஆதாரமாகக் கொண்டதே நமது சமயம். வேதத்தை அனுசரித்த ஆகமப் பிரமாணங்களைக் கொண்டு ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டு கிரிகைகள் நடைபெறுகின்றன. வேதங்களுக்கு ஆறு அங்கங்கள் சொல்லப்படுகின்றன. அவை சிட்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், ஜஜோதிஷம், கல்பம் என்று அழைக்கப்படுகின்றன. வேதபுருஷனுடைய மூக்கு, முகம், காது, கை, கண், பாதம் என முறையே கூறப்படுகின்றன.

ஜஜோதிஷம் என்பது வேதபுருஷனுடைய 'கண்' எனப்படும். இந்த ஜஜோதிஷத்திலே தான் ஆலயக் கிரியைகள் நடைபெறவேண்டிய காலங்கள் பற்றியும், முகூர்த்தங்கள் அமைய வேண்டிய நியதிகள் பற்றியும் கூறப்படுகின்றன. இதனால் வேதங்கள் ஆகமங்களைக் கற்று ஆலய கிரியா பாகங்களை நடாத்துகின்ற சிவாச்சாரியர்களுக்கு வேதபுருஷனின் கண்ணாகிய ஜோதிடம் முக்கியமானதாக அமைகின்றது. ஜோதிடம் என்றால் ஜாதகத்தைப் பார்த்துப் பலன் கூறுவதுதான் என நம்மவர்கள் நினைக்கின்றார்கள். அவ்வாறு நினைப்பது தவறு. ஆலயக் கிரியைகள் எந்தெந்தக் காலங்களிலே செய்ய வேண்டும். சுபமுகூர்த்தங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதெல்லாம் ஜோதிடத்திலே தான் சொல்லப்படுகின்றது. ஆகையால் உரிய காலங்களில் குறித்த கருமத்தை செய்வதால் தான் அதன் பூரண பலனை அடைய முடியும்.

எந்தக் கருமத்தை ஆரம்பித்தாலும் முதற்கண் அதற்குரிய சங்கல்பத்தைச் செய்கிறோம். சங்கல்ப்பம் என்பது தேசத்தை நினைவுபடுத்திக் கொண்டு வருஷம், அயனம், மாதம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் எனப்படும் பஞ்ச காலத்திலே குறிப்பிடப்பட்ட தினத்தைக் கூறி இத்தினத்திலே குறிப்பிட்ட கர்மாவை இப்பொழுது செய்யப் போகிறோம் என்பதாகும். இந்த சங்கல்ப்பம் செய்யாமல் எந்த சுபகருமமும் செய்தலாகாது. சங்கல்ப்பம் செய்யாவிட்டால் நிஷ்பலன் என்று சொல்லப்படுகின்றது.

"ஸங்கல்ப்பைவ ததாகுர்யாத் ஸ்நாத தான வரதாதிகம்
அன்யதா புண்ய கர்மாணி நிஷ்பலானி பவந்தி"

சங்கல்பத்தை செய்யும் போது காலத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. பரமேஸ்வரனே காலத்தின் ஸ்வரூபியாக இருக்கின்றார். உயிர் வர்க்கங்களின் காலத்தை அளவிடுகின்ற காரணத்தினாலே யமனுக்கு காலன் என்ற பெயருண்டு. யமனுடைய காலத்தைக் கூடக் கணக்கிடுகின்ற காரணத்தினால் சிவபெருமான் கால காலனாக விளங்குகின்றார்.

காலத்தைச் சிந்திக்கும் போது சூரிய பகவானே நினைவுக்கு வருகிறார். பகல், இரவு என்பனவும் ஆறு பருவ காலங்களும் மாதப் பிறப்புக்களும் வருஷப் பிறப்புக்களும் சூரியனை ஒட்டியே நிகழுகின்றன. தினத்தை நமக்கு கொடுப்பதினால் தினகரன் என்று பெயர் பெற்ற சூரிய தேவன் கால நிர்ணயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றான். உஷத் காலம், ப்ராதகாலம், பூர்வான்னம், மத்தியான்னம், அபரான்னம், ஸாயான்னம், அர்த்தயாமம் என்று சொல்லப்படுகின்ற காலப்பகுப்புக்கள் சூரியனுடைய சஞ்சாரத்தினாலேயே ஏற்படுகின்றன.

| | |
|---|---|
| உஷாதகாலம் | சூரிய உதயத்திற்கு முன் 6 நாழிகை காலம் |
| ப்ராதக் காலம் | 01 முதல் 06 நாழிகை |
| பூர்வான்னம் | 06 முதல் 12 நாழிகை |

| | | | | |
|---|---|---|---|---|
| மத்யான்னம் | 12 | முதல் | 18 | நாழிகை |
| அபரான்னம் | 18 | முதல் | 24 | நாழிகை |
| ஸாயான்னம் | 24 | முதல் | 30 | நாழிகை |
| அர்த்தயாமம் | 42 | முதல் | 48 | நாழிகை |

இந்தக் காலப்பகுப்புக்களைக் கொண்டே தேவகருமங்கள் எப்பொழுது, பிதிர்கருமங்கள் எப்பொழுது செய்ய வேண்டும் என்று வகுக்கப்படுகிறது.

இந்தக் காலங்களிலே உஷத் காலத்தில் ஆலயங்களிலே நடைபெறுகின்ற பூஜை விசேடமாகச் சொல்லப்படுகின்றது. நம்மவர்களுக்குத் தினந்தோறும் வருகின்ற உஷத்காலம் போலவே தேவர்களுக்கு மார்கழி மாதம் உஷத்காலமாக அமைகின்றது. எவ்வாறெனில் தை மாதம் முதல் ஆனி மாதம் முடியவுள்ள ஆறு மாத காலம் உத்தராயணம் என்றும் ஆடிமாத முதல் மார்கழி முடிவுள்ள 6 மாத காலம் தக்ஷிணாயணம் என்றும் சொல்லப்படும். தக்ஷிணாயணம் தேவர்களுக்கு உஷ்தகாலமாக அமைகிறது. இதனாலேயே மார்கழி மாதத்தில் ஆலயங்களில் விசேட பூஜைகள் விழாக்கள் நடைபெறுகின்றன.

கால நிர்ணயம், முகூர்த்த நிர்ணயம், விரத நிர்ணயம் என்பன பற்றிய உண்மைகளை காலப்பிரகாசிகை, காலவிதானம், நிர்ணயஸிந்து போன்ற நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. அந்த நூல்களில் எமக்கு கூறப்பட்டுள்ள விஷயங்கள் எமக்கு வாழ்க்கையில் ஒவ்வொரு செயலுக்கும் நல்ல வழிகாட்டியாக அமைகின்றன.

கால நிர்ணயம் போல முகூர்த்த நிர்ணயமும் நமது வாழ்க்கையில் முக்கிய இடம் பெற்றுள்ளதை நாம் காண்கின்றோம். எந்தவொரு சுபகருமத்திற்கும் முகூர்த்தம் மிக இன்றியமையாததாகும். மனிதனுடைய பிறப்பிற்கு காரணமாகிய தாம்பத்திய உடலுறவு தொடங்கி மனிதனது ஒவ்வொரு செயலுக்கும் முகூர்த்தம் அமைக்கப்படுவதை நாம் அறிவோம். முகூர்த்தம் என்பது 2 நாழிகை அல்லது 48 நிமிஷ நேரம் கொண்ட காலமாகும்.

முகூர்த்தம் தெரிவு செய்வதற்கு ஐந்து பிரதான அம்சங்கள் கூறப்படுகின்றன. அதையே நாம் பஞ்சாங்கம் என்கின்றோம். வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய அம்சங்களே பஞ்ச அங்கங்களாகும். சூரிய மண்டலத்தில் கோள்களுக்கு பூமியுடன் ஏற்படும் ஈர்ப்பு எதிர்ப்புச் சக்திகளையே குறிப்பிட்ட ஐந்து அங்கங்கள் மூலம் தெரிவிக்கப்படுகின்றது. எனவே சில திகதிகளில் குறிப்பிட்ட நட்சத்திரங்கள் குறிப்பிட்ட செயல்களுக்கு எதிர்ப்பானவையாகவும் வேறு சில செயல்களுக்கு சாதகமானவையாகவும் அமையும். இதனைக் கருத்தில் கொண்டே முகூர்த்தம் தெரிவு செய்யப்படுகின்றது. சாதாரணமாக எல்லா முகூர்த்தங்களுக்கும் **சதுர்த்தி, சதுர்த்தசி அட்டமி, நவமி, செவ்வாய்க்கிழமை, ராகுகாலம், பரணி, பூரம், பூராடம், ஆயிலியம், கேட்டை, பூரட்டாதி, மரணயோகம்** என்பவை விலக்கப்படுகின்றன. சில நட்சத்திரங்கள் சில கருமங்களுக்கு அனுகூலமானவையாயும், சில நட்சத்திரங்கள் விலக்கப்பட்டவையாயும் இருக்கின்றன. எனவே ஒரு சுபகருமத்திற்கு அதற்குரிய நட்சத்திரம் திதி லக்கினம் அந்த லக்கினத்துக்கு சுபக்கிரகங்களுடைய பார்வைகள் என்பவற்றை ஆராய்ந்து மரணயோகம், ராகுகாலம், நக்ஷத்திர தியாஜ்யம் என்பன விலக்கப்பட வேண்டும். உதாரணமாக **பிரதிஷ்டை** முகூர்த்தத்தை எடுத்துக் கொள்வோம். அதற்குரிய மாதங்கள் **சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, பங்குனி** என்பன நன்று. அதிகமாதம் விலக்கப்பட வேண்டும். சந்திரன் பெலவானாக இருக்க வேண்டுமாதலால் பூர்வபட்சமே சிறந்தது.

**அனாவர்த்தனப்** பிரதிஷ்டைக்கு **அசுவினி ரோகினி சித்திரை திருவாதிரை புனர்பூச** நட்சத்திரங்களும் **ஆவர்த்தனப்** பிரதிஷ்டைக்கு **அசுவினி ரோகினி சித்திரை திருவாதிரை பூசம் அத்தம் மிருகசீரிடம் உத்தரட்டாதி** நட்சத்திரங்களும், **புனராவர்த்தனப்** பிரதிஷ்டைக்கு **அசுவினி, ரோகினி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், உத்தரம், அத்தம், சித்திரை, அனுஷம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி, ரேவதி** நட்சத்திரங்களும் அனுகூலமானதாகும்.

சூரியன் பரணி 3ம் பாதம் முதல் ரோகினி 2ம் பாதம் வரையும் சஞ்சரிக்கின்ற காலமாகிய அக்கினி நாள் தவிர்க்க வேண்டும்.

**ஞாயிறில் ஸப்தமி, துவாதசி, திங்களில் ஷஷ்டி ஏகாதசி, புதனில் துவிதியை அஷ்டமி, வியாழனில் சஷ்டி, நவமி, வெள்ளியில் அஷ்டமி தசமி** சேர்ந்து வருகின்ற அக்கினி யோகம் விலக்க வேண்டும்.

அசுவினிக்கும் பூரத்துக்கும் 1ம் பாதம், பரணிக்கும் அனுசத்துக்கும் 4ம் பாதம், உத்தராடத்துக்கும், சதயத்துக்கும் 2ம் 3ம் பாதங்கள் அடங்கிய உஷ்ணசிகை விலக்கப்பட வேண்டும்.

இன்னும் கரிநாள் இராம திவாம ராகுகாலம் தியாஜ்யம் தவிர்க்கப்பட வேண்டும். லக்கினத்தைத் தீர்மானிக்கும் போது,

| | | |
|---|---|---|
| மேடம், விருட்சிகம், கும்பம் | - | பகல் குருடு |
| துலாம் | - | பகல் செவிடு |
| மகரம் தனு | - | இரவு செவிடு |
| கும்பம் | - | பகல் நொண்டி |
| மீனம் | - | இரவு நொண்டி |

இவற்றையும் அவதானிக்க வேண்டியது அவசியம். இவ்வாறு ஆராய்ந்து ஒரு லக்கினத்தைக் குறித்தல், கிரகங்கள் எந்த இடங்களில் என்ன பலன் செய்யும் எனக் கூறப்படுகிறது. அவையாவன

2-ல் பாபக்கிரகங்கள் இருத்தல் தன ஈனம்

3-ல் எந்தக்கிரகம் இருந்தாலும் சந்தோஷத்தை வளர்ப்பர்

4-ல் பாபிகள் இருந்தால் சுகத்திற்குக் கேடு. சந்திரனைத் தவிர ஏனைய சுபக்கிரகங்கள் சுகத்தைக் கொடுப்பர்.

5-ல் பாபிகள் இருந்தால் புத்திர நாசம்.

6-ல் பாபிகள் இருந்தால் சத்துருக்கள் நாசமடைவர்.

7-ல் சூரியனிருந்தால் யஜமானுக்குக் கேடு. சனியிருந்தால் சௌக்கியம் குறையும். செவ்வாய் இருந்தால் அக்கினி பயம். வியாழனும், சந்திரனும் இருந்தால் தானிய விருத்தி.

8-ல் எந்தக் கிரகம் இருந்தாலும் குலத்துக்கு நாசம்.

9-ல் சுபர்களிருந்தால் தர்மவிருத்திகளாகும். பாபிகள் இருப்பின் தனம் முதலியவற்றுக்கு நாசம்.

10-ல் பாபிகள் இருந்தால் ஸ்தான நஸ்டம்.

11-ல் எந்தக்கிரகம் இருப்பினும் சுபபலனைக் கொடுப்பர்.

12-ல் வியாழனும் புதனும் இருக்கலாம் வேறு எந்தக் கிரகம் இருப்பினும் யஜமானுக்குத் தரித்திரம்.

தேவாலயங்களில் பிரதிஷ்டையும் உற்சவமும் நடக்கும் போது அக்கிராமத்தில் வசிப்பவர்கள் சுபகருமம் செய்தலாகாது.

இவ்வாறு பிரதிஷ்டைக்கு விஷேடமாக முகூர்த்தம் பார்க்க வேண்டும். எல்லாச் சுபகருமங்களுக்கும் லக்கினத்துக்கும் 8ம் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். ஏனைய சுபகருமங்களுக்கு அவற்றுக்குச் சொல்லப்பட்ட நட்சத்திரங்களில் கிரகங்கள் நிலைகள் அவதானித்து முகூர்த்தங்களை அமைக்கலாம்.

ஆகவே காலத்தையும் முகூர்த்தத்தையும் அவதானித்து உரிய காலத்தில் நற்கருமங்களைச் செய்வதால் நமது வாழ்வு சுபீட்சம் அடையும். தெய்வ அனுகூலமும் கிடைக்கும்.

சுபம்

*நன்றி: தென்மட்டுவில் வேரக்கேணி*
*ஸ்ரீகந்தசுவாமி திருக்கோவில்*
*கும்பாபிஷேக மலர்.*

உ

# உபநிடதங்களில் கல்வி பற்றிய சில சிந்தனைகள்

*ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்த சர்மா*
*விரிவுரையாளர்*
*சம்ஸ்கிருதத்துறை*
*பல்கலைக்கழகம் – யாழ்ப்பாணம்.*

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு கல்வி இன்றியமையாதது. வெறும் விடயத்துணுக்குகளைத் திணிப்பது இன்றி நாம் எவ்எப்பண்புகளை மேலானவை தெய்வத்தன்மை பொருந்தியவை எனக் கருதுகின்றோமோ அத்தன்மைகளுடனேயே பிறக்கின்ற மனிதன் தான் வாழுகின்ற சூழ்நிலைகளில் அறப்பண்புகளுக்கு மாறுபட்ட தன்மைகளைச் சந்திக்கின்றான். அவற்றினை எதிர்கொண்டு வெற்றியடைய வேண்டிய தேவை அவனுக்கு ஏற்படுகின்றது. சமுதாயத்தின் அங்கமாகிய மனிதன் அச்சமுதாயத்திலிருந்து பலவிதமான அனுகூலங்களைப் பெறுகின்றான். அதற்குப் பிரதியுபகாரமாக அது நல்லவிதமாக இயங்கிக் கொண்டு செல்வதற்கு தன்னாலியன்ற சேவையை அந்தச் சமுதாயத்திற்கு வழங்கக்கூடிய பக்குவத்தை இன்னொரு மனிதனிடத்தில் ஏற்படுத்த வேண்டும். தமது கடமைகளை உணர்ந்து தான் வாழுகின்ற நிலைமைகளில் செய்யவேண்டிய கடமைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவனாக ஒவ்வொரு மனிதனும் விளங்குதல் வேண்டும். எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துகின்ற வகையில் மனதைப் பண்பட்டதாக ஆக்குவதோடு பரந்த எண்ணங்களுடையதாக மனதினை விரிவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

கீதை கூறுவதுபோல இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதி ஆசை அச்சம் 'கோபம்' என்பவை நீங்கியவனாகுதல் வேண்டும். இத்தகைய தன்மைகளுக்கு ஒரு மனிதனை நெறிப்படுத்துவதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். கல்வியின் பயன் ஒழுக்கமும் நன்னடத்தையும் என பாரதம் கூறுவது இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும் மேலும்

"வித்யா ததாதி விநயம் விநயாத் யாதி பாத்ரதாம்
பாத்ரத்வாத் தனம் ஆப்னோதி தனாத் தர்மம் தத : சுகம்"

எனும் நீதி வாக்கிய பாடலும் ஒருவன் கல்வியினால் பணிவையும் பணிவினால் நன்நிலையையும் நன்நிலையால் பொருளீட்டுதலையும் பொருளினால் தர்மத்தைச் செய்து அதனால் சுகமாக வாழ்கிறான் எனக் கூறுகின்றது. மக்களின் பண்பாட்டு நிலை மனப்பாங்கு என்பவற்றிற்கு ஏற்ப காலத்திற்குக் காலம் கல்வியின் நிலையும் மாறுபடுகின்றது. பண்டைக் காலக் கல்வியானது எதிலிருந்து மனிதன் வந்தானோ அவன் அங்கு போய்ச் சேர வேண்டியவன். அகண்ட பரிபூரண சச்சிதானந்த வஸ்துவாகிய பிரமத்தை அடைவதே அக்காலக் கல்வியின் நோக்கமாக இருந்தது. சத் - உண்மையானது. சித் - அறிவு மயமானது. ஆனந்தம் - மகிழ்ச்சிகரமானது.

அறிவு பூர்வமாக உண்மையை - தனது கடமையை உணர்ந்து அதன் வழி செயற்பட்டு ஆனந்தமாக வாழ்வதே வாழ்க்கையின் பயனாகும். இத்தகைய நிலைக்கு ஒருவனை வழிப்படுத்துவதே கல்வியின் நோக்கமாகும். இறைவன் அறிவு மயமானவன். பிரபஞ்சத்திலுள்ள உயிர்கள் யாவும் அறிவின் உதவியினாலேயே உருவாயின. அவை அறிவின் காரணமாகவே உயிர்வாழ்கின்றன என தைத்திரிய உபநிடதம் (111-5) கூறுவதும் நோக்கத்தக்கதாகும்.

கல்வி - கல் என்னும் வினையடிப் பிறந்ததாகும். இது கல்லுதல், தோண்டுதல் தோண்டி வெளியே கொண்டு வருதல் என்னும் பொருளுடையது. மனிதனுள் இருக்கும் உள் உணர்வு புத்தி எனப்படும். தன்னுள் மறைந்து கிடக்கும் கடவுட் தன்மையை உணர்ந்து கொள்ளுதற்கும் ஆன்மீக அறிவிற்கு இன்றியமையாததுமாகக் கல்வி அமைதல் வேண்டும். வாழ்க்கையைச் செவ்வனே அமைப்பதற்கும் அவ்வாழ்க்கை ஆன்ம ஈடேற்றத்திற்கு வித்தாக இருத்தல் வேண்டும் என்பதே பண்டையக் கல்வியின் நோக்கமாகும். மனிதனை அடிமைப்படுத்தும் தீய எண்ணங்களைப் போக்குவதற்குக் கல்வி உதவுதல் வேண்டும்.

கல்வித் தெய்வமானது உலகத்தில் என்றும் நிலைத்திருக்கக் கூடிய விழுமியங்களை விரும்புபவர்களால் தேடப்படுகின்றவள் என மகாநாராயண உபநிடதம் (143-1) கூறுகின்றது. அக்கினி என்னை அறிவுள்ளவனாக ஆக்கட்டும். இந்திரன் என்னிடத்தில் அறிவை உண்டாக்கட்டும் எனவும் கூறப்படுகிறது. உண்மை, அறிவு என்பவற்றில் விருப்பம் கொண்ட இந்திரன் நூற்றுஒரு வருடங்கள் கல்விக்காக செலவிட்டான் என சாந்தோக்கியம் (8,11-3) கூறுவதிலிருந்து கல்வியின் எல்லையற்ற தன்மை உணரப்பட்டமை நோக்கத்தக்கதாகும். கல்வி கரையில கற்பவரின் வாழ்நாளே சில என்ற (நால-கல்வி - 5) பாடல்வரிகளும் குறிப்பிடத்தக்கன. திருக்குறளில் கூறுவதற்கு (கல்வி - 7) ஒப்ப இங்கு வாழ்க்கை முழுவதும் கல்வி என்னும் கோட்பாடு பிரதிபலிக்கப்படுகின்றது. கற்றவை பயன்பட வேண்டுமாயின் அவை பயிற்சி செய்யப்படல் வேண்டும். மீண்டும் மீண்டும் சிந்திக்கப்பட வேண்டும் என பிருகதாரண்யக உபநிடதம் (1-3,28) கூறுகின்றது. மாணவர்களினுடைய தரத்திற்கு ஏற்ப கல்வி போதித்து வந்த தன்மையும் நாவன்மை பெரிதும் விரும்பப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். மாணவனுக்கு ஒழுக்கமும், மனவடக்கமும் முக்கியமான தகுதிகள் என கடோபநிடதம் கூறுகின்றது. அறச் செயல்களையுடையவர்களாகவும் புலனடக்கம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. ஆசிரியனும் மாணவனும் இணைந்து மிகுந்த கல்விப் பணி செய்வோமாக. எமது கல்வி பயனுடையதாகவும் உத்வேகமுடையதாகவும் இருக்க வேண்டும். நல்லவற்றை நாம் எப்போதும் கேட்கவேண்டும். அறிவு வேட்கைக்குத் தடை இருத்தல் கூடாது. அகமும், புறமும் ஒத்திசைதலுக்கு எமது கல்வி வழிவகுக்க வேண்டும். எனப்பலவாறு உபநிடதங்களில் பிரார்த்திக்கப்படுகின்றது. ஸ்வாத்யாயனம் - தற்கல்வி வலியுறுத்தப்படுகின்றது. அறிவுத் தேடலில் மாணவர் எப்போதும் ஈடுபட வேண்டும். ஆசிரியர் அறிவுத் தேடலுக்கு மாணவரை ஊக்குவிக்க வேண்டும். வினாவிடைமுறை பரிசோதனைமுறை, மாணவர்களின் முன் அறிவிற்கு ஏற்ற வகையில் கற்பித்தல், கேட்டல், சிந்தித்தல், மனதிலிருத்துதல் என்னும் கல்வி முறைகள் பற்றி சாந்தோக்கிய உபநிடதம் கூறுகின்றது.

கற்பவர், கற்கும் சூழ்நிலை, கற்றலின் செயற்பாடு, சமூக இயக்கம், மனவளர்ச்சி, குழுநடத்தை, கற்றல், ஊக்குவித்தல் என்பன கல்வியின் ஆளுமைக்கு காரணமாக அமைகின்ற காரணிகளாகும். கல்வியின் நோக்கம் அறநெறிப்பட்ட வாழ்க்கை பொருளீட்டுதல் இன்பங்களை நுகருதல், பேரின்ப வாழ்க்கை என்பன என்று நன்னூல் கூறுகின்றது. மேலும் கல்வியால் செருக்கடைதல் கூடாது. ஆசிரியர்களும் மாணவர்களும் தமக்குள் தாம் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஒழுக்கக் கல்வி எப்போதும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. மாணவன் நற்குண நற்செய்கை உடையவனாக அடக்கம், பொறுமை, கீழ்ப்படிவு, கற்கும் ஆர்வம் பெரியோரைக் கனம் பண்ணுதல், வெகுளாமை என்னும் பண்புகள் உடையவனாக இருத்தல் வேண்டும். உண்மை அழகு நன்மை ஆகிய பண்புகளை மலரச் செய்வதே கல்வியின் நோக்கமாகும்.

கீதையிலே (3-38) புகையினால் நெருப்பும், அழுக்கினால் கண்ணாடியும் கருப்பையினால் கருவும் மறைக்கப்பட்டிருப்பது போல மெய்ப்பொருள் மறைக்கப்படுகின்றது என உணர்த்துகிறார். மாணவர்களின் உள்ளத்தில் எவ்வித மறைப்பு உள்ளது என ஆசிரியர் அறிந்து அதற்கேற்றவாறு அழுக்கினை நீக்கி மாணவனின் உள்ளத்திலிருக்கும் ஆற்றலை வெளிக்கொணர வகை செய்தல் வேண்டும். மெய்கல்வியானது மனிதனிடம் உள்ளே இருக்கும் நிறைவுத்தன்மையை வெளிக்கொணர்தல் என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சமயம் மனிதனுடைய உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் ஒரு நெறியாகும். ஆற்றல்களைச் சார்ந்தே மனிதன் வாழ்கிறான். அவனுடைய ஆற்றல்களைத் தூண்டி ஊக்குவிக்கும் சக்தியாக மனஎழுச்சி ஆர்வம் என்பவற்றை மேம்படுத்துவதாக கல்வி அமைதல் வேண்டும். மனிதனுள் மறைந்து கிடக்கும் தெய்வீக பண்புகளான ஆற்றல்களை வெளிப்படுத்துவதே சமயக் கல்வியாகும். எத்தனை விதங்கள் தான் கற்கினும் கேட்கினும் என் இதயம் ஒடுங்கவில்லை என தாயுமானவரும் கல்லா நெஞ்சில் நில்லான் ஈசன் என ஞானசம்பந்தரும் கல்வி அழகே அழகு என நாலடியாரும் கல்வியின் பலன் அறிவு, அறிவின் பயன் ஒழுக்கம் என நாவலரும் கல்வியின் சிறப்பினை விதந்து கூறுகின்றனர்.

ஆசார்யாத் பாதம் ஆதத்தே பாதம் சகபிரம்மசாரிபி:
பாதம் சிஷ்ய, ஸ்வமேதயா பாதம் காலக்ரமேணச.

என ஒருவன் ஆசிரியரிடமிருந்து கால் பங்கினையும் தனது சக மாணவரிடமிருந்து கால் பங்கினையும் தான் சிந்தித்து கற்றல் மூலம் கால் பங்கினையும் அடைவதோடு மிகுதி கால் பங்கினைக் காலக்கிரமத்திலேயே உணர்ந்தறிகின்றான் என இங்கு கூறுவது கல்வி கரையில என்ற கூற்றிற்கு ஒப்பாக அமைகின்றது.

## உசாத்துணை நூல்கள்


01) **The Vedas and Indian Calture**
**Kireet Joshi - Delhi 1994**

02) புராதன இந்தியக் கல்வி முறை - **Dr.** சுவாமிநாத சர்மா
கல்கி - தீபாவளி மலர் - 1962

03) கல்வியின் குறிக்கோள் - பி. முத்தையா

04) உபநிடதக் கல்விச் சிந்தனைகள் - அ. இராமச்சந்திர சர்மா

உ
சிவமயம்

# சித்தாந்த சைவம்

க. இராசரெத்தினம் (ஆரையம்பதி)

இந்து மதம்:- பாரத நாட்டின் மேற்கே பாயும் நதி சிந்து, அந்நதியின் பள்ளத்தாக்கில் வாழ்ந்தவர்கள் பல்வேறு சமயங்களையும் கலாச்சாரத்தையும் கொண்டவர்களாவார்கள். இவர்களை மேல் நாட்டார் இந்துக்கள் எனவும் அவர்கள் பின்பற்றும் சமயங்களை இந்து சமயம் எனவும் கூறிவந்தனர். எனவே இந்து மதம் என்னும் போது, இந்து மதம் ஒரு தனிச் சமயம் அல்ல. இம்மதம் சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், சௌரம் கௌமாரம் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும். இவைகளில் சைவமே முக்கியத்துவம் பெறுகிறது. சைவம் வேதத்தைப் பொதுவாகவும் ஆகமத்தைச் சிறப்பாகவும் கொள்கிறது. கர்மக் கொள்கைகளும் மறுபிறப்புக் கோட்பாடுகளும் சைவத்திலுள்ளன. அறநெறி வாழ்க்கையையும் வற்புறுத்துவதும் சைவ சமயமேயாகும்.

மனிதர்கள் தங்கள் இஷ்டம் போல இன்பம் நுகரவும் தம் எண்ணம்போல நடக்கவும் கட்டுப்பாடின்றிக் காட்டு விலங்குகள் போலத் தங்கள் இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்வதினின்றும் விலக்கி அவர்களுக்கு நல்வழி காட்டுவதும் கட்டுப்பாடு விதிப்பதும் சமயம். இவற்றில் சிந்தனைக்குரிய கட்டுப்பாடு சித்தாந்த சைவத்திலுண்டு. சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் சைவம் இல்லை. தலைவனையும் தன்னையும் தன்னைச் சூழவுள்ள தளைகளையும் அறிந்து தடைகளை நீக்கி தலைவனைச் சார்ந்து வாழ்வதே சைவம்.

சைவம் சுத்தம், அசுத்தம், கடுஞ்சுத்தம், மார்க்கம் என நால் வகைப்படும். சுத்த சைவம் சடங்களவிலே நில்லாது சம்பிரதாயங்களைக் கடந்து தலைவனையும் தடைகளையும் தன்னையுமறிந்து தடைகளினின்றும் நீங்கி தலைவன் திருவடி சார்பு பெற்று வலம்வருவது சுத்த சைவம். பேரறிவுப் பிழம்பாம் பெரும்பொருள் சிவனை உணர்ந்து ஒப்பில்லா இன்பமுணர் ஒண்மையரே சுத்த சைவர். சுத்த சைவ சித்தாந்தமே வேதங்களின் முடிவு.

நினைப்பவைகள் அனைத்தையும் சிவன் சம்மந்தமாக நினைப்பதும் செய்யும் காரியங்கள் அனைத்தையும் சிவன் சம்மந்தமாகச் செய்வதும் ஆகிய சரியை கிரியை இரண்டும் சுத்த சைவமாகிற ஞான நிலைக்கு வாயில்களாக அமைவன. இவைகளை அடையும் வரையும் உள்ள நிலையே அசுத்த சைவமாகும்.

மார்க்க சைவம் விபூதி, ருத்ராட்சம், தாரணம் ஆகியன அணிந்து சைவ மார்க்கங்களில் பழகி ஞானம் பெறுவது.

*பொன்னாற் சிவகாத னம்பூதி சாதனம்*
*நன்மார்க்க சாதனம் மாஞான சாதனம்*
*துன்மார்க்க சாதனம் தோன்றாத சாதனம்*
*சன்மார்க்க சாதன மாஞ்சுத்த சைவர்க்கே*

~ திருமந்திரம் ~

சுத்த சைவன் மலமற்ற திருவடி உணர்வு சேர வேதாந்த சித்தாந்த பகுதியிலுள்ள சிவசிவ என்னும் மெய்யுணர்வு கைவந்த தவத்தோனாவான்.

உலகஞானம் அனைத்திலும் ஒட்டாமல் சிவபோதக நிலையில் செறிந்து விளங்குபவன் கடும் சுத்த சைவன். அகப்பற்றுப் புறப்பற்றுகளினின்றும் நீங்கி துன்பங்களைத் தரும் பாசமும் பசுத்தன்மையும் கெட சிவஞானம் வந்தெய்தும். இப்பேறுபெற்றவரே கடும் சுத்த சைவராவார்கள்.

## சரியை

சுத்த சைவராக வாழ்ந்து முத்திப்பேறு அடைதற்குச் சிலபடி முறைகள் உள்ளன. அவைகள் சரியை கிரியை யோகம் ஞானம் என்பவைகளாகும். "புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டு பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்து பாடி தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி சங்கரா சயபோற்றி" என்று தொண்டுபடுதல் சரியையாகும். மெய்யால் தீமை செய்யாது சிவத் தொடர்புடைய கருமங்களைச் செய்வது சுத்த சைவமாகிய ஞானச் சைவத்திற்கு உயிர் போல்வதாகும்.

சிவபெருமான் மெய்யடியார்கள் உய்யும் பொருட்டு ஆண்டாண்டு வெளிப்படுகின்ற திருநாடு திருநகரம் திருக்கோயில் முதலியவைகளைத் தேடித் திரிந்து "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்றபடி இடையறாது தொழுவர். இவர்கள் சிவநெறி நிற்போராவர்.

## கிரியை

சரியையிலே பிழையாது ஒழுகி சிவசக்தி முதிரப் பெற்று இவரதில்லைப் பிரானார் என்ற வைராக்கியத்துடன் விசேட தீட்சை பெற்று இறைவனைப் பூசித்தல் கிரியையாகும். எனினும் சிந்தனையோடு கூடிய செயல், அதாவது சிந்தனையும் செயலும் இணைந்து இறைத் தொடர்புடையதே கிரியை எனலாம். இங்கே சிவபூசையும் தியானமும் இடம்பெறுவன. பூசை ஆன்மார்த்த பூசை பரார்த்த பூசை என இருவகைத்து. ஆன்மார்த்த பூசை சிவனை எழுந்தருளச் செய்து தன் நன்மைக்காகத் தனியிடத்திலிருந்து வழிபடுவது. பரார்த்த பூசையானது சிவலிங்கத் திருமேனியை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து உலகம் உய்யும் பொருட்டு வழிபடுவதாகும்.

இப்பூசை செய்யுங்கால் அன்பு கலந்திருக்க வேண்டுமென திருமூலநாயனார் வற்புறுத்துகின்றார். உடற்பற்றினை நீக்கி நல்லுணர்வோடு வழிபட்டாலன்றி திருவடியின்பத்தை அடைய முடியாதென்பது திருமூலர் வாக்கு.

***"கானூறு கோடி கடிகமழ் சந்தனம்***
***வானூறு மாமல ரிட்டு வணங்கினும்***
***ஊனினை நீக்கி உணர்பவர்க்கல்லாது***
***தேனமர் பூங்கழல் சேரவொண்ணாதே"***

~ திருமந்திரம் ~

## யோகம்

யோகம் என்பது மனதை இறைவனிடம் சேர்த்தலும் மூலாதாரத்திலுள்ள குண்டலியினோடு கூடிய பிராணனைத் துவா சாந்தத்தில் விளங்கும் சிவத்தோடு சேர்த்தலுமாகிய இரண்டுமாகும். நம்பிராணனை குண்டலி என்னும் சத்தியோடு எழுப்பி மேலேயுள்ள உச்சியில் விளங்கும் கடவுளோடு சேரத் தியானித்து அதற்குமேல் ~ அதாவது சிரத்திற்கு மேல் பன்னிரண்டு அங்குல அளவில் விளங்கும் உருவற்ற ஒளிப்பிழம்பாகிய பரசிவத்தோடு ஒன்ற வைப்பது யோகம்.

***"நெறிவழியே சென்று நேர்மையுள் ஒன்றித்***
***தறியிருந் தாற்போல் தம்மையிருத்திச்***
***சொறியினும் தாக்கினும் துண்ணென் றுணராக்***
***குறியறிவாளர்க்குக் கூடலு மாமே"***

~ திருமந்திரம் ~

## ஞானம் :-

ஞானம் என்பதறிவு. இயற்கையான அறிவு பசு ஞானம். இது உயிர்கள் கண்டதைப் பற்றிக் கண்டளவில் நிற்பதாயினும் கற்பனையால் பெருக்கமுறும். பாச ஞானம் பல நூல்களைப் படிப்பதால் ஏற்படுவது.

பசு ஞானமும், நூலறிவால் வளர்ந்து படிப்பளவில் நிற்கும்போது ஏற்படும் பாச ஞானமும் ஆகிய இவைகளிரண்டும் கடவுள் உணர்ச்சிக்கு வழியாகப் பயன்படுமேயன்றி கடவுள் உணர்ச்சியாகாது. ஆதலால் திருமூலநாயனார் உணர்த்தும் ஞானம் இறைவனைப் பற்றியதாய்ச் சிவாநந்தமாகிற இன்பத்தைக் கூட்டும் பரஞானமாகும்.

*"ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை*
*ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று*
*ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா*
*ஞானத்தின் மிக்கவர் நாரின்மிக்கவரே"*

ஞானத்தின் சிறந்து விளங்குகின்றவர்களே மக்களின் பெரியவர்கள். ஞானநெறிக்கப்பாற்பட்ட சமயநெறி எதுவும் உயிர்கட்கு நன்மை தருவதன்று. ஞான வரம்பைக் கடந்த எச்சமயங்களும் நன்மை பயக்கும் வீடுபேற்றினை நல்குவன அல்ல. ஞான நெறியிற் சிறந்தவர்களே மனிதர்களில் தலையான மனிதர்கள் ஆவார்கள். சிவஞானம் கைவரப் பெற்றவர்கள் சமய விசேட நிர்வாண அபிடேக தீட்சைகள் பெற்றவர்களாவார்கள்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவைகளின் தன்மையையும், இயல்பையும் பேற்றையும் கொண்டு அவைகளை வேறுபெயர்களால் அழைக்கப்படுகிறது.

சரியை தாசமார்க்கமென்றும் கிரியையை சற்புத்திர மார்க்கமென்றும் யோகத்தை சகமார்க்கமென்றும் ஞானத்தை சன்மார்க்கமென்றும் அழைக்கப்படுகிறது.

## தாசமார்க்கம் :-

தாசமார்க்கம் என்பது அடிமை நெறி. இறைவனைவிட்டு விலகாது அவன் குறிப்பின் வழி ஒழுகும் நெறியாகும். அடியார்க்கு எளியனாய் ஒழுகுதல். திருக்கோயில்களில் விளக்கிடுதல், நந்தவனத்தில் மலர்கொய்தல், அன்புடன் மெழுகுதல், திருவலகிடுதல், திருமுறை திருப்பதிகங்கள் பாடுதல் ஓதுதல், ஆலயமணிகள் அடித்தல் இவ்வாறான திருத்தொண்டுகள் புரிதல் அடிமை நெறியாகும்.

## சற்புத்திரமார்க்கம் :-

இது மகன்மைநெறி. நன்மக்கள் எவ்வாறு தாய் தந்தையர் பணிவழி நிற்பார்களோ அதுபோல சிவப் பணிவழி நிற்பது சற்புத்திரமார்க்கம். இது சிவ பூசையாகிய கிரியையை அதாவது சிவபோகத்தைப் பயப்பது.

இறைவனை ஆராதித்தல், அருள்நூல்களை வாசித்தல், இறைவனைத் துதித்துப் போற்றுதல், அவன் திருப்பெயரை மனதில் தியானித்தல், அன்புடன் திரு அமுதுகாட்டி நீரால் சுத்திசெய்தல் இவைகளே சற்புத்திர மார்க்கத்தின் நெறிகளாகும்.

இறைவனைப் பூசித்தல், அவனை நேசித்தல், அவன் புகழையே பேசுதல், வாசித்தல் வணங்குதல் செபித்தல், உண்மை பேசுதல், அழுக்காறு முதலிய மனமாசு களைதல், ஆன்ம சுத்தி செய்தல் ஆகியன சற்புத்திரமார்க்க நெறிகளாகும்.

## சகமார்க்கம்:-

இது தோழமை நெறி. இறைவனால் தோழனாக ஒத்துக்கொள்ளப் பெற்று அவனை என்றும் நீங்காது ஒழுகுதல் யோகநெறி என்னும் சகமார்க்கமாகும். தோழமை நெறி இறைவனை இடைவிடாது பக்தி பண்ணுவதாதலின் அதுவே ஞான நெறியாகிய பயனைத் தரவல்லது. சகமார்க்கத்தில் நிலைக்காதார்க்கு இம்மை மறுமை ஒன்றுமில்லை என்பது திருமூலர் வாக்கு. இச்சகமார்க்கமே யோகசமாதி. இதனுள்ளே எல்லா பிரபஞ்சங்களும் அடங்கி நிற்கும். ஒளிவடிவாகிய சிவமும் சக்தியுமுள்ளன.

## சன்மார்க்கம்:-

காதன்மை நெறி. இது நன்நெறி. நன்நெறியாவது நமச்சிவாயவே என்பார். தன்முனைப்பகற்றி தாடலையாக அடங்கியிருப்பதே ஞானநெறி.

***"சாற்றும் சன்மார்க்கமாம் தற்சிவ தத்துவம்***
***தோற்றங்களான சுருதிச் சுடர்கண்டு***
***சீற்ற மொழிந்து சிவயோக சித்தராய்க்***
***கூற்றத்தை வென்றார் குறிப் பறிந்தாரே"***

– திருமந்திரம் –

தமிழ் வேதாகமங்கள் கூறும் சிவபெருமானின் உண்மைத் தன்மை உணர் ஒளியினைக் கண்டு சீற்றம் முதலிய செருக்குகளகன்று சிவபோக சித்தராய் வாழ்வார் சன்மார்க்க நெறியாளர். வையத்து வாழ்வாங்கு வழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவானன்றோ.

சைவ சமயத்திற்கு பெருமையைத்தரும் ஒப்பற்ற தலைவனாகிய சிவ பரம் பொருள், ஆன்மாக்கள் அறிந்து உய்ய வகுத்துக் கொடுத்த குரு உபதேசம் தெய்வநெறியாகிய சன்மார்க்கமாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்கள் மூலம் சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியமாகிய முத்திகளை எய்தலாம்.

சிவபெருமானை அடைவதற்குரிய மாதவம் என்னும் நன்னெறி இருக்கும் போது புன்நெறிக்கண் செல்லும் கொடிய வினையின் பற்றற்று செல்லாமல் அப்புன்னெறியின் வழியே செல்லும் கொடுவினையார் சார்பை விட்டு அகன்று நன்னெறிக்கண் செல்பவர்களுக்கு முழுமுதற் தலைவனாகிய சிவபெருமான் முன்னின்றருள்வன் என சித்தாந்த சைவம் கூறுகின்றது. எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கிங்கே என்றருள் புரிவன் எம்பெருமான். எனவே

சித்தாந்த சைவ நெறி நின்று நற்பேறு பெறுவோமாக.

***நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்***
***சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்***
***குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்***
***கறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே.***

உ

# கந்தபுராணத்தின் தத்துவப் பொருள்

**க. தங்கேஸ்வரி**

(கலாசார உத்தியோகத்தர் – மட்டக்களப்பு.)

## 1. கர்மா, பக்தி, ஞானம்:

இந்து சமயத்தில் இறைவனை அடைவதற்கு மூன்று வழிகள் கூறப்படுகின்றன. அவை கர்மா, பக்தி, ஞானம் எனப்படும். பகவத்கீதையில் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என வருவது இங்கு நோக்கற்பாலது.

மக்கள் தத்தமது ஆத்மீக பக்குவத்திற்கேற்ப, இவ்வழிகளில் நாட்டம் கொள்வர். பாமர மக்கள் தொண்டுகள் மூலமும் (கர்மா) படித்தவர்கள் பக்தியின் மூலமும், (பக்தி) ஞானிகள் ஞானத்தின் மூலமும் இறைவனை நாடுகின்றனர்.

இவற்றுள் பெரும்பாலானோர் மிக இலகுவாகப் பின்பற்றக் கூடிய வழி "பக்திமார்க்கம்" என்பது சொல்லாமலே விளங்கும். இந்து மக்களைப் பக்தி மார்க்கத்தில் இட்டுச் செல்வதற்கு ஏராளமான பக்தி இலக்கியங்கள் உள்ளன. பன்னிரு திருமுறை, மெய்கண்ட சாத்திரங்கள், திருப்புகழ் முதலாம் தோத்திரங்கள் முதலியன இதில் அடங்கும்.

இவற்றைவிட புராண, இதிகாசங்களே படித்தவரையும் பாமரரையும் ஒரு சேரக் கவர்ந்து பக்தி மார்க்கத்தில் இட்டுச் செல்லும் வழியாக நடைமுறையில் உள்ளது.

இதிகாசங்கள் மூன்று, (மகாபாரதம், இராமாயணம், சிவரகசியம்) புராணங்கள் பலவுள. அவற்றுள் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியன மிகவும் பிரசித்தமானவை. இந்துக்களோடு இவை இரண்டறக் கலந்து விட்டவை என்று கூறும் அளவுக்கு தலைமுறை தலைமுறையாக மக்கள் மத்தியில் இவை நின்று நிலவி வருகின்றன.

இப்புராணங்களுள் கந்தபுராணம் முருகனின் திருவிளையாடல்கள் பற்றிக் கூறுகின்றது. அதன் உள்ளே மக்கள் அறியவேண்டிய மிக முக்கியமான சமய தத்துவம் அடங்கியுள்ளது.

## 2. புராணங்களின் உட்பொருள்:

இந்து சமயத்தில் கந்தபுராணம் ஒரு முக்கியமான பக்திநூல் ஆகும். இதில் முருகனுக்கு இரு மனைவியர் அமைவதாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. வள்ளி, தெய்வானை என்ற இந்த இருவரும் இச்சாசக்தி, கிரியாசக்தி என்னும் இரு சக்திகளின் உருவகமாகும் என்பதை ஏற்கனவே சமய அறிஞர்கள் கூறியுள்ளனர். சமய விளக்கவுரை நூல்கள் விரிவாகக் கூறியுள்ளன.

அக்கினியும் அதனுள் மறைந்து நிற்கும் சூடும் போல இறைவனிடம் திருவருட் சக்தி மறைந்து நிற்கிறது. செயற்பாட்டின் போது இச்சக்தி பல்வேறு பெயர்களைப் பெறுகிறது. பல்வேறு நாம ரூபங்களில் வழிபாடு செய்யப்படுகின்றது.

உயிர்கள் மல பந்தங்களினின்றும் நீங்கி இறைவன் அருள்பெறும் பொருட்டு இறைவன் எண்ணற்ற திருவிளையாடல்களைப் புரிகிறான். (புராணங்களில் மட்டுமல்லாது இன்றைய விஞ்ஞான உலகிலும் அது நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது)

இவ்வாறு இறைவன் புரியும் திருவிளையாடல்கள் புராணங்களில் கூறப்பட்டுள்ளன. புராணக் கதைகளுக்கு செம்பொருள் (வெளிப்படையானது) குறிப்புப்பொருள் (தொக்கி நிற்பது) என இருவகைப் பொருள்கள் உள. செம்பொருள் கதையையும் குறிப்புப்பொருள் கதையில் உள்ளார்ந்து நிற்கும் தத்துவத்தையும் கூறும். அவை வேதம், உபநிடதம், ஆகமம் முதலியவற்றில் கூறப்பட்டுள்ள தத்துவங்களாகும்.

வேதம், உபநிடதம், ஆகமம் முதலியன மூன்று உண்மைகளை வலியுறுத்திக் கூறுகின்றன. அவை பதி (இறைவன்) பசு (உயிர்கள்) பாசம் (உலக பந்தம்) ஆகும். இவற்றை விளங்கிக் கொண்டால் கடவுள், மனிதன், உலகம் ஆகியவற்றுக்குள்ள பிணைப்பையும் அதன் மர்மங்களையும் நாம் விளங்கிக் கொள்ளலாம்.

## 3. இறைவனால் உயிர்கள் ஆட்கொள்ளப்படுதல்:

உயிர்கள் எண்ணற்ற பிறவிகளை எடுத்துத் தமது கர்மவினைகளைக் களைந்தபின் இறைவனோடு இரண்டறக் கலக்கின்றன என்பது இந்துமத தத்துவம்.

இச்செயற்பாட்டில் பக்குவமடைந்த உயிர் தானாகச் சென்று இறைவனை அடையும். அது மாற்கட சம்பந்தம் எனப்படும். இதற்கு உதாரணம் தெய்வானையின் திருமணம்.

பக்குவமடையாத உயிர்களை, இறைவன் குருவடிவு கொண்டு ஆட்கொள்வான். இது மார்ச்சால சம்பந்தம் எனப்படும். இதற்கு உதாரணம் வள்ளியம்மையின் கதை.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" (திருமூலர்) என்றும் "ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி" (உண்மைப்பொருள் ஒன்று, பக்தர்கள் அதைப் பலவாறாகக் காண்கின்றனர்) என்றும் இந்துமதம் வலியுறுத்திக் கூறுகின்றது.

இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களைச் செய்கிறான். இதன் மூலம் உயிர்களை ஆட்கொள்கிறான். மலபந்தத்தால் பாதிக்கப்பட்ட உயிர்கள் பூமியில் பிறந்து, தமது கர்ம வினைகளுக்கேற்ப இன்ப, துன்பங்களை அனுபவித்துப் பின் இறைவனை அடையும். இறைவனின் ஐந்து தொழில்களும் இதில் சம்பந்தப்படுகின்றன.

மலத்தால் (கர்மவினை) கட்டுண்ட உயிர்களை இறைவன் குருவாக வந்து, கர்மவினை நீக்கி. தனது திருவடியின் கீழ் சேர்த்துக் கொள்ளும் நிகழ்வு அன்று முதல் இன்றுவரை நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது. இந்து சமயத்தில் எண்ணற்ற ஞானியர், குருவடிவில் வந்து திருவருள் பாலித்து, உயிர்களை இறைவன் திருவடியில் சேர்க்கின்றனர். இந்து சமயத்தில் இதை நாம் இன்றும் கண்கூடாகக் காண்கின்றோம்.

இத்தத்துவத்தையே கந்தபுராணம், கந்தன், வள்ளி காதற் கதை மூலம் மறைமுகமாக உணர்த்துகின்றது.

## 4. வள்ளியின் கதை:

தொண்டை நாட்டில் மேற்பாடி என்னும் பதியில் வள்ளிமலையின் சோலை ஒன்றிலே சிவமுனி என்பார் தவம் செய்து கொண்டிருந்தார். அவர் முன் அழகிய பெண்மான் ஒன்று துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. சிவமுனி தன் தவத்தை மறந்து அக்காட்சியிலே ஈடுபட்டார். (மகா விஷ்ணுவே இச்சிவமுனி ஆவார்) அவரது அருள் நோக்கினாலே, அம்மான் கருவுற்றது. இம்மான் வள்ளிமலையில் மேலேறி, வள்ளிக்கிழங்கு கல்லி எடுத்த குழி ஒன்றில் பெண்குழந்தை ஒன்றை ஈன்றது. தனது குட்டி, மானாக இல்லாமல் பெண்ணாக இருந்ததால் தாய் மான் அவ்விடத்தை விட்டு அகன்றது. குமரன் என்ற வேடர் தலைவன் இக்குழந்தையை எடுத்துச் சென்று வளர்த்தான்.

வள்ளி பராயம் அடைந்ததும் தினைப்புனக் காவலுக்குச் சென்றாள். முருகன் மானிட வடிவம் தாங்கி வள்ளியிடம் வந்து சரசமாடி, பின்னர் தன் அருள் வடிவை வெளிப்படுத்தி அவளை ஆட்கொள்கிறான். இவ்வருட்செயல் (ஐந்தொழில்களில் ஒன்றாகிய அருளால்) வள்ளி திருமணம் என வர்ணிக்கப்படுகிறது. பின் இருவரும் திருப்பரங்குன்றம் செல்கின்றனர்.

திருப்பரங்குன்றம் சென்ற முருகனையும் வள்ளியையும் தெய்வானை உபசரிக்கிறாள். முருகன் (இறைவன்) இருவரதும் பூர்வகதையைக் கூறுகிறார்.

ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்குப் பிறந்து சரவணப்பொய்கைக் கரையில் தவம் செய்தபோது வேண்டிக்கொண்டபடி மூத்தவளான தெய்வானை தெய்வேந்திரனுக்குப் பிறந்தாள் எனவும், இளையவளான வள்ளி பெண்மானிடத்தில் பிறந்து வேடர் தலைப் பெண்ணாக வளர்ந்தாள் எனவும் கூறுகிறார்.

உயிர்கள் தத்தம் கர்மவினைகளுக்கேற்ப பிறவிகளை எடுத்து ஈற்றில் இறைவனை அடையும் என்பதை இக்கதை எடுத்துக் காட்டுகிறது.

## 5. சங்கத் தமிழ் நூல்கள் கூறுவது:

முருக வழிபாடானது தமிழ்நாட்டில் ஒரு வகையாகவும் வடநாட்டில் வேறு வகையாகவும் அமைகிறது.

வடநாட்டில் குமரன் என்ற பெயருடன் முழுமுதற் கடவுளாக வணங்கப்படுகிறான் முருகன். ஆனால் கௌமார சமயத்தினர் அவனை சுப்பிரமணியன், கார்த்திகேயன் என வழிபடுகின்றனர். வடமொழி நூல்களின்படி முருகனுக்கு மனைவியர் இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் முருகன், வள்ளி, தெய்வானை என்ற இரு சக்திகளுடன் வணங்கப்படுகின்றான்.

தமிழ்நாட்டில் நிலங்கள் ஐந்து வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மலையும் மலைசார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்தெய்வமாக முருகன் கற்பிக்கப்படுகின்றான்.

இறைவனின் திருவிளையாடல்களைக் கூறுவது புராணங்கள் என முன்னர் கூறினோம். இப்புராணக் கதைகளில் இறைவனின் சக்தியை மனைவி என உருவகப்படுத்துவர். குறிஞ்சி நிலக்கடவுளான முருகக் கடவுளுக்குக் குறமகளான வள்ளியை மனைவியாகக் கூறியுள்ளனர்.

பழந்தமிழ் நூல்களில் முருகனின் சக்தியாக பெரும்பாலும் வள்ளி மட்டுமே கூறப்பட்டுள்ளாள். சங்ககால இலக்கியங்களுள் ஒன்றான பரிபாடலில், எட்டுப் பாடல்களில் முருகன் "செவ்வேள்" எனக் குறிப்பிடப்படுகிறான். வேலன், கடம்பன், செவ்வேள் எனக் குறிப்பிடப்படும் முருகன் "வள்ளி மணாளன்" எனக் குறிப்பிடப்படுகிறான்.

"குறப்பினாக் கொடியைக் கூடினாய்" எனவும்

"நறுமலர் வள்ளிப்பூ நயந்தாயே" எனவும்

பாடல்வரிகள் வருகின்றன.

மிகப்பழமையான தமிழ் இலக்கண நூலான "தொல்காப்பியத்தில்" "சேயோன்" என முருகன் குறிப்பிடப்படுகிறான். (சேயோன்மேய மைவரை உலகமும் என வருவதால் முருகன் மலைத்தெய்வம் - குறிஞ்சித் தெய்வம் என்னும் கருத்தும் தொல்காப்பியத்தில் இடம்பெறுவது கவனத்திற் கொள்ளத்தக்கது)

## 6. பிற இலக்கியக் கருத்துக்கள்:

"தொல்காப்பியம்" என்னும் இலக்கன நூல் கி.மு. 6000 ஆண்டிற்குரியது என்பது பொதுவான கருத்து. (தொல்காப்பியம், சொல்லதிகாரம், ஆராய்ச்சி முன்னுரையில், தொல்காப்பியருடைய காலம் கி.மு. 5320 என வெள்ளைவாரணனார் குறிப்பிட்டுள்ளார்)

எனவே கி.மு. 5320க்கு முன்பே முருகவழிபாடு இருந்தது எனலாம். அக்காலத்திலும் முருகனின் சக்தியாக வள்ளி மட்டுமே குறிப்பிடப்படுகிறாள். அகநானூறு, நற்றிணை முதலிய சங்ககால நூல்களிலும் வள்ளி மட்டுமே முருகனின் சக்தியாகக் குறிப்பிடப்படுகிறாள். மற்றொரு சங்கநூலான திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் பின்வருமாறு கூறுகிறார்.

"குறவர் மடமகள் கொடிபோனுசுப்பின்
மடவரல் வள்ளியோடு நகையமர்ந்தன்றே"

(கி.மு. 5000 ஆண்டுமுதல் வள்ளி மட்டுமே முருகனின் சக்தியாகக் குறிப்பிடப்படுவது விசேட கவனத்திற்குரியது.).

பழந்தமிழ் நூல்கள் எல்லாம் வள்ளியை மட்டும் முருகனின் சக்தியாகக் குறிப்பிட, காலத்தால் பிற்பட்ட "கந்தபுராண'த்தில் தெய்வானையையும் சேர்த்து இரு சக்திகளாகக் கற்பிக்கப்பட்டிருப்பது, பக்தி இலக்கியங்களுக்கே உரித்தான உருவகம் என நாம் கொள்ளலாம். இதற்கு மற்றொரு காரணமும் கூறப்படுகிறது.

முருகவணக்கம் மிகத் தொன்மையானது. புதிய கற்காலத்தில் "வேல்" வணக்கமாக ஆரம்பித்த இவ்வழிபாடு, பின்னர் முருகவணக்கமாக மாறியது. அதன்பின்னர் வள்ளி என்ற சக்தியும் முருகனுடன் சேர்த்து வழிபாடு செய்யப்பட்டது. வேட்டையாடுதல், மந்தை மேய்த்தல் முதலிய தொழில்களைச் செய்த மக்கள் கூட்டம் பின்னர் விவசாய சமூகமாக மாறியபோதே 'தெய்வானை" என்ற சக்தியும் வள்ளியுடன் சேர்க்கப்பட்டதென்ற கருத்தும் உண்டு.

பக்திக்காலத்தில் முருகன், வள்ளி, தெய்வானை என்ற கருத்துருவம் "கந்தபுராண"த்தின் மூலம் வலுப்பெற்றது எனலாம்.

## 7. கதிர்காமத் தலம்:

முருக வழிபாட்டின் மிகத் தொன்மையான வணக்கத் தலங்களுள் ஒன்றாக ஈழநாட்டின் தென்கோடியில் உள்ள கதிர்காமத்தைக் குறிப்பிடலாம். குறமகள் வள்ளி பற்றிய கதையும் வேடர்களின் குலதெய்வமாக முருகன் வழிபாடு செய்யப்பட்ட வரலாறும் இங்கு ஆழமாக வேரூன்றியுள்ளன.

இங்குள்ள தெய்வ சாந்நித்தியம் பற்றியும், முருகன் அருளால் நிகழும் அற்புதங்கள் பற்றியும் ஏராளமான கதைகள் உள்ளன. இவை கற்பனைக் கதைகளாக இல்லாமல் பக்தர்கள் பெற்ற நேரடி அனுபவமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

முத்துலிங்க சுவாமி என்னும் சித்தர் இங்கு வாழ்ந்தது அண்மைக்கால வரலாறு. ஆனால் கி.பி. 4ம் நூற்றாண்டில் தென்னிலங்கையில் ஆட்சி செலுத்திய பாண்டிய வம்சத்தினர் "கதிர்காமச் சத்திரியர்" என அழைக்கப்பட்டதும் இவர்கள் காலத்தில் வெள்ளரசு மரக்கிளை ஒன்று இங்கு நடப்பட்டதும், இத்தலத்தின் தொன்மையை எடுத்துக்காட்டும்.

கி.மு. 2.....ல் வாழ்ந்த துட்டகைமுனு இத்தலத்தில் வணக்கம் செலுத்தினான் என்பது மகாவம்சம் தரும் செய்தி. இத்தலத்திலும் முருகன், வள்ளி வரலாறு முக்கியத்துவம் பெறுகிறது. தெய்வானை இரண்டாம் பட்சமாகவே கொள்ளப்படுகிறது.

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், கதிர்காமத் தலம் பற்றிப் பாடும்போது "வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே" எனப்பாடுவார். கதிர்காமத்தல உற்சவத்தின் போது வேட்டுவ இனத்தைச் சேர்ந்த ஏழுபெண்கள் இன்றும் முன்னுரிமை பெறுகின்றனர். இவர்கள் முருகப்பெருமான் வள்ளியை மணந்து கொண்டதால் இவ்வுரிமையைப் பெறுகின்றனர் என்பது ஒரு ஐதிகம். ஆனாலும் முருகன், வள்ளி இணைந்த வழிபாடே ஆதிகாலத்தில் இருந்தது என்னும் கருத்துக்கு இத்தகைய சம்பிரதாயங்கள் வலுவூட்டுகின்றன எனலாம்.

## 8. கந்தபுராண கலாசாரம்:

புராணங்களை எள்ளி நகையாடும் ஒருவகை மனப்போக்கு இன்றைய ஒருசில இளைஞர்களிடம் காணப்படுகிறது. ஆனால் இப்புராணங்களால் ஏற்பட்டுள்ள சாதகமான பலாபலன்களை இவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

காலம் காலமாக இவை இந்து மக்களின் இதயங்களில் வேரூன்றி நிலைத்திருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன? கதைகளின் தத்துவங்களை அறியாமலே முழு நம்பிக்கையுடன் அவர்கள் ஈடுபடுவதால் இறைபக்தியும், மனித நேயமும் இவர்கள் இதயங்களில் ஆழமாக விதைக்கப்படுகின்றன. இப்புராணங்களை ஆதாரமாகக் கொண்டு, விரதங்கள் அனுஷ்டிப்பதும், திருவிழாக்கள் நடாத்துவதும் எந்த வகையிலும் அவர்களை பிழையாக வழிநடத்தவில்லை.

கந்தபுராணத்தை ஏளனமாக நோக்குவோருக்கு இங்கு ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லி வைக்க வேண்டும்.

1979ம் ஆண்டுமுதல் (இடையில் கலவர காலத்தில் சில வருடங்கள் தவிர) பக்தகோடிகளைச் சேர்த்துக் கொண்டு, ஆண்டுதோறும் கால்நடையாகவே கதிர்காமத்துக்குச் செல்லும் அமெரிக்க இளைஞர் ஒருவர் உள்ளார். அவர் பெயர் பற்றிக் ஹரிகன் என்பதாகும். கந்தபுராண கலாசாரத்தால் கவரப்பட்ட இவர் சென்னையில் உள்ள ஆசியவியல் நிறுவனத்தில் **(Institute for Asion Studies)** ஸ்கந்த - முருக ஆய்வு நிலையம் ஒன்றை நிறுவி, உலகளாவிய ரீதியில் ஆராய்ச்சி மாநாடுகளை நடாத்தி வருகிறார். இதன் முதல் மாநாடு 1999ல் சென்னையில் நடைபெற்றது. அதன்பின்னர் இருமுறை இம்மாநாடு நடந்துள்ளது.

முருக வணக்கத்தின் பல்வேறு அம்சங்களையும் அறிவு பூர்வமாக ஆராய்வது இந்த ஆய்வு மாநாடுகளின் நோக்கமாகும். இந்நிலையத்தின் தலைவர் சாமுவேல் ஜோன்சன் என்னும் கிறிஸ்தவராகும்.

ஈழத்தில் உள்ள பல்கலைக்கழகப் பிரமுகர்களுக்கும், கந்தபுராண கலாசாரத்தை ஏளனமாக நோக்கும் இளைஞர்களுக்கும் இத்தகவல் சமர்ப்பணம்.

## 9. தொகுப்புரை:

**(I)** புராணங்கள் அனுபூதிமான்களால் அருளப்படுவதால் அவை தெய்வத்தின் குரலாக அமைகின்றன. முழுநம்பிக்கையுடன் அவற்றைப் பாராயணம் செய்வது இறையருள் பெற உதவுகின்றது.

**(II)** இந்து சமயத்தில் கச்சியப்ப சிவாசாரியார் அருளிய கந்தபுராணமும் சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணமும் மேற்குறித்த வகையில் பாராயண நூல்களாக அமைகின்றன.

**(III)** கந்தபுராணத்தின் கதை மகத்தான இந்து சமய தத்துவங்களை உள்ளடக்கியது. அவற்றை அறிந்திருக்காவிட்டாலும், கதையை முழுநம்பிக்கையுடன் படிப்பது பயன் தருகிறது.

**(IV)** கந்தபுராண கலாசாரம் இந்துக்களின் வாழ்வுடன் இரண்டறக் கலந்துள்ளது.

**(V)** கந்தபுராண கலாசாரம் ஸ்கந்த - முருக ஆய்வு நிலையம் ஒன்றைத் தோற்றுவித்து உலகளாவிய ரீதியில், சர்வதேச ஆய்வு மாநாடுகளை நடாத்த உந்துசக்தியாக அமைந்துள்ளது. இதன் மூலகர்த்தா ஒரு அமெரிக்க, கிறிஸ்தவ இளைஞர் - பற்றிக் ஹரிகன் ஆவார்.

## உசாத்துணை நூல்கள்:

1. கந்தபுராணம் - கச்சியப்ப சிவாச்சாரியார்
2. கந்தபுராணம் (நவாலியூர் சோமசுந்தரப் புலவர்)
3. கதிர்காமபிள்ளைத் தமிழ் (புலவர் சிவம் கருணாலய பாண்டியனார்)
4. பரிபாடல், நற்றிணை, குறுந்தொகை
5. திருமுருகாற்றுப்படை (நக்கீரர் அருளியது)
6. தொல்காப்பியம், சொல்லதிகாரம் (வெள்ளைவாரணனார்)
7. ஸ்கந்த - முருக ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்.

உ

# பண்டைய ஈழக்குடியினரிடையே முருக வழிபாடு

*ஆய்வாளர்*
*நா. நவநாயகமூர்த்தி* (அக்கரைப்பற்று)

ஈழத்தவரிடையே நிலவி வரும் முருக வழிபாட்டுப் பாரம்பரியம் மிகத் தொன்மை வாய்ந்தது. இதனை ஆய்வுகள் உணர்த்துகின்றன. குறிப்பாகத் தென்னிலங்கையின் அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களிலும், தென்கிழக்கிலங்கையிலும் (அம்பாறையை உள்ளடக்கிய மட்டக்களப்பு) கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள் மூலமாக ஈழத்தவரிடையே நெடுங்காலம் தொட்டு முருக வழிபாடு நிலவி வந்துள்ளதை அறிய முடிகின்றது.

மேலும் தென்னிலங்கையில் அமைந்துள்ள கதிர்காமம், தென்கிழக்கிலங்கையிலுள்ள உகந்தை, திருக்கோவில், மண்டூர் ஆகிய பண்டைய முருக தலங்களும், இதற்குச் சான்றுகளாகும். இத்தலங்கள் யாவும் ஒரே கால கட்டத்தில் ஓரின மக்களால் தோற்றுவிக்கப்பட்டவை என்பதைத் தொல்லியல் சான்றுகளும் இலக்கியங்களும் உறுதிசெய்கின்றன.

## பண்டைய ஈழக்குடியினர்

ஆதிகாலத்தில் இத்தீவில் வாழ்ந்திருந்த மக்கள் பற்றித் தொல்லியல் ரீதியாக நோக்குமிடத்து கி.மு 28000 லிருந்து நுண்கற்காலப் பண்பாட்டைப் பின்பற்றிய மக்கள் இங்கு வாழ்ந்திருக்கலாம் எனக் கூறமுடிகின்றது. (**DERANIYAGALA - 1984 : 105 - 108**) இம்மக்கள் தாழ்நிலம் தொட்டு மலைநாடு வரை வாழ்ந்திருக்கலாம் என்பதை மாதோட்டம், பூநகரி, மாங்குளம், பொம்பரிப்பு, அனுராதபுரம், இரத்தினபுரி, பலாங்கொடை போன்ற இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதி செய்கின்றன. இம்மக்களை "ஆதி ஒஸ்ரலோயிட்" வர்க்கத்தினரெனவும் இவர்கள் பேசியமொழி ஒஸ்ரிக் எனவும் கூறப்படுகின்றது.

விஜயன் இங்கு காலடி எடுத்து வைக்க முன்பு இங்கு வாழ்ந்து வந்ததாக மகாவம்சம் கூறும் இயக்கர், நாகர் இவர்களாகவிருக்கலாம் என்ற கருத்துண்டு. மொழியியல் மானுடவியல் அடிப்படையில் இவர்களும் தென்னிந்தியாவில் வாழ்ந்து வந்த மக்களும் ஒரே வர்க்கத்தினர் எனக் கூறப்படுகின்றது. அதிலும் தமிழ்நாடு தேரி கலாசார மக்களது தனித்தன்மை கொண்ட கல்லாயுதங்கள் தமிழகத்தை அடுத்து இலங்கையில் காணப்படுவதால் தமிழ் நாட்டிலிருந்தே இவர்கள் புலம்பெயர்ந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது.[1] இக்காலத்தில் (கி.மு 4000) அதாவது இற்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்துமா கடலில் பரந்திருந்த லெமூரியா கண்டம் என்ற பெருநிலப்பரப்பில் தென்னிந்தியா, ஈழம், மாலைதீவுகள் அடங்கியிருந்தன.[2] இவ்வேளையில் கடல் கொண்ட லெமூரியா என்ற குமரிக் கண்டத்தில் இலங்கை பெருநிலப் பரப்பாகவிருந்தது.[3] என அறிய முடிகின்றது.

இடைக்கற் காலத்தைத் தொடர்ந்து தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் நிலவியிருந்த புதிய கற்காலத்தில் (கி.மு 4000 1000) தற்காலத் திராவிடரின் மூதாதையர் ஒரே வர்க்கத்தினராகச் சிந்துவெளியிலும், தென்னிந்தியாவிலும், இலங்கையிலும்

வாழ்ந்து வந்தனர்.[4] புதிய கற்காலத்தில் இந்தியாவிலும், ஈழத்திலும் வாழ்ந்து வந்த ஆஸ்திராலாயிடு இனத்தவரான இம்மக்களையே இயக்கர், நாகர் என்று குறித்துள்ளனர்.[4A] இக்காலசாரத்துக்குரிய மக்களின் எலும்புக்கூடுகளை ஆராய்ந்த மானிடவியலாளரான கென்னடி இவற்றிற்கும் தற்கால திராவிட மொழிகளைப் பேசுவோருக்குமிடையேயுள்ள நெருங்கிய ஒற்றுமையைக் கண்டு, இவை திராவிடரின் மூதாதையினரதே எனக் கூறியுள்ளார்.[5]

கி.மு 1000 லிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிட மக்கள். இத்தீவின் பல பிராந்தியங்களிலும் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. **(Goonatilake - 1981, Sittampalam - 1980, Seneviratna - 1984, Ragupathi - 1987)**[6] இந்நாட்டின் வரலாற்றுக் கால நாகரீக வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் தென்னிந்தியாவைப் போன்று இத்தீவில் வாழ்ந்திருந்த பெருங்கற்காலப் பண்பாட்டைக் கொண்டிருந்த திராவிட மக்கள் ஆவர் என்பதை இச்சான்றுகள் உறுதி செய்கின்றன.

இலங்கையில் பெருங்கற் காலப்பண்பாடு (கி.மு 1000 - கி.மு 200) பரந்திருந்ததை வெளிக்காட்டும் விதமாக அனுராதபுரம், மாதோட்டம், திஸமாறகமை, கந்தரோடை, ஆனைக்கோட்டை ஆகிய முந்திய வரலாற்றுக்கால இடங்களின் அடித்தளங்களில் இப்பண்பாட்டு சின்னங்கள் காணப்படுவதோடு இதனைச் சார்ந்த தாழிக்காடுகளும், கல்லறைகளும் புத்தளம், அனுராதபுரம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திஸமாறகம, மொனராகலை, மாத்தளை, கேகாலை மாவட்டங்களில் காணப்படுகின்றன.[7] இவற்றின் வாயிலாக இலங்கையின் ஆதிக்குடிகள் திராவிடரேயாவர் என்பதை அறிய முடிகின்றது. அக்காலத்தில் ஈழத்திலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்து வந்த இம்மக்களையே சேரர், சோழர், பாண்டியர், இயக்கர், நாகர் என்று வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் அனைவரும் ஓரின மக்களேயாவர் என்பதைத் தொல்லியல் ஆய்வுகள் தெளிவுறுத்துகின்றன.

## பண்டைய ஈழக்குடியினரிடையே முருக வழிபாடு

தொல்லியல் ரீதியாக நோக்குமிடத்து தென்னிந்தியாவிலும், ஈழத்திலும் திராவிடருக்கேயுரித்தான பெருங்கற் கலாசாரம் நிலவியிருந்த காலத்தில் குறிப்பாகப் பாண்டிய நாட்டிலும், ஈழத்திலும் முருக வழிபாடு, வேல் வழிபாடு சிறந்திருந்ததை அறிய முடிகின்றது. தென்னிந்தியாவில் ஆதிச்ச நல்லூரில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற் காலச் சின்னங்கள் இங்கு வாழ்ந்து வந்த திராவிடரான தமிழரிடையே நிலவியிருந்த முருக வழிபாடு அல்லது வேலன் என்ற பெருவழக்கான தெய்வ வணக்கத்தை உறுதி செய்வதாக உள்ளன. பெருங்கற் காலச் சின்னங்களில் வேல், சேவற் சின்னம் என்பன அடங்கும்.[8] பெருங்கற்காலத்தில் வேல் வணக்கம் வளர்ச்சி பெற்றதை இவை எடுத்துக் காட்டுகின்றன.

புவியியல் ரீதியாக நோக்குமிடத்து தென்னிந்தியாவும், ஈழமும் அடிப்படையில் இணைந்திருந்ததால் பெருங்கற் கலாசாரம் நிலவியிருந்த இக்காலத்தில் (கி.மு.1000 - 200) ஈழத்திலும் முருக வழிபாடு நிலவியிருந்ததென்பது தெளிவு. 1955ம் ஆண்டு புத்தளம் மாவட்டத்தில் நடந்த புதைபொருள் ஆராய்ச்சியின் பயனாக ஆதிச்ச நல்லூரில் கிடைத்தவை போன்ற ஈமத்தாழிகளும், சேவற்சிலை முதலியனவும் கண்டெடுக்கப்பட்டன. இலங்கையிலும் இதே காலகட்டத்தில் முருக வழிபாடு நிலவியிருந்ததை இவை உறுதி செய்கின்றன. மேலும் பெருங்கற்கால மட்பாண்டங்களிலும் பிராமிக்கல் வெட்டுக்களிலும் வேல் குறியீடாக காணப்படுகின்றது. பிராமிக் கல்வெட்டுக்களில்

வரும் வேலவேலச, குமார, விசாக போன்ற குறிப்புக்கள் முருக வழிபாட்டுடன் தொடர்புடையவை.[9]

இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாடு ஆரம்பமான காலத்தில் கதிர்காமம், உகந்தை, திருக்கோவில், மண்டூர் ஆகிய பிராந்தியங்களில் வாழ்ந்திருந்த திராவிடரான பெருங்கற்கால மக்களிடையே முருக வழிபாட்டின் தோற்றமாக வேல் வழிபாடு இருந்து வந்தது. இவ்வழிபாடே பிற்காலத்தில் இந்த இடங்களில் வாழ்ந்திருந்த மக்களிடையே முருக வழிபாடாகவும், வேல் வழிபாடாகவும் சிறந்திருந்தன. இந்த இடங்களில் வாழ்ந்திருந்த பெருங்கற்கால மக்களான திராவிடரிடையே முருக வழிபாடானது முதலில் வேல் வழிபாடாகவே ஆரம்பமானது என்பதை மரபுரையொன்று உறுதி செய்கின்றது.

சுப்பிரமணியனுடைய ஆணைப்படி சூரனைக்கொன்று வெற்றியுடன் மீண்ட வேலானது உக்கிரத்தோடு வரும் வழியில் எதிர்ப்பட்ட வாகூர மலையை இரு கூறாகப் பிளந்தெறிந்து கடலில் மூழ்கியபின் மூன்று கதிர்களைச் சிந்திச் சென்றதென்றும் வேலுருக் கொண்ட, அக்கதிர்கள் மூன்றும் முறையே உகந்தை மலை உச்சியிலும், திருக்கோவிலிலுள்ள வெள்ளை நாவல் மரத்தின் மீதும், மண்டூரிலுள்ள ஒரு தில்லை மரத்தின் மீதும் தங்கியிருந்தன என்றும், அவ்விடங்களில் வாழ்ந்த மக்கள் வியப்புடன் நோக்கிக் கொத்துப் பந்தல்களால் ஆலயம் அமைத்து வழிபட்டு வாழ்ந்து வந்தனர். இவ்வாறு மரபுரை குறிப்பிடுகின்றது.

இம்மரபுரை தரும் செய்தியினை ஆழமாக நோக்குமிடத்து தென்னிந்தியாவிலிருந்து குறிப்பாகத் தமிழகத்திலிருந்து இத்தீவின் தென்கீழ் வழியாகவே, முருக வழிபாடு இலங்கையில் பரவியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. இந்த இடங்களில் முதலில் கதிர்காமத்திலும் அதனைத் தொடர்ந்து ஏனைய இடங்களிலும் முருக வழிபாடு சமகாலத்தில் ஆரம்பமாகியிருக்கலாம் என்பதை இலக்கியத் தொல்லியல் சான்றுகள் உணர்த்துகின்றன. கதிரைவேல் (கதிர்காமம்) உகந்தை வேல் (உகந்தை) சித்திரை வேல் (திருக்கோவில்) வேலாயுதர் (மண்டூர்) போன்ற பெயர்கள் இந்த இடங்களில் முருக வழிபாடானது. முதலில் வேல் வழிபாடாகவே தோற்றம் பெற்றதைக் காட்டுகின்றன.

இதன் அடிப்படையில் முதலில் கதிரமலையிலும் (கதிர்காமம்) அதனைத் தொடர்ந்து உகந்தை மலையிலும் (உகந்தை) திருக்கோவிலில் வெண்நாவல் மரத்தின் கீழும், மண்டூரில் தில்லை மரத்தடியிலும் வேல் வழிபாடு ஆரம்பமானதென்று கொள்ள முடியும். தொல்லியல் சான்றுகள் மூலமாக நோக்குமிடத்து கி.மு. ஏழாம், ஆறாம் நூற்றாண்டுகளில் இப்பிராந்தியங்களில் வாழ்ந்து வந்த பெருங்கற்கால மக்களான திராவிடரிடையே வேல் வணக்கம் என்ற உருவ வழிபாடு நிலைத்திருந்தது என்பதை அறியமுடிகின்றது. இதனைத் தொடர்ந்து இவ்வழிபாடு இத்தீவின் ஏனைய இடங்களிலும் பரவியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது. பண்டைய ஈழத்தில் நாகரீகம் பரவியிருந்த புத்தளம், கந்தரோடை, அனுராதபுரம் ஆகிய பிராந்தியங்களில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால சின்னங்களில் வேல் போன்ற கருவிகள் வேல் போன்ற குறியீடுகள் வேல் என்பன அடங்குகின்றன.[10]

இலங்கையில் பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்ட பிராந்தியங்களில் கதிர்காமம் உள்ளிட்ட திஸமாறகமையும் அடங்கும்.[11] இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராட்சி மூலமாக ஈமத்தாழிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கி.மு. ஏழாம், ஆறாம் நூற்றாண்டுகளில் இப்பிராந்தியத்தில் வாழ்ந்து வந்த பெருங்கற்கால மக்களான நாகர், இயக்கர் என்ற திராவிடரிடையே வேல் வழிபாடு இருந்து வந்துள்ளது. அக்காலத்தில் தேவேந்திரமுனை, திஸமாறகமை, கதிர்காமம் ஆகிய இடங்களில்

வாழ்ந்து வந்த நாகர், இயக்கர் குடியினரின் வேல் வழிபாட்டுத் தலமாக கதிரமலை விளங்கியிருந்தது.[12] இதே காலத்தில் தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் வாழ்ந்து வந்த திராவிடரான தமிழரிடையே வேல் வழிபாடு நிலைத்திருந்தது இதற்குச் சான்றுகள் உள்ளன.

ஈழத்தில் பெருங்கற் கலாசாரம் (கி.மு. 1000 - 200) நிலவியிருந்த இடங்களில் உகந்தையும் அடங்கும். பெருங்கற்கால ஈமத்தாழிகள் உகந்தைப் பிரதேசத்திலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (க. தங்கேஸ்வரி - 1997) உகந்தை குடும்பிகல் என்னுமிடத்தில் 1971ல் தாய்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் சொல்ஹெய்மும், கலாநிதி சிரன்தெரனியாகலவும் இணைந்து மேற்கொண்ட மேலாய்வின் போது கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்கள் இனங் காணப்பட்டுள்ளன. (கலாநிதி சி. க. சிற்றம்பலம் - 2001) கறுப்பு, சிவப்பு மட்பாண்ட உபயோகம் பெருங்கற்காலப் பண்பாட்டு முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். இதே போன்று திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த பண்டைய நகர நாகரீகம் நிலவியிருந்த சங்குமன்கண்டி, சாகாமம் போன்ற இடங்களிலும் திராவிடவியல் சார்ந்த பெருங்கற் பண்பாட்டு சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கதிர்காமத்தைப் போன்று உகந்தை, திருக்கோவில் ஆகிய பிரதேசங்களிலும் மிக நீண்டதொரு முருக வழிபாட்டுப் பாரம்பரியம் காணப்படுகின்றது. இந்த இடங்களில் கதிர்காமத்தையொத்த சமகாலத்திலேயே முருக வழிபாட்டின் தோற்றமாக வேல் வழிபாடு தோன்றித் தழைத்திருந்தது. இப்பிராந்தியங்களில் வாழ்ந்து வந்த பெருங்கற்கால மக்களான நாகர், இயக்கர் என்ற திராவிடரிடையே கி.மு. ஏழாம், ஆறாம் நூற்றாண்டுகளில் வேல் வழிபாடு தோன்றிச் செழித்திருந்தது. இதனை ஆய்வுகள் உணர்த்துகின்றன. அக்காலத்தில் நாகர்முனை என்ற பெயருடன் விளங்கியிருந்த திருக்கோவிலில் வெண்நாவல் மரத்தின் கீழும் உகந்தையில் மலை உச்சியிலும் வேல் வழிபாடு நிலவியிருந்தது.[13]

கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் சங்கமன் கண்டியிலிருந்து நாகர்முனையை (திருக்கோவில், தம்பிலுவில் பிரதேசம்) ஆட்சிபுரிந்து வந்த நாகர் குலத்துச் சிற்றரசன் வேல் வழிபாட்டை சிறப்படையச் செய்தான். இவன் மண்ணாலும், மரத்தாலும் கொண்டு ஆலயமொன்றை நிர்மாணித்து வேலினைப் பிரதிஸ்டை செய்து வழிபாட்டுக்கு ஒழுங்கு செய்து வைத்தான்.[14] இவ்வேளையில் உகந்தைப் பகுதியை இராசதானியாகக் கொண்டு நாகரும், இயக்கரும் ஆட்சிபுரிந்து வந்தனர்.[15] இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த மக்களிடையே வேல் வழிபாடு தோன்றிச் சிறப்புற்றிருந்தது. அக்காலத்தில் உகந்தை மலையில் வேல் ஒன்றினை நட்டு வேல் வழிபாட்டினைத் தோற்றுவித்தவர்கள் பண்டைத் திராவிடமாகிய தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தவர்களும் இலங்கையின் பூர்வீகக் குடியினரில் ஒரு பிரிவினருமான நாகர் என்ற திராவிடரேயாவார்.[16]

இதே காலத்தில் 'மண்டூர் போரதீவு' பிரதேசத்தில் வாழ்ந்து வந்த நாகரிடையேயும் வேல் வழிபாடு நிலவியிருந்ததை அறிய முடிகின்றது. கி.மு. ஆறாம் நூற்றாண்டளவில் 'மண்டுநாகன்' என்ற நாகர் குலத்து சிற்றரசன் இப்பிரதேசத்தை ஆட்சிபுரிந்த வேளையில் இப்பிரதேசத்தில் வேல் வழிபாடு சிறந்திருந்தது.[17] கி.மு. ஏழாம், ஆறாம் நூற்றாண்டுகளில் இப்பிரதேசத்தில் நாகர், இயக்கர் குடியினர் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்ததுடன் முருக வழிபாட்டையும் கொண்டிருந்தனர். இவ்வாறு தென்னிலங்கையிலும் குறிப்பாக அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களிலும், தென்கிழக்கிலங்கையிலும் (அம்பாறை உள்ளிட்ட மட்டக்களப்பு) வாழ்ந்து வந்த பெருங்கற்கால மக்களிடையே சிறந்திருந்த முருக வழிபாடானது அக்காலத்தில் தென்கிழக்கிலங்கையினூடாக இத்தீவின் ஏனைய இடங்களுக்கும் பரவியிருக்கலாம் என எண்ண இடமுண்டு.[18]

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் இலங்கையில் பெருங்கற் கலாசாரம் முதிர்ச்சி நிலையை அடைந்திருந்த காலத்தில், இத்தீவில் வாழ்ந்து வந்த நாகர், இயக்கரிடையே இந்து மத நம்பிக்கைகள் செழித்திருந்தன. இவர்களிடையே சிவவழிபாடு, நாகவழிபாடு, இயக்கவழிபாடு என்பனவற்றுடன் வேல் வழிபாடு என்ற முருக வழிபாடும் சிறந்திருந்தது. இவ்வேளையில் தம்பபன்னியிலிருந்து அனுராதபுரத்தைச் சூழவுள்ள நாட்டை ஆட்சி புரிந்தவனும், வரலாற்று இலங்கையின் முதல் மன்னன் என்று குறிக்கப்படுபவனுமான விஜயன் முருக தலமான கதிர்காமத்தில் மேற்கொண்ட திருப்பணிபற்றி வரலாற்றுக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. அக்காலத்தில் இத்தீவில் சைவம் உன்னத நிலையில் இருந்ததையும் இக்குறிப்பு உணர்த்துகின்றது.[19]

இவ்வரலாற்றுக் குறிப்பானது இக்காலத்தில் உறுகுணையில் வாழ்ந்திருந்த பெருங்கற்கால மக்களிடையே முருக வழிபாடு செழித்திருந்ததை உறுதி செய்வதாக உள்ளதெனலாம். இக்காலத்தில் தேவேந்திரமுனை, திசமாறகம, கதிர்காமம் ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வந்த பெருங்கற்கால மக்களான நாகர், இயக்கர் குடியினரின் முருக வழிபாட்டுத் தலமாக கதிரமலையும், தென்கிழக்கேயுள்ள பம்பரகஸ்தலாவ, குடும்பிகல, பனமொதரகல, புண்டலபதிராஜவெல, உகந்தை ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்த நாகர் குடியினரின் முருக வழிபாட்டுத் தலமாக உகந்தை மலையும் விளங்கி வந்தன.[20] நாகர்முனை என்ற திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்திருந்த (சங்குமன் கண்டி முதல் சாகாமம் வரை) நாகர் குடியினரின் முருக வழிபாட்டு இடமாக திருக்கோவிலும் இருந்து வந்தது. இதேபோன்று போரதீவு, மண்டூர் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த இயக்கர், நாகரிடையேயும் முருக வழிபாடு நிலவியிருந்தது. என்பதை அறிய முடிகின்றது.

கி.மு. நாலாம் நூற்றாண்டளவில் உறுகுணையில் பாண்டியர் குடியேற்றங்கள் நிகழ்ந்தன. குறிப்பாக, பாண்டுகாபயன் (கி.மு. 377 - 307) காலத்திற்கு முன்னர் தமிழகத்தின் பாண்டிய நாட்டிலிருந்து பாண்டிய குலத்தைச் சேர்ந்த அரசர்கள் வந்து உரோகணத்தையும், தென்கிழக்கிலங்கையையும் (அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்கள்) கதிர்காமம், சாகாமம், சந்தணகாமம் ஆகிய இடங்களிலிருந்து ஆட்சிபுரிந்து வந்தனர்.[21] கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இவர்களது ஆட்சி உன்னத நிலையிலிருந்தது. இதனைப் பிராமிச் சாசனங்கள் உணர்த்துகின்றன. இன்றைய மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல, அம்பாந்தோட்டை மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த உறுகுணையில் இந்து சமயச் செல்வாக்கு நிலைத்திருந்ததுடன் திராவிட நாகரீகமும் செழித்திருந்தது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டு வரையும் உறுகுணையில் பாண்டியர் ஆட்சி நிலைத்திருந்தது.

சங்க காலத்துக்குச் சமமான இக்காலத்தில் தமிழகத்தின் பாண்டிய நாட்டில் முருக வழிபாடு சிறப்புடன் விளங்கியிருந்ததை, திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பன தெளிவுறுத்துகின்றன. இதேபோன்றே இக்காலத்தில் உறுகுணையில் வாழ்ந்திருந்த திராவிடரான பாண்டியர், நாகர், இயக்கர் ஆகிய குடியினரிடையேயும், முருக வழிபாடு செழித்திருந்ததெனலாம்.[22] பெருங்கற் கலாசாரம் முதிர்ச்சி நிலையிலிருந்த இக்காலத்தில் கதிர்காமத்தில் அரசொன்றை நிறுவி ஆட்சிபுரிந்து வந்த, பாண்டிய குலத்துத் தமிழ் அரசர்கள், தமிழரது வழக்கப்படி கதிர்காம மலைமேல் முருகனுக்கு கோயில் கட்டி வழிபட்டனர் என (மயிலை சீனிவெங்கடசாமி - 1983) அறிய முடிகின்றது.

பாண்டிய குலத்தவரான இத்தமிழ் அரசர்களது ஆட்சிக் காலத்திலேயே கதிர்காம முருகன் ஆலயம் உன்னத நிலையை எய்திப் பிரபல்யம் பெற்றிருந்தது. இவ்வேளையில் கதிர்காமத்தில் முருக வழிபாடு (முருகன் ஆலயம் கதிரமலை) சிறந்திருந்தது. பாண்டியரது ஆதரவைப் பெற்றுச் சிறப்புடன் விளங்கி வந்த கதிர்காம முருகன் ஆலயத்தைப் பாண்டியரே தொடங்கினரோ என்று எண்ணத் தோன்றுவதாக கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை

குறிப்பிடுகின்றார். அக்காலத்தில் இவ்வாலயம் அந்த அளவு பாண்டியரது பேராதரவைப் பெற்றிருந்ததென்பதே வரலாற்று உண்மை எனலாம். அக்காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகம், சம்பந்திட்டை என்ற பெயருடன் பேர் பெற்ற துறைமுகப் பட்டினமாக விளங்கியிருந்தது. இதனூடாக பாண்டியர் வெளிநாட்டு வாணிபம் புரிந்து வந்தனர்.

இத்தமிழ் அரசர்களில் சந்தணகாமத்துத் தமிழ் அரசர்கள் (சந்தணகாமத்து சத்திரியர்) ஆட்சி மட்டக்களப்பில் (அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்கள்) நிலை பெற்றிருந்தது. (சி. க. சிற்றம்பலம் - 1996) இவர்களில் ஒருவன் சாகாமத்திலிருந்து திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தை ஆட்சிபுரிந்து வந்தான். இதனை தம்பிலுவில் சாகாமம் என்னுமிடத்திலுள்ள மொட்டையா கல்லு பிராமிக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. மேலும் கதிர்காமத்து அரசர்களின் மூன்று தலைமுறை ஆட்சி இங்கு நடந்ததையும், கதிர்காமத்து அரசர்களின் இளையோனாகிய 'மகாநாகாவின்' ஆட்சி மட்டக்களப்பில் பரந்திருந்ததையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது. (சி. க. சிற்றம்பலம் - 1996)

இக்காலத்தில் (கி.மு. 4ம் 3ம் நூற்றாண்டு) இந்துக்களான சந்தணகாமத்துத் தமிழ் அரசர்களால் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆதரிக்கப்பட்டு வந்தது. (நா. நவநாயகமூர்த்தி - 1998) இது வரலாற்றுண்மையாகும். இக்காலத்தில் திருக்கோவில் துறைமுகம் (கண்டபாணந்துறை) பிரபல்யம் பெற்றிருந்ததுடன், இத்துறையினூடாக வர்த்தகம், போக்குவரத்து என்பவற்றில் 'சந்தணகாமத்து' (கல்லோயா) தமிழ் அரசர் ஈடுபட்டு வந்தனர் என்பதையும் அறியமுடிகின்றது.[23] இவ்வேளையில் உகந்தை மலையிலும் வேல் வழிபாடு செழித்திருந்ததை ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

இவ்வாறு உறுகுணையில் தமிழரது ஆட்சியும், இந்து சமயச் செல்வாக்கும் அதில் ஓர் அங்கமாக முருக வழிபாடும் செழித்திருந்த காலத்திலேயே கி.மு. 247ல் பௌத்தம் இலங்கையில் அறிமுகமானது. இவ்வேளையில் அநுராதபுரியில் நடந்த போதிமர நடுகை விழாவில் தேவநம்பியதீசனின் அழைப்பின் பேரில் கதிர்காம, சந்தணகாமத்துத் தமிழ் அரசர்களும் கலந்து கொண்டதுடன் அரசமரக்கிளைகளைப் பெற்று வந்து தங்கள் ஆட்சிப் பகுதியிலும் நட்டனர். இதனை மகாவம்சம் கூறும். இவ்வேளையில் வெள்ளரசின் கிளையொன்று கதிர்காமத்திலும் நடப்பட்டதாக மகாவம்சம் மேலும் கூறும். பௌத்த சமயத்துக்குக் கதிர்காமத்துடனான தொடர்பு இவ்வாறு தொடங்கியிருக்க வேண்டும்.

இக்காலந் தொடக்கம் உறுகுணையில் வாழ்ந்து வந்த திராவிடரான தமிழரிடையே (நாகர், பாண்டியர், இயக்கர்) பௌத்தம் செல்வாக்குப் பெற்று உன்னத நிலையை எய்தியிருந்த போதும் தங்கள் பழைய இந்துமத நம்பிக்கைகளையும் இவர்கள் கைவிடாது தொடர்ந்து பேணி வந்தனர். இவர்களிடையே முருக வழிபாடும் நிலவி வந்தது. பாண்டியரது ஆட்சி உறுகுணையில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு வரை நிலைத்திருந்தது. இவர்களது ஆட்சிக்காலத்தில் (கி.மு. 4ம் நூ - கி.மு. 2ம் நூ) உறுகுணையில் முருக வழிபாடு செழித்திருந்ததை இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட பிராமிச் சாசனங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கதிர்காமப் பிரதேசத்துக்கு அண்மையில் 'குமர' என்ற முருகனின் பெயரைப் பிராமிச் சாசனம் காட்டும். வேலு என்ற பெயர் வழங்கிய பிராமிச் சாசனங்கள். கதிர்காமத்தை மையமாகக் கொண்ட அம்பாந்தோட்டை, மொனராகலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சங்ககாலத் தமிழ் இலக்கியத்தில் முருகனுடைய பூசாரி வேலன் என்று குறிப்பிடப்படுகின்றான். வேலு என்பது முருகன் தொடர்பான பெயராக இன்று தமிழ் இந்துக்களிடையே பயின்று விளங்குகின்றது. ஆதலால் அக்காலத்தில் உறுகுணையில் வாழ்ந்து வந்த பெருங்கற்கால மக்களான நாகர், இயக்கர், பாண்டியர் குடியினரிடையே முருக வழிபாடு செழித்திருந்தமை தெளிவு.[24]

அக்காலத்தில் உறுகுணையில் சிறப்புடன் விளங்கியிருந்த முருக வழிபாட்டுத் தலங்களின் தொடர்ச்சியே இன்று நாம் காணும் கதிர்காமம், உகந்தை, திருக்கோவில் ஆலயங்களாகும். சங்க காலத்துக்குச் சமமான அக்காலத்தில் இலங்கையின் பல இடங்களிலும் முருக வழிபாடு ஓரளவு நிலவி வந்துள்ளதென்பதை பிராமிச் சாசனங்களில் காணப்படும். தனிமனிதர் பெயர்கள் மூலமாக அறியமுடிகின்றது. வவுனியா தெற்கில் உள்ள புளியங்குளத்து சாசனம் இரண்டில் விசாகன் என்றொரு தமிழ் வணிகன் குறிக்கப்படுகின்றான். விசாகன் என்பது முருகனுடைய பெயர்களுள் ஒன்று என்பது அறிந்ததேயாகும். சுருக்கமாகக் கூறுமிடத்து சங்க காலத்துக்குச் சமமான அக்கால கட்டத்தில் (கி.மு. 3ம் நூ) தமிழகத்தின் பாண்டிய நாட்டில் சிறப்புற்றிருந்த முருக வழிபாடு ஈழத்தின் உறுகுணைப் பகுதிகளிலும் சிறப்புற்றிருந்ததெனலாம்.

## குறிப்புக்கள்

**01.** பண்டைய இலங்கையில் தமிழும், தமிழரும் பக் 99 கலாநிதி பரமு புஸ்பரட்ணம் - 2000

**02.** பண்டைய ஈழத்தமிழர் - பக் 16 நா. நவநாயகமூர்த்தி - 1998

**03.** திராவிடரின் ஆதித் தாயகமான குமரிக்கண்டம் என்ற லெமூரியா காலத்துக்குக் காலம் கடற்கோளினால் இந்துமா கடலில் மூழ்கியதென்பதை நில நூலாரும், கடல் ஆராய்ச்சியாளர்களும் உறுதி செய்கின்றனர்.
(இந்திய சரித்திரக் களஞ்சியம், தொகுதி II பக். 87 ப. சிவனடி - 1988)

**04.** மொகஞ்சதாரோவில் காணப்பட்டவை போன்று சில எழுத்துக்கள் இலங்கையில் கேகாலையிலுள்ள மலை ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளதை ஹேரஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். (பழந்தமிழர், பக். 18 ந. சி. கந்தையாபிள்ளை - 1957)

**04A** இந்தியப் பண்பாடும் தமிழரும் - பக். 17, எஸ். இராமகிருஷ்ணன்

**05.** பண்டைய தமிழகம் - பக். 38 கலாநிதி சி. க. சிற்றம்பலம் - 1991

**06.** பண்டைய இலங்கையில் தமிழும், தமிழரும் - பக் 99 கலாநிதி பரமு புஸ்பரட்ணம் 2000.

**07.** பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும் (கட்டுரை) - கலாநிதி சி. க. சிற்றம்பலம் சிந்தனை தொகுதி I இதழ் I - 1983 யாழ் பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடு.

**08.** தென்னிந்திய வரலாறு - பக் 61,62 நீலகண்ட சாஸ்திரி.

**09.** கலாநிதி சி. க. சிற்றம்பலம் - 'சிந்தனை' தொகுதி II இதழ் I

**10.** ஈழத்து இந்துசமய வரலாறு பாகம் I - பக் 181,182 பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் - 1996.

**11.** ஈழத்து இந்துசமய வரலாறு பாகம் I - பக் 36 பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் 1996.

**12.** அக்காலத்தில் இங்கு நிலவி வந்த வேல் வழிபாட்டின் வளர்ச்சியே கதிர்காம முருகன் ஆலயம் ஆகும்.

13. இக்காலத்தில் உகந்தைப் பிரதேசம் நாகத்தீவு என்ற பெயருடன் விளங்கி வந்தது. (மட்டக்களப்பு மான்மியம், பக் 36 பதிப்பாசிரியர் எப். எக்ஸி. நடராசா - 1962)

14. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக் 52 நா. நவநாயகமூர்த்தி - 1999.

15. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - பக் 23 திருமதி. ஜி. தனபாக்கியம் 1996.

16. முருகக் கடவுள் உவந்திருக்கும் உகந்தையம் பதி (கட்டுரை) - ஆய்வார்வலர் நா. நவநாயகமூர்த்தி - ஏர்முனை - 2001 இதழ் 4.

17. மட்டக்களப்பு மான்மியம் - பக் 48 பதிப்பாசிரியர் எப். எக்ஸி. நடராசா 1962. இவ்வேளையில் இலங்கை மீது இந்தியப் படையெடுப்பொன்று நிகழ்ந்தது. இப்படையெடுப்பை மேற்கொண்டவன் காளசேனன் (காலசேனன்) என்பவனால் நாகர் நிர்மாணித்த முருகையன் ஆலயம் (வேல் வழிபாடு) சேதமாக்கப்பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் மேலும் கூறும்.

18. அனுராதபுரம், புத்தளம், கந்தரோடை ஆகிய பிராந்தியங்களில் வாழ்ந்திருந்த பெருங்கற்கால மக்களிடையே வேல் வழிபாடு நிலவியிருந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. (ஈழத்து இந்து சமய வரலாறு பாகம் I. கலாநிதி சி. க. சிற்றம்பலம் - 1996.)

19. யாழ்ப்பாண சரித்திரம் - பக் 10,11 முதலியார் செ. இராசநாயகம் - 1933. வரலாற்று இலங்கையின் முதல் மன்னன் என்று குறிக்கப்படும் விஜயன் இலங்கை முழுவதையும் ஆளவில்லை. இவன் அநுராதபுரத்தை சூழவுள்ள நாட்டை ஆட்சி புரிந்தான். இத்தீவின் ஏனைய இடங்களை பூர்வ குடியினரான நாகரும், இயக்கரும் ஆட்சிபுரிந்தனர் என்பது வரலாற்றுண்மையாகும்.

20. 1971ம் ஆண்டு தென்கிழக்கேயுள்ள பம்பரகஸ்தலாவை குடும்பிகல, பனமமொதரகல ஆகிய உகந்தையை அண்மித்துள்ள இடங்களில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வின் போது கறுப்பு, சிவப்பு நிறமட்பாண்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இப்பகுதி விஜயனுடைய சகாக்களால் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றப்பகுதிகளில் ஒன்று என ஊகிக்கப்படுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது. (பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் - 2001)

21A இவர்கள் கூட்டாட்சி புரிந்து வந்தனர். இதனை பிராமிச்சாசனம் ஒன்று உறுதி செய்கின்றது. (தமிழர் சமய வரலாறு பக் 224, 225 டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை 1980)

B இத்தமிழ் அரசர்களையே மகாவம்சம் (அதிகாரம் **XIX** வரி, 54, 55 கைகர்பதிப்பு, கொழும்பு-1950, பக் 132) கதிர்காம, சந்தனகாமத்துச் சத்திரியர்கள் என்று குறிப்பிடுகின்றது.

22. சங்ககாலத் தமிழகத்திலும் இயக்கர், நாகர் என்னும் இனத்தவர் வாழ்ந்து வந்தனர். இதனை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். தமிழ்நாட்டு நாகரும், இயக்கரும் தமிழரின் ஒரு பிரிவினர். அவர்கள் பிற்காலத்தில் தமிழரோடு கலந்து போயினர். (தமிழ் நாட்டு வரலாறு சங்ககாலம் அரசியல் பக் 602,603 இலங்கையில் தமிழர் கட்டுரை, மயிலை சீனி வெங்கடசாமி - 1983)

23. தம்பிலுவில் கண்ணகி வழிபாடு - பக் 54 நா. நவநாயகமூர்த்தி - 1999

24. தமிழர் சமய வரலாறு பக் 225. 226 டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை - 1980.

உ

# வன்னிப் பெருநிலப்பரப்பில் அற்புதத் தெய்வங்கள்

கலாபூசணம் செல்லையா மெற்றாஸ்மயில்

"எமது அறிவுக்கு எட்டாத எம்மால் எவ்வகையிலும் விளக்கங் கொடுக்க முடியாத, அந்த மறைபொருளோ மிகவழகிய பொருளாக உள்ளது. அதுவே உண்மையான அழகியற் கலைகட்கும் ஊற்றாக உள்ளது. இந்த உணர்வு எவனுக்கு இல்லையோ, எவன் இதை எண்ணிவியந்து பக்திக்கடலில் மூழ்கி நிற்க மாட்டானோ, அவன் இருந்தும் இறந்தவனேயாவான். கண்ணிருந்தும் குருடனேயாவான். வாழ்க்கையில் இந்த மர்மத்தைக் கூர்ந்தறியும் அறிவு ஓர்வித அச்சத்தோடு கலந்துள்ளபோதும், அது சமயத்துக்கு வித்தாக அமைகிறது." - அறிவுலகமேதை ஐன்ஸ்டீன்

பொதுவாகச் சமயம் கூறும் உண்மைகளை அறுதியிட்டுக் கூறக்கூடிய தன்மை இல்லாத காரணத்தால் அது மக்களிடம் அறியாமையையும், பிடிவாதத்தையும் வளர்க்கும் என்கின்றனர் விஞ்ஞானிகள். கற்பனையாகவும், கடவுள் கூற்றாகவும் சமயக் கொள்கைகளை வகுத்து கோட்பாடுகளைப் புகுத்தி அதனைப் பொதுமக்கள் அப்படியே நம்ப வேண்டும் என்ற நிலை காரணமாகவே சமயத்தை தூக்கியெறிந்து பேசுகின்றனர் விஞ்ஞானிகள்.

இவ்வாறான வாதப் பிரதிவாதங்கள், விஞ்ஞானிகளிடமும், சமயவாதிகளிடமும் இடம்பெறும் வேளையில் கிராமிய வாழ்க்கையுடன் ஒட்டிய சைவ சமய வாழ்க்கையில் ஊறிய வன்னிப்பிரதேச மக்களின் நம்பிக்கைகளைப் பற்றி எழுத முற்படுகின்றேன்.

வன்னிப்பிரதேசத்தில் பெரும்பான்மையான பிரதேசம் வயலும் சார்ந்த காடுகளையுடைய மருத நிலமுமாகும். இங்கு கொடிய மிருகங்கள், பிராணிகள், பூச்சி, புழுக்களுக்கிடையே எதுவித வைத்திய வசதிகளுமற்ற பிரதேசத்தில் வாழ்ந்த மக்களுடைய வாழ்வியலில் அனுபவரீதியில் பல சோதனைகளையும், வேதனைகளையும் கண்டவன் என்ற முறையில், அவர்களுக்கு தெய்வ நம்பிக்கை எவ்வளவுக்கு உறுதுணையாக இருந்தது என்பதை நான் அறிவேன். அந்த வகையில் இப்பிரதேசத்திலுள்ள அற்புதம் படைத்த தெய்வங்களின் உறுதுணையும் அனுக்கிரகங்களும் அவர்களுடன் எவ்வாறு பின்னிப் பிணைந்து இருப்பதற்கு எத்துணையாக இருந்தது என்பதை அறிய, இப்பிரதேசத் தெய்வங்களின் அற்புத வரலாற்றை எழுதுவதில் பெருமையடைகின்றேன். இப்பிரதேசத்தில் பல தெய்வங்களின் அற்புதங்கள் கலாசார பரம்பரையான கதைகள் மூலமும், மக்கள் அனுபவித்த அற்புத வரங்கள் மூலமும் அறியமுடியுமெனினும் இச் சிறுகட்டுரைக்கு வற்றாப்பளை அம்மன், ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுவரன், வட்டுவாகல் சப்தகன்னியர், கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார், புளியம்பொக்கனை நாகதம்பிரான் கோவில்களின் தோற்றமும், அவர்கள் புதுமைகளையும் முக்கியமாக குறிப்பிடுகின்றேன்.

## வற்றாப்பளை கண்ணகை அம்மன்

சிலம்பு கூறலின்படி முல்லைத்தீவின் புதுமைகளையும் பழமையும் நிறைந்த புண்ணிய தலமான வற்றாப்பளைக் கண்ணகி ஆலயம் தனக்கென தனித்துவமான வரலாற்றையும் சிறப்பு வழிபாட்டு முறைகளையும் கொண்டுள்ளது. இக்கோயில் வரலாற்றை "சிலம்பு கூறல்" பாடல்களிலிருந்து பெறக்கூடியதாகவுள்ளது.

முல்லைத்தீவு, தண்ணீரூற்று, முள்ளியவளை ஆகிய இடங்களுக்கு நடுவே நந்திக் கடலுக்கு அருகாமையில் உள்ளது. "வற்றாப்பளையில் நந்திக் கடலுக்கு அருகில் ஒரு நரை மூதாட்டி காட்சி தந்து மாடு மேய்த்துக் கொண்டு சென்ற சிறவர்களுக்கு மத்தியில் தோன்றினார். சிறுவர்கள் அவர்களை அன்புடன் உபசரித்தனர். மூதாட்டி பசிப்பதாகவும் "பாற்பொங்கல் செய்யுங்கள் சாப்பிடுவோம்" என்றார். மூதாட்டியின் பசியைப் போக்க பாற்பொங்கல் பொங்க, கிழவி தலையை விரித்து பேன்பார்க்கும்படி கேட்டார். சிறுவர்கள் தலையை விரித்து பேன்பார்த்த பொழுது தலையெல்லாம் கண்களாக கண்டு சிறுவர் பயந்தனர். அவர்கள் பயத்தைப் போக்கினார் அந்தக் கிழவி. மாலைநேரம் கடந்து இருளானது. அதனால் ஒளி விளக்கு தேவைப்பட்டது. மூதாட்டி நந்திக்கடலில் நீர் எடுத்து தீபம் ஏற்றும்படி கூறியதற்கிணங்க நந்திக் கடல் நீர் எடுத்து தீபம் ஏற்றிய பொழுது நன்கு பிரகாசித்து எரிந்தது. சிறுவர் யாரென வினவினர். "யான் கண்ணகி எனவும் சோழநாட்டினள், கதிர்காமம் போக வந்தேன்" என்று கூறியதுடன் அவர்களின் பாற்பொற்கலை அருந்தியவுடன் தொடர்ந்து வைகாசி விசாகங் கூடிய திங்கள் நாளில் பொங்கிமடை செய்யும்படி கூறினார். தனது பெயர் கண்ணகி. பெயரை நினைத்தால் "ஆகும் பிணி போகும்" என்று திருவாய் அமர்ந்தருளினார். இதனாலேயே வைகாசித் திங்கள் நாளில் வற்றாப்பளைப் பொங்கல் இடம்பெறுவதும் அடுத்த நாள் கதிர்காமம் யாத்திரைக்கு இங்கிருந்து மக்கள் புறப்படுவதும் வழக்கமாகிற்று.

# மேலும் புதுமைகள்

* வற்றாப்பளை அம்மனின் தெய்வீக புதுமையைக் காட்டும் கடல்நீரில் தீபம் எரிவதுடன் மட்டுமல்லாது, பறங்கியராட்சியில் ஏற்பட்ட சம்பவத்தையும் குறிப்பிடலாம். "பனிச்சை ஆடிய சிந்து" என்னும் செவிவழிப்பாடலின் மூலம் இவ்வாறு வரலாறு உண்டு "பறங்கியர் இலங்கையரை அடக்கி ஆண்ட காலத்தில் இக்கோவிலுக்கு என்ன புதுமையிருக்கிறது என்று அகங்காரம் கொண்டு "நெவில்" என்னும் பறங்கியன் வினவிய போது, அம்மன் ஆலயத்தினருகிலிருந்த பனிச்சம் காய்களால் எறிந்த பொழுது குதிரையோடு கூக்குரலிட்டு ஓடினான். அந்த பனிச்சம் மரமொன்று அதன் பின் எப்போதுமே காய்க்கவில்லை. அம்மன் முதன்முதலில் காட்சி கொடுத்த பொழுது வீற்றிருந்த வேப்பம் மரத்துண்டு அம்மன் மறைந்தபின் தளிர்த்து நீண்டகாலம் நிழல் செய்ததுடன் தன்னை அணைவோரது பிணிகளைத் தீர்த்தது எனக் கூறுகின்றனர்.

* பறங்கியனை விரட்டிய பனிச்சை மரக்கொட்டினிலே தங்கி இருந்த பாம்பு ஒன்று கோவிலுக்குச் செல்லுவதும் பின மரத்துக்கு வருவதுமாக இருந்தது. பக்தரை அது தீண்டுவது கிடையாது. பக்தரும் விலகிச் செல்வதுண்டு. ஆனால் ஒருவன், ஒருநாள் அப்பாம்பினை அடித்தான். அது மறைந்துவிட்டது. ஆனால் அடித்தவன் ஆடி ஆடி மயங்கி கீழே விழுந்தான். அதன்பின் "பரமசாமி ஐயர்" என்பவர் அம்மனுக்கு பூசை செய்து தீர்த்தமும் தெளித்ததுடன் விபூதியும் பூசியபின் தான் கண் விழித்தான் எனக் கூறப்படுகிறது.

* மிகவும் அண்மைக்காலத்தில் கோவில் கருமங்களைச் செய்யும் (பூசாரியார், பாரிசுவாதத்தால் துன்புற்று ஆங்கில, சுதேச வைத்தியரின் துணைநாடியும், முடியாத வேளையில் வற்றாப்பளை அம்மனை வழிபட்டு அவரையே தஞ்சமென தன்னை அர்ப்பணித்து மடத்தில் தங்கி இருந்து கோவில் அருகிலுள்ள வேப்பம் பட்டை, பத்திரி ஆகிய இரண்டையும் அவித்து அதனையே மருந்தாக உட்கொண்டு பூரணசுகம் பெற்றார் என அறியக்கிடக்கிறது.

* மிகவும் அண்மைக்காலத்தில் கள்வன் ஒருவன் அம்பாளின் ஆலயத்திற்குள் உட்புகுந்து அம்பாளின் ஆபரணங்களையும், சிறுதொகைப்பணத்தையும் திருடினான் ஆனால் திருடனால் கோவிலை விட்டு அகலமுடியவில்லை. கள்வன் பிடிபட்டதுடன் பொருட்களும் கிடைத்ததாக அறிக்கிடக்கிறது.

இவ்வாறு பல புதுமைகளைச் செய்து கொண்டு வன்னிப் பெரு நிலப்பரப்பிலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாது உலகத்திலுள்ள சகல மதத்தவர்களுக்கும் அருள்பாலித்துக் கொண்டு வற்றாப்பளையில் அம்பாள் வீற்றிருக்கிறாள்.

## ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈஸ்வரன்

மாங்குளம் முல்லைத்தீவு தெருவில் நடுப்பகுதியிலே ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் "ஈஸ்வரன்" தெய்வீக புதுமை படைத்தவர். யாழ்ப்பாணம் இடைக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரபத்திரரும் புதல்வர்கள் இருவருமாக ஒட்டுசுட்டானில் குடியேறினார்கள். இவர்கள் வசித்த இடத்தை இன்றும் இடைக்காடு என அழைப்பதுண்டு. வீரபத்திரர் நல்ல விவசாயி. அவர் காடுவெட்டி குரக்கன் பயிர் செய்தார். குரக்கன் விளைந்தபின் குரக்கன் வெட்டி எடுத்த பின்னர் குரக்கன் ஓட்டுக்களை வெட்டிக்குவித்து நெருப்புக் கொழுத்துவர். அப்படி எரித்த பொழுது கொன்றை மரத்தடியில் ஓட்டுக்கள் எரியாது காணப்பட்டது. எரியாத ஓட்டுக்களை மண்வெட்டியினால் வெட்டினார். வெட்டிய இடத்தில் இரத்தம் கசிவதைக் கண்டு இதை உடனே மக்களுக்கும் ஆண்ட வன்னிய மன்னனுக்கும் தெரிவித்தான். மன்னன் வந்து பார்வையிட்ட பின் கொன்றல் மரத்தின் கீழ் கோவில் கட்டி வழிபடப்பணித்தான். சிலநாட்களின் பின் அவ்விடத்தில் சிவலிங்கம் சுயமாகத் தோன்றியது. தானாகத் தோன்றியதினால் "தான்தோன்றி ஈஸ்வரன்" என அழைக்கப்பட்டு மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

வரலாற்றுக் குறிப்புக்களையும் கல்லறையையும், கதைகளையும் ஒன்றிணைத்து பார்க்கையில் சோழர் ஆட்சிபுரிந்த காலத்தில் 12, 13ம் நூற்றாண்டில் இவ்வாலயம் தோன்றி இருக்கலாம். தான்தோன்றி ஈஸ்வரன் பாமாலையில் 108 பாடல்கள் உள்ளன. முதல் 83 பாடல்களிலும் ஆலயத்தின் வரலாறும் அற்புதங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

## வட்டுவாகல் சப்தகன்னியர்

நான் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் எனது குருவாகிய முருகுப்பிள்ளை முத்தையா அதிபர் எனக்கு சப்த கன்னியர் வரலாற்றை எடுத்துக் கூறியிருந்தார். சப்தகன்னியர் அருள்பாலித்து எழுதமுனைகின்றேன்.

வட்டுவாகல் எனப்படுவது முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தெருவில் முல்லைத்தீவிலிருந்து 1 1/2 மைல் தூரத்தில் நந்திக்கடலுக்கு அருகாமையில் உள்ளது.

"வன்னிப்பிரதேசத்தில் ஆரம்ப காலம் முதல் வேட்டையாடுதல் முக்கிய தொழிலாகவும், பொழுதுபோக்காகவும் இருந்து வந்துள்ளது. பறங்கியரின் ஆட்சிக் காலத்தில் வட்டுவாகலின் பெரும் பகுதி காடடர்ந்து காணப்பட்டது. நந்திக்கடற் கரையில் வட்டுவாகல் இருந்ததினால் மிருகங்கள் கரைக்கு தண்ணீர் குடிக்க வருவது வழக்கம் பறங்கியர் ஆட்சிக் காலத்தில் பறங்கித்துரை வேட்டையாட வந்தான். அப்பொழுது மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவன் இவன் கண்ணுக்கு மிருகமாகத் தெரிந்ததினால் துப்பாக்கியால் சுட்டான் ஆனால் மீனவனின் உடம்பில் குண்டு துளைக்கவில்லை. அக்குண்டுகளை சப்தகன்னிமார் கையில் ஏந்திக் கொண்டனர். பலமுறை சுட்டும் பயன் அளிக்காததினால் அண்மையில் சென்றபொழுது சப்தகன்னியர்

அவன் சுட்ட குண்டுகளை அவன் கையில் கொடுத்தனர். அன்று தொடக்கம் பறங்கியர் அவ்விடத்திற்கு வேட்டையாடுவதையே நிறுத்திக் டிகாண்டனர். சப்தகன்னியர் ஊர் மக்களின் கனவில் தோன்றி தாங்கள் வட்டுவாகலில் தங்கி இருந்து ஊர்மக்களுக்கு அருள்பாலிக்கப் போவதாக கூறினார்கள். இதன்பின் ஊர்மக்கள் கோவில் கட்டி வழிபட்டு அருள்பெற்று வருவதுடன் பிரதேசத்து விவசாய மக்கள் யாபேரும் நேர்த்திக் கடன்களை கழித்து அருள்பெற்று வருகின்றனர்.

## கொட்டுக்கிணற்று பிள்ளையார்

குமிழமுனை என்னும் கிராமத்தில் கொட்டுக்கிணற்று வயலில் அமைந்துள்ளதால் கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கோவில் எனப் பெயருடன் வழங்கி வருகிறது.

இந்தியாவிலிருந்து பட்டாணி ஒருவன் மூன்று முக்கிய விநாயக விக்கிரகங்களை இலங்கையில் மட்டக்களப்பில் விற்பதற்காக கருவாட்டுக் கப்பலில் கொண்டு வந்தான். கருவாட்டு மணத்தை சகிக்காத இந்த விக்கிரகங்களில் ஒன்று குமிழமுனை கடலில் விழுந்ததுடன் கொட்டுக்கிணற்று வயலிலே சூடுமிதித்த தூர்த்தாத பொலிக்குள் மறைந்திருந்தது. மூன்று நாட்களாக பொலி தூற்றினாலும் குறைவதாகவில்லை. ஊர்மக்கள் என்ன அதிசயம் என யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது பிள்ளையார் கனவில் தோன்றி தான் பொலிக்குள் மறைந்திருப்பதாகவும் இதை விக்கிரகம் தேடிவரும் பட்டாணியிடம் கூற வேண்டாம் எனவும், அவன் சென்றபின் கல்லாக இருக்கும் தன்னை வழிபடுமாறும் வேண்டிக் கொண்டார். அவ்வூர் மக்கள் அதன்படி பட்டாணி வந்து கேட்க பிள்ளையார் கனவில் கூறியபடி திருப்பி அனுப்பிவிட்டு ஆலயம் கட்டி பிள்ளையாரைப் பூசித்து வந்தனர்.

இதையறிந்த பட்டாணி குமிழமுனைக்கு வந்து அந்தப் பிள்ளையாரைத் தரச்சொல்லி கெஞ்சினான். கொடுக்காததினால் வாளால் ஓங்கி வெட்டினான். தலை உடம்பு வேறாக வந்து இரத்தம் ஓடியது. பட்டாணி விட்டுவிட்டு திரும்பிச் சென்றான். திரும்பிச் சென்றபொழுது பட்டாணி குதிரை வாயில்களினால் இரத்தம் பீறிட்டு இறந்தனர் எனக் கூறப்படுகிறது.

வெட்டப்பட்ட தலையையும் உடம்பையும் இணைத்து ஆலயத்தில் வழிபட முயன்றும் முடியவில்லை. இதனால் உடம்பு வேறாகவும், தலை வேறாகவும் வைத்தே வழிபாடு இன்றும் நடைபெறுகிறது.

கொட்டுக்கிணற்றுப் பிள்ளையாருக்கு ஆலயம் அமைத்த பொழுதும் அங்கு வைத்து வழிபட முடியவில்லை. அனைத்தும் யானையினால் அழிக்கப்பட்டது. கனவில் தோன்றி "நான் பலர்காண வெட்டவெளியில் தான் இருக்க விரும்புகின்றேன்" என்று கனவில் கூறியதாக வாய்மொழிப்பாடல் உண்டு. இவ்வரலாற்றை கொட்டுப் பிள்ளையார் கும்மிப்பாடலைக் கொண்டு கர்ணபரம்பரைக் கதையாக வழங்கி வருகிறது.

## புளியம்பொக்கனை நாகதம்பிரான்

எம்பெருமான் தானே நாகதம்பிரானுமாய் உருவம் தரித்து புளியம்பொக்கணை என்னும் திவ்விய தலத்தில் எழுந்தருளினான் என்ற மக்கள் நம்பிக்கையுண்டு. கிளிநொச்சி, கரைச்சிப் பிரிவின் புராதன கிராமங்களில் ஒன்றுதான் புளியம் பொக்கணை.

பல வளங்களும் பொருந்தி பல துறையிலும் மேம்பட்டுயர்ந்த புளியம் பொக்கணை கிராமத்திலே வன்னிய குலத்து நீதி நாயக்க முதலியாருக்கும் அவன் மனைவி கமலம் என்பவருக்கும் மூன்றாவது பிரசவத்தின் போது ஒரு அழகான பெண்

குழந்தையும், நாகபாம்பு முகத்துடன் ஒரு குழந்தையும் பெற்றெடுத்தாள். அப்பாம்புக் குழந்தைக்கும் தாய்ப்பால் ஊட்டி வளர்த்தாள் என்றும், அங்குள்ள பாம்புகள் வந்து அந்தப் பாம்புப் பிள்ளையோடு விளையாடுவதென்றும் அப்பாம்புகளின் விளையாட்டால் வசதியீனமடைந்த தாய் விளக்கு மாற்றால் தட்டி "போய்த் தொலையுங்கள்" என்று சொல்ல பாம்புப் பிள்ளையும், ஏனைய பாம்புகளும் ஒரே கூட்டமாகப் புறப்பட்டு "புதூர்" சென்றதாகவும் பின் சொறபனத்தின் உதவியோடு தந்தையார் குறித்த இடமத்திலே சர்ப்பம் இருக்கக் கண்டு மனமகிழ்ந்து குறையிரந்து அழைத்து வந்து ஆலயமமைத்து பூசை செய்து வருவதாகவும் கர்ணபரம்பரைக் கதையுண்டு.

நீதிநாயக்க முதலியாரின் வம்சங்களின் வழித் தோன்றல்களே இவ் ஆலயத்தை பரிபாலித்து பூசை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

# தெய்வத்தின் சில அற்புதங்கள்

அப்பொழுது ஆட்சி செய்த ஒல்லாந்த அதிகாரிகள், ஆலயத்தில் பாம்புக்கு பூசை செய்வதை ஏளனம் செய்து, பூசகரை விரட்டினார்கள். பூசகர்களை பாம்பைக் காட்ட முடியுமா எனக் கேட்டனர். பூசகர் நாகதம்பிரானை நினைத்து ஒரு பானையை எடுத்து வாயில் வெள்ளைத் துணியால் கட்டிவிட்டு, நாகதம்பிரானே நீ பானைக்குள்ளால் எழுந்து உன் உருவத்தைக் காட்ட வேண்டும் என்று வரம் வேண்டி மன்றாடிக் கொண்டார். அப்படியே ஒல்லாந்த அதிகாரிக்கு முன்னால் பானைக்குள்ளால் தனது உருவத்தை நாக பாம்பு காட்ட, ஒல்லாந்த அதிகாரி "நாம் செய்த தவறை பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறி ஓடினர். பின் தாங்கள் கண்ட சர்ப்பம் போல் வெள்ளியினால் செய்து கொடுத்தனர். அன்று தொடக்கம் வெள்ளியுருவத்திற்கும் பூசனை நடைபெற்று வருகிறது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சு. குமாரமூர்த்தி அவர்களின் தாயார் தவமூதாட்டி "ஐயாச்சி அம்மையார் காலத்தில் நடைபெற்ற சம்பவம்"

நாகதம்பிரான் கோவில் ஆண்டு உற்சவத்திற்குச் சென்ற ஒரு தாய் களைப்புடன் தனது குழந்தையுடன் கோவிலில் உறங்கி விட்டாள். எழுந்து பார்த்த பொழுது குழந்தையின் கையில் இருந்த பொற்காப்பு இரண்டையும் காணவில்லை. அங்கு நின்றவர்கள் யாபேரும் தேடிக் கொண்டு இருந்தனர். ஒரு சிறிய சர்ப்பம் "திடீரென ஊர்ந்து வந்து கூடித் தேடிக் கொண்டிருந்த பெண்ணின் உடையில் ஏறியது. "ஐயோ பாம்பு" என்று கத்திக் கொண்டு தன் துகிலை உரிந்து உதறினாள். அப்போது மடியில் இருந்து காப்பு இரண்டும் விழுந்தது. காப்பு எடுத்த அந்த தாய் நாகதம்பிரானை மனமகிழ்ந்து ஆராதனை செய்தாள்.

இவ்வாறு மேலும் பல தெய்வங்களினதும், சிறு தெய்வங்களினதும் அற்புதங்களைக் கொண்டது வன்னிப்பெருநாடு. தெய்வங்களின் அற்புதங்கள் கர்ண பரம்பரைக் கதையாக பெரும்பாலும் உள்ளதால் நாஸ்திகவாதிகள் சான்றுகள் கேட்டு நாவடைக்க முற்படுகின்றனர். நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள் என்று பறைசாற்றுகின்றனர்.

எது எதுவாக இருந்தாலும், எமக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருக்கிறது என்பதை யாவரும் ஒப்புக்கொள்கின்றனர். "அவன் இன்றேல் அணுவும் அசையாது" என்பதை மக்கள் தமது வாழ்வியல் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். கர்ண பரம்பரைக் கதைகளில் வரும் தெய்வங்களின் அற்புதங்களை நம்பி, தெய்வங்களின் அருள் பாலிக்கச் செய்யும் தொண்டுகளுக்கு தெய்வங்களின் மழுமையான அனுக்கிரகம் சாந்தி உண்டு என்பதை மட்டும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

முற்றும்

உ

# காவல் தெய்வம் ஐயனார்

கலாபூஷணம் அருட்கலை வாரிதி
ஸ்தபதி சு. சண்முகவடிவேல்

தொன்மையான வழிபாடுகளில் ஐயனார் வழிபாடும் ஒன்றாகும். ஆகமங்களிலும் புராணங்களிலும் இவ்வழிபாடு பற்றிய விதிமுறைகளும் குறிப்புக்களும் காணப்படுகின்றன.

சிவனுக்கும் திருமாலுக்கும் பிள்ளையாகப் பிறந்தமையால் 'ஹரிகரபுத்திரன்' என அழைக்கப்படுகிறார். ஐயனாருக்கு சாஸ்தா, கடல் வண்ணன், ஐயன், சாந்தன், சாத்தனார், வனரட்சகர் எனப் பல பெயர்கள் வழங்குகின்றன. ஐயனாரே ஐயப்பனாக அவதாரஞ் செய்து அற்புதங்கள் புரிந்துள்ளார்.

ஐயனாருக்கு ஆகம முறையில் அமைந்த கோவில்கள் அரிதாகவே காணப்படுகின்றன. எனினும் கிராமிய வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றுள்ளார். இலங்கையில் வன்னிப் பகுதியிலும், யாழ் குடா நாட்டிலும் மலையகப் பகுதியிலும் கிராமங்கள் தோறும் இவ்வழிபாட்டின் சிறப்பினைக் காணலாம். சிங்கள மக்கள் மத்தியிலும் ஐயனார் வழிபாடு இடம் பிடித்துள்ளது. மட்டக்களப்புப் பகுதியில் இவ்வழிபாடு அரிதாகவே உண்டு. தமிழ் நாட்டுக் கிராமங்களில் பெருவிழா எடுத்து ஐயனார் பூஜிக்கப்படுகிறார்.

ஐயனார் மனம் நிறைந்த வாழ்வைக் கொடுப்பவர். கொடிய விலங்குகளிலிருந்தும், விஷஜந்துக்களிலிருந்தும் காப்பவர். காவல் தெய்வமாக உள்ளவர். வரட்சியினால் உண்டாகும் அம்மை முதலான நோய்களைக் களைபவர். மழை தந்து செழிப்பை உண்டாக்குபவர். நல்லோரைக் காப்பவர். புலனடக்கத்தையும், மன உறுதியையும் தந்து ரட்சிப்பவர்.

## ஐயனார் வரலாறு

முற்காலத்திலே திருமால் முதலான தேவர்களும், அசுரர்களும் மகிமை பொருந்திய அமிர்தம் உண்ண ஆசைப்பட்டனர். அதனால் மேரு என்னும் மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற் கடலைக் கடைந்தனர். தேவர்களும் அசுரர்களும் மாறிமாறி இழுத்தமையால், வலி தாங்காமல் வாசுகி 'ஆல காலம்' என்னும் கொடிய விஷத்தை உமிழ்ந்தது. விஷம் எங்கும் பரவியது. அல்லலுற்ற தேவர்கள் சிவபெருமானைத் தொழுதனர். சிவனும் மனம் இரங்கி ஆலகால விஷத்தை தாமே உண்டார். தனது தொண்டையில் அடக்கி அனைவருக்கும் அருள் புரிந்தார். அன்றுமுதல் விடமுண்ட கண்டரானார்.

விஷம் நீங்கியதும் தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்தின் பொருட்டு தமக்குள் சண்டையிட்டனர். தேவர்கள் மட்டுமே அமிர்தத்தை உண்ண வேண்டுமெனக் கருதிய திருமால் அழகிய மோகினிப் பெண்ணாக வடிவம் எடுத்தார். மோகினியைக் கண்ட அசுரர்கள் அமிர்தம் உண்ண வேண்டுமென்பதை மறந்து, மோகினியின் பின் சென்றனர். இதைக் கண்ணுற்ற மோகினியாகிய திருமால் 'உங்களில் சிறந்த வீரம் பொருந்தியவனே என்னை அடையலாம்' என்றார். இதைக் கேட்ட அசுரர்கள் தாமே வீரர்கள் என்பதைக் காண்பிக்கும் பொருட்டு தமக்குள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு அழிந்தனர். எனினும் இரண்டு அசுரர்கள் தந்திரமாக தேவர்களோடு சேர்ந்து அமிர்தத்தை உண்டனர். இதைக் கண்ட திருமால் தமது சக்கராயுதத்தால் அசுரர் இருவரினதும் தலைகளைத்

துண்டித்தார். அமிர்தம் உண்ட மகிமையால் அசுரர்கள் இருவரும் இராகு என்னும் கரும் பாம்பாகவும், கேது என்னும் செம்பாம்பாகவும் மாறி நவக்கிரகங்களில் இடம் பெற்று வழிபாட்டிற்குரிய பெருமை பெற்றனர்.

மோகினியாகிய திருமால் திருப்பாற் கடற்கரையில் தனித்திருந்தபோது சிவபெருமான் அழகிய வடிவுடன் வந்து மோகினியைக் கண்டு காதல் கொண்டார். இருவரும் மனமொத்து தேக்கு மரத்தடியில் கூடிக்களித்தனர். சிவனும், மோகினியாகிய திருமாலும் கூடிக் களித்தபோது, இருண்ட மேனியும், சிவந்த சடையும், கருணை பொங்கும் விழிகளுடன், செண்டாயுதம் தாங்கிய கையினராக, மூவுலகும் வியக்கும் வீரம் பொருந்தியவராக ஐயனார் திரு அவதாரம் செய்தார்.

சிவபிரான் அவருக்கு “ஹரிஹரபுத்திரன்” எனப் பெயர் சூட்டினார். விநாயகருக்கும், முருகனுக்கும் தம்பியாகும் பேற்றினைக் கொடுத்து, புவனம் ஒன்றினையும் அளித்தார். தேவர்களும் முனிவர்களும் வணங்கும் அன்புக் கடவுளாக ஆக்கினார். உலகைக் காக்கும் வரத்தையும் கொடுத்து மனித ரட்சகராக்கினார்.

ஐயனாருக்கு பூரணை, புட்கலை என்னும் இரு தேவியர் உண்டு. பூரணாதேவி பொன்னிறத் திருமேனி கொண்டவராக வலப்பக்கம் அமர்ந்து அருள்புரிகிறார். புட்கலாதேவி கரிய திருமேனி கொண்டவராக இடப்பக்கம் அமர்ந்து அருள் புரிகிறார்.

## ஐயப்பன் வரலாறு

கேரளத்தில் பந்தளம் என்னும் இடத்தை இராசசேகரன் என்னும் மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். நெடுங்காலமாகப் பிள்ளையில்லாமல் வருந்தினான். பிள்ளைப் பேறு வேண்டி சிவபிரானை நோக்கி கடும் விரதம் இருந்தான். சிவபிரான் அம்மன்னனுக்கு பிள்ளைப் பேற்றைக் கொடுக்க திருவுளங் கொண்டார். ஐயனாரை ஐயப்பனாக அவதாரஞ் செய்து இராசசேகரனுக்குப் பிள்ளையாக வரும்படி பணித்தார்.

ஐயப்பன் காட்டிலே புதர்களுக்கிடையில் குழந்தையாகக் கிடந்தார். குழந்தை பலமாக அழுது கொண்டிருந்தது. வேட்டையாட வந்த இராசசேகர மன்னன் குழந்தையின் அழுகுரல் கேட்டு அவ்விடம் சென்று பார்த்தான். அழகிய ஆண்குழந்தையைக் கண்டு ஆனந்தமடைந்தான். குழந்தையைத் தூக்கி முத்தமிட்டான். பிள்ளையில்லாக் குறை நீங்கியதாக நினைத்தான். சேனைகள் புடைசூழ குழந்தையை மாளிகை கொண்டு சென்றான். குழந்தையைக் கண்ட அரசியும் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள்.

நல்ல நாளில் குழந்தைக்கு மணிகண்டன் என்ற பெயரைச் சூட்டினார்கள். செல்வச் செழிப்போடு மணிகண்டனை வளர்த்து வந்தார்கள். பள்ளிப்பருவம் வந்ததும் உரிய குருவிடம் சேர்ப்பித்து, சகல கலைகளையும் கற்பிக்கும்படி மன்னன் பணித்தான். குருவானவர் மணிகண்டனுக்கு பாடம் சொன்னார். ஆனால் குரு கற்பிக்காமலேயே அனைத்துக் கலைகளையும் கற்றுத் தேர்ந்தார் மணிகண்டன். மாணவனின் தெய்வ அருளையும் ஞானத்தையும் குரு உணர்ந்து கொண்டார். குருவின் மகன் குருடாயும், ஊமையாயும் உள்ளதையறிந்த மணிகண்டன் அக்குறைபாடுகளை நீக்கி பார்க்கவும், பேசவும் வைத்தார். இப்படியாக அற்புதங்கள் பல புரிந்தார்.

மணிகண்டனை மகனாக அடைந்த சில ஆண்டுகளில் அரசி கருவுற்றாள். ஆண் குழந்தை ஒன்றையும் பெற்றெடுத்தாள். சுபநாளில் குழந்தைக்கு இராஜராசன் எனப் பெயரிட்டனர். மணிகண்டனும், இராஜராசனும் ஒன்றாக வளர்ந்து வந்தார்கள். இருவரும் பாசம் மிக்கவர்களாக இருந்தனர்.

மணிகண்டன் இளவயதிலேயே பேராற்றலும், அற்புதங்கள் புரியும் தன்மையுங் கொண்டு விளங்கியதைக் கண்ட இராசசேகரனின் முதல் அமைச்சர் பொறாமை கொண்டார். மணிகண்டன் அரசுப் பொறுப்பேற்றால் தனக்குப் பெருமையிருக்காது எனக் கருதி மனதுக்குள் வெதும்பினார். சதித்திட்டமும் தீட்டினார்.

அரசியிடம் சென்று மிகுந்த துயருற்றவராக நடித்தார். அரசியும் துயரின் காரணம் கேட்டார். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த முதலமைச்சர் அரசியை நோக்கி “மூத்த பிள்ளைக்கே மரபுப்படி மன்னர் பட்டம் சூட்டுவார், இதனால் உங்கள் வயிற்றில் பிறந்த இராஜராசன் அனாதையாவான். எல்லாப் பெருமைகளும் மணிகண்டனையே சென்றடையும். உங்கள் குலமும் அழிந்து விடும்” எனப் பலவாறாகக் கோள் சொன்னார்.

அரசியும் மதிமயங்கி ‘இதற்கு மாற்று வழியாது’ எனக் கேட்டாள். முதலமைச்சர் அரசியிடம் “நீங்கள் தாங்கொணாத் தலைவலியால் துடிப்பதாக நடிக்க வேண்டும். அரச வைத்தியரைக் கொண்டு, புலிப்பால் தடவக் குணம் காணும் எனச் சொல்ல வைப்பேன். மணிகண்டனும் புலிப்பால் தேடி காடு சென்று இறப்பான். பின்னர் இராஜராசனுக்கு பட்டம் சூட்டலாம்” என்றார்.

மறுநாள் அந்தப்புரத்திலே அரசி தலைவலியால் துடிப்பதுபோல் நடித்தாள். மன்னனும் அரச வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்வித்தான். குணம் கிடைக்கவில்லை. அரச வைத்தியர் அரசரிடம், “மன்னா, நான் எவ்வளவோ அரிய மூலிகைகளைக் கொண்டு சிகிச்சை செய்துவிட்டேன். இது தீராத தலைவலி, இதற்கு புலிப்பால் தடவினால் தான் குணம் கிடைக்கும்” என்றார். அரசனும் செய்தியறிந்து வேதனையால் துவண்டான்.

தந்தையின் வேதனையைக் கண்ட மணிகண்டன் தானே புலிப்பால் கொண்டு வருவதாகக் கூறி கானகத்திற்குப் புறப்பட்டான்.

மகிஷி என்னும் அரக்கி பிரம்ம தேவனிடம் பெரு வரம் பெற்றவள். வரங்களைப் பெற்றமையால் மூவுலகும் செல்லும் பெருமை பெற்றிருந்தாள். தேவலோகம் சென்று தேவர்களுக்கு துன்பம் செய்து வந்தாள்.

ஐயனார் மணிகண்டனாக அவதாரஞ் செய்து கானகம் வந்ததை அறிந்த தேவர்கள் மகிஷியை அழித்து தங்களை ரட்சிப்பவர் மணிகண்டனே என உணர்ந்தனர். காட்டில் பொன்னம்பலமேடு என்னும் காந்தமலையில் அவரை எதிர்கொண்டு அழைத்தனர். மகிஷியை அழித்து தமது துன்பம் நீங்க வேண்டினர். மணிகண்டனும் தேவ உலகம் சென்று அரக்கியுடன் போரிட்டு அவளை அழித்து தேவர்களைக் காத்தருளினார்.

பின்னர் தனது தாய் புலிப்பால் கேட்டதை இந்திரனிடம் கூறினார். இந்திரன் புலி வடிவம் எடுத்தான். தேவர்கள் பெண்புலியாய் மாறினார்கள். புலியாகி மாறிய இந்திரன்மேல் மணிகண்டன் அமர்ந்து புலிக்கூட்டம் புடைசூழ பந்தள நாட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

புலிக்கூட்டத்துடன் மணிகண்டன் வருவதையறிந்து மக்கள் மன்னனிடம் தெரிவித்தனர். மன்னனும் மனம் மகிழ்ந்தான். இச்செய்தியறிந்து முதல் அமைச்சர் மயங்கி வீழ்ந்தார். அரசி தனது கொடுஞ் செயலுக்காக வருந்தினாள். அழுது புரண்டாள். அரசியினதும். அமைச்சரதும் கபட நாடகத்தை அறிந்து கொண்ட மன்னன் அவர்களைத் தண்டிப்பதற்கு முனைந்தான். மணிகண்டன் தந்தையைத் தடுத்து அவர்களை மன்னிக்கும்படி வேண்டினான். மன்னனிடம் “எனக்கு அரசாள விருப்பம் இல்லை, அரச பட்டமும் வேண்டாம், உங்களது பிள்ளையில்லாக் குறை தீர்க்கவே பன்னிரண்டு வருடங்கள் பிள்ளையாக வளர்ந்தேன், தம்பி இராஜராசனுக்கு பட்டம் சூட்டுங்கள்” எனக்கூறி தம்பி இராஜராசனிடம் சபரிமலையில் சரங்குத்தி என்னும் இடத்தில் தனக்கு ஆலயம் அமைக்கும்படி கேட்டுக் கொண்டு மறைந்தார்.

பின்னர் இராஜராசன் பல துன்பங்களின் மத்தியில் படைகளின் துணையுடன் சபரிமலை சென்றடைந்தான். சீரங்குத்திய மரத்தைக் கண்டுகொண்டான். இந்திரன் துணையுடன் பதினெட்டுப் படிகளுடன் கோவில் கட்டினான். சாஸ்தாவாகிய ஐயப்பனை சுபநாளில் பிரதிஷ்டை செய்வித்தான். அன்றுமுதல் இன்று வரை ஐயப்பன் காவல் தெய்வமாக, நல்லோரை ரட்சிப்பவராக இருந்து அருள் மழை பொழிந்து வருகிறார்.

உ



# ஈழத்து தேவாரத் திருப்பதிகங்கள் காட்டும் இயற்கை அழகும் இறை மகத்துவமும்

**நடேசபிள்ளை ஞானவேல்**
B.A, Dip-in Tech, Dip-in Edu

தென் இந்தியாவில் ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சைவ நாயன்மார்கள் பாடிய தேவாரங்களில் அவை துதிக்கப்படும் திருத்தலங்களின் சிறப்பும் அவற்றின் இயற்கைச் சிறப்பும் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் இன்றும் சைவத் தமிழ் மக்கள் மத்தியில் போற்றப்பட்டு வரும் இத்தேவாரத் திருப்பதிகங்கள் இறை உணர்வையும் இலக்கிய ரசனையையும் அவர்கள் மத்தியில் ஊட்டுவதில் முதன்மை பெற்றே அமைகின்றன.

தேவாரத் திருப்பதிகங்களை அருளிச் செய்த நாயன்மார்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய திருப்பதிகங்களில் இன்று நமக்கு கிடைக்கக் கூடிய தேவாரத் திருப்பதிகங்களாக 797 திருப்பதிகங்களே காணப்படுகின்றன. ஏனையவை, கால வெள்ளோட்டத்தினாலும், தக்கமுறையில் பேணப்படாமையினாலும் அழியத் தொடங்கின.

அந்த வகையில் ஈழத்தின் பண்டைய சிறப்புக்கள் பொருந்திய திருத்தலங்களாகிய திருக்கேதீஸ்வரத்தின் மீதும் திருக்கோணேஸ்வரத்தின் மீதும் பாடப்பட்ட தேவாரங்களே ஈழத்துத் தேவாரத் திருப்பதிகங்களாக அமைகின்றன.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருஞானசம்பந்தர், தனது தென்னாட்டுத் திருத்தல யாத்திரையை முடித்துக் கொண்டு இறுதியில் இராமேஸ்வரம் வந்தபோது, அங்கு இராமேஸ்வரப் பெருமானை தரிசித்த பின்னர், ஈழத்தின் மீது எழுந்தருளி உள்ள கேதீஸ்வரத் திருத்தலத்தையும், கோணேஸ்வரத் திருத்தலத்தையும் தனது ஞானக் கண்களால் தரிசித்து, அவ்வாலயங்கள் மீது தேவாரப் பதிகங்கள் பாடியதாக சேக்கிழாரது பெரிய புராணக் கூற்றின் மூலம் அறியமுடிகின்றது. அதாவது

“அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச்சரத் தண்ணல் செய்ய பாத......”

என்ற பாடல் அதுவாகும்.

இதேபோன்று எட்டாம் நூற்றாண்டில் சம்பந்தரின் பின் வாழ்ந்த சுந்தரரும் தனது தென்நாட்டுத் திருத்தல யாத்திரையை முடித்து, இராமேஸ்வரத்தை வழிபட்ட பின் அங்கிருந்து மாதோட்டத்தில் எழுந்தருளி இருக்கின்ற திருக்கேதீஸ்வரத்தின் மீதும் பாடல்கள் பாடியதாக

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்த
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே தொழுதெழுந்தார்

என்ற பெரியபுராண பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.



எனவே சம்பந்தர் கேதீஸ்வரத்தின் மீதும், கோணேஸ்வரத்தின் மீதும் பாடிய இரு பதிகங்களும், சுந்தரர் கேதீஸ்வரத்தின் மீது பாடிய ஒரு பதிகமும் மூலம் காணப்படும் முப்பது தேவாரங்களே ஈழத்துத் தேவாரத் திருமுறைகளாக அமைகின்றன.

திருநாவுக்கரசரது திருவீழிமிழலைப் பதிகத்தில் உள்ள ஏழாவது தேவாரத்திலும், சுந்தரரது திருநாட்டுத் தொகையில் வரும் தேவாரம் ஒன்றிலும் கேதீஸ்வரத்தின் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன. அதே போன்று சுந்தரரது ஊர்த்தொகைப் பதிகத்தில் இடம்பெறும் நான்காவது தேவாரத்தில், கோணேஸ்வரத்தின் சிறப்பும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் அவை ஈழத்துப் பதிகங்களாகக் கருதப்படவில்லை.

எனவே ஈழத்துத் தேவாரப் பதிகங்களாகிய முப்பது தேவாரங்களை அடிப்படையாகக் கொண்டே அவற்றின் வாயிலாக எங்ஙனம் இயற்கைச் சிறப்பும், இறை சிறப்பும் அமைகின்றன என்பதை கீழ்வருமாறு நோக்கலாம்.

## மாதோட்டம் - துறைமுகப் பட்டினம்

திருக்கேதீஸ்வர ஆலயம் அமைந்துள்ள மாந்தை, முன்னர் மாதோட்டம், மாதித்த, என்ற பெயர்களால் அழைக்கப்பட்டது. இது ஓர் துறைமுகப் பட்டினமாகும். ஈழத்தின் ஆரம்ப காலங்களில் புகழ் பூத்த துறைமுகப் பட்டினங்களில் இதுவும் ஒன்றாகக் காணப்பட்டதை மகாவம்சம், சூளவம்சம், தீபவம்சம் போன்ற சிங்கள இலக்கியங்கள் வாயிலாகவும், "நன்னகர் மாந்தை ஒன்னார் பணிதிறை கொணர்ந்த பாடுயர் நன்னர்" என்ற அகநானூற்று செய்யுள் அடிவாயிலாகவும் 'புன்னாலை புனற்றெங்கு சூழ்மாந்தை" என்ற முத்தொள்ளாயிர அடிகள் வாயிலாகவும் அறிய முடிகின்றது. அந்த வகையில் நாயன்மார்கள் பாடிய தேவாரங்களிலும் மாதோட்ட துறை முகத்தின் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன.

சுந்தரரது 3வது தேவாரத்தில் வரும் "....வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டம்" என்ற அடியின் மூலமும், 6வது தேவாரத்தில் வரும் "வையம் மலிகின்ற கடல்", 7வது பாடலில் வரும் "வானத்துறு மலியுங் கடல்" என்ற அடிகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது, கப்பல்கள் மிகுதியாக நங்கூரம் இட்டு இருப்பதும், இந்த உலகத்தவரால் சிறப்பாகப் போற்றப்படும் முறைமுகமும் வானம் நெருங்கி வந்து அமையும் கடல் என்றவாறான சிறப்புக்களை மாதோட்டம் பெற்று இருந்ததை அறிய முடிகின்றது.

இதனைப் போன்று திருஞானசம்பந்தரது பதிகத்தில் இடம்பெறும் 2ம் தேவாரத்தில் "இருங்கடல் கரையில்" என்ற அடியும் 4ம் தேவாரத்தில் வரும் "மறிகடன் மாதோட்டம்", 5ம் தேவாரத்தில் வரும் "மலிகடன் மாதோட்டம்" என்ற அடிகள் வாயிலாக மாதோட்டத் துறைமுகத்தின் பெருமைகள் புலனாகுவதை அவதானிக்க முடிகின்றது.

அடுத்து இருவரதும் பதிகங்கள் வாயிலாக மாதோட்டத் துறைமுகத்தில் மலிந்திருந்த செல்வங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதை நோக்க முடிகின்றது. சம்பந்தரது எட்டாவது தேவாரத்தில் "பொன்னி லங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டம்" என்ற அடியின் மூலமும் சுந்தரரது 10வது தேவாரத்தில் "கறையார் கடல் சூழ்ந்த கழி மாதோட்ட நன்னகர்" என்ற அடிகள் மூலமும் புலனாகின்றது. அதன் பிரகாரம், மாதோட்டத் துறைமுகத்தில் பொன்னும், மாணிக்கமும், முத்தும், உப்பு விளைகின்ற உப்பளங்களும், மலிந்து காணப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் இங்கு பல்நாட்டு வாணிபம் மேற்கொள்ளப்பட்டது என்பதை புலப்படுத்துகின்றது.

இதனை நிறுவும் முகமாகவே சென்ற நூற்றாண்டில் மாந்தையில் தொல்பொருள் அகழ்வாராய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது மணிகள், உலோகத்துண்டங்கள், பீங்கான் ஓடுகள், பலவிதமான சாடிகள் என்பன கிடைத்துள்ளன. இவை உரோம், பாரசீகம், சீனா, அரபியா போன்ற பிரதேசங்களைச் சார்ந்தவையாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## கோணமா மலைத் துறைமுகம்

உலகின் தலை சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றாகிய திருகோணமலைத் துறைமுகம் ஏழாம் நூற்றாண்டிலும் சிறப்பெய்தி இருந்ததை ஞானசம்பந்தரது கோணமாமலைப் பதிகத்தின் வாயிலாக அறியமுடிகின்றது.

"....கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்...."

"....கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்...."

"....தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்கும்...."

"....துன்றுமொண் பௌவல் மௌவலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவும்...."

என்ற 1, 2, 4, 10 ஆகிய தேவார அடிகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபோது அதன் பிரகாரம் மிகவும் கொடிதாக அலைகள் எழுந்து வந்து வீசுகின்றதாகவும், அவ்வாறு வீசுகின்றபோது செம்பொன், முத்துச்சிப்பிகள் என்பனவற்றை அவ்வலைகள் கரையிலே கொண்டு வந்து குவிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் கரைகளிலே வாசனை பொருந்திய சந்தன மரங்களும் அகில் மரங்களும், நெருக்கமான குடியிருப்புக்களும் காணப்பட்டதாக ஞானசம்பந்தர் ஞானக்கண் கொண்டு பாடிய மேற்படி தேவாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

## மாந்தையின் இயற்கை வனப்பு

திருக்கேதீஸ்வர ஆலயம் இன்று போன்று 7, 8ம் நூற்றாண்டுகளிலும் சிறந்த இயற்கை வனப்புக்களோடு கூடிய தலமாக அமைந்ததை சம்பந்தரதும் சுந்தரரதும் கேதீஸ்வரப் பதிகங்கள் மூலம் நோக்க முடிகின்றது.

சம்பந்தரது திருக்கேதீஸ்வரப் பதிகம் காட்டும் இயற்கை வனப்பை நோக்குகையில்

"....கடிகமழ் பொழிலணி மாதோட்டம்....",
"....வாழையம் பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்...."
"....வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்...."
"....மாவும் பூகமும் கதலியு நெருங்கு மாதோட்ட நன்நகர்...."

என்ற 1, 6, 7, 9 ஆகிய மேற்படி தேவார அடிகளைக் கூர்ந்து அவதானிக்கும் போது, மாதோட்ட நன்னகரிலே மிக்க வாசனை பொருந்திய மலர்கள் நிரம்பப் பெற்ற பூஞ்சோலைகள் மிகுதியாகக் காணப்பட்டனவென்றும், அவற்றோடு வாழைமரச் சோலைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றனவென்றும், அவற்றுள் மந்திகளாகிய குரங்குகள் தாவி மகிழ்ந்து கூத்தாடுவதாகவும் கூறப்படுகின்றது. மேலும் அத்தகைய இயற்கை வனப்பு மிகுந்த சோலைகளில் தேன் எடுக்க வந்த வண்டுகள் இனிமையாக பண் எனக் கூறத்தக்க பாடல்களைப் போன்று ரீங்காரம் செய்கின்றன. அந்த ரீங்கார

சுத்தானந்தம் பொன்விழா மலர்

ஒலியைக் கேட்டு சோலைகளில் உள்ள பெரிய மலர்கள் எல்லாம் மலருகின்றன. அவ்வாறு மலர்கள் மலர்வதைக் கண்டு அழகிய மயில்கள் எல்லாம் தமது நீண்ட தோகைகளை விரித்து ஆடுகின்றன. அத்தோடு அச்சோலைகளில் பூமரங்கள் மாத்திரமன்றி கமுக மரமும், பழ மரங்களான மாவும், கதலியும் செழித்துக் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார்.

அடுத்து சுந்தரரது திருக்கேதீஸ்வரப் பதிகம் காட்டும் இயற்கை வனப்பை நோக்கும்போது இவரும் சம்பந்தரைப் போலவே சோலைகளில் வண்டுகள் ரீங்காரம் செய்கின்ற இசை மரபையே முதன்மைப்படுத்திக் கூறுகின்றார். அதாவது

"....வரிய சிறை வண்டியாழ் செயும் மாதோட்ட நன்னகர்...."

"....மட்டுண்டுவண் டாடும்பொழில் மாதோட்ட நன்னகர்...."

"....சிறையார் பொழில் வண்டி யாழ் செயுங் கேதீச்சரத்தானை...."

என்றவாறான 4, 8, 10 ஆகிய தேவார அடிகள் மூலம் நோக்க முடிகின்றது.

அந்த வகையில் மாதோட்டத்தில் அமைந்துள்ள சோலைகளுக்கு வருகின்ற வண்டுகள் யாழில் இருந்து மீட்டப்படுகின்ற இனிமையான இசையைப் போல இவை ரீங்காரம் செய்வதாகக் குறிப்பிடுகின்றார். அத்தோடு சோலைகளில் மிகுதியாகக் காணப்படும் தேன்களை உண்டமையால் அவை தமது நிலை தளர்ந்து ஆடுவதாகவும் சுந்தரர் கூறுகின்றார். இதன் மூலம் மாந்தையில் எந்தளவு தூரம் நீர்வளம் சிறந்து காணப்பட்டது என்பதை மறைமுகமாகப் புலப்படுத்துகின்றார்.

## திருக்கோணேஸ்வரத்தின் இயற்கை வனப்பு

திருக்கேதீஸ்வரப் பதிகத்தில் காணப்பட்டதைப் போன்று கோணேஸ்வரப் பதிகத்திலும் இயற்கை வனப்பு காணப்படுவதை நன்கு நோக்க முடிகின்றது. அந்த வகையில் சம்பந்தரது பதிகத்தில் கோணேஸ்வரம், காவும், பொழிலும் சூழ்ந்த பகுதியாக விளங்கியது. அங்கு கனிமரச் சோலைகள் மட்டுமன்றி நிழல்தரு மரச்சோலைகளும் பூம்பொழில்களும் காணப்பட்டன.

"....விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

என்ற சம்பந்தரது ஏழாவது தேவார அடிகளை நோக்குகின்ற போது, மௌவல், மாதவி, புன்னை, வேங்கை, வண் செருந்தி, செண்பகம் ஆகிய மரங்கள் பெரிதாக பரந்து கிளைவிட்டுக் காணப்படுவதாகவும் அவற்றோடு முல்லைக்கொடி படர்வதாகவும் குறிப்பிடுகின்றார். ஆயினும் ஏனோ கேதீஸ்வரப் பதிகத்தில் இடம்பெறும் விலங்குகள் பற்றிய இயற்கை வர்ணனை இங்கு குறிப்பிடப்படவில்லை. ஆயினும் இன்று வரையும் கோணேஸ்வரர் ஆலயச் சூழலில் மான்களும் மயில்களும் மந்திகளும் காணப்படுவது அவதானிக்கத்தக்கதே.

## தீர்த்தச் சிறப்பு

கேதீஸ்வரத்தின் புனித தீர்த்தமாகக் காணப்படும் பாலாவித் தீர்த்தத்தின் சிறப்பு ஆலயச் சிறப்பினைப் போன்று சமமாக போற்றப்பட்டு வந்ததை வரலாற்றுக் காலம்தொட்டு அறியமுடிகின்றது. அதாவது அநுராதபுரக் கல்வெட்டு ஒன்றிலே ஜேதவனராமத்துக்கு தீங்கு செய்பவர்கள் மஹாதொடியிலே (பாலாவி) பசுக்களை வதை செய்யும் பாவத்துக்கு ஒப்பாவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இதேபோன்றே கதிர்காமத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டொன்றும் கூறுகின்றது.

அந்த வகையில் நமது கேதீஸ்வரப் பதிகங்களில் கேதீஸ்வரப் பெருமான் எழுந்தருளி உள்ள பாலாவித் தீர்த்தத்தின் சிறப்புக்கள் எங்ஙனம் விபரிக்கப்பட்டுள்ளன என்பதை நோக்குகையில், ஏழாம் நூற்றாண்டில் பாடப்பட்ட சம்பந்தரது பதிகத்தில் இத்தீர்த்தம் பற்றி பத்தாவது தேவாரத்தில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. "....மன்னுபா லாவியின் கரையில்...." என்பது அதுவாகும்.

மாறாக எட்டாம் நூற்றாண்டில் எழுந்த சுந்தரரது பதிகத்தில் ஒன்பது தேவாரங்களில் "பாலாவியின்" என்ற புனித தீர்த்தப் பெயர் இடம்பெற்று இருப்பதை நோக்கமுடிகின்றது.

அந்தவகையில் சுந்தரரது

"....பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே"

என்ற முதலாவது தேவார அடிமூலம், இறைவன் மீது பக்தி கொண்டு அவன் பணி தொடரும் மெய்யன்பர்கள் ஒன்றுகூடி மன ஒருமைப்பாட்டோடு தொழும் தீர்த்தக் கரையாக பாலாவி அமைவதாகக் குறிப்பிடுகின்றார்.

மேலும் பாலாவியின் கரையிலேதான் கேதீஸ்வரப் பெருமான் நிலையாக உறைகின்றார் எனவும் சுந்தரர் குறிப்பிடுகின்றார். அதாவது

"....படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமா உறைகின்றான்திருக் கேதீச் சரத்தானே"

என்ற இரண்டாவது தேவார அடி இதனைப் புலப்படுத்துகின்றது.

இன்று நாம் கேதீஸ்வரத்தில் பாலாவி என்ற அலைகள் அமைதியாக வீசும் சிறிய குளத்தையே காணமுடிகின்றது. ஆனால் எட்டாம் நூற்றாண்டில் பாரிய அலைகள் வீசி எழும் புனித தீர்த்தமாக இது அமைந்ததாக சுந்தரர் தனது நான்காவது தேவாரத்தில் "....பரிய திரை எறியவரு பாலாவியின் கரைமேல்...." எனக் குறிப்பிட்டுள்ளதை நோக்க முடிகின்றது.

கங்கை, யமுனை முதலான நதிகள் எங்ஙனம் பாவம் தீர்க்கும் புனித நதிகளாகக் காணப்பட்டனவோ அவ்வாறே பாலாவித் தீர்த்தமும் அன்று பாவ வினை அறுக்கும் பாலாவியாகக் காணப்பட்டதை சுந்தரரது மேல்வரும் ஒன்பதாவது தேவார அடிமூலம் நன்கு அவதானிக்க முடிகின்றது.

"....பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன் எனை ஆள்வான் திருக்கேதீச் சரத்தானே"

சம்பந்தரது கேதீஸ்வரப் பதிகம் போன்று கோணேஸ்வரப் பதிகத்திலும் கோணேஸ்வரப் புனித தீர்த்தமாகக் கருதப்படும் பாபநாச தீர்த்த சுனை பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆயினும் '....கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த...." என்ற ஐந்தாவது தேவார அடியை நோக்குகையில் "சுனை" என அவர் கூறுவது இப்புனித தீர்த்தமாக இருக்குமோ எனக் கருத முடிகின்றது. ஆயினும் அன்று மலையில் இருந்து பாய்ந்த பாபநாசச் சுனையே இன்று ஒடுங்கி பாபநாசக் கிணறாக கோணேஸ்வரத்தில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

## இறை சிறப்பு

அடுத்து இறை சிறப்பை நோக்குகையில் முதலில் கேதீஸ்வரப் பெருமான் பற்றி எங்ஙனம் கூறப்பட்டுள்ளன என அவதானிக்கும் போது, சம்பந்தர் தனது கேதீஸ்வரப் பதிகத்திலே

"....கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்
கேதீச்சரம் பிரியாரே"

"....தேவி தன்னொடுந் திருந்து கேதீச்சரத்
திருந்தவெம் பெருமானே"

என்றவாறு கூறி இருப்பதன் மூலம் இங்கு எழுந்தருளி உள்ள கேதீஸ்வரப் பெருமான் தனது அழகிய மார்பிலே பன்றியின் பற்களை மாலையாக அணிந்துள்ளார் என்றும் "தன்னிலமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" எனத் திருவருட்பயன் கூறுவது போன்று தேவியோடு இணைந்தே திருவருள் புரியும் பண்பு வாய்ந்தவராகவும் இவர் சிறப்பிக்கப்படுகின்றார்.

அடுத்து சுந்தரரது கேதீஸ்வரப் பதிகத்தில் காணப்படும் கேதீஸ்வரப் பெருமானின் இறை சிறப்புக்களை நோக்குகையில் இவ் இறைவன் தனது சிவந்த கண்களால் அருள்புரிபவர் என்றும், ஞான ஒளியோடு, நாடுவோரை அன்பால் அடக்கி அருள் மழை பொழிபவராகவும் காணப்படுகின்றார். மேலும் இறந்த அடியவர்கள் முத்திப்பேறு பெற்று வந்து இவரைப் பணிந்து போற்றும் சிறப்பும் பொருந்தியவர் எனக் குறிப்பிடுகின்றார்.

"....செங்கண்ணர வசைத்தான் திருக்கேதீச் சரத்தானே"

"....சிட்டன் நமை ஆள்வான் திருக்கேதீச்சரத்தானே"

"....பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும் பணிவான்திருக் கேதீச் சரத்தானே"

என்ற தேவார அடிகள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கோணேஸ்வரப் பதிகத்தில் காணப்படுகின்ற கோணேஸ்வரப் பெருமானின் சிறப்புக்களை சம்பந்தர் எவ்வாறு கூறுகின்றார் என்பதை அடுத்து நோக்கும்போது

"....குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே"

"....கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே"

என்ற மேற்படி தேவார அடிகளின் மூலம் இங்கு எழுந்தருளி உள்ள கோணேஸ்வரப் பெருமான் வளைந்த வில்லை உடையவர் என்றும், இறைவனால் நற்பேறு பெற்றவர்கள் என்றென்றும் தம் உள்ளத்திலே நினைத்து தொழும் அளவு பெரும்புகழை உடையவர் இவர் எனக் குறிப்பிடுகின்றார்.

## அம்பிகையின் சிறப்பு

இருதலங்களிலும் எழுந்தருளி உள்ள அம்பிகையின் சிறப்பினை அடுத்து நோக்கும்போது, கேதீஸ்வரத்தில் எழுந்தருளி உள்ள கௌரி அம்பாளது சிறப்புக்களை சம்பந்தரது பதிகத்தில் காணமுடியவில்லை. ஆயினும் மாறாக சுந்தரரது கேதீஸ்வரப் பதிகத்தில் மிகுதியாகத் தேவியின் சிறப்புக்கள் கூறப்பட்டு இருப்பதை நோக்க முடிகின்றது.

சுந்தரர் அம்பிகையின் இடையின் அழகினை வர்ணிக்கும் போது, படர்ந்து செல்கின்ற மென்மையான வேரினைப் போன்றது இவரது இடை என இரு தேவார அடிகளில் குறிப்பிடுகின்றார். 'படவேரிடை மடவாளொடு....', "....பையேரிடை மடவாளொடு...." என்ற தேவார அடிகள் அவையாகும்.

இதேபோன்று இனிமையான பானங்களை அருந்தும் போது எவ்வாறு இனிமை பயக்குமோ அவ்வாறே இனிமையான மொழிகளைப் பேசுபவர் இவ் இறைவி என்கிறார். அத்தோடு "....பட்டவரி நுதலாளொடு...." என்ற அடிகளின் மூலம் இவர் வில்லைப் போன்ற அழகிய நெற்றியை உடையவர் எனக் குறிப்பிடுகின்றார்.

அடுத்து கோணேஸ்வரத்தில் எழுந்தருளி உள்ள மாதுமை அம்பாளது சிறப்பை நோக்கும் போது, சம்பந்தர் கௌரி அம்பாளது சிறப்பினைக் கூறாதது போலவே மாதுமையம்பாளது சிறப்புக்களையும் குறிப்பிடாமை நமது தவக்குறையே.

## வழிபடும் அடியவரது பயன்கள்

இவ்விரு திருத்தலங்களையும் வழிபடுவோர் அடையும் நற்பலன்கள்பற்றி அடுத்து நோக்கும்போது, திருஞானசம்பந்தரது கேதீஸ்வரப் பதிகத்தில் மாத்திரமே வழிபடுவோர் அடையும் பயன்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஏனைய பதிகங்களில் அவை பற்றிக் குறிப்பிடப்படவில்லை.

"....கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே."
"....கேடிலாதகே தீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே."
"....அண்ண னண்ணுகே தீச்சர மடைபவர்க்கு
அருவினை அடையாவே"
"....முடிகள் சாய்த்தடி பேணவல்லார் தம்மேல்
மொய்த்தெழும் வினைபோமே"
"....அல்ல லாசறுத் தரனடி யிணைதொழு
மன்பரா மடியாரே"
"....தொண்டர் நாடொறுந் துதிசெய அருள்செய்
கேதீச்சர மதுதானே"

என்ற அடிகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபோது, கேதீஸ்வரப் பெருமானைத் தொழுகின்ற அடியவர்களைப் பீடித்து இருக்கின்ற கொடிய வினைகள் விரைவில் நீங்கும் என்றும், கொடிய வினைப் பிறவிகள் அவரை ஒருபோதும் அடையாவென்றும், இரவு பகலாக கேதீஸ்வரப் பெருமானை வழிபடுபவரே அவரது துன்பங்கள் நீங்கி சிறந்த அடியவர்களாகக் கணிக்கப்பெறும் பாக்கியம் பெறுவார்கள் என்றும், நாள்தோறும் அடியவர்கள் வழிபட்டமையால் அவனது அருட்கடாட்சம் கிடைக்கப் பெறும் பலன் பெறுவார்கள் என்றும் சம்பந்தர் உறுதியாகக் கூறி இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

எனவே முடிவாக ஈழத்துச் சைவத்தமிழ் மக்களது வரலாறு பற்றிக் கூறுவதும், அவர்தம் பண்டைய ஆலயங்களின் சிறப்புக்கள் பற்றிக் கூறுவதுமான எந்த ஒரு நூலும் அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இதுவரை எழவில்லை, ஆயினும் ஓரளவுக்கேனும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருசில நூல்களில் ஒன்றாக இவ் ஈழத்து தேவாரத் திருப்பதிகங்கள் அமைகின்றன. ஆதலால் முன்னே கூறப்பட்ட இயற்கைச் சிறப்புக்கள் மாத்திரமன்றி அவற்றின் கண் காணப்படும் இசை மரபுகள், யாப்பு மரபுகள், அணிமரபுகள் என்பன பற்றியும் விரிவாக நோக்கலாம். ஆதலால் இவ் ஈழத்துத் திருமுறைகளை மையமாகக் கொண்டு மேலும் பல விரிவான ஆய்வுகள் நடாத்தப்பட வேண்டும். அப்போதுதான் மறைந்து கிடக்கும் நமது ஈழத்துச் சைவத்தமிழ் பாரம்பரியங்களின் உண்மைத் தரிசனங்களை மேலும் மேலும் வெளிக்கொணர முடியும்.

உ

# சமய நிறுவனங்களின் சமூகப்பணி

ச. விஜயரத்தினம் B. A.
(துணைத்தலைவர் – சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்)

நெற்றியில் நிலைத்த நீறும்
நீள்கரம் பிடித்த வாளும்
வெற்றியைக் குறித்த நோக்கும்
வீரத்தை விளைத்த நெஞ்சும்
உற்றவெம் பகையை வென்று
உயர்கொடி யுடன் அடங்காப்
பற்றினை ஆண்ட வீரப்
பண்டார வன்னித் தோற்றம்

என்று தமிழ்மணி அகளங்கனால் வர்ணிக்கப்பட்ட தோற்றத்தைக் கொண்ட மாவீரன் பண்டாரவன்னியன் ஆட்சி செய்த வன்னிவள நாட்டில், பண்டைக் காலம் தொட்டே ஆலயங்களும் சமய நிறுவனங்களும் சமயப்பணியில் மட்டும் ஈடுபடாமல் சமூகப்பணியிலும் ஈடுபட்டு வந்ததால், வன்னிவள நாட்டில் மக்கள் இறைபற்று உள்ளவர்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும், நீதி நேர்மைக்கு கட்டுப்பட்டவர்களாகவும், பெரியோரை மதித்தும் வாழ்ந்து வருகின்றார்கள்.

வன்னிவள நாட்டில் பண்டைக் காலம் தொட்டு ஆலயங்களுடன் இணைந்த சமய நிறுவனங்கள் சமயப்பணியுடன் சமூகப்பணியிலும் ஈடுபட்டு வந்தன. சைவ ஆலயங்களை இணைத்த சைவசமய நிறுவனங்களும், கிறீஸ்தவ ஆலயங்களைச் சார்ந்த கிறீஸ்தவ சமய நிறுவனங்களும் தமது மதத்தினைச் சார்ந்த சமூகத்தவர்களுக்கு கல்வி, பொருளாதாரம், கலை கலாசாரம், வைத்தியத்துறை ஆகியவற்றின் வளர்ச்சியில் ஈடுபட்டு வந்தனர்.

ஆரம்ப காலங்களில் சிறிய கிராமங்களாக இருந்த வன்னிவள நாட்டில், கிராமங்களுடன் நெருக்கமான தொடர்புகள் இல்லாத காரணத்தால் தங்கள் கிராம மக்களுக்குத் தேவையான ஆலயங்களையும், பாடசாலைகளையும், வைத்திய கூடங்களையும் ஏனைய சமய, சமூக, பொருளாதார, கலாசார நிறுவனங்களையும் அமைத்து தங்களது தேவைகளை நிறைவு செய்து சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள். ஆத்மீக செயற்பாட்டிற்கு ஆலயங்களுக்கும் உணவுக்காக வயல்களுக்கும், கல்வி அறிவுக்காக பள்ளிக்கூடங்களுக்கும், நோய்களைக் குணப்படுத்த பரியாரிமாரிடமும், கலைகலாசார நிகழ்வுகளை நடாத்துவதற்கு அண்ணாவிமாரிடமும் சென்று தங்களது தேவைகளை அந்த கிராமத்திலே பெற்று இனிது வாழ்ந்து வந்தனர்.

தென் இந்தியாவிலும், ஈழவள நாட்டிலும் பண்டுதொட்டு இன்று வரை இரு வழிபாட்டு முறைகள் இருந்து வருகின்றன. ஒன்று ஆகம முறையில் அமைந்த தெய்வ வழிபாட்டு முறை. மற்றது ஆகம முறைக்கு அமையாமல் பூசகர்களால் சிறு கோவில்கள் அமைத்து வழிபாடு செய்தல். வன்னிவள நாட்டிலும் ஆரம்ப காலங்களில் கிராமங்கள் தோறும் அக்கிராம மக்களின் நம்பிக்கைக்குரிய தெய்வங்களை வைத்து சிறு கோவில்கள் அமைத்து பூசகர்களால் பூசைகள் செய்ய அத்தெய்வங்களையும், அத்தெய்வங்களை பூசை செய்யும் பூசகர்களையும் முழு நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் பூசித்து வந்தனர். வன்னிவள நாட்டில் கூடுதலாக அம்மன் கோவில்களும், நாகதம்பிரான் கோவில்களுமே இப்படி பூசகர்களால் பூசிக்கப்பட்ட கோவில்களாகும். வயல்களிலும்,

குளக்கட்டுகளிலும் பிள்ளையாராக சிறுசிலைகளும், கருங்கற்களும் வைத்து தங்களது வசதிக்கு ஏற்ப மக்களால் நேரடியாகவே வணங்கி வந்தார்கள். வளர்ச்சியடைந்த கிராமங்களில் பிள்ளையார், முருகன், அம்மன் ஆகிய தெய்வங்களுக்கு கோவில்கள் அமைத்து ஆகம விதிப்படி அந்தணர்களால் பூசைகள் செய்ய மக்கள் வழிபாடு செய்து வந்தனர்.

வன்னிக் கிராமங்களில் அந்த கிராம மக்களால் மதிக்கப்படுகின்ற சிலர் வன்னிக் கிராம ஆலயங்களை நிர்வகித்து வந்ததுடன் அந்த கிராம மக்களின் மேம்பாட்டிற்காகவும், வளர்ச்சிக்காகவும் குறைகளைக் களைந்து நிறைவான வாழ்வு வாழ்வதற்காகவும் சமூகப்பணிகளிலும் ஈடுபட்டு வந்தனர். அப்பெரியார்களை அக்கிராம மக்கள் பெரிதும் மதித்து வந்ததுடன் அவர்களது நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட்டும் வாழ்ந்து வந்தனர். அப்பெரியார்களில் கல்விமான்களும், ஒழுக்க சீலர்களும், பரியாரிமார்களும், அண்ணாவிமார்களும் நிலபுலன்கள் வைத்திருந்த செல்வந்தர்களும் இருந்தார்கள். அதனால் அவ்வூர் மக்கள் தங்களது வைத்திய தேவைகளுக்கோ, பொருளாதார தேவைகளுக்கோ, கல்வித் தேவைகளுக்கோ, கலைகலாசார தேவைகளுக்கோ அவர்களை நாடினார்கள். அவர்களும் மக்களின் தேவைகளுக்கு ஏற்ற விதத்தில் சமூகப்பணியில் ஈடுபட்டு வந்தனர். அந்த பண்பான பெரியோர்களின் சமூகப்பணியால் கிராமங்கள் வளர்ச்சியடையவே கிராமங்களிடையே தொடர்புகள் ஏற்படத் தொடங்கின. ஏனைய கிராமங்களில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்குச் செல்வதும் விஷேட கலை நிகழ்வுகளில் கலந்து கொள்வதும் பண்டமாற்றுகளில் ஈடுபடுவதுமாக கிராம தொடர்புகள் ஏற்படத் தொடங்கின. இதனால் கிராமங்கள் மேலும் சமூக சமய துறைகளில் வளர்ச்சியடையத் தொடங்கின.

கால ஓட்டத்தில் போக்குவரத்து, பொருளாதாரம், கல்வி வளர்ச்சியடையவே வன்னியில் உள்ள ஒரு சில கிராமங்கள் நகரங்களாக வளர்ச்சியடைந்தன. போக்குவரத்துக்கு முக்கிய இடமாகவும் நீர்வளம், நிலவளம் நிறைந்ததாகவும் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த இடமாகவும் வவுனியா மாறவே, வவுனியா ஒரு நகரமாக மாறியது. குளங்களால் நிலவளமும் வளர்ச்சியடையவே பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. இலங்கையில் ஏனைய நகரங்களை இணைக்கும் முக்கிய மத்திய நிலையமாக வவுனியா நகரம் வளர்ச்சியடைந்தது. அண்மைக் கால அரசியல் நெருக்கடியால் மக்கள் இடம்பெயர்ந்து வந்ததால் வியாபார நிலையங்கள் பெருகின. பாடசாலைகள் வளர்ச்சியடைந்தன. வைத்தியசாலையும் வைத்திய நிலையங்களும் அதிகரித்தன. இடர்களை பட்டுவந்த மக்கள் ஆலயங்களை நாடினார்கள். அதனால் ஆலயங்கள் வளர்ச்சியடைந்தன. இந்த நிலையில் ஆலயங்கள் சமயப்பணியில் மட்டும் நின்றுவிடாது சமூகப்பணியிலும் ஈடுபடவேண்டிய நிலைக்கு வந்தது. அதனால் ஆலயங்களுடன் இணைந்தும் தனித்தும் இயங்கி வந்த சமய நிறுவனங்கள் சமூகப்பணியில் அதிகம் ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டது.

வவுனியா நகர வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்திலே இந்து சமயப்பணியுடன் சமூகப்பணியையும் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக வவுனியா நகரத்திலும் அதனை அண்டிய கிராமங்களிலும் இருந்த பெரியோர்கள் வவுனியா நகரத்தில் இந்துசமய நிறுவனங்களை ஏற்படுத்தினர். இதன் முதற் கட்டமாக வவுனியா நகரத்தில் இந்துசமய நிறுவனம் ஒன்றினை அமைத்து அதன்மூலம் இந்து சமயத்தையும் இந்து சமயத்தைச் சார்ந்த சைவ மக்களுக்கும் சமூகப்பணியையும் செய்ய வேண்டும் என்று வவுனியா நகரத்திலும் அதனை அண்டிய கிராமத்திலும் வாழ்ந்து வந்த சைவப் பெரியார்களின் நீண்ட நாட் கனவினை 1952ம் ஆண்டு கார்த்திகை மாதம் பத்தொன்பதாம் திகதி தமிழ் நாட்டில் இருந்து வவுனியாவிற்கு வருகைதந்த கவியோகி சுத்தானந்த பாரதியாரால் நிறைவு செய்யப்பட்டது. அக்காலத்தில் வவுனியா நகரத்திலும் இருந்த சைவப் பெரியார்களும் அன்றைய பல அரச உத்தியோகத்தர்களும் எடுத்த கடும் முயற்சியால் கவியோகி சுத்தானந்த பாரதியாரால் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்

உருவாக்கப்பட்டது. கவியோகி சுத்தானந்த பாரதியார் மீண்டும் வவுனியாவிற்கு வந்தபோது 1968 ஆனி மாதம் இருபதாம் திகதி சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்திற்கான கட்டிடத்திற்கு அத்திவாரம் இடப்பட்டது. வவுனியா சைவப் பெரியோர்களின் கடும் முயற்சியால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதி உதவி பெற்று சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கட்டிடத்தை கட்டி முடித்தனர். பின்பு இச்சங்கத்தை ஆட்சி செய்தவர்களின் நிர்வாகத் திறமையாலும் கடும் முயற்சியாலும் இரண்டு மாடிக் கட்டிடத்தைக் கொண்ட கலாசார மண்டபத்தையும், சிறந்த சைவ உணவக மாடிக் கட்டிடத்தையும் கட்டி சமய, சமூகப் பணியினையும் சிறப்பாக செய்து வருகின்றனர்.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் தமது சமூகப்பணியில் முன்னூறுக்கும் மேற்பட்ட பாலர்களையும் எட்டு ஆசிரியர்களையும் கொண்ட பாலர் பாடசாலையை நடாத்தி வருகின்றது. வருடாந்த பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியையும், வருடாந்த கலைவிழாவினையும் சிறப்பாக செய்து சைவசமய சிறுவர்களுக்கு சிறந்த கல்வி வளர்ச்சியை செய்து வருகின்றது. அத்துடன் வறிய மாணவர்களுக்கு நிதி உதவி செய்து அவர்களின் மேற்படிப்புக்கும் உதவி செய்து வருகின்றது. எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஊக்குவிப்பதற்காக நூல்வெளியீட்டு விழாக்களையும், கலாச்சார விழாக்களையும், சொற்பொழிவுகளையும் சங்கீத நடன வகுப்புக்களையும் நடாத்தி வருவதுடன், சிறப்பான கலைஞர்களை கௌரவித்தும் வருகின்றது. மேலும் வசதி குறைந்த சைவ நிறுவனங்களுக்கும் சைவ ஆலயங்களுக்கும் பொருள் உதவிகளும், பொருளாதார உதவிகளும், நூல்கள் அன்பளிப்பும் செய்து வருகின்றது. இவற்றுக்கு மேலாக அறநெறிப் பாடசாலைகளுக்கான கருத்தரங்குகளையும் சைவசமய நிகழ்வுகளையும் இந்துசமய கலாச்சார அமைச்சுடன் இணைந்து நடாத்தி வருகின்றது.

அண்மைக்கால அரசியல் நெருக்கடியில் அடிபட்ட மக்கள் சொல்லொண்ணாத் துயரத்துடன் இடம்பெயர்ந்து வவுனியாவிற்கு வந்தபோது, அவர்களை அரவணைத்து அவர்களுக்கு தங்குமிட வசதியும், ஏனைய பல வசதிகளையும் செய்து வருகின்றது. இங்கு தங்கியிருப்பவர்களுக்கு வசதியாக தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றினையும், சைவ உணவகம் ஒன்றினையும் அமைத்து அவர்களுக்கு உதவி செய்து வருகின்றது.

வவுனியா மாவட்ட மட்டத்தில் சுகாதார சீர்கேடுகளைப் போக்குவதற்காக சுகாதார திணைக்களத்துடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது. இந்துசமய திருமணங்களையும், ஏனைய இந்துசமய சடங்குகளையும், சமய நிகழ்வுகளையும் சிறப்பாக அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தில் நடாத்தி வருகின்றது.

சைவப் பெரியார் கவியோகி சுத்தானந்த பாரதியாரால் ஆரம்பிக்கப்பட்ட சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமும், அவரது அத்திவாரத்துடன் அமைக்கப்பட்ட சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கட்டிடமும் அன்றைய சைவப் பெரியார்களின் கடும் முயற்சியால் சிறப்பான முறையில் வளர்ச்சியடையச் செய்து இன்று, இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப சமய சமூகப்பணிகளை சிறப்பான முறையில் ஆற்றி வருகின்றது. இவற்றுக்கு உறுதுணை புரிந்த சைவப் பெரியார்களை நாம் என்றும் மறக்க முடியாது. "சைவ சமயத்தவர்கள் சமயத்தொண்டில் காட்டும் அக்கறை, சமூகத்தொண்டில் காட்டுவதில்லை. அதனால் எமது நிறுவனம் சமூகத்தொண்டில் அதிகம் ஈடுபடவேண்டும்" என்று அடிக்கடி எமக்குக் கூறி எமது நிறுவனத்தை சமூகப்பணியில் அதிகம் ஈடுபடுத்தி வரும் எமது தலைவர் **"மக்கள் சேவை மாமணி" திரு. நா. சேனாதிராசா** அவர்களின் சேவையை நாம் எல்லோரும் பாராட்ட வேண்டும். அவரது தலைமையில் இயங்கும் தற்போதைய ஆட்சிமன்ற உறுப்பினர்களின் முயற்சியால் வடபகுதியில் சைவ மக்களுக்கு சிறப்பான சமய, சமூகப்பணியை ஆற்றி வந்து இன்று சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் பொன்விழா காண்பதில் நாம் எல்லோரும் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

# கவிதை

# தமிழ்

# (139 - 156)

# வன்னிநாடு

**கவிஞர் ஜின்னாஹ்**

(ஜின்னாஹ்வின் பண்டாரவன்னியன் காவியத்திலிருந்து நாட்டு வளம்)

01) வடக்கினிலே யாழேரி தெற்கே எல்லை
வாரிதிக்கு முகங்கொடுக்கும் அரிவி ஆறும்
உடன்ஒருபால் நுவரகலா வியமா வட்டம்
ஒன்றுந்திரி கோணமலை கிழக்காம் மேற்கே
இடங்கொண்ட மன்னாரும் வன்னி மண்ணின்
எல்லைகளாம் சுமார்நான்கு ஆயிரம் கல்
உடையதது பரப்பளவில் அடங்காப் பற்றென்
றோதினராம் ஓர்காலம் மண்சிறப்பால்.

02) யாருக்கும் அடங்காது திறைசெ லுத்தா
திருந்ததனிப் பெருமைகொண்ட கார ணத்தால்
பேர்வந்த தாம்அடங்காப் பற்று என்றே
புகழ்மிக்க வீரமன்னர் ஆண்ட நாடு
சூரியனே அஸ்தமிக்கா நாட்டோர் கூடத்
திணறியதிம் மண்ணாண்ட வீர ராலே
போருக்காய்ப் பீரங்கிப் படையோ டுற்றும்
போர்வாளும் ஈட்டியொடும் பொருதி னோர்கள்.

03) அடங்காப்பற் றென்றிருந்த வன்னி மண்ணை
ஆண்டவனே இறுதித்தமிழ் மன்னன் பாரில்
அடங்காத பற்றுடைத்தார் மக்கள் மண்ணில்
அரசனுமவ் வாறேதம் மக்கள் மீதும்
அடங்காத பற்றுவைத்தே ஆண்டான் யார்க்கும்
அடங்கவில்லை மன்னனொடு மக்கள் தாமும்
அடங்காது சுதந்திரராய் இறுதி மட்டும்
அன்னை மண்ணைக் காத்தபுகழ் கொண்ட பேரே.

04) வன்னியர்கள் வாழ்ந்ததனால் வன்னியென்றும்
வன்னியென்னும் வனம்சார்ந்தே இருந்த தாலும்
வன்னியெனும் நெருப்பையொத்த குணத்தால் கோபம்
வீரரோச தன்மானச் செருக்கி னாலும்
வன்னியென்ற பெயராலே அழைக்கப் பட்ட
வரலாறு பலவுண்டாம் அனைத்தின் மேலாய்
வன்னிசார்ந்த மண்ணென்றே கார ணப்பேர்
வழங்குவதே சிறப்பென்பர் வரலா றாய்ந்தோர்.

05) மருதமொடு முல்லைநெய்தல் மூன்றும் சேர்ந்து
முத்தமிழுக் கொப்பாகும் வன்னி மண்ணாம்
பெரிதுமங்கே வயலைநம்பி வாழ்வோர் மிக்கோர்
பிறதொழிலில் பெருநாட்டம் கொள்ளார் அன்று
பெரும்பாலோர் படைகளில்முன் செல்லும் தீரர்
திருவனைத்தும் கொண்டதனால் வேற்றார் மூலம்
தேவையற்றுத் தன்னிறைவு கொண்டே வாழ்ந்தார்.

06) கண்காணும் இடங்களெல்லாம் வயல்கள் செந்நெல்
களஞ்சியமாம் வன்னியெனில் பொய்யே இல்லை
உண்ணுதற்குப் போகஎஞ்சும் நெல்லை மற்ற
ஊர்களுக்குந் தந்திடுவார் பண்ட மாற்றாய்
விண்ணை முட்டும் கதிர்க்குவியல் வெட்டுக் காலம்
வயல்நடுவே குவிந்திருக்கும் எருமை கட்டிப்
பொன்மணியாய் நெல்லையுதிர்த் தெடுத்துத் தூற்றிப்
பட்டடையில் சேர்த்துவைப்பர் வன்னி மக்கள்.

உ

# வன்னி நாட்டை எண்ணிப் பார்த்தால்......?

செ. குணரத்தினம்

வன்னிமண்ணைக் கண்முன்னால் நிறுத்திப் பார்த்தால்
வருகின்ற முதல்மனிதன் பண்டார வன்னியன்தான்!
கண்ணிரெண்டு காலிரெண்டு நம்மைப் போல
கடவுளவர் படைத்திருந்தும் நெஞ்சுக்குள்ளே
கன்னித் தமிழ்சமயம் காத்து வளர்த்தென்றும்
கலங்காது தமிழர்குலம் காலமெலாம் வாழ்வதற்கு
அந்நியரை எதிர்த்தழித்து ஆண்டமா வீரமெல்லாம்
அடக்கிவைத்த இதயத்தின் சொந்தக்காரன்!

அடுத்தடுத்துத் தெரிவதெல்லாம் எனது கண்ணில்
அற்புதமாய் வளம் சேர்க்கும் குளங்கள், ஆங்கே
எடுப்பாக நிமிர்ந்து நின்று விடுப்புப் பார்க்கும்
எழிலான பெண்களைப்போல் நெல்மணியை
உடுப்பாக அணிந்துநின்று உழவர் வாழ்வை
உயர்த்தி நிற்கும் வயல்காட்டின் கதிரணிகள்!
எடுப்பார்கள் இல்லாத வளமார் வன்னி
எல்லோர்க்கும் கொடுக்கின்ற வள்ளல்பூமி!

இதற்கும்மேல் தெரிகிறது இங்கே வாழும்
இயலிசைக் கலைஞர்களின் வன்னிக்கூத்து!
அதற்குமப்பால் பண்டார வன்னியன்போல்
அடங்காத மறவர்களின் வீரத்தோள்கள்!
இதமான வன்னிநாட்டின் இயற்கை கொஞ்சும்
எழில் பின்னால் தெரிகிறது திகைத்துப் போனேன்!
எதுகவிதை? எதுஇளமை? எதுபுதுமையென்று
எனக்கெதுவும் புரியாமல் மலைத்துப் போனேன்!

உ

# இன்பம் தருவாய்

- கயல்வண்ணன் -

அம்மா தாயே பராசக்தி
இம்மா நிலமெங்கும் உன்பக்தி
கருணை நிறைந்தவள் நீயம்மா
அருளை அள்ளியே இறையம்மா.

சீரும் சிறப்பும் தருவாயே
பேரும் புகழும் அளிப்பாயே
நாளும் பொழுதும் உன்புகழே
நானும் பாடிட அருள்வாயே.

போரும் நாட்டில் ஓய்ந்ததம்மா
ஊரும் சிறந்து விளங்குதம்மா
உன்தாள் அருளால் கிடைத்தம்மா
இன்முகம் காட்டியே அணைத்திடம்மா.

தூய கலைகளைத் தருவாயே
தொல்லைகள் நீக்கி அருள்வாயே
நேயனென் நெஞ்சில் உறைபவளே
நீடுல கெல்லாம் நிறைபவளே

உ

# நிகரிலா அழகு

கவிஞர் அகளங்கன்

***சிறுமி***

"அம்மா இன்று பள்ளியிலே
ஆண்டு விழாவொன் றிருக்கிறது.
சும்மா சாட்டுச் சொல்லாமல்
சுறுக்காய் வாநாம் போய்வருவோம்.

அந்த விழாவில் தாய்மார்கள்
அனைவரும் வருவார் பள்ளிக்கு.
இந்த முறையும் வாராமல்
என்னைத் தனியே அனுப்பாதே"

**தாய்**

"இல்லை என்னைக் கேளாதே
இருக்குது எனக்கு வேலைபல.
தொல்லை தராமல் நீசென்று
சுகமாய்த் திரும்பி வாமகளே"

பள்ளிக் கூடஞ் சென்றமகள்
பாதி விழாவில் திரும்பிவிட்டாள்.
துள்ளிக் குதிக்க மறந்தவள்போல்
துயரம் பொங்க வந்துநின்றாள்

அன்னை உள்ளம் பதறிற்று
அணைத்துத் தலையை வருடிற்று.
"உன்னைத் துயரஞ் செய்தவர்யார்
உடனே சொல்லு" என்றாளே.

"விழாவில் என்ன நடந்ததுசொல்
வீதியில் எதுவும் நடந்ததுவோ?
அழாதே கண்ணே!" என்று சொல்லி
அணைத்து உச்சி முகர்ந்தாளே.

**சிறுமி**

“என்னுடன் படிக்கும் பிள்ளைகளில்
எல்லோர் தாயும் வந்திருந்தார்.
என்ன அழகு அவர்களெல்லாம்,
ஏன்நீ இப்படி இருக்கின்றாய்.

மல்லிகா வந்தாள் தாயோடு,
மல்லிகை போலே முகமம்மா.
அல்லியின் தாயின் அழகைநான்,
அம்மா சொல்லி முடியாதே.

சந்திரா வின்தாய் முகம்பார்த்தேன்
சந்திரன் போலே அழகம்மா.
இந்திரா வின்தாய் அம்மம்மா
இப்படி அழகைப் பார்த்ததில்லை.

ஒவ்வொரு தாயின் முகமுந்தான்
ஒவ்வொரு விதத்தில் ஜொலிக்கிறது.
அவ்வுரு வெல்லாம் உனக்கில்லை
அழகே இல்லை உன்முகத்தில்.

கறுப்புத் தழும்பாய் உன்முகத்தில்
கரடு முரடாய் இருப்பதென்ன.
வெறுப்பாய் இருக்குப் பார்ப்பதற்கு,
வேதனை தருது சொல்வதற்கு.”

மகளின் வார்த்தை கேட்டஅன்னை,
மனமே கலங்கிப் போயிற்று.
முகமே நனைய அழுதுவிட்டு
முத்தங் கொடுத்துக் கதைசொன்னாள்.

**தாய்**

“ஆறு மாதக் குழந்தையாய் நீ,
அழகாய்த் தொட்டிலில் உறங்கையிலே,
வேறு வீட்டில் தண்ணியள்ள,
விரைந்தேன் ஒருநாள் அந்நாளில்,

அயலில் உள்ள வீட்டினிலே
அடுப்படி தன்னில் தீப்பிடித்துப்
புயலாய்ப் பரந்தெம் வீட்டினுள்ளும்
புகுந்து அத்தீ எரித்ததம்மா.

தண்ணீர் அள்ளி வரும்போது,
தகதக என்றே தீப்பிடித்து
விண்ணை முட்டும் புகைகண்டேன்
வீட்டுள் ஓட நான்முயன்றேன்.

எரியும் நெருப்பில் நான்செல்ல,
என்னை யாரும் விடுவாரோ.
கருகிப் போக உன்னைவிட்டுக்,
கண்ணே நானும் இருப்பேனோ.

கட்டிப் பிடித்த கைகளைநான்,
கழற்றி வீட்டுள் பாய்ந்துவிட்டேன்.
தொட்டில் தன்னில் நீகிடந்தாய்
தூக்கிக் கொண்டே ஓடிவந்தேன்.

உன்னை அணைத்த பகுதியன்றி
உடலில் மற்றைப் பகுதியெல்லாம்
என்னை நெருப்பு எரித்ததடி''
என்று சொல்லி அழுதாளே.

***சிறுமி***

தாயின் கதையைக் கேட்டவுடன்,
ததும்பிய கண்ணீர் வழிந்தோட,
வாயால் எதையும் சொல்வதற்கு
வார்த்தை இன்றித் துடிதுடித்து

அன்னையை இறுகக் கட்டியவள்
அன்பு முகத்தில் முத்தமிட்டாள்.
''உன்னைப் போல அழகிந்த
உலகில் இல்லை இல்லை''யென்று

தாயைக் கட்டி முத்தமிட்டாள்,
தாமரைக் கையால் வழிந்தோடும்
நீரைத் துடைத்து முகம்பார்த்தாள்
''நிகரிலா அழகு'' உனக்கென்றாள்.

உ

# என்ன கலக்கம்

*கவிஞர் கண்ணையா*

ஓ! நெஞ்சமே
என்ன கலக்கம்
எங்கும் போர்
எங்கும் அழிவு
எத்தனை கொடுமை
எத்தனை அநீதி
எண்ணி எண்ணி
என்னில் கவலை
இனிய கடவுளை
இறைமை தன்னை
இனிமேல் அடைய
இருப்பனோ? நான்
இழிவான செயல்
இன்னல் பாவம்
இயல்பு கெடுதல்
இடர் பாடுகள்
அன்பு பண்பு
அறிவு ஆற்றல்
அடக்கம் ஆளுமை
அமைதி சாந்தம்
அவனியில் இல்லை
அடக்கு முறையில்
அச்சம் பயப்பீதி
அனைத்தும் பாழே
உலகு படும்பாடு
உலைவு சீரழிவு
உண்மை மாறுபாடு
உயர்வே குறைபாடு
உறுதிகள் இல்லை
உழைப்பில்லாமை
உயர் கருமங்கள்
உருச் சிதைவுகள்
ஒற்றுமை இன்மை
ஒழுக்கம் இன்மை
ஒருவரோடொருவர்
ஒன்றி இராமையே
ஒருவரின் செருக்கு
ஒருவன் ஒருத்தியை
ஒட்டிப் பிரித்து
ஒதுக்கி சாகிறான்
கையுறை (யின்)
கைங்கரியம்
கைம்மாறு
கைவரின்
கைமேல்
கைகூடும்
கை ஓயின்
கை தூக்கும்
வாய்மை
மெய்மை
தூய்மை
தாய்மை } இவை
பொய்மை
சேய்மை
தேய்மை
ஆதலாகா
தீச்சுட்டதும்
கைவிட்டதுபோல்
என் படைப்பு

உ

# காலத்தை வென்று நிற்கும் தமிழ்

க. தங்கேஸ்வரி B.A. Hons (தொல்லியல்)
(கலாசார உத்தியோகத்தர் - மட்டக்களப்பு)

## 1. வரலாறு:

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி" என்பது கவிஞர் கூற்று. இக்கூற்றைப் பலர் பரிகசிப்பார்கள். ஆனாலும் இதில் நிறைய உண்மை பொதிந்துள்ளது. ஆம். கல்தோன்றிய காலம் என்பது நாகரிகம் முதிர்ச்சியடையாத காலம். அக்காலத்தே தோன்றி, குமரிக்கண்டக்காலத்தில் சங்கப்பீடத்தில் ஏறியிருந்தது தமிழ். அத்தகைய தொன்மை வாய்ந்த தமிழ்மொழி இன்றும் இளமையுடன் வாழ்கின்றது. காலத்தை வென்று, கடற்கோள்களை வென்று, கடும் யுத்தங்களைக் கடந்து, இன்றும் புதுமை குன்றாது பொலிவுறுகின்றது. எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்தும், எதற்குமே தளராது எதிர்நீச்சல் போட்டு இன்றும் ஏறுநடைபோடுகிற ஓரே மொழி தமிழ் மொழிதான். இவ்வாறு கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடிதான் என்பதற்கு என்ன ஆதாரம்?

சூரியனிலிருந்து தெறித்த ஒரு கோள்துண்டே பூமி என்பர். சுழலும் பம்பரத்தில் அல்லது பந்தில் அதிகம் காற்றுடன் உரசக் கூடிய பகுதி அதன் நடுப்பகுதி தான். அதுபோன்றே சுழலும் உண்மையான பூமியின் நடுக்கோட்டுப்பகுதியே முதலில் குளிர்ந்து பண்பட்டது. பண்பட்ட பகுதியிலே உயிர்கள் படிப்படியாக தோன்றலாயின. பூமியின் இப்பகுதியில் தற்போதைய ஆபிரிக்கா, இந்தியா, கிழக்கு நாடுகள் முதலியவற்றை உள்ளடக்கிய பரந்த நிலப்பரப்பு ஒன்று இருந்தது. அதுவே உயிரின் ஆய்வாளரால் லெமோரியா எனவும், மொழியியலாளரால் குமரிக்கண்டம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. மனித இனம் இங்குதான் முதலிலே தோன்றியது என்பர். இதுபோன்றே மொழியும் இங்கே தான் முதன் முதல் தோன்றியது எனப்படுகிறது. அங்கே தோன்றிய முதல் மொழிதான் தமிழ் மொழி. எனவே உலகின் முதற்குடி தமிழ்க்குடி. இவ்வகையில் சுமார் கி.மு. 20,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது தமிழ் மொழி என்பர் மொழி வல்லுநர். ஆனால் எப்போது தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. காலத்தை வென்று நிற்கும் தமிழ்மொழி பல்வேறு காலகட்டங்களில் ஓங்கி வளர்ந்து வந்துள்ளது.

"பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள......."

எனவரும் சிலப்பதிகார வரிகளினால்? பஃறுளி ஆறும் குமரி மலையும் குமரிக் கண்டத்தில் இருந்தன என்பது பெறப்படுகின்றது. இப் பஃறுளி ஆறு என்பது குமரிக்கண்டத்திலே காணப்பட்ட ஒரு ஆறு. குமரிக்கண்டமும் பஃறுளி ஆறும் கடல்கோளால் மறைந்தன. புதிய கண்டங்களான ஆப்பிரிக்கா, இந்தியா முதலியன தோன்றின.

உலக நாகரிகங்கள் எல்லாம் நதிக்கரை ஓரத்திலே தோன்றின என்பது வரலாறு. ஆனால் ஆதி நாகரிகமான குமரிக்கண்ட நாகரிகமோ மலையிலே தோன்றியது என்பர். இங்கே வாழ்ந்தவர்கள் உலகின் மூத்தகுடியினர். அவர்களிடம் சில தனித்துவமான வழக்கங்கள் இருந்தன. பிணங்களைத் தாழியிலே இடும் வழக்கம் லெமோரியர், தமிழர்,

எகிப்தியருக்கே உரியது என்பர் ஆய்வாளர். குமரிக்கண்டக்காலத்து நாகரிகம் குறிஞ்சி நாகரிகமாகும். இது நமது சிந்தனைக்குரியது. இதன் காரணமாகவே கவிஞர்கள் பொதிகை மலையில் தமிழ் பிறந்ததாகவும் குறிஞ்சிக் கடவுள் முருகன் என்பதாகவும் பாடிவைத்துள்ளனர். முருகன் தமிழ்க் கடவுள். உலகம் தோன்றிய காலத்தில் கடற்கோள்கள் அடிக்கடி ஏற்பட்டன. காலப்போக்கில் ஏற்பட்ட கடல்கோள்களினால் குமரிக்கண்டம் சிதைவுற்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில், கடற்கோள்கள் பல ஏற்பட்டன. இவற்றுள் சேர் ஜே. இ. மெனற் என்னும் ஆய்வாளர், மூன்று கடற்கோள்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். முதலாவது கடற்கோளிலேயே இலங்கை பிரிந்தது. இரண்டாவது கடற்கோளிலே தென்மதுரை கழிந்தது. மூன்றாவது கடற்கோளிலே கபாடபுரம் அழிந்தது என்பது அவர் கூற்று. எனவே இந்தத் தென்மதுரை, கபாடபுரம் எல்லாம் குமரிக்கண்டத்து நகர்கள் என்பது தெளிவாகின்றது.

## 2. சங்கம் வளர்த்த தமிழ்:

சங்கம் வளர்த்த தமிழ் எனபர் ஆன்றோர். இச்சங்கம் செயற்பட்டது கிறிஸ்துவுக்கு முற்பட்டகாலம் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. ஆம் இந்தச் சங்கமானது முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என வெவ்வேறு காலப் பகுதியில் இயங்கியுள்ளது. விபரம் வருமாறு:-

முதற் சங்கம் கி.மு. 4440
இடைச் சங்கம் கி.மு. 3700
கடைச் சங்கம் கி.மு. 1880

முதற் சங்கம் காஞ்சனவழுதி முதல் கடுங்கோன் வரை 89 பாண்டிய மன்னர்கள் அரசாட்சி புரிந்த காலம் ஆகும். இக்காலத்தில் தமிழ் செழித்தது. நூல்கள் எழுந்தன. விழாக்கள் எடுக்கப்பட்டன. அறிஞர்கள் கூடினர். ஆய்வு நடத்தினர். ஆனால் காலம் சும்மா விடவில்லை. கடற்கோள் வடிவிலே அழிவைக் கொண்டு வந்தது. நாடு அழிந்தது. மலைகள் அழிந்தன. நதிகள் அழிந்தன, உயிரினங்கள் அழிந்தன, எஞ்சியோர் இடம்பெயர்ந்தனர். ஆனாலும் தமிழ் அழியவில்லை. தமிழ் உணர்வு அழியவில்லை தமிழ் காலத்தை வென்று நின்றது.

கபாடபுரம் தலைநகரமாக்கப்பட்டது. இரண்டாவது தமிழ்ச் சங்கம் கபாட்புரத்திலே உதயமானது. மீண்டும் தமிழ் மணம் பரவியது. ஆன்றோர் கூடினர். விழாவெடுத்தனர். கலை வளர்த்தனர். கலை மட்டுமா? மொழி இலக்கியம் இலக்கணம் ஆய்வு யாவும் வளர்ந்தன. இந்த இடைச்சங்கம் வெண்டேர்ச் செழியன் தொடக்கம் முடத்திருமாறன் வரை 59 மன்னர்கள் ஆட்சிக்காலம் வரை நீடித்தது. ஆனால் அதுவும் காலதேவனுக்குப் பொறுக்கவில்லை. மீண்டும் ஏற்பட்ட கடற்கோளிலே கபாடபுரம் அழிந்தது. மக்கள் வடக்கே இடம்பெயர்ந்தனர். மாண்டவர் போக மீண்டவர் வடக்கே சென்று தமிழ் நாகரிகம் உருவாக்கினர். ஆற்றோரங்களிலே நாகரிகம் உருவாக்கினர். ஆற்றோரங்களில் வாழ்ந்து பழக்கப்பட்ட மக்கள் ஆற்றோரங்களில் நாகரிகம் அமைக்கலாயினர். இங்கு தமிழ் வளர்ந்தது.

## 3. கடைச்சங்க காலம்:

சிந்துவெளிக் கரையிலே குடியேறிய மக்கள் சிந்துவெளி நாகரிகத்தை தோற்றுவித்தனர். யூப்பிரட்டிஸ், தைக்கிரீஸ் கரையிலே குடியேறியோர் சுமேரியா நாகரிகத்தை தோற்றுவித்தனர். சிந்துவெளிக் கரையிலே மீனாடு - முதலாம் பல்வேறு பழந்தமிழ்ப் பெயர்களுடன் நகர்கள் அமைத்து தமிழ் வளர்த்தனர். எத்தனையோ தடங்கல் ஏற்பட்டாலும், காலத்தை வென்ற தமிழ் பல்வேறு நாடுகளிலும் பரவி வளர்ந்தது.மொழி மட்டுமல்ல மொழியோடு சேர்ந்து கட்டிடம், சிற்பம், ஓவியம், கவின்கலைகள் முதலாம் பல்வேறு பாரம்பரியங்களும் பரவி வளர்ந்தன. இதற்கு உரிய ஆதாரங்கள் பல இன்றும் ஆய்வாளர்களால் நிருபிக்கப்படுவன.

சுமேரியர் ஆப்பெழுத்து முறைக்கும், சிந்துவெளியிலே காணப்பட்ட சித்திர எழுத்து முறைக்கும் உள்ள ஒற்றுமை தமிழ்மொழியின் தொன்மையை நமக்கு இன்றும் உணர்த்துகின்றது. சுமேரியரது உருவச் சாயல் அவர்களது ஓவியங்களிலே புலனாகிறது. இக்காலத்து இந்தியர்களின் உருவச் சாயல் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சுமேரியரது முகச்சாயலை ஒத்தது. தலைச்சங்க காலத்து சோதிவட்டம் என்னும் காலக்கணிப்பு முறை பாபிலோனியத்தில் காலதேயம் எனும் ஊரில் உள்ளோரால் பயன்படுத்தப்பட்டது. இப்படி ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் தமிழின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன.

இடைச்சங்கம் அழிய தென்மதுரைக்கு தலைநகரை மாற்றினான் மன்னன் முடத்திருமாறன். அங்கே கடைச்சங்கம் தோன்றியது. மீண்டும் தமிழ் வளர்ந்தது அறிவு நூல்கள் பல அழிவுற்றன. எனினும் எழுதிய சில நூல்கள் இன்றும் அவற்றின் மேன்மைக்குச் சான்று பகர்கின்றன. நெடுநல் வாடை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, பரிபாடல், அகநானூறு முதலாம் பல்வேறு நூல்கள் இன்றும் அக்கால இலக்கியச் செழுமையைப் பறைசாற்றுகின்றன.

சங்க காலத்திலே நூல்கள் மட்டுமல்ல, கட்டிடக்கலையும் வளர்ந்தது. மன்னன் இல்லமும் இறைவன் இல்லமும் 'கோயில்' என்றே அழைக்கப்பட்டன. கோயில்களிலே இறைவன் திருவுருவம் செப்பமாக அமைக்கப்பட்டது. இதனை சிலப்பதிகாரம் போன்ற பண்டைய தமிழ் நூல்கள் வாயிலாக நாம் அறிகிறோம். ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை முதலான பலவும் செழித்தன என தொல்காப்பியம் முதலாம் பண்டைய இலக்கண நூல்கள் மூலம் அறியக் கிடக்கிறது. அக்காலத்தில் கலை - இலக்கிய விழாக்கள் எடுக்கப்பட்டன. இவற்றுள் 'இந்திர விழா' என்பது புகழ் பெற்ற ஒன்றாகும். அதே போன்றே நூல்கள் அரங்கேற்றப்பட்டன. இப்படியே, சங்கம் வளர்த்த தமிழ் சிந்துவெளியிலே உச்சம் பெற்று, ஆரியர் வருகையோடு ஓரளவு தளர்கிறது. ஆனால் மீண்டும் செழித்தோங்குகிறது.

வேதகால நூல்களோ, பல. அறிவியலும், சமய தத்துவங்களும் நிரம்பிய தமிழ் நூல்களோ பலப்பல. இவை தமிழ்மொழியின் சிறப்புக்கு இன்றும் சான்று பகர்கின்றன.

## 4. பல்லவ, சோழ, பாண்டிய, நாயக்கர் காலம்:

பல்லவ மன்னர்கள், வேற்று நாட்டவர்கள் என்றாலும், இவர்கள் காலத்திலும், தமிழ், கலை, இலக்கியம் பலவும் செழித்தோங்கி வளர்ந்தன. பின்பு வந்த சோழ பாண்டியர் காலமோ இன்னும் மேலாக தமிழ் மணம் பரப்பி நின்றது. சோழர் காலத்திலே கோயில்கள் எழுப்பப் பெற்றன. கட்டிடம், சிற்பம், ஓவியம், நடனம், இசைக் கலைகளோடு மொழியும் வீறுநடை போட்டது. ராஜராஜசோழன், ராஜேந்திரசோழன் காலத்தில் கடல் கடந்து தமிழ் மணம் பரப்பப்பட்டது. பெரும் காப்பியங்கள் இயற்றப்பட்டன. பரணி பாடப்பட்டது. புராணங்கள் பாடப்பட்டன. சூளாமணி, சிந்தாமணி போன்ற பல நூல்கள் எழுந்தன. தமிழ் வளர்ந்தது. தொடர்ந்து வந்த பாண்டியர் காலத்திலே தமிழ் வளர்ந்து உச்சக்கட்டத்தை அடைகின்றது. ஊர் தோறும் பள்ளிகள் 'கடிகை' என்றும் 'சாலை' என்றும் எழுந்தன. கோயில்கள் அறச்சாலைகளாகவும், நூலகங்களாகவும், கலைக்கூடங்களாகவும் விளங்கின. சமயம் பாரிய வளர்ச்சி பெற்றதோடு, கட்டிடக்கலையிலே கோபுரங்கள் விண்ணளாவ எழுப்பப்பட்டன.

பாண்டியரைத் தொடர்ந்து வந்த நாயக்க மன்னர் காலத்தில் தமிழ் செழித்து வளர்ந்தது. நாயக்க மன்னர்கள், தெலுங்கர்கள், என்றாலும் இக்காலத்திலும் தமிழ் வீறுநடை போட்டது. இசைத் தூண்களைக் கொண்ட மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அக்காலத்து கலைச் சிறப்புக்கோர் எடுத்துக்காட்டு. வீறுநடை போட்ட தமிழ் இடையிடையே ஏற்பட்ட எத்தனையோ போராட்டங்கள், தடைகள் யாவற்றையும் தாண்டி வந்தபோது நாயக்கர் காலத்தில் ஏற்பட்டதோ முகம்மதியர் படையெடுப்புக்கள். பின்பு வந்த வெளிநாட்டார் போட்டிகள், போர்த்துக்கேயர் தொடக்கம் ஆங்கிலேயர் காலம் வரை ஏற்பட்ட இடையூறுகளோ ஏராளம். எல்லாவற்றையுமே வென்று இருபதாம் நூற்றாண்டில் ஏறு நடை போடுகிறது நமது இன்பத் தமிழ்.

அன்று போலவே இன்றும் கலை, கலாசாரம், மொழி, சமயம், நடனம், ஓவியம், சிற்பம் முதலாம் தமிழ் விழுமியங்கள் பேணப்படுகின்றன. எத்தனையோ இலக்கியங்கள் தோன்றி விட்டன. சாகித்ய விழாக்கள் வருடம் தோறும் கொண்டாடப்படுகின்றன. பண்டு வீறு நடை போட்ட தமிழ் இன்றும் ஏறு நடை போடுகிறது. பல்லாயிரம் வருடங்கள் கடந்தாலும் காலத்தை வென்ற தமிழ்க்கன்னி என்றும் இளமையுடனேயே இருப்பாள்.

உ

# கண்ணகி வழக்குரைக் கண்ணகி ஒரு நோக்கு

கலாநிதி செ. யோகராசா
(தலைவர் - மொழித்துறை கிழக்குப் பல்கலைக்கழகம்)

"கண்ணகி வழக்குரை" என்ற நூல் ஈழத்தில் எழுந்த செந்நெறி இலக்கிய மரபிற்கும் நாட்டாரிலக்கிய மரபிற்கும் இடைப்பட்ட மரபினைச் சார்ந்த காவியங்களுள் முக்கியமானதொன்று. சகவீரன் என்பவரால் 15ம் நூற்றாண்டளவில் இது இயற்றப்பட்டதென்று கருதப்படுகின்றது. ஆய்வாளர் சிலர் இதனை மறுதலிப்பதுமுண்டு. அது எவ்வாறாயினும் மட்டக்களப்புப் பிரதேசத்திலே செல்வாக்குப் பெற்று இன்றுவரை கோயில்களிலே படிக்கப்பட்டு வருகிறது, "கண்ணகி வழக்குரை'. இன்றுவரை அதிகளவு ஆய்வுக்கு உட்படுத்தப்படாத இந்நூலில் இடம்பெறும் "கண்ணகி" பற்றி நோக்குவதே இங்கு எனது நோக்கமாகும்.

கண்ணகி வழக்குரையில் மொத்தம் பதினொரு காதைகள் உள்ளன. இவற்றுள் வரம்பெறும் காதை (அம்மன் பிறந்த காதை), பொன்னுக்கு மதிப்புக் காதை (பொன்னுக்கு மதிப்பு), அடைக்கலக் காதை, கொலைக்களக் காதை (அம்மன் கனாக்கண்ட காதை), வழக்குரைத்த காதை (அம்மன் குளிர்ச்சி ஆ. வழக்குரைக் காவியம்) என்பன கண்ணகி பற்றி அறிவதற்கு உதவுகின்றன.

இவற்றுள் அம்மன் பிறந்த காதையில் கண்ணகியின் பிறப்புப் பற்றிக் கூறப்படுகின்றது. அது நமது கவனத்திற்குரியது. தெய்வப் பெண்ணான - பராசரமுனிவரது மகளான - கண்ணகி மாங்கனி உருவில் பூவுலகில் வந்து பிறக்கின்றாள். கண்ணகியின் "கற்பு" முதலான நாற்குணச் சிறப்புக்களை உலகிற்கு உணர்த்தும் பொருட்டு சிவன் கண்ணகியை இவ்வுலகிற்கு அனுப்புகின்றார். பாண்டியனது செருக்கடக்கும் பொருட்டு உமையும் கண்ணகியின் அவதார அவசியம் பற்றி சிவனிடம் வற்புறுத்துகின்றாள். ஆக, கண்ணகியின் கற்பு முதலான நாற்குணங்களை வெளிப்படுத்துவதும் அரசனது செருக்கடக்குவதும் கண்ணகி அவதாரத்தின் நோக்கங்களாகின்றன. இவ்விதத்தில் தெய்வப் பெண்ணான கண்ணகி மனிதப் பெண்ணாகின்றாள்.

தொடர்ந்து வரும் பகுதிகள் மனிதப் பெண்ணாகி விட்ட கண்ணகியை உயர்பண்புகள் பொருந்திய இலட்சியப் பெண்ணாகக் காட்ட முற்படுகின்றன.

கோவலன் பொருள் குன்றிய நிலையில் (சித்ராபதியின் செயல் காரணமாக) மாதவியிடம் அவமானப்படுகின்றான். இந்நிலையில் பல பொருட்களைக் கொடுத்து தனது கணவனுக்கு நேர்ந்துவிட்ட அவமானத்தை அகற்ற முற்படுகின்றாள் கண்ணகி, அவள்,

*"ஆரவடம் மேல்வளையல் அம்புலி தளப்பமுடன்*
*அற்ற கடைப்பீலி உற்றமுன் கைவளை*
*பாரமுள்ள நேர்வளி பலமோ திரந்திரப்ப*
*பாளைசெறி நூபுரம் பரவுசெறி காறைஞ்*
*சீரணையுஞ் சங்கிலி சரப்பலி பிலட்சணை*
*சிறந்தவரை ஞாணுடன் நிறைந்தமணி கிங்கிணி*
*கூரணையு வழியுடைய காதோலை கைக்காறை*
*கொண்டுசென்றே கொடு மென்று செப்பினாளே"*

(பொன்னுக்கு மதிப்பு - பக்: 210 செ: 23)

மாதவியிடம் யாவற்றையும் இழந்து யாது செய்வது என்றறியா நிலையில் ஏங்கியிருந்த கோவலனுக்கு,

***"பசித்தவர்கள் ஏது தின்னார் பகைத்தவர்***
***ஏது சொல்வார்***
***கசித்த சிந்தை மிகவுடைய காளையரே***
***என் கணவா***
***விஷத்தரவின் மணிச்சிலம்பை விற்றுவாரும்"***

(வழிநடை பக்: 216 செ: 171)

எனக் கண்ணகி ஆலோசனை சொல்கிறாள். கோவலன் அதனை (மனைவியின் வீட்டுப் பொருள் எனப் பிறர் ஏசுவர் என்று கூறி) மறுதலித்த போது, "பரிபுரம்" விற்கும்படியும் அதனையும் அவன் மறுத்தபோது சிலம்பினை விற்கும்படியும் கண்ணகி கூறுகின்றாள். இவ்வாறு கோவலனுக்கு பல ஆலோசனைகளைச் சொல்லுகின்ற கண்ணகியை "கண்ணகி வழக்குரை"யில் காண்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கோவலன் குறித்து ஆழமாகச் சிந்திப்பவளாக கண்ணகி காணப்படுகின்றாள். பெண்களைக் கண்டால் மதுரையிலிருந்து அவன் திரும்பி வரக் கூடுமென்று கண்ணகி கூறுவதும் அதனை மறுப்பதும், அதுவுமொரு காரணமாக கண்ணகி.

"தண்டரள மணி மகுடத் தமிழ்மாறன் கூடலுக்குள்
கொண்டேகும் என்னையும் நீர் கோவலரே நான் வருவேன்"

என்றுரைப்பதும் இதற்குச் சான்றாகின்றன.

'அடைக்கலக் காதை' காட்டுகின்ற கண்ணகி விதந்துரைக்கப்பட வேண்டியவள். இங்கு பாசத்துடன் கணவனுக்கு உணவு பரிமாறும் குடும்பப் பெண்ணாகக் கண்ணகியைக் காண்கின்றோம்.

***"............... இனிய கறி சோறு தன்னைக்***
***கோலம் பெறவே சமைத்து கோவலனார் தனையிருத்தி***
***தாலுங்கலமும் வைத்துக் கறிசோறு தான் படைத்து***
***பாலுடனே நல்லடிசில் பண்பாக அமுது செய்தார்"***

(பக்: 280 செய்: 28)

என்பார் ஆசிரியர்.

அத்துடன் 'அஞ்சாதீர்கள்' என்று கோவலனை ஆற்றுப்படுத்தும் கண்ணகியையும் அனுபவ அறிவு மிக்க கண்ணகியையும் 'அடைக்கல காதை'யிலே காண்கின்றோம்.

மேலும் கண்ணகி நுண்மதியும் விவாதிக்கும் ஆற்றலும் கொண்டவளாகவும் வெளிப்படுகின்றாள். 'மதுரையில் பொதுமகளிர் ஒருவரிடமும் செல்லேன்" என்று ஆணையிடுகின்றான் கோவலன். இதற்குப் பதிலாக,

***"ஆணையொன்றை கோவலருக் காயிழையும் ஏதுரைப்பாள்***
***சேணி மங்கை சங்கிலிக்குத் திருவொற்றியூர் தனிலே***
***நாணமின்றிச் சுந்தரநாதர் திரு ஆணை சொல்லி***
***வாநுதலிர் பரவையுடன் மகிழ்ந்திருந்து வாழ்ந்திலிரோ"***

என்று கண்ணகி கூறுவது இதனை உறுதி செய்கின்றது.

பெருவணிகனாக விளங்கிய கோவலன் வறுமையுற்ற நிலையிலும் சிலம்பு விற்கச் செல்வதற்குத் தயங்குகின்றான். விற்பது பற்றி ஏதுமே அறியாதவனாகவும் காணப்படுகின்றான். மீண்டும் கண்ணகி மதிமிக்க மந்திரியாக மாறி விடுகின்றாள்.

***“கூறுங் குணபாகவே கொள்வாரைக் கண்டு வில்லும்***
***நீறுதனை அணியுமரன் நிமிலனருள் மறவாதே***
***ஏறுமகம் அல்லாமல் ஏறாதே என் கணவா!”***

என்றவாறு அடுக்கடுக்கான ஆலோசனைகளை - சிலம்பு விற்கும் வழிவகை தொடக்கம் துர்ச்சகுனங்களைக் கண்டால் விலகுவதுவரை முன்வைக்கின்றாள்.

கோவலன் கொலை பற்றிக் கனவு கண்ட கண்ணகி ஆயர்சேரியை விட்டுப்புறப்படும் போது, மிகுந்த துன்பமுற்ற வேளையில் கூட அவர்களது செய்ந்நன்றியை நினைவு கூர மறக்கவில்லை.

***“கட்டழகுக் கோவலரைக் கண்டலது இங்கு வரேன்***
***இட்டமுடன் வைத்திருந்து எனைக்காத்த ஆய்ச்சியம்மை***
***பட்டிதனைக் காத்திடு நீ பாலாறு பொங்கிடு நீ ”***

(பக்: 337 செய்: 208)

என்கிறாள்.

அதுமட்டுமன்று முன்யோசனை மிகுந்தவளாக கைவசமிருந்த மற்றைய சிலம்பையும் கொண்டு செல்கிறாள். அந்நிலை பற்றிய ஆசிரியரது சித்திரிப்பு கவனத்திற்குரியது.

***“ஒரு கையிலே சூளைபிடித்து ஒரு கையிலே சிலம்பெடுத்தாள்***
***வருகையிலே கண்ணகையை வந்து வந்து பார்த்தவர்கள்***
***இரு கையிலே கடவுள்தனை இமைக்கு முன்னே பிச்சாக்கி***
***திரிகையிலே முப்புரத்தை சிரித்தெரித்த தெய்வம் என்பர்”***

(செய்: 211)

இத்தகைய சித்திரிப்பினூடாக கண்ணகி விரைவிலே தெய்வப் பெண்ணாகப் போகின்றாள் என்பதனையும் கவிஞர் முன்கூட்டியே உணர்த்தி விடுவதும் மனங்கொள்ளத்தக்கது.

உயிர் மீட்டுப்புக் காதையில்,

“காசற்ற படியால் வந்தே காணக்கடவ தானோமோ”

என ஒப்பாரி வைத்தழும்போது சாதாரண பெண்ணொருத்தியாக கண்ணகியைக் காண்கின்றோம். அதன்பின்பு ஆக்ரோஷமாக குமுறுகின்ற கண்ணகியை நீதியை நிலைநாட்டும் பொருட்டு புறப்பட்ட கண்ணகியைத் தரிசிக்க முடிகின்றது.

***“அருமையுடன் மாசாத்தார் அருள் வணிகர் கோவலனார்***
***கருதியே சிலம்பு கொண்ட கள்வனென்று கொன்றீரோ***
***வரியளிசேர் மன்னவனார் மண்டபமும் மாளிகையும்***
***எரிதழலை யான் கொளுத்தி எங்குந் தீ மூட்டேனோ”***

(பக்: 340 செய்: 225)

கூடவே கண்ணகியின் நாட்டுப்பற்றும் சுடர்விடுகின்றது. தனது நாட்டுப் பெருமைகளை எடுத்துரைக்கின்றாள் அவள். இவ்வேளையில் நூலாசிரியரது கவிதா ஆற்றலும் தமிழ் இலக்கியப் புலமையும் கூடச்சுடர் விடுகின்றன. இதற்கு ஆதாரமாகப் பின்வரும் பாடல் அமைகின்றது.

***“பறிப்பதுவும் பனிமலரைப் பாடுவதும் பரமனையே***
***தறிப்பதுவும் குலை சூழ்ந்த தாறு கொண்ட கதலியையே***
***வெறுப்பது நற் திருப்புயத்தார் வேல்வளவன் திருநாட்டில்***
***மறிப்பதுங்கா வேரிதன்னை மற்றுமொரு மறிப்பிலையே”***

(பக்: 369 செய்: 84)

மேலும் நீதியை நிலைநாட்டும் வேளையிலே பலவித நெருக்கடிகளைக் கண்ணகி சந்திக்க நேரிடுகின்றது. எடுத்துக்காட்டாக, கண்ணகி முன் தட்டான் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவதும் அவன் செய்யும் மாய்மாலங்களும் இங்கு நினைவுக்கு வருகின்றன. கண்ணகியின் நீதிக்கு முன் அரசன் அறிவற்றவனாக விளங்குகின்றான்.

***"ஓட்டிலுமி அதிற் கனக மொளிக்குந் தட்டான் உரைகேட்டாய்***
***மோட்டரசே....................."***

(பக்: 374 செய்: 104)

என்று கண்ணகி கூறுவது இதற்குச் சான்றாகிறது. சிலம்பினை உடைக்க வரும்போது அவளது நிலை பற்றிய சித்தரிப்பும் சிறப்பாகக் காணப்படுகின்றது.

***"நகைத்த பின் முருக்கி இதழ் அதரத்தினை மடித்தாள்***
***நச்சுலவு மைக்குழல் விழிக்கனலை இட்டாள்***
***முகைக்கமல மொக்கு முலையை திருகிவிட்டாள்***
***முத்து நிகர் ஒத்தபல் இறுக்கி முன் நடந்தாள்"***

(பக்: 393 செய்: 218)

சிலம்பு உடைபட மண்டபத்திலே மணி தெறித்தது. தீப்பொறியாகியது. அவ்வேளையிலே அவளைக் குளிரும்படி அனைவரும் வேண்டுகின்றனர். ஆயர் சேரியினர் பின்வருமாறு வேண்டுகின்றனர்.

***"பத்தினியே பாண்டியர் முன் பாரதமாய் வழக்குரைத்த***
***மெய்த்திடுமென் திருமயிலே மென்கனகத் தாளே***
***ஊரெரித்த ஒண்ணுதலே ஓவியமே***
***நாற்றிசையில் நடந்தவளே நாச்சியே காத்தருள்வாய்"***

(பக்: 393 செய்: 225)

ஆக, தெய்வப் பெண்ணாகிய கண்ணகி, மானிடப் பெண்ணாகி மீண்டும் தெய்வப் பெண்ணாகி விடுகிறாள்.

இவ்வாறெல்லாம் நோக்கும்போது "கண்ணகி வழக்குரைக் கண்ணகி" யாமறிந்த சிலப்பதிகாரக் கண்ணகியிலிருந்து பல விதங்களில் வேறுபட்டு விளங்குவது, புலப்படுகின்றது. இது மேலும் விரிவான ஆய்வினை நாடி நிற்கின்றது.

உ

# தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்

செல்வி. தேவகி தர்மதேவன்

மனிதனுடைய நல்வாழ்விற்கு பயன்படுகின்ற அனைத்துத் தொழில்களையும் கலைகள் எனலாம். இக்கலைகள் 64 வகையின. இவை பொதுவான கலைகள் ஆகும். பொதுக்கலைகளுக்கு மாறுபட்டவை அழகுக் கலைகள் என அழைக்கப்படுகின்றன.

அழகுக் கலைகள் இன்கலை, கவின்கலை, நற்கலை என பல்வேறு பெயர்களால் வழங்கப்படுகின்றன. இத்தகைய அழகுக் கலைகள் ஏழு வகையின. அவை,

* கட்டடக்கலை * கூத்துக்கலை
* சிற்பக்கலை * காவியக்கலை
* ஓவியக்கலை * நாடகக்கலை
* இசைக்கலை

என்பனவாகும். இவ்அழகுக்கலைகளை கண்ணால் கண்டும் காதால் கேட்டும் உள்ளத்தால் உணர்ந்தும் மகிழ்கின்றோம்.

கட்டடக்கலை என்று கூறும்போது வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள் ஆகியவை உள்ளடக்கப்படுகின்றன. பழங்காலத்தில் மரம், செங்கல், சுண்ணாம்பு ஆகியவற்றின் கலவையினாலும் பாறைகளைக் குடைந்தும் கருங்கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கியும் கட்டடங்களை அமைத்தனர். இவற்றிற்கு எடுத்துக்காட்டாக தமிழகக் கோவில்களை நோக்கலாம். பாரதநாட்டு கட்டடங்களை சிற்பக் கலைஞர்கள் நாகரம், வேசரம், திராவிடம் என 3 பெரும் பிரிவுகளாகப் பகுத்துள்ளனர். இதில் வடஇந்திய கட்டடத்தை நாகரம் எனவும். (இவை அடி முதல் முடி வரை சதுரமாக அமைக்கப்படுவது) பௌத்த சமயத்தவரால் வளர்ச்சி பெற்றதுவேசரம் எனவும் (இது உடல் அமைப்பில் வட்ட வடிவமாக அல்லது நீண்ட அரைவட்ட வடிவமாக இருக்கும்) தென்னிந்திய கோயில் கட்டடங்கள் திராவிடம் எனவும் அழைக்கப்படுகின்றது.

சிற்பக் கலையை எடுத்துக்கொண்டால் இது கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மனதிற்கு இனிமை கொடுக்க வல்ல மிக நுண்ணிய கலையாகும். மனிதன், விலங்கு, பறவை, மரம், செடி, கொடி, கடல், மலை முதலிய இயற்கை உருவங்களையும் தெய்வம், தேவர், அரக்கர் முதலிய கற்பனை உருவங்களையும் அழகுபட அமைப்பதே சிற்பக்கலை ஆகும். மெழுகு அரக்கு, சுதை, மரம், தந்தம், கல், பஞ்சலோகம் முதலியவைகளினால் சிற்ப உருவங்கள் அமைக்கப்படுகின்றன. சிற்ப உருவங்களை முழு உருவங்கள் என்றும் புடைப்பு சிற்பங்கள் என்றும் இரண்டு வகையாக பாகுபடுத்தலாம். சிற்பக்கலை சமயத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றுள்ளது.

ஓவியக்கலையை நோக்குவோமாயின் இதற்கு சித்திரம் என்றும் பெயர் உண்டு. நேர்கோடு, வளைந்தகோடு, கோணக்கோடு முதலிய கோடுகளினாலும் வர்ணங்களினாலும் ஓவியங்கள் புனையப்படுகின்றன. சங்க காலத்திலேயே ஓவியக்கலை வளர்ச்சி பெற்றிருந்தது. இவை சுவர் ஓவியங்களாகவும் மரப்பலகை ஓவியங்களாகவும் துணிச்சீலை ஓவியங்களாகவும் வரையப்படுகின்றன. பண்டைக் காலங்களில் சுவர் ஓவியமே பெரிதும் வழக்கில் இருந்தது.

இசைக்கலையை எடுத்துக்கொண்டால் இது காதினால் கேட்டு இன்புறத்தக்க இன்கலை, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்களுள் இதுவும் ஒன்று. இது மிகப் பழமையான கலையாகும். இசைக்கலையை இசைத்தமிழ் என்றும் கூறுவர். கற்றறிந்த சான்றோர்கள் இசைத்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை எழுதியிருந்தார்கள். தமிழ் நாட்டில் இசைக்கலையில் வல்லவராய் இருந்தவர் பாணர்

என்ற இனத்தவர். இசை ஏழு. அவை குரல், துத்தம், உழை, கைக்கிளை, இழி, விளரி, தாரம் என்பன. இவை தமிழ்ப்பெயர்கள். மத்திமம், பஞ்சமம், நிஷாதம், தைவதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் என்பன வடமொழிப் பெயர்கள். இசைக்குரிய ஓசைகள் ஐந்து பொருட்களில் உண்டாகின்றன. அவை தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடறு என்பன. மதுரை மீனாட்சி திருக்கோவிலில் 22 மெல்லிய கம்பங்களை உடைய 5 இசைத்தூண்கள் காணப்படுகின்றன.

அடுத்து ஆடற்கலை என்னும் கூத்துக்கலை இசையுடன் நெருங்கிய தொடர்பு உள்ளது. வாயினால் பாடப்படும் இசைப்பாட்டிற்கு செந்துறைப்பாட்டு என்றும் கூத்துக் கலைக்குரிய பாட்டிற்கு வெண்துறைப்பாட்டு என்றும் பெயர் உண்டு. பண்டைக்காலத்தில் "தெய்வ விருத்தி" என்னும் ஆட்டம் தெய்வங்களின் பெயரால் ஆடப்பட்டது. தெய்வங்கள் தமது பகைவரான அவுணர்களுடன் போர் செய்து வென்று வெற்றிக் களிப்பில் ஆடிய ஆடல்கள் 11 வகை. அவை அல்லியம், கொடுகொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என்பன. இதில் முதல் ஆறும் நின்று ஆடுவது, பின்னுள்ள ஐந்தும் வீழ்ந்து ஆடுவது. இவற்றின் வழி வந்ததுவே பரதநாட்டியம். பாரதநாட்டிலே பரதநாட்டியம், கதக், கதகளி, மணிப்புரி ஆகிய நாட்டியங்கள் பெயர் பெற்றவை. இவைகளில் தலை சிறந்தது. பரதநாட்டியம் என நடனக்கலைகள் பற்றி ஆராய்ந்து எழுதிய ஓர் அமெரிக்கர் கூறுகிறார்.

கலைகளில் தலை சிறந்தது காவியக்கலை. ஏனைய கலைகளைப் போல் கண்ணால் கண்டும் காதால் கேட்டும் இன்புறத் தக்கதன்று. அறிவினால் உணர்ந்து இன்புறத்தக்கது. இது உரை நடையாகவும் இருக்கலாம். செய்யுளாகவும் இருக்கலாம். காவியக் கலையை எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாது இன்பம் தருவதாக இருக்க வேண்டும். பல கருத்துக்களை ஒருமித்து அமைத்துக் கூறும் திறன் இலக்கியக் கலைஞனுக்கே உண்டு. காவியப் புலவர் தாம் இயற்றும் காவியத்திலே ஒன்பது வகைச் சுவை அமைய காவியம் இயற்ற வேண்டும். ஒன்பது சுவையும் அமையப்பெற்றால் தான் காவியங்கள் இனிமையுறும்.

காவியத்தின் தொடர்புடையதே நாடகம். இது முத்தமிழுள் ஒன்று. நாடகக் கதையை நான்கு விதமாக அமைக்கலாம். அவை.

1. உள்ளோன் தலைவனாக உள்ளதோர் பொருள் மேல் நாடகத்தை எழுதுவது.
2. இல்லோன் தலைவனாக இல்லதோர் பொருள் மேல் நாடகத்தை எழுதுவது.
3. உள்ளோன் தலைவனாக இல்லதோர் பொருள் மேல் நாடகம் எழுதுவது.
4. இல்லோன் தலைவனாக உள்ளதோர் பொருள் மேல் நாடகம் எழுதுவது.

இவ்வாறு பாகுபடுத்துவதற்கு யோனி என்று பெயர். சுவைகள் ஒன்பதும் நாடகத்திற்கு இன்றியமையாதவை.

நமது முன்னோர் தலைமுறை தலைமுறையாக வளர்த்த கலைகளைப் போற்ற வேண்டுவது அவர் வழி வந்த நமது கடமையாகும். நமது கலைகளின் மேன்மையையும் சிறப்பையும் நம்மவர்கள் உணரவில்லை. மேலை நாட்டினர் நமது நாட்டுக் கலையை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். நமது நாட்டுக் கலைச் செல்வங்கள் அயல் நாட்டிற்கு கொண்டு செல்லப்படுகின்றன. கலைகளை அழித்துக் கொண்டும் அழிய விட்டுக் கொண்டும் இருப்பது சமுதாயத்தின் வீழ்ச்சியை அல்லது பிற்போக்கை காட்டும் அறிகுறியாகும். பழைய கலைகளுக்கும் சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கலைகளும் அவற்றை ஒட்டிய பண்பாடுகளும் சமுதாயத்தில் பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன. ஆகவே நமக்கு உடமைப் பொருளான நமது அழகுக் கலைகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுவது நம் அனைவரின் கடமையாகும்.

# பல்துறை

# (158 - 186)

உ

## ஆய்வாளர் கவனத்தை ஈர்க்கத் தவறிய

# வாவெட்டிமலை இராசதானி

**கலாபூஷணம், முல்லைமணி**
**வே. சுப்பிரமணியம்**

வடஇலங்கை வரலாறு பற்றி சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் இராசநாயகம், பேராசிரியர்கள் அரசரத்தினம் கா. இந்திரபாலா, சி. பத்மநாதன், கலாநிதி க. செ. நடராசா, கலாசார உத்தியோகத்தர் க. தங்கேஸ்வரி விரிவுரையாளர் ப. புஷ்பரட்ணம் முதலானோர் ஆய்வு செய்து கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளனர்.

கயிலாய மாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை, யாழ்ப்பாண வைபவமாலை, மகாவம்சம், சூளவம்சம் மூதலான நூல்களையும் கல்வெட்டுக்கள், சேப்பேடுகள், தொல்பொருள்கள் முதலானவற்றையும் ஆதாரமாகக் கொண்டு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இவற்றில் மிகவும் பழைமை வாய்ந்த நூலான வையாபாடல் சயவீரசிங்கை ஆரியன் என்னும் செகராசசேகரன் காலத்தில் (1380 - 1414) சமஸ்தானப் புலவராக விளங்கிய வையா என்னும் புலவரால் இயற்றப்பட்டது. 'இலங்கை மண்டலக்காதை' என்பதே இந்நூலின் பெயராக இருத்தல் வேண்டும் என ஆய்வாளர் கருதுவர். காலப்போக்கில் நூற்பெயர் மறைந்து போக ஆக்கியோன் பெயராலேயே இது அழைக்கப்படுகின்றது. இது ஒரு வரலாற்று நூல். இலக்கிய நோக்குடன் இது செய்யப்படவில்லை. இந்நூலிலுள்ள செய்யுள்களில் கற்பனைவளமோ, அணிச்சிறப்போ, வர்ணனையோ, காவியச் சுவையோ இல்லை. இந்நூலில் இடம்பெறும் செய்திகள் பெருமளவு வரலாற்றுண்மைகளைக் கொண்டுள்ளன.

இந்நூலின் 17ஆம் 96ஆம் 99ஆம் செய்யுள்களில் வன்னிப் பிரதேசத்திலுள்ள வாவெட்டிமலை இராசதானியில் இருந்து அரசோச்சிய மன்னர்கள் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் மயில்வாகனப் புலவர் இயற்றிய யாழ்ப்பாண வைபவ மாலையிலோ பின்வந்த வரலாற்று நூல்களிலோ வாவெட்டி மலை இராசதானி பற்றிக் குறிப்பிடப்படவில்லை. வையா பாடலில் இடம்பெறும் செய்திகள் வெறும் கற்பனையென்று கருதியதாலோ வேறெக்காரணத்தாலோ வாவெட்டிமலை இராசதானி கவனத்திற்கு எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வையா (வையாபுரி ஐயர் எனவும் இவரை அழைப்பர்) வன்னியிலுள்ள இராசதானி பற்றிக் கற்பனை செய்யவேண்டிய அவசியம் இல்லை. வலுவான ஆதாரம் ஒன்றின் அடிப்படையிலேயே இதனைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். துர்அதிர்ஷ்ட வசமாக அந்த ஆதாரம் எமக்குக் கிடைக்கவில்லை. இதனைக் காரணமாகக் கொண்டு வாவெட்டிமலை இராசதானி பற்றிய செய்தியைப் புறக்கணிக்க முடியாது.

வன்னி மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டானுக்குத் தெற்கே மூன்று மைல் தொலைவில் உள்ளது வாவெட்டிமலை. அடர்த்தியான காட்டின் மத்தியில் உள்ள இந்த மலையில் இராசதானியினதும், ஆலயங்களதும், குடியிருப்புக்களதும் அழிபாடுகளை இன்றும் காணலாம். 'மாநகர் வாவெட்டிமலை' என வையா பாடலில் குறிப்பிடப்படுவதிலிருந்து பெரியதொரு நகரமாக வாவெட்டிமலை திகழ்ந்திருக்கிறது என அறியக்கூடியதாக இருக்கிறது.

வாவெட்டிமலை இராசதானி பற்றி வையா பாடலில் இடம்பெறும் குறிப்பினையும் அது தொடர்பான சம்பவங்களையும் நோக்குவோம்.

கவிவீர ராகவன் என்னும் யாழ்பாடி யாழ்வாசித்துப் பரிசாகப் பெற்ற மணற்றிடல் காட்டைத் திருத்தி நற்பயிர் விளைவித்துச் சோலையாக்கினான். அங்கு ஓர் அழகான மண்டபத்தை அமைத்தான். பின்னர் தசரதனின் மைத்துனனான குலக்கேதுவின் மைந்தன் கோளுறுகரத்துக் குரிசிலைக் (கூழங்கைச் சக்கரவர்த்தி) கூட்டிவந்து அவனைச் சக்கரவர்த்தி ஆக்கினான். இது நிகழ்ந்தது கி.மு. 101ஆம் ஆண்டிற்குச் சமனான கலியுக ஆண்டு 3000இல் ஆகும்.

கோளுறுகரத்துக் குரிசிலின் மாமனான உக்கிரசோழனது மக்கள் சிங்ககேதுவும், **மாருதப்பிரபையும்** இலங்கை சேர்ந்தனர். மாருதப்பிரபைக்கு இருந்த குதிரை முகநோய் கீரிமலைத் தீர்த்தமாடக் குணமாயிற்று. 'குதிரை முகம் என்பது முழந்தாளைக் குறிக்கும். குதிரைமுக நோய் என்பது முழந்தாளில் ஏற்படும் ஒரு நோய் போலும்' என வையா பாடல் பதிப்பாசிரியர் கலாநிதி க. செ. நடராசா கூறுகிறார்.

பின்னர் அவள் கதிரையம் பதிக்குச் (கந்தரோடை) சென்று அரன்மகவினை வணங்கி வருங்கால் **உக்கிரசிங்கசேனன்** அவளை மணந்து **வாவெட்டியில்** மண்டபமியற்றி அங்கிருந்து அரசாட்சி செய்தான்.

உக்கிரசிங்கசேனனை **உக்கிரசிங்கன்** எனவும் மாருதப்பிரபையை **மாருதப்பிரவல்லி** என்றும் யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. உக்கிரசிங்கன் கதிரைமலையில் இருந்து அரசாண்டான் என்கிறது இந்நூல். 'இவன் வன்னிமார்க்கமாகச் செல்லும்போது வன்னியர் ஏழுபேரும் எதிர்கொண்டு வந்து, தாங்கள் வன்னி நாடுகளைத் திறைகொடுத்து ஆள உத்தரவு கேட்டனர். தனக்குச் சேரவேண்டிய திறையை கோணேசர் கோவிலுக்குக் கொடுக்குமாறு கூறிவிட்டுக் கதிரை சென்றான்" என்கிறது வைபவமாலை. உக்கிரசிங்கன் வாவெட்டி இராசதானியிலிருந்து ஆட்சிபுரியும் போது இச்சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என ஊகிக்கலாம். கோளுறுகரத்துக் குரிசிலின் மறைவுக்குப் பின்னர் உக்கிரசிங்கன் கதிரைமலைக்குச் சென்று யாழ்ப்பாண அரசனாகி இருக்கலாம்.

இவன் விஜயனின் சகோதரன் மரபில் உதித்தவன் என்கிறது வைபவமாலை. உக்கிரசிங்கனே குளக்கோட்டன் எனவும் மாருதப்பிரபையே ஆடக செளந்தரி எனவும் சுவாமி ஞானப்பிரகாசர் கருதுகின்றார். சோழகங்கன், சோடகங்கன், ஜயபாகு என்னும் வேறு பெயர்களும் இவனுக்கு உண்டு

"சாலிவாகன சகாத்தம் 358ஆம் வருஷத்திலே (கி.பி. 436) மனுநீதி கண்ட சோழன் மகன் குளக்கோட்டு மகாராசன் யாத்திரை பண்ணித் திருகோணமலையில் சேர்ந்து கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத் தம்பலகாமத்தில் பழுதுபட்டுக் கிடந்த கோணேசர் சிவாலயத்தைப் பழுதுபார்ப்பித்தான்" என வைபவமாலை கூறுகின்றது.

ஜயபாகு (குளக்கோட்டன்) கலிங்கமாகனுடன் இணைந்து இராசரட்டையை ஆண்ட தமிழ் மன்னன் என சூளவம்சம், பூஜாவலி ஆகிய நூல்கள் கூறுகின்றன. இவர்களின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி என தற்கால ஆய்வாளர் கணித்துள்ளனர். கிழக்கிலங்கையுடனேயே பெரும்பாலும் குளக்கோட்டன் கோயிற் திருப்பணிகள் பற்றிப் பேசப்படுகின்றன.

வன்னிப் பிரதேசத்தில் நிலவும் செவிவழிச் செய்தி குளக்கோட்டன் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் ஆலயத் திருப்பணி வேலையில் ஈடுபட்டான் என்கிறது. நந்தி உடையாருடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அவரது நந்திக் கடல் வயல்வெளிக்குப்

பேராற்று நீரைச் செல்லவிடாது தடுக்கும் நோக்குடனேயே முத்தரையன் கட்டுக் குளத்தைத் திருத்திக் கட்டுவித்தான் எனக் கர்ணபரம்பரைக் கதையொன்று கூறுகின்றது.

இவற்றிலிருந்து உக்கிரசிங்கனே குளக்கோட்டன் என்னும் கருத்து வலுவடைகின்றது. இவன் வாவெட்டி மலையில் இராசதானி அமைத்து வன்னிப் பிரதேச நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்தான் என்று கொள்வது தவறாகாது.

**பொன்னகர் நிகழும் கதிரையம் பதியில்**
**போய்அரன் மகவினை வணங்கிப்**
**பின்னர் உக் கிர சிங்கசே னன்றன்**
**பெண்ணென இருந்தனள் அதற்பின்**
**மன்னவன் அடங்காப் பற்றினில் ஏகி**
**மாநகர் வாவெட்டி மலையில்**
**தன்னிக ரற்ற மண்டபம் இயற்றித்**
**தன்னர சியற்றினன் இருந்தான்.**

(வையா பாடல் 17)

என்னும் வையா பாடல் மாருதப் பிரவை கதிரைமலையில் அரன் மகவினை (கந்தசுவாமியார்) வணங்கியபின் உக்கிரசிங்கனின் இராணியானாள் என்பதையும், அவன் வாவெட்டி மலையில் இராசதானி அமைத்து ஆட்சி புரிந்ததையும் சுட்டுகின்றது.

வாவெட்டிமலை இராசதானி பற்றிய இன்னொரு குறிப்பு வையா பாடல் 96ஆம் 99ஆம் செய்யுள்களில் இடம்பெறுகின்றது.

யாழ்ப்பாணத்திலே செகராச சேகரனையும் **வாவெட்டியிலே** சங்கிலியையும் அரசு பரிபாலிக்க வைத்து அவர்கள் தமையனான பரராசசேகரன் முள்ளியவளையில் இருந்து பேரரசோச்சினான் என்றும் தன் தம்பியர்கள் யாழ்ப்பாணத்திலும் வாவெட்டியிலும் எவ்வாறு பரிபாலனம் நடத்தினார்கள் என மாதந்தோறும் சென்று கண்காணித்து வந்தான் என்றும் வையா பாடல் குறிப்பிடுகின்றது.

**அந்தவனை வோர்களையும் மன்னவர்கள்**
**மன்னவன் பார்த் தன்பினோடும்**
**கந்தமலி தாரிளவல் செகராச**
**சேகரனைக் கருணை கூர**
**இந்தயாழ்ப் பாணமதில் இருக்கவென்றே**
**சித்திரவே லரையும் ஈந்து**
**வந்துமுள்ளி மாநகரில் கோட்டையும்நற்**
**சினகரமும் வகுப்பித் தானால்**

(வையா பாடல் 96)

**எந்நாளு மிம்முறையே யாவரையும்**
**வாழ்விரென இருத்தி யங்கண்**
**மன்னான இளவலெனும் சங்கிலியை**
**வாவெட்டி சாரச் செய்து**
**முன்னோர்க்குப் புரிபூசை நிதம்தெரிசித்**
**தேமுள்ளி வளையா மூரில்**
**மன்னான இரவிகுலப் பரராச**
**சேகரனும் வாழ்ந்தா னன்றே.**

(வையா பாடல் 99)

பரராசசேகரன் முள்ளியவளையில் கட்டியதாகக் கூறப்படும் கோட்டையின் சிதைவுகள் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றன. முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயமே பரராசசேகரன் வகுப்பித்த கோயிலாகும்.

யாழ்ப்பாணத்தை இரண்டு சங்கிலி மன்னர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். முதலாவது சங்கிலி கி.பி. 1519 தொடக்கம் 1561 வரை ஆட்சி செய்தான். இரண்டாவது சங்கிலி (சங்கிலி குமாரன்) 1615 தொடக்கம் 1619 வரை யாழ்ப்பாணத்தில் அரசோச்சினான். வையா எந்தச் சங்கிலியைக் குறிப்பிடுகின்றார் என்று தெரியவில்லை. முதலில் வாவெட்டியிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் ஆட்சிபுரிந்தவன் முதலாவது சங்கிலி எனக் கொள்ளலாம்.

தற்கால ஆய்வின்படி சங்கிலி பரராசசேகரனின் சகோதரன் அல்லன். பரராசசேகரனின் மூன்றாவது மனைவி வயிற்றுப் பிறந்தவன். பட்டத்து இராணி வயிற்றில் பிறந்தோர் சிங்கவாகு, பண்டாரம் என்போராவர். சிங்கவாகுவுக்கோ அல்லது பண்டாரத்துக்கோ இளவரசுப் பட்டம் கட்டியபோது சங்கிலியை வாவெட்டியில் உபராஜனாக அமர்த்தியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. பட்டத்துக்குரிய இளவரசர்களைவிட இவன் வீரமும் ஆற்றலும் கொண்டவனாகத் திகழ்ந்திருக்கிறான். முடிக்குரிய இளவரசர்கள் கொல்லப்பட்ட பின்னர் (சங்கிலியே இவர்களைக் கொலை செய்தவன் என வைபவமாலை ஆசிரியர் அவன்மீது பழிசுமத்துகின்றார்) சங்கிலி யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி இருக்கலாம். கீர்த்திவாய்ந்த நாட்டுப்பற்றும் சுதந்திர உணர்வும் உள்ள மன்னனாக 42 ஆண்டுகள் யாழ்ப்பாண அரசை ஆட்சிபுரிந்த பெருமை இவனைச் சாரும்.

யாழ்ப்பாண அரசனான பரராசசேகரன் தன் இராச்சியத்தை விட்டு ஏன் வன்னியில் சென்று அரசோச்சினான்? இதற்கு வையா பாடலும் யாழ்ப்பாண வைபவ மாலையும் வெவ்வேறு காரணங்களைக் கற்பிக்கின்றன.

"தென்னிலங்கை அரசர் சிலர் கொடுங்கோலோச்சிய காரணத்தால் சனங்கள் பரராசசேகரன் பால் முறையிட அவன் தம்பியரோடு படை நடத்திச் சென்று பகையரசரை அடக்கினான்" என வையா பாடல் கூறுகின்றது. அதனாலேயே அவன் முள்ளியவளையில் இருந்து இராச்சிய பரிபாலனம் செய்திருக்க வேண்டும்.

"முடிக்குரிய இளவரசர்களை சங்கிலி கொலை செய்வித்ததை அறிந்த பரராசசேகரன் தன்னையும் அவன் கொன்றுவிடுவான் என்று அஞ்சித் தன்னிடமிருந்த திரவியத்தை இராக்காலத்திலே யானைகளில் ஏற்றிக் கொண்டுபோய் வன்னிநாட்டைச் சேர்ந்த பெருங்காடுகளுக்குள்ளே சேமித்து வைத்து செங்கோலையும் முடியையும் கூடவைத்து உன்மத்த வைரவனைக் காவல் வைத்தான்" என வைபவமாலை கூறுகின்றது.

யாழ்ப்பாண அரசர்களான உக்கிரசிங்கனும், சங்கிலியும் வாவெட்டிமலையில் இராசதானி அமைத்து ஆட்சி புரிந்ததையும், பரராசசேகரன் முள்ளியவளையில் ஆட்சி புரிந்ததையும் வையாபாடல் தெளிவாகக் கூறுகின்றது. வாவெட்டி மலையையும் முள்ளியவளையில் உள்ள பரராசசேகரன் கோட்டையையும் அகழ்வாராய்ச்சி செய்யின் பெறுமதிமிக்க வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கக் கூடும். இத்தகைய ஆய்வு பல்கலைக்கழக மட்டத்தில் செய்யப்பட வேண்டும்.

உ

# மழலையர் கல்வி

- ராஜி பரத்வாஜ் -

அமெரிக்கச் சமுதாயத்தில், குடும்பப் பெண்கள் வேலைக்குச் செல்வது வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு நடைமுறை. அவர்களில் அமெரிக்காவின் வடக்குப் பிராந்தியத்திலுள்ள விஸ்கான்ஸின் **(Wisconsin)** பல்கலைக்கழகத்தின் ஓக்ளேர் **(Eauclaire)** நகர வளாகத்தில் **(Campus)** கணித ஆசிரியையாகப் பணிபுரியும் நானும் ஒருத்தி.

அண்மையில் நான் தமிழகம் வந்திருந்த சமயம், சென்னை நகரில் தம் இளம் குழந்தைகள் தரமான கல்வியைப் பெற, பெற்றோர்களும் அந்தக் குழந்தைகளும் படும் அவதிகளைக் கண்ட என் மனம் மிக வருந்தியது.

அட்மிஷனுக்காக, சிறந்த பள்ளிகளில் ஏறி இறங்குவது, பள்ளிகள் வசூலிக்கும் பெரிய 'டொனேஷன்' தொகை, புத்தகக் கடை வாசலில் நின்ற நீண்ட வரிசை, தொடர்ந்து குழந்தைகள் மூச்சுத் திணற சுமந்து செல்லும் புத்தகச் சுமை, போதாக்குறைக்கு டிபன் டப்பா, குடிநீர் பாட்டில் நிறைந்த கூடை, பள்ளிக்கு அழைத்துச் செல்லும் சைக்கிள் ரிக்ஷாவிலுள்ள குழந்தைகளின் நெரிசல்.... அவதிக்கு அளவே இல்லை.

இந்த நிலையில் அமெரிக்காவில் வாழும் என்னைப் போன்ற தாய்மார்கள் அதிர்ஷ்டசாலிகள் என்றே சொல்ல வேண்டும்.

அமெரிக்காவில் வாழும் மக்கள், அந்நாட்டு மத்திய அரசுக்கும் **(Federal Government)**, அவர்கள் வசிக்கும் மாநில அரசுக்கும் தனித்தனியே வருமான வரி செலுத்துகின்றனர். மாநில வருமானவரி வீதம் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடுகிறது. வரி ஏய்ப்பு என்பது மிகக் குறைவு. சொத்து வரியும் **(Property Tax)** செலுத்துகின்றனர். அதிலிருந்து மாநில அரசு, தான் நடத்தும் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்குப் புத்தகம், நோட்டுகளை இலவசமாக வழங்குவதற்குச் செலவிடுகிறது.

மத்திய அரசு வசூலிக்கும் வருமான வரியிலிருந்து ஒரு கணிசமான பகுதி நாடெங்கிலும் பள்ளிக்கூட மதிய உணவு திட்டத்திற்கென **(School Lunch Program)** ஒதுக்கப்படுகிறது.

அமெரிக்காவில் பள்ளிக் கல்வியில் சிறந்த மாநிலமாகக் கருதப்படும் விஸ்கான்ஸின் மாநிலத்தின் ஓக்ளேர் என்ற எங்கள் ஊரில், பள்ளிக்கூடங்கள் செயல்படும் முறை சிறப்பாக உள்ளது.

வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் தம் குழந்தையின் மூன்றாவது வயதில், தாங்கள் வேலை பார்க்கும் நிறுவனம் அல்லது தனியார் நடத்தும் **(Day Care Center)** என்ற காப்பகங்களில் குழந்தைகளை விட்டுச் செல்கின்றனர்.

அச்சிறு குழந்தைகள் இக்காப்பகங்களில், தன் ஆடைகளின் 'ஜிப்' பை **(Zip)** மாட்டிக் கொள்வது, காலில் 'ஷு'வை மாட்டிக் கொண்டு 'லேஸ்'முடி போடுவது முதலிய அத்யாவசியச் செயல்முறைகளைக் கற்றுக் கொள்கின்றன.

தவிர, மேற்கத்திய இசை, கதைகள், 'நர்சரிரைம்' பாடல்கள், வண்ணம் தீட்டுதல் போன்றவற்றைக் குழந்தைகள் தெரிந்து கொள்கின்றனர். நான் பணியாற்றும் பல்கலைக்கழகம் நடத்தும் காப்பகத்தில், குழந்தைகள் தங்கும் நேரத்தைப் பொறுத்துக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. தனியார் காப்பகங்கள் சற்றுக் கூடுதல் தொகையை வசூலிக்கின்றன.

குழந்தைகளுக்கு ஐந்து வயதாகும் போதே, பள்ளிக்கூடங்களே பெற்றோர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களது குழந்தையைப் பள்ளியில் சேர்க்கக் குறிப்பிட்ட தேதியில் வரும்படி அழைப்பு விடுக்கின்றது. மேலும் தம் பள்ளி செயல்படும் முறை,

மற்றும் பாட விவரங்களை அவர்களுக்குத் தெரிவிக்கின்றன. பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்க வேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்படுகிறது.

அரசுப் பள்ளிகளில் குழந்தைகளுக்குச் சாதாரணமாகப் பள்ளிக்கூடச் சம்பளம் வசூலிப்பதில்லை. அப்படி வசூலித்தாலும் அக்குடும்பத்தின் மாத வருமானத்திற்குத் தகுந்தபடி ஒரு சிறுதொகை வசூலிக்கப்படுகிறது.

கிண்டர்கார்டன் **(KG)** வகுப்பில், குழந்தைகள் நாளொன்றுக்குச் சுமார் மூன்றுமணி நேரம் பள்ளிகளில் தங்குகின்றனர். அச்சமயம் அவர்களுக்கு ஆங்கில எழுத்துக்கள், எண்கள், வண்ணங்களின் பெயர்கள், பலவேறு வடிவ வண்ணக்கட்டைகளைச் சேர்த்துப் பொருத்துதல், வரைந்த படத்தில் வண்ணம் தீட்டுதல், தன் மனசில் தோன்றுவதை வண்ணப் படமாக வரைவது, மேற்கத்திய இசை, சேர்ந்திசை, கிறிஸ்துமஸ் காரொல்ஸ் பாடல்கள் மற்றும் பலவித விளையாட்டுகள் கற்றுத் தரப்படுகின்றன.

ஐந்து வயதாகும் வரை இங்கே குழந்தைகள் பென்சில், பேனாவை உபயோகிக்க அனுமதிக்கப்படுவதில்லை. பச்சிளம் கை நரம்புகள் தளர்ச்சியடையலாம் என்பதே இதற்குக் காரணம்.

முதல் வகுப்பிலிருந்து குழந்தைகள் காலை ஏழரை மணிமுதல் எட்டு மணி நேரம் பள்ளியில் தங்கிக் கல்வி கற்கின்றனர். குழந்தைகளைப் பள்ளிகளுக்கு ஆரஞ்சு வண்ண 'ஸ்கூல் பஸ்' இலவசமாக ஏற்றிச் செல்கிறது.

பள்ளியில் குழந்தைகளுக்கு இலவசமாகவோ, அல்லது குடும்ப வருமான நிலைக்குத் தக்கபடி சிறுதொகை வசூலித்தோ, சிற்றுண்டியாகப் பால், பிஸ்கெட்டு மற்றும் சைவம் அசைவம் உட்பட்ட மதியச் சத்துணவும் கொடுக்கப்படுகிறது. பள்ளிகளில் விநியோகிக்கப்படும் மதியச் சத்துணவு பட்டியல் பிரதி ஞாயிறு எங்கள் ஊர் நாளிதழில் பிரசுரிக்கப்படுகிறது.

கிண்டர் கார்டன் வகுப்பில் படிக்கும் குழந்தையின் தாய், தவணை முறைப்படி ஒரு நாள் தன் குழந்தையின் வகுப்பிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும், ஆசிரியைக்கும், தம்மால் தயாரிக்க முடிந்த கேக், குக்கி (பிஸ்கெட்டு) போன்ற ஏதாவது ஒரு தின்பண்டத்தைத் தயாரித்து அன்பளிப்பாக அளிக்க வேண்டும் (கட்டாயமல்ல). இதனால் குழந்தைகளுக்குக் குடும்பப் பொருளாதார வேற்றுமை மனசில் தோன்றுவதில்லை.

குழந்தைகளுக்குச் சீருடை **(Uniform)** என்பதை இங்குள்ள பள்ளிக்கூடங்கள் கட்டாயப்படுத்துவதில்லை.

ஒரு குழந்தை முதல் நாள் பள்ளிக்குச் செல்வது இங்கு ஒரு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. நம் கிராமங்களில் மேளதாளங்களுடன் அட்சராப்யாசத்தைத் தொடங்கி வைப்பது போல், குடும்பத்தினர் படைசூழக் குழந்தையைப் பள்ளிக்கு அழைத்து வந்து வீடியோ, புகைப்படம் எடுத்து எல்லாக் குழந்தைகளையும் மகிழ்விப்பது அமெரிக்கர்களின் வழக்கம்.

முதல் நாளன்று வரும் குழந்தைகளை வரவேற்கும் பல வண்ணப் போஸ்டர்கள், டேப்பில் மதுர இசை, புன்சிரிப்புடன் வரவேற்கும் ஆசிரியை, இவை அந்தக் குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கின்றன.

ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியே அலமாரி அல்லது வகுப்பு மேஜையில், தம் புத்தக பையை வைத்துக் கொள்ள அவர்கள் பெயர் பொறித்த இடம் ஒதுக்கப்படுகிறது. தமக்கு இலவசமாக வழங்கப்படும் பாட புத்தகங்களையும் ஒன்றிரண்டு நோட்டுப் புத்தகங்களையும் குழந்தைகள் வீட்டுக்கு எடுத்துச் செல்லாமல் தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் விட்டுச் செல்கின்றனர்.

அன்றாட பள்ளிக்கூட பாட விவரங்கள் தனிக் காகிதங்களில் குறித்து விநியோகிக்கப்பட, அவற்றைப் பெற்றோர் உதவியுடன் தம் '∴பைல் ∴போல்டரில்' வைத்துக் கொள்வது குழந்தைகளின் வழக்கம். குழந்தைகளுக்கு 'ஹோம்வொர்க்' என்பது மிகக் குறைவு. அறவே இல்லை என்று கூறலாம்.

பள்ளிகளின் நூலகத்தில் சிறுவர் சிறுமிகள் கம்ப்யூட்டர் உதவியுடன் புத்தகங்களை அநாயாசமாகத் தேர்ந்தெடுத்து எடுத்துப் படிப்பது பிரமிக்கத்தக்கது.

வீடுகளிலுள்ள **PC (Personal Computer)** என்ற 'பர்ஸனல் கம்ப்யூட்டரை' உபயோகித்துப் பலவிதக் கணக்குகள், ஆங்கிலம், பூகோளம் முதலியவற்றையும் பலவித விளையாட்டுகளையும், பாடல்களையும் சிறுவர் சிறுமியர் கற்றுக் கொள்வது சகஜம்.

ஆண்டு இறுதியில் பரீட்சை எதுவும் பள்ளிகளில் நடத்தப்படுவதில்லை. அன்றாட பாடங்களை மாணவர்கள் கற்றுக் கொள்ளும் திறமை ஆசிரியைகளால் கணிக்கப்படுகிறது.

பிறவி மேதையாகத் திகழும் குழந்தைகளுக்குத் தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட்டு ஊக்கமளிக்கப்படுகிறது. மாணவ மாணவிகளின் திறமைக்கு **(Merit)** அதிக மதிப்பு உண்டு.

அதற்கு ஓர் உதாரணம்:

அண்டை மாநிலம் ஒன்றில் ஐந்தாவது வகுப்பில் படித்து வரும் எங்கள் உறவினரின் மகன், இளம் வயதிலேயே பிரகாசிக்கும் கணித மேதை. காலேஜ் கணக்கைக் கணப்போதில் போடும் அச்சிறுவன் அம்மாநிலத்து கவர்னரது கல்விமான் **(Governor's Scholar)** எனக் கருதப்படுகிறான்.

ஐந்தாவது வகுப்பில் படிக்கும் போதே காலேஜில் சேருவதற்கான **SAT (Scholastic Aptitude Test)** என்ற தகுதி வாய்ப்புப் பரீட்சை எழுதி, ஏறக்குறைய சதம் மதிப்பெண்கள் வாங்கிய மேதை.

அதையடுத்து, அவனது சிறுவயதைப் பாராமல், வருகிற ஆண்டில் அவன் அங்குள்ள அயோவா மாநிலப் பல்கலைக்கழகம் கல்லூரியில் சேர அனுமதி அளித்துக் கௌரவித்துள்ளது. அதையொட்டி ஏனைய பாடங்களில் அவன் தேவையான பயிற்சி பெறத் தொடங்கி இருக்கிறான்.

கடந்த 1954ஆம் ஆண்டு அமெரிக்காவின் உச்சநீதிமன்ற ஆணையின்படி நிற, ஜாதி வேற்றுமை என்ற பாகுபாடு காட்டுவது குற்றமாகும். அது பள்ளிகளில் கட்டாயமாக அமுலாக்கப்படுகிறது.

பள்ளிப்படிப்பைத் தவிர, தமது கோடை விடுமுறையில் இங்குள்ள கவுன்டி **(County)** (நம் மாவட்டத்திற்குச் சமமானது) அரசு நிறுவனங்களும் மற்றும் ஓய்.எம்.சி.ஏ போன்ற நிறுவனங்களும் நீந்துதல், டென்னிஸ், பேஸ் பால், கூடைப்பந்து முதலிய பல விளையாட்டுகளில் பயிற்சி வசதிகள் செய்து கொடுக்கின்றன.

மாணவ மாணவிகளை இசை, நடனக் கலைத்திறனை வெளிப்படுத்தி ஊக்குவிக்க, பள்ளிகளில் கலைவிழா நடத்தப்படுவதும் உண்டு.

பள்ளி மேல் வகுப்புகளிலும் காலேஜிலும் படிக்கும் மாணவ மாணவிகள், வீடுகளின் வெளியே வளரும் புல்லைச் செதுக்குவது, வீட்டு ஜன்னல்கள், கதவுகள் மற்றும் அறைகளைச் சுத்தம் செய்வது, ரெஸ்டாரெண்ட்களில் சர்வராகப் பணிபுரிவது, காலையில் தினசரி நாளிதழ் விநியோகம், வீடுகளில் பச்சிளம் குழந்தைகளைக் கவனித்துக் கொள்வது **(Baby Sitting)** முதலிய பல சில்லறை வேலைகளைச் செய்து தன் தேவைக்கான பணம் சம்பாதிப்பது சகஜம்.

கல்லூரி படிப்பு முடிந்து இறுதிப் பரீட்சை எழுதும் நிலையில், தன் பிரசவத்தை எதிர்பார்த்து நிற்கும் மாணவிகளுக்குப் பேராசிரியர்கள் காட்டும் பரிவு குறிப்பிடத்தக்கது. தவிர்க்க முடியாவிடில் ஒரு பரீட்சையை அப்பெண்ணுக்கென முன்னதாகவோ பின்னரோ ஒரு தனி அறையில் எழுதச் சொல்வது சகஜம். பிரசவித்துச் சில தினங்களே ஆகியிருந்த பெண்ணுக்கு, அந்த ஆண்டில் அவளது படிப்பு முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்டு, ஒரு பரீட்சையை எழுதவே தேவையில்லை என்று கூறிவிடும் பேராசிரியர்களும் உள்ளனர்.

பரீட்சை எழுதுவதற்கும் மாணவர்கள் பென்சிலையே உபயோகிப்பதுண்டு. கல்லூரிப் பட்டப்படிப்பின் பரீட்சை முடிந்த கடைசி நாளன்றே பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழா நடத்தப்படுவது சர்வ சாதாரணம்.

அதே சமயம், தம் ஆசிரியரது வகுப்பு நடத்தும் திறமை, கற்பிக்கும் முறை, மாணவிகளுடன் அவர் பழகும் விதம் முதலியவற்றை மாணவ மாணவிகளே கணித்துக் கூறுவதும் அமெரிக்கக் கல்லூரிகளில் நடைமுறையில் உள்ளது.

பள்ளி ஆசிரியர்களின் திறமை வளர்ச்சிக்கென அவர்களுக்கு ஆண்டு தோறும் குறிப்பிட்ட தினங்களிலும் கோடை விடுமுறையிலும் மேம்பாட்டு வளர்ச்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

பி.எச்.டி. பட்டம் பெற்றுப் பணிபுரியும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அவரவர் துறையில் தொடர்ந்து ஆராய்ச்சி நூல்கள் எழுதி, அத்துறையின் பிரபலமான பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டியது மிக அவசியம். அவரது பணி தொடர்ந்து நிரந்தரமாக்கப்படுவதற்கு அது மிக அவசியம். இருந்தும் ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் சம்பள உயர்வு என்பது கிடையாது. மாநில அரசின் பல்கலைக்கழக நிதி வசதியை இது பொறுத்திருக்கும். இது ஆசிரியர்களின் திறமையை, ஈடுபாட்டைப் பாதிப்பதில்லை.

இத்துணை சிறந்த முறையில் கல்வித் துறையும், பள்ளிகளும், பல்கலைக்கழகங்களும் செயல்படக் காரணம்:

பாரதத்தைவிட மூன்று மடங்கு நிலப்பரப்புள்ள அமெரிக்க நாட்டின் மிகக் குறைவான மக்கள் தொகை. (அது பாரதத்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவுதான்)

அமெரிக்க டாலரின் உயர்ந்த மதிப்பு, நுகர்வோரது அன்றாட வாழ்க்கையைச் சார்ந்த துறைகளில் லஞ்ச ஊழல் ஏறக்குறைய இல்லாத சூழ்நிலை.

பெரிய தொழில் மற்றும் ஆலை நிறுவனங்களின் ஆதரவு.

மேலாக, கடின உழைப்புக்குக் கிடைக்கும் வெகுமதி.

அந்தக் கடின உழைப்பு கிண்டர் கார்டனில் தொடங்கிப் பேராசிரியராகப் பணிபுரியும் நிலைவரை நீடிக்கிறது.

தகுதி இல்லாதவர் எத்தகைய சிபாரிசு பெற்றும் பேராசிரியராகிவிட முடியாது. தகுதி பெற்றோர் மேலேறுவதையும் எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது. நூற்றுக்கணக்கான மேதைகள் உருவாகி ஒரு நாடு வளர்ச்சியடைந்து நிற்க, இதை விட சிறந்த உதாரணம் கூற இயலாது.

(நன்றி : கலைமகள் தீபாவளி மலர் 1995)

உ
சிவமயம்

# தமிழ் இலக்கியங்களும் தமிழ் மருத்துவக் கருத்துக்களும்

*சித்தாந்த பண்டிதர் வாகீசகலாநிதி*
**கனகசபாபதி நாகேஸ்வரன் M.A.**
முன்னாள் விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்
மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர்,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்

ஒழுக்கம், செல்வம், இன்பம், மோட்சம் இவைகளினுடைய அத்திவாரமே ஆரோக்கியமாகும். இவ்வுலகிலே புதியபுதிய நோய்களும் பிணிகளும் மனித உடல் நலத்தையும், ஆரோக்கியத்தையும், வாழ்க்கை நலன்களையும் சீரழித்து அழிப்பனவாயுள்ளன. மனித முன்னேற்றத்திற்குப் பெரும் இடையூறாக நோய்கள் தோன்றியுள்ளன.

தமிழிலே மருத்துவக் கலை என்பது மிகவும் நீண்ட வரலாற்றை உடையது. சித்தர் தத்துவம் மருத்துவக் கலையின் நுணுக்க விபரங்களையெல்லாம் வெகு கன கச்சிதமாக எடுத்து விளக்குகின்றது. திருமந்திரம் எனும் திருமுறை இலக்கியம் தமிழ் மருத்துவத்தின் அதிநுட்பங்களையெல்லாம் விபரிக்கின்றது. தமிழ் இலக்கியங்களும் தமிழ் மருத்துவ நூல்களும் நமது தொன்றுதொட்டமைந்த வாழ்க்கை முறைகளினூடேயும், அறநெறிமுறையிலமைந்த கொள்கைகளினூடேயும், தத்துவக் கொள்கைகளினடியாகவும், யோகசாதனைகளினூடேயும் தந்துள்ள மகத்தான விளக்கங்கள் இக்கட்டுரையிலே மனதில் கொள்ளப்பட்டுக் கருத்துக்களிடம் பெறுகின்றன.

இன்று தமிழ் மருத்துவம், ஆங்கில மருத்துவம், சித்த மருத்துவம், யுனானி மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், சுதேச மருத்துவம், சிங்கள மருத்துவம், சீன மருத்துவம், அக்குபஞ்சர் மருத்துவம் என்றெல்லாம் கேள்விப்படுகின்றோமல்லவா? இன்னும் தொடுகை மருத்துவம் என்னும் கலையும் வந்துவிட்டது. நமது சமய மரபிலே 'வேப்பிலை மருத்துவம்', 'விபூதி மருத்துவம்' என்பனவும் உண்டல்லவா? எட்டாம் நூற்றாண்டில் சம்பந்தர் விபூதியாகிய நீற்றினைப் பயன்படுத்தி வெப்புநோயைப் பாண்டிய மன்னனுக்கு நீக்கிய தெய்வீக வரலாறுள்ள வரை நமது மருத்துவத்துக்கும் சமயத்துக்குமுள்ள உறவு கூர்ந்து ஆராயத்தக்கது, என்றும் மேன்மையுடனும் பெருமையுடனும் பிரசாரப்படுத்தத்தக்கது. நோயற்ற வாழ்வுக்கு உறுதுணை நல்குவது. எனவே இன்றைய நிலையிலே ஒவ்வொரு தனி மனிதனும் உளநிலையில், உடல் நிலையில், உணர்வு நிலையில் ஸ்திர - உறுதிநிலைத் தன்மை பெற்றுக் கொள்ள இலக்கியங்களினூடே இலக்கியச் சிந்தனைகளின் உறுதுணையுடன் சில பிரதான கருத்துக்களை நோக்குவது பொதுநலம் பயக்கும் என்று கருதுகிறோம்.

தமிழ், சித்த, ஆயுர்வேத முறைகளில் மூலிகை முறை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். மூலிகைகளின் மருத்துவக் குணங்கள் பற்றி முதலிலே ஆராய்ந்த முனிவர் பரத்வாஜர் இந்திய வைத்திய முறையின் தந்தையாகக் கருதப்படுகிறார். நல்லறிவின் முற்றுப்பேறுடையோராய் ஞானமுதிர்ச்சியுடையோராய் விளங்கிய முனிவர்கள் நோய்களைக் குணப்படுத்தும் தாவர வகைகளை வேதங்களிலும் பிராமணங்களிலும் குறிப்பிட்டுள்ளனர். வியாதி, நிவர்த்தி, மனோவசிகரம், துஷ்ட நிக்கிரகவாதை நிவிர்த்தி இவைகளைத் தெரிவிக்கும் பெரும்பான்மையான மந்திர ஸ்லோகங்களைக் கொண்டு

அதர்வவேதம் அமைக்கப்பட்டுள்ளது. இயற்கையாகவே உண்டாகும் மரம், செடி, கொடிகளிலே பெறப்படும் பூ, பட்டை, பால், மொட்டு, இலை. காய், விதை, வேர், கொழுந்து, சருகு, மரம் என்பன அனைத்துமே மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் மருத்துவப் பயன்பாடு கருதியே இவற்றைச் சிவாலயங்களிலே பயன்படுத்துவதை இன்றுங் காணுகின்றோமல்லவா? யாக, சமித்து, சருகு, வேர், பட்டையெல்லாம் சிவாச்சாரியாரது பட்டியலில் உள்ளன. யாகப்புகை பிணியை, நோயை நீக்கிச் சுகம் செய்கின்றது. நெய் சொரிந்து வேட்கும் காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி என்னும் யாகங்கள் குருக்களாலே கோயில்களிலே செய்யப்படுவது, மருத்துவர் தொழிற்படுவது ஆதுலர்சாலையில் (மருத்துவமனையில்) ஆனால் யாகம் செய்யும் - யாகாக்கினி வளர்க்கும் சிவாச்சாரியார் தொழிற்படுவது வைத்தியநாதர் எனும் சிவனுறையும் சிவன் ஆலயங்களில். எனவே 'பிறவிப்பிணிக்கு மருந்தே' என்று சிவனைப் பாடி வாழ்த்திய நாயன்மாரது செயலும், சிந்தனையும், சித்தமும் நாமொவ்வொருவரும் பின்னோக்கி உணர்ந்து கொள்ள வேண்டாமா? பெருமையும், பீடும், பெருமிதமும், உண்மையும், உயர்வும் ஒருங்கே கொண்டது. சித்தமருத்துவம் (தமிழ் மருத்துவம்) ஆயுர்வேதம் வேத வழக்குகளை அடிப்படையாகக் கொண்டு இயல்வது. வாய்ப்புள்ளபோது சித்தமருத்துவத்தினதும் ஆயுர்வேத மருத்துவத்தினதும் ஒற்றுமை வேற்றுமைகளையும் நோக்குவது 'தெளிவு' பிறக்க ஏதுவாகும்.

வேதம், மந்திரம், பிராமணம் என்று இருவகையுள்ளது. வேத நூல்களில் வரும் தாவர வகைகளின் மருத்துவக் குணங்கள் தமிழ்நாட்டுச் சித்தர்களால் சிறப்புற எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. முதலிலே தமிழில் பயிலப்படும் சில 'சொற்களை' அதன் வடசொற்றொடர்புடன் அறிவது பயன் விளைவிக்கும் என்று எண்ணுகிறேன். 'அபமார்க' என்னும் தாவர வகையைத் தமிழில் 'நாயுருவி' என வழங்குவர். இந்த நாயுருவியை காஞ்சரி, கனம், சிகிரம், கதிரி, கரமஞ்சரி, சிறுகடலாடி, சுவானம், கிருஷ்ணபன்னி, சகரிகம், கேசரிகம், கொட்டாவி, சேகரி, நாயரஞ்சி, மாமுநி எனவும் அழைக்கப்படும். இதில் செந்நாயுருவி என்றொரு வகையுமுள்ளது. இதனைப் 'படருருக்கி' என்று கூறுவர் இது துவர்ப்பி, சிறுநீர்ப்பெருக்குதல், உடலைத் தேற்றுதல், முறை வெப்பகற்றுதல் ஆகியவை இதன் மருத்துவக் குணங்களாகும். செந்நாயுருவியினால் வீக்கம், பாண்டு, காமாளை ஆகியவை நீங்கும். மாதர்களின் ருது காலத்தில் வழக்கப்படி உதிரப்போக்கை உண்டாக்கும். செந்நாயுருவி இலைச்சாறு அதிக அளவில் கருப்பத்தைக் கரைக்கும். இலையை நீர்விட்டு அரைத்துச் சிறுகடி விஷங்களுக்கும் பூசலாம். நாயுருவி வேர்ச்சூரணத்துடன் சிறிது மிளகுப்பொடியும் தேனும் சேர்த்துக் கொடுக்க இருமல் நீங்கும். 'அர்க்க' என்பது தமிழில் 'எருக்கு' என்று சொல்லப்படுகிறது. 'அருக்கன்' என்பது இதன் வேறு பெயராகும். 'எருக்கு' செடி வகையைச் சேர்ந்தது. வெண்மை நிறமுள்ள பூவையுடைய எருக்கை 'வெள்ளெருக்கு' என்று கூறுவர். இதன் இலை, பூ, பால், பட்டை, வேர் ஆகியவை மருந்தாகப் பயன்படுகின்றன. புழுக்களைக் கொல்லுதல், உடலைத் தேற்றுதல், மலமிளக்குதல், வெப்பமுண்டாக்குதல் ஆகியவை எருக்கிலையின் மருத்துவக் குணாம்சங்களாகும்.

தமிழர் தம் பண்பாட்டின் **மருத்துவ இலைகள்** மூன்று மிகமிகப் பயன்பாடு உடையனவாகவுள்ளன. 1) வாழையிலை 2) மாவிலை 3) வேப்பிலை. சமயம் சார்ந்த - கோயில் பண்பாடு சார்ந்த தொடர்பில் இவை பெரும் கவனிப்புக்கு உரியனவாகின்றன. வாழையிலையிலே சாப்பிடுகிறோம், கும்பம் வைக்கிறோம். சின்னமுத்து பொக்களிப்பான் எனும் அம்பாள் வருத்தம் வந்தால் படுக்கிறோம். மாவிலையைக் கும்பத்துத் தேங்காயுடன் கும்பக்குடத்துட் சொருகுகிறோம். வீட்டில் கதவுக்கு மேல் மாவிலையைக் குத்துகிறோம். மாவிலையில் நாதவிந்து சக்திகள்

உண்டு. சூரன் மாமரமானான் என்கிறது கந்தபுராணம். மாங்கொட்டையினுள் வண்டும், புழுவும் உயிர் வாழுகின்றனவல்லவா? வேப்பிலை அம்பாளின் 'பிரசாதம்' என்று நம்பப்படுகிறது. மருத்துவக் குணம் மிகக் கொண்டதொரு மரம் அது. பித்தவாந்தி, பித்தாதிசாரம், பைத்தியம், உமிழ்நீர்ச்சுரப்பு, வயிற்றுளைவு, உஷ்ணம், இருமல் ஆகியற்றைப் போக்கும் குணம் வாழைக்காய்க்கு உண்டு. அத்துடன் இரத்த விருத்தியும் பயனும் உண்டாகும். இதற்கான பாடல் பின்வருமாறு.

***"வாந்திபித்தம் பேதி வாய்நீர் வயிறுளைதல்***
***ஆர்ந்த அலைங்காசம் அண்டர்தலம் – சூழ்ந்தேறு***
***செம்புனலுந் தெம்பும் உண்டாம் திண்டிமிகப்பெருகும்***
***அம்புவியுள் வாழைக்காய்க் காய்"***

வாழையிலையை வாட்டியபின் சோறு - சாதம் கட்டினால் நீண்ட நேரம் உணவு பழுதாகாமல் இருக்கும். அத்துடன் உணவின் சுவையைப் பதங்கெடாமல் பாதுகாத்து வைத்துக்கொள்ளும். 'சுலோகங்கள்' என்றும் நினைவில் கொள்ள ஏதுவாக இருப்பவை. சுருங்கிய சொற்களால் விரிந்த பொருளை நல்குவன சூத்திரங்கள். இப்பொழுதும் வைத்திய கலாநிதிகள், ஆயுர்வேத வைத்தியர்கள், சித்த மருத்துவர்கள், பொதுமக்கள் எல்லோரும் பாடல்களை மனப்பாடம் செய்து கொண்டுள்ளனர். இந்த இடத்தில் தமிழ் இலக்கியங்கள் பெரிதும் மருத்துவக் கருத்துக்களைப் பிரசாரப்படுத்தியுள்ளன. சங்க இலக்கியங்கள், சங்கமருவிய கால இலக்கியங்கள், கோளறுபதிகம், கம்பராமாயணம், பெரியபுராணம் (கண்ணப்ப நாயனார்புராணம்), ஈழத்திற் தோன்றிய யாழ்ப்பாண அரசர் காலத்து மருத்துவ இலக்கியங்கள் (பரராசசேகரம், செகராசசேகரம்) என்பன பிரதானமானவை.

தலா (தாலக்கனி) என்றால் பனம்பழம், பனையைக் குறிக்கும். ஏடகம், கரும்புறம், காமம், தருவிராகன், தாலம், தாளி என்பன மறுபெயர்கள். பனைமரத்தின் எல்லாப் பகுதிகளும் உபயோகப்படும் உறுப்புக்களாகும். எனினும் ஓலைகள், மட்டை, பூ, வேர் ஆகியவையே மருந்துகளுக்கு முக்கியமாகப் பயன்படுகின்றன. துவர்ப்பும், இனிப்பும் இதன் குணங்கள். இலை (ஓலை), மட்டை, வேர் ஆகியவையே மருந்துகளுக்கு முக்கியமாக பயன்படுகின்றன. பனம் பூவின் சுவை துவர்ப்பு, பனம் நுங்கு சிறுநீர்ப் பெருக்கம், உள்ளழலாற்றும், உடலை உரமாக்கும், பதனீர் சிறுநீர்ப் பெருக்கம், குளிர்ச்சியுண்டாக்கும், வெப்பமுண்டாக்குதல், தாபம் முதலிய குருரரோகங்களைச் சாந்தப்படுத்துதல் ஆகியவை பனங்கள்ளின் செய்கைகளாகும்.

பனங் குருத்தினால் இரத்தமூலமும், அதிகாரமும் உண்டாகும். வாதகுன்மம், மூத்திரச்சிக்கல், தந்தரோகம், புராணசுரம் ஆகிய நோய்களைப் போக்கும் குணம் பனை மரத்தின் பூவுக்கு உண்டு. 'அகத்தியர்' குணவிசேடம் எனும் நூல் பின்வருமாறு உரைக்கும்.

***"பனையிலுறு பூவதுதான் பங்கமுறக் குன்ம***
***வினை அகற்றும் நீர்க்கட்டை மீட்கும் – முனையான***
***பன்னோய் ஒழிக்கும் பழஞ்சுரத்தைப் போக்கிவிடும்***
***மின்னே இதனை விளம்பு"***

(அகத்தியர் குணவிசேடம்)

வாசகர்களே! எப்படியுள்ளன இவ்வரிய கருத்துக்கள்? இன்னும் வளரும். யாழ்ப்பாண மருத்துவம் - தனிக் குணவிசேடணம் உண்டல்லவா? அறிவோம்.

உ

# இந்திய முறை மருத்துவம்

டாக்டர் பிருந்தா

இந்தியர்களின் சிறப்புக்குரிய நாகரிகத்தில் முகிழ்த்தது ஆயுர்வேத மருத்துவம். இந்த மருத்துவத்தைப் போன்ற ஒரு பழமையும், பெருமையும் வாய்ந்த மருத்துவமுறை நம்மிடையே இன்று இல்லை.

பல அரிய பெரிய மூலிகைகளின் சங்கமமே ஆயுர்வேதம். ஆயுர்வேத ஆசாரியர்கள் அநுபவ வாயிலாக, தாம் அறிந்த மூலிகைகளின் மருத்துவப் பயன்களையும், அவற்றைக் கையாளும் முறைகளையும் சீடர்களுக்குப் போதித்து வந்தனர். சிலர் புத்தகங்களாக எழுதி வைத்தனர். அவற்றில் சில பண்டைய சுவடிகளில் காணப்படுகின்றன.

ஆயுர்வேத மருத்துவத்தின் பெருமையை இன்று உலகறியச் செய்யும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கின்றனர். ஆயுர்வேத ஆராய்ச்சிக் கவுன்சிலும் முழு முயற்சியுடன் பாடுபடுகின்றது. விஞ்ஞான ரீதியாக ஒப்புக்கொள்ளும் வகையில் இந்த மருத்துவம் மேன்மேலும் வளரவேண்டும். அறிவு பூர்வமாக, ஆய்வு மயமாக வரவேண்டும்.

ஆயுர்வேத ஆசாரியர்களின் அறிவுக் கூர்மையும், கவனிக்கும் தன்மையும் **(observation)** நம்மை வியப்பிலாழ்த்தும். ஆராய்ச்சிகள் இல்லாமலே மூலிகையின் தன்மையறிந்து பெயர் சூட்டினார்கள்.

"பிரம்மி" என்று ஒரு மூலிகைக்குப் பெயர் இட்டனர். "பிரம்மா" ஆக்கும் கடவுள் - அந்த மூலிகையும் ஆக்கும் சக்தி உடையது. சந்ததியைக் காக்கும் - ஆக்கும். எல்லா ஆக்கும் சக்திக்கும் காரணமாகிய மூளையை வளர்ப்பதில் இந்த மூலிகைக்கு ஈடு இணை இல்லை. இதற்குப் "பகு.:பேனா" என்றும் ஒரு பெயர்என்றால் இந்த மூலிகை நுரைக்கும் தன்மை உடையது என்று பொருள்.

இன்றைய விஞ்ஞானிகள் பல ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து இந்த மூலிகையில் உள்ள நுரைக்கும் தன்மையுள்ள சபோனின் க்ளைகோஸைடுகளையும் மூளை வளர்ச்சிக்குக் காரணமான காமா அமீன் பியூட்ரிக் ஆஸிட் **(Gamma Amine Butyric)** என்ற மூலப்பொருள்களையும் கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வாறு பல ஆண்டுகள் ஆய்வுகள் நடத்திய பிறகே கண்டு பிடித்துள்ள விஞ்ஞானக் கூற்றுகளை, அந்தக்கால ரிஷிகள் எந்தவித பரிசோதனைகளும் செய்யாமல் மூலிகைகளுடன் ஒன்றி வாழ்ந்து, ஒவ்வொரு மூலிகையின் தன்மையையும் நன்கு அறிந்து, அதன் பயன்களை நுகர்ந்து, அதற்குப் பெயர் சூட்டினார்கள். நீண்ட நாட்கள் எந்த நோயும் தீண்டாமல் வாழ்ந்து வந்தனர்.

மேலும் ஆயுர்வேத மூலிகை மருந்துகள் பக்கவிளைவுகளை உண்டாக்காது என்பதே இதன் சிறப்பு அம்சம்.

இன்றைய ஆராய்ச்சிகளின் விளைவாக விஞ்ஞான ரீதியாக ஒப்புக் கொள்ளப்பட்ட சில ஆயுர்வேத மூலிகைகளின் தன்மையை நாம் இங்கு ஆராய்வோம்.

"இம்பூரல்" என்னும் சிறிய செடிக்குக் கபத்தை அகற்றும் சக்தி உண்டு. இது கசநோயைக் குணப்படுத்தும் ரசாயனக் கூற்றினைக் கொண்டுள்ளது என்று இன்றைய அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றன. ஆயுர்வேதத்தில் இதை "ரஞ்சனி" என்று கூறுவார்கள். இதே போன்று

அலோபதி மருத்துவ முறையில் முழுமையாகக் குணப்படுத்த முடியாத பல நோய்களுக்கு இன்று ஆயுர்வேதத்தில் அறிவியல் ஆய்வுகள் மூலமாக ஒப்புக் கொள்ளப்பட்ட மூலிகை மருந்துகள் உள்ளன.

"பிரம்மி", "சுனிஷண்ணிக்" (அரைக்கீரை) போன்றவை வலிப்புப் போன்ற கொடிய வியாதிகளைக் குணப்படுத்தும் மூலிகைகள் ஆகும். "பிருங்கராஜ், அஸ்வகந்தா, குடுசி முறையே தமிழில் கரிசாலை, அமுக்கராங்கிழங்கு, சீந்தில் கொடி போன்ற ரசாயன மூலிகைகளின் மகத்துவம் போற்றுவதற்குரியது.

முதுமைத் தோற்றத்தைக் கட்டுப்படுத்தும், இளமையாகவே தோற்றமடையச் செய்யும், இவற்றைக் கிரமமாகச் சேர்த்துக் கொண்டால் உடல் அழகு கூடும். ஓய்ந்து போன திசுக்களைச் சுறுசுறுப்படையச் செய்து சிறப்பாகச் செயல்பட வைக்கும்.

இன்று விற்பனைக்கு வந்துள்ள வாதநோயைக் கட்டுப்படுத்தும் "குக்குலுஸ்டீரால்" எனப்படும் மருந்தின் மூலாதாரம் ஆயூர்வேதமே. இவை மட்டுமல்லாமல் மலேரியாவிற்குச் சிறந்த மருந்தாக வடநாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆயூஷ் - 64 - ஆயுர்வேத மூலிகைகளின் சங்கமமே. இதே போன்ற ஆயுஸ் -56 என்ற மருந்தும் வலிப்பு வியாதிகளுக்கு ஒரு சிறந்த மூலிகை மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது அரைக்கீரையும், ஜடமாஞ்சில் என்ற ஆயுர்வேத மூலிகையும் சேர்ந்த கூட்டுக் கலவையே ஆகும்.

மலட்டுத் தன்மையைப் போக்கும் பல அரிய மூலிகைகள் ஆயுர்வேதத்தில் காணப்படுகின்றன. உதாரணமாக, அஸ்வகந்தா, குமாரி, சுதாவரி, ஆத்ம குப்தா போன்றவை. குடும்பக் கட்டுப்பாட்டுக்கும் ஆயுர்வேத மூலிகைகள் இப்பொழுது ஆய்வுகள் மூலமாக நிருபிக்கப்பட்டுள்ளன. உதாரணம் - ஓரிலை, மருக்காரை, காட்டுத்தக்காளி, கலப்பைக்கிழங்கு விதைகள்.

"கேன்ஸர்" என்ற புற்று நோய் அன்று அதிகமாகக் காணப்படவில்லை. ஏனெனில் தூதுவளை, கண்டங்கத்திரி, சுண்டைக்காய் முதலிய மூலிகைகளை அன்றாட காய்கறிகளாக அவர்கள் பயன்படுத்தி வந்தார்கள். இன்று பல வருடங்கள் சென்ற பிறகு இந்த மூலிகைகளில் உள்ள புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் ரசாயனக் கூறுகளை மேல்நாட்டு விஞ்ஞானிகளும், நம் நாட்டு விஞ்ஞானிகளும் கண்டுபிடித்துள்ளனர்.

சில ஆயுர்வேத மூலிகைகளும் அவற்றில் உள்ள புற்றுநோயை கட்டுப்படுத்தும் ரசாயனக் கூறுகளும் கீழே அட்டவணையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

| மூலிகையின் பெயர்கள் | இரசாயனக் கூறுகள். |
|---|---|
| 1. அலர்க (தூதுவளை) | சோலாமரின் |
| 2. பாரிஜாதம் (பவழமல்லி) | அர்பர் டிரிஸ்டோஸைட் |
| 3. அகரு (அகில்) | லிரியோ டெனின் |
| 4. சித்ரக (கொடிவேலி) | பிளம்பாஜின் |
| 5. சப்தசட (எழிலம்பாலை) | எச்டமின் குளோரைடு |
| 6. ஜாதிபத்திரி | எர்ட்மன்ஸ் காம்பவுண்ட் |
| 7. பூதாங்குச (பேய்மிரட்டி) | ஒவட்டோ டையலைடு அன் ஐஸோமலிக் ஆஸிட். |

இன்னும் நவீன மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத பல நோய்களை ஆயுர்வேதம் குணப்படுத்தி வருகிறது. நவீன மருத்துவத்திற்குக் கட்டுப்படாத "எய்ட்ஸ்" நோயை ஆயுர்வேத மூலிகைகளால் கட்டுப்படுத்த முடியும் என்று எண்ணும் நாள் மிக விரைவில் வரும்.

பூமி ஆம்லகி அல்லது கீழாநெல்லி, கொழிஞ்சில் (சரபுங்கா) போன்ற மூலிகைகள் கல்லீரலைப் பலப்படுத்தும். மண்ணீரல் நோய்களையும் குணப்படுத்தும். குடித்துவிட்டுக் கெட்டுவிட்ட கல்லீரலைக்கூட **(Cirrhosis of Liver)** இது வலுவடைய செய்யும். ஆஸ்துமா நோயை நாய்ப்பாலை, தூதுவளை, ஆடாதோடை, மூக்கரட்டை போன்ற அரிய மூலிகைகளால் குணப்படுத்த முடியும். சாக்கரை வியாதியைக் கட்டுப்படுத்தும் சக்தி "நிஷாம்லகி" என்ற ஆயுர்வேத மருந்திற்கு உள்ளது. என்பதை இன்றைய நவீன ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. விஞ்ஞானிகளும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆய்வுகள் வெற்றிகரமாக நடந்துள்ளன.

ஔவையாருக்கு அதியமான் அளித்த நெல்லிக்கனி சிறந்த கனி மட்டுமல்ல. ஒரு சிறந்த மூலிகையும் கூட, அதன் தன்மைகள் இன்று விஞ்ஞான பூர்வமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளன. இது புற்று நோயைக் கட்டுப்படுத்தும். "டயபடீஸ்" என்ற நீரிழிவு நோய்க்குச் சிறந்த பாதுகாப்பு. இருதயத்திற்குச் சிறந்த போஷாக்கையும் சக்தியையும் அளிக்கும் மருந்து.

"வில்வம்" சிவபெருமானுக்குப் பிரீதமான மூலிகை. அக்கினித் தத்துவம் உள்ளது. இறைவன் தனக்கு இயற்கையால் எந்தத் துன்பமும் நேராமல் இருக்கவும், தன்னை நம்பிவந்தவர்களுக்கு நன்மை விளைவிக்கவுமே இதை உகந்துள்ளான். குளிராலும், சீதலத்தாலும் தோன்றும் துன்பங்களைப் போக்கவல்லது.

வில்வ இலை இலக்குமிக்கும் உரியதாகும். வில்வரசாயனம் உடலுக்கு மிக்க வலிமையையும், நீண்ட ஆயுளையும் தந்து நரை மூப்பு ஆகியவை அணுகாமல் தடுக்கும். நாள்தோறும் காலையில் குளித்து, தெய்வத்தை வணங்கி வில்வவேர் பட்டையின் தூளை வில்வவேர் கஷாயத்தில் கலந்து பாலுடன் உட்கொண்டு வந்தால் நோயின்றிப் பல ஆண்டுகள் வாழலாம்.

அர்ஜுனப்பட்டை இருதய நோய், இருதயப் படபடப்பு முதலியவற்றைக் குணப்படுத்தும். இதிலிருந்து தயாரிக்கப்பட்ட "அர்ஜுனாரிஷ்டம்" இதயத்தைப் போஷாக்கடையச் செய்வதில் தன்னிகரற்று விளங்குகின்றது. தமிழில் வெள்ளை மருந்து என்று அழைக்கப்படுகிறது.

ஆயுர்வேதத்தில் இன்னும் ஒரு சிறப்பு அம்சமும் உள்ளது. இதில் காணப்படும் மூலிகைகளைத் தெய்வீக மூலிகைகள் என்று கூறலாம்.

உதாரணம் - துளசி, வில்வம், அருகம்புல், மஞ்சள், அரசு, ஆல் முதலியன. "ஜின்செங்" என்று உலகமெல்லாம் ஒப்புக் கொள்ளப்பட்ட, இளமை பெறச் செய்யும், எல்லா மூலிகைகளைவிட ஒரு சிறந்த மூலிகை. எந்த நோய்களையும் எதிர்க்கும் சக்தியும் கொண்ட மூலிகை. நம் தென்னாட்டில் காணப்படும் ஆயுர்வேத மூலிகை "குடூசி" என்ற சீந்தில் கொடியாகும். இது பொதுவாக நோய் தடுப்பாற்றலை உடலமைப்புக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கும், **(Immdunomodulator)** என்பதை இன்றைய விஞ்ஞானிகளும் ஆதாரபூர்வமான பரிசோதனைகளின் மூலம் நிரூபித்துள்ளனர்.

"வெட்டுக்காயத்தழை" வெட்டுக் காயத்தை ஆற்றவும் பெருகிவரும் இரத்தத்தைக் கட்டுப்படுத்தவும் உபயோகப்படும் ஓர் இலையாகும். இதில் வைட்டமின் **'K'** உள்ளது. இதை இன்றைய விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

வாத நோய்களைக் குணப்படுத்துவதில் இந்திரவல்லி (முடக்கத்தான்), பலா (சிற்றாமுட்டி) போன்ற ஆயுர்வேத மூலிகைகளுக்கு ஈடு இணையாகச் சொல்லக்கூடிய மூலிகைகளோ, மருத்துவ முறைகளோ இல்லை. "கற்பூரவல்லி" குழந்தைகளின் கபத்தையும், சுரத்தையும் கட்டுப்படுத்துவதுடன் இரத்த அழுத்த நோயைக் கட்டுப்படுத்தும் ஒரு இரசாயனக் கூற்றினையும் கொண்டுள்ளது என்பது இன்றைய ஆய்வுகளால் நிலை நாட்டப்பட்ட ஒரு அரிய விஷயமாகும். நோய்களை எல்லாம் அறுக்கும் புல் அறுகம்புல். துளசி எல்லாவித் பக்டீரியா நோய்களையும் அழகாக கட்டுப்படுத்தும்.

கலப்பைக் கிழங்கினைப் பொடித்து நீர் விட்டரைத்துத் தொப்புள், உள்ளங்கை, உள்ளங்கால் இவ்விடங்களில் பூச பிள்ளைப் பேற்றைத் தீவிரமாக்கும்.

"நிலாவாரை" (சுவர்ண மாஸிக) என்று சொல்லப்படும் பெருஞ்செடி வகையின் இலை சிறந்த மலமிளக்கியாகவும், பூச்சிக்கொல்லியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

ஆயுர்வேத மருத்துவத்தில் பத்து வேர்கள் மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டு வருகின்றன. அவை "தசமூலம்". இவை நரம்புத் தளர்ச்சியைப் போக்கும் ஒரு சிறந்த டானிக் ஆகும். பசியைத் தூண்டும், வாயு உபத்திரவங்களைச் சீர் செய்யும்.

அவையாவன - சிறுதேக்கு, குமிழம், மூவிலை, ஓரிலை, வில்வம், பெருவாகை, பாதிரி, முள்கத்திரி, நெருஞ்சில், கண்டங்கத்திரி.

ஹரிதகி, பிபிதகி, ஆம்பகி என்பது "திரிபலா" என்று சொல்லப்படும் ஒரு சிறந்த ஆயுர்வேத மருந்தாகும். இவை நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் ஆகியவற்றின் பொடிகளால் தயாரிக்கப்படும் ஒரு சூர்ணமாகும் இது உடல் நலத்திற்கு மிகச் சிறந்தது.

சுக்கு, மிளகு, திப்பிலி எனப்படும் "த்ரிகடு" வும் உடலிலுள்ள வாயு தொந்தரவுகளைப் போக்கி, பசியைத் தூண்டி நல்ல மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு "தசமூலம், த்ரிபலா, த்ரிகடு" முதலியவை ஆயுர்வேதத்தின் சிறப்பு அம்சங்கள்.

இங்ஙனம் அற்புத மூலிகைகளையும் சிறப்பு அம்சங்களையும் கொண்ட ஆயுர்வேத மருத்துவத்திற்குத் தரநிர்ணயம் இன்றியமையாத ஒன்று. ஆயுர்வேத மருந்துகள் சரியாகச் செயல்படவில்லை என்றால் அவை தயாரிக்கும் முறைகள் தரக் குறைவானதாகவும், வியாபாரக் கண்ணோக்குக் கொண்டதாகவும் இருந்திருக்க வேண்டும். அதில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள மூலிகைகள் தவறானவைகளாக இருந்திருக்க வேண்டும்.

சிறந்த தரமுள்ள மூலிகைகளால் சரியான முறைப்படி தயாரிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்துகளை உபயோகப்படுத்துவதால் எல்லாவித வியாதிகளையும் குணப்படுத்த முடியும் எனலாம்.

பண்டைய காலத்தில் தரநிர்ணயம் தேவையிருந்திருக்கவில்லை. ஏனெனில் ஆயுர்வேத மகான்கள் மூலிகைகளுடன் ஒன்றி வாழ்ந்தார்கள். " கிழக்கே போ, பின்பு சிறிது தூரம் மேற்கே செல் - பிறகு வலப்புறம் திரும்பு - உனக்கு இந்த மூலிகை கிடைக்கும். அதற்கு இந்த பயன்" என்று அறிந்து பாடலாக ஆக்கியிருந்தார்கள் அந்தப் பெருமக்கள். அவர்களிடம் எந்தவித வியாபார நோக்கும் இருந்ததில்லை. நோய்களைக் குணப்படுத்துவதொன்றே அவர்களின் குறிக்கோளாக இருந்தது.

ஆயுர்வேத மருத்துவம் வளரவேண்டும். மக்களிடையே அதன் செல்வாக்கு ஓங்கி வளரவேண்டும். உலகிலுள்ள விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்ளும் வகையில் அவற்றைக் கொண்டுவர வேண்டும்.

ஆயுர்வேத மருத்துவ விற்பன்னர்கள் தாவரவியல் நிபுணர்களையும் கலந்து ஆலோசித்து, தரநிர்ணயக் கட்டுப்பாட்டு முறைகளை அமலுக்குக் கொண்டு வரவேண்டும். தரமுள்ள ஆயுர்வேத மருந்துகள் வெளிவரவேண்டும்.'

ஆயுர்வேத மருத்துவத்தின் தன்மையையும் தரத்தையும் நவீன மருத்துவர்களும் அனைத்துநாட்டு விஞ்ஞானிகளும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு மொழி உண்டு என்றால் அது "விஞ்ஞான மொழிதான்" உதாரணமாக நாம் துளசியையே எடுத்துக் கொள்வோம்.

கருந்துளசி, கிருஷ்ணதுளசி, துளசி என்று பல பெயர்கள் வழக்கில் உள்ளன. எதை உபயோகிப்பது என்று சந்தேகம் வரும், குழப்பம் வரும். ஆஸிமம் ஸாங்டம் **(Ocimum Sanctum)** என்றால் எல்லோரும் ஒரேவிதத் துளசியைத் தான் உபயோகப்படுத்துவார்கள். இல்லையென்றால் ஆஸிமத்தில் உள்ள பல வகைகள் **(Species)** உபயோகப்படுத்தப்படலாம். சில சமயம் எதிர்பார்த்த மருத்துவப் பயன்கள் கிடைக்காமல் போய்விடும். இது மட்டுமல்லாமல் உலகில் எல்லாப் பகுதிகளிலும் உள்ளவர்கள் இந்தச் செடியின் பயனை உணர்வார்கள்.

சம்ஸ்கிருதம் சிறந்தமொழி, அமுதமொழிதான். ஆனால் உலகளவில் ஆயுர்வேத மருத்துவத்தின் பெருமை பரவ வேண்டுமானால் அந்நிய நாட்டினரும் அறியக்கூடிய ஒரு மொழியில் அதன் சிறப்புக்கள் சொல்லப்பட வேண்டும். நம் ஆயுர்வேத மருத்துவம் இந்தியாவைவிட்டு வெளியேறி உலக அளவில் ஒரு நிலையான இடத்தை, ஒரு சிறந்த இடத்தை அடைய விஞ்ஞான ரீதியாகச் செயல்படவேண்டும். வேறு எந்த மருத்துவத்திலும் நம் ஆயுர்வேத மருத்துவத்தில் காணப்படும் சிறப்பு அம்சங்களும் சிறந்த மூலிகைகளும் கிடையாது. ஆயுர்வேதத்தின் சிறப்பை முதலில் நாம் அறியவேண்டும். பின்னர் பலரும் அறியும் மொழியில் வெளிப்படுத்த வேண்டும்.

இன்று உலகையே அதிரவைக்கும் "எய்ட்ஸ்" நோயைக் குணப்படுத்தும் சக்தி நம் மூலிகைகளில் தான் உள்ளது, என்பதைப் பல விஞ்ஞானிகளும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். இந்த மூலிகைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் உலகின் பல இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

நம் நாட்டு, ஆயுர்வேத மூலிகைகள் நமக்கு மட்டும் பயன்தராமல் எல்லாருக்கும் அதன் பயன்களும் சிறப்புகளும் அறிவிக்கப்படவேண்டும். கி. பி. 2000 இல் எல்லாரும் நலமுடன் வாழும் திட்டத்தில் **(Health for all by 2000 A. D)** ஆயுர்வேத மருத்துவம் ஒரு சிறப்பு அம்சமாகும்படி செய்வது நமது கடமை.

**நன்றி: கலைமகள் தீபாவளி மலர் 1995.**

காலை இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய் மண்டலம் உண்டிடில்
கோலை ஊன்றிக் குனிந்து திரிந்தவர்
வாலைக் குமரராய் வழிநடப் பாரே.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

**திருமூலர்.**

உ

# சுவையியல்

ஞானசிரோமணி

பண்டிதர். **இ. வடிவேல்**

## முதுதமிழ்க் கலை:-

சங்கத் தமிழ் மூன்று. அவை இயல், இசை, நாடகம் எனப் பகுக்கப்பட்டுப் பயின்று வருகின்றது. புத்தகத்துள் உறை மாதே! வித்தகப் பெண்பிள்ளாய்! என்று கலைவாணியை விளித்து குரு புலவர் "முத்தமிழ்க் கல்விகளெல்லாம் முழுதுமெனக்கருள்வாய்" என்று வேண்டுகிறார்.

முத்தமிழிலும் முன் வைக்கப்பட்டிருப்பது இயற்தமிழ். அவற்றுள் இலக்கிய இலக்கணங்கள், சாஸ்திரங்கள், தோத்திரங்கள், இதிகாசங்கள் புராணங்கள் யாவும் அடங்கியிருக்கின்றன. இவற்றுடன் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என்பனவும் சங்கத்தமிழ் மூன்றினுள் அடக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் என்ற பதம் 'கலை என்னும் பொருள்படப் பயின்று வருவதால் கலைகள் யாவும் சுவைத்து அனுபவிக்கப்பட வேண்டியனவாகின்றன.

எந்தக் கலையை எடுத்துக்கொண்டாலும் அதிலுள்ள சுவைகளை அனுபவிப்பதற்கு அடிப்படையாக இரண்டு களங்கள் அமைய வேண்டியது இன்றியமையாததாகின்றது.

அதனை "இருவகை நிலத்தில் இயல்வது கலையே" என்று விளக்கம் தருகிறார் இளம்பூரணர். இரண்டு களம் என்று கூறப்பட்டதை இருவகை நிலம் என்று சுட்டிக் கூறுகிறார் இளம்பூரணர். உய்ப்போன் - காண்போன் என்பன இருவகை நிலம் என்பதும், உய்ப்போன் செய்வது காண்போர்க்கு எய்தும் என்பது உரையாசிரியர் இளம்பூரணர் கருத்து.

"கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

என்பது வள்ளுவம். ஐம்புலன்களின் நுகர்ச்சியால் காதலன் காதலியிடமும் காதலி காதலனிடமும் அனுபவிப்பன யாவும் சுவை எனப்படும்.

சுவை என்பதனை வடநூலார் ரசம் என்பர். ரசானுபவம் பிரம்மானுபவத்துக்கு இட்டுச்செல்லும் என்பதனை உணர்ந்த ஞானியர்கள், சான்றோர்கள் உலோகாயத இன்பங்களை மாத்திரமல்ல தெய்வீக இன்பத்தையும் அனுபவிப்பதற்கு ரசானுபவம் இன்றியமையாததாகும் என்பர்.

## தொல்காப்பியர் கூற்று:-

ரசம் என்பது சுவை என்று தமிழில் கூறப்படுகிறது. தமிழ் இலக்கியமாகவும், இலக்கணமாகவும் சான்றோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொல்காப்பியம் எண்வகைச் சுவைகளை விளக்கிக் கூறுகின்றது.

"நகையே அழுகை இழிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பாலெட்டே மெய்ப்பாடென்ப"

என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

மெய்ப்பாடுகள் சுவையை உணர்த்தும் குறிகள் என்பதால் சுவைகளையும் மெய்ப்பாடுகளையும் ஒன்றாக இணைத்துக் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

மனித உணர்வில் மிளிரும் முப்பத்திரண்டு வகையான சுவைகளை பதினாறு வகைக்குள் பாகுபடுத்திப் பின்னர் அதனையும் எட்டு வகைப்படுத்தி நகை, அழுகை, இழிவரல் மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனக் கூறுகின்றது தொல்காப்பியம்.

சுவை எனப்படும் ரசம் எட்டுவகை மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. மெய்ப்பாடுகள் சுவையை உணர்த்தும் குறிகள் என்று முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

"மெய்தானரும்பி விதிர் விதிர்த்துன் விரையார் கழற்கே
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி, வெதும்பி"

என்ற மாணிக்கவாசகர் திருவாசகத்தில் கூறும் மெய்ப்பாடுகளை பக்திச் சுவை பற்றிய மெய்ப்பாடுகள் என்று கொள்ளலாம். சாந்தம் அல்லது நடுவுநிலைச் சுவையை ஏனைய சுவைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டியுள்ளார் தொல்காப்பியர்.

## ஒன்பான் சுவை:-

திரு. வி. எச். சுப்பிரமணிய சாஸ்த்திரி அவர்கள் "நவரசங்கள்" என்ற நூலில் ரசங்களின் மலர்ச்சியைச் சிருங்காரம், ஹாஸ்யம், கருணம், ரௌத்திரம், வீரம், பயாநகம், பீபத்சம், அற்புதம், சாந்தம் என்று ஒன்பது சுவைகளைக் குறிப்பிடுகிறார். சாந்தம் என்பது தான் பக்திச்சுவை எனப்படும் ஒன்பதாவது சுவை. சமயங்கள் கூறும் தெய்வீக முத்தியின்பத்துக்கு ரசானுபவம் ஒருவனை நெறிப்படுத்துமென்று சுவை அம்சங்கள் பற்றிய பரிணாம வளர்ச்சியை ஆய்வு செய்த கலாஞானிகளும், கல்வியாளர்களும், விமரிசகர்களும், ரசிகர்களும் கூறுகின்றார்கள்.

திரு. வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரிகள் கூறும் ஒன்பான் சுவைகளை நோக்குவோம்.

1. சிருங்காரம் - உவகைச் சுவை
2. கருணம் - அழுகைச் சுவை
3. வீரம் - பெருமிதச் சுவை

4. ரௌத்திரம் - வெகுளிச் சுவை
5. ஹாஸ்யம் - நகைச் சுவை
6. பயானகம் - அச்சச் சுவை
7. பீபத்சம் - இழிவரல் சுவை
8. அற்புதம் - மருட்கைச் சுவை
9. சாந்தம் - நடுநிலைச் சுவை

இவற்றுள் சாந்தம் உலகியற் பற்றுகளை விட்டு நீங்கிய மகரிஷிகளின் அனுபவம் ஆதலின் அதனை விலக்கி ஏனைய எட்டினையுமே தொல்காப்பியனார் எட்டுச் சுவைகளாகக் கூறியுள்ளார்.

**சான்றோர் கூற்று:-**

நாட்டிய சாஸ்திரம் என்ற நூலை எழுதியுள்ள பரதர் "பாவமின்றேல் ரசமில்லை, ரசமின்றேல் பொருளில்லை" என்று கூறுகிறார். "சுவை அனுபவம் என்பது சாதாரண மனிதனின் உணர்ச்சிகளின் திருப்தியினாலோ அல்லது மனநிறைவினாலோ ஏற்படுவதல்ல. ஆழ்நிலைத் தியானத்தால் ஏற்படும் பொதுமைப்படுத்தப்பட்ட உணர்ச்சிகளை அனுபவிப்பதன் மூலம் ஏற்படுவது" என்று அபிநவகுப்தர் தான் எழுதிய 'அபிநவபாரதி' என்ற நூலில் இக்கருத்தைக் குறிப்பிடுகிறார். அழகியல் அனுபவம் ஆன்மீக அனுபவத்தோடு கூடிப் பிறந்ததென்று அவர் தெளிவாகக் கூறுகிறார்.

"சாகித்திய தர்ப்பணம்' என்ற நூலை எழுதிய விஸ்வநாததத்தர் அழகியல் அனுபவம் ஆன்மீக அனுபவம் போன்று சுயநலமற்றது. விருப்பு வெறுப்பற்ற உயா்ந்த அனுபவமே என்பது அவருடைய கருத்து.

மேலே கூறப்பட்ட கருத்துக்கள் யாவும் அழகியற் கலைஞர்களால் கலைப்பயன், கலாரசனை, அனுபவங்கள் பற்றி முன்வைக்கப்பட்ட எண்ணக் கருத்துக்கள். எந்த ஒரு கலைப்படைப்பை ரசிக்கும் போதும் மனிதனது உள்ளத்து உணர்ச்சிகள் தூண்டப்பட்டு அவற்றை அனுபவிக்கும் மகிழ்ச்சி நிலையே ரசானுபவம். சிற்பக்கலை, நாட்டியக்கலை, நாடகக்கலை, இசைக்கலை போன்ற கலைகள் உள்ளத்து உணர்ச்சியைத் தூண்டி சுவையை அனுபவிக்கச் செய்கிறது.

**சுவை இயல்பு:-**

சுவையின் இயல்பினையும் அது உண்டாகும் முறையினையும், அதன் வகைகளையும் நோக்குவோம். மக்களின் உள்ளத்தில் ஒரொருகால் எழுகின்ற உள வேறுபாடு பாவம் எனப்படும். பாவம் என்பது இயல்புணர்ச்சி என்பதை உணர்த்தும் சொல். பாவங்களில் சில நிலைபெற்றிருக்கும். பல சிறிதுநேரம் நின்று மறையும். தனக்கு ஒற்றுமையுடையனவும், வேற்றுமை உடையனவுமாகிய பிற பாவங்களால் கேடுறாமல் ரசமாகிப் பக்குவமடையுமளவு நிலைபேறுடைய பாவமே ஸ்தாயிபாவம் எனப்படும்.

| | |
|---|---|
| சிருங்காரத்துக்கு | ஸ்தாயிபாவம் காதல் |
| கருணத்துக்கு | ஸ்தாயிபாவம் சோகம் |
| வீரத்துக்கு | ஸ்தாயிபாவம் தைரியம் |
| ரௌத்திரத்துக்கு | ஸ்தாயிபாவம் குரோதம் |
| ஹாசியத்துக்கு | ஸ்தாயிபாவம் நகை |
| பயானகத்துக்கு | ஸ்தாயிபாவம் பயம் |
| பீபத்ஸத்துக்கு | ஸ்தாயிபாவம் அருவருப்பு |
| அற்புதத்துக்கு | ஸ்தாயிபாவம் ஆச்சரியம் |
| சாந்தத்துக்கு | ஸ்தாயிபாவம் விரக்தி |

இந்த நிலைபெற்ற பாவங்களே சுவை எனப்படும். பாவம் என்ற சொல் பாவனை என்று திரிபுபட்டு இக்காலத்தில் வழங்கி வருகின்றது. ஆலயங்களில் நடைபெறும் பூஜைகள் யாகங்கள் ஹோமங்கள் முதலிய கிரியைகளில் காண்பிக்கப்படும் முத்திரைகளைப் பாவனை என்று கூறுவர். நாடகத்தில் நடிக்கும் நடிகனின் சாதனைகளைப் பாவனைகள் என்கிறார்கள்.

நாட்டிய நடிகையின் முத்திரைகள், அங்க அசைவுகள் கண்ணோட்டங்கள் என்பன பாவங்களாக அமைகின்றன. நாட்டிய நாடகம், நாட்டுக் கூத்து, கிராமிய நடனம், கும்மி, கோலாட்டம், வில்லுப்பாட்டு, உடுக்குப் பாட்டு இவை போன்ற நிகழ்ச்சிகளில் காண்பிக்கப்படும் பாவங்கள் அல்லது பாவனைகள் சுவை உணர்ச்சியைத் தூண்டுவன.

"உய்வோன் செய்வது காண்போர்க்கு எய்துதல் சுவை" எனப்படுமென்று முன்னர் கூறியதை இங்கு நினைவுபடுத்த விழைகிறேன்.

## சுவைத்தல்:-

நிலைபேறுடைய ஸ்தாயி பாவங்கள் காதல் முதலாக ஒன்பது வகைப்படும். உலகியலில் உண்டாகும் காதல் முதலியவற்றுக்கு காரணமாயும் காரியமாயும் துணைக் காரணமாயும் இருப்பவைகள் கவின்கலைகள், கவிதைகள், நடிகனின் சாதனைகள் நாட்டிய நடிகையின் முத்திரைகள் இவை போல்வனவும் இயற்கை ஏதுக்களுமாகும். இவற்றால் மக்களது உள்ளத்தில் உதிக்கும் பிரதிபிம்பமே சுவை எனப்படும்.

தூய வெண்ணிறத்தனவாகிய சூரியனின் கதிர்கள் செந்நிறக் கண்ணாடியில் விழும்போது அவற்றுக்கு செந்நிறம் உண்டாதல் போன்று ஸ்தாயி பாவங்கள் காதல், சோகம், தைரியம், குரோதம், நகை, பயம், அருவருப்பு, ஆச்சரியம், விரக்தி என்பவற்றால் ஒன்பது சுவைகளும் பிறக்கின்றன. சுவைஞ்ஞன் இந்த ஒன்பது சுவைகளையும் மீண்டும் மீண்டும் நினைக்கும் செயலுக்கு சுவைத்தல் என்று பொருள். அவ்வாறு சுவைக்கும் நிலையில் கரும்பின் துண்டிலிருந்து இனிப்புச் சுவை உண்டாதல் போன்று ஸ்தாயி பாவங்கள் முதலியவற்றிலிருந்து சிருங்காரம் முதலிய சுவைகள் தோன்றும்.

புவியியல், விஞ்ஞானவியல், கணக்கியல், பொருளியல், தாவரவியல் முதலிய இயல்கள் போன்றது சுவையியல்.

உ

# கலாசாரம் ஒரு இனத்தின் உயிர்நாடி

## அன்புமணி

### 1. அறிமுகம்:

அண்மைக்காலமாக, கலாசாரம் என்ற சொல் முக்கியத்துவம் பெற்று வருகிறது. குறைந்தபட்சம் பேச்சளவிலாவது கலாசாரம் பற்றிய பிரக்ஞை நம் இளைஞர்களுக்கு ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

உண்மையில் கலாசாரம் என்றால் என்ன?

அதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். கலாசாரம் என்பது கலை சம்பந்தப்பட்ட விஷயமா? அல்லது ஆசாரம் சம்பந்தப்பட்ட விஷயமா?

கலாசாரம் என்பது ஒரு இனத்தின் ஜீவன். அல்லது ஆன்மா எனலாம். ஒரு இனத்தின் போக்குகள் மனித விழுமிய மதிப்பீடுகள், பாரம்பரிய பழக்க வழக்கங்கள் என்பன அந்த ஜீவனின் மறைமுக வெளிப்பாடுகள் அல்லது உயிர்மூச்சு எனலாம்.

நமது நாட்டில் கற்பு என்றால் மிக உயர்ந்த மனித விழுமியம். இது நமது கலாசாரம். ஆனால் மேலை நாடுகளில் அப்படி இல்லை. நமது நாட்டில் கணவன் - மனைவி உறவு குடும்ப பாசம் என்பதெல்லாம் மிக உன்னதமான விழுமியங்கள். இது நமது கலாசாரம். ஆனால் மேலை நாடுகளில் அப்படியில்லை.

இவ்வாறே ஒவ்வொரு இனத்துக்கும், ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் கலாசாரம் வேறுபடுகிறது. கலாசார உணர்வுகள் வேறுபடுகின்றன. கலாசார விழுமியங்கள் வேறுபடுகின்றன. இதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

### 2. கலாசார வெளிப்பாடுகள்:

பல்வேறு பிரதிபலிப்புகளில் கலாசாரம் வெளிப்படுகிறது. அவற்றுள் முக்கியமானவை:-

| | | | |
|---|---|---|---|
| அ. | பாரம்பரிய வழக்காறுகள் | ஆ. | சமூகப் பழக்க வழக்கங்கள் |
| இ. | சம்பிரதாயங்கள் | ஈ. | கலைகள் |
| உ. | இலக்கிய மரபுகள் | ஊ. | மொழி, பேச்சு |
| எ. | உணவுப் பழக்கங்கள் | ஏ. | உடைகள் |
| ஐ. | சமய அனுஷ்டானங்கள் | | |

இவை ஒவ்வொன்றைப் பற்றியும் தனித்தனியாகப் பார்ப்போம்.

### அ. பாரம்பரிய வழக்காறுகள்:

இவை ஒரு சமூகத்தில் நன்கு வேரோடி விட்டன. ஆனால் தலைமுறையாகத் தொடர்ந்து வருபவை. இவை இலகுவில் மாற்றம் அடைவதில்லை. குடும்ப உறவுகள், இனத்தவர் உறவுகள், ஆசிரிய - மாணவ உறவுகள், பெண்ணின் கற்பு நிலை ஒருவருக்கு ஒருத்தி என்னும் நிலைப்பாடு, மேலைத்தேய வழக்காறுகளிலிருந்து நம்மை இனம் பிரித்துக் காட்டுகின்றன. அவை நமது ஒழுக்க விழுமியங்களாகவும் கொள்ளப்படுகின்றன.

### ஆ. திருமணச் சடங்குகள்:

குழந்தைப் பிறப்புச் சடங்குகள், பெண் பூப்பெய்தல் சடங்குகள், திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள் போன்றவை மட்டக்களப்புப் பிரதேசத்தில் தனித்துவமாக உள்ளன.

### இ. சம்பிரதாயங்கள்:

கிராமப்புறத்தில் இவை அதிகமாகக் காணப்படும். சோதிட நம்பிக்கை, சகுனம் பார்த்தல், சாதகம் எழுதுதல், மங்கல, அமங்கல நிகழ்ச்சிகள் போன்று எண்ணற்ற சம்பிரதாயங்கள் நம்மத்தியில் உள்ளன.

### ஈ. கலைகள்:

கூத்து, கிராமியக் கலைகள் முதலியன இதில் அடங்கும். இவற்றின் தனித்துவத்தைப் பேண வேண்டியது மிகவும் அவசியமாகும்.

### உ. இலக்கிய மரபுகள்:

நமது பாரம்பரிய இலக்கியங்கள் நமது கலாசார வெளிப்பாடாகவே அமைகின்றன. இலக்கியங்கள் நமது கலாசாரத்தின் குறியீடாகவும் அமைகின்றன. பிறமொழி இலக்கியங்களோடு ஒப்பிட்டு நாம் நமது இலக்கியத்தின் தனித்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

### ஊ. மொழி, பேச்சு:

இவை நமது கலாசார வெளிப்பாடாக மட்டுமல்லாது பாரம்பரிய வரலாற்றுப் பதிவாகவும் அமைகின்றது. பிறமொழிக் கலப்பினால் நமது மொழி மாசடைந்து, மாற்றமடைவதை நாம் உணரவேண்டும்.

### எ. உணவுப் பழக்கங்கள்:

ஒவ்வொரு நாட்டுக்கும் வெவ்வேறாக உணவுப் பழக்கங்கள் அமைவதைப் பார்க்கிறோம். அந்நிய மோகம் அதையும் மாற்றி விடுகிறது.

### ஏ. உடைகள்:

இதுவும் இனத்துக்கினம் வேறுபடுவதை நாம் அறிவோம். ஆனால் தமிழர்களாகிய நாம், ஆங்கில, பஞ்சாபி உடைகளில் மோகம் கொண்டுள்ளோம்.

### ஐ. சமய அனுஷ்டானங்கள்:

வெவ்வேறு சமய அனுஷ்டானங்கள் நாம் அறிந்தவை. இவையும் வெவ்வேறு இனங்களின் பண்பாடுகளை வெளிப்படுத்துகின்றன.

### 3. கலாசாரம் பற்றிய தெளிவு:

காலமாற்றம், நாகரிகமாற்றம் என்பவை மிக எளிதாக இளைஞர் சமுதாயங்களை பலி கொண்டு விடுகின்றன. இதில் யுவதிகள் முன்னணி வகிக்கின்றனர். ஹிப்பி நாகரிகம், மைக்கேல் ஜாக்சன், பேயாட்டம், பிரேக் டான்ஸ், பிரபு தேவாவின் குரங்காட்டம், பஞ்சாபி ரெஸ், அரைகுறை உடை முதலியன இளைய தலைமுறையினரைப் பலி கொள்ளும் அதேவேளை - கலாசாரம் பற்றிய தெளிவு உள்ளவர்கள் இவைகளால்

பாதிக்கப்படாது, தமது உடை, இசை, நடனம் முதலியவற்றைத் தீவிரமாகப் பின்பற்றி வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

அவ்வாறு நமது கலாசாரத்தைப் பேணுபவர்களை நமது இளைய தலைமுறையினர் கேலி செய்வதும், நக்கல் செய்வதும் வருந்தத்தக்கது. இளைஞர்கள் கலாசாரத் தெளிவு பெற வேண்டும்.

இலங்கையின் பூர்வ குடிகளான வேடர்களுக்கு ஒரு கலாசாரம் உண்டு. இடுப்பில் அரைத்துண்டு. அதில் ஒரு கண்டக்கோடரி, பரட்டைத்தலை, வெற்றுடம்பு, வில், அம்பு என்பன கலாசாரத்தைப் பிரதிபலிப்பன. அவர்கள் கொழும்பு நகருக்கு விமானத்தில் வந்த போதுகூட தங்கள் தோற்றத்தை மாற்றிக் கொள்ளவில்லை. அது அவர்கள் சுயம். அது அவர்கள் பலம்.

இவ்வாறே ஆங்கிலேயர்கள், தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் தத்தமது சுயத்தைப் பேணுவது கலாசாரம் ஆகும். ஒருவர் இன்னொருவரைப் பார்த்துக் கொப்பியடித்தால் அது அனாசாரம், பொதுவாக மேல் நாட்டவர்கள் நம்மைப் பார்த்துக் கொப்பியடிப்பதில்லை. ஆனால் நாம் அவர்களைப் பார்த்துக் கொப்பியடிக்கின்றோம். அதைப் பெருமையாகவும் கொள்கிறோம். இந்த நிலை எவ்வாறு ஏற்பட்டது. அது பற்றிச் சிந்திப்போம்.

## 4. அந்நியர் ஆட்சி:

நமது நாடு நீண்டகாலம் அந்நியர் ஆட்சியிலிருந்தது. நமது நாடு மட்டுமல்ல, பாக்கிஸ்தான், மலேசியா முதலிய கீழைத்தேய நாடுகள் பலவும் ஒரு காலத்தில் அந்நிய ஆட்சியிலிருந்தன. அவர்கள் மொழி இங்கு ஆதிக்கம் செலுத்தியது. அவர்கள் அதிகாரம் நம்மை அடக்கி வைத்திருந்தது.

இந்தக் காரணங்களால் நமது கலாசாரத்தை நம்மால் பேண முடியவில்லை. அந்நிய மொழியைக் கற்க வேண்டியிருந்தது. அந்நிய உடையை அணிய வேண்டியிருந்தது. அந்நிய நடை உடை பாவனைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அந்நிய சிந்தனைகள் நம்மை மூழ்கடித்தன.

இந்த நிலையில் மிக இலகுவாக நாம் அந்நிய கலாசாரத்திற்கு அடிமையாகிப் போனோம்.

இவ்வாறு அடிமையாகிப் போனதற்குக் காரணம் அந்நியரின் ஆதிக்கம் மட்டும் தான் என்று கூறிவிட முடியாது. நமது பலவீனம், நமது கலாசாரத்தின் ,மகிமையை நாம் சரியான படி உணராமல் போனது என்பனவும் இத்தகைய ஓர் இழிநிலைக்கு காரணம் என்பதை நாம் மறக்க முடியாது.

ஒரு வேடனுக்குத் தனது கலாசாரத்திலிருந்த பற்று. ஒரு செவ்விந்தியனுக்கு தனது கலாசாரத்திலிருந்த பற்று, நமக்கு இருந்திருந்தால் நாம் நமது கலாசாரத்தை கறைபட்டுப் போக விட்டிருக்க மாட்டோம்.

உ

# தேசிய நடனமா? தேசிய நாடகமா?

கந்தையா ஸ்ரீகணேசன்
(ஆங்கில விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகம்)

தமிழில் நாடகம் வளரவில்லை என்கின்ற கருத்து பேராசிரியர் கா. சிவத்தம்பி மற்றும் இந்திய விமர்சகர் வெங்கடசாமிநாதன் ஆகியோரால் முன் வைக்கப்பட்டுள்ளது. மறுபுறத்தில் ஈழத்து நாடக இயக்கம் ஒரு வீச்சான திசையில் முன்னேறி வருவது யாவரும் அறிந்ததே.

## நவீன மரபுகள்

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து ஈழத்து நாடகத்தை நவீன திசையில் இட்டுச் சென்றவர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தென்னிந்திய நாடகக் கலைஞர் பம்பல் சம்பந்த முதலியாரைக் குருவாகக் கொண்டு தனது நாடக இயக்கத்தை வளர்த்தெடுத்தார். வடமொழி புராண இதிகாச நாடகங்களையும் மேற்கத்தேய நாடகங்களையும் விக்டோறியன் மரபு அரங்கில் நாடகங்களை தமிழில் படைத்தார்.

## மக்கள் அரசியல் பேசிய நாடகங்கள்

பேராசிரியர் கணபதிப்பிள்ளை 1930களில் இருந்து பேச்சு மொழியில் அமைந்த இயற்பண்பு வாத நாடகங்களை தமிழுக்கு அளித்தார். சமகால பாத்திரங்களை நாடக உலகில் கொண்டு வந்தார். தமிழர் அரசியலையும் அவரது நாடகங்கள் பேசின.

1960களில் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கூத்து புனரமைப்பு தமிழ் நாடக உலகத்திற்கு செறிவான மூலங்களை வழங்கியது. இதிலிருந்து புறப்பட்ட கூத்து வடிவம் நவீன உள்ளடக்கங்களை உள்வாங்கி நாடகங்களை உருவாக்கியது. அறுபதுகளின் இறுதியில் வெளியான மௌன குருவின் "சங்காரம்" இளைய பத்மநாதனின் "ஏகலைவன்" என். கே. ரகுநாதனின் "கந்தன்கருணை" இந்த வகையில் கூத்து வடிவத்துள் நவீன உள்ளடக்கத்தை உள்வாங்கியவை.

## தேசிய நாடக வடிவம்

பல்வேறு கூத்து அம்சங்களையும் உள்ளடக்கி தமிழ் நாடகங்களைத் தயாரிக்கும் பண்பு அ. சி. தாஸிசியசினால் மேற்கொள்ளப்பட்டது. அவரது நெறியாள்கையில் உருவான "கந்தன் கருணை"யும் அவரது எழுத்திலும் நெறியாள்கையிலும் உருவான "பொறுத்தது போதும்" என்பன ஈழத்தமிழர் வாழ்வின் அரசியலை பேசும் தேசிய ஈழத்து மண்வாசனை வீசும் நாடகங்களாயின. இவை பல்வேறு கூத்தின் மூலங்களை பாடல்களை. ஆட்டங்களையும் நடிப்பு முறைகளையும் நவீன தமிழ் நாடகத்திற்கு பயன்படுத்த உதவின. முருகையனின் "கடூழியம்" மகாகவியின் கோடை, புதியதொரு வீடு ஈழத்துக்கே உரிய வடிவங்களாயின.

இந்த வகையான மோடியில் சமகால மக்களின் பிரச்சனைகளையும் பேசுவது ஈழத்தமிழரின் தேசிய நாடக வடிவமாகும் எனக் கருதப்பட்டது. ஆனால் ஈழத்தமிழ் நாடக வரலாறு அவ்வாறான ஓர் நேர்கோட்டுத் திசையில் செல்லவில்லை என்பது யாவரும் அறிந்ததே. 1980களின் நடுப்பகுதியில் ஈழத்தமிழர் பிரச்சனையைப் பேசிய "மண் சுமந்த மேனியர்" (குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எழுத்திலும் சிதம்பரநாதனின் நெறியாள்கையிலும் உருவானது) என்ற நாடகமும் கூத்தின் மூலங்களையும், நாட்டார் மரபுப் பாடல்களையும் பேச்சு வழக்குகள். பழமொழிகள் இலக்கிய மரபுகள் என்பவற்றை பயன்படுத்தியதோடு மேற்கத்தேய நாடக மரபுகளையும் உள்வாங்கி இருந்தது. ஈழத்தமிழரின் தேசிய அரசியலை மக்கள் மயப்படுத்திய கலை வடிவமாக மிளிர்ந்தது அது.

ஈழத்து தமிழரின் தேசியப் பிரச்சனையைப் பேசிய "மண்சுமந்த மேனியர்" கிரேக்கத்தின் "அவலச்சுவை' நாடகத்தின் கூறுகளையும் மிரெட்டின் தூரப்படுத்தல் உத்திகளையும் படச்சட்ட மேடை அரங்கையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து 1990களில் சிதம்பரநாதனால் தயாரிக்கப்பட்ட உயிர்த்த மனிதர் கூத்து ஒரு சர்வதேச களரியாக இருந்தது. (முருகையனின் எழுத்துரு) அதாவது எமது கூத்து மரபுகள் தென்னாசிய மரபுகள். மேற்கத்தேய மரபுகள் என்பவற்றினை அது உள்வாங்கி இருந்தது. இருப்பினும் அது ஒரு கலைத்துவ ரீதியில் சிறப்பான படைப்பாக கருதப்பட்டது. உயிர்த்த மனிதர் கூத்து பரந்துபட்ட மக்களால் புரிந்து கொள்ளப்படுவதற்காக "மானிடம் கூடரும் ஒரு விடுதலை" எனும் தெருவெளி அரங்கு உருவானது. அரங்க வடிவமும் மாறியது.

இன்று போராட்ட களங்களில் மக்களை ஒன்றிணைக்கும் முகமாக உருவாகின்ற போர் முழக்க அரங்குகள் பல்வேறு வகைப்பட்ட மரபுகளையும் உள்வாங்கிய அரங்காகவே காணப்படுகிறது. எனவே இங்கு தேசிய நாடகம் என்கின்ற கருத்து நீர்த்துப்போனமை கண்கூடாகத் தெரிகின்றது. அது ஒரு கற்பிதமே. ஒரு குறிப்பிட்ட வடிவத்துக்குள் ஒரு கலைப்படைப்பை. அதன் ஆக்க சக்தியை முடக்குவது அதன் இயங்கியலுக்கு முரணானது. எனவே நாடகம் என்ற அடிப்படையில் இயல்பான வெளிப்பாட்டிற்கும் கருத்து நிலைக்கும் கலை அழுகுக்கும் சுதந்திரமான ஒரு நிலமை அவசியமாகின்றது.

## கூத்து வடிவங்கள்

ஆயினும் எமது தேசிய கலை வடிவங்களான கூத்து மரபுகளை நாம் 3 வகைகளில் பேணிப்பாதுகாக்கலாம். முதலாவது. கூத்துக்களை மேற்கொள்ளும் கலைஞர்களை ஊக்குவித்து அதனை வளர்த்தலாகும். இரண்டாவதாக கூத்தினைப் பழகி சுருக்கமான முறையில் நவீன அரங்கிற்கு ஏற்ப தயாரித்தலாகும். மூன்றாவதாக அதனை ஒரு ஆவணக்காப்பாக நூதன காட்சிச்சாலையின் வடிவமாக கலைஞர்களைக் கொண்டு பேணுதல் என்பனவாகும். மேற்குறிப்பிட்ட அம்சங்களில் எமது தேசிய கலை வடிவங்களைப் பேணுகின்ற தேவைகளை நாம் நிறைவேற்றலாம்.

## ஈழத்து தமிழ் நடன வடிவங்கள்

இதைவிட எம்மிடம் இல்லாத ஒரு தேவையை கூத்து மூலங்களைக் கொண்டு நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும். அதாவது ஈழத்தவர்களுக்குரிய ஒரு நடன வடிவம் இல்லாமை ஒரு குறையாகும். பரதநாட்டியம் ஓர் தென்னிந்திய வடிவமாகும். கதகளி கேரள நடனமாகும். கண்டிய நடனம் இலங்கைச் சிங்களவர் நடனமாகும். எனவே எமக்குரிய நடனங்களை யாம் கூத்து மூலங்களில் இருந்து உருவாக்குவதே சாத்தியமான ஒன்றாகும்.

இன்று ஈழம் எங்கும் காணப்படும் கூத்துக்களில் மட்டக்களப்பு வடமோடி. தென்மோடிக் கூத்துக்களிலே நுணுக்கமான அதிக ஆட்டங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் கூத்தில் காணப்பட்ட ஆட்டங்களில் நுணுக்கமான ஆட்டங்கள் ஆடப்படுவதில்லை. இதே போல் மன்னார் கூத்துக்களில் பல்வேறுபட்ட நடனங்கள் இல்லை. முல்லைத்தீவு "கோவலன் கூத்தில்" மட்டும் தட்டானின் ஆட்டம் நுணுக்கங்கள் நிறைந்தது. எனவே மட்டக்களப்பு மரபில் காணப்படும் நடன வடிவங்களையும். மற்றவற்றையும் இணைத்து ஈழத்தவர்களுக்குரிய தேசிய நடன வடிவங்களை உருவாக்க சாதகமான கலைச்சூழல் தென்படுகிறது. ஏற்கனவே பேராசிரியர் சி. மௌனகுரு அரசர் ஆட்டம். இராணி ஆட்டம். வீரர் ஆட்டம் என சில நடனங்களை இனங்கண்டு பிரித்து மேடை ஏற்றி உள்ளார். இவற்றோடு சேர்த்து வேறு கூத்துக்களில் கிடைக்கக்கூடிய நடன வடிவங்களையும் ஒருங்கிணைத்து ஈழத்தமிழர் தேசிய நடன கலை மரபு ஒன்றை உருவாக்க வேண்டிய அரசியல் சூழல் நம் முன்னிலையில் கனிந்துள்ளது. அதனைச் சாத்தியமாக்குவோம்.

# ஒருவேளை உணவுக்கே கஷ்டப்பட்ட உலக கணித மேதை இராமானுஜன்

"இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கணிதமேதை ராமானுஜனே" என்று சேர் யூலியன் ஹக்ஸ்லியால் பாராட்டப்பட்டவர் தமிழகத்தைச் சேர்ந்த ஸ்ரீநிவாச இராமானுஜன். கணிதமேதை இராமானுஜன் உள்ளாற்றல் மிகுந்த மாயத்தன்மை கொண்ட ஒரு மேதையாகக் கணிக்கப்பட்டவர். எனினும் அவரின் வாழ்க்கை ஏழ்மையாலும் அவரின் மேதாவிலாசத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாதவர்களின் புறக்கணிப்பாலும் ஒருசோக காவியமாக முடிந்தது. தமது **33**ஆவது வயதில் காலமான அம்மேதை அமரராகி **75** ஆண்டுகள் நிறைவுறும் இவ்வேளையில் அவரை நினைவுகூர்வது மிகப்பொருத்தமானதே.

இவருடைய முழுப்பெயர் ஸ்ரீநிவாச ஐயங்கார் இராமானுஜன் ஐயங்கார் என்பதாகும். எனினும் இவர் பிற்காலத்தில் சுருக்கமாக ஸ்ரீநிவாச இராமானுஜன் என்றே அழைக்கப்பட்டார். இவருடைய தந்தை ஸ்ரீநிவாசஐயங்கார் கும்பகோணத்தில் ஒரு புடைவைக் கடையில் கணக்குப்பிள்ளையாக இருந்தார். இவரின் தாயார் கோமளத்தம்மாள் மிகுந்த சமய ஈடுபாடும் கடவுள் பக்தியும் நிரம்பியவர். இவர்களின் மூத்த மகனாக இராமானுஜன் **1887** டிசம்பர் மாதம் **22**ஆம் திகதி பிறந்தார். நாமக்கல்லிலுள்ள நாமகிரி அம்மன் அருளால் பிறந்த குழந்தையாக இராமானுஜன் கருதப்பட்டார். சிறுவயதிலிருந்தே அவர் அமைதியான போக்குடையவராகவே வளர்ந்தார். எப்போதும் சிந்தனையில் மூழ்கிவிடுபவராகவும் அதனால் தனிமையில் நாட்டமுடையவராகவும் அவர் இருந்தார்.

கும்பகோணம் உயர்நிலைப் பள்ளியில் கற்கும் போது அவர் தமது கல்வியில் சிறந்து விளங்கி பரிசுகளும் பெற்றார். பின்பு கும்பகோணம் அரசினர் கலைக்கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரியில் ஏனைய பாடங்களைப் புறக்கணித்து கணிதபாடத்திலேயே தம்முழுக்கவனத்தையும் செலுத்தினார். இதனால் கல்லூரித்தேர்வில் அவர் தவறிவிட்டார். திரும்ப முயன்றும் அவரால் அப்பரீட்சையில் தேறமுடிய வில்லை. இது இவரது பட்டம் பெறும் கல்லூரிக்கல்விக்கு முற்றுப் புள்ளி வைத்தது. அதனால் பின்பு பொருத்தமான தொழிலைப்பெறுவதற்கு பட்டச் சான்றிதழில்லாமல் மிகுந்த சிரமப்பட்டார்.

இங்ஙனம் கற்றுக்கொண்டிருக்கும்போது அவர் கணிதத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அவற்றின் முடிவுகளை தமது குறிப்புப்புத்தகங்களில் எழுதிவைத்தார். இங்ஙனம் எழுதப்பட்ட பல குறிப்புப் புத்தகங்களே பின்பு மிகுந்த புகழ்பெற்றவையாக விளங்கின.

இராமானுஜன் பரீட்சையில் தேறாமல் வெறுமனே தாள்தாளாக ஏதோ எழுதிக் கொண்டு நேரத்தைப் போக்குவது அவரின் பெற்றோர்களுக்குப் புரியவில்லை. அவருக்கு ஏதோ நோய் பிடித்துவிட்டதாகவே அவர்கள் கருதினர். எனவே அவருக்கு திருமணம் செய்து வைத்தால் தான் நோயும் நீங்கும். குடும்பம் பற்றிய பொறுப்புணர்வும் வரும் என்று எண்ணினர். எனவே **1909**ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ராசேந்திரம் என்ற கிராமத்தைச் சேர்ந்த ஜானகியை அவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். திருமணத்தின் பின் அவர் பெற்றோருக்குப் பாரமாக இருக்க விரும்பாமல் வேலை தேடத் தொடங்கினார். எனினும் தமது கணித ஆராய்ச்சிகளுக்கு எவ்வித தடங்கலும் இருக்கக்கூடாதென்ற ஆவலும் இருந்தது.

இராமானுஜன் சென்னைக்கு வந்து தமது கணிதக் குறிப்புப் புத்தகங்களை பேராசிரியர் சேசு ஐயர், இராமசாமி ஐயர் போன்றோரிடம் காட்டினார். அவர்களின் உதவியால் நெல்லூர் கலெக்டராகவும் இந்திய கணிதக் கழகத்தின் செயலாளராகவுமிருந்த திவான் பகதூர் இராமச்சந்திரராவ், ஒருவருட காலத்திற்கு இராமானுஜனுக்கு மாதந்தோறும் 25 ரூபா உதவி வந்தார்.

1912 இல் நாராயண ஐயர் என்பவரின் உதவியால் சென்னைத் துறைமுகத்தில் எழுதுவினைஞராக மாதம் 25ரூபா சம்பளம் பெறும் வேலை கிடைத்தது. வறுமையிலும் செம்மையாக வாழ விரும்பிய அவருக்கு வாழ்க்கை மிகுந்த போராட்டமாகவே இருந்தது. கணித ஆராய்ச்சிக்குறிப்புகளை எழுதி வைக்கவே தாள்களின்றி மிகுந்த சிரமப்பட்டார். உணவு உட்கொள்ள மறந்து ஆராய்ச்சியில் மூழ்கும் அவருக்கு அவருடைய தாயார் அல்லது மனைவி உணவு ஊட்டி விடுவதும் உண்டு.

சேசு ஐயர், நாராயண ஐயர் போன்றவர்கள் நண்பர்கள் என்போரின் தூண்டுதலால் அவர் தமது ஆராய்ச்சிகள் பற்றி இங்கிலாந்திலுள்ள கணிதப் பேராசிரியர்களுக்கு எழுதினார். அவர்களுள் கேம் பிறிட்ஜ் திரித்துவக் கல்லூரிப் பேராசிரியர் ஜி.எச்.ஹார்டி அவர்கள் குறிப்பிடத்தக்கவர். ஹார்டி தமது நண்பர் ஜே.இ.லிற்றில்வூட் அவர்களுடன் சேர்ந்து இராமானுஜன் அனுப்பிய ஆராய்ச்சிக் குறிப்புக்களை ஆராய்ந்து பார்த்தார்.

முறைமையான நிறுவல்களின்றி எழுதப்பட்ட முடிவுகளை ஒருவாறு இனம் கண்டு அவை மிகச்சிறந்த ஆற்றல்களுள்ள கணித மேதையின் செயற்பாடே என்று முடிவுக்கு வந்தனர். ஹார்டியின் உற்சாகமூட்டும் முதற் கடிதத்திற்குப் பதிலளித்த இராமானுஜன் **"எனது மூளையின் செயற்பாட்டைப் பேண எனக்கு உணவு தேவை. இதுவே தற்போது எனது முதற்கவலை.** உங்களின் கடிதம் இங்குள்ள பல்கலைக்கழகத்திலோ அல்லது அரசாங்கத்திடமோ ஓர் உபகாரச் சம்பளம் பெற எனக்கு உதவலாம்" எனக் குறிப்பிட்டார். தாம் வறுமையில் வாடுவதை அவர் இதன் மூலம் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

ஹார்டியின் தொடர்பால் இராமானுஜனின் உயரிய கணித ஆற்றலுக்கு ஓர் அங்கீகரிப்பு கிடைத்து விட்டது. இதன் விளைவாக சில ஆங்கிலேய அதிகாரிகள் அவருக்கு உதவ முன் வந்தனர். ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலம் என்பதால் இந்தியர்களின் நல்லெண்ணம் உதவவில்லை. இவற்றின் விளைவாக சென்னைப் பல்கலைக்கழகம் இருவருடங்களுக்கு மாதந் தோறும் 75 ரூபா உபகாரச் சம்பளம் வழங்கியது. பல்கலைக்கழகப்பட்டம் எதுவும் பெறாத ஒருவருக்கு சென்னைப் பல்கலைக்கழகம் இங்ஙனம் உபகாரச் சம்பளம் வழங்கியது அதன் வரலாற்றில் இதுவே முதற்தடவையாகும். இராமானுஜன் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையான நிகழ்ச்சியாகும். ஏனெனில் இக்காலத்திலிருந்து அவருடைய மறைவு வரையிலான ஏழு ஆண்டுகளுக்கும் அவருக்கு வெவ்வேறு வகையில் உபகாரச் சம்பளம் கிடைத்துக் கொண்டேயிருந்தது. பணத்தைப் பற்றிய கவலையின்றி கணித ஆராய்ச்சியில் மூழ்க வாய்ப்பு ஏற்பட்டது.

இராமானுஜனின் முழுவளர்ச்சிக்கும் அவருடைய திறமை சிறந்த முறையில் பயன் விளைவிக்கவும், அவர் இங்கிலாந்து வருதல் அவசியமென ஹார்டி விரும்பினார். கடல் கடந்து சென்றால் அவரை சாதியிலிருந்து விலக்கிவைத்துவிடுவர் என்பதனால் இராமானுஜன் குடும்பத்தினர் அதனை விரும்பவில்லை. பின்னர் சென்னை வந்த கேம்பிரிட்ஜ் பேராசிரியர் இ.எச்.நெவில் என்பவரின்

வற்புறுத்தலாலும் இராமானுஜனின் தாயாரின் கனவில் நாமகிரி அம்மன் அனுமதி வழங்கியதாலும் விடயங்கள் இலகுவாகின. 1914 மார்ச் மாதம் 17ஆம் திகதியன்று சென்னையிலிருந்து இங்கிலாந்திற்குக் கப்பலில் புறப்பட்டார்.

கேம்பிரிட்ஜில் இருந்த காலத்தில் ஹார்டி, லிற்றில்வூட் போன்றோரின் உதவியும் வழிகாட்டலும் அவருக்குக் கிடைத்தது. "என்னிடமிருந்து கற்றதைவிட அவரிடமிருந்து யான் கற்றது அதிகமென்பதே வெளிப்படையான விடயம்" என்று ஹார்டி கூறியுள்ளார். இங்கிலாந்தில் இராமானுஜன் இருந்த ஐந்து வருட காலத்தில் இவரின் 21 கட்டுரைகள் கணிதச்சஞ்சிகைகளில் வெளியாகின. அவற்றில் 5 ஹார்டியுடன் சேர்ந்து எழுதப்பட்டவை. இவரின் இப்பங்களிப்புக்கள் இவருக்கு சிறப்பையும் புகழையும் தேடித்தந்தன. 1918 பெப்ரவரியில் இவர் அரசவைக்கழக உறுப்பினராக **F.R.S.** ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மிக இளம் வயதில் அதாவது. 31 வயதில், இத்தகுதியைப் பெற்ற முதல் இந்தியர் இவரே. இதே ஆண்டு அக்டோபர் மாதத்தில் அவர் திரித்துவக்கல்லூரியின் கௌரவ உறுப்பினராக **Fellow of the Trinity College** ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தகுதியைப் பெற்ற முதல் இந்தியராகவும், முதலாவது வெள்ளையர் அல்லாதவராகவும் இராமானுஜன் விளங்கினார்.

இங்கிலாந்தில் தமது சைவ உணவுவகைளை அவரே சமைத்துச் சாப்பிட வேண்டியிருந்தது. குளிர் மிகுந்த அந்த நாட்டில் கணித ஆராய்ச்சியையே முழுமூச்சாகக் கொண்டிருந்த இராமானுஜனுக்கு உரிய நேரத்தில் சமைத்துச்சாப்பாடு கொடுத்துப் பேண அவரின் மனைவி அருகில் இல்லாதது பெரிய குறையாக இருந்தது. இதனால் இவரின் உடல் நலம் கெடத் தொடங்கியது. 1917 இலேயே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 1918 இல் அவருக்குக் கிடைத்த கௌரவங்களால் அவர் உற்சாக மடைந்து கூடுதலான ஆராய்ச்சியில் ஈடுபட்டார். எனினும் அவரின் உடல் நலத்தில் அதிகமுன்னேற்றம் ஏற்படவில்லை 1919 இன் ஆரம்பத்தில் அவரின் உடல் நிலையில் சிறிது திருத்தம் காணப்பட்டதால் அவர் இந்தியா திரும்புவது ஏற்றதெனக் கருதப்பட்டது. தாய் நாட்டின் பழக்கமான சுவாத்தியநிலை குடும்பத்தினரின் அக்கறையான கவனிப்பு என்பன அவரின் உடல் நலத்திற்கு உதவுமென நம்பினர். எனினும் இந்தியா திரும்பிய பின்னரும் அவரின் உடல் நிலை தேற வில்லை. எனினும் அவரின் இடைவிடா கணித ஆராய்ச்சி மரணம் வரை தொடர்ந்தது. 1920 ஏப்பிரல் மாதம் 26ஆம் திகதியன்று அவர் சென்னையில் காலமானார். அக்கணித மேதை வாழ்ந்த காலம் 32 ஆண்டுகள் 4மாதங்கள் 4 நாட்கள் மட்டுமே.

பெரிய கணித மேதையாக இருந்த போதும் அவரின் அடக்கம் பணிவு போற்றத்தக்கது. "அற்புதமான அந்தக்கணிதர் உண்மையில் வெகுவாக நேசிக்கத்தக்க ஒரு மனிதர்" என்பது பேராசிரியர் நெவிலின் கூற்று. "உலகில் வேறெவரையும் விட இராமானுஜனுக்கே நான் அதிகமாகக் கடமைப்பட்டுள்ளேன்".

எனப் பேராசிரியர் ஹார்டி தமது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

**(நன்றி வீரகேசரி 26 - 04 - 1995)**

உ

# வாழ்க்கை ஒரு போராட்டம்

ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் ஒரு நூறு சோதனைகள் தோன்றுதல் சகஜம். எனினும் அவற்றைக் கையாளும் விதத்திலேயே அவரவர் வெற்றியும் தோல்வியும் அடங்கியிருக்கின்றன. முயற்சி இன்றி முன்னேற்றம் வருவதில்லை. உதாரணத்திற்கு இங்கே ஒரு கதை:-

அது ஒரு உயிரியல் வகுப்பு. அவ்வகுப்பில் ஆசிரியர் கூட்டுப்புழு ஒன்று வண்ணத்துப்பூச்சியாக உருமாறுவதைக் காட்டிப் படிப்பித்துக் கொண்டிருக்கிறார். அப்போது அவர், இன்னும் சில மணித்தியாலங்களில் கூட்டுப்புழு வண்ணத்துப்பூச்சியாக அதன் கூட்டில் இருந்து வெளியேறிவிடும். ஆயினும் அதனுடைய போராட்டத்தில் நீங்கள் யாரும் அதற்கு உதவக்கூடாது என்று கூறிவிட்டு ஆசிரியர் வெளியே செல்கிறார்.

ஆசிரியர் சொன்னபடி வண்ணத்துப்பூச்சி கூட்டில் இருந்து வெளியே வருவதற்குப் பெரும் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது. அப்போது அதன்மீது இரக்கம் கொண்ட ஒரு மாணவன், அந்தக் கூட்டை உடைத்து விடுகிறான். ஆனால் அவன் எதிர்பாராத வகையில் அது இறந்து விடுகிறது.

ஆசிரியர் சற்று நேரத்தில் வகுப்புக்குத் திரும்புகிறார். அங்கு நிகழ்ந்தது பற்றி அவருக்குச் சொல்லப்படுகின்றது. ஆசிரியர் அதனையிட்டுப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

கூட்டில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்த வண்ணத்துப்பூச்சிக்கு உதவியமை அதன் இயல்புக்கு மாறானதே. ஏனென்றால் கூட்டில் இருந்து அப்புழு வெளியேறும் போது அது வளர்ச்சி அடைவது மட்டுமன்றி அதன் இறக்கைகளும் பலமடைகின்றன. இந்த நிலை அதனைப் பொறுத்தவரையில் இயல்பான ஒரு போராட்டமாகும். அதனை உணராமல் நாம் அதற்குச் செய்த உதவியே அதற்கு எமனானது.

இந்த இயற்கை நியதியை நமது வாழ்க்கைக்கும் நாம் பொருத்திப் பார்க்கலாம். போராட்டம், துன்பம் இன்றிப் பயன் உள்ள எதுவும் உருவாவதில்லை. பெற்றோர்கள் தம் பிள்ளைகளிடம் கொண்ட பேரன்பினால் அவர்கள் கஸ்ரப்படுவதை விரும்புவதில்லை. பெற்றோரின் இப்போக்கு பிள்ளைகளின் வளர்ச்சிக்கு ஊறுவிளைவிப்பதாகும்.

தடைகளைத் தாண்டுபவரே வாழ்க்கையில் பெரும் பாதுகாப்பு உடையவராக இருக்கின்றார். மற்றவர்கள் அப்படியல்ல. நாம் எல்லோரும் வாழ்க்கையில் பிரச்சனைகளைச் சந்திக்கின்றோம். அதனால் சோர்ந்து போகின்றோம். பெரும்பாலானவர்கள் ஏமாற்றம் அடைகின்றார்கள். ஆனால் வெற்றியாளர் அதைரியம் அடைவதில்லை. இதற்குக் காரணம் அவர்களிடம் உள்ள சகிப்புத்தன்மையே.

எதுவும் எளிதாக வரும் முன்பு - அது கஸ்ரமானதாகவே தோன்றும். நாம் எமது பிரச்சனையில் இருந்து ஓட முடியாது. தோல்வியாளர்கள் மட்டுமே தாம் ஏற்ற பணியை இடையில் விட்டுவிடுகின்றார்கள்.

ஓர் ஆங்கிலப் பழமொழி இப்படிச் சொல்கிறது:-

"அமைதியான கடல் திறமையான மாலுமியை உருவாக்குவதில்லை".

(நன்றி : போது 1. இதழ் 25, வைகாசி, ஆனி 2002 - மட்டக்களப்பு)

# சிறுகதைகள்

(188 - 211)

உ

# தாங்கு வேர்கள்

- ச. அருளானந்தம் -

இரைச்சலோடு இருளைக் கிழித்துக் கொண்டு அந்தப் புகைவண்டி கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிப் புறப்படுகிறது. முண்டியடித்து ஏறிக்கொண்ட ஆனந்தர் மூன்றாம் வகுப்பு உறங்கலிருக்கையில் இடம்பிடித்துக் கொண்டார். இருக்கையில் சாய்ந்து கண்களை மூடியபடி அமைதியில் மூழ்கிவிட்டார். புகைவண்டி ஒரு கூவலோடு இரைந்து ஓடுகிறது. அதன் ஆட்டத்திற்கேற்ப சனங்களும் ஊஞ்சலாடுகின்றனர். அந்த ஆட்டமும் புகைவண்டியின் இரைச்சலும் அவர்களைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவது போல் அமைந்தது போலும். அவர்கள் கண்களை மூடிச் சாய்ந்து உறங்குவது போல் தெரிகிறது.

ஆனந்தர் கண்களை மூடியிருந்தாலும் அவரது மனம் மனக்கதவைத் திறந்து உள்ளே விளையாடிக் கொண்டிருக்கிறது. 'உறங்கலிருக்கை' நல்ல கலைச்சொல். இச்சொல்லைக் கண்டுபிடித்தவர்களைப் பாராட்டியே ஆகவேண்டும். ஆனால் இன்னுமேன் புகைவண்டி என்று சொல்ல வேண்டும். கரியும் நீரும் நீராவியை உருவாக்க, நீராவியின் உந்து சக்தியால் இயந்திரம் இயங்கி சில்லுகள் உருள, இரண்டு சமாந்தரக் கோட்டுத் தண்டவாளங்களில் புகையைக் கக்கிக் கொண்டு முன்னர் ஓடியது. இப்போது டீசலில் ஓடுகிறது. புகை இல்லை. அப்படியானால் இந்த புகைவண்டியை எப்படி அழைக்கலாம்.?

நீராவியை நமது கிராமத்து மக்கள் பிட்டு அவிக்கவும், வெள்ளாவி வைத்து உடைகளைச் சுத்தம் செய்யவும் பழகியிருந்தனர். அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவும் எப்படி நமது மக்கள் அறிந்திருந்தனர்? இப்போது இவையும் மறைந்து கொண்டு போகின்றன. அவர் மனம் புதுமைச் சிந்தனைகளில் சிக்கிக் கொள்கிறது. புகைவண்டி தரிக்கும் நிலையங்களை நெருங்கும்போது பெருங்கூவலோடு செல்லும். தரித்துப் புறப்படும் போதும் அதே கூவலோடு புறப்படும். இந்நேரங்களில் ஆனந்தரின் சிந்தனை கலையும். விழிகள் இமைகளை விலக்கி மெலிதான பார்வையை எறியும். பின் மூடிக்கொள்ளும். மனம் பழயபடி சித்து விளையாட்டில் இறங்கி வித்தை காட்டும்.

இந்த மனம் இருக்கிறதே அது விசித்திரமானது. கடவுள் எங்கே இருக்கிறார்? என்ற கேள்விக்கு விடைகாணும் முயற்சியாக அது உள்ளது. கடவுள் தூணிலும் இருப்பார். துரும்பிலும் இருப்பார். எங்கும் நீக்கமற நிறைந்து மறைபொருளாய் இருப்பது போல் இந்த மனமும் உள்ளது. இந்த மனம் உடலில் எங்குள்ளது? எண்ணங்கள் உணர்வுகள் எங்கே துளிர்விடுகின்றன? நெஞ்சிலா... இதயப் பையிலா... நெற்றிப் பொட்டிலா... அல்லது மூளையிலா...? இந்த ஐம்புலன்களை ஒன்று சேர்த்து உள்வாங்கி உலக வாழ்க்கையின் சுகதுக்கங்களை, நினைவுகளை எப்படி இந்த மனம் நிகழ்த்துகிறது? துயர் வந்தால் துவண்டு போகிறது. இந்தத் தொட்டாற் சிணுங்கியைப் போல. மகிழ்ச்சி என்றால் வானில் சிறகடித்துப் பறக்கும். அந்த வானம்பாடியைப் போல. துக்கத்தில் வாடுவதும் சந்தோசத்தின் போது மலர்வதும், அகத்தின் அழகு முகத்தில் தெரிய வைப்பதும் இந்த மனத்தின் சித்து விளையாட்டு. கண்களை மூடியபடி தத்துவார்த்த சிந்தனையில் மூழ்கி நினைவுகளின் மீட்டலில் சிக்கிக் கொள்கிறார். புகைவண்டி கடகடத்து ஓடுகிறது.

அவரது பக்கத்து இருக்கையில் ஒரு இளைஞன். அவனது மனமும் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. அவன் உறங்கவில்லை. அவனது விழிகளின் பார்வை யன்னலூடாகப் பாய்ந்து செல்கிறது. அவ்வப்போது ஆனந்தரின் நடவடிக்கைகளை அவதானிக்கின்றன.

அவர் விழி திறந்து பார்ப்பதும் பின் இமை மூடிக் கொள்வதும் அவனுக்குப் புதிய அனுபவமாக இருந்தது. அவரோடு உரையாட விரும்பினான். சந்தர்ப்பத்தைப் பார்த்துக் காத்திருந்தான். ஆனந்தரின் உடல் அசைந்து கொண்டிருந்தது. மனம் படம் காட்டிக் கொண்டிருந்தது. அந்தப் படத்தில் இந்திய அமைதிப் படையின் வருகை ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்திய அமைதிப் படை வவுனியா நகரின் காமினி மகா வித்தியாலய விளையாட்டரங்கில் வந்து குவிகிறது. தமிழினத்துக்கு விடிவுகாலம் வந்ததாய் சனங்கள் முண்டியடித்து 'நான்முந்தி, நீமுந்தி' என விரைகிறார்கள். கைகளை அசைத்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்கள். ஆனால் அவர்களது எதிர்பார்ப்புகள் சில மாதங்களிலேயே தவிடுபொடியாகின்றன. இந்திய அமைதிப் படையின் கெடுபிடி அதிகரிக்கிறது. அவர்கள் மேல் வெறுப்பையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. ஆனந்தர் பல காலம் வவுனியாவில் சேவை செய்தவர். தனது சொந்த ஊராகவே நினைத்து வாழ்பவர். வவுனியா என்ற சொல் அவரது செவிப்பறைகளில் ஒலித்தாலே தேன் வந்து பாய்ந்த உணர்வில் திளைப்பவர்.

வவுனியா மூலிகைக் காட்டைக் கொண்ட பிரதேசம். அந்த மூலிகைக் காட்டைத் தழுவி வரும் காற்றுப் பட்டாலே நோய் விட்டுப் போகும். ஓடும் வீதிகளின் இருபக்கமும் காவல் வீரர்களாக வீரைமரங்கள். பருவ காலங்களில் சிவந்து கனிந்த பழங்களைத் தாங்கிக் குதூகலிக்கும். அடுத்து அணிவகுத்துப் பாலைமரங்கள், மஞ்சளில் தோய்ந்து பழங்களைத் தூக்கிக் காட்டும். இருவாட்டியும் செம்மண்ணும் கலந்த விளைநிலங்கள், தோட்டங்கள், தேனும் பாலும் கலந்த மொழியும், விருந்தோம்பும் பண்பும், உழைப்பும் வீரமும் செறிந்த மக்களும் அவரின் உள்ளம் நிறைந்து உலா வந்தன. பண்டாரவன்னியனின் வீரதீரச் செயல்களை வியந்து போற்றி வவுனியா கச்சேரி வளாகத்தில் அவனது வீரத்தோற்றத்தோடு சிலையை வைத்து நன்றி செலுத்தும் உன்னத உள்ளங்கள். எந்தக் காகமும் அந்தச் சிலைமீது இதுவரை வந்திருக்கப் பயப்படுவது அவனது வீரத்தைப் பறைசாற்றும் சான்றாகும். அந்நியரால் கைப்பற்றப்படாத வன்னிப்பெருநிலப் பரப்பை எண்ணி அவரின் எண்ண அலைகள் மெல்ல மெல்ல மோதி உடைகின்றன.

அந்த நிகழ்வு துல்லியமாக நிழலாடுகிறது. அவரது உள்ளத்தில் அது பசுமரத்தாணியாகப் பதிந்து விட்டது. வவுனியா புகையிரத வீதியில் வாடிவீட்டுக்கு எதிராக சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கட்டிடம். அதையடுத்து மலர்ந்தும் மலராத நிலையில் மொட்டைமாடிக் கட்டிடம். அக்கட்டிடத்தில் வங்கிகள். சுத்தானந்தாக் கட்டிடம் பல அரிய உள்ளங்களின் உழைப்பின் அறுவடையின் சின்னம். அங்குதான் சமய பண்பாட்டு நிகழ்வுகள் தொடரும். சமய குரவர்களது குரு பூசைகள் நடக்கும். பெயரளவில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் தான். ஆனால் அதனைக் கொண்டு நடத்துபவர்கள் இளைஞர்களாக அந்தப் பருவத்தைக் கடந்து சுறுசுறுப்பாக இயங்கி, சங்கத்துக்காக வாழும் பெரியவர்கள்.

வன்னிப்பெரு நிலப்பரப்புக்கு வவுனியா தலைநகர். கிராமங்களின் தேவைகளை நிறைவு செய்யும் சேவைகளை வழங்குகிறது. இந்திய அமைதிப் படையின் கெடுபிடிகளால் மக்கள் பாதிப்படைகின்றனர். நகருக்குள் வருபவர்கள் உடன் வெளியேற முடியாது. ஓரிரு தினங்கள் தங்கியே செல்லவேண்டிய நிர்ப்பந்தம். அவர்களுக்குத் தஞ்சம் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கட்டிடம்தான். மாலையானதும் கட்டிடம் சனங்களால் நிரம்பி வழியும். அன்றும் அப்படித்தான், இரவு மெதுவாகவே நகர்ந்தது. தூரத்தே கண்ணி வெடியின் அதிர்வு. காற்றலை கட்டிடங்களை அறைந்து செல்கிறது. தொடர்ந்து நகரெங்கும் வேட்டுக்களின் இரைச்சல். குண்டுகளின் பாய்ச்சல். சனங்களின் அலறல். அபயக் குரல்கள் காற்றில் கலந்து பரவி உள்ளங்களை உறைய வைக்கின்றன.

இந்தியப் படையினர் மொட்டைமாடிக் கட்டிடத்தில் இருந்து தீர்த்த வேட்டுக்கள் அருகிருந்த சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் உறக்கத்தில் இருந்த இரு உயிர்களைப் பறித்து விட்டன.

காலைப்பொழுது கவலையோடு விடிகிறது. சுத்தானந்த இந்து இளைஞர் சங்க உறுப்பினர்கள் ஓடி வருகிறார்கள். சங்க மண்டபத்தில் உறங்கிக் கொண்டிருந்த இருவரின் மண்டை ஓடுகள் பிளந்து பிணமாகக் கிடக்கின்றனர். இரத்த வெள்ளம் பரவி இறுகிக் காய்ந்து உறைந்து கிடக்கிறது. சங்க உறுப்பினர்கள் கண்கள் சிவந்து விம்மி விம்மி அழுத காட்சி இப்போதும் நிழலாடுகிறது. இந்த அப்பாவிகள் என்ன செய்தார்கள்? ஏன் இப்படிக் கொன்றார்கள். இந்திய அமைதிப் படை ஏன் இங்கு வந்தது? தமிழ் மக்களைச் சுட்டுப் பொசுக்கவா? அந்நிய நாட்டுப் படை நமது மண்ணில் அதிகாரம் செலுத்த என்ன ஞாயம்? இந்த மண்ணில் இனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தாது அந்நியரிடம் அதிகாரத்தைக் கொடுத்துத் தமிழினத்தை அடக்கி ஒழிக்கப் பேரினவாத அரசு தீட்டிய திட்டம். இந்தியாவின் அமைதிக்காக நமது நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இந்தியப் படைக் குவிப்பு என்ற அரசியல் சாணக்கியத்தை ஆனந்தர் அறிந்திருந்தார். அந்த நிகழ்வை அவரால் இலகுவில் மறக்க முடியவில்லை. அதிலிருந்து விடுபட அவரால் முடியவில்லை.

எப்படி சேனாதியால்... தேவாவால்... தருமரால்... மற்றவர்களால் மறந்து தொடர்ந்து செயற்பட முடிகிறது? சுத்தானந்த இந்து இளைஞர் சங்க உறுப்பினர்களது முகங்கள் அவரது மனக்கண்முன் ஒவ்வொன்றாக வந்து போகின்றன. அவர்களது இலட்சிய வேட்கை கொண்ட பணி ஆனந்தரின் மனதில் ஒரு நிறைவை ஏற்படுத்துகிறது. புகைவண்டியின் கூவல் தொடர்ந்து தரிக்கும் சத்தம். மெல்ல விழிகள் இமைகளை விலக்கிப் பார்வையைச் செலுத்துகின்றன. இளைஞனின் பக்கம் திரும்பினார்.

“தம்பி இது எந்த ஸ்ரேசன்...”?

“அனுராதபுரம்”

பதில் கூறிவிட்டு அவனே தொடர்ந்தான்.

“ஐயா நீங்க வவுனியாவுக்கா....”?

“ஓம் தம்பி நீங்களும் வவுனியாவுக்குத்தானே”?

‘ஓமோம்”

“சொந்த ஊர் எங்க தம்பி”

“வவுனியா விளக்குவைத்தகுளம்”

ஆனந்தருக்குச் சற்று உற்சாகமாக இருந்தது.

“தம்பி விளக்குவைத்தகுளம் சந்தியில் அந்த நூல்நிலையம் ‘அறிவகம்’ இருந்ததே அது இயங்குதா”?

ஆவலோடு ஆனந்தர் கேட்டார்.

“அங்க என்ன இருக்கு? இந்தியப் படை வந்து அமைதிகாக்கும் எண்டு இருந்தம். அவங்கள் போன பிறகு சிறிலங்காப் படை வந்து சுடுகாடாக்கிப் போட்டுது”

கவலை தோய்ந்த முகத்தோடு கூறி முடிக்குமுன் ஆனந்தர் தொடர்ந்தார்.

“அப்ப தம்பி ஊர்ச் சனங்கள் எங்க”

விழி உயர்த்திக் கேட்டார். ஆனந்தரின் முகத்தை அவனால் நன்றாக அவதானிக்க முடிந்தது. ‘இது தெரிந்த முகம்போல் இருக்கு. எங்கே பார்த்தேன்”? அவனது உள்மனதில் பெரியதொரு தேடல் நடந்து ,கொண்டிருந்தது.

யோசித்துக் கொண்டே பதில் கூறினான். ”கல்லெறி பட்ட தேன் பூச்சிகளாக அழிந்தும் எங்கோ ஒழிந்தும் போயிற்றுதுகள். எங்கே இருக்குதுகள் என்றே தெரியாது”

கவலையோடு கூறியவனைப் பார்த்தார்.

“சரி தம்பி பேரென்ன சொன்னீங்கள்”
“குமாரதேவன்...”

சற்று அமைதி நிலவியது கடகடத்து ஓடிய புகைவண்டி மெதுவாக நகர்கிறது. ஆனந்தரின் மனமென்னும் வண்டி நகரத் தொடங்கியது. புகைவண்டியைப் பார்த்தது. உயிரற்ற இந்த இயந்திரம் உயிருள்ள மனித இயந்திரங்களைச் சுமந்து செல்கிறது. எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாது டீசலைக் குடித்துச் சடமாக, மனித இயந்திரத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிச் செயற்படுகிறது. இந்த மனித இயந்திரங்கள் எத்தனை எதிர்பார்ப்புக்கள் இழப்புக்கள் ஏக்கங்கள் சுகதுக்கங்களைச் சுமந்து கொண்டு பயணிக்கின்றன. ஆனந்தரின் கடைவாயிலில் ஒரு முறுவல் குந்திப் பார்க்க ஓடிவந்து நெளிகிறது. அவரே தொடர்ந்தார்.
“தம்பி... அம்மா அப்பா சகோதரங்கள்...”
ஆனந்தர் முடிக்குமுன் குமாரதேவனே சட்டென்று கூறினான்.
“அப்பாவை இந்தியப் படை சுட்டுப் போட்டுது”
ஆனந்தர் அந்தப் பதிலால் ஆடிப்போனார். அவனது வேதனையைப் புரிந்து கொண்டார்.
“தம்பி உங்கட மனதை நோகச் செய்திட்டன். குறை எண்ண வேண்டாம்” மெதுவாகச் சொன்னார்.
“இதில என்னையா கோபமும் குறையும். இந்த நாட்டில வாழும் ஒவ்வொரு தமிழனும் ஏதோ ஒருவகையில் பாதிப்பு அடைந்துதான் இருப்பான். தமிழரின் உள்ளமும் மரத்துத்தான் இருக்க வேண்டும். அப்பா போனபிறகு.... குடும்பப் பொறுப்பு என்ர தலயில. விட்டாங்களா? சிறிலங்காப் படை எங்கட ஊரைச் சுற்றிவளைத்து இளைஞர்களைப் பிடித்து சித்திரவதை செய்து ‘பூசா’ முகாமில் சிறை வைத்தது. நானும் அஞ்சு வருசம்.... அஞ்சு வருசம்.... பூசாவில இருந்தன்” அவனது கண்கள் குளமாகி இருந்தன. குரல் கரகரத்தது. பெரியதொரு வேதனையைக் கொட்டிவிட்டான். அவர் வேதனையுள் அலைமோதினார். இப்போது திசைமாற்ற எண்ணித் தொடர்ந்தார்.
“தம்பி விளக்குவைத்தகுளத்தில் ஆறுமுகத்தாரைத் தெரியுமா”
“ஓம் அவர்தான் என்ர அப்பா”
ஆனந்தருக்கு அதிர்ச்சிமேல் அதிர்ச்சி. எரிமலை வெடித்துச் சிதறிய உணர்வு. எண்ணக் குமுறல்களின் வெளிப்பாடு.
“அவர உங்களுக்குத் தெரியுமா”
“ஓம்...”

கூறிவிட்டு ஆனந்தர் வாய்மூடி மௌனியானார். அவர் தொடர்ந்து பேசத் தயாரில்லை. அவரது மனதில் பெரும் போராட்டம். அன்று சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கட்டிடத்தில் இந்தியப் படையால் சுடப்பட்டு இறந்தவர்களில் ஆறுமுகமும் ஒருவர். அவரது உள்ளத்தில் இந்தியப் படைமீது வெறுப்புத் தோன்றியது. அவர்கள் இருந்த காலத்தில் செய்த அனர்த்தங்கள் விரிந்தன. இயக்கங்களைப் பிரித்துப் பாடசாலை செல்லும் பிள்ளைகளையும் இளைஞர்களையும் பலவந்தமாகப் பிடித்து இயக்கங்கள் பலவற்றை வளர்க்கத் தூண்டினர். எத்தனை இளைஞர்கள் தமக்குத் தாமே எதிரியாகி அழிந்தனர். அடாவடித்தனம் வளர வழிகாட்டினர். அந்தச் சுத்தானந்த சங்கக் கட்டிடத்தினுள் எத்தனை இளைஞர்கள் சித்திரவதைப் பட்டிருகிறார்கள். சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் இயங்கத் தடையாக இருந்தனர். சங்கம் இனி இல்லை என்றே எண்ணியிருந்தார்.

சனங்கள் மூட்டை முடிச்சுக்களைத் தூக்கிக் கொண்டு முண்டி அடித்துக் கொண்டு எழும்பியதை அவதானித்தார். அப்போதுதான் வண்டி வவுனியா வந்துவிட்டதை உணர்ந்தார். சனங்களைப் பார்த்தார். இவர்களுக்கு எவ்வளவு அவசரம்? கிறீச் சத்தத்தோடு

வண்டி நின்றது. சனங்கள் அவசர அவசரமாக இறங்கி விரைந்தனர். மெதுவாக எழுந்தார். குமாரதேவன் அங்கு இல்லை. அவன் இறங்கிப் போய்விட்டான். தனது பொதியை எடுத்துக் கொண்டு இறங்கி வெளியில் வந்தார். சுமார் பன்னிரெண்டு வருடங்களின் பின் வவுனியா மண்ணில் காலடி எடுத்து வைக்கிறார். அவர் எதிர்பார்த்த வவுனியாவா இது? அவரால் நம்ப முடியவில்லை. எங்கும் மாற்றம். எல்லாம் மாற்றம். இயந்திர வாழ்க்கையில் வவுனியாவும் சிக்கிக் கொண்டது. மாற்றம் ஒரு நியதிபோலும்.

அவரது பார்வை அந்த முதிரை மரங்களில் விழுந்தது. அதனூடாகத் தெரிவதென்ன? வவுனியா பல்கலைக்கழக வளாகம். அந்தப் பெயர்ப் பலகையைக் கண்டதும் ஆனந்தம் பொங்குகிறது. பரவசம் பரவுகிறது. மெல்ல நகர்நோக்கி நடக்கிறார். இலங்கை வங்கிக் கட்டிடம். அடுத்தடுத்துப் பல கட்டிடங்கள். கொம்பியூட்டர் நிலையங்கள், தமிழ்மணி அகளங்கன் கூறிய வஸ்டக் உயர்கல்வி நிலையம். அதற்கு நேரெதிரே தெரியும் பகவான் சத்ய சாய் பாபாவின் அருள்பாலிக்கும் கட்டிடம். எனப் பார்த்தவாறே நடக்கிறார். அவருக்குப் புதுத்தென்பு பிறக்கிறது. இப்போது சுத்தானந்த இந்து இளைஞர் சங்கக் கட்டிடத்துக்கு வந்துவிட்டார். அவர் எதிர்பார்த்து வந்த அந்தப் பழைய கட்டிடம் எங்கே? சற்று மலைத்து நின்றார்.

அந்தப் புதுமை பொலியும் சுத்தானந்த வளாகத்தினுள் அவரை அவரது கால்கள் நுழைத்து விடுகின்றன. தான் காண்பது கனவா? சிறு பிள்ளைபோல் அங்குமிங்கும் ஓடியோடிப் பார்க்கிறார். கண்கள் பார்த்துப் பார்த்துப் பூரிக்கின்றன. கண்ணைக் கவரும் கல்யாண மண்டபம், ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கு வித்திடும் பாலர் பாடசாலை வகுப்புக்கள், உணவகம், தொலைத்தொடர்பு வசதிகள். அவரால் நம்பமுடியவில்லை. சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் இனி இல்லை என்றுதான் எண்ணியிருந்தார். ஆனால் விழுவது எழுவதற்குத்தான் என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் புதிய உருவமைப்பில் புதுப்பொலிவோடு கட்டிடங்கள் எழும்பி நிற்கின்றன.

ஆலமரத்தின் விழுதுகள் நிலத்தில் ஊன்றியதும் அதனைத் தாங்குவேர்கள் என்பார்கள். அந்த வேர்கள்போல் இன்றும் சுத்தானந்த இந்து இளைஞர் சங்க உறுப்பினர்கள் செயற்படுவது பெரிய சேவைதான். அடக்கு முறைகளைச் சந்தித்தாலும் வாழத்துடிக்கும் மக்களுக்கு ஊன்றுகோல்களாகிச் செயற்படும் அந்த உன்னத உள்ளங்களை மனதிருத்தி நன்றி செலுத்துகிறார்.

“ஐயா என்ன இஞ்ச நிக்கிறியள். இப்பிடி உள்ளுக்கு வந்து இருங்கோ..”

“சொன்ன அந்த இளைஞர்களை உற்றுப் பார்க்கிறார். அங்கு சேனாதி திருமேனி, தேவா தருமர் புடைசூழப் பலர் நிற்கின்றனர். அனைவரையும் அன்புடன் தழுவிக் கொள்கிறார். சுத்தானந்த இந்து இளைஞர் சங்க வளாகம் சோடினையுள் ஆழ்ந்து குதூகலிக்கிறது. பொன்விழா எனும் எழுத்துக்களோடு கொடிகள் காற்றில் ஆடுகின்றன. புரவலர் ஈசன் இராமஸ்வாமி ஆசியுரை வழங்கிக் கொண்டிருக்கிறார். எங்கும் பரிச்சயமான அந்த பண்பட்ட அன்புள்ளங்களின் மகிழ்ச்சி பரவுகிறது. இன்று சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் ‘பொன்விழா’ காண்கிறது. ஆனந்தரின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர்.

**- கேணிப்பித்தன் -**

(ச. அருளானந்தம்)

உ

# குண்டுமணிச் சாமியார்

அகளங்கன்

தனக்கு முன்னால் பரவிக்கிடந்த குண்டுமணிகளைத் தன் கைவிரலால் ஒவ்வொன்றாக வலதுபக்கம் தட்டுவதும், பின் அவைகளை ஒவ்வொன்றாக இடதுபக்கம் தட்டுவதும், தட்டும்போது ஏதோ முணுமுணுப்பதுமாக இருந்தார் அந்தச் சாமியார்.

என்ன மந்திரத்தை முணுமுணுக்கிறார் என்று சற்றுக் கூர்ந்து காதுகொடுத்துக் கேட்டால்தான் விளங்கும். குண்டுமணிகளை ஒவ்வொன்றாக வலது புறம் தட்டித் தட்டி

"யோகம் யோகம் யோகம் யோகம்"

என்றும், முழுவதையும் தட்டி முடித்த பின் அவற்றை ஒவ்வொன்றாக இடதுபுறம் தட்டித் தட்டி

"பாவம் பாவம் பாவம் பாவம்"

என்றும் முணுமுணுத்துக் கொண்டிருந்தார் அவர். அவரின் மந்திரமே அதுதான்.

"யோகம் யோகம் யோகம் யோகம்......"

"பாவம் பாவம் பாவம் பாவம்......"

அவருக்கு முன்னால் விறகு கட்டைகள் எரிந்து கொண்டிருந்தன.

"சாமி! சாமி! என்ர புள்ளைக்குப் பாம்பு கடிச்சுப் போட்டுது சாமி. வாயில நுரை தள்ளுது சாமி. நீங்கள் தான் காப்பாற்றோணும் சாமி..."

பரபரப்போடு அழுதழுது சொல்லிக் கொண்டு நின்றார் ஒருவர். சாமியாரின் காதில் எதுவும் விழுந்ததாகத் தெரியவில்லை. வந்தவரை நிமிர்ந்து பார்க்ககூட இல்லை. சலனம் எதுவும் இன்றி குண்டுமணிகளைத் தட்டிக் கொண்டிருந்தார் சாமியார்.

"யோகம் யோகம் யோகம் யோகம்....."

"பாவம் பாவம் பாவம் பாவம்......"

முன்னால் எரிந்து கொண்டிருந்த தீவறை வெளிச்சம்பட்டு அவரது முகம் சிவப்பு நிறமாகத் தெரிந்ததேயன்றி, எந்தவிதமான உணர்வுகளும் அவரது முகத்தில் தெரியவில்லை.

"சாமி! சாமி!.... என்ர புள்ள செத்துப் போடும் சாமி..... நீங்கள் தான் என்ர புள்ளயக் காப்பாற்றோணும் சாமி"

நீண்ட நேரமாக அவனும் அழுதழுது சொல்லிக் கொண்டிருந்தான். சாமியாரோ அவனைக் கவனிப்பதாக இல்லை. அவனும் அந்த இடத்தை விட்டுச் செல்வதாக இல்லை.

அவனுள் ஏதோ ஒரு வைராக்கியம், நம்பிக்கை. அவனது அவலமும் "சாமி... சாமி...." என அவன் கெஞ்சுவதும் கல்நெஞ்சையும் கனிய வைக்கும். ஆனால் சாமியாரோ அதற்கெல்லாம் மசிபவராக இல்லை.

"யோகம் யோகம் யோகம் யோகம்....."

"பாவம் பாவம் பாவம் பாவம்....."

குண்டுமணிகளை வலம் இடமாகத் தட்டிக் கொண்டு உடைந்த இசைத்தட்டுப் போல சொன்னதையே திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"சாமி..... சாமி.... என்ர புள்ள செத்துப் போடும் சாமி. என்ர பிள்ள செத்துப் போடும் சாமி. ஒரே ஒரு ஆம்பிளப்பிள்ள சாமி"

வாய்விட்டு அழுது அழுது சொல்லிக் கொண்டிருந்தான் அவன். சாமியார் அசையவில்லை. தன்பாட்டிலே

"யோகம் யோகம் யோகம் யோகம்......"

"பாவம் பாவம் பாவம் பாவம்......."

என முணுமுணுத்தபடி குண்டுமணிகளைத் தட்டிக் கொண்டிருந்தார்.

"சாமி... சாமி.... சாமி.... சாமி.... சாமி.... என்ர புள்ள சாமி, பரியாரியார் கைவிட்டிட்டார் சாமி. வாயில நுரை தள்ளுது சாமி. நான் எங்ககொண்டு போவன் சாமி. அவன் செத்துப் போனா..... ஐயோ.... சாமி.... சாமி...." நாக்குழற அழுதழுது சொல்லிக் கொண்டு நின்றான் அவன்.

சாமியார் அவனை நிமிர்ந்து பார்த்தார். அவர் அப்படி யாரையும் பார்ப்பதில்லை. பார்வையில் கனிவு இல்லை. கோபம்தான் கொப்பளித்தது.

அவரது கண்களைப் பார்க்க அவனுக்குப் பயமாக இருந்தது. எரித்துக் கொன்று விடுவது போன்ற பார்வை அது. சிவபெருமானின் நெற்றிக்கண் போன்று அக்கினிப் பொறிகளைக் கக்கும் கண்கள் அவை.

சாமியாரின் கண்கள் அவனது கண்களைத் துளைத்து ஊடுருவின. அவன் பயத்தினால் நடுநடுங்கித் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டான்.

முன்னால் எரிந்து கொண்டிருந்த தீவறையில் இருந்த ஒரு கொள்ளிக் கட்டையை எடுத்தார்.

அவனுக்குப் பயமாக இருந்தது. அந்தக் கொள்ளிக் கட்டையால் தட்டி சாம்பலைக் குவித்து வைத்தார்.

கொள்ளிக் கட்டையை மீண்டும் தீவறையில் வைத்துவிட்டு சுடுசாம்பலில் கொஞ்சத்தை கையினால் அள்ளினார்.

"இந்தா இதக் கொண்டுபோய் அவனுக்குத் தின்னக் குடு"

அவன் மிகவும் மரியாதையாகக் குனிந்து இருகைகளையும் நீட்டி வாங்கினான்.

"அவன் தப்பீற்றா நான்தான் பிழைக்கப் பண்ணினதெண்டு ஒருத்தருக்கும் சொல்லாத"

"சரி சாமி"

"அவன் செத்துப் போனாலும் நான் மருந்து தந்ததெண்டு ஒருத்தருக்கும் சொல்லாத"

"சரி சாமி"

கும்பிட்டு விட்டு மிகுந்த நம்பிக்கையோடு ஓட்டமாகச் சென்றான் அவன்.

"யோகம் யோகம் யோகம் யோகம்......"

"பாவம் பாவம் பாவம் பாவம்......."

தனது வழமையான மந்திரத்தைத் தொடர்ந்தார் சாமியார்.

***

நூற்றுக்கணக்கான குண்டுமணிகளை தன்முன்னால் பரவி வைத்துக்கொண்டு, வலதுபுறமும் இடதுபுறமும் தட்டித் தட்டி மந்திரம் சொல்வது அவரது வழக்கம். அவரது மந்திரம்

"யோகம் யோகம் யோகம் யோகம்....."

"பாவம் பாவம் பாவம் பாவம்....."

என்பதுதான், அந்த ஊர்க்காரர்கள் யாராவது விறகு கொண்டு வந்து கொடுத்தால் அவைகளைத் தன்முன்னால் தீவறையாக எரிய வைத்துக் கொள்வார்.

தானாக விறகு தேடி எடுத்து எரிப்பதில்லை. அவருக்கு முன்னால் பகல் இரவு என்ற பேதமின்றி எப்போதும் விறகு கட்டைகள் எரிந்து கொண்டிருக்கும்.

ஊரவர் எவராவது சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தால் சாப்பிடுவார். எந்த வகையான சாப்பாடு கொடுத்தாலும் சாப்பிடுவார். எவரது வீட்டுக்கும் செல்ல மாட்டார். எதுவும் கேட்டும் பெறமாட்டார்.

அந்த ஊருக்கு அவர் வந்தநாள் முதல் அவரது கருமங்கள் இப்படித்தான் நடைபெறுகின்றன.

அவரது பெயர் என்ன. அவரது ஊர் எது. அவரது உறவினர்கள் யார். அவரது பூர்விகம் என்ன என்பது யாருக்கும் தெரியாது.

வவுனியாவில் பல கிராமங்களில் அவர் இருந்திருக்கிறார். கேரளாவிலிருந்து வந்தவர் என்று சிலர் கூறுகிறார்கள். இற்றைக்கு எண்பது வருடங்களுக்கு முன் நடந்த கதை இது.

குண்டுமணிகளை எண்ணிக் கொண்டிருப்பதால் குண்டுமணிச் சாமியார் என்றே எல்லா ஊர்களிலும் அழைக்கப்பட்டார். பம்பைமடு, கள்ளிக்குளம், மருக்காரம்பழை, சாஸ்திரி கூழாங்குளம் முதலான பல கிராமத்தவர்கள் அவரைப் பற்றி இன்றும் கதைக்கிறார்கள்.

யாராவது நல்ல புகையிலை வாங்கி வந்து முழுதாகக் கொடுத்தால் அதை வாங்கி ஒரு சிறு துண்டை நுள்ளி வாயில் போட்டுக் கொள்வார். மிகுதியை அப்படியே, தன் முன்னால் எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் போட்டு விடுவார்.

துண்டுப் புகையிலை கொடுத்தால் அல்லது குறையாகக் கொடுத்தால் வாங்கமாட்டார். இப்படி சில விசித்திரப் பழக்கங்கள் அவருக்குண்டு.

அரையில் அழுக்கடைந்து கிழிந்த கந்தல் வேட்டி, அழுக்கடைந்த வெற்றுடம்பு, நீண்டதாடி, நன்றாக வளர்ந்து தொங்குகின்ற சடை, கூரிய ஒளி வீசும் கண்கள், சாந்தமான பிரகாசம் வீசும் முகம் இவைதான் அவரின் தோற்றம்.

பல மரங்கள் அவருக்கு நிழல் கொடுத்திருக்கின்றன கோவில்களும் அவரது தங்குமிடங்களே. கோயிலில் பூசை, திருவிழா ஏதும் நடைபெற்றால் அங்கே இருக்கமாட்டார்.

மருக்காரம்பழை என்று இன்று அழைக்கப்படும் மருக்காரையில் தான் அவர் பலகாலம் இருந்திருக்கிறார். நிரந்தரமாக ஓரிடத்தில் அவர் தங்குவதில்லை.

ஒரு தடவை அந்த ஊரில் உள்ள பசுமாடுகளுக்கு ஒரு புதுவிதமான நோய் தொற்றியது. மாடுகள் யாவும் நாளாந்தம் இறக்கத் தொடங்கின.

திடீரென நோய் ஏற்படும். கால்கள் வளங்காமல் படுத்துவிடும். பின்பு அந்த மாடுகள் எழும்புவதே இல்லை.

'சாமி!...... என்ர மாட்டுக்கும் அந்த வருத்தம் வந்திற்றுச் சாமி. நீங்கள் தான் காப்பாற்றோணும்''
என்று ஒருவன் வந்து அழுது கொண்டு நின்றான்.

"யோகம் யோகம் யோகம் யோகம்......"

"பாவம் பாவம் பாவம் பாவம்......."

சாமியார் குண்டுமணிகளைத் தட்டிக் கொண்டு முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

"என்ர மாடும் செத்துப் போடும் சாமி....."

என்று கெஞ்சிக் கெஞ்சி அழுது கொண்டிருந்தான் வந்தவன்.

சாமியாரின் கவனம் குண்டுமணிகளைத் தட்டுவதிலும் முணுமுணுப்பதிலுமேயே இருந்தது.

"சாமி..... சாமி...... சாமி...."

அவன் கெஞ்சியபடி நின்றான்.

"வருத்தம் வந்தாச் சாகத்தானே வேணும். சாகட்டும்".

"சாமி... என்னட்ட இருந்த மாடெல்லாம் செத்துப் போட்டுது சாமி. இந்தப் பசுவிண்டாலும் தப்பினாத்தான் ஏதோ பாலிண்டாலும் கிடைக்கும். வீட்ட பச்சப் புள்ளைக்குப் பாலில்லாமல் போயிரும் சாமி. ஆரிட்டப் போய் பால் வாங்கிறது சாமி"

எதையுமே சட்டை செய்யாமல் விறகு கட்டையை எடுத்து நெருப்பில் போட்டுக் கொண்டிருந்த சாமியார் திடீரெனத் திரும்பி

"அந்தப் பசுவ இஞ்ச கொண்டரேலுமோ" என்றார்.

"இப்பதான் வருத்தம் தொடங்குது சாமி. எப்பிடியெண்டாலும் கொண்டு வாறன் சாமி"

மாட்டைக் கட்டி இழுக்கத் தொடங்கினான் அவன். நடக்க முடியாமல் விழுந்து விழுந்து படுத்த மாட்டை மிகவும் சிரமப்பட்டு இழுத்துக் கொண்டு வந்து சாமியாரருகில் கிடத்தினான்.

மாட்டை வடிவாக உற்றுப் பார்த்தார் சாமியார். பக்கத்தில் கிடந்த ஒரு நெல்லித் தடியை எடுத்தார்.

"செத்துப் போ. செத்துப் போ"

என்று சொல்லிப் பலமாக நாலு ஐந்து அடி அடித்தார். அடித்து விட்டு

"சரி செத்துப் போடும், கொண்டு போ" என்றார் சாமியார்.

வந்தவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

"மாட்டச் சாகக் கொல்ல சாமியாரிட்டயோ கொண்டு வரோணும். சும்மா விட்டிருந்தாலே ரெண்டு மூண்டு நாளில தானாச் செத்துப் போடுமே"

என்று முணுமுணுத்தவனாய் இனி எப்படி மாட்டை இழுத்துச் செல்வது என்று சிந்தித்தான்

மாட்டை அந்தச் சாமியாரிடம் இழுத்துக் கொண்டுவந்து சேர்க்க அவன் பட்டபாடு அவனுக்குத்தான் தெரியும்.

"இஞ்சயே செத்துப் போச்சுதெண்டா இழுத்துக் கொண்டுபோற வேல இல்லை" என்று எண்ணியவனாக பசுமாட்டைப் பார்த்துக் கண்ணீர் விட்டான். சாமியாரின் முகத்தைப் பார்க்க வெறுப்பாக இருந்தது அவனுக்கு.

சாமியார் தனது கருமத்தைத் தொடர்ந்தார்.

"யோகம் யோகம் யோகம் யோகம்......"

"பாவம் பாவம் பாவம் பாவம்......."

படுத்துக் கிடந்த பசுமாடு துள்ளிக் குதித்து எழுந்தது. உடம்பை உசுப்பிக் கொண்டு அங்கும் மிங்கும் திரும்பிப் பார்த்து மிரண்டு மிரண்டு விழித்தது.

அந்த ஊரிலே அந்த ஒரு பசுமாடுதான் உயிர் பிழைத்தது. அந்தச் சாமியார் "செத்துப் போ. செத்துப் போ" என்று கூறியது பசுமாட்டையல்ல. பசுமாட்டைப் பிடித்திருந்த நோயைத்தான் என்பது பின்புதான் அவனுக்குப் புரிந்தது.

***

அந்த ஊரிலுள்ள பெரியவர் ஒருவருக்கு குண்டுமணிச் சாமியாரின் தெய்வீகத் தன்மையில் அதிகம் நம்பிக்கை ஏற்பட்டது. தான் அவரிடம் அருள்பெற்று **வாக்குப்** பெற வேண்டும் என்று அவர் விரும்பினார்.

சாமியாரிடம் வாக்குப் பெற்றுவிட்டால் தனக்கு பல **சித்திகள்** கிட்டும். பல அற்புதங்களை நிகழ்த்தலாம். பணத்தையும், புகழையும், மதிப்பையும் பெறலாம் என்பது அவரது திட்டம்.

வேறு ஊர்களில் சாமியார் தனது சீடர்கள் சிலருக்கு வாக்குக் கொடுத்துள்ளார் என்பதை அறிந்து தானும் வாக்குப் பெற நினைத்து, சாமியாருக்குப் பணிவிடைகள், தொண்டுகள் செய்து வந்தார்.

"சாமி! இனி மழைக்காலம். இந்த மரத்தடியில இருந்தாக் கஸ்ரம். வாங்கோ என்ர வீட்ட இருக்கிலாம். நான் உங்களுக்கு எல்லா வசதிகளுஞ் செய்து தாறன்" என்று கேட்டுப் பார்த்தார். சாமியார் அசையவில்லை. சாமியார் வீடுகளுக்கு வரமாட்டார் என்பதை உணர்ந்து கொண்ட அந்தப் பெரியவர், சாமியாரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று அங்கே தங்க வைத்தார்.

தினம் ஒரு போத்தல் பால் கொண்டு வந்து கொடுப்பார். வவுனியா நகருக்குச் சென்று வந்தால் புகையிலை வாங்கிவந்து சாமியாருக்குக் கொடுப்பார்.

சாமியார் சில நாட்கள் அங்கே இருந்தார். கோயிலில் திருவிழாக்காலம் தொடங்க கோயிலை விட்டு வெளியேறி மீண்டும் மரத்தடிக்கே வந்து விட்டார்.

அந்தப் பெரியவரும் சாமியாருக்கு ஒரு குறையும் இல்லாதபடி தொண்டு செய்து

வந்தார். விறகுகளைக் கொண்டுவந்து தீவறை மூட்டிவிடுவது, நாள் தவறாமல் பால் கொண்டு வந்து கொடுப்பது, சாப்பாடு கொடுப்பது, இடையிடையே புகையிலை கொண்டுவந்து கொடுப்பது என மிகவும் பணிவாக ஒரு சீடன்போல் இருந்து தொண்டு செய்து வந்தார்.

ஒரு நாள் பால்ப் போத்தலையும் கொண்டு வழமைபோலச் சாமியாருக்கு அருகில் வந்திருந்தார் அந்தப் பெரியவர்.

"இண்டைக்கு எப்பிடியும் சாமியாரிட்டக் கேட்டு வாக்குப் பெற்றிரோணும்" என்பது அவரது திட்டம்.

சாமியார் தானாக விரும்பித்தான் வாக்குக் கொடுப்பார். யாரும் கேட்டுக் கொடுக்கமாட்டார். பெரியவருக்கோ அதுவரையில் பொறுத்திருக்க முடியவில்லை.

"கேட்டாவது பாப்பம்"

என்று எண்ணிக் கொண்டு அருகில் இருந்தார்.

அப்போது ஒருவர் சாமியாரின் அருகில் வந்து

"சாமி..... பெரிய கஸ்ரமாயிருக்குச் சாமி. வீட்டில மனிசி, புள்ள குட்டியளெல்லாத்துக்கும் வருத்தம். சாப்பிடவும் வழியில்ல. பட்டினி, பசி. காசுக்கு ஒரு வழியுந் தெரியேல்ல....."

என்று தனது கஸ்ரத்தைச் சொல்லிப் புலம்பினார்.

"புதையல் எடுத்தாச்சோ...." சாமியார் கேட்டார்.

"இல்லச் சாமி, அதெல்லாம் எங்களுக்கெங்க கிடைக்கப் போகுது" பெருமூச்சு விட்டபடி கூறினார் வந்தவர்.

"ஓ.... கோ.... புதையல் எடுத்தாத்தான் சுகம் வரும்."

என்று கூறிவிட்டு தனது மந்திர முணுமுணுப்பைத் தொடங்கினார்.

"யோகம் யோகம் யோகம் யோகம்....."

"பாவம் பாவம் பாவம்......"

அந்தக் கிராமத்திலும் ஏனைய பக்கத்துக் கிராமங்களிலும் புதையல் எடுக்கப் பலர் திரிந்த காலம் அது. அதனால் சாமியார் ஏதோ பகிடி விடுகிறார் என்று நினைத்துக் கொண்டு சென்றுவிட்டார் அவர்.

சாமியார் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெரியவருக்கு சாமியாரின் கூற்றிலிருந்த உண்மைக் கருத்துப் புலனாகியது.

மனதிலே புதைந்து கிடக்கும் ஆசா பாசங்கள், உலகியல் சிந்தனைகள் முதலான அழுக்குகளைத்தான் புதையல் என்று சாமியார் சொல்கிறார்.

அந்தப் புதையலை எடுத்து விட்டால் சுகம் கிடைக்கும் என்பது தான் "புதையல் எடுத்தாத்தான் சுகம் கிடைக்கும்" என்பதன் பொருள் என்று அவருக்குப் புரிந்து விட்டது.

சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டிருந்த சாமியார், அருகில் இருந்த அந்தப் பெரியவரை ஒரு தடவை பார்த்தார்.

தனக்குப் பார்வையாலே தீட்சை கொடுத்து வாக்குக் கொடுக்கப் போகிறார் சாமியார் என நினைத்து அந்தப் பெரியவர் மகிழ்ச்சியடைந்தார்.

சாமியார் தனது பார்வையை அகற்றி பால்ப் போத்தல்மேல் படரவிட்டார். பால்ப் போத்தலை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவர் கை நீட்டிப் பால்ப் போத்தலைத் தூக்கினார்.

போத்தலில் நிரம்பப் பால் இருந்தது. பாலினால் தனக்கு அபிஷேகம் செய்யப் போகிறாரோ என நினைந்து மகிழ்ந்தவராய் பணிவோடு சாமியாரின் பாதங்களைப் பார்த்தபடி தலை குனிந்திருந்தார் பெரியவர். சாமியார் கேட்டார்

"இதுக்குள்ள என்ன இருக்கு"

"பால்"

"எவளவு இருக்கு"

"நிறம்ப இருக்கு சாமி"

"இதுக்குள்ள இனி ஏதும் ஊத்தலாமோ"

"என்னண்டு சாமி ஊத்திறது. நிறம்பி இருக்கு"

"இத நிலத்தில் ஊத்தீற்றா பிறகு இதுக்குள்ள ஏதும் ஊத்திலாமோ"

"ஓம் சாமி"

'என்ன ஊத்திலாம்"

"தேன், நெய், பால், தண்ணி எதையும் ஊத்திலாம்"

"சரி"

குண்டுமணியைத் தட்டத் தொடங்கினார் சாமியார்.

"யோகம் யோகம் யோகம் யோகம்......"

"பாவம் பாவம் பாவம் பாவம்......."

ஊர்ப் பெரியவருக்கு உண்மை புரிந்துவிட்டது. புதையல் எடுக்கும் தத்துவம் தான் இதுவும் என்பதைப் புரிந்து கொண்டார்.

***

குண்டுமணிச் சாமியார் இருந்த மரத்தடி நிலத்துக்குச் சொந்தக்காரனின் பெயர் கந்தசாமி. இப்போது அவன்தான் அவருக்குத் தீவறை போடுவதற்குத் தினமும் விறகு கொண்டு வந்து கொடுப்பவன்.

ஒருநாள் அவன் விறகு கொண்டுவந்து போடும் போது அவனைப் பார்த்துச் சாமியார் கேட்டார்.

"கந்தசாமி, இந்தக் காணி ஆற்ற"

"என்ர தான் சாமி"

"ஏனிது இப்பிடிக் காடாக் கிடக்கிது. இத வெட்டித் திருத்தி வயலாக்கி நெல்லு விதைக்கேலாதோ"

"எனக்கு ஆடி மாதம் மழக்குணங் கட்ட இழுப்பு (ஆஸ்த்துமா) த் துடங்கீரும் சாமி. வேல வெட்டி ஒண்டுஞ் செய்யேலாது. மழை, பனி முடிஞ்சு பங்குனிக்குப் பிறகுதான் சுகம் வரும். பிறகு இத எப்பிடிச் சாமி வெட்டுறதும் திருத்திறதும், வயலாக்கிறதும், நெல்லு விதைக்கிறதும்" மிகவும் சலிப்போடு சொன்னான் கந்தசாமி.

"வருத்தம் மாறீற்றா எல்லாஞ் செய்வியோ"

"ஓம் சாமி"

"சரி நீ போய் ஒரு சின்னச் செப்புத்தகடு கொண்டா"

கந்தசாமி ஒரு சிறு செப்புத்தகடு கொண்டு வந்து கொடுத்தான். அதில் ஒரு ஆணியால் மூன்று நாலு கோடுகள் கீறினார். பின்பு அதை மடித்து

"இந்தா இத இடுப்பில கட்டிக்கொள்" என்றார்.

அன்றிலிருந்து கந்தசாமிக்கு இழுப்பு நோய் இல்லை. அந்தக் காணியை அவன் வெட்டித் திருத்தி வயலாக்கி நெல் விதைத்தான். வயலில் ஒரு புற்றில் காவல்க் குடில் ஒன்று போட்டான்.

"சாமி இதில இருந்தா மழை காலம் கஸ்ரம். வாங்கோ வந்து குடில்ல இருங்கோ"

என்று அழைத்துச் சென்றான்.

அங்கே வழமைபோல் விறகுத் தீவறை. குண்டுமணிகள், இடையிடையே புகையிலை, சாப்பாடு, தேநீர், எதற்கும் குறைவில்லை. சாமியாருக்கு ராஜ உபசாரம் கிடைத்தது.

கந்தசாமியின் குடும்பம் நன்றாக இருந்தது. நேரந்தவறாமல் சாப்பாடு கொடுத்து நன்றாகக் கவனித்தான். பணிவோடும் அடக்கத்தோடும் மிகுந்த மரியாதை கொடுத்து நடந்தான்.

வயலில் நெல் செழித்து வளர்ந்திருந்தது. கம்பி குடலைப் பருவத்தைக் கடந்து கதிர்வீசி பால் ஏறுகின்ற பருவத்து வேளாண்மையாகி விட்டது.

அந்த ஊரிலேயே அவனுக்குத்தான் நல்ல "வெள்ளாண்மை" என்று அவனது காதுபட எல்லோரும் கதைத்துக் கொண்டனர். இன்னும் இரண்டு மூன்று வாரங்கள் கடந்தால் அரிவு வெட்டலாம்.

கந்தசாமிக்குப் பெருமை பிடிபடவில்லை. அப்படி ஒரு வெள்ளாமையை அவன் கனவில்கூட கண்டதில்லை. இப்போது அவனது நடத்தையிலும் சில மாறுதல்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன.

முன்பு போல சாமியாரை அவ்வளவாக அவன் கவனிப்பதில்லை. சிலவேளை விறகு முடிந்துவிடும், சிலவேளை சாப்பாடு பிந்திவிடும், சில முணுமுணுப்புக்களையும் செய்யத் தொடங்கிவிட்டான்.

கந்தசாமியின் இந்த மாற்றத்துக்கான காரணம் சாமியாருக்குப் புரியாததல்ல. இது மனிதர்கள் யாவருக்கும் வரும் நோய்தான் என்பது சாமியாருக்குத் தெரியும்.

வயலுக்குள் மாடுகள் வந்தால் சாமியார் கலைக்கவேண்டும் என்பது கந்தசாமியின் எதிர்பார்ப்பு. தான் இரவு காவலுக்கு வரப்பிந்தி விட்டால்.....

"திண்டு திண்டு போட்டுச் சும்மா இருக்கிற சாமியார் ஒருக்கா எழும்பி வயலச் சுத்திப் பாத்து பண்டியக் கிண்டியக் கலைச்சா என்ன குறைஞ்சா போடுவார்" என்ற எண்ணத்திலான முணுமுணுப்பு வேறு.

சாமியாரின் தீவறையிலுள்ள விறகு கட்டைகளையும் கூட சிலவேளை எடுத்துக் கொண்டுபோய் பன்றிக் காவலுக்காக வரப்பு மூட்டில் வைத்து நெருப்பு மூட்டி விடுவான்.

ஒரு நாள் கந்தசாமி இரவு தாமதமாகவே காவலுக்கு வந்தான். வரும்போது கதியால் வேலிக்குள் தலைநீட்டி மாடுகள் நெற்பயிரைக் கடித்துக் கொண்டிருந்தன.

மாடுகளைக் கலைத்துத் துரத்திவிட்டு கடப்பைக் கடந்து சாமியார்மேல் கோபமாகப் புறுபுறுத்துக் கொண்டு வந்தான்.

சாமியார் குடிலுக்குள் தீவறையருகில் இருந்தார். முன்னால் குண்டுமணிகள் சிதறிக் கிடந்தன. குண்டுமணிகளைக் கைவிரலால் தட்டிக் கொண்டு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

அது அவர் வழமையாகச் சொல்லும் "யோகம்.... யோகம்..... பாவம்..... பாவம்" முணுமுணுப்பல்ல. மந்திரம் போலல்லாது வாய்விட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அவரின் பின்புறமாக வந்த கந்தசாமி அவர் என்ன சொல்கிறார் என்பதை அறிவதற்காக மெதுவாக வந்தான். குடிலின் பின்புறமாக வந்து நின்று கவனித்தான்.

"கந்தசாமிக்கு இனி வருத்தம் வரோணும்.

வருத்தம் வந்தாத்தான் சுகம் வரும்.

ஓம்.... ஓம். வருத்தம் வந்தாத்தான் சுகம் வரும்"

கந்தசாமிக்கு உடல், பதறத் தொடங்கிவிட்டது. சாமியாருக்கு முன்னால் வந்து நின்றான்.

"கந்தசாமி! அரையில கட்டீருக்கிற செப்புத் துண்ட அவிட்டுத் தா" என்றார் சாமியார்.

சாமியாரிடம் இனி எதைச் சொல்லி முறையிட்டும் விமோசனம் கிட்டாது என்பது அவனுக்குத் தெரியும். செப்புத் தகட்டை அவிழ்த்துக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டு புறப்பட்டார் சாமியார்.

கந்தசாமிக்கு இழுப்புத் தொடங்கிவிட்டது. அவனது அந்த வெள்ளாமையில் (வேளாண்மை) ஒருபிடி கதிர் கூட அவனால் வெட்டி எடுக்க முடியவில்லை.

(யாவும் உண்மையே)

# மாவீரன் பண்டாரவன்னியன்

**வாகரை வாணன்**



வைகாசிப் பூரணை நிலவின் ஒளி மழையில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் மூழ்கிப் போகின்றது. அடங்காப்பற்றின் நந்திக் கடற்கரைக்குச் சமீபமாக ஓங்கி வளர்ந்த ஒரு வேப்பமரத்தின் அடியில் காட்டு மரங்களால் அழகுறக் கட்டப்பட்டு வைக்கோலினால் வேயப்பட்ட அவ்வாலயம் குலமகள் ஒருத்தியின் நெற்றியில் இடப்பட்ட குங்குமப் பொட்டுப் போல அந்த நிலவு வெளிச்சத்தில் அனைவரையும் ஈர்த்துக் கொண்டிருக்கிறது.

அலைகடல் ஒரு புறம் அம்மன் புகழ்பாட, பாலை மரங்கள் மறுபுறம் அவள் பக்தர்களுக்குத் தண்ணிழல் தந்து ஆதரிக்க, பசிய வயல்கள் இன்னும் ஒரு புறம் பார்ப்பவர் கண்களுக்கு விருந்தளிக்க, ஒரு சொர்க்கமாக அமைந்திருக்கும் அந்தச் சூழலில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் கண்ணகை அம்மனின் பொங்கலுக்கான ஏற்பாடுகள் அமர்க்களமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொங்கல் இட்டு அம்மனைப் பூசிக்க வேண்டுமென்ற ஆவலில் முள்ளியவளை, தண்ணிரூற்று குமிழமுனை கொக்கிளாய் முதலான ஊர்களிலெல்லாம் இருந்து அடியார்கள் மாட்டு வண்டிகளில் ஒரு தொடர் சங்கிலி போல வந்து கொண்டிருக்கின்றனர். வண்டிகளை எளிதாகவே இழுத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வரும் ஏரி மதர்த்த நாம்பன்கள், எருதுகளின் கழுத்துமணி ஓசை அப்பிரதேசம் முழுவதிலுமே பெரும் கலகலப்பை உண்டாக்கி விடுகின்றது.

சந்தோசம் நிறைந்த அந்தச் சமயத்தில் யாரும் எதிர்பாராத விதத்தில் தாளலயத்தோடு கூடிய குதிரைகளின் குளம்பொலி கேட்கின்றது. மக்கள் பரபரக்கின்றனர். சற்று நேரத்தில் அதோ பனங்காமம் அரசர்..... பனங்காமம் அரசர்...... என்ற ஆரவாரம் மக்களிடையே எழுந்து அந்தக் காடெல்லாம் எதிரொலிக்கின்றது.

அம்மனைத் தரிசிக்க வந்த பக்தர் வெள்ளம் இப்போது பனங்காமம் அரசர் பக்கம் அணை உடைத்துப் பாய்கின்றது. எடுப்பான இரண்டு வெள்ளைப் புரவிகள் ஒரு பெரிய பாலை மர நிழலில் வந்து நிற்கின்றன. அவற்றில் ஒன்றில் பனங்காமம் அரசன் பண்டாரவன்னியன், மற்றதில் அவன் அருமைக் காதலி குருவிச்சை வன்னிச்சி.....

மன்னனையும், தங்கள் எதிர்கால மகாராணியையும் மிக அருகில் கண்ட மக்கள் வெள்ளம் மீண்டும் ஆர்ப்பரிக்கின்றது........ பனங்காமம் அரசர் வாழ்க..... எங்கள் அரசி குருவிச்சை வன்னிச்சி வாழ்க.......

வாழ்த்தொலி கேட்டு மகிழ்ந்த பண்டாரவன்னியன், ஒருவித பெருமிதத்தோடு தனது ஓர விழியால் வன்னிச்சியை ஊடுருவுகிறான். அவள் முகம் நாணத்தால் அப்படியே சிவந்து போகின்றது. அதற்குள் மக்கள் வெள்ளம் அவர்கள் இருவரையும் சூழ்ந்து கொள்கிறது.

கண்ணகை அம்மன் சந்நிதியில் கண்கள் மூடி மெய்மறந்த நிலையில் நிற்கிறான் பண்டாரவன்னியன். அவன் பக்கத்தில் அம்மனை நோக்கிக் கைகுவித்தபடி நிற்கும் குருவிச்சை வன்னிச்சியின் கண்கள் சிறிது கலங்குகின்றன. பூவிதழ்கள் அசைகின்றன......

அம்மா..... தாயே...... அடங்காப் பற்றும், அதன் அரசரும் உனது அடைக்கலம்........ நீதான் அருள்பாலிக்க வேண்டும்.

தரிசனத்தை முடித்துக் கொண்ட இருவரும் அதே மக்கள் வெள்ளத்தில் நீந்தி வந்து அஸ்வங்களில் ஆரோகணிக்கின்றனர். வாழ்த்து முழக்கம் வானைத் தொடுகின்றது.

பூமி முழுவதையுமே புழுதி மண்டலமாக்கிக் கொண்டு புரவிகள் இரண்டும் வாயு வேகத்தில் விரைவதைக் கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் கண்டு களித்த மக்கள் ஒருவரோடு ஒருவர் உரையாடுகின்றனர்.

"என்ன இருந்தாலும் பனங்காமம் அரசர் அசகாய சூரர்தான்......"

"உண்மைதான்........ கப்ரன் வொண்றிவெக்கிடம் தன்னைக் காட்டிக்கொடுக்க கரிக்கட்டு மூலைக்காக்கை வன்னியன் தயாராக இருப்பதை நன்கு அறிந்திருந்தும் அவனுடைய பிரதேசத்துக்குள் பட்டப்பகலில் வந்து போகும் துணிச்சல் பனங்காமம் அரசரைத் தவிர வேறு யாருக்கு வரும்?....."

முல்லைத்தீவுக் கோட்டையை பனங்காம அரசர் முற்றாகத் தகர்த்து விட்டதால் ஆத்திரம் அடைந்திருக்கும் வெள்ளைக்கார கப்ரன் யாழ்ப்பாணத்தில் பெரும் படையைத் திரட்டுவதாகக் கேள்வி.....

எந்தப் படையும் பண்டாரவன்னியனை எதுவும் செய்துவிட முடியாது. அதுவும் குருவிச்சை வன்னிச்சி இருக்கும் வரை அடங்காப்பற்றில் ஒரு கொப்புக்கூட அசையாது......

பண்டாரவன்னியனின் அருமை பெருமைகளில் திளைத்திருந்த மக்கள் வெள்ளம், சற்று நேரத்தில் அம்மன் பொங்கல் சுவையில் கிறங்கிப் போகின்றது.......

பண்டாரிக்குளம் - பனங்காமம் அரசன் பண்டாரவன்னியனின் இராசதானி. அடங்காப்பற்றின் ஆணிவேர். அங்கே ஓர் அரிமாவைப் போல சிலிர்த்துக் கொண்டு நிற்கிறது அவனது அரச மாளிகை. அந்த மாளிகையின் ஆலோசனை மண்டபத்தில் நடுநாயகமாக வீற்றிருக்கிறான் பண்டாரவன்னியன். அவனைச் சுற்றி குருவிச்சை வன்னிச்சி குமாரசிங்க வன்னியன், நல்ல நாச்சாள் வன்னிச்சி, உமாச்சியா வன்னிச்சி ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர்.

முகங்களில் கவலையின் ரேகைகள் முத்திரையிட்டது போல பளிச்செனத் தெரிகின்றன.

ஆலோசனை மண்டபத்தில் நிறைந்திருந்த நிசப்தத்தை பண்டாரவன்னியனின் வீர உரை அப்படியே துடைத்து எறிந்து விடுகின்றது.

இரண்டு முனைகளில் இருந்து என்னையும் அடங்காப் பற்றையும் முறியடித்து விடலாம் என்று வெள்ளைக்காரன் கனவு காண்கிறான். எனது உயிர் இருக்கும் வரை இந்தக் கனவு எப்போதும் கனவாகவே இருக்கும்.

அரசனின் உணர்ச்சிகரமான வார்த்தைகளைக் கேட்ட நான்கு பேரும் அடுத்து அவன் வாயில் இருந்து உதிர்ந்து விழப்போகும் வார்த்தைகளிலேயே குறியாய் இருக்கின்றனர். அவர்களின் மன ஓட்டத்தினைப் புரிந்து கொண்டது போல வன்னியனின் வாயில் இருந்து தெறித்த ஒவ்வொரு வார்த்தையும் அவனது போர் வியூகத்தை எடுத்துக் காட்டுகின்றது.

எதிரியின் படை ஒன்று எட்வேட் மெட்சின் தலைமையில் திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் புறப்படுகின்றது. காக்கை வன்னியன் கைகொடுக்கப் போகும் அந்தப் படையை குமாரசிங்க வன்னியன் தலைமையில் நமது படை எதிர்த்துப் பெரும் போர் புரியும்.

அடுத்து....... இந்த மண்ணுக்கெதிராகக் கப்ரன் ஜோன்யுவலின் தலைமையில் இருந்து பெரும்படை யாழ்ப்பாணத்தில் அணி திரள்கிறது. இந்தப் படையை எதிர்த்து அழிக்கும் பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன். கண்டி அரசனின் பீரங்கிகளும் நமக்குக் கைகொடுக்கும். வெற்றி அல்லது வீர மரணம்.....

பண்டாரவன்னியனின் வீர முழக்கம் அடங்காப்பற்று முழுவதும் பெரும் போர் முழக்கமாக ஒலிக்கிறது. வீட்டுக்கொரு வீரன் வீராவேசத்தோடு புறப்படுகின்றான். தாம் பெற்ற செல்வங்களுக்குத் தாமே ஆரத்தி எடுத்துத் திலகம் இட்டுத் தாய்மார் போர்க்களத்திற்கு அனுப்பி வைக்கும் அந்தக் காட்சி....... அப்பப்பா...... மெய் சிலிர்க்க வைக்கிறது.......

வீரத்தின் சின்னமான பண்டாரவன்னியனுக்கு கற்சிலைமடு ஒரு தோல்விக்களமாக அமையும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. செய்தி அறிந்ததும் குருவிச்சை வன்னிச்சியின் கருவிழிகள் இரண்டும் அவளின் பிறந்த ஊர் சமளங்குளமாகவே பெருக்கெடுக்கின்றன. அதுவும், அதிகாலையில் அயர்ந்து தூங்கும்போது தன் காதலன் கைது செய்யப்பட்டான் என்று அறிந்தபோது இது தான் வெள்ளைக்காரன் வீரமோ? என அவள் மனம் இயல்பாகவே வெகுண்டெழுந்தது. ஆனாலும் பனங்காமம் அரசன் எப்படியும் வெள்ளையரின் பிடியில் இருந்து தப்பித்துவிடுவார் என்று அவள் பூரணமாக நம்பினாள்.

கப்ரன் டிறிபேக்கின் தலைமையில் மன்னாரில் இருந்து வந்த படையை பண்டாரவன்னியனுக்குத் தெரியாமல் மறைத்தவன் காக்கை வன்னியனே என்பதை மக்கள் அறிந்ததும் அவர்களின் ஆத்திரம் அவன் மேல் திரும்பியது. பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மனுக்கு ஒரு எட்டப்பன் போல, பனங்காம பண்டாரவன்னியனுக்கு ஒரு காக்கைவன்னியன் என்று எண்ணிய போது அவர்கள் உள்ளம் அனலாகத் தகித்தது.

குருவிச்சை வன்னிச்சியைக் கண்ணகை அம்மன் கைவிடவில்லை. மன்னார் படைத்தலைவன் வென்றிபேக்கின் பிடியில் இருந்து பண்டாரவன்னியன் தப்பிவிட்டான் என்ற செய்தி அவள் காதுகளில் தேனாகப் பாய்ந்தது. அடங்காப்பற்று ஆடிப்பாடி மகிழ்ந்தது.

பண்டாரவன்னியனின் இரண்டாவது விடுதலைப் போர் விரைவாகவே ஆரம்பமானது. தமிழ் நாட்டின் காடவர் வம்சத்தைச் சேர்ந்த அவனுக்கு அடங்காப்பற்றின் காடுகளே பலமான அரண்களாகின. எதிர்பார்த்தபடி கண்டி அரசனின் உதவி கிடைத்ததும் வன்னி மண்ணின் விடுதலைக்கான யுத்தம் வெகு உற்சாகமாகவே நடைபெற்றது.

பண்டாரவன்னியனின் போர் முனைப்புக்களால் பெரிதும் கலக்கம் அடைந்த கலக்டர் ரேணர் விடுத்த வேண்டுகோள் வெள்ளைக்காரப் படைகளை மீண்டும் மூன்று போர் முனைகளிலும் கொண்டு வந்து நிறுத்துகின்றது.

இதனால் இன்னும் எரிச்சல் அடைந்த பண்டாரவன்னியன், அடிபட்ட வேங்கையாகவே பகைவர் மீது பாய்ந்தான். அவனது இந்தப் பாய்ச்சலுக்குத் துணையாக உடன் பிறந்தாள் நல்ல நாச்சிவன்னிச்சியும், குருவிச்சைவன்னிச்சியும் தோள் கொடுத்தது கண்ட பகைவர் சேனை அடங்காப்பற்று நமக்கு அடங்காதோ என்று அச்சம் கொள்கிறது.

அடங்காப்பற்றின் உடையாவூர் அது. மும்முனைத் தாக்குதலை முறியடித்தே தீரவேண்டும் என்ற ஆவேசத்தோடு பண்டாரவன்னியன் போரிட்டுக் கொண்டிருக்கிறான். பார்க்கப் பயங்கரமான அந்தப் போர்க்களத்தில் திடீரென எங்கிருந்தோ வந்த வெள்ளையனின் பீரங்கிக்குண்டுகள் வன்னியனின் கால்களைப் பதம்பார்த்து விடுகின்றன.

களத்தில் விழுப்புண் பெற்ற காவலனை அவனது வீரர்கள் உடனடியாகவே சுமந்து கொண்டு பனங்காமம் விரைகின்றனர். அங்கே அந்தச் சுதந்திர பூமியில் சுத்தவீரன் பண்டாரவன்னியன் தன் இறுதி மூச்சை விடுகின்றான்.

இந்தப் பேரிடி குருவிச்சை வன்னிச்சி மீது இறங்குகிறது. அவள் கைகள் கார்த்திகைக் கிழங்கைப் பற்றிக் கொள்கின்றன.

உ

# வெள்ளைச் சேலை

ஓ. கே. குணநாதன்

பொழுதை இருள் அரக்கன் விழுங்கி இருந்ததனால் எங்கும் அமாவாசை இருட்டு 'கும்' மென்றிருந்தது.

இருளுக்குப் பயந்து பழக்கப்பட்டுப் போன சனங்கள் வீட்டுக்குள் முடங்கி நீண்ட நேரமாகி விட்டன. இது இன்று நேற்று ஏற்பட்ட பழக்கமல்ல. என்றைக்கு யுத்தம் என்று ஒன்று வந்ததோ அன்றிலிருந்து ஏற்பட்டதுதான்.

ராசாத்தி வெள்ளைச் சேலைக்குள் சுருண்டு கிடந்தாள். அவள் நித்திரையில்லை. நித்திரை வருவதாகவும் இல்லை. கண்களை இறுக்க மூடிக் கொண்டு நித்திராதேவியை அணைக்க முயன்றாள். கடந்தகாலக் கசப்பான நினைவுகளும், நிகழ்காலப் பய உணர்வுகளும் நெஞ்சிலே பாராங்கல்லாக அமுக்கிக் கொண்டிருந்தன.

இது ஒரு எல்லைக் கிராமம். வெளிக்குளக் கிராமமும் மடுக்கந்தைக் கிராமமும் ஒட்டிப் பிறந்த இரணைக் குழந்தைகள் போல. வெளிக்குளம் தமிழர் வாழும் பிரதேசம். மடுக்கந்த சிங்களவர் வாழும் பிரதேசம். ஆனால் இங்கு சிங்களம் - தமிழ் என்ற வேறுபாடே கிடையாது. அன்று தொட்டு இன்று வரை ஒரு வீட்டுப் பிள்ளைகள் போலவே பழகுவார்கள். அவ்வளவு அன்னியோன்யம். இரண்டு கிராமங்களையும் ஒரு சிறிய கிரவல் வீதி இரு கூறாக்கியிருந்தது. வெளிக்குளம் மக்கள் சந்தியிலே இருக்கும் ஆரியதாஸாவின் கடையிலேதான் சாமான் வாங்கப் போவார்கள். மடுக்கந்த பொடிமெனிக்கே குடும்பமும் அல்லயலும் ராசாத்தியின் வீட்டுக் கிணற்றிலே தான் குளிப்பது தண்ணீரெடுப்பது எல்லாம்.

சுவர் மணிக்கூட்டிலிருந்து எழுந்த ஒலி பன்னிரெண்டு மணியைப் பறைசாற்றியது. அதைத் தொடர்ந்து எங்கோ தொலை தூரத்திலிருந்து 'பிணந்தின்னி' நரியின் ஊளையின் சத்தம். அதைத் தொடர்ந்தாற் போல் யமனின் வருகையைக் கட்டியம் கூறுவது போல ஆந்தையின் அலறல்.

புரண்டு படுத்தாள். தெரு நாய்கள் குரைத்து ஊரையே கூட்டி நின்றன. நெஞ்சம் பயத்தினால் 'படக் படக்' கென அடித்துக் கொண்டிருந்தது. அருகிலே படுத்த குழந்தையை அணைத்தவாறு காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

யாரோ நடந்து வரும் சத்தம் தெளிவாகவே கேட்கிறது. சப்பாத்தின் ஓசைகள் 'டக்....டக்....' சத்தத்தைக் கூர்ந்து கேட்டாள். சத்தம் அவர்களை நோக்கியே வந்து கொண்டிருப்பது போலவே கேட்கிறது.

நிட்சயமாக இது ஆமியாகத்தான் இருக்க வேண்டும். அல்லது புலியாகத்தான் இருக்க வேண்டும். ஆனால் ஒன்றை மட்டும் அடிச்சுக் கூற முடியும். இது ஒரு ஆயுதம் தரித்த குழுவேதான். காலங் காலமாக இந்த எல்லைக் கிராமத்திலே வாழ்ந்து பழக்கப்பட்ட அவளுடைய அனுபவம் கூறுகிறது. ஒன்றா இரண்டா இப்படி எத்தனை ஆயுதக் குழுக்களை இந்த எல்லைக் கிராமமக்கள் சந்தித்து விட்டார்கள்.

எங்கும் நிசப்த அமைதி நிலவுகிறது. நாயின் ஓலமும் சப்பாத்தின் ஓசையும் மட்டுமே தொடர்கின்றன.

ஆமிக்காரர்களாக இருந்தால் பொழுது புலர்வதற்கிடையில் வெளிக்குளக் கிராமம் கசாப்புக் கடையாக மாறிவிடும். புலிகளாக இருந்தால் இருட்டோடு இருட்டாக மடுக்கந்த கிராமம் கொலைக் களமாக மாறிவிடும்.

துப்பாக்கி வேட்டுக்கள் கேட்கும். வாள் வீச்சுக்கள் நடக்கும். இரத்த ஆறு ஓடும். தீ நாக்குகள் வீடுகளைச் சுவைக்கும். பூமியில் பிணங்கள் மலிந்து போய்க் கிடக்கும். பிணங்களை ஊளையிடும் நரிகள் இழுத்துச் செல்லும். பொழுது புலர்ந்ததும் சிதறிய மூளைகளை அண்டங் காகங்கள் தெருவிலே போட்டுக் கொத்தும்.

பயங்கர நினைவு அவளைப் பேயாகப் போட்டு ஆட்டிப் படைத்தது. இந்த யுத்தம் முடிவுக்கு வராதா? அவளது உள்ளம் ஏங்கியது. அவள் ஒரு விதவை. இது யுத்தம் கொடுத்த தீர்ப்பு. அவள் மட்டுமா விதவை? இந்த நாட்டு ஜனாதிபதி கூட விதவையாகியதற்கு காரணமாயிருந்தது யுத்தம்தானே! பிரதம மந்திரி விதவையாவதற்குக் காரணமானதும் யுத்தந்தானே! அதுமட்டுமா? நாடு எத்தனை அறிஞர்களை மேதைகளை இழந்து தவிக்கிறது. பிரதம மந்திரி எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்க கொலை! விஜேகுமாரதுங்க படுகொலை! ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்க மீது குண்டுத் தாக்குதல்! அமைச்சர் லலித் அத்துலத்முதலி துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி! முன்னாள் இந்தியப் பிரதம மந்திரி ராஜீவ் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் மரணம்! ஜனாதிபதி பிரேமதாஸ குண்டு வெடிப்பில் மரணம்! எதிர்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம்.....! இவைகள் எல்லாம் என்ன? ஆயுதங்களால் விளைந்த வினைகள். இதற்குப் பின்பும் ஒரு யுத்தம் தேவைதானா?

குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள். கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டாள். ஒன்றுமறியாத குழந்தை அயராது நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது.

இந்த ஒன்றுமறியாத குழந்தைகள் போல எல்லா மனிதர்களும் இருந்து விட்டால் இன வேறுபாடு கிடையாது! நாட்டில் யுத்தமே இருக்காதே!

குழந்தையை நினைக்கப் பாவமாக இருந்தது. இன்று நிம்மதியாகத் தூங்கும் குழந்தை நாளை வளர்ந்து பெரியவனானதும் தனது தந்தை ஆமிக்காரர்களால் படுகொலை செய்யப்பட்டார் என்ற தகவலை அறிந்தால் அவனது மனம் எவ்வளவு வேதனைப்படும். அவளால் எவ்வளவு காலத்திற்கு இந்த உண்மையை மறைக்க முடியும். என்றோ ஒருநாள் உண்மை வெளிவரத்தானே செய்யும். எவ்வளவு அன்பைப் பொழிந்தும் சத்தியத்தைப் போதித்து வளர்த்தாலும் அவனுடைய அப்பா கொலை செய்யப்பட்டார் என்றவுடன் சும்மா இருப்பானா என்ன! அவனுடைய அப்பாவைக் கொன்றது ஆமிக்காரன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதை அவன் நம்ப வேணுமே! அப்பாவைக் கொன்றது ஆமியாக இருந்தா என்ன! யாராக இருந்தாலென்ன! அப்பாவைச் சிங்களவர்கள் கொன்று விட்டார்கள் என்றுதானே கருதுவான்.

அப்படியானால் எதிர்காலத்தில் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையேயுள்ள இன ஒற்றுமை என்ற இடைவெளி நீண்டு விடும். அப்பாவைக் கொன்றதும் ஒரு ஆயுதம்தான் ஆயுதத்தை எடுக்காதே என்றாலும் அவனை அவளால் தடுக்கத்தான் முடியுமா? பயங்கர ஆயுதத்தைக் கையில் ஏந்திக் கொண்டு புலிகளுடன் புலிகளாக

காடுகளிலும் மேடுகளிலும் பங்கர்களிலும் பதுங்கு குழிகளிலும் கரும்புலியாக தந்தையைக் கொன்றவனைத் தேடி அலைவானே! அப்படியானால், தன் மகனைப் போல தாயை - தந்தையை இழந்தவர்கள் எத்தனை ஆயிரம் பேர்....... அத்தனை பேரும் இந்த ஆயுதங்களை ஏந்தினால் நாட்டில் யுத்தமே ஓயாது. துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டுக் கொண்டேயிருக்கும். இதற்காகத்தானா புருஷனை இழந்து சுகங்களை மறந்து கண்ணீரைப் பாலாக்கிக் குழந்தையை வளர்க்கின்றாள். மனம் ஓலமிட்டது.

சப்பாத்துக்களின் ஓசைகள் கிழக்குப் பக்கமாக நகர்வது தெளிவாகவே வேட்கிறது. ஒருவித ஆரவாரம் ஏதோ அசம்பாவிதம் நிகழ்வதனை ஊர்ஜிதம் செய்கிறது.

கிழக்குப் பக்கமாக சப்பாத்தின் ஓசைகள் நகர்கின்றதே! ஒருவேளை பொடிமெனிக்கேயின் வீட்டில் அசம்பாவிதம் நடக்கின்றதோ!

பாவம், பொடிமெனிக்கேயின் மகள் நிம்மி. அவளும் நிம்மியும் ஒரே வயதையுடையவர்கள். காலையில் ஆரிகடைச் சந்தியிலே இருவரும் வவுனியா பஸ்ஸில் ஏறி ஆரியபவான் சந்தியிலே இறங்கி, இருவரும் கொஞ்சத்தூரம் கைகோர்த்துக் கொண்டு நடந்து சென்று, அவள் சைவப்பிரகாச வித்தியாசாலையை நோக்கி நடக்க நிம்மி காமினி மகா வித்தியாலயத்தை நோக்கிப் பிரிந்து செல்வாள்........

அவளின் வீட்டு முற்றத்துக் கிணற்றுக் கட்டில் இளமைச் செழுமையுடன் இருவரும் குந்தியிருந்து கதைத்துச் சிரித்து, சலவைக் கல்லிலே உடுப்பை மாறி மாறி அடித்துத் தோய்த்து, ஆளுக்காள் ஊத்தை தேய்த்துக் குளித்தது...... பசுமையான நிகழ்வுகள்.

ஆனால், நேற்று....... வெள்ளைச் சேலையைச் சுற்றிக் கொண்டு விதவைக் கோலத்துடன் குழந்தையைக் காலிலே போட்டுக் குளிப்பாட்டியதைக் கண்ட போது அவளுக்கே அழுகை வந்து விட்டது. சென்ற வாரந்தான் நிம்மியின் கணவன் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி இறந்திருந்தான்.

ஓ! அந்தக் குழந்தையும் வளர்ந்து தந்தையைக் கொன்றது புலிகள்தான் என்று அறிந்து தந்தையைக் கொன்றவர்களைப் பழி வாங்க ஆமியில் சேர்ந்து துவக்கைத் தூக்கிக் களத்தில் இறங்கினால் யுத்தம் ஓயாது! அடிபாடுகள் தொடரும். யுத்தத்தின் கெடுபிடிகள் அதிகரித்து சிங்கள மக்களின் மனங்களில் புலிகள் என்றால் தமிழர்கள் என்ற எண்ணம் வளர்ந்து கொண்டு வரும் பொழுது..... என் எதிர்காலத்தில் அவனும் தமிழர்களுக்கு எதிராகச் சண்டை பிடிக்க ஆமிக்கும் புலிக்குமிடையே சண்டை என்ற நிலைமாறி தமிழருக்கும் சிங்களவருக்குமிடையேயான போராக மாறுவது திண்ணம்.

அதுவும் ஒன்றாய்ச் சேர்ந்து, சிரித்துக் கதைத்து உடுப்புத் துவைத்து ஊத்தை தேய்த்துக் குளித்து விளையாடியவர்களின் புதல்வர்கள் எதிரும் புதிருமாக ஆயுதங்களுடன்....... என்ன அநியாயம்! விழிகளுக்குள் நீர் திரையிட்டது.

தொலை தூரத்திலிருந்து சாமக் கோழியொன்று அமைதியைக் கிழித்துக் கொண்டு குரல் கொடுத்தது. நேரம் ஒரு மணி.

நீண்டதொரு பெருமூச்சை விட்டபடி புரண்டாள். கேற் 'கீறிச்' என்ற ஓசையுடன் திறந்து கொண்டது. அவளுக்கு இதயமே நின்று விடும் போல இருந்தது. இந்த நள்ளிரவில் யாருமே வரமுடியாது. நிட்சயமாக இது ஆயுதக் குழுவேதான். அவளுடைய இதயம் பல முறை அடித்துக் கூறிற்று.

'செல்' விழுந்த ஓசை கேட்டு எழுந்த குழந்தை போல எழுந்து குந்திக் கொண்டாள். யாரோ நடந்து வரும் சத்தம் தெளிவாகவே கேட்கிறது. இயமன் பாசக் கயிற்றுடன் அவளுடைய வாசற்படியும் ஏறி விட்டான். என்பது அவளுக்கு நன்றாகவே புரிந்தது.

எல்லைக் கிராமங்களில் குழந்தைகள், பெரியவர்கள், பெண்கள் என்று பாராமல் ஆடு, மாடுகள் போல கண்ட துண்டமாக வெட்டியும் கொத்தியும் படுகொலை செய்யப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டுச் சிதறிக் கிடந்த உடல்களைக் கண்டிருக்கிறாள். வேதனைப்பட்டிருக்கிறாள். கண்ணீர் விட்டிருக்கிறாள்.

ஆனால்...... இப்பொழுது.... கதவு தட்டப்படுகிறது. அவர்கள் வந்து விட்டார்கள். இனித் தப்பவே முடியாது. மனம் அழுதது. சத்தம் கேட்கும் என்ற அச்சத்தில் மூச்சுக் கூட வெளியே வர மறுத்தது.

சில கணங்கள் சிலையாக நின்றாள். கதவு தட்டப்படும் வேகம் கதவையே உடைத்து விடும் போல இருந்தது.

கதவைத் திறக்காமல் விட்டால் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைவார்கள். அல்லது வீட்டுக்குப் பெற்றோல் ஊற்றி எரித்து விட்டுப் போவார்கள்.

கதவைத் திறப்பதைத் தவிர வேறு வழியில்லை. கதவை நோக்கி நடந்தாள். இறுதியாகத் திரும்பி குழந்தையை ஒருதடவை பார்த்தாள். குழந்தை அவளைப் பரிதாபமாகப் பார்ப்பது போன்ற பரிணமிப்பு. தாயுள்ளம் நெகிழ்ந்து போயிற்று. மீண்டும் ஓடி வந்து குழந்தையைத் தூக்கி அணைத்துக் கொண்டாள்.

"கண்ணே, நான் செத்தாலும் நீ சாகக்கூடாது! நான் உன்னைச் சாக விட மாட்டன்!" மாறி மாறிக் கன்னம் தேயும்வரை முத்தமிட்டாள்.

கதவு வேகமாக.... மிக வேகமாகத் தட்டப்படுகிறது. குழந்தையைக் குசினிச் சமையல்க் கட்டுக்குக் கீழே யாருடைய கண்ணிலும் படாமல் கிடத்தினாள். குழந்தை சலனமில்லாமல் அமைதியாகக் கிடந்தது. இனி யாரும் கண்டு விட முடியாது. ஒருவித திருப்தியுடன் கதவை நோக்கி நடந்தாள்.

இன்னும் சில நிமிடங்களில் இந்த உடல் உயிரைப் பிரிந்து விடும். பின்பு இந்த உயிரற்ற உடலுக்கு மதிப்பிருக்காது. ஆண்டவனை வேண்டிக் கொண்டாள். கதவைத் திறந்தாள்.

அங்கே அவள் கண்ட காட்சி அவளையே அதிர வைத்தது. செல்லக்கண்டுக் கிழவன் நின்று கொண்டிருந்தார். அவரைக் கண்ட அவளுக்கு வெளிக்குளத்துப்

பிள்ளையாரே நேரில் வந்தது போல இருந்தது. தன்னையே மறந்து 'செல்லக்கண்டுத் தாத்தா!' என்று அலறியே விட்டாள்.

அவள் "செல்லக்கண்டுத் தாத்தா!" என்று அழைத்தவிதம் அவள் எவ்வளவு பயந்து போய் இருக்கிறாள் என்பது சொல்லாமலே புரிந்தது அவருக்கு.

கட்டையான தோற்றமும் நரைத்த முடியும் தொழிலாளிக்குரிய முறுக்கேறிய உடம்பும் கொண்ட செல்லக்கண்டுக் கிழவனே ஊரில் நடக்கும் நல்லது கெட்டதுகளை முன்னின்று வழி நடத்துபவர். இதனால் எல்லோருக்கும் அவர் மீது ஒரு மதிப்பு இருந்தது.

சில நிமிடங்கள் மௌனத்தில் கரைந்தன.

"புள்ள ராசாத்தி, ஆமிக்காரங்கள் எங்கட சனங்களெல்லாம் வெட்டிக் கொண்டு வாறாங்களாம். எல்லாச் சனங்களும் ஓடிப் போயிற்றாங்கள் நீ போகேல்லையா புள்ள! நீயும் வா புள்ள ஓடுவம்" மெதுவான குரலில் செல்லக்கண்டுக் கிழவனே கேட்டார்.

"இந்த இருட்டில் எங்க தாத்தா ஓடிறது"

'உயிர் மிஞ்ச வேணுமெண்டா எங்கேண்டாலும் ஓடத்தானே வேணும் புள்ள"

"அதுதான் தாத்தா எங்க ஓடுறது"

"நீ ஒண்டுக்கும் பயப்பிட வேண்டும் புள்ள. எனக்குப் பின்னால வா. நான் உன்னைப் பாதுகாப்பான இடத்தில கொண்டு போய் விடுறன்"

சில நிமிடங்கள் சிந்தித்தாள். தனக்காக இல்லாவிட்டாலும் குழந்தையின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவாவது ஓடித்தான் ஆக வேண்டும்.

"புள்ள, சும்மா யோசிச்சு நேரத்தை வீணாக்காத யோசிச்சுக் கொண்டு நிண்டா அவங்கள் வந்திருவாங்கள்."

வேறு வழியின்றிக் குழந்தையைத் தூக்கி அணைத்தபடி நடந்தாள்.

செல்லக்கண்டுக் கிழவனின் சுவடுகளை அவளுடைய பாதங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. மனம் 'ஓ' வென்று அழுதது. "இந்த எல்லைக் கிராமத்தில் எத்தின நாளைக்குத்தான் உயிரைக் கையில பிடித்துக் கொண்டு பயந்து பயந்து நிம்மதியில்லாம வாழுறது. உயிருக்கும் மேலான புருஷனையே இழந்து போன பிறகும் ஏன் இங்கே வாழ வேண்டும்? இதை விட இருக்கிற சொத்தெல்லாத்தையும் விற்றுப் போட்டு எங்கேண்டாலும் கண் காணாத தேசத்தில் அகதியாய்ப் போய் வாழ்ந்தாலும் நல்லது போலத் தோன்றிற்று. இந்தச் சனங்களெல்லாம் இந்தப் பொன் விளையும் பூமியை விட்டுப் போட்டு வெளிநாடு வெளிநாடு என்று ஏன் அகதிகளாகப் போகுது. கௌரவமாக வாழா விட்டாலும் கொஞ்சம் நிம்மதியாகவென்றாலும் வாழலாமென்றுதானே!"

வன்னிக் காட்டினுள் நுழைந்த போது ஆட்காட்டிக் குருவியொன்று அவலமாகக் குரலெழுப்பிப் பறந்து சென்றது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை கரிய மலைக் குன்றுகள் போல மருத மரங்களும் பிரம்புப் பற்றைகளும் விரவிக் கிடந்தன. அதன் கீழே சனங்கள் இருப்பது தெரிகிறது. உற்றுப் பார்த்தாள். முகங்களில் இருள் ஒட்டிக் கிடந்ததனால் ஒருவரையும் அடையாளம் காண முடியவில்லை. யாரும் யாருடனும் பேசவில்லை. பயம் அவர்களை ஊமையாக்கி இருந்தது.

ஒரு பெண் குழந்தையைக் கிடத்தி விட்டு அருகே இருப்பதனைக் 'கும்' இருட்டிலும் அடையாளம் கண்டு கொண்டாள். ராசாத்தியும் அக்குழந்தையருகே அவளுடைய குழந்தையைக் கிடத்தி விட்டு அவளும் இருந்து கொண்டாள்.

கொட்டும் பனியிடையேயும் சில்லூறு வண்டுகளின் இரைச்சல்களிடையேயும் மரணத்தை எதிர்பார்த்துப் பார்த்தே பயத்தினால் பொழுது ஒரு கணம் ஒரு யுகமாகக் கரைந்து கொண்டிருந்தது.

"ஒருநாள் இந்தப் பனியையே எங்களால் தாங்க முடியவில்லை. அப்படியென்றால் இந்த ஓயாத யுத்தத்திற்காக காலங் காலமாக காட்டிலேயும் பதுங்கு குழிகளிலும் வாழுகிற புலிகளும் ஆமிக்காரர்களும் எவ்வளவு கஷ்டப்பட வேண்டும். பாவம் அவர்களும் மனிதர்கள்தானே! யாரோ பெத்த பிள்ளைகள் தானே!"

பொழுது புலரும் ஜாடையாக தாட்டான்கள் பாலை மரத்துக் கிளைக்குக் கிளை தாவிப் பாய்ந்து ஊரையே கூட்டின.

தாட்டான்கள் பாய்ந்த சத்தத்தால் என்னவோ ஏதோ என்று பயந்தவர்கள் அவசரமாகத் தூக்கிக் குழந்தையை அணைத்துக் கொண்டனர்.

சூரியனின் பொற்கதிர்கள் காட்டை ஊடறுத்துக் கொண்டு வர மெல்ல மெல்லப் பொழுது புலர்ந்து கொண்டு வந்தது. அப்பொழுதுதான் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்க்க முடிந்தது.

ராசாத்தியின் அருகே குழந்தையை அணைத்தபடி நிம்மி. ராசாத்தியைக் கண்ட நிம்மியின் கண்கள் கலங்கின. ராசாத்தி நிம்மியைப் பரிதாபமாகப் பார்த்தாள். இருவரும் மௌனமான வார்த்தைகளால் அழுதார்கள்.

" ராசாத்தி நீ இங்கே ஏன் வந்தாய்? " நிம்மிதான் கேட்டாள்.

" நீ........" இது ராசாத்தியன் கேள்வி.

"ராசாத்தி, எங்கட சனங்களப் புலியள் வெட்டிக் கொண்டு வாறாங்களாம் எண்டு சொன்னாங்கள். அதுதான் நாங்கள் எல்லோரும் இங்க ஓடி வந்தம்"

"அப்படியென்றால்........ எங்கட சனங்களெல்லாம் ஆமிக்காரங்கள் சுட்டுக் கொண்டு வாறாங்கள் என்று சொன்னாங்களே! அதுதானே நாங்களெல்லாம் இங்க வந்தம்"

இருவரும் கதைக்கும் சத்தம் கேட்டுத் தாய்களை அணைத்தபடி திரும்பிய குழந்தைகள் ஆளை ஆள் பார்த்துச் சிரித்தன. இதுதான் இன ஒற்றுமை என்பது!

இருட்டிலும் அவசரத்திலும் இருவரும் குழந்தைகளை மாறி மாறித் தூக்கி அணைத்திருந்தனர்.

"அதுதானே ராசாத்தி பொய்யான ஒரு வதந்தி எங்களையெல்லாம் எவ்வளவு கஷ்டப்படுத்திப் போட்டுது பாத்தியா!"

"உண்மைதான் நிம்மி, இங்க மட்டுமல்ல, இந்த நாட்டில தொடர்கின்ற யுத்தத்திற்குக் காரணமே நடக்கிற உண்மைகளை மூடி மறைக்கிறது தான். பிரச்சனை நடக்கிற இடத்தில இருக்கிறதால எங்களுக்கு உண்மை தெரியுது. வடக்கில நடக்கிற உண்மை தெற்கில தெரியிறதில்லை. தெற்கில நடக்கிற உண்மை வடக்கில தெரியிறதில்ல. இடையால வாற பொய்யான வதந்திகளை நம்பிக் கொண்டே நாடு நாசமாகப் போகுது. இடையில் நாங்கதான் சாகிறம்" வெறுப்போடு கூறினாள் ராசாத்தி.

"இஞ்சபார் ராசாத்தி, நீ மட்டும் நான் மட்டுமல்ல. இந்த தமிழ் சிங்களச் சனம் எல்லாமே தான் வந்திருக்கு"

இருவரும் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுது இரவு அங்கு வந்து பாதுகாப்புத் தேடிய சனங்களும் ஒன்று கூடி விட்டார்கள். அவர்களில் தமிழன் - சிங்களவன் என்ற வேறுபாடு இருக்கவில்லை. அவர்கள் மனிதர்களாகவே இருந்தனர். அவர்களுக்கு இப்பொழுது இன ஒற்றுமையும் நிம்மதியான வாழ்க்கையும் மட்டுமே தேவையாக இருந்தது.

மடுக்கந்தக் கிராமப் பெரியார் அப்புசாமி விரக்தியோடு சொன்னார். "அங்க ஆமியும் புலியும் நாட்டுக்காக அடிபடுது என்று சொல்லுறாங்க ஆனா நாங்க இங்க காட்டுக்குள்ள இருக்கிறம்"

இதைக் கேட்ட செல்லக்கண்டுக் கிழவன் "உண்மைதான், இன ஒற்றுமைக்காச் சண்டை பிடிக்கிறம் என்று சொல்லுறாங்க ஆனா நாங்க ரெண்டு பேரும் இங்க ஒற்றுமையாகத் தானே இருக்கிறம்" என்றார்.

"எல்லைக் கிராமத்தில இருக்கிற நாங்க ஒற்றுமையாக இருக்கலாமென்றால் ஏன் வடக்கில இருக்கிறவங்களும் தெற்கில இருக்கிறவங்களும் ஒற்றுமையாக இருக்க முடியாது!"

மாட மாளிகையில இருந்து கொண்டு அடிக்க வேணும், பிடிக்க வேணும் என்று கத்துறவர்களுக்கும் ஊர்வலம் போறவர்களுக்கும் எங்க எங்கட கஷ்டங்கள் விளங்கப் போகுது. அப்படிக் கத்துறவங்க இங்க வந்து கத்த வேணும்!

தமிழனும் சிங்களவனும் இந்த நாட்டின் மைந்தர்கள். இந்த நாட்டின் சொத்துக்கள் நாங்கள். பேசித்தான் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க வேணும். இந்த வார்த்தைகளை சகலரும் முணுமுணுத்தனர்.

ராசாத்தி சொன்னாள். "நாங்கள் எல்லோரும் எங்களுக்குள்ள இப்படிச் சொல்லிச் சொல்லிக் கொண்டு இருக்கிறதனால் எந்த விதமான பிரயோசனமுமில்ல. தொடர்ந்து பயந்து பயந்துதான் சாகவேணும். இதுக்கு இன்றைக்கொரு முடிவு கட்டித்தான் ஆக வேண்டும்"

"அதுக்கு என் செய்யலாம்?"

"இன்டைக்கு வவுனியாக் கச்சேரியில எல்லா நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளுற யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான மாநாடு நடக்குது. எல்லோரும் அப்படியே போய் எங்களுடைய பிரச்சனையைச் சொல்லுவம்" இந்த ஆலோசனையை நிம்மியே சொன்னாள்.

இது எல்லோருக்கும் நல்ல ஆலோசனையாகவேபட்டது. புதிய உற்சாகம் பிறந்தது.

கச்சேரி வாசலை அடைந்த போது கேற் பூட்டப்பட்டிருந்தது. நாலைந்து பொலிஸ்காரர்கள் ஆயுதற்களுடன் காவல் நின்றனர்.

உள்ளே போக முயன்ற சனக்கூட்டத்தைக் கண்ட பொலிஸ்காரங்கள் ஓடி வந்து உள்ளே போக முடியாது என்றனர்.

" ஏன்? "

"உள்ளே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது"

"யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாங்கள் தான் அவர்களைச் சந்திக்கப் போகிறோம்"

"ஒருத்தரையும் உள்ளே விடக்கூடாது என்று கூறியிருக்கிறார்கள்"

"யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள் இங்கே இருக்க யாருக்காக மாநாடு? இப்படியான ஒரு மாநாடு தேவைதானா?"

"நாங்கள் அவர்களைச் சந்திக்கத்தான் போகிறோம்"

"இல்லை, போக முடியாது என்றால் போக முடியாதுதான்!" ஆயுதங்கள் நீண்டன.

மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள் 'கேற்' தானாகவே திறந்து கொண்டது.

மக்கள் ஒற்றுமைப்பட்டு விட்டால், இந்த ஆயுதங்களுக்கு வேலையில்லாமல் போய்விடும் என்பது எவ்வளவு உண்மை.

கூட்டம் இன்னும் ஆரம்பமாகவில்லை. விடயத்தை எடுத்துக் கூறியதும் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதி கிடைத்தது. சகலரும் அமர்ந்து கொண்டனர்.

அதிபரின் தலைமையில் கூட்டம் ஆரம்பமானது அதைத் தொடர்ந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் பேசினார்கள்.

"யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்காக பல சுயதொழில் திட்டங்கள் கொண்டு வந்திருக்கின்றோம்..... யுத்தத்தினால் காலை இழந்தவர்களுக்குச் செயற்கைக்

கால்கள் கொண்டு வந்திருக்கின்றோம்.... யுத்தத்தில் பெற்றோர்களை இழந்த அநாதைகளுக்கு அநாதை மடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கியிருக்கின்றோம்........ அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும் கூடுதலான நிதியை ஒதுக்கவுள்ளோம்.........."

ஆவேசமாக எழுந்த ராசாத்தி, "யுத்தத்தினால் இழந்த எனது புருஷனை வாங்கித் தர முடியுமா?" என்று கேட்டாள்.

தொடர்நாள் நிம்மி, "யுத்தத்தினால் கொல்லப்பட்ட எனது குழந்தையின் அப்பாவைப் பெற்றுத்தர முடியுமா?"

அடுத்த வருடம் இன்னும் உதவி வழங்கப்படும் என்கிறீர்களே! அப்படியாயின் தொடர்ந்து கண்ணி வெடிகள் வெடிக்கும், பொறி வெடிகள் வெடிக்கும். இதனால் இன்னும் பல கால்கள் இழக்கப்படும் என்கிறீர்களா? உங்களால் இழந்து போன எனது கால்களை வாங்கித் தர முடியுமா? இது கால்களை இழந்தவனின் ஒரு கேள்வி.

"யுத்தத்தினால் காணாமல் போனோர்களையே கண்டு பிடிக்க முடியாத உங்களால் பெற்றோரை இழந்து அநாதையா இருக்கும் எனக்கு எனது பெற்றோரைப் பெற்றுத்தர முடியுமா?" ஒரு அநாதையிடமிருந்து எழுந்த கடுமையான குரல்.

எல்லோரும் எழுந்தார்கள் "யுத்தம் கொடுமையானது. யுத்தத்தின் இழப்புக்களை யாராலும் ஈடுசெய்ய முடியாது. உங்களுடைய எந்த உதவியும் எங்களுக்குத் தேவையில்லை. எங்களுக்குத் தேவை நிம்மதியான வாழ்க்கை. நீங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்பார்க்கிறீங்களேயொழிய யுத்தத்தை நிறுத்தப்பார்க்கவில்லை. யுத்தத்தை நிறுத்தினால் இந்த நிவாரணங்கள் தேவையில்லையே! யுத்தங்கள் ஓய்ந்தால் யுத்த நிவாரணங்களுக்காக வெளிநாடுகளை கையேந்தி அடிமைகளாக வேண்டிய அவசியமில்லையே! யுத்தங்களுக்காகச் செலவளிக்கப்படும் பணம் மிஞ்சுமே!

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் நாடுகளே! எங்களுக்கு ஒரேயொரு உதவி செய்யுங்கள் எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து யுத்தத்தை நிறுத்தக் கோரிக் குரல் கொடுங்கள். இனம் மொழியற்ற கோரசான குரல்கள் மண்டபத்தையே நிறைத்தன.

நடந்தார்கள் முன்னால் ராசாத்தியும் நிம்மியும் வெள்ளைச் சேலையின் முகதலையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நடந்தார்கள். இனி நாட்டில் இந்த வெள்ளைச் சேலைகள் உருவாகக் கூடாது. சமாதானத்தின் வெள்ளைக் கொடிகளாக மாறட்டும். இந்தச் சமாதானத்தின் செய்திகள் சர்வதேச ரீதியில் ஒலிக்கட்டும் என்பது போலிருந்தது.

(முற்றும்)

# பொது

# (213 - 232)

# வவுனியா மாவட்டத்திலுள்ள இந்துக் கோயில்கள்

## 1. சிவன் கோயில்கள்

01) கோயிற்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயம்
02) சிவபுரம் சிவபுர சுந்தரேஸ்வரர் ஆலயம், சாஸ்திரிகூழாங்குளம்
03) புதுவிளாங்குளம் சிவன் கோயில்
04) தோணிக்கல் சிவன் கோயில் - வவுனியா.

## 2. அம்மன் கோயில்கள்

### அ) முத்துமாரியம்மன் கோயில்கள்

01) பெரியமடு ஆதிமுத்துமாரியம்மன் ஆலயம், ஓமந்தை.
02) நாம்பன்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், ஓமந்தை.
03) அலைகல்லுப்போட்டகுளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஓமந்தை.
04) கோயிற்குஞ்சுக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஓமந்தை.
05) மகிழங்குளம் ஆதிமுத்துமாரியம்மன் கோயில், ஓமந்தை.
06) வவுனியா பொதிக்களஞ்சிய வீதி **(Good Shed Rd)** மாரியம்மன் கோயில், வவுனியா.
07) பண்டாரிகுளம் முத்துமாரியம்மன் ஆலயம், வவுனியா.
08) தேக்கங்காடு (கற்குழி) முத்துமாரியம்மன் ஆலயம், வவுனியா.
09) ஆஸ்பத்திரி சுற்றுவட்ட வீதி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வவுனியா.
10) தோணிக்கல் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வவுனியா.
11) கூமாங்குளம் முத்துமாரியம்மன் ஆலயம், வவுனியா.
12) தெற்கிலுப்பைக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வவுனியா.
13) தம்பனைச்சோலை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வவுனியா.
14) ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நாகர் இலுப்பைக்குளம், வவுனியா.
15) ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், காத்தார் சின்னக்குளம், வவுனியா.
16) சம்மளங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வவுனியா.
17) இராசேந்திரங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வவுனியா.
18) பூம்புகார் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கல்மடு.
19) சாளம்பன் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், கல்மடு.
20) கிடாச்சூரி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், கிடாச்சூரி.
21) கற்பகபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், கற்பகபுரம், பம்பைமடு.
22) சமயபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், நெளுக்குளம், வவுனியா.
23) இராமர் புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், புளியங்குளம்.
24) புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், புளியங்குளம்.
25) குறிசுட்டகுளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கனகராயன்குளம்.
26) குஞ்சுக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், மாங்குளம்.

27) சின்னடம்பன் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நயினாமடு.
28) வேலங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நெடுங்கேணி.
29) பனைநின்றான் முத்துமாரியம்மன் கோயில், நெடுங்கேணி.
30) நெடுங்கேணி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நெடுங்கேணி.
31) சேனைப்பிலவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நெடுங்கேணி.
32) வெடிவைத்தகல்லு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நெடுங்கேணி.
33) கோரைமோட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நெடுங்கேணி.
34) புளியடிமுறிப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், பெரியதம்பனை
35) கரம்பைமடு முத்துமாரியம்மன் ஆலயம், முதலியார்குளம், செட்டிகுளம்.
36) வீரபுரம் ஸ்ரீ மாரியம்மன் ஆலயம், நேரியகுளம்.
37) குருக்கள்புதுக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், பூவரசங்குளம்.
38) நித்திய நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், பூவரசங்குளம்.
39) இறம்பைக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், வவுனியா.
40) சகாயமாதாபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வவுனியா.
41) துட்டுவாகை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில், செட்டிகுளம்.
42) அடப்பங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், செட்டிகுளம்.
43) சமளங்குளம் முத்துமாரியம்மன் கோயில், சமளங்குளம்.

### ஆ) கண்ணகியம்மன் கோயில்கள்

01) வண்ணாங்குளம் கண்ணகியம்மன் கோயில், கதிரவேலர் பூவரசங்குளம், ஓமந்தை.
02) கண்ணகியம்மன் ஆலயம், பாவற்குளம், 4ம் யூனிற், வாரிக்குட்டியூர்.
03) கண்ணகியம்மன் ஆலயம், கோயிற்புளியங்குளம், பூவரசங்குளம்.
04) கண்ணகியம்மன் ஆலயம், கிடாச்சூரி,
05) ஸ்ரீ பத்தினியம்மன் ஆலயம், தெற்கிலுப்பைக்குளம், வவுனியா.
06) ஈட்டிமுறிந்தான் கண்ணகியம்மன் கோயில், நெடுங்கேணி.
07) புற்குளம் கண்ணகியம்மன் கோயில், கனகராயன்குளம்.

### இ) பத்திரகாளியம்மன் கோயில்கள்

01) குருமன்காடு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம், வவுனியா.
02) கரப்புக்குத்தி பத்திரகாளியம்மன் ஆலயம், கனகராயன்குளம்.
03) புளியங்குளம் ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில், புளியங்குளம்.

### ஈ) வீரசக்தி அம்மன் கோயில்கள்

01) விளாத்திக்குளம் வீரசக்தியம்மன் ஆலயம், ஓமந்தை.
02) நாவற்குளம் வீரசக்தியம்மன் ஆலயம், ஓமந்தை.
03) நாம்பன்குளம் வீரசக்தியம்மன் ஆலயம், ஓமந்தை.

### உ) நாகபூஷணி அம்மன் கோயில்கள்

01) பேயாடி கூழாங்குளம் நாகபூஷணி அம்மன் ஆலயம், வவுனியா.
02) பெரியதம்பனை நாகபூஷணி அம்மன் ஆலயம், பெரியதம்பனை.
03) நெடுங்கேணி கடைவீதி நாகம்மாள் ஆலயம், நெடுங்கேணி.

# 3. பிள்ளையார் கோயில்கள்

01) ஓமந்தை சித்தி விநாயகர் ஆலயம், ஓமந்தை
02) குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா
03) வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம், வவுனியா
04) வைரவர்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயம், வவுனியா
05) குருமன்காடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா
06) கரப்பங்காடு ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம், வவுனியா
07) வெளிக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா
08) சமளங்குளம் கல்லுமலைப் பிள்ளையார் கோயில், வவுனியா
09) முருகனூர் விநாயகர் ஆலயம், வவுனியா
10) ஆசிகுளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா
11) கல்நாட்டினகுளம் விநாயகர் ஆலயம், ஆசிகுளம், வவுனியா
12) வேப்பங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா
13) உக்கிளாங்குளம் சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா
14) நெளுக்குளம் பிள்ளையார் கோயில், வவுனியா
15) கூமாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா.
16) ஆதார வைத்தியசாலை விநாயகர் ஆலயம், வவுனியா.
17) மூன்றுமுறிப்பு ஆலடிப் பிள்ளையார் ஆலயம், வவுனியா.
18) தோணிக்கல்லு ஆலடிப் பிள்ளையார் ஆலயம், வவுனியா.
19) மகாறம்பைக்குளம் ஆலடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா.
20) தேடிவந்த பிள்ளையார் ஆலயம், வவுனியா - முதிரங்காடு.
21) காத்தார்சின்னக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா.
22) கல்வீரங்குளம் பிள்ளையார் கோயில், ஆசிகுளம் - வவுனியா.
23) கந்தபுரம் பிள்ளையார் ஆலயம், கந்தபுரம் - வவுனியா.
24) நாகர் இலுப்பைக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா.
25) புளியடிப்பிள்ளையார் கோயில், சூசைப்பிள்ளையார்குளம் வீதி, வவுனியா.
26) பாரதிபுரம் விநாயகர் ஆலயம், நெளுக்குளம்.
27) தாண்டிக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வவுனியா.
28) சாம்பல்தோட்டம் விநாயகர் ஆலயம், நெளுக்குளம்.
29) சிவபுரம் விநாயகர் ஆலயம், புளிதறித்த புளியங்குளம் - வவுனியா.
30) பம்பைமடுச் சந்திப் பிள்ளையார் கோயில், பம்பைமடு.
31) செக்கடிப்புலவு காசி விநாயகர் ஆலயம், செக்கடிப்புலவு.
32) பம்பைமடு பிள்ளையார் ஆலயம், பம்பைமடு
33) இயங்கராவூர் பிள்ளையார் ஆலயம், இயங்கராவூர்
34) ஞானியாவூர் சித்தி விநாயகர் ஆலயம், வாரிக்குட்டியூர் - பாவற்குளம்
35) கற்குளம் பிள்ளையார் கோயில், சாளம்பைக்குளம் - பூவரசங்குளம்.
36) சோபாலபுளியங்குளம் பிள்ளையார் கோயில், சாளம்பைக்குளம், பூவரசங்குளம்.
37) கந்தஉடையார் பூவரசங்குளம் விநாயகர் ஆலயம், பூவரசங்குளம்.

38) வேலங்குளம் விநாயகர் ஆலயம், வேலங்குளம்.
39) கோயிற்புளியங்குளம் பிள்ளையார் ஆலயம், கோயிற்புளியங்குளம்.
40) இராமையன்குளம் விநாயகர் ஆலயம், நெளுக்குளம்.
41) மரக்காரம்பளை விநாயகர் ஆலயம், வவுனியா.
42) சுந்தரபுரம் விநாயகர் ஆலயம், சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா.
43) புதுக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், புதுக்குளம்.
44) ஈச்சங்குளம் பிள்ளையார் கோயில், கல்மடு, வவுனியா.
45) நொச்சிமோட்டை கருங்காலியடிப் பிள்ளையார் கோயில், நொச்சிமோட்டை, ஓமந்தை
46) பறைநட்டகல் விநாயகர் ஆலயம், ஓமந்தை.
47) மேற்குளம் குளக்கட்டுப் பிள்ளையார் ஆலயம், கருங்காலிக்குளம், மாமடு.
48) வேப்பங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஓமந்தை.
49) அரசமுறிப்பு கற்பக விநாயகர் ஆலயம், ஓமந்தை.
50) கொந்தக்காரங்குளம் பிள்ளையார் கோயில், ஓமந்தை.
51) கோழியகுளம் பிள்ளையார் கோயில், ஓமந்தை.
52) கதிரவேலர் பூவரசங்குளம் விநாயகர் ஆலயம், ஓமந்தை.
53) கோதண்டர் நொச்சிக்குளம் பிள்ளையார் ஆலயம், கல்மடு, வவுனியா.
54) கல்மடு விநாயகர் ஆலயம், கல்மடு, வவுனியா.
55) பாலமோட்டை பிள்ளையார் கோயில், ஓமந்தை.
56) மகிழங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஓமந்தை.
57) பன்றிக்கெய்தகுளம் பிள்ளையார் ஆலயம், ஓமந்தை.
58) பனிக்கநீராவி அரசடிப் பிள்ளையார் ஆலயம், ஓமந்தை.
59) மருதங்குளம் குளக்கட்டுப் பிள்ளையார் ஆலயம், மருதங்குளம், ஓமந்தை.
60) நாம்பன்குளம் பிள்ளையார் ஆலயம், ஓமந்தை.
61) நொச்சிக்குளம் விநாயகர் ஆலயம், ஓமந்தை.
62) மாளிகை விநாயகர் ஆலயம், ஓமந்தை.
63) செங்காராத்திமோட்டை பிள்ளையார் கோயில், ஆறுமுகத்தான்புதுக்குளம், ஓமந்தை.
64) சேமமடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், சேமமடு, ஓமந்தை.
65) சேமமடு ஆட்காட்டி விநாயகர் ஆலயம், ஓமந்தை.
66) சோலைக்கட்டை பிள்ளையார் ஆலயம், ஓமந்தை.
67) புளியங்குளம் விநாயகர் ஆலயம், புளியங்குளம்.
68) பழையவாடி விநாயகர் ஆலயம், புளியங்குளம்.
69) சன்னாசி பரந்தன் பிள்ளையார் ஆலயம், நயினாமடு.
70) மதியாமடு பிள்ளையார் ஆலயம், நயினாமடு.
71) கட்டையன்குளம் வரசித்தி விநாயகர் ஆலயம், மதியாமடு, நயினாமடு.
72) சின்னப்பூவரசங்குளம் மண்டபத்துப் பிள்ளையார் ஆலயம், புளியங்குளம்.
73) சின்னப்பூவரசங்குளம் அரசடிப் பிள்ளையார் ஆலயம், புளியங்குளம்.
74) நயினாமடு குளக்கட்டு விநாயகர் ஆலயம், நயினாமடு, நெடுங்கேணி.
75) நொச்சியடி விநாயகர் ஆலயம், நெடுங்கேணி.
76) சிவாநகர் விநாயகர் ஆலயம், நெடுங்கேணி.

77) வில்வையடி விநாயகர் ஆலயம், நெடுங்கேணி.
78) இறம்பைக்குளம் விநாயகர் ஆலயம். நெடுங்கேணி.
79) பெரியகுளம் சந்தி அரசடி விநாயகர் ஆலயம், நெடுங்கேணி.
80) வேலங்குளம் விநாயகர் ஆலயம், நெடுங்கேணி.
81) புளியடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், மாறாஇலுப்பை, நெடுங்கேணி.
82) பண்டாரக்குளம் விநாயகர் ஆலயம், நெடுங்கேணி.
83) தெகிழ்ப்படர்ந்தான் பிள்ளையார் கோயில், நெடுங்கேணி.
84) ஈட்டிமுறித்தான் விநாயகர் ஆலயம், குளவிசுட்டான், நெடுங்கேணி.
85) குளவிசுட்டான் விநாயகர் ஆலயம், குளவிசுட்டான், நெடுங்கேணி.
86) நொச்சிக்குளம் விநாயகர் ஆலயம், நெடுங்கேணி.
87) ஊஞ்சாறகட்டி பிள்ளையார் கோயில், நெடுங்கேணி.
88) பட்டிக்குடியிருப்பு பிள்ளையார் கோயில், நெடுங்கேணி.
89) குருந்தடிப்பிள்ளையார் ஆலயம், வெடிவைத்த கல்லு, நெடுங்கேணி.
90) கோயிற்புளியங்குளம் பிள்ளையார் கோயில் ஊஞ்சறகட்டி, நெடுங்கேணி.
91) தரடியான் ஸ்ரீ விநாயகர் ஆலயம், நயினாமடு.
92) தோடை ஆற்றுப் பிள்ளையார் ஆலயம், பெரியமடு.
93) கரப்புக்குத்தி விநாயகர் ஆலயம், கனகராயன்குளம்.
94) கனகராயன்குளம் பிள்ளையார் கோயில், கனகராயன்குளம்.
95) கனகராயன்குளம் சித்தி விநாயகர் ஆலயம், கனகராயன்குளம்.
96) புதுவிளாங்குளம் பிள்ளையார் ஆலயம், கனகராயன்குளம்.
97) புதுக்குளம் பிள்ளையார் ஆலயம், கனகராயன்குளம்.
98) பாவற்குளம் ஆஸ்பத்திரியடி விநாயகர் ஆலயம், பாவற்குளம்.
99) வீரபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம். நேரியகுளம், செட்டிகுளம்.
100) நேரியகுளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், செட்டிகுளம்.
101) பெரியபுளியாலங்குளம் விநாயகர் ஆலயம், செட்டிகுளம்.
102) புளியங்குளம் பிள்ளையார் ஆலயம், பெரியபுளியாலங்குளம், செட்டிகுளம்.
103) கரம்பைமடு குளக்கட்டுப் பிள்ளையார் கோயில், முதலியாகுளம், செட்டிகுளம்.
104) முகத்தான்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், செட்டிகுளம்.
105) கப்பாச்சி ஸ்ரீ விநாயகர் ஆலயம், செட்டிகுளம்.
106) ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பூவரசங்குளம் வீதிச் சந்தி, செட்டிகுளம்.
107) ஜீவநேயப் பிள்ளையார் கோவில், 2ம் பண்ணை, முகத்தான்குளம், செட்டிகுளம்.
108) ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், கணேசபுரம், மடு றோட்.
109) பிராமணாலங்குளம் விநாயகர் ஆலயம், பூவரசங்குளம்.
110) ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம், பெரியதம்பனை.
111) வித்தியா விநாயகர் ஆலயம், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா
112) மாமடு குளக்கட்டுப் பிள்ளையார் கோயில், மாமடு.
113) ஈறற்பெரியகுளம் பிள்ளையார் கோயில் கண்டி வீதி.
114) வைகாளி கூளாங்குளம் பிள்ளையார் கோயில் - பம்பைமடு.
115) அலியன் சாய்ந்தகுளம் பிள்ளையார் கோயில் - பம்பைமடு.
116) பெரியகட்டுப் பிள்ளையார் கோயில் - பெரியகட்டு.

## 4. முருகன் கோயில்கள்

01) வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோயில், வவுனியா.
02) கந்தபுரம் ஸ்ரீ முருகன் ஆலயம், வவுனியா.
03) தாண்டிக்குளம் முருகன் ஆலயம், வவுனியா.
04) நெளுக்குளம் ஸ்ரீ முருகன் கோயில், வவுனியா.
05) ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம், கந்தஉடையார், பூவரசங்குளம்.
06) முதலியார்குளம் ஸ்ரீ வேல்முருகன் ஆலயம், செட்டிகுளம்.
07) கடப்பவனப்பதி ஸ்ரீ முருகன் ஆலயம், பாவற்குளம், 5ம் யூனிற், வாரிக்குட்டியூர்
08) பாலமுருகன் ஆலயம், பெரியதம்பனை.
09) சாஸ்திரிகூழாங்குளம் கந்தசுவாமி கோயில். வவுனியா.
10) சிதம்பரம் ஸ்ரீ கதிர்வேலாயுதசாமி கோயில், கள்ளிக்குளம், மாமடு.
11) மருதோடை கந்தசுவாமி கோயில், ஓமந்தை.
12) வேலர் சின்னக்குளம் கந்தசுவாமி கோயில், ஓமந்தை.
13) ஆறுமுகத்தான் புதுக்குளம் கந்தசுவாமி கோயில், ஓமந்தை.
14) புதியவேலர் சின்னக்குளம் கந்தசுவாமி கோயில் இறம்பைக்குளம், ஓமந்தை.
15) புளியங்குளம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், புளியங்குளம்.
16) நயினாமடு ஸ்ரீ முருகன் ஆலயம், நெடுங்கேணி.
17) நெடுங்கேணி ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோயில், நெடுங்கேணி.
18) நெடுங்கேணி பழைய கந்தசுவாமி கோயில், நெடுங்கேணி.
19) ஊஞ்சாற்கட்டி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம், நெடுங்கேணி.
20) விளாத்திக்குளம் முருகன் கோயில், ஓமந்தை.
21) நேரியகுளம் ஸ்ரீ முருகன் ஆலயம், நேரியகுளம், செட்டிகுளம்.
22) கந்தசுவாமி கோயில் பம்பைமடு.

## 5. வீரபத்திரர் கோயில்கள்

01) வேலர் சின்னக்குளம் வீரபத்திரர் ஆலயம், ஓமந்தை.
02) காத்தார்சின்னக்குளம் வீரபத்திரர் ஆலயம், வவுனியா.
03) செக்கடிப்புலவு வீரபத்திரர் ஆலயம், செக்கடிப்புலவு.

## 6. வைரவர் கோயில்கள்

01) வைரவர்புளியங்குளம் ஸ்ரீ ஞான வைரவர் கோயில், வவுனியா.
02) தவசிகுளம் ஞான வைரவர் கோயில், வவுனியா.
03) குளவிசுட்டான் வைரவர் கோயில், நெடுங்கேணி.
04) ஞான வைரவர் கோயில், இரண்டாங் குறுக்குத் தெரு, வவுனியா.
05) பத்தினியார்மகிழங்குளம் வைரவர் ஆலயம், ' வவுனியா.
06) வேரக்கல்லு வைரவர் ஆலயம், மாதர் பணிக்கர் மகிழங்குளம், வெடிவைத்தகல்லு.
07) வைரவர் கோயில் பம்பைமடு.

## 7. விஷ்ணு கோயில்கள்

01) கோயிற்குளம் ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயம் (கண்ணன் கோயில்)
02) கள்ளிக்குளம் அநாதரட்சகர் ஆலயம் (கிருஷ்ணர் கோயில்)
03) ஸ்ரீராமர் ஆலயம், ஸ்ரீராமபுரம் - காத்தார்சின்னக்குளம்
04) கிருஷ்ணன் கோயில் மடுக்குளம் - பூவரசங்குளம்
05) இராமையன்கல்லு ஸ்ரீ விஷ்ணு ஆலயம் பூவசரங்குளம்
06) சேனைப்பிலவு ஸ்ரீ ராமர் கோயில் நெடுங்கேணி
07) சூடுவெந்தான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயம் நெடுங்கேணி.

## 8. நரசிங்கம் கோயில்கள்

01) பூந்தோட்டம் நரசிங்கம் கோயில், வவுனியா
02) நொச்சிமோட்டை நரசிங்கம் கோயில்
03) கள்ளிக்குளம் நரசிங்கம் கோயில்
04) நாம்பன்குளம் நரசிங்கம் கோயில்
05) இயங்கராவூர் நரசிங்கம் கோயில்
06) கற்குளம் நரசிங்கம் கோயில், சாளம்பைக்குளம்
07) பம்பைமடு நரசிங்கம் கோயில்
08) நரசிம்மர் கோயில், கூமாங்குளம்
09) நரசிம்மர் கோயில், தெற்கிலுப்பைக்குளம்

## 9. ஆஞ்சநேயர் கோயில்கள்

01) அடப்பங்குளம் அனுமான் ஆலயம் நேரியகுளம்.

## 10. ஐயனார் கோயில்கள்

01) சடவங்குளம் ஆதி ஐயனார் கோயில், கனகராயன்குளம்
02) கலிங்குவாழ் இளந்தாரி ஐயனார் கோயில், கனகராயன்குளம்
03) நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் கோயில், நெடுங்கேணி
04) மருதங்குளம் ஐயனார் கோயில், ஓமந்தை
05) அலைகல்லுப் போட்ட குளம் ஐயனார் கோயில், ஓமந்தை
06) செக்கடிப்புலவு ஐயனார் கோயில், செக்கடிப்புலவு
07) வாரிக்குட்டியூர் ஐயனார் கோயில், பாவற்குளம் - 6ம் யூனிற்.
08) தாண்டிக்குளம் ஐய்னார் கோயில், தாண்டிக்குளம் - வவுனியா.

## 11. நாகதம்பிரான் கோயில்கள்

01) புதூர் நாகதம்பிரான் கோயில், புளியங்குளம்.
02) சேமமடு நாகதம்பிரான் கோயில், ஓமந்தை.
03) சன்னாசி பரந்தன் நாகதம்பிரான் கோயில், புளியங்குளம்.
04) புளியங்குளம் நாகதம்பிரான் ஆலயம், புளியங்குளம்.
05) இறம்பைக்குளம் நாகதம்பிரான் ஆலயம், நெடுங்கேணி, ஓமந்தை
06) கொம்பெடுத்தகுளம் நாகதம்பிரான் ஆலயம், நெடுங்கேணி
07) துவரநேரி நாகதம்பிரான் ஆலயம், நயினாமடு.

## 12. முனியப்பர் கோயில்கள்

01) நெடுங்கேணி வடக்கு முனியப்பர் கோயில், நெடுங்கேணி.
02) உக்குளாங்குளம் முனியப்பர் கோயில், வவுனியா.

## 13. மாடசாமி கோயில்கள்

01) பண்டாரிகுளம்/தோணிக்கல் மாடசாமி கோயில், வவுனியா.

## 14. தெற்குவேலியான் கோயில்

01) நாம்பன்குளம் தெற்குவேலியான் கோயில், ஓமந்தை.

நன்றி : **திரு. க. ஐயம்பிள்ளை** அவர்கள்
பிரதேச செயலாளர் - வவுனியா வடக்கு.
(நெடுங்கேணி)

உ

# வவுனியா நகரில் தரிசிக்க வேண்டிய, பார்க்க வேண்டிய முக்கியமானவை சில.

## தரிசிக்க வேண்டிய தலங்கள்

01. கோவிற்குளம் சிவன்கோவில், கோவிற்குளம்.
(அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயம்)
02. ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தானம். குருமன்காடு.
03. வவுனியா கந்தசுவாமி கோவில், நகர மத்தியில் உள்ளது.
04. குடியிருப்பு சித்திவிநாயகர் கோவில், குடியிருப்பு
05. சிந்தாமணிப்பிள்ளையார் கோவில், வெளிவட்ட வீதி.
06. ஆதிவிநாயகர் கோவில், (புகையிரத நிலையவீதி, வைரவபுளியங்குளம்)
07. கண்ணன் கோவில், கோவிற்குளம்.
08. ஸ்ரீ கருமாரியம்மன் தேவஸ்தானம், குட்செட் வீதி.
09. பௌத்தவிகாரை, கண்டிவீதி.
10. புனித அந்தோனியார் ஆலயம், இறம்பைக்குளம்.
11. பெரியபள்ளிவாசல், கடைவீதி.

## பார்க்க வேண்டிய இடங்கள்

12. சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், புகையிரத நிலையவீதி.
13. சாயிசமித்தி, புகையிரத நிலையவீதி.
14. வவுனியாக்குளம், குடியிருப்பு.
15. பொதுப்பூங்கா, நகரசபை.
16. நூல்நிலையம், நகரசபை.
17. தொல்பொருட் காட்சியகம், ஹொறவப்பொத்தானை வீதி.
18. தேசிய கல்வியியற் கல்லூரி, பூந்தோட்டம்.
19. விவசாயப் பண்ணையும், பயிற்சி நிலையமும்
எல்லப்பர் மருதங்குளம், முருகனூர்.
20. விவசாயப் பயிற்சிப் பாடசாலை, தாண்டிக்குளம்.
21. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைத்தொகுதி, கடைவீதி.
22. கலாசார மண்டபம், குடியிருப்பு (இன்னும் பாவனைக்கு வரவில்லை)
23. சாயி சிறுவர் இல்லம், கூமாங்குளம்.

## தரிசிக்க வேண்டிய பெரியார் சிலைகள்

24. பண்டார வன்னியன், கச்சேரி.
25. திருவள்ளுவர், ஆஸ்பத்திரியடிச்சந்தி.
26. ஔவையார், வெளிக்குளம்.
27. இளங்கோ அடிகள், கோவிற்குளம்.
28. கவிச்சக்கரவர்த்தி கம்பன், சூசைப்பிள்ளையார்குளம்.
29. ஆறுமுகநாவலர், இலுப்பையடிச்சந்தி.
30. சுவாமி விவேகானந்தர், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்.
31. மகாகவி பாரதியார், குருமன்காட்டுச்சந்தி, மன்னார் வீதி.
32. சுவாமி விபுலானந்தர், கண்டி வீதி.
33. நவாலியூர் சோமசுந்தரப்புலவர், கடைவீதி.
34. வண. பிதா. தனிநாயகம் அடிகளார், மணிக்கூட்டுக் கோபுரச்சந்தி.

உ
சிவமயம்


# ஆய்வுக்கட்டுரை

***Diploma in Business Management***
***2000 - 2001***

## சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்
## வவுனியா

**ஆரம்பம் - 1952** பதிவு இல. :- **HA / 4 / V / 5**

**"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**



**த. பிரதாபன் DIP/2/7078/36**
கள்ளிக்குளம்,
வவுனியா.

குறிப்பு :- ஆய்வுக் கட்டுரையின் சில பகுதிகளே இங்கு தரப்பட்டுள்ளன. (ஆ - ர்)

# அறிக்கைச் சுருக்கம்

## வியாபார முகாமை தொடர்பிலான டிப்ளோமா 2000 - 2001
## (Diploma in Business Management 2000 - 2001)

வியாபார முகாமை தொடர்பிலான டிப்ளோமா (2000 - 2001) பயிற்சி நெறியினை பயின்று வரும் மாணவனாகிய நான் இப்பயிற்சி நெறியினை பூர்த்தி செய்யும் வேளையில் ஆய்வுக்கட்டுரை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டிய நிலையில் வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள **"சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின்"** மீதுள்ள பற்றுதல் காரணமாகவும், அங்கு நான் தொலைபேசி நிலைய உத்தியோகத்தராக கடமை புரிவதாலும் இவ்வாய்வுக்கட்டுரையிற்கான விடயமாக இந்த நிறுவனத்தை தெரிவு செய்துள்ளேன்.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமானது 1952ம் ஆண்டு ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரால் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரையும் மிகவும் சிறப்பான முறையில் சமய, சமூக நற்பணிகளை சிறப்புறவே செய்து வருகின்றது. இச்சங்கம் எதிர்வரும் ஆண்டில் (2002) 50வது ஆண்டு விழாவை (பொன்விழா) கொண்டாடவுள்ளது. இச்சங்கத்தில் **196அங்கத்தவர்கள் இணைந்துள்ளனர். இதில் 42 பேர் ஆயுட்கால உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.** ஆண்டிற்கு ஒருமுறை பொதுச்சபை கூட்டமும், வருடம் 12 முறை ஆட்சிமன்றக் கூட்டங்களும் நடைபெற்று ஆண்டின் கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டு வருகின்றது. இச்சங்கம் சிறப்புற தனது சமய சமூக நற்பணிகளைச் செய்து வருவதற்கு தலைவர் உட்பட அனைவரது ஒத்துழைப்பும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

சங்கத்தில் பயணிகள் தங்குமிட வசதி, தொலைத்தொடர்பு வசதி, சிற்றுண்டிச்சாலை, பாலர் பாடசாலை, கல்யாண மண்டபம் என்பன சிறப்புற இயங்கி வருகின்றன. இத்துடன் நூல் வெளியீடு, சமய சம்பந்தமான விழாக்கள், சிறுவர் விளையாட்டுப் போட்டிகள் என்பனவும் ஆண்டுதோறும் சிறப்புற நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நவராத்திரி விழா, கலைவிழா போன்ற நிகழ்வுகளும், தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி, குருபூசை, திருவாசக முற்றோதுதல் போன்றனவும் இனிதே நடைபெறுகின்றன. இச்சங்கம் தனது நடவடிக்கைகளை சிறந்த முறையில் திட்டமிட்டு வழிநடாத்தி வருகின்றது என்பது இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

நான் இச்சங்கத்தில் பணிபுரிவதாலும் இச்சங்கத்தின் பல பகுதிகளை நேரடியாக பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்ததாலும் என்னால் இயன்றவரை இவ்வறிக்கையை தருகின்றேன். எனக்கு பெரிதும் உதவியாக அமைந்தது **"சுத்தானந்தம்"** என்ற நூல் ஆகும். இதன் நூல் ஆசிரியர் **தமிழ்மணி அகளங்கன்** அவர்களிற்கு நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இவ்வாய்வுக் கட்டுரையை உள்ளே பல்வேறு விடயங்களை அலகு அலகாக பிரித்து கூறியுள்ளேன். அறிமுகம், சங்கத்தின் சுருக்க வரலாறு, நிறுவனத்தின் அமைப்பு நிர்வாகங்கள், தொழிற்பாடுகள், சங்கத்தின் நிதிநிலைமைகள் மூன்று ஆண்டுக்கான இலாபநட்ட நிலைமைகள். சங்கத்தின் பெறுபேறுகள் சங்கத்தின் அகபுறச் சூழ்நிலைகளை இனம் காணல் (SWOT, PEST) அத்துடன் குறைபாடுகள் என்பனவும் எதிர்வரும் மூன்று ஆண்டுகளிற்கான உபாயத்திட்டமிடல் என்பனவற்றையும் இக்கட்டுரையில் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

ஆண்டுதோறும் கொடுக்கப்படும் எண்பார்வை அறிக்கையும் எனக்கு இவ்வாய்வை ஓரளவேனும் சிறப்புற எழுதுவதற்கு பெரிதும் உதவியது. இச்சங்கத்தின் **தலைவர் திரு. நாகலிங்கம் சேனாதிராசா (சமா.நீதி), செயலாளர் திரு. க. தர்மதேவன், பொருளாளர் திரு. இ. திருமேனி, துணைச்செயலாளர் திரு. நா. யோகராசா ஆகியோருக்கும் மற்றும் ஆலோசனைகள் வழங்கிய ஆசிரியர் திரு. சி. கோணேஸ்வரன்** (உசாத்துணை ஆலோசகர்) அவர்களிற்கும் பெரிதும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் எனது நண்பர் திரு. சி. பிரபாகரன் அவர்களிற்கும் இதனை அச்சிட்டு தந்த திரு. இ. பாலகரனிற்கும் எனது மனமுவந்த நன்றிகள் பற்பல.

நன்றி

அன்புடன்

**த. பிரதாபன்**


# அறிமுகம்

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமானது 1952ம் ஆண்டு கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இந்து சமய நிறுவனம் ஆகும். இது சமூக, சமய வளர்ச்சிக்கு வவுனியா நகரில் அரும்பாடுபட்டு வரும் சமய நிறுவனங்களில் முதன்மை பெற்று விளங்கி வருகின்றது. காலத்திற்கு காலம் தன்னலம் கருதாத சேவையுள்ளம் படைத்த சமயப்பற்றுள்ள பெரியவர்கள் இதன் நிர்வாகிகளாக இருந்து அரும்பணி புரிந்துள்ளார்கள். புரிந்து கொண்டும் வருகின்றார்கள்.

இன்றுள்ள, நாட்டின் சீரற்ற காலத்தில் மக்கள்படும் அவல நிலையில் அவர்களிற்கு தங்குமிட வசதியையும், தொலைத்தொடர்பு வசதியையும் ஏனைய தேவைகளையும் முடிந்தளவிற்கு இந்நிறுவனம் செய்து வருகின்றது. அத்துடன் சமய குரவர்கள், பெரியார்களின் விழாக்கள், சொற்பொழிவுகள், நூல் வெளியீடுகள், சமய, தமிழ் போட்டிகள் போன்றவற்றுடன் சமுகப்பணிகளையும் செய்து வருகின்றது.

இன்று சைவ உணவகம், வெளிநாட்டு தொலைத்தொடர்பு சேவை, சமய கலாசார நிகழ்ச்சிகள் போன்றவையும் இளம் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக இச்சங்கம் பாலர் பாடசாலையையும் நடாத்தி வருகின்றது. அத்துடன் கலாசார மண்டபத்தில் திருமண வைபவம் போன்றவற்றிற்கு மண்டபங்கள் வாடகைக்கு விடப்பட்டு தற்கால இடநெருக்கடியினால் ஏற்படும் இடர்களிற்கு தீர்வாக இச்சங்கம் பலவேறு வழிகளில் சமய, சமுக நலனுக்காக பாடுபட்டு வருகின்றது என்பதை நினைத்து என் மனம் ஆனந்தம் அடைகின்றது.

இக்காலத்தில் எத்தனையோ இடர்பாடுகளிற்கும் நடுவே நிதானமாகவும், சிறப்பாகவும் இயங்கிக் கொண்டிருக்கும் சமய நிறுவனம் இது என்றால் மிகையாகாது. 2002ம் ஆண்டு நவம்பர் மாதம் பொன்விழாவை கொண்டாடவுள்ளது. இந்து இளைஞர் சங்கத்தின் வரலாற்றில் முக்கியமாக குறிப்பிடும் அளவிற்கு அண்மைக் காலங்களில் மக்கள் **சேவை மாமணி திரு. நா. சேனாதிராசா** அவர்களின் தலைமையில் சிற்றுண்டிச்சாலை, சேக்கிழார் மண்டபம், கலாசார மண்டபம் என்று கட்டிடங்கள் நிமிர்ந்து நிற்கும் அளவிற்கு சேவையாற்றினார். இவர் தலைமையில் அங்கம் வகிக்கும் அனைவரும் சங்க வரலாற்றில் ஒரு சிறந்த இடத்தை வகித்து வருகின்றனர். இவர்களின் சேவைகள் சிறப்புற நடைபெற வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.



**சுத்தானந்த இந்து இளைஞர் சங்க**
**கலாசார மண்டபத்தின் முகப்புத் தோற்றம்**

# நிறுவனத்தின் அமைப்பு முறை

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கமானது இந்து சமயத்தினை வளர்க்கும் முகமாகவும், சமூகப்பணிகளில் ஈடுபடுகின்றதுமான ஒரு சங்கமாக உருவாகி வளர்ந்து வருகின்றது. வவுனியாவில் வாழ்ந்து வரும் இந்து சமயப்பெரியார்கள் உறுப்பினர்களாக இணைந்து பொதுச்சபை ஒன்றை அமைத்து பொதுச்சபை உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்துடனேயே தலைவர், செயலாளர், பொருளாளர் போன்றோரும் ஆட்சிமன்ற உறுப்பினர்கள், போசகர்கள் ஆகியோரைத் தெரிவு செய்கின்றது. இப்பொதுச்சபைக் கூட்டமானது ஆண்டிற்கு ஒருமுறை கூட்டப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும், புதிதாக தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற அனைவரும் தெரிவு செய்யப்படுகின்றனர். தெரிவு செய்யப்பட்டவர்கள் நடராசர் மண்டபத்திலுள்ள நடராசப் பெருமான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் தமது பொறுப்புக்களை ஏற்கின்றனர்.

சங்கத்தின் செயற்பாடுகளைத் தீர்மானித்தல், கட்டுப்படுத்தல், வழிநடத்தல், ஆலோசனை கூறல், போன்ற பொறுப்புக்களை தலைவரே முன்னின்று செய்து வருகின்றார். இவரிற்கு உதவியாக உபதலைவர், செயலாளர், பொருளாளர், ஆட்சிமன்ற உறுப்பினர்கள், போசகர்கள் என்பவர்களின் உதவியுடனும், ஆலோசனையுடனும் மாதம் ஒரு முறை ஆட்சிமன்றக் கூட்டத்தை கூட்டி தத்தமது கருத்துக்கள் மூலமாக இச்சங்கத்தினை சிறப்புற இயங்கச் செய்து வருகின்றனர்.

சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் தற்பொழுது 42 ஆயுள் உறுப்பினரும் 140 சாதாரண உறுப்பினரும் உள்ளனர். மாதந்தோறும் ஆட்சிமன்றக் கூட்டம் கூடி வரவு, செலவு அறிக்கை சமர்ப்பித்து செலவுகளிற்கு அங்கீகாரம் பெறப்படுகின்றது. சங்கத்தின் தொழிற்பாடுகள் எவை என்பதனையும் சற்றே பார்ப்போம்.

**1. சமய சேவை :-**

i) சமய குரவர்களான, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், சுந்தரர் போன்றோரின் குருபூசை தினத்தைக் கொண்டாடுதல், தண்ணீர்ப் பந்தல் அமைத்தல்.

ii) நவராத்திரி விழா கொண்டாடுதல், பாடசாலை மாணவர்களினதும், சங்கத்தின் பாலர் பாடசாலை மாணவர்களினதும் கலைநிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

iii) வருடம்தோறும் திருவாசக முற்றோதுதல் சிறப்புற நடைபெறுகின்றது.

iv) தைப்பொங்கல், கலைநிகழ்வுகள் போன்றவையும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடராசர் பூசை வழிபாடு தவறாது இடம்பெறுகின்றது. இவற்றுடன் கார்த்திகை தீபம், தீபாவளி, வருடப்பிறப்பு போன்றவையும் கொண்டாடப்படுகின்றன.

**2. கல்வி :-**

i) சங்கத்தின் பாலர் பாடசாலையில் பாலர் கல்விக்கு முன்னுரிமை வழங்கும் முகமாக 250 மாணவர்களுக்கு 8 ஆசிரியைகள் பணியாற்றி வருகின்றனர்.

ii) பாலர் பாடசாலை சிறார்களின் விளையாட்டுப் போட்டியை சிறப்பாக நடாத்தி வருகின்றனர். அத்துடன் பாலர் பாடசாலை மாணவர்களின் கலைவிழா நிகழ்வுகளும் இனிதே இடம்பெறுகின்றன.

iii) வவுனியா பாடசாலை மாணவரிடையே பண்ணிசை போட்டி, திருமுறை போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

iv) அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிற்கான கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன.

**3. சமூக சேவை :-**

i) பிரயாணிகளின் வசதி கருதி அவர்களுக்கு தங்குமிடம், தொலைபேசி, போட்டோ பிரதி, சைவ உணவகம், வதிவிட அனுமதிக்கான வசதி போன்றவற்றை செய்து வருகின்றது.

ii) திருமணம், பூப்புனித் நீராட்டு விழா, நூல் வெளியீடு, சமய கருத்தரங்குகள், இலக்கிய நிகழ்வுகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஒலி, ஒளி வசதிகளுடன் மண்டப வசதி செய்யப்படுகின்றது.

iii) கிராமப்புற ஆலயங்களுக்கும் வறிய மக்களுக்கும் நன்கொடைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

# நிதி நிலைமைகள்

**1998ம் ஆண்டு (ஜனவரி 01 - டிசம்பர் 31)**

* 1998ம் ஆண்டின் வருமானமாக கிடைத்த தொகை ரூபா 3780559.00

* இவ்வாண்டின் காலத்தில் நிலையான வைப்பில் உள்ள ரூபா. 200000.00 மீளப்பெற்று சொத்துச் செலவாக செலவிடப்பட்டதுடன் 31 - 12 - 1998 இல் வங்கியில் உள்ள மீதி ரூபா. 324779.84 மேலதிகப் பற்றாகவும் உள்ளது.

| விடயம் | | முழுவருமானத்தின் வீதம் |
|---|---|---|
| i) | சகல நிர்வாக சமய நிகழ்வு, பராமரிப்பு, கௌரவிப்பு மற்றும் அனைத்து மீண்டு வரும் செலவுகள் | **50.3%** |
| ii) | கட்டிட தளபாட உபகரணங்கள் | **53%** |
| i) | நன்கொடைகள் வழங்கியது | **2.6%** |

**1999ம் ஆண்டு (ஜனவரி 01 - டிசம்பர் 31)**

* 1999ம் ஆண்டின் வருமானமாக ரூபா. 3151995.00 பெறப்பட்டது.
* கலாசார மண்டபத்தினை பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடு இவ்வருடத்தில் இருந்தமையால் நிலையான வைப்பில் உள்ள ரூபா. 250000.00 மீளப் பெறப்பட்டது.
* இதேவேளை காசுப்புத்தக வங்கி மீதி ரூபா. 778841.44 மேலதிகப் பற்றாக வரும் நிலை ஏற்பட்டது.

இந்த ஆண்டில் பெறப்பட்ட வருமானத்தொகை ரூபா. 3151995.00 இல் ஏற்பட்ட செலவு தொகை என்ன வீதமானது என்பதை கீழே காணலாம்.

| விடயம் | | முழுவருமானத்தின் வீதம் |
|---|---|---|
| i) | சகல நிர்வாக, சமய நிகழ்வு, பராமரிப்பு, கௌரவிப்பு மற்றும் அனைத்து மீண்டு வரும் செலவுகள் | **43.6%** |
| ii) | கட்டிட தளபாட உபகரணங்கள் | **61.04%** |
| i) | நன்கொடைகள் வழங்கியது | **02.2%** |

* சென்ற ஆண்டை விட இவ்வருடம் ரூபா. 706974.49 மேலதிகம் குறைந்துள்ளது.
* இதற்குக் காரணம் வவுனியாவிற்கு வருகை தந்த மக்கள் தொகை குறைந்து காணப்பட்டமையால், தற்காலிகமாக வருமானம் குறைந்துள்ளமையும், வருமானம் குறைந்த செலவுகளில் பெரிய மாற்றம் ஏற்பட்டமையுமாகும். புதிய கலாசார மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு இவ்வாண்டில் திறப்புவிழா செய்யப்பட்டுள்ளது. இதற்கு கடந்த வருடம் ரூபா. 1681172.00ம் இவ்வருடம் ரூபா. 1754489.00ம் மொத்தமாக ரூபா. 3435682.00ம் செலவுகளாக ஏற்பட்டது. இது சங்கத்திற்கு வருமானம் ஈட்டக்கூடிய சொத்தாகும்.

* வங்கியின் மேலதிகப் பற்றாக 31 - 12 - 1999 இல் ரூபா. 778841.44 உள்ளது இவ்வருடம் மேலதிகப்பற்று வட்டியாக ரூபா. 37825.00 கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.
* இதே நேரம் வங்கியில் நிலையான வைப்பு ரூபா. 536344.97 ஆகும். இவ்வாண்டின் நிலையான வைப்பு வட்டியாக ரூபா. 106776.86 பெற்றுள்ளது.

**2000ம் ஆண்டு (ஜனவரி 01 - டிசம்பர் 31)**

* 2000ம் ஆண்டின் வருமானமாக கிடைத்த தொகை ரூபா 3000158.00

* 1999ம் ஆண்டில் வங்கி மேலதிகப்பற்று, கொடுக்கப்பட வேண்டிய செலவுகள், பெற்றகடன் போன்றவை செலுத்தப்பட வேண்டிய தொகையாக ரூபா. 901646.44 ஆக இருந்தது.

* இந்த 2000ம் ஆண்டில் பெறப்பட்ட வருமானத் தொகையில் ஏற்பட்ட செலவு தொகை என்ன வீதமானது என்பதை கீழே காணலாம்.

| விடயம் | | முழுவருமானத்தின் வீதம் |
|---|---|---|
| i) | சகல நிர்வாக, சமய நிகழ்வு, பராமரிப்பு, கௌரவிப்பு மற்றும் அனைத்து மீண்டு வரும் செலவுகள் | **61.1%** |
| ii) | கட்டிட தளபாட உபகரணங்கள் (சொத்துச் செலவு) | **7.1%** |
| iii) | நன்கொடைகள் வழங்கியது | **3.6%** |
| iv) | கடன் தீர்த்தது | **33.3%** |

* இங்கு கடன் தீர்ப்பதில் வருமானத்தின் மூன்றிலொரு பங்கு செலவு செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாகவுள்ளது.

| ஆண்டு | வருமானம் (ரூபா) | செலவுகள் வருமானத்தின் வீதத்தில் | | |
|---|---|---|---|---|
| | | சகல நிர்வாக சமய நிகழ்வு மற்றும் அனைத்து பராமரிப்பு மீண்டுவரும செலவு | கட்டிட தளபாட உபகரணங்கள் | நன்கொடை வழங்கல் |
| 1992 | 411906.00 | 87.5 % | 33.8 % | 2.6 % |
| 1993 | 721260.00 | 43.8 % | 21.2 % | 1.2 % |
| 1994 | 1966980.00 | 43.2 % | 52.4 % | 2.4 % |
| 1995 | 2109874.00 | 37.2 % | 60.0 % | 1.3 % |
| 1996 | 4307605.00 | 37.5 % | 46.2 % | 2.5 % |
| 1997 | 3226749.00 | 74.0 % | 39.0 % | 4.0 % |
| 1998 | 3780559.00 | 50.3 % | 53.0 % | 2.6 % |
| 1999 | 3151995.00 | 43.6 % | 61.04 % | 2.2 % |
| 2000 | 3000158.00 | 61.1 % | 7.1 % | 3.6 % |

* காசேட்டு அறிக்கையானது இணைப்புக்களில் தரப்பட்டுள்ளது.

# SWOT, PEST ANALYSIS

**S - பலம்**
**W - பலவீனம்**
**O - புறத்தே காணப்படும் அச்சுறுத்தல்**
**T - வாய்ப்புகள்**

## SWOT ஆய்வு

### * பலம் ( S )

வவுனியாவில் 1952ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இந்து சமயத்தை வளர்க்கும் முகமாக சுத்தானந்த பாரதியாரால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை, 49 ஆண்டுகளாக இது பலம் பொருந்தியதாகவும், இந்து சமயத்தை வளர்ப்பதில் பெரும் பங்கை சிறப்புற ஆற்றி வருகின்றது. இச்சங்கத்தில் 200 இற்கு மேற்பட்ட இந்து சமயத்தவர்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். பல சமய நிகழ்வுகளையும், பாலர் பாடசாலையையும் தங்குமிட வசதிகளையும், தொலைத்தொடர்பு, நிலைய வசதியையும், சிற்றுண்டி உணவகம் போன்றவற்றின் மூலமாக இச்ங்கம் தனது சேவைகளை சிறப்புற நடாத்தி வருகின்றது.

### * பலவீனம் ( W )

இங்கு வந்து தங்கும் பயணிகளின் உடமைகள், பணம் போன்றவற்றிற்கு பாதுகாப்புத் தன்மை குறைவாவே காணப்படுகின்றது. அத்துடன் ஒரு சிலர்களின் (பயணிகள்) நன்நடத்தையின்மை காரணத்தால் வீணான அசௌகரியங்கள் ஏற்படுகின்றது. இவற்றை சங்க நிர்வாகமானது தனது கவனத்தில் எடுத்தல் அவசியமென்றே கருதுகிறேன்.

### * புறத்தே காணப்படும் அச்சுறுத்தல் ( O )

நாட்டின் நிலைமை காரணமாக பயணிகள் பற்பல அசௌகரியங்களை சந்திக்கும் போது இச்சங்கம் முன்னின்று பல உதவிகளை சிலவேளைகளில் செய்ய முடியாதபடி புறச்சூழலில் அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றது. அத்துடன் வருமானமாக கிடைக்கும் பகுதிகளில் மிதமிஞ்சிய செலவுகள் ஏற்படுகின்றதை தவிர்க்க முடியாதுள்ளது.

### * வாய்ப்புக்கள் ( T )

சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் உறுப்பினர்களின் சந்தா மற்றும் அன்பளிப்புக்களின் மூலம் இச்சங்கம் தனது வளர்ச்சியை எட்டிக்கொண்டு வந்தது. காலப்போக்கில் தலைவர்களின் அயராத முயற்சியினால் சங்க நிர்வாகிகள் எல்லோரது ஒத்துழைப்பினாலும் தாமாகவே வருமானத்தைப் பெறும் முகமாக வந்து தங்கும் பயணிகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு செயற்பட்டதன் விளைவாக, கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தற்போது **சேக்கிழார் மண்டபம், சிற்றுண்டிச்சாலை, கலாசார மண்டபம்** போன்றவற்றை இப்போது தலைவராக உள்ள திரு. நா. சேனாதிராசா (சமா.நீதி) அவர்களின் தலைமையில் இச்சங்கம் கிடைத்த வாய்ப்புக்களை பயன்படுத்தி வெற்றிநடை போட்டு பொன்விழாவைக் கொண்டாடவுள்ளது. பல லட்ச ரூபா பெறுமதியான கட்டிட, தளபாட, உபகரண நிரந்தர சொத்துக்களையும் இச்சங்கம் தன்னகத்தே கொண்டுள்ளது.

சிற்றுண்டிச்சாலை நல்ல இடத்தில், நல்ல வாடிக்கையாளர்களைப் பெற்று சிறப்பாக இயங்குவதுடன் அனைவரது நல் அபிப்பிராயத்தையும் பெற்று இயங்கி வருகிறது. அத்துடன் கலாசார மண்டபத்தில் சமய நிகழ்வு, திருமண வைபவம், பூப்புனித நீராட்டுவிழா, நூல் வெளியீடு, இலக்கிய கூட்டங்கள் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் பாலர் பாடசாலை, தொலைபேசி நிலையம் என்பனவும் சங்கத்தின் வளர்ச்சியில் முக்கியமான இடத்தை வகிக்கின்றன.

# PEST ஆய்வு

## அரசியல் பொருளாதார, சமூக, கலைச்சார, தொழில்நுட்ப காரணிகளின் சாதக, பாதக நிலைகளை கண்டறிதல்

**P - அரசியல்**
**E - பொருளாதாரம்**
**S - சமூகக் கலாச்சாரம்**
**T - தொழில்நுட்பம்**

### அரசியல் ( P )

நாட்டின் அரசியல் யுத்த நிலைகள் காரணமாக மக்கள் மனங்களில் திடமான நம்பிக்கையும் பொழுதுபோக்கு அம்சங்களும் குறைந்து வருவதாக பெரும்பாலான ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதன் காரணத்தினால் நிலையான வருமானம், வேலைவாய்ப்பு என்பன குறைகிறது. அச்சுறுத்தலான நிலையே காணப்படுவதால், எப்போது என்ன நடைபெறும் என்பது யாருக்கும் தீர்க்கமான முறையில் தெரியாது. இதனால் சைவசமய நிகழ்வுகளிற்கு திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், ஒட்டிசுட்டான், வற்றாப்பளை போன்ற பிரசித்தி பெற்ற தலங்களிற்கு சென்று வழிபடும் மக்கள் தொகை குறைவடைந்து வருகிறது. இதே போன்று மக்களும் சரி, மாணவர்களும் சரி மனமுவந்து சைவத்தின்கண் தம்மை ஈடுபடுத்தல் குன்றி வருகிறது. தொலைக்காட்சிப் பெட்டிகளின் வருகையால் பல சிறார்கள் தமது சமய சம்பந்தமான நிகழ்வுகளில் கலந்து கொள்வது குறைந்து வருகிறது. இப்படிப் பல காரணங்களால் ஏற்படும் சிக்கல்களால், சீரான முறையில் திறம்பட இச்சங்கம் வளர்ச்சியடைய முடியாவிடினும் முடிந்தவரை அயராது தமது இலக்குகளை அடைய முனைந்து வருகிறது. வந்துகொண்டும் இருக்கிறதென்பதில் ஐயமில்லை.

### பொருளாதாரம் ( E )

நாட்டில் யுத்தமேகம் அதிக தீவிரம் அடைந்துள்ள நிலையில் பெருமளவு நிதியை யுத்தத்திற்கு ஒதுக்க வேண்டியுள்ளதாக அரசு கூறுகிறது. இவற்றால் நாட்டு மக்கள் பெரும் நிதிப்பிரச்சனைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நாட்டின் பொருளாதார நிலை மோசமாகி வருவதாக நாம் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகளில் பார்த்தும், கேட்டும் வருகின்றோம். மக்கள் தத்தமது வேலைகளை செய்வதைத் தவிர சமய, கலை, கலாச்சார நிகழ்வுகளை ஒதுக்கி வைத்து தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக கடினமாக உழைக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவ்வேளையில் சங்க உறுப்பினர்கள் ஒன்று கூடி எவ்வாறு சங்கத்தை சிறப்புற நடாத்துவது, சமய, கலை நிகழ்வுகள், நூல் வெளியீடு என்பவற்றை நல்ல முறையில் செய்யமுடியும் என்று சிந்திக்க தோன்றுகிறது. இருப்பினும் இச்சங்கம் முடிந்தவரை குறைந்த கட்டணத்துடன் பயணிகளை தங்கியிருக்க வசதி செய்து கொடுத்து, இந்நெருக்கடியான நிலைமையிலும் இவ்வாறான சேவைகளைச் செய்து வருகின்றதென்றால் தலைமை மற்றும் நிர்வாகிகளின் அயராத செயற்பாட்டினாலும் முடிந்தவரை வீறுநடை போட்டு இச்சங்கம் எதிர்வரும் ஆண்டில் பொன்விழாவை கொண்டாடவும் உள்ளது.

## சமூகக் கலாசாரம் ( S )

சைவசமய மக்கள் வெளிநாட்டவர்களின் கலைகள், உடைகள் என்பவற்றையே தற்காலத்தில் அதிகமாக கடைப்பிடித்து வருகின்றனர் என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். கோயில்களிற்கு உள்ளே செல்லும் ஆண்கள் வேட்டி அணிந்து மேலாடையை களைந்து செல்வது குறைந்து வருகின்றது. அத்துடன் பெண்கள் நிலையும் பொருத்தமற்றது என்றே சொல்லவேண்டும். இருப்பினும் எமது சங்கத்தில் பொதுக்கூட்டம் இடம்பெறும் வேளையில் பெரும்பாலான உறுப்பினர்கள் வேட்டி அணிந்து வருகின்றனர். கல்யாண மண்டபத்தின் உள்ளே பாதணிகளுடன் செல்லுதல், மாமிசம் (கேக்) போன்றவை பரிமாறல் என்பன கட்டுப்பாட்டில் வைத்து நல்ல முறையில் நடாத்தி வருகிறது. இவற்றுடன் குருபூசைகள், தண்ணீர்ப் பந்தல் அமைத்தல், திருக்குறள் போட்டி, தேவாரப் பண்ணிசைப் போட்டி என்பனவும் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது. வாழையிலையில் உணவு பரிமாறல் போன்ற பாரம்பரிய முறைகளை இன்றும் கடைப்பிடித்து நடைமுறையில் செய்து வருகின்றது என்றால் பாராட்டபட வேண்டிய விடயமாகும்.

## தொழில்நுட்பம் ( T )

இந்த மிலேனியம் ஆண்டில் காலடி பதித்துள்ள இச்சங்கம் தனது 50வது ஆண்டு பொன்விழாவை கொண்டாடவுள்ள வேளையில் பெரும்பாலான நாடுகள் உலக மயமாதல் கொள்கைகளை கடைப்பிடித்து வருகின்ற இவ்வேளையில், இச்சங்கம் தனது தொழில்நுட்ப வசதிகளையும் பெருக்கிக் கொள்ளாது இன்னமும் பழைய முறைகளையே கையாண்டு வருகிறது. நவீன வசதிகள் உள்ள இக்காலத்தில் சங்கம் தனது வேலைகளைச் செய்வதற்கு ஒரு கணனியைக் கூட வைத்திருக்கவில்லை.

எந்தத்துறைக்குச் சென்றாலும் அங்கு கணனியின் முக்கியத்துவம் இருக்கிறது. ஆனால் இங்கு நிலை வேறு. அத்துடன் இக்காலத் தொழில்நுட்பத்திற்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு செயற்பாட்டிலும் சிறுகச் சிறுக (கைசன் முறைப்படி) மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்றே நான் விரும்புகிறேன். அத்துடன் பலரிற்கு பயிற்சியளித்து வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுக்க முடியும். எனவே இத்தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பயனுண்டு. இங்கு கட்டடத் தொழில்நுட்பம் தொடர்பான வேலைகளிற்கு வெளியில் உள்ளவர்களிடம் சென்றுதான் கணனியைப் பயன்படுத்த வேண்டிய நிலையுள்ளது. கோப்புக்களையும், கணக்கு வைப்புக்களையும் இலகுவாகச் செய்வதற்கு இத்தொழில்நுட்பம் பெரிதும் பயன்படும்.

# குறைபாடுகள்

01) சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நடராசர் மண்டபத்தின் உள்ளே நடராசர் சிலை அமைத்து அந்த மண்டபத்திற்கு சிறப்பை ஏற்படுத்துகிறது என்றால் அது மிகையாகாது. இம்மண்டபத்தின் வட புறத்தில் உள்ள பகுதியில் பூஞ்செடிகள் அழகில்லாது காட்சி தருகிறது. எனவே சங்கத்தின் முன்புற வாயிலிற்கு அருகில் உள்ள இப்பகுதியில் பொருத்தமானதும், அழகானதுமான முறையில் இப்பகுதியில் உள்ள செடிகளை அகற்றி திட்டமிட்ட முறையில் பூந்தோட்டம் ஒன்றை அமைத்து அதிலிருந்து மலர்களை அதிகளவில் பெற்று வெள்ளிக்கிழமை பூசை, சமய நிகழ்வுகளிற்கு தேவையான மலர்களைப் பெறமுடியும். சிறப்புடன் செயற்பட்டால் சங்கத்தின் எழில் பல மடங்கு அதிகரிக்க நிறையவே இடமுண்டு என்று அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

02) சங்கத்தில் அதிகளவான வருமானத்தை ஈட்டித்தரும் வழியாக வடபகுதியில் இருந்து வரும் மக்கள் மூலம் கிடைக்கப்பெறுகின்றது. இருப்பினும் இம்மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளில் ஒன்றான நீர் வசதி குறைவாகவே காணப்படுகின்றது. குளிப்பதற்கு தேவையான நீர், உடைகள் சுத்தம் செய்வதற்கு தேவையான நீர் என்பவற்றை மக்கள் கிணற்றிலிருந்து மிகுந்த சிரமத்தின் மத்தியிலும், நெருக்கடியின் மத்தியிலுமே பெறுகின்றனர். எனவேதான் ஒரு தண்ணீர்த் தொட்டியை அமைத்து, அதனை நல்ல முறையில் அசுத்தம் நிகழாதவாறு பாதுகாப்புடன் பேணினால் மக்களின் நன்மதிப்பையும் சம்பாதிக்கலாம். சைவ சமயத்தில் தண்ணீர் கொடுத்து உதவுவதில் எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது என்பதை புரிந்து கொண்டு செயற்பட்டால் பெரியவர்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெறமுடியும் என்பதில் ஐயமில்லை. இவற்றை செய்வதில் பல இடர்கள் இருப்பினும் அவற்றை எதிர்கொண்டு இவற்றை இச்சங்கம் கருத்தில் கொள்ளும் என நம்புகிறேன்.

03) சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் வளர்ச்சியில் முக்கியமான காலப்பகுதி 1994 தொடக்கம் இன்று வரையில் மிகவும் சிறப்பான இடத்தை வகிக்கிறது. இருப்பினும் இச்சங்கத்திற்கென வவுனியா மாவட்டத்தில், கிராம ரீதியிலான அமைப்புக்கள் அல்லது கிளைகள் என்பன இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் ஏனைய இடங்களில் இச்சங்கம் சமய, சமூக நற்பணிகளை செவ்வனே செய்ய முடியாத நிலையிலுள்ளது. சிற்சில பிரதேசங்களில் கிராம மட்டத்தினாலான கிளைகளை உருவாக்குவதன் மூலம் சமய நிகழ்வுகள், போட்டிகள், அறநெறிப்பயிற்சி வகுப்புக்கள் போன்றவற்றை அதிகளவில் சிறப்புற மேற்கொள்ள முடியும். ஆயினும் தற்போது ஒரு சில இடங்களிலிருந்து இச்சங்கத்திற்கு வருகை தந்து இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொண்டு வருகின்றனர். எனினும் கிராம மட்டத்தினாலான அமைப்புக்கள், கிளைகள் என்பவற்றை தோற்றுவிப்பதன் மூலம் இச்சங்கம் பொன்விழாவில் பற்பல நற்கருமங்களை ஆற்றி வெற்றி நடைபோடும் என்பது உறுதியாகும்.

குறிப்பு :-

நவம்பர் 2002ம் ஆண்டு சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் ஆனது பொன்விழாவை (50வது ஆண்டு) கொண்டாடவுள்ள இச்சந்தர்ப்பத்தில் இப்படியான சிறுசிறு விடயங்களில் கூட முக்கிய கவனம் செலுத்துமானால் இதனால் ஏற்படும் பயன் அளப்பரியதாகும்.

உ

# வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க பாலர் பாடசாலைக் கீதம்

வாழ்கவே வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே

எங்கள் பாலர் பாட சாலை
என்றும் வாழ்கவே
திங்கள் போலத் தென்றல் போலத்
திகழ்ந்து வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே

வளம் நிறைந்த வன்னி நகர்
வாழ்க வாழ்கவே
வானும் மண்ணும் உள்ள வரை
வாழ்க வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே

சுத்தா னந்த இந்து இளைஞர்
சங்கம் வாழ்கவே
சுத்தம் கல்வி ஒழுக்கம் மண்ணில்
சிறந்து வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே

– கவிஞர் அகளங்கன் –

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



## வவுனியா

## சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்

# பொன்விழா

காலம்

***20 - 04 - 2003 ஞாயிற்றுக்கிழமை***

***21 - 04 - 2003 திங்கட்கிழமை***

இடம்

***சுத்தானந்த இந்து இளைஞர் சங்க***
***நடராசர் மண்டபம்***

இப்பொன்விழா நிகழ்வுகளில் அனைவரையும்
கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன்
அழைக்கிறோம்.

*க. தர்மதேவன்*
செயலாளர்

## நிகழ்வு - I

நாள் : 20 - 04 - 2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 04.30 மணி
இடம் : சுத்தானந்த இந்து இளைஞர் சங்க நடராசர் மண்டபம்

பிரதம விருந்தினர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
*2வது குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்.*

சிறப்பு விருந்தினர்கள் :- திரு. இ. குமார் வடிவேல் அவர்கள்
*உதவிப் பணிப்பாளர், இந்து கலாசார திணைக்களம்.*

வாகீச கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்கள்
*முதுநிலை விரிவுரையாளர், சப்ரகமுவ பல்கலைக்கழகம்.*

01. நந்திக் கொடியேற்றல்
02. மங்கல விளக்கேற்றல்
03. பஞ்சபுராணம்
04. சங்க கீதம்
05. தமிழ்த் தாய் வாழ்த்து :- செல்வி. உசேனி ஸ்ரீதரன் அவர்கள்
06. ஆசியுரை :- பிரம்மஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்கள் அவர்கள்
07. வரவேற்புரை :- திரு. ச. விஜயரத்தினம் அவர்கள்
துணைத்தலைவர் - சு. இ. இ. சங்கம்
08. தலைமையுரை :- திரு. நா. சேனாதிராசா சமா. நீதி அவர்கள்
தலைவர் சு. இ. இ. சங்கம்
09. இன்னிசை விருந்து :- இசைக்குயில் திருமதி. வதனி ஸ்ரீதரன் அவர்களும் அவரின் மாணவர்களும்
10. "சுத்தானந்தம்" பொன்விழா மலர் வெளியீடு
11. மலர் வெளியீட்டுரை - கவிஞர் ச. அருளானந்தம் அவர்கள்
12. பதிலுரை :- மலராசிரியர் தமிழ்மணி அகளங்கன் அவர்கள்
13. பிரதம விருந்தினர் உரை
14. சிறப்பு விருந்தினர் உரை
15. பரிசளிப்பு :- பொன்விழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற தரம் 4 முதல் தரம் 8 வரையான மாணவர்கள்
16. நாட்டிய நாடகம் :- வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகளின் "பாலகன் பாடினான்"
நட்டுவாங்கம் - திருமதி. துஷ்யந்தி வேலுப்பிள்ளை அவர்கள்
17. நடனம் - திருமதி. துஷ்யந்தி வேலுப்பிள்ளை அவர்களின் மாணவி செல்வி. கேசிகா மங்களராஜன் அவர்கள்
18. நன்றியுரை :- திரு. க. தர்மதேவன் அவர்கள். செயலாளர்

## நிகழ்வு - 2

## இரண்டாம் நாள்

**21 - 04 - 2003 திங்கட்கிழமை**

**நேரம் : காலை 09.00 மணி**

# பொன்விழா பவனி

வவுனியா குருமன்காடு காளியம்மன் தேவஸ்தானத்திலிருந்து அலங்கார ஊர்தி பவனி வவுனியா பிரதேச செயலாளர் திரு. சி. சத்தியசீலன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். இப்பவனி மன்னார் வீதியூடாக ஆஸ்பத்திரிச் சந்தி, குடியிருப்பு உள்வீதி வழியாக வந்து குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தை வந்தடையும். மீண்டும் பவனி கடை வீதியூடாக கந்தசுவாமி கோயிலை வந்தடையும். பின் அங்கிருந்து புறப்பட்டு 1ம் குறுக்கு வீதி, கண்டி வீதி, வெளிவட்ட வீதி வழியாக சிந்தாமணி விநாயகர் ஆலயத்தைச் சென்றடைந்து புகையிரத நிலைய வீதியூடாக சங்கத்தை வந்தடையும்.

## நிகழ்வு - 3

நாள் : 21 - 04 - 2003 திங்கட்கிழமை
நேரம் : மாலை 04.30 மணி
இடம் : சுத்தானந்த இந்து இளைஞர் சங்க நடராசர் மண்டபம்

பிரதம விருந்தினர் :- சுவாமி தந்திரதேவ மகராஜ் அவர்கள்
தலைவர் – இந்துசமய அபிவிருத்திச் சபை, திருகோணமலை

சிறப்பு விருந்தினர் :- திரு. க. கணேஷ் அவர்கள்
அரசாங்க அதிபர் – வவுனியா.

கௌரவ விருந்தினர் :- திரு. இ. விசாகலிங்கம் அவர்கள்
கல்விப் பணிப்பாளர், தெற்கு வலயம், வவுனியா.

01. மங்கல விளக்கேற்றல்
02. பஞ்சபுராணம்
03. சங்க கீதம்
04. தமிழ்த் தாய் வாழ்த்து :- செல்வி. கீர்த்தனா ஸ்ரீதரன் அவர்கள்
05. ஆசியுரை :- சிவஸ்ரீ க. கந்தசாமிக் குருக்கள் அவர்கள்
பிரதமகுரு சித்தி விநாயகர் ஆலயம், குடியிருப்பு.
06. வரவேற்புரை :- திரு. க. ஐயம்பிள்ளை அவர்கள்
போஷகர் – சு. இ. இ. சங்கம்
07. தலைமையுரை :- திரு. நா. சேனாதிராசா சமா. நீதி அவர்கள்
தலைவர் சு. இ. இ. சங்கம்
08. சிறப்பு விருந்தினர் உரை
09. பரிசளிப்பு :- பொன்விழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற தரம் 9 முதல் தரம் 13 வரையான மாணவர்கள்
தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த(சா/த), க.பொ.த. (உ/த) ஆகியவற்றில் வவுனியா மாவட்ட முதன்மை மாணவர்கள் (இரு ஆண்டுகள்)
10. கௌரவ விருந்தினர் உரை
11. கௌரவிப்புகள்
12. பிரதம விருந்தினர் உரை
13. நாட்டிய நாடகம் :- "நம்பியாரூரர்"
நட்டுவாங்கம் "நிருத்திய வாணி" திருமதி. வீ. சூரியயாழினி அவர்கள்
(நிருத்திய நிகேதன கலாமன்ற மாணவிகள்)
14. நன்றியுரை :- திரு. நா. யோகராஜா,
துணைச் செயலாளர் – சு. இ. இ. சங்கம்.

சுத்தானந்தம் 50

